# ஒருத்தருக்கு ஒருத்தர்

வண்ணதாசன்

குஞ்சம்மா என் கூட அஞ்சாவது வகுப்பு வரைக்கும்தான் படித்தாள். அப்போதே அவள் குண்டுதான். எங்கள் வகுப்பில் குஞ்சம்மாவும் பானு என்கிற பானுமதியும் குண்டு. பானுமதி நல்ல சிகப்பு. இவள் கருப்பு. அவ்வளவுதான். ஒல்லியாக இருந்தாலும் மறந்துவிட முடியுமா என்ன. முத்துலட்சுமியும், சுந்தரியும் ஒல்லி. சுந்தரியின் அண்ணன் மேல் காலெல்லாம் பாலுண்ணியாக இருக்கும். மிஞ்சியது ஒயர்மேன் சின்னையாவுடைய பெண் தங்கம்மாதான். சின்னையா என்பது அவர் பெயரல்ல. எல்லோரும் சின்னையா சின்னையா என்று கூப்பிட்டதால் அப்படி.

ரொம்ப நாட்களுக்குப் பின் எங்கள் வீட்டில் மச்சு எல்லாம் அடுத்து லைட் போட்டபோது வயரிங் பண்ண வந்தது சின்னையாதான். சின்னையா வி கழுத்து மல் பனியன் போட்டிருப்பார். அம்மன் தழும்பு முகம். ஆக்கர் வைத்த பம்பரம் மாதிரி இருக்கும். குரல் எம் ஆர் ராதா மாதிரி. எனக்கு எம் ஆர் ராதா குரல் சின்னையா மாதிரி இருந்தது. எது முதலில் கேட்டதோ அதைத்தானே பிந்தி கேட்டது ஞாபகப்படுத்தவேண்டும்.

பானுவுடைய தம்பி குளிக்கும்போது வாய்க்கால் தண்ணீரில் முங்கிச் செத்துப் போனான் என்று சொன்னார்கள். இத்தனைக்கும் குளித்தது பிராமணக்குடி வாய்க்கால்தானாம். அத்தோடு ஜெமினீஸ் காப்பிபொடிக்கடையை மூடிவிட்டு வெளியூர் போய்விட்டார்கள். திருத்தமாக தைக்கப் பட்ட கதர்ச்சட்டையும், சந்தனக்கீற்றும் பூணூலுமாக, காப்பிப் பொடிப் பொட்டலம் தருகிற பானுவின் அப்பாவும், பச்சைப் பெயிண்ட் அடித்த அந்த தராசு, காப்பிப் பொடிப் பொட்டலத்துடன் மெதுவாக தணிவதும் ஞாபகம் வருகிறது.

முத்துலட்சுமி அப்பாவின் நகைக்கடை முங்கிப் போய்விட்டது. என் அண்ணனுடன் படித்த முத்துலட்சுமியின் அண்ணனை ஒரே ஒரு தடவை ரயில்வே ஸ்டேஷன் கூட்டத்தில் பார்த்தேன். அங்குவிலாஸ் காலண்டர் தவிர, கண்டிப்பாக எங்கள் வீட்டில் தொங்குகிற இன்னொரு காலண்டர் முத்துலட்சுமி அப்பா நகைக்கடைக்கு உரியது. வெள்ளை அடிக்கும்போது மர பீரோ தலையில், சினிமாப் படம் போட்ட வெட்டின ஓட்டையுடன் ரொம்ப நாட்கழித்து அது அகப்பட்டது. சுந்தரியின் அண்ணனை எல்லோரும் பல்லிக் குஞ்சு என்று கூப்பிடுவார்கள். பல்லிக்குஞ்சு பெரிதாகி ஆரெம்கேவி ஜவுளிக் கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தது. 'என்ன செளக்கியமாக இருக்கியா ' என்று கேட்டது. பாலுண்ணி அப்படியேதான் இருந்தது. சுந்தரியைப்பற்றி வெட்கப்படாமல் கேட்டிருக்கலாம். இப்போது வெட்கப்பட்டு இருக்கக்கூடாதென்று நினைக்கிறது எல்லாவற்றிற்கும் அப்போது வெட்கப்பட்டிருப்போமில்லையா ?

வயர்மேன் சின்னையா பெண் தங்கம்மாவை ஏதோ ஓர் பாங்கில் வைத்துப்பார்த்தேன். மாதர் சங்கம், தையல் மெஷின் லோன் என்று நாலைந்து பேரைச் சுற்றிலும் நிற்கவைத்துக் கொண்டு, பாங்க் ஆபீஸருடன் சத்தமாக பேசிக் கொண்டிருந்தது. பேச்சும் முழியும் சரியில்லையே என்று படுமே அப்படியிருந்தது. அப்படியிருப்பதே செளகரியம் என்று தோன்றி மேலும் கொஞ்ச நேரம் தங்கம்மாவைப் பார்த்தேன். தங்கம்மாவுக்கு தெரியாத சாகசம் கிடையாது போல. உச்சி வகிட்டை இடதுகைப் பெருவிரலால் சொறிந்து கொண்டாள். மூக்குத்தி என்ன பேசும் போதேவா கழன்று விழப் போகிறது ? அப்படி விழுந்துவிடுமோ என்பதுபோல் மூக்குத்தி திருகாணியை சரிசெய்து கொண்டாள். 'அட மூதேவி ' என்று பாஸ் புத்தகத்தை வாங்கிக் கொண்டு நான் படியிறங்குகையில், தடதடவென்று என்னைத் தாண்டி இறங்கிப் போனாள்.

குஞ்சம்மா எங்கும் போகவில்லை. எங்கும் போகாதது மட்டுமல்ல. எங்கள் வீட்டைப்போலவே அவளுடைய வீடும் ரொம்பகாலமாகவே ஒரே தெருவில் இருந்தது. ஒரே தெரு என்ன ஒரே தெரு. எங்கள் தெருவேதான். சொந்த வீட்டுக்காரர்கள் ஏன் வீடு மற்றப் போகிறோம். குஞ்சம்மா அப்பா பெரிய பிரிண்டிங் பிரஸ் ஆபீஸ் வைத்திருந்தார்கள். எதென்னவோ அந்தக் காலத்தில் பைண்டிங் ஆபீஸ், பிரிண்டிங் ஆபீஸ் என்றுதான் பெயர் போட்டிருப்பார்கள்.

அச்சுக்கூடம் என்று போட்டது முத்தையா பிள்ளை மட்டும்தான். முத்தையா பிள்ளை அச்சுக்கூடம் இருந்த இடத்தில் இப்போது கயத்தாறு சாயபு ஒருத்தர் கோரம்பாய் விற்கிற கடை வைத்திருக்கிறார். நேதாஜி படம் ஓவல் சைஸில் அச்சடிக்கப்பட்ட ஸ்கூல் நோட்களை தயார் பண்ணி விற்பனை செய்தது குஞ்சம்மாவின் அப்பாதான். ஒரு பக்கம் அச்சாபீஸ். ஒரு பக்கம் பைண்டிங் ஆபீஸ். இது வந்து முத்தையா பிள்ளை கடையைச் சாப்பிட்டுவிட்டது என்று சொல்வார்கள்.

முழுப்பரிட்சை லீவு முடிந்து, பள்ளிக்கூடம் திறக்கிற சமயம் பழைய புஸ்தகம் வாங்கி, நாங்களே பசை காச்சி, பைண்டிங் பண்ணி, கட் பண்ணப்போவது முத்தையா பிள்ளை கடைக்குத்தான். ரொம்ப போட்சாக இருந்த முத்தையா பிள்ளையே எங்களைப் பார்த்ததும் எழுந்துவந்து கட்டிங் மெஷினில் கொடுத்துக் கட் பண்ணுவதைப் பார்க்கக் கஷ்டமாக இருக்கும். மேல் கீழ் அட்டையின் கெட்டிக்கு இடையில் வெள்ளை விசிறியாக வெட்டுப்பட்ட புஸ்தகம் அடுக்கு விரிப்பது அழகாக இருக்கும். புத்தகத்தைக் கையில் கொடுக்கும்போது 'நல்லா படிக்கணும் ' என்பார். முத்தையா பிள்ளையும் குஞ்சம்மா அப்பாவும் பேசிக்கொள்வதைப்பார்க்க அபூர்வமாக இருக்கும். 'என்ன அண்ணாச்சி, அப்படியா அண்ணாச்சி, ஆகட்டும் அண்ணாச்சி ' என்று குஞ்சம்மா அப்பா மிகுந்த மரியாதையோடு ஒற்றைச் சொல்லாக பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அந்த வயசிலேயே என்னவோ பண்ணும். அஞ்சாம் வகுப்பு ஸார்வா, ஹெட்மாஸ்டர் சிவக்கொழுந்து வாத்தியாரிடம் பேசுவது போல இருப்பதுதான் காரணம்.

முத்தையா பிள்ளை கடைக்குள் மாடக்குழியில் ஒரு பிள்ளையார் உண்டு என்பது குஞ்சம்மாவும், குஞ்சம்மாவுடைய அப்பாவும் வந்து கும்பிட்டபோதுதான் தெரியும். என்ன கும்பிட்டு என்ன பண்ண. குஞ்சம்மாவுக்குக் கல்யாணமாகி, எண்ணி இருபத்தி மூணே நாளில் குஞ்சம்மா மாப்பிள்ளை செத்துவிட்டார். குஞ்சம்மாவுக்கு நான் செகண்ட் இயர் படிக்கும்போதே கல்யாணம் முடிந்துவிட்டது.

கல்யாணமான பிறகு, ஆனித் திருவிழாவுக்கு குஞ்சம்மா வந்திருப்பதாக, அம்மாதான் பேசிக்கொண்டு இருந்தாள். பேராச்சியக்கா மகள் - 'குண்டு குண்டுண்ணு இருப்பா. கல்யாணத்துக்குப் பொறகு நல்லா வாழ்ந்து வடிஞ்சு ஒண்ணுபோல லெச்சணமா இருக்கா! ' குஞ்சம்மாவை நானும் இரண்டு மூன்று நாட்களுக்கு அப்புறம் பார்க்க நேர்ந்தது.

எனகொன்றும் குஞ்சம்மா மெலிவாக இருப்பதுமாதிரித் தெரியவில்லை. கன்னம் முன்னைவிட உப்பியிருந்தது. நிறையப் பரு. மூக்குத்தி. பட்டரிடம் வாங்கின திருநீறை உள்ளங்கையில் பொத்திக் கொண்டே, அவளுடைய அம்மா, அடுத்தடுத்த தங்கச்சிகள் என்று ஒன்று போலப் போய்க் கொண்டிருந்தார்கள். குஞ்சம்மா ஆண்பிள்ளை போல இருந்தாள். அடுத்த தங்கச்சி கூட அப்படித்தான். மூன்றாவது பெண்தான் பேராச்சியக்கா ஜாடை. ஆனாலும் குஞ்சம்மாவை எனக்குப் பிடித்துத்தான் இருந்தது. என்ன இருந்தாலும், கூடப் படித்த ஞாபகம் என்பது பட்டுத்துணி மாதிரி எல்லாவற்றையும் போர்த்தி, 'இந்தா பாத்தியா ' என்று உள்ளங்கையில் ஏந்திவிடாதா.

அப்படி உள்ளங்கையில் ஏந்தி வைத்திருந்தால்தான், குஞ்சம்மா மாப்பிள்ளை இறந்து போனதைக் கேட்டபோது கஷ்டமாக இருந்தது. 'என்னைவிடக் கெட்டிக்காரன் உலகத்திலே உண்டாண்ணு, சீமையில் இல்லாத மாப்பிள்ளையாக் கொண்டாரப் போகிற மாதிரிக் குதிச்சான்! துட்டு இருந்தால் உன் மட்டுக்கு 'ண்ணு தலையிலே ஓங்கி ஒரு இறுக்கு இறுக்கீட்டாரு ஆண்டவன் '-இப்படியெல்லாம் ஒரு ஆம்பிளையால்தான் இன்னொரு ஆம்பிளை பற்றிக் கூற முடியும். நான் முடிவெட்டிக் கொள்ள, சலூனில் குனிந்திருக்கும்போது, வாசலில் குஞ்சம்மா அப்பாவைப் பற்றி இவ்வளவு ஆங்காரமாகச் சொல்லிக் கொண்டிருந்தது சைக்கிள் கடை சுப்பையாப் பிள்ளை.

பெயர்தான் அப்படியே தவிர, சைக்கிள் கடை வைத்திருந்த காலமெல்லாம் மலையேறி ரொம்ப நாளாகி விட்டது. அவருடைய இரண்டு பெண்களை கட்டிக்கொடுத்த இடம் சரியில்லாமல், வீட்டிற்கு வந்து தோசைக்கு அரைத்துக் கொண்டிருக்கிறது. சுப்பையா பிள்ளை சம்சாரம் முறுக்குச் சட்டியை அடுப்பில் வைக்கவில்லை என்றால், இவர் இப்படி மேல்துண்டு கூடப் போட்டுக் கொள்ளாமல்தான் அலையவேண்டும். அவருடைய பையன் முனிசிபாலிடியில் பில் கலெக்டராக இருக்கிறான். எல்லாம் சேர்மன் பா.ராமசாமி புண்ணியம். அவனுக்குப் பெண்கேட்டு, குஞ்சம்மாவைக் கொடுக்கவில்லை போல. அதுக்காக இப்படியா முடி வெட்டுகிற கருப்பையா அவர் பாட்டில் வெட்ட வேண்டியதுதானே. சுப்பையா பிள்ளை ஏதோ எல்லாவற்றையும் அப்படியே பிட்டுப்பிட்டு வைக்கிற மாதிரித் தலையை எதற்கு ஆட்ட வேண்டும். இரண்டு பேரையும் அப்படியே அரசரடிப்பாலத்து வாய்க்காலுக்குள் தள்ள வேண்டும் என்கிற மாதிரி இருந்தது. இதில் சுப்பையாப் பிள்ளை வேறு கண்ட கண்ட இடத்தில் சொறிந்து கொண்டிருந்தார்.

குஞ்சம்மா அப்பா இதற்கெல்லாம் கவிழ்ந்து போய்விடவில்லை. வீட்டு ஏறுநடையை விட்டு சைக்கிளை இறக்கி வைத்து, எப்போதும் போல சகுனம் பார்த்துக் கொண்டு நின்றார். சகுனம் சரியில்லாவிட்டால், குஞ்சம்மா அம்மாவைக் கூப்பிட்டு கொஞ்சதூரம் போய்விட்டு எதிரே வரச்சொல்லி அப்புறம்தான் புறப்படுவார் என்று சொல்வார்கள். இப்படி ஒன்று இரண்டு ஜாஸ்தியாகச் சொல்வார்களே தவிர, யாரும் அப்படியெல்லாம் பார்த்ததில்லை. நான் குஞ்சம்மா அப்பா சகுனம் பார்க்கிறார் என்று தெரிந்ததும், என் சகுனத்தில் அவர் போவாரோ மாட்டாரோ பாவம் என்று தயங்கியபடியே வேகமாக வருகிறேன். அவர் முகத்தை பார்க்கவில்லை. 'எம்பெருமானே ' என்று ஒரு சத்தம் மட்டும் கேட்கிறது. உச்சந்தலைக்கு மேல் காக்காய் பறக்கும்போது காற்று விசிறுமே அதுபோல் சிறு விசிறல் கேட்டது. குஞ்சம்மா அப்பா சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார் திரும்பிப் பார்க்கும்போது.

திரும்பி என்றால் திரும்பியா பார்க்கமுடியும். லேசாகப் பக்கவாட்டில் பார்த்தபோது, குஞ்சம்மா அப்பாவின் வேஷ்டியோ, மேல் துண்டோ விசிறினது மாதிரி இருந்தது. வாசனைத் திருநீறு மாதிரி ஒரு செகண்ட் மூக்கில் பட்டது. திருநீறு வாசனை மட்டும்தான் நிஜம். அப்படி விசிறினதும் வெள்ளையாகத் தெரிந்ததும் வேட்டியில்லை. புறா. மாவடிப்பிள்ளை வீட்டுப் புறா. அந்த வீட்டுத் தோட்டத்தில்தான் கூண்டு வைத்துப் புறா வளர்க்கிறார்கள்.

'போ. போவ் ' என்று மாவடிப்பிள்ளை கூண்டைத் திறந்துவிட்டு தானியம் விசிறும்போது நாப்பது, ஐம்பது என்று புறாக்கள் சடசடவென்று அடிக்கும். பொன்வண்டுக் கலரும் சாம்பல் கலரும்தான் அதிகம். வெள்ளைப்புறா கொஞ்சம்தான். வெள்ளைப்புறா நடக்கிறதைப் பார்க்கவேண்டும். உயர்ந்த மதில் சுவர்கள், கட்டிட விளிம்புகள் எல்லாம் அவைகளுக்குப் பிடிக்குமோ என்னவோ. தோகை விரிக்கிற மாதிரிச் சிறகைச் சிலுப்பிக் கொண்டு அது நடந்து கொண்டிருக்கும். நாம் பார்த்து, அதைப் பார்க்க இன்னொருத்தரைக் கூப்பிடும்ப்போது, அதைத் தெரிந்து கொண்டது மாதிரிச் சட்டென்று பறக்கும். அப்படிச் சடசடவென்று புறாக்கள் பறக்கச் சரிவாக அடிக்கிற வெயில், வெளிச்சமாக விழுந்து கொண்டிருக்க மாவடிப்பிள்ளை வீட்டுச் சந்துக்குள் இருந்து கேடி வேலாயுதம் அண்ணன் வந்து கொண்டிருந்ததைப் பார்க்க நன்றாக இருந்தது.

கேடி என்றால் கேடி எல்லாம் ஒன்றுமில்லை. என்னமோ அப்படி ஒரு பெயர் வைத்திருக்கிறார்கள். என்னை விட மூன்று வயது வேண்டுமானால் கூட இருக்கும். கேடி வேலாயுதம் அண்ணன் படித்தது சுந்தரமூர்த்தி ஓதுவார் ஹைஸ்கூலில். நாங்கள் படித்தது வயற்காட்டுப் பள்ளிக்கூடம். ரயில்வே ஸ்டேஷனுக்கு அவர்கள் பள்ளிக்கூடம் தாண்டித்தான் போகவேண்டும். ஒரு தடவை அந்தப் பக்கம் போகும்போது ரோடு முழுவதும், அறுவடைக்குப் பிணையல் அடித்துக் கொண்டிருந்தார்கள். வைக்கோல் வாசம் மூக்கைத் துளைக்கிறது. 'கண்ணும் கண்ணும் பேசியது உன்னால் அன்றோ ' என்ற பாட்டு லவுட் ஸ்பீக்கரில். சுந்தரமூர்த்தி ஓதுவார் ஸ்கூலில் ஸ்போர்ட்ஸ் நடக்கிறது. கேடி வேலாயுதம் அண்ணன் தான் சூப்பர் சீனியர் சாம்பியன். பச்சை வெல்வெட் டிராயரும் பனியனுமாக வேலாயுதம் அண்ணன் மேடையிலிருந்து கப் வாங்கிக் கொண்டுவரும்போது எல்லாம் விசில் அடித்தார்கள்.

வேலாயுதம் அண்ணன் பீடி குடிப்பதைப் பின்பு ஒரு நாள் பார்த்தபோது கூட எனக்கு மரியாதை குறையவில்லை. வேலாயுதம் அண்ணன் போலீஸாகவோ, ஜெயில் வார்டனாகவோ வேலை கிடைத்துப் போய்விட்டதாக சொன்னார்கள். இந்த ஊரில்தான் வேலையாம். ஆனால் பார்க்க முடிந்ததே இல்லை.

வேலாயுதம் அண்ணனுடைய அப்பாவைத்தான் அடிக்கடி பார்ப்பேன். அவர் யாரையும் ஏறிட்டுப் பார்க்கவே மாட்டாரோ என்னவோ. குனிந்து கொண்டேதான் நடப்பார். வலதுகால் எப்போதுமே வீங்கியிருக்கும். பெரிய கட்டுப் போட்ட வலதுகாலை இழுத்து இழுத்துப் பக்கவாட்டில் நகர்த்திக் கொண்டே, இடது காலால் நேராக நடந்து வருவார். தலை நரைத்துப் பறந்து கொண்டிருக்கும். சிகரெட் குடித்துக் குடித்துத் தொங்கின உதட்டில் ஒரு இடம் மட்டும் சிவந்த வெள்ளையாக இருக்கும். ஒரு வேளை கேடி வேலாயுதம் அண்ணன் அப்பாதான் கேடியாக இருந்திருப்பாரோ என்று தோன்றும். 'அஞ்சு வருஷம், பத்து வருஷம்னு ஒவ்வொருத்தனும் குத்தகைக்கு எடுத்தமாதிரி ஆடி முடிச்சுக்கிட்டுத்தானே இந்த தெருவில, வேறு வழியில்லாமல், தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டுக் கிடக்கான் ' என்று மீசைக்கார ஆயான் பொதுப்படையாக, இந்தத் தெரு ஆண் பிள்ளைகளைப் பற்றிச் சொன்னது சரியாகத்தான் இருக்கும்போல.

சில விஷயங்களைப்பார்த்தால் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருப்பது மாதிரித் தான் இருக்கிறது. குஞ்சம்மா, இவ்வளவுக்கு அப்புறமும், பத்து படித்துவிட்டு டாச்சர் ட்ரெயினிங் முடித்தது. அப்பா கிளாப்டன் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்தது, அப்படி வேலை பார்த்த குஞ்சம்மாவை மறுபடியும் கேடி வேலாயுதம் அண்ணன் கட்டிக்கொண்டது எல்லாம் அப்படி சரியாக நடந்த விஷயங்கள் அல்லாமல் வேறு என்ன.

'அச்சாபீஸ்காரன் துட்டுக்குல்லா போய் விழுந்துட்டான் நம்ம திருநா 'க்கரசு ' என்று கேடி வேலாயுதம் அண்ணனின் அப்பாவைப்பார்த்து சொன்னார்கள். அவர் விழவும் இல்லை. எழுந்திருக்கவும் இல்லை. எப்போதும் போலத்தான் தலையைக் குனிந்து கொண்டே நடந்து கொண்டிருந்தார். வேலாயுதம் அண்ணன் குஞ்சம்மாவைக் கட்டிக் கொண்டதற்காக அவருடைய கால்வீக்கம் குணமாகிவிடுமா என்ன. அதுவுமில்லை. வேலாயுதம் அண்ணனின் அம்மா இன்னும் முக்குப் பம்ப்பில்தான் ஏழு நடை எட்டு நடை என்று வீட்டிற்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு போகிறாள்.

இதைவிடச் சுவாரசியம் சீவலப்பேரி பெரியம்மை என்னிடம் கேட்டதுதான். 'யே சுந்தரம். அச்சாபீஸ்காரர் மகளும் வேலாயுதமும் லவ் பண்ணியில்லா தாலி கட்டிக்கிட்டாங்களாம். நிசந்தானா ? '

நான் ஒன்றும் சொல்லவில்லை.

'ஒருத்தருக்கொருத்தர் புடிச்சுப் போச்சாம் 'லா ? ' - பெரியம்மை மேற்கொண்டும் என்னைக் கேட்டாள். என் வீட்டுக்காரிக்கு ஒரே சிரிப்பு. அந்த இடத்தில் ஒன்றும் சொல்லாமல், வீட்டுக்குள் வந்ததும், 'உங்க பெரியம்மை இங்க்லீஷ்ல எல்லாம் பேசுதாங்களே ' என்று சொன்னாள்.

அவ்வளவுதானா. அந்தப் பெரியம்மை சொன்ன ஒரு சொல்தானா உன் காதில் விழுந்தது. அதற்கு மேல் உனக்கு ஒன்றும் தோன்ரவில்லையா. இந்தத் தெருவில் ஒருத்தி சின்ன வயதில், கல்யாணம் ஆன மூணே வாரத்தில் கஷ்டப்படுகிறாள். அப்புரம் மேற்கொண்டு படிக்கிறாள். வேலைக்கும் போகிறாள். மறுபடியும் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாள். இதில் உனக்கு ஒன்றும் தோன்றவில்லையா. சந்தோஷமில்லையா. அப்படியே அவர்கள் விருப்பப்பட்டுக் கல்யாணம் பண்ணியிருந்தார்கள் என்றால் அது எவ்வளவு நல்லது.

'லவ் பண்ணியிருந்தா என்ன தப்பு ' - நான் சொன்னேன்.

'உங்களுக்கு எதுதான் தப்பு இல்லை ? ' - இதைச் சொல்லி, முதுகுக்குப் பின்னே எறிந்துவிட்டு மேலும் மேலும் அவள் போய்க் கொண்டே இருந்தாள். அடுப்படி புகை சுழன்று, அவளுக்கு முன்னால் புறவாசலுக்குப் போய்க் கொண்டு இருந்தது.

எனக்குப் பெரியம்மையைப் பார்க்கவேண்டும் போல் இருந்தது.

'பெரியம்மை, உனக்காவது அப்படித் தோணுச்சே '.

***

நடுகை- சிறுகதை தொகுப்பு 1996


திண்ணை

ooo ooo ooo ooo
Main Sections
முகப்பு
அரசியலும் சமூகமும்
கதைகள்
கவிதைகள்
அறிவியலும் தொழில்நுட்பமும்
கலைகள். சமையல்
இலக்கியக்கட்டுரைகள்
நகைச்சுவையும் வித்தியாசமானவையும்
கடிதங்கள், அறிவிப்புகள்

# அப்பாவிடம் என்ன சொல்வது ?

அசோகமித்திரன் - கனவு - 1993

இரவு எட்டே கால் மணிக்குப் பெங்களூர் கண்டோன்மென்ட் இரயில் நிலையத்தில் வெளிச்சம் அதிகம் இல்லை. கூட்டமும் இல்லை. ஒரு கிழவியும் பன்னிரண்டு பதின்மூன்று வயது இருக்கக்கூடிய பெண்ணும் பெட்டி படுக்கை மூட்டையைத் தூக்கிக் கொண்டு பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்த போது அவர்கள் தகவல் விசாரிப்பதற்கு யாரும் கண்ணில் படவில்லை.

கிழவி அங்குமிங்கும் பார்க்க, அப்பெண் கேட்டாள், 'பொட்டியிலே என்னதான் வச்சிருக்கே பாட்டி ? '

'கை வலிக்கிறதா ? என் கிட்டே கொடு, நான் தூக்கிக்கிறேன் ' என்றாள் கிழவி.

'நீதான் ரெண்டு மூட்டையைத் தூக்கிண்டிருக்கியே ? '

'உனக்கு வீட்டுக்குப் போகப் பஸ் இருக்கா ? '

'இருக்கு, பாட்டி. இல்லேன்னாக் கூட நடந்து போயிடுவேன் '

'இந்த இருட்டிலே தனியா நடந்து போகக்கூடாது. '

'இப்போ தனியாத்தானே வந்திருக்கோம். '

'உன் அப்பன் இன்னும் வீட்டுக்கு வரலியே ? என்னைப் போ போன்னு சொல்லிட்டு ரயிலேத்தக்கூட வரலே. '

பெண் பேசாதிருந்தாள்.

பிளாட்பாரத்து டாக்கடை உள்ளடங்கி இருந்தது. அருகில் இருந்த பத்திரிக்கைகள் கடையில் ஆள் இல்லை.

'அந்த டாக்கடையிலே போய்க் கேட்டுண்டு வா. கன்யாகுமரி ரயில் இங்கே தானே வரதுன்னு ' பெண் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு டாக்கடைக்குள் சென்றாள். கிழவி பெட்டி மீது அவளுடைய இரு மூட்டைகளையும் வைத்தாள்.

கிழவியின் மூச்சு சர்புர்ரென்று இரண்டடி தூரத்திலும் கேட்கும்படி இருந்தது.

'இங்கேதானாம் ' பெண் வந்து சொன்னாள்.

'அப்படியே போய் பெண்கள் பெட்டி எங்கே நிக்கும்னும் கேட்டுண்டு வந்துடு. '

பெண் முகத்திலொரு கீறல் சிணுங்கல் தெரிந்தது. அந்த டாக்கடைக்குத் தனியாக அந்த வேளையில் ஒரு பெண்ணை அனுப்பக்கூடாது.

'நீ நில்லு. நான் போய்க் கேட்டுண்டு வரேன். ' அந்த கிழவி அசைந்து அசைந்து நடந்து போனாள். அவள் கால்களின் வலி அந்த நடையிலிருந்து தெரிந்தது.

'வா, அந்தக் கோடிக்குத்தான் போகணுமாம். ' என்றாள். அவளே பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினாள். திடாரென்று சற்றுக் குளிர ஆரம்பித்தது. நிலையக்கட்டிடத்தையும் தாண்டி பிளாட்பாரத்தை மட்டும் நீளப்படுத்தியிருந்தார்கள். அங்கு தலைக்கு மேலே ஆஸ்பெஸ்டாஸ் போட்டிருந்தது. இருபுறமும் திறந்த வெளி. குளிர்.

பிளாட்பாரத்தின் கோடியை அடைந்தபிறகுதான் கிழவி நின்றாள். இப்போது நிலையத்தில் சிறிது மக்கள் நடமாட்டம் காணப்பட்டது. எல்லாம் பத்து இருபது பேர்களுக்குள் அடங்கிவிடும்.

'நீ போடி பெண்ணே, நான் பாத்துக்கறேன் '

'போறேன், பாட்டி. ரயில் வரட்டும். '

'ரயில் வந்து நீ போகறதுக்குள்ளே இன்னும் ராத்திரியாகிவிடும். இவ்வளவு நேரமானதே சரியில்லை. உன்னை நான் கூட வரவே சொல்லலே. '

'நீ எப்படி பாட்டி எல்லாத்தையும் ஒண்டியாத் தூக்கிண்டு வந்திருக்கே! '

'நான் இங்கே வரப்போ எப்படித் தூக்கிண்டு வந்தேனோ அப்படி. இப்படி தூக்கி தூக்கிப் பழக்கம் ஆயிடுத்து. '

'ஆனாலும் உன் பொட்டி ரொம்ப கனம், பாட்டி. '

'அதுதான் நான் தூக்கிக்கறேன்னேன். நீ பிடிவாதமா அதையே தூக்கிண்டே. '

'மதராஸ்ஸே பெங்களூர் ஆனேவாலே பெங்களூர் எக்ஸ்பிரஸ்... ' என்று தெளிவற்ற கரகரத்த குரலில் ஒலிபெருக்கியில் அறிவிப்பு வந்தது. பெண் பாட்டி ரயில் வரதாம் ' என்றாள்.

'இது இங்கே வர ரயில். போறது இல்லை. '

'உனக்கு எப்படிப் பாட்டி உடனே தெரிஞ்சுடறது '

'இதெல்லாம் தெரியறதுடி பெண்ணே, நான் எங்கே இருக்குறதுன்னுதான் தெரியலே '

'எங்களோடேயே இருந்திடலாமே, பாட்டி '

'நீ சொல்லிட்டா ஆயிடுத்தா ? ' பாட்டி பெட்டி மீது உட்கார்ந்தாள். திடாரென்று அந்தப் பெண் அழ ஆரம்பித்தாள்.

'இதோ பாரு இதோ பாரு... ஏன் அழறே ? என்ன ஆச்சு ? அழாதே அழாதே. ' பெண் தொடர்ந்து அழுது கொண்டு இருந்தாள்.

'அழுகையை நிறுத்து. கண்ணோல்லியோ '

பெண் மிகவும் சிரமப்பட்டு அழுகையைச் சற்றுக் குறைத்துக் கொண்டாள். 'எனக்கு ரொம்ப துக்கமா இருக்கு, பாட்டி ' என்றாள்.

கிழவி பேசாதிருந்தாள்.அவர்கள் அருகே ஒரு குடும்பம் வந்து சேர்ந்தது. கணவன், மனைவி, இரு குழந்தைகள். பத்து வயதுக்குட்பட்ட இரு சிறுவர்கள், ஒரு சிறுமி, ஒரு கைக்குழந்தை கிழவியையே பார்த்தபடி இருந்தது. மனைவி தன் கைக்குழந்தையைக் கணவனிடம் கொடுத்தாள். கிழவியைப் பார்த்து 'லேடாஸ் கம்பார்ட்மென்ட்தானே ? ' என்றாள்.

'ஆமாம். '

'கன்யாகுமரி வண்டிதானே ? '

'ஆமாம். '

'கூட்டமாக இருக்குமா ? '

'இந்த வண்டியிலே, ரொம்ப ஜனம் ஏறதில்லை. இரட்டையா ? '

'ஆமாம். ' என்று சோர்வோடு அப்பெண்மணி சொன்னாள். கிழவியை, 'பேத்தியா ? ' என்று கேட்டாள்.

'ஆமாம். பிள்ளை முனிரெட்டிப்பாளையத்திலே இருக்கான். அவன் பொண்ணு ? '

'எங்கே அழைச்சுட்டுப் போறீங்க ? '

'நான் அழைச்சுட்டுப் போகலே. என்னை ரயிலேத்தி விட வந்திருக்கா. '

அப்பெண்மணியின் கணவன், 'ரொம்ப லேட்டாயிடுமே ? ' என்றான்.

'நான் வேண்டாம் வேண்டாம்னுதான் சொன்னேன். பிடிவாதமா வந்தா. '

'முனிரெட்டிப்பாளையத்திலே எங்கே ? '

'மார்க்கெட்டுக்கு முன்னாலே. சுடுகாடு இருக்கில்லே. அதுக்குக் கொஞ்சம் பக்கத்துலே. '

'நான் கொண்டுபோய் விட்டுட்டுப் போறேன். '

பெண், 'வேண்டாம், வேண்டாம். நானே போய்க்கிறேன், ' என்றாள்.

கிழவி அந்த மனிதனை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். அந்த மனைவி சொன்னாள். 'நீங்க இங்கிருந்தே நேரே உங்க டூடிக்குப் போறதுக்குத்தான் டைம் இருக்கும்.. அவருக்கு இன்னிக்கு நைட் டூடி. ' இதைக் கிழவியைப் பார்த்துச் சொன்னாள்.

பிளாட்பாரத்தில் இப்போது நிறைய மனிதர்கள் வந்து விட்டார்கள். மனைவி கிழவியைக் கேட்டாள்.

'ரொம்ப ஜனம் இருக்காதுன்னீங்களே '

'இவுங்க மெட்ராஸ் வண்டிக்குப் போறவங்க. இப்போத்தான் இங்கே இரண்டு மூன்று வண்டி வருமே '

'உங்களுக்கு எல்லாம் தெரியுது. '

கிழவி தன் பேத்தி முகத்தைப் பார்த்தாள். பேத்திக்கு மீண்டும் குப்பென்று அழுகை வீரிட்டது. கிழவி அவளை அணைத்தபடி ஒதுக்குப்புறமாக அழைத்துச்சென்றாள்.

'நீயும் நானும் அழுது என்ன புண்ணியண்டா, கண்ணா ? ' என்றாள்.

'அப்பா அம்மா ஏன் அப்படி இருக்காங்க பாட்டி ? ' என்று பேத்தி அழுதுகொண்டே கேட்டாள்.

'என்னாச்சு ? அவங்க நல்லாத்தான் இருக்காங்க. குடும்பக் கஷ்டம் அப்படி. '

'இல்லே பாட்டி. நீங்க எங்க கூடவே இருந்திடலாம், இல்லையா ? போ போன்னுட்டாங்களே ? '

'சே சே! நான் போறேன்னு கிளம்பிட்டேன். நீ மனசிலே ஒண்ணும் வச்சிக்காதே கிளம்பு. இவங்க கூட நான் ரயிலேறிப்பேன். தனியாய்ப் போய்டுவேல்லே ? ' சிறுமி கண்ணைத் துடைத்துக் கொண்டாள். 'நான் போயிட்டு வரேன், பாட்டி ' என்றாள். கிழவி அவளை அழைத்து ஒரு முத்தம் கொடுத்தாள்.

அந்த ஆள், 'நான் பாப்பாவைக் கொண்டு போய் விட்டுடறேங்க ' என்றான்.

கிழவி, 'வேண்டாம். அவ போயிப்பா. முனிரெட்டிப்பாளையம் மெயின் ரோட்டிலே போனா ஒன்னும் பயமேயில்லே ' என்றாள். 'நீ போயிட்டு வா. அப்பா, அம்மாகிட்டே வரேன்னுதான் சொன்னான். வரலே. என்ன வேலையோ ? '

கண்களையும், கன்னங்களையும் துடைத்துக் கொண்டு அப்பெண் பாட்டியைப் பார்த்தவண்ணம் நகர்ந்தாள். பிளாட்பாரத்தில் மணியடித்தது. அதைத் தொடர்ந்து மீண்டும் ஒலிபெருக்கியில் ஒரு ரயில் வரப்போகும் செய்தி வந்தது. கிழவி அருகில் நின்ற குடும்பத்தின் தலைவன் குழந்தையை மனைவியிடம் கொடுத்துவிட்டு பெட்டியையும் பையையும் கையில் எடுத்துக்கொண்டான். தன் பெட்டி மூட்டைகளை ஒரு சேர வத்த கிழவி திடுக்கிட்டாள். அவள் பேத்தி மீண்டும் வந்து விட்டாள். 'என்னடாது ? ' என்று கிழவி கேட்டாள்.

'உன்னை ரயிலேத்திட்டே போறேன் பாட்டி. '

கிழவி கண்ணில் முதல் தடவையாக ஈரம் தெரிந்தது.

மிகவும் மெதுவாக ஒரு ரயில் வந்து சேர்ந்தது. கிழவியுடன் நின்ற குடும்பம் ரயிலில் ஏறத் தயாராக இருந்தது. கிழவி மட்டும் சந்தேகத்துடன், 'இது கன்யாகுமரி திருப்பதி வண்டியான்னு கேட்டுக்குங்க ' என்றாள். அவள் சந்தேகம் சரிதான். அது திருப்பதி போகும் வண்டிதான். வழக்கத்தை விட அரை மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது.

அந்த குடும்பத்தின் தலைவன், 'அப்போ நம்ம வண்டியும் லேட்டுத்தான் ' என்றான். பிறகு அவன் மனைவியிடம் 'நீ வண்டி ஏறிக்கிறியா ? இதோ இங்கே பெரிய அம்மாவும் இருக்காங்க. நான் டூடிக்குக் கிளம்பறேன், ' என்றான்.

அவன் மனைவி அரை மனதாக 'சரி ' என்றாள்.

அவன் கிழவி பக்கம் திரும்பி, 'பாப்பா வீட்டுக்குப் போகுதா ? நான் கொண்டுபோய் விட்டுட்டுப் போறேன். வரியா பாப்பா ? ' என்றான்.

கிழவி தன் பேத்திக்கு மட்டும் தெரியும் வண்ணம் தலையை அசைத்தாள். 'அவ அப்பன் வரேன்னுருக்கான். அதோ அங்கே தூரத்திலே வராப்பிலே இருக்கு ' என்று கூறினாள். சிறுமி கிழவி

பார்த்த திசையில் பார்த்தாள். அவள் முகத்தில் யாரையும் அடையாளம் கண்டுகொண்டதாக தெரியவில்லை.

கடைசியாக கன்யாகுமரி எக்ஸ்பிரஸ் வந்தபோது ஒன்பதேகாலுக்கும் மேலாகிவிட்டது. பிளாட்பாரத்தில் இப்போது சென்னை வண்டிக்காகக் காத்திருப்பவர்கள் நிறைய இருந்தார்கள். ஒரு சில இடங்களில் குவிந்திருந்தார்கள்.அவர்கள் ஏற வேண்டிய பெட்டிகள் அந்த இடங்களில்தான் நிற்கும் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். கன்யாகுமரி ரயிலில் பெண்கள் பெட்டியில் கூட்டம் அதிகம் இல்லை. கிழவி தன்பெட்டிமூட்டைகளுடன் ஏறும் போதே இரட்டைக் குழந்தைக்கரியும் இடித்துத் தள்ளிக்கொண்டு ஏறினாள்.கிழவிக்கு ஜன்னலருகே இடம் கிடைக்காத போதிலும் ஒரு ஜன்னலருகே முகத்தை வைத்துக்கொண்டாள். பேத்தியை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். பாட்டி முகத்தைப் பார்க்க அச்சப்படுவதுபோல் பேத்தி வேறெங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள். ரயில் நகரத்தொடங்கியபோது கிழவி 'இந்தா, இதை வச்சிக்கோ, ' என்றாள். பேத்தி அவளையுமறியாமல் கையை நீட்டினாள். கிழவி பேத்தி கையில் பத்து ரூபாய் நோட்டை வைத்து மூடினாள்.

'உங்கிட்டேயே ஒண்ணும் கிடையாதே பாட்டி ? ' என்று பேத்தி சொன்னாள். 'எனக்கு எல்லாம் இருக்கு. பத்திரமா வீட்டுக்குப் போ ' என்று கிழவி பதிலுக்கு கத்தினாள். பெண் ரயிலுடன் ஓடிவர முயன்றாள். ஆனால் மூன்று நாலு அடிகள்தான் நடக்க முடிந்தது. ரயில் போய் விட்டது.

பெண் விடுவிடென்று நடந்து பிளாட்பாரத்தை விட்டு வெளியே வந்தாள். 'பாட்டி போயாச்சா ? ' என்று ஒரு குரல் கேட்டுத் திரும்பினாள். அவள் அப்பா. 'ஏம்ப்பா உள்ளே வரலே ? ' என்று கேட்டாள்.

'பிளாட்பாரம் டிக்கெட் வாங்கலே. ரொம்ப கூட்டமா இருந்தது ' அவளும் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கவில்லை. அதை அவள் அப்பாவிடம் சொல்லவில்லை.

Thinnai 1999 December 3

# அவனுடைய நாட்கள்

வண்ணநிலவன்

கம்பெனிக்குப் போகும்போதே எதிரே ஆட்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். இன்றைக்கும் வேலை இல்லையென்பது தெரிந்து போயிற்று. வெங்கடேஸ்வரா கபே திருப்பத்திலேயே கம்பெனியிலிருந்து ஆட்கள் வந்து கொண்டிருந்ததை அவனும் ஆவுடையும் பார்த்து விட்டார்கள். பேசாமல் அப்படியே வீட்டுக்குத் திரும்பியிருக்கலாம். ஆனால் ஆவுடை வீட்டுக்குத் திரும்பவில்லை. அவள் வராவிட்டாலும் பரவாயில்லை. அவனையும் வீட்டுக்குப் போக விட மாட்டாள். சங்கரனுக்கு அம்மா மேல் கோபம் கோபமாக வந்தது.

இன்றைக்கும் வேலை இல்லாமல் ஆட்கள் திரும்புகிறார்கள் என்றதுமே சங்கரனுக்குச் சந்தோஷமாக இருந்தது. ஆனால் ஆவுடைக்கு கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. ஏற்கெனவே இந்த வாரத்தில் இரண்டு நாள் வேலை இல்லை. இன்றோடு சேர்த்தால் மூன்று நாளாகிறது. வாரச் சம்பளம் குறைந்துவிடும். சனிக்கிழமை ரேஷன் வாங்க சிட்டை வட்டிக்காரனிடம்தான் போய் நிற்க வேண்டும்.

சங்கரனுக்கு சீக்கிரமாக வீட்டுக்குப் போய் சாப்பாட்டுச் சட்டியை வீட்டில் போட்டு விட்டு நிர்மலா வீட்டுக்குப் போக வேண்டும். இப்படியே திரும்பினால் பதினைந்து நிமிஷத்தில் நிர்மலா வீட்டுக்குப் போய் விடலாம். அங்கே போய் எப்படியும் ஒரு அரை மணி நேரமாவது சிலோன் ரேடியோ கேட்கலாம். முக்கியமாக நிர்மலாவிடம் பேசிக் கொண்டிருக்கலாம். நேற்று ராத்திரி கேபிள் டி.வி.யில் பார்த்த படத்தைப் பற்றிச் சொல்லுவாள். நிர்மலாவுடன் இருந்தால் வீட்டு ஞாபகமே வருவதில்லை. அவளுடன் இருக்கும்போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. காபி கொடுக்கும்போது அவளுடைய விரல் பட்டால் விவரிக்க முடியாத பரவசம் ஏற்படுகிறது. ராத்திரி வீட்டுக்குத் திரும்பும் போதுதான் நரகத்திற்குப் போகிற மாதிரி இருக்கிறது. அந்த நாள் ஏன் முடிந்ததென்று இருக்கிறது.

தசரா ஆரம்பித்து மூன்று நாட்களாகி விட்டன. எல்லா கோயில்களிலும் தினசரி கச்சேரி நடக்கிறது. தெருவுக்குத் தெரு மைனர் பார்ட்டிகள் போட்டி போட்டுக் கொண்டு வெளியூர்களிலிருந்து கும்பம் ஆடுகிறவர்களையும் நையாண்டி மேளங்களையும் கொண்டு வந்திருந்தன. அம்மாதான் ஒன்பது மணிக்கு மேல் வீட்டுக்கு வந்தால் திட்டுகிறாள். அதற்காக கண் முழித்து தசரா பார்க்காமல் இருக்க முடியுமா என்ன ?

'எக்கா கம்பெனிக்கா போறீய... ? அதான் வேல இல்லியே, வீட்டுக்குப் போங்கக்கா... எதுக்குப் போட்டு வீணா அலையுதியோ... ? ' என்றாள் பாக்கியம்.

'இல்ல, போர்மேன் அண்ணாச்சியைப் பாக்கணும். அதான் போய்க்கிட்டு இருக்கேன் ' என்றாள் ஆவுடை. பாக்கியம் கொஞ்சம் தள்ளிப் போனதும், 'இவளுகளுக்கு என்ன வந்தது ? நான் எங்கியும் போறேன். ரோட்டுல போறவ பேசாமப் போக வேண்டியதுதான ? இவ கிட்டக் கேட்டுட்டுத்தான் ஒவ்வொண்ணுஞ் செய்யனும் போல இருக்கு ' என்றாள்.

'எதுக்கு அந்த அக்காவப் போட்டுத் திட்டுத ? வீணா அம்புட்டுத் தூரம் எதுக்கு அலையணும் வேலதான் இல்லையே. வீட்டுக்குப் போங்கண்ணு சொல்லுதா. இது ஒரு குத்தமா ? அவளைப் போயி கண்டமானைக்கிப் பேசுதீயே ' என்றான் சங்கரன்.

'இந்தானைக்கு ஒனக்கு ஊர் மேயப் போகணும். கம்பேனி லீவுன்னா ஒனக்குக் கொண்டாட்டம். இப்பிடி தெனசரி வேல இல்லன்னு வீட்டுக்குத் திரும்புதமேன்னு எனக்கு வயித்துல புளியக் கரைக்கி. '

சங்கரன் பேசாமல் தலை குனிந்து நடந்து கொண்டிருந்தான். கோபத்திலும் எரிச்சலிலும் ஆவுடையுடைய நடையின் வேகம் அதிகரித்தது. முணுமுணுத்துக் கொண்டே நடந்தாள். தூத்துக்குடி பஸ் ஒன்று அவர்களைக் கடந்து சென்றது.

அப்பா வேலையில்லாமல் வீட்டில் உட்கார்ந்து நாலைந்து வருஷமாகி விட்டது. சங்கரனையும் மூன்று பொம்பளைப் பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு ஆவுடை அநேகம் பாடு பட்டாள். எஸ்.எஸ்.எல்.சி. முடித்ததும் அவனையும் பொட்டு வெடிக் கம்பெனிக்கு தன்னோடு வேலைக்குக் கூட்டிக் கொண்டு போனாள். அவர்களுடைய வாரச் சம்பளத்தில்தான் குடும்பம் ஓடியது.

மாணிக்கம் சலூனில் சங்கரன் தினசரி பேப்பர் படிப்பான். சின்னப் பிள்ளையிலிருந்தே சிந்தாதிரிப்பேட்டை சந்தனுவின் சித்திர வித்யாலயா விளம்பரத்தைப் பத்திரிகைகளில் பார்த்து வருகிறான். சங்கரனுக்குப் பள்ளிக்கூடத்தில் கூட டிராயிங் வராது. ஆனாலும் சந்தனுவின் 'நீங்களும் ஓவியராகலாம் ' விளம்பரத்தைப் பேப்பரில் பார்த்து விட்டு எழுதிப் போட்டான். ஒரு வாரம் கழித்து மெட்ராஸிலிருந்து நீளமான கவர் ஒன்று வந்தது. முதன் முதலாக அவன் பேருக்கு வந்த அந்த கவரைப் பார்த்ததும் ரொம்பச் சந்தோஷமாயிருந்தது. அதை நிர்மலாவிடம் கொண்டு போய்க் காட்டினான். ஓவியம் படிப்பதற்கு எவ்வளவு பீஸ் கட்ட வேண்டும் என்றதும் ஓவியனாகிற ஆசையே போய் விட்டது. ஆனால், ரொம்ப நாள் வரை அந்தக் கவரை அப்படியே கசங்காமல் வைத்திருந்தான்.

இதே போல டிராப்ட்ஸ் மேன் ஆகலாம், விவசாயப் படிப்பை வீட்டிலிருந்தபடியே இலவசமாகக் கற்கலாம் என்றெல்லாம் ரிஷிவந்தியத்திலிருந்து ஒரு டுட்டோரியல் காலேஜ் விளம்பரம் வந்திருந்தது. ரிஷிவந்தியம் என்ற அந்த ஊரின் பெயரே சங்கரனுக்கு ரொம்ப பிடித்திருந்தது. அங்கிருந்தும் விபரங்கள் எல்லாம் வந்தன. வழக்கம் போல அம்ம அதெல்லாம் வேண்டாமென்று சொல்லி விட்டாள்.

ஆவுடை வேகமாகப் போய் கொண்டிருந்தாள். அவள் பின்னால் சங்கரன் இஷ்டமே இல்லாமல் நடந்து கொண்டிருந்தான். கம்பெனி பக்கமிருந்து கிருஷ்ணன் தன் பழைய சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். இவன் தூக்குச் சட்டியுடன் போகிறதைப் பார்த்து ஏதாவது கேட்பான் என்று எதிர்பார்த்தான். நல்ல வேளையாக கிருஷ்ணன் இவனைப் பாராமலேயே போய் விட்டான். கிருஷ்ணன் இவனைக் கடந்து போகும் போது அவனிடமிருந்து மருந்து வாடை அடித்தது. கம்பெனியில் வேலை பார்க்கிறவர்கள் எல்லோருடைய உடம்பிலும் இந்த மருந்து வாடை அடிக்கும். எத்தனை சோப் போட்டுக் குளித்தாலும் அது போகவே போகாது.

கம்பெனியின் நீளமான காம்பவுண்டுச் சுவர் ஆரம்பமாகி விட்டது. சுவர் மீது வரிசையாக மைனாக்கள் உட்கார்ந்திருந்தன. நிர்மலா வீட்டில் கூட முன்பு மைனா இருந்தது. ஈஸ்டருக்கு ஒரு வாரம் இருக்கும் போது ஒரு நாள் காலை கூண்டில் செத்துக் கிடந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. நிர்மலா கூட அவ்வளவாக வருத்தப்படவில்லை. இவன்தான் ரொம்ப வருத்தப் பட்டான். பிறகு வெறும் கூண்டு மட்டும் வெகு நாளைக்கு அவர்கள் வீட்டில் உத்திரக்கட்டையில் தொங்கிக்கொண்டிருந்தது.

'ஏம்மா அதான் வேல இல்லன்னு ஆளுக திரும்பிப் போறாவ இல்ல. அப்பிடியே வீட்டுக்குப் போவ வேண்டியதுதான ? எதுக்கு இம்புட்டுத் தூரம் வீணா வந்து அலையுதியோ ? ' என்றார் வாட்ச்மேன் ஞானமுத்து.

'உள்ள அண்ணாச்சி இருக்காங்களா ? '

'அண்ணாச்சி ஆபீஸ் ரூம்ல இருக்காங்க. எதுக்கு ? '

'அவங்களப் பாக்கணும். '

'அவங்களப் பாத்து என்ன செய்யப் போறீயோ ? குளோரைடு லாரி வந்தாத்தான் வேலயே. '

'ஏதாவது கழிவு கிழிவு கெடந்தா பாக்கலாம்னுதான்... '

'கழிவுதான ? நீங்க கேக்கதுக்கு முந்தியே நேசமணி, அண்ணாச்சி கிட்டக் கேட்டுப் பாத்துட்டா. கழிவெல்லாம் ஒண்ணும் இல்லன்னு அண்ணாச்சி சொல்லிட்டாங்க. இன்னைக்கிச் சாயந்தரத்துக்குள்ள லோடு வந்துருமாம்... நாளைக்கு எப்பிடியும் வேல இருக்கும். போயிட்டு வாங்க. '

பின்னும் ஆவுடை தயங்கி நின்று கொண்டிருந்தாள். ஞானமுத்து தன் ஷெட்டுக்குள் போய் உட்கார்ந்து கொண்டு விட்டார். சங்கரன் தள்ளியே நின்று கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்து விட்டு ஆவுடை நடக்கத் தொடங்கினாள். சங்கரனும் அவள் பின்னால் போனான். இருவரும் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை.

வீட்டுக்கு வந்ததும் ஆவுடை தூக்குச் சட்டியை வைத்து விட்டுப் படுத்து விட்டாள். கொஞ்ச நேரத்திலேயே தூங்க ஆரம்பித்து விட்டாள். தங்கைகள் பள்ளிக்கூடம் போயிருந்தனர். அப்பாவையும் காணவில்லை. அம்மா தூங்கியதும் சங்கரன் புறப்பட்டான். சட்டை வேட்டியெல்லாம் கருமருந்து வாடை அடித்தது. வெயிலில் வந்ததால் அந்த நெடி அதிகமாக இருந்தது. வேறு சட்டை மாற்றலாமென்று கொடியி;ல் கிடந்த சட்டையை எடுத்து மோந்து பார்த்தான். அதிலும் மருந்து வாடை அடித்தது. இத்தனைக்கும் அது துவைத்த சட்டை. வீடு பூராவுமே கருமருந்து வாடை அடிக்கிற மாதிரி இருந்தது. சட்டையை மாற்றாமலேயே நிர்மலா வீட்டுக்குப் புறப்பட்டான்.

சுபமங்களா-நவம்பர்,1995
Thinnai 1999 December 3
.

# அந்தப் பையனும் ஜோதியும் நானும்

வண்ணதாசன்

ராஜாராமுக்கு உலகத்திலேயே நல்ல சங்கீத ரிக்கார்ட்ஸ் எங்கே கிடைக்கும் என்று தெரியும். மேரி தெரஸாவுக்கு எங்கெங்கே அழகான அன்புமய வாழ்த்து அட்டைகள் கிடைக்கும் என்று தெரியும். தெற்கு கடற்கரை ரஸ்தாவில் பெரிய அட்டைப்பெட்டிகளில் மின்பல்புகளை ஏற்றிக் கொண்டுவந்த கை வண்டியை நிறுத்திவிட்டு என்னோடு ஒரு பழக்கீற்று சாப்பிட்ட அற்புத முண்டாசுக்காரனுக்கு நல்ல தர்பூசனிப்பழங்கள் எந்த ஊரில் கிடைக்கும் என்பது தெரிந்திருந்தது. எரிச்சுடையார் கோவில் பிரகாரத்தில் நிற்கிற மரத்து நெல்லிக்காய்கள் போல வேறெங்கும் கிடையாது என்று அம்மா சொல்வாள். இப்படி ஒவ்வொருக்கும் ஒன்று தெரிந்திருக்கிறது என்றாலும் எனக்குக் கொலுசு எங்கே கிடைக்கும் என்று சத்தியமாக தெரியவில்லை.

மேலும், யோசிக்கவும் அக்கறைப்படவும் உலகத்தில் ஆயிரம் விஷயங்கள் இருக்க, நான் கொலுசு பற்றியே ஒரு பத்து நாட்களுக்கும் அதிகமாக யோசித்துத் திரிகிறேன் எனில் கிறுக்குத்தவிர வேறென்ன. மனதின் ஒரு பகுதியை இப்படிப்பட்ட கிறுக்குத்தனத்திற்கென்றே ஒதுக்கிவைக்கவும் வேண்டியதிருக்கிறது.

முந்திரிக்காடுகளின் வழியே நடந்து, விலங்குகளின் தடங்களை முற்றிலும் இழந்துவிடாத பாறை வெடிப்புகளில் திரவப் பளிங்காகக் குளிர்ந்து பொங்குகிற அருவியின் வீசலில் சுழித்து இறங்கின ஓடையின் தடத்தில், ஒதுங்கிக் கிடந்த பருத்த சிவப்புக் கற்களைப் போன்ற குன்றிமணி விதைகளின் புதைவை, முன்தினம் போலவே மறுநாளும் மறுநாளும் தேடி அலைந்தது கிறுக்குத்தனமே. மூங்கில் கீற்றுக்காய் பாய்போல நெருக்கித் தைத்து, அதன்மேல் சிதைந்த கல்மண்டபங்களை ஒட்டிய தெப்பக்குளத்தில் படகு ஒன்று அலைந்து கொண்டிருக்க, படகின் இரண்டு குறுக்குப் பலகைகளில் ஒன்றில் உதிர்ந்து கிடக்கிற நாகலிங்கப்பூவின், அழைக்கிற வசீகரத்தை வரைந்திருந்த படத்தை பார்த்த கையோடு அதை வரைந்தவன் யார் என்று சுதீந்திரம் சன்னதித்தெருவைத் தேடிப்போனது ஒரு கிறுக்கு. உயர்நிலைப் பள்ளிக் கூடத்து மைதானத்துப் புல்வெளியிலிருந்து, மறுநாள் தான் இருக்கமாட்டேன் என்பதை எந்தவகையிலும் , முன்னுணர்த்தாமல், மிடறு மிடறாகப் பியர் அருந்தியும், தாஸ் தாஸ் என்று மட்டுமே அவன் மரியாதையுடன் அழைக்கிற ஜேசுதாஸின் கர்நாடக சங்கீதக் குரலை அடியொற்றிப் பாடியும், ரஸ்ஸலின் சுயசரிதைப் புத்தகத்தை அன்றைய தினத்தின் மீதான கையெழுத்துடன், எனக்கு விட்டு விட்டும் வலிந்து வலிந்து மாத்திரைகளால் மீளாது தூங்கிவிட்ட தினம் வரை, என்னுடன் பிரியாதிருந்த, நான் சந்தா என்று அழைக்கிற சந்திரபோஸின் இழப்பினைத் தாங்காது அலைந்தது இன்னொன்று. பல்கலைக் கழக வளாகத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய ஒரு கருத்தரங்கின் பார்வையாளனாகப் போன சமயம், வாசிக்கப்பட்ட எத்தனையோ பேப்பர்களில், மூளைசாராமல் அனுபவம் சார்ந்தும் வாழ்வு சார்ந்தும் மனிதர்கள் சார்ந்தும் தயாரிக்கப்பட்டிருந்த ஒரு நல்ல கட்டுரையை வாசித்த ஜோதி என்ற பெண்ணுக்காக நான் கொலுசு வாங்க அலைவது அந்த கிறுக்குத்தனத்தில் எல்லாம் சமீபத்தியது.

இத்தனைக்கும் ஜோதி நகைகளில்லிருந்து விலகியே இருந்தாள். தங்கம், வெள்ளி என்றால்தான் நகையா. வளையல்கள் என்ன, பாசிவகைகள் என்ன, அவைகளைக்கூட அணிவதில்லை. காதில் ஒன்றும் கிடையாது. கழுத்தில் ஒன்றும் கிடையாது. பல்கலைக்கழகத்திலிருந்து ஜோதி இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்க, மீன்வளத்துறையின் சுதந்தரமான என் ஆராய்ச்சிக் கூடங்களில் குனிந்து

பணியாற்றுகின்ற நேரங்கள் தவிர்த்த இந்த ஒன்றரை ஆண்டுகளின் பழக்கத்தில், அவசரமின்றி, இயல்பாக, உணர்ந்து உணர்ந்து மலர்ந்த, புரிந்து புரிந்து விரிந்த இந்த உறவின் கீழ நடமாட நன்றாக இருந்தது. தனித்தனியாக இருக்கையில் எங்களிடம் இல்லாதிருந்த துளிர்ப்புகள் பழகத் துவங்கிய பின்பு, அவரவர் அறியாத பசுமையை உள்ளிருந்து பீறிட்டெழும்படியாக்கி அற்புதம் செய்தன.

பொந்துகளிலிருந்து கிளிகள் பறந்த, மருத மரங்கள் அடர்ந்த, ஒரு பக்கம் மட்டும் கண்ணுக்கெட்டும் தூரம் கரும்பாக வாழையாக நெல்லாகப் பச்சைபாய, இன்னொருபக்கம் நீர்முளைத்து, நீர் கிளைத்த, நீர் கனிந்து, நீர் உதிரும் நதியும் மணலும். ஜோதியும் நானும் இதன் வழியாக நடந்து நடந்து செல்லும்போது, ஒரு கவிதையிலிருந்து உருவி விழுந்த வரிபோல அந்த ஒற்றைக் கொலுசு மண்ணில் கிடந்தது. அதிலும் ஜோதியே புண்ணியம் செய்தவள். அவளுக்கே அதன் பார்வையும். கையில் எடுத்து மணல்போக வாய் குவித்து ஊதினாள். மண்டியிட்ட அந்த நிலையிலிருந்து என்னை நிமிர்ந்து பார்த்தபடி அதன் இரு முனைகளையும் பிடித்துச் சிறு ஆரமாக்கி, 'அதோ அந்த சூரியனுக்கு ' என்று வானுக்குச் சூடினாள். சின்னதாக முத்தமிட்டாள். அதை அணிந்திருந்த காலையே ஒற்றிக் கொள்வதுபோல ஒற்றிக் கொண்டாள். நுகர்ந்தாள். மேலும் நுகர்ந்தாள். பரவசத்தில் அமிழ்ந்து கிறங்கும் கண்களுடன், சற்றே காலணியைத் தளர்த்திக் கொண்டு, புடவையை விலக்கி, பாதத்தின் மேல் அந்த கொலுசைப் படியவிட்டாள். ஜோதியின் அந்த ஒருநிமிடச் சித்திரத்தை முழுதாகப் பார்க்குமுன், எழுந்து நின்று கொலுசை வீசினாள். நிஜத்தில் கொலுசு, மிகச்சிறு தண்ணீர் சிலிர்ப்புடன் ஆற்றில் விழுந்தது எனினும், எனக்கு அது ஜோதியின் கால்களிலேயே இருந்தது. இருக்க விரும்பினேன்.

வெறும் கொலுசு. அதுவும் ஒற்றைக்கொலுசு. என்னை இப்படி மேல் கீழாகப் புரட்டிப் போடும் என்று நம்பவே முடியவில்லைதான். நம்பிக்கையின் ஆதாரங்கள் இந்த இந்த இடங்களில் இருந்து துவங்கப்பட வேண்டும் என்ற கட்டாயங்கள் இருக்கின்றதா என்ன ? ஜோதியே அவளின் முகத்தை எல்லாம் மறக்கிறபடிக்கும், கொலுசும் காலுமாயிற்று எல்லாம். கொலுசின் ஒற்றைப் புனைவுடன் பரதமாடி, மிருதங்கமும் வெங்கலத் தாளமும் நட்டுவாங்கமும் அதிர அதிர நெருங்கிக் கலந்து நின்றாடும் உடல் திரண்டு திரண்டு வர, திகம்பரத்தில் சிதம்பரம்.

பட்டை வீறும் வெயில். உந்தித்தள்ளும் முதுகில் வேர்வை. லாரியிலிருந்து கிடங்கிற்கு மாறும் எண்ணை டின்கள். கமிஷன் கடை தொலைபேசிகள். நெடியடிக்கிற சாக்கு மண்டிகள். பாதையில் புரளும் பூண்டு சருகும் தோலும். சால்னா வாசனைக்கு முதுகு காட்டியபடி தலால் வினியோகிக்கும் அரசு உடை முகங்கள். இதற்கு மத்தியில் கொலுசு வாங்க அலைகிற நான், வேடிக்கைதான்.

சினிமா சிலேடுகள், பஸ்டாண்டு விளம்பர போர்டுகள், மஞ்சள் துணிப்பைகள் எல்லாம் ஏகமாக உச்சரித்து மனப்பாடமாகியிருந்த அந்த பெரிய நகைக்கடைக்குப் போனால், அவர்கள் கொலுசுக்கு என்றே தனிக்கடைவைத்திருப்பதாக மிகப்பணிவாகப் புன்னகைத்து அப்புறப்படுத்தி அனுப்பி விட்டார்கள் இங்கே. கொலுசு விற்றால் என்ன. கோமேதகம் விற்றால் என்ன. நகைக்கடைக்கு என்று இருக்கிற ஜாடை மாறவா போகிறது. இல்லை.

அதேமாதிரிக் கண்ணாடி அட்டங்களில் உருப்படிகள். மோதிர விரல்களுடன் கும்பிடுகிற கடை முதலாளியின் புகைப்படம். தங்கம், வெள்ளி என்றைய கிராம் விலை எழுதப்பட்டிருக்கிற பட்டியல். கண்ணாடித் தடுப்பை ஒட்டி, சர்க்கஸில் யானையை நிறுத்துகிற ஸ்டூல் மாதிரி, உள்ளங்கை அகலம் உள்ள ஸ்டால் முக்காலிகள். கண் காணிக்காதது போல கண்காணிக்கிற குங்குமப் பொட்டு வைத்த காசுக்கடை கணக்கப்பிள்ளைகளின் விசுவாசமான பார்வைகள். விசிறி நிறுத்தப்பட்ட பிறகே எடைக்குத் தயாராகிற துல்லியத் தராசுகள்.

தன்னுடைய பெண்ணுக்குக் கொலுசும், தனக்குக் காலில் மெட்டியும் வாங்கிக் கொண்டிருந்த பெண், தன்னுடைய கணவனிடம் நான் வந்த பிறகு உரக்கவும், அலுத்துக்கொள்வதும் ஆன குரலிலும் பேச ஆரம்பித்தாள். கணவனும் ஆண்பிள்ளைதானே. 'சரிதான், எல்லாம் தெரியும் ' என்பதுபோல அவளை அலட்சியம் செய்துவிட்டு மகளுடன் மிக நெருக்கமாக பேசியபடி, என்னை நிதானிக்க முயன்று

ஆனால் அதுவும் இயலாது போன போலி அவசரத்தில், பர்ஸிலிருந்து விழாத காகிதமடிப்பைக் கீழே தேடியபடி வெளியே போக, ஏற்கெனவே, நான் உணர்ந்த வேடிக்கை இன்னும் கூடிற்று.

கடைக்குள் என்னுடைய வலது கடைசி கோடியில் இன்னும் ஒரு ஜோடி இருந்தனர். சமீபத்தில் கல்யாணம் என்று எழுதப்பட்ட முகங்கள். கல்யாண மஞ்சள் சட்டை, கல்யாண மயில் துத்தக் கலர்ப்பட்டு; அவர்களே அவர்களின் வாசனை என்று எல்லாம் எளிமையும் அற்புதமுமாய் இருந்தன. விருப்பமும் மறுப்புமாகப் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருந்த பாஷையில் ஜீவன் ததும்பிக்கொண்டே போயிற்று. கடைசியில், அவன் வாங்கிக் கொடுக்க, அங்கேயே அணிந்து கொள்ளச்சொல்லி வற்புறுத்த, நானும் கடையில் இருக்கிற கூச்சத்துக்கு விலகி, அந்தப் பெண் கொலுசை அணிந்து கொண்டபோது-மறுபடியும் ஜோதி. வானமெங்கும் பரிதியின் ஜோதி. கொலுசு மட்டும் அணிந்து நிற்கிற ஜோதி.

புல்லாங்குழல் வைக்கிற பெட்டிகள் போல, ஒரு நாலைந்து பெட்டிகள் எனக்கு முன்னால் நகர்த்தி வைக்கப்பட்டன. ஒரு நிமிடம் கொலுசுகள் எல்லாம் மறைந்து, நிழலசைய நிழலசைய, புல்லாங்குழல் ஒலி மட்டும் திறக்காத பெட்டிகளிலிருந்து விம்மின. மாலியின் சின்னஞ்சிறு கிளியே கொலுசு கட்டி ஆடியது. ஒவ்வொரு மரப்பெட்டியிலிருந்தும் கொடி கொடியாய் சிவப்பு நூல் முடிந்து, வெள்ளி மினுமினுக்கும் ஜோடிக் கொலுசுகள். அவற்றில் ஏதோ ஒரு ஜதை ஜோதிக்கொலுசுகள். கையில் எடுத்தும் கற்பனையில் அணிவித்தும் பார்க்க, ஒவ்வொரு கொலுசுக்கும் ஒரு ஜோதி எழுந்தாள்.

காலில் கொலுசு, கை புஜத்தில் வங்கியாக கொலுசு. உச்சியில் நெற்றிச் சுட்டியாகக் கொலுசு. உட்கழுத்தில் அட்டிகையாக. மார்பிலும் அணியலாமோ கொலுசு ? உன்னதமும் உன்மத்தமுமாக ஊசலிடும் கற்பனைகள். ஜோதியின் நெற்றியில் மேலுதட்டில் எல்லாம் வேர்வை அரும்ப ஒரு சித்திரம் போன்று என் கற்பனையில் நெகிழ்ந்திருந்தாள்.

எத்தனை நேரம் செல்லுபடியாகும் கற்பனை. அதுவும் விளம்பரம் தூள் பறக்கிற இடத்தில் கற்பனைக்கு அதிக நேரம் எப்படி மரியாதை எதிர்பார்க்க முடியும் ?

'என்ன சார்; எதை எடுத்துக்கிறீங்க ? ' என்று எல்லா பெட்டியையும் எடுத்து மூடிவதற்குத் துவங்கியதில் அதிர்ந்து திகைத்த போது, கடையின் வாசலுக்குள் அந்த பையன் நுழைந்து கொண்டிருந்தான்.

பதினெட்டோ இருபதோ என்று நிதானிக்க முடியாதபடி தாடி சிதறி இருந்த முகத்தின் கண்களில் மட்டும் கலங்கின பிரகாசம். தயங்கியும் கூசியும் நின்று கொண்டிருந்த கைகளில் ஒரு சிறு வெள்ளிக் கோப்பை. எந்த பந்தயத்தில் எந்தெந்த முகங்களை முந்தியோ இதை அவன் அடைந்திருக்க வேண்டும். வெற்றிகரமான தருணங்களின் அலாதிப் பொலிவைத் தருவித்த அந்த ஸ்போர்ட்ஸ் கப் சற்று மங்கியிருந்தது.

ஒரு வலிய கரம் பிசைந்து இந்த வாழ்க்கையை விட்டுக் கசக்கி அவனை எறிந்து விட்டது போன்ற குரலுடனும் துக்கத்துடனும் அவன் தணிந்த குரலில் அதை விற்கவேண்டும் என்று சொன்னான். 'இது எவ்வளவுக்குப் போகும் ' என்று கேட்டான். இதை விற்க நேர்ந்ததற்கான துக்கமும், இதை என்போன்ற மூன்றாம் நபருக்கு மத்தியில் கேட்கவேண்டியதாகி விட்ட நிர்ப்பந்தத்தின் விளைவான கூச்சமுமாக, அந்தச் சின்ன வயதின் முகம் தவித்தது. ' இதை வைத்துக்கொண்டு ஏதாவது கொடுங்கள் ' என்று நேரடியாகக் கேட்காமல், வெவ்வேறு தணிந்த பாவனைகளில் கெஞ்சியது. 'என்ன விலைக்கு எடுப்பீங்க ' என்று அந்த சிறு கோப்பையை முன்னால் நீட்டியது.

எனக்கு சுளீர் என்றது. ஒவ்வொருத்தரும் தன்னுடைய வெற்றியின் அடையாளங்களை, அதை அடைந்த தருணத்தின் தனித்த சந்தோஷத்தை எல்லாம் எப்படி அற்பமாக இழக்க நேர்கிறதற்கு மத்தியில், நான் கொலுசு வாங்க அலைவதும், கொலுசே மட்டுமே அணிந்த ஜோதியின் கற்பனையே அதன் பிரதான தூண்டுதலாக இருப்பதும் எல்லாம் எவ்வளவு முரணானது. அபத்தம் சார்ந்தது.

'அதையெல்லாம் மத்தியஸ்தர் கடையிலேயே கேளுப்பா சொல்லுவாங்க ' குங்குமப்பொட்டுக்காரர் முகத்தை வியாபாரத்தின் பக்கம் வைத்துக்கொண்டு பதில் சொன்னபோது, கோப்பையின் மீது இறுகிற கைகளுடன்- 'அந்தக் கடை எங்கே இருக்கு ' என்று பையன் தயங்கினான்.

'நாலு கடை தள்ளி விசாரிச்சா என்ன. படிச்சவங்க தானே ' - இதைச் சொன்ன கடைச் சிப்பந்தி என்னை பார்க்கிறதற்கு என்ன இருக்கிறது. வாங்குகிறதும் விற்பதும் தானே வியாபாரம். வாங்க வருபவனை, அதுவும் கொலுசு வாங்க அலைகிறவனை உட்கார்த்தி வைத்து அத்தர் புனுகு பூசுகிற மாதிரிப் பேசுகிறதும், ரொம்பவும் நெருக்கடியும் இக்கட்டுமாக இப்படி வந்து நிற்கிற முகத்தைக் கல்யாண வீட்டில் குறவன் குறத்தியை விரட்டுவது போல விரட்டுவதும் எதில் சேர்த்தி. ஒரு கொலுசின் தொய்வுவிழாத, முறுக்கேறிய கண்ணிகளுக்கும், பழுப்படித்து மங்கத் துவங்கிவிட்ட அந்தப் பந்தயக்கோப்பைக்கும் இடையில் உள்ள தூரங்கள் இப்படி நிதானிக்க முடியாத தொலைவுக்குப் போனதேன் ?

நான் வெளியே வரும்போது எஸ்.எம்.எஸ்.சீல் உத்தரவாதமுள்ள கொலுசு என் காற்சட்டைப் பையில் இருந்தது. உலகத்தில் அந்தப் பையனும் இருக்கிறான். ஜோதியும் இருக்கிறாள். நானும் இருக்க வேண்டியதிருக்கிறது.

--

வீடு தொகுப்பு அக்டோபர் 88 Thinnai 1999 December 3

# ஜி. நாகராஜனின் நிமிஷக்கதைகள்

1

'குத்தத்தை ஒத்துக்கிறயா ? ' என்று மாஜிஸ்ட்ரேட் கைதியைக் கேட்டார்.

'ஆமாங்க ' என்றான் கைதி.

'இந்த மாதிரிக் குத்தத்துக்கெல்லாம் ஆறு மாச தண்டனை கொடுக்கணும். ஆனால் நீ குத்தத்தை ஒத்துக்கிறதுனாலே, பொளச்சுபோ, மூணு மாச தண்டனை கொடுக்கிறேன் ' என்றார் மாஜிஸ்ட்ரேட்.

'அய்யய்யோ எசமான்! நீங்க மூணுமாசந்தான் போடுவீங்கன்னா, நான் என் குத்தத்தை ஒத்துக்கலே. கேசே நடத்திப் பாத்துரேன். கெடச்சா ஆறுமாசம் இல்லண்ணா ஒண்ணுமில்லேன்னு போகணும் ' என்றான் கைதி. அதற்குள் இன்ஸ்பெக்டர் எழுந்திருந்து, 'யுவர் ஆனர், கேஸ் நடந்தா தப்பிச்சாலும் தப்பிச்சிடுவான். அவன் கேக்கறபடி ஆறு மாசமே போட்டிடுங்க. ஒரு கன்விக்ஷன் என்றாவது டயரியில் வரும் ' என்றார்.

மாஜிஸ்ட்ரேட் ஆறு மாதத் தண்டனை விதித்தார்.

ஜெயித்தது யார் ? அந்த ஏழைக்கைதிதான்.

2.

மடத்துக்கு முன்னால் ஒரே கூட்டம். ஊர் மக்கள் அனைவரும் திரண்டு வந்திருந்தனர். அத்தனை பேர் முகத்திலும் வருத்தம் தோய்ந்திருந்தது. குசுகுசு என்று மட்டும் பேசிக்கொண்டனர்.

'சாமியார் சமாதியாகிவிட்டார். ' 'இன்று காலை தியானத்தில் உட்கார்ந்திருந்தவர்தானாம், அப்படியே சமாதியாகிவிட்டார் ' என்றெல்லாம் பேசிக்கொண்டனர்.

ஊர்ச்சிறுவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கூட்டத்தின் நடுவே குறுக்கும் நெடுக்குமாக சென்று கொண்டிருந்தனர். என்னவென்று புரிந்து கொள்ளாமலேயே அவர்களும் 'சாமியார் சமாதியாகிவிட்டார் ' என்ற வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டனர். இறுதியில் மடத்துக்காரர்கள் சாமியாரை வெளியே கொண்டுவந்தனர். சாமியார் வெளியே தூக்கிக் கொண்டுவரப்படுவதையே உற்று நோக்கிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் திடாரென்று, 'டேய், சாமியார் செத்துப் போயிட்டாரு ' என்று கத்திக் கொண்டே கூட்டத்தைவிட்டு ஓடிவந்தான். உடனே அத்தனை சிறுவர்களும், 'மடத்துச் சாமியாரு செத்துப் போயிட்டாரு ' என்று அழுத்தம் திருத்தமாகக் கத்திக்கொண்டு ஓடினர். பெரியவர்கள் சிறுவர்களைக் கூட்டத்தை விட்டு அரட்டி மிரட்டி ஓட்டினர்.

3.

அவள் ஒரு விபச்சாரி. அவளை வைத்துக் கதை எழுத வேண்டுமென்று எழுத்தாளன் விரும்பினான். ஆகவே அவன் அவளிடம் சென்றான்.

'பெண்ணே! நீ இவ்வளவு கெட்ட நிலைக்கு வரக்காரணம் என்ன ? ' என்று எழுத்தாளன் கேட்டான்.

'என்ன ? ... கெட்ட நிலையா ? அப்படி ஒண்ணும் எனக்கு சீக்குக் கீக்குக் கிடையாது. ஒங்கிட்ட சீக்கில்லாமே இருந்தா அதுவே ஆண்டவன் புண்ணியம் ' என்றாள் விபச்சாரி.

'இல்லே, உனக்கு சமுதாயம் எவ்வளவு பெரிய கொடுமையை இழைத்துவிட்டது! ' என்றான் எழுத்தாளன்.

'கொடுமை என்ன கொடுமை! பசிக்கொடுமை எல்லோருக்குந்தானிருக்கு... இந்த போலீசுக்காரங்க தொந்தரவு இல்லாட்டி ஒண்ணுமில்லே ' என்றாள் விபச்சாரி.

'கண்ட கண்டவங்க கிட்டெல்லாம் போகிறது உனக்கு கஷ்டமாக இல்லை ? '

'யாரும் கண்ட கண்டவங்க கிட்டெல்லாம் போகல. எனக்குன்னு ஒரு புருஷன் இருக்காரு '

'மற்ற பெண்கள் எல்லாம் கட்டின புருஷனோடு மட்டும்தான் இருக்கிறார்கள். வேறு ஆண்பிள்ளைகளோடு சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை தெரியுமா ? '

'அப்படியா ? '

'பின்பு ? '

'சரி, உங்களுக்கு பெஞ்சாதி இருக்குங்களா ? '

'ஊம், இருக்கு '

'நீங்க மட்டும் எங்கிட்ட வந்திருக்கீங்களே ஒங்களுக்கு வெக்கமா இல்லே ? .. சரி, அது கிடக்கட்டும்; நேரமாவுதுங்க '

கொடுமையிலும் கொடுமை, கொடுமையை கொடுமை என்று புரிந்து கொள்ளாததுதான். எழுத்தாளனுக்கு அது புரியவில்லையோ என்னவோ, விபச்சாரியைக் காட்டி, வாசகர்களின் கண்ணீரைப் பிதுக்கியெடுத்து, நாலு காசு சம்பாதிக்கும் எண்ணத்தை மட்டும் கைவிட்டான்.

4.

அவன் தாமரையைப் பற்றிக் கவிதைகளில் படித்திருக்கிறான். படங்களில் பார்த்திருக்கிறான். அதன் செம்மையும், மென்மையும், எழிலுருவும் அவன் உள்ளத்தைச் சுட்டெரித்தன. அதை அடைய விரும்பினான். தடாகத்துக்குச் சென்றான். அதோ! அங்கு மலர் தெரிகிறது. தண்ணீரின் மேல் கவலையற்று உறங்கிக் கிடக்கிறது. 'வா, வா ' என்று அவனைக் கள்ளப் பார்வை கொடுத்து அழைக்கிறது. அவன் தடாகத்துக்குள் காலெடுத்து வைத்தான்.

'யாரது ? தண்ணீரிலே இறங்காதே. ஒரே சகதி! தாமரைக் கொடி காலைச் சுத்திக்கிட்டா அப்புறம் உயிருக்கே ஆபத்து ' என்று எச்சரிக்கிறான் யாரோ ஒருவன்.

தாமரையைப் பார்த்து விரும்பிய அவனும் உடனே சட்டென்று நின்றுவிட்டான். மலரைப் பார்த்துப் பெருமூச்செறிந்து சற்று நேரம் நின்றுவிட்டு, அதோ அங்கே அவனும் தலை குனிந்து செல்கிறான்.

அவன் இன்னும் வாழ்கிறான். எனக்குத் தெரியும். ஆனால் என்றோ தற்கொலை புரிந்து கொண்டு விட்டான்!

- சரஸ்வதி, ஏப்ரல், 1961

# துக்க விசாரணை

ஜி. நாகராஜன்

துக்க விசாரணைக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். உலகத்தில் அன்றாடம் சிறிது சிறிதாக மானத்தை விற்று எத்தனையோ பேர் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போலத்தானே ரோகிணியும். அவளுக்கு மட்டும் துக்க விசாரணை என்ற சம்பிரதாயம் வேண்டாமா ?

நான் கடற்கரைக் கட்டில் ஒன்றில் உட்கார்ந்திருந்தேன். கடலின் இரைச்சல் காதுகளுக்கு இதமாக இருந்தது. அந்த இரைச்சலில் எத்தனையோ சுகதுக்கங்களை மறந்துவிடுகிறோம். கடலின் கண்ணுக்கடங்காத பரப்பு வேறு! அந்தப் பரப்பில்தான் எப்படி 'நான் ' என்ற உணர்வே கரைந்துவிடும் நிலையை எட்டி விடுகிறது! கடலின் அலைகள் கரையைத் தொடுவதும் தொடாததுமாக விளையாடிக்கொண்டிருந்தன. கீழ்வானத்தில் சில நிமிடங்கள் நிலைத்த சிவப்பொளி அவசர அவச்ரமாகக் கருமையைத் தொட ஆரம்பித்தது ஏதோ காணததைக் கண்டுவிட்டது போல ஒரு ஈ மிகுந்த தன்னம்பிக்கையோடு என் மூக்கு நுனியில் வந்து உட்கார்ந்து கொண்டது, ஒரு கையால் அதனை விரட்டியத்தேன், என்மீது என்னவோ அதற்கு திடார் பாசம் ஏற்பட்டது போல 'ஈ ' என்று ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு என் காதில் மீண்டும் உட்கார்ந்து கொண்டது. தலையை அசைத்தேன். அது காதிலிருந்து தலைக்குத் தாவியது. தலையைச் சொறிந்தேன். அது மீண்டும் என் முன் 'ஈ ' என்று வட்டமிட்டது. செகண்டுக்கு தன் இறகுகளை ஆயிரந் தடவைகள் அடித்துக் கொள்ளும் அந்த ஈ! செகண்டுக்கு ஒரு முறை அடித்துக் கொள்ளும் மனித இதயம்.! ஈயின் இதயம் செகண்டுக்கு எத்தனை தடவைகள் அடித்துக் கொள்ளும் என்று நினைத்துக் கொண்டேன். இன்னும் சிறிது நேரத்தில் நன்றாக இருட்டிவிடும்; துக்க விசாரணைக்குச் செல்லவேண்டும்.

இடையே ஊதி அணைத்துவிட்ட மெழுகுவர்த்தியைப் போல ரோகிணி இறந்துவிட்டாள். ஒரு போதும் குரலை உயர்த்திப் பேசமாட்டாள். ஒரு முறை யாரோ ஒருவனோடு இருந்தாள். நான் வந்ததை அறிந்ததும் வந்து சமாதானம் கூறிச் சென்றாள். 'இது என் தலை எழுத்துங்க ' என்று சொல்லிச் சிரித்துவிட்டுச் சென்றாள். நான் காத்திருப்பேன் என்று எதிர்பார்த்தாள். இரண்டு நாட்களுக்குப் பின் தான் நான் அவளிடத்துக்குச் சென்றேன். அப்போது, 'அக்கா கடனையெல்லாம் தீர்த்திட்டு கன்னியாஸ்திரி ஆகிவிடுவேன் ' என்றாள். 'இல்லாட்டி தற்கொலை பண்ணிப்பேன் ' என்று பிறகு சேர்த்துக் கொண்டாள். 'தற்கொலையில் அர்த்தமில்லை ' என்றேன். 'பின்னே எதில் ? ' என்று கேட்டுக்கொண்டே என் கன்னங்களில் முத்தினாள். அந்தப் பத்துப் பதினைந்தைக் கொடுப்பதைத் தவிர நான் ரோகிணிக்கு எதுவும் செய்தது கிடையாது. ஆனால் அவளுக்குத் தெரியுமோ என்னமோ, அவளைப் பற்றிப் பல தடவைகள் நான் நினைத்ததுண்டு. நினைப்பு என்ன அவ்வளவு பெரிசா ? பின் இல்லையா ? இறந்து போனவர்களைப் பற்றியோ உயிரோடிருப்பவர்களைப்பற்றியோ அவ்வப்போது நினைத்துக் கொள்வது பெரிசில்லையா ? ரோகிணியைச் சந்தித்த முதல்நாள், 'நாளை உன்னை எங்கே பார்க்கலாம் ? ' என்றேன். 'எட்டு மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் அக்கா வருகிறாள். அவளைச் சந்திக்க ஸ்டேஷனுக்குச் செல்வேன் ' என்றாள். காலை ஏழே முக்காலுக்கே ரயில் நிலையத்துக்குச் சென்று விட்டேன். ரயில் இருபது நிமிஷங்கள் தாமதமாக வந்தது. ரயில் முழுவதும், பிளாட்ஃபாரம் முழுவதும் தேடினேன். ரோகிணியையும் காணோம். அக்கா ஜெயத்தையும் காணோம்.

பிறகுதான் ஒரு முறை ஜெயத்தைப் பார்த்தேன். பிராண்டி குடித்துவிட்டு வெற்றிலைப் பாக்கு போட்டிருந்தாள். தடித்த வெண்மையான சரீரம்; ரோகிணியின் மென்மை இல்லை. சிலவகை ஆண்களைக் கவரும் முரட்டுத்தனம் அவளிடம் காணப்பட்டது.

ரோகிணி இறந்து இருபது நாட்களுக்கு மேலாகிறது. பத்திரிக்கையில் விஷயத்தைத் தெரிந்து கொண்டேன். அவள் வீட்டுக்குச் சென்றபோது., 'மூணுவாரமா ஊரில் இல்லை ' என்று சால்ஜாப்பு சொன்னேன். வழக்கம்போல் வீடு அடைத்துக் கிடந்தது. நான் கதவைத் தட்டவும், பக்கத்து ஜன்னல் அரைகுறையாய்த் திறந்தது. 'நீங்களா ? ' என்றுவிட்டு கதவைத் திறந்தாள் ஜெயம். உள்ளே நான் நுழையவும் அவள் கதவையும் ஜன்னலையும் மூடினாள். 'ஒரு மாதமா ஊரிலே இல்லே. நேத்துத்தான் கேள்விப்பட்டேன் ' என்று ஆரம்பித்தேன்.

'உட்காருங்க ' என்றுவிட்டு, 'அது என் தலையெழுத்து ' என்றாள் ஜெயம்.

'டாக்டர்கிட்டே காட்டலயா ? ' என்றேன்.

'மொதல்லே மூணு நாலு நாளைக்கு வெள்ளை வெள்ளையாப் போச்சுனது. ஆச்சி சொன்னாங்களேன்னுட்டு சந்தனத் தைலம் வாங்கிப் போட்டேன். கேக்கலே. முள்ளங்கிச் சாறு, வெங்காயச் சாறு, சீரகம் வெல்லம் எல்லாம் கலந்து மூணுநாள் சாப்பிட்டாப் போதும்னிச்சு தங்கமணி. எல்லாத்தையும்தான் செஞ்சு பார்த்தோம் '

'இதுக்கெல்லாம் இப்போ இங்கிலீஷ் மருந்து இருக்கே. பென்சிலின்ஜி எம்பாங்க. அதை ஊசி போட்டாப் போதுமே ' என்றேன் நான்.

'அதுதான் டாக்டர்கிட்டே வரமாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சுதே! ரெண்டு மாதஹ்த்திலே எல்லாம் கொணமாயிட்ட மாதிரிதான் தெரிஞ்சிச்சு. ஆனா அப்பப்ப வயித்துவலி, வயித்துவலின்னு கத்திச்சு. நாமக்கட்டியை அரைச்சுப் போட்டோம். வலி கொஞ்சம் நின்னமாதிரி தெரிஞ்சது. நானும் அன்னைக்குச் சினிமாக்குப் போயிட்டேன். அத்தான் வளக்கம் போல சீட்டாடப் போயிட்டாரு. ஏதோ ஒரு தடியன் வந்து, 'ஏண்டி, எனக்கு சீக்கா வாங்கி கொடுத்தேன்னு ' கேட்டுக்கிட்டு, செருப்பைக் களத்தி அடிச்சிருக்கான். அவன் போகவும் ரயிலடிக்குப் போனவதான்... ' ஜெயம் மேற்கொண்டு பேசவில்லை.

'இந்த சீட்டாட்டம்தானே அத்தானைக் கெடுத்திரிச்சு ' என்றேன் நான், யோசனையோடு.

கனோரியாவைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். என் மாமா ஒருவர் அதனாலேயே கண்பார்வையை இழந்தார். சிறந்த டாக்டர்; இருந்தும் ஒன்றும் அந்தக் காலத்தில் செய்து கொள்ள முடியவில்லை. பிராண்டி குடித்தால் நோயின் கடுமையை மட்டுப் படுத்திக் கொள்ள முடியும் என்று எண்ணி அதிகம் குடிக்க ஆரம்பித்தார். அவரது அட்டகாசம் அதிகமாகவே, மூத்த மகன் அவரை ஒருநாள், 'வீட்டை விட்டு வெளியே போங்க ' என்று உத்தரவிட்டான். மறுநாள் அவர் காலி. அவர்தான் ஒருமுறை சொன்னார். ஆயிரம் கனோரியாக் கிருமிகளை ஒன்றாக வைத்தால் ஒரு குண்டூசியின் தலையளவுக்குத்தான் வரும் என்று. ஆனால் இந்தக் கிருமிகள் ரொம்பவும் சொகுசாக வாழக்கூடியவை. மனித உடல்தான் இவற்றுக்கு லட்சிய இருப்பிடம். வேறு மிருகங்களின் உடல்களில் இவை உயிர் தரிப்பதில்லை. சுற்றுப் புறக் காற்று சற்று உலர்ந்து விட்டாலோ அல்லது உஷ்ணம் அடைந்தாலோ கூட இவற்றால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இவற்றுக்கு அப்படி ஒரு தலைவிதி; இல்லை, மனிதனுக்கு அப்படி ஒரு தலையெழுத்து.

'அந்தத் தடியன் அப்படி அடிச்சதுதான் ரோகிணி மனசைப் புண்படுத்தி இருக்கு. அவன் போனப்புறம் ரயிலடிக்குப் போனவதான்... ' என்று மீண்டும் ஆரம்பித்து அரைகுறையாய் நிறுத்தினாள் ஜெயம். ஆனால் ஜெயத்தின் மேலாடை சற்று அலங்கோலமாக இருப்பதைக் கண்டதும் எனக்கு விஷயம் புரிந்தது. பையினுள் கையை விட்டுப் பத்து ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினேன். அப்பொதுதான் ஜெயத்தின் புன்சிரிப்பில் ரோகிணியின் சாயலைக் கண்டதாக நினைத்துக் கொண்டேன்.

மூடிய கதவைத் தாளிட்டுவிட்டு, சன்னலையும் அடைத்துவிட்டு, ரூபாயை வாங்கிக் கொண்டே, 'மேலே போகலாமா ? மெத்தை இருக்கு ' என்றாள் ஜெயம்.

**-சதங்கை,** மே 1973

# தாச்சண்யம்

கி ராஜநாராயணன்

யாரும் வர்றதுக்குள்ளெ சாப்பிட்டு முடிச்சிறணுமேண்ணு தான் மீனம்மா தினோமும் நினைக்கிறது. அது யாரவது ஒர்த்தர் வராம இருக்க மாட்டாங்க.

நேரமும் வந்ஹ்டு அப்பிடி அமைஞ்சி போகுதே.

அடையிற நேரத்துக்குத் தான் காட்லெயிருந்து வர முடியுது. பின்னெ வந்து.. நாலும் பாத்து காச்சி முடிக்கணும்.

'ம்; வாங்கெ ' என்று குரல் கொடுத்தாள்.

உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து புறப்பட்டார் நண்டு நாய்க்கர்.

நடமாடி வர்றமா.. தரித்தெறிஞ்சாலும் நாய்ககரின் காலுக்குப் பார்வை தெரியும்.

முன்னாலெ வந்து அமத்தலா உக்காந்து கும்பாவிலுள்ள கம்மஞ்சோத்து நடுவிலெ அமுக்கு அமுக்கி பள்ளம் செய்தார். மீனம்மா ஓரகப்பைக் கறியை கொண்டு வந்து அந்தப் பள்ளத்திலெ ஊத்தி ரெப்புனா. ஆளுக்கு ஓரகப்பைக் ககறிக்கு மேலே எப்பவுங்கெடயாது. பலசரக்கும் கறி புளியும் விக்கிற வெலையிலெ என்னமுஞ் செய்ய ஏலுதா.

இதுக்குள்ளெதான் ஒப்ப்பெத்தணும். மத்தப்படி.. மோரு தண்ணீங்கெற பெறப்பு எப்பவுங்கெடையாது.

புருசம் பெஞ்சாதி, மூணு பிள்ளெக. பிள்ளெக தீப்பெட்டி ஒட்டிச் சம்பாரிக்கி. அவ காட்லெ வேல கெடச்சா உண்டும்; இல்லாட்டி பிள்ளெகளோட பெட்டியடைக்க உக்காந்துருவ.

அவருக்கு இருப்பு வாசத் திண்ணெ தான். எப்படிக் கூடியும், ஓராளாவது நெல்யம் , பாக்க வந்துரும், கொஞ்சம் , வெத்திலைப் பாக்கு, ஒரு பொடிப்ப்ட்டை, கால்ரூவா தெச்சணை. கால்ரூவாதான் .. ண்ணாலும் சும்மாப்போகுதா ? கறிக்குத் தேங்கா வாங்கிக்கிடலாமில்லெ.

அந்தப் பொடிப் பட்டை தான் உசிரு.

காலைலெ சிலது நாளைக்கு, நீத்துப் பாகம் மட்டுந்தாம். ராத்திரிக்கு பருக்க மிஞ்சினா கலைலெ ஒருவா கஞ்சியும் கெடைக்கும்.பெறவு.. வெளக்கு வைக்கிற நேரத்துக்குச் சாப்பிடுற ஒரு நேரத்துச் சாப்பாடுதாம்.

துட்டு பெறண்டா மதியத்துக்குஒரு 'சுடுதண்ணி ' கெடச்சாலுங் கெடைக்கும்.மித்த நேரமெல்லாம் நகள்ரது பல்லிலெ இள்கிற இந்த ஒரு சிமிட்டாப் பொடியிலெதாம்.

எப்படித் தாந் தொட்டுந்தொடாமலும் மந்திரிச்சாலும் கறி காங்க மாட்டேங்கு. கேட்டாலுங் கெடைக்காது. வழக்கமா செய்யிராப்லெ 'மிச்ச சோத்துக்கு தண்ணியெ விட்டு கரைச்சி உப்புக் கல்லு ஒண்ணெ வாயிலெ போட்டுக் கடிச்சிக்கிட்டு கும்பாவோட தூக்கிக் குடிக்க வேண்டியது தானா.. இண்ணைக்கி யாரும் வர மாட்டாங்களா.. கடவுளே..

திடார்ண்ணு அங்கு விலாஸ் போயிலை வாடை வருது!; 'வாருமய்யா சுப்பையாச் செட்டியாரே '

சாப்பிடுற பிள்ளைக தெகைஞ்சி திரும்பிப் பார்த்தா சுப்பையாச் செட்டியாரு வாசப் படியேறி வர்றது தெரியுது. ' வாங்க அண்ணாச்சி, வாங்க ' சம்பிரதாயத்துக்குச் சொன்னாள் மீனம்மா.

'ஆமாம்மா '

பிள்ளையள் குறுஞ்சிரிப்பாணியா தலெயெக் கவுந்துக்கிருது.

'ம் சாப்பாடு நடக்குதாக்கும்; நடக்கட்டும் நடக்கட்டும். '

'உக்காருங்க அண்ணாச்சி '

வந்தவர் உரல்லெ உக்காந்துக்கிறார்.

'மீனம்மா , கொஞ்சம் கறி '

வந்தவர் திரும்பி கும்பாவைப் பார்த்தார்.

மீனம்மா அரை அகப்பையோ காலகப்பையோ கொண்டாந்து கும்பாவுலெ ஒரு இடு வச்சி கறி ஊத்தினது, அது நண்டு நாய்க்கருக்கு மட்டுந்தா தெரியும்.

# வீட்டுக்கார சொர்ணத்தாச்சி

**வண்ன நிலவன்**

'என்னடா இந்தப் பொம்பளை இத்தனை கண்டிஷன் போடுதாளென்னு வருத்தப் படாதீய.. எதையுமே கறாராப் பேசிக்கறது ஒங்களுக்கும் நல்லது எனக்கும் நல்லது. . என்ன சொல்லுதீய.. ? '

'சரிதான் சொல்லுங்க... '

'பம்பு அடிக்கும் போது மெதுவா அடிக்கணும். தக்கு புக்குன்னு அடிக்கக் கூடாது. பம்புக்கு வாஸர் போடணும்னா வாடகைக்குக் குடியிருக்கவுஹ தான் துட்டுப் போட்டு வாஸர் வாங்கிப் போடணும்.. என்ன சொல்லுதீய ? '

'சரி சொல்லுங்க.. '

ராத்திரி ஒன்பது மணிக்குள்ளே யாரா இருந்தாலும் வீட்டுக்குள்ள வந்திரணும். சரியா ஒம்பதுன்னா ஒம்பதுக்குத் தலை வாசல் கதவச் சாத்திடுவேன். அப்புறமா அம்மான்னாலும் முடியாது. அய்யான்னாலும் தொறக்க முடியாது. .. கதவைத் தாழ்ப்பாள் போட்டு சாவியை நான் வச்சிருப்பேன்.. '

'ஒம்பது மணிக்கே வெளிக்கதவைப் பூட்டிடுவீங்களா ? ஒரு அஞ்சு பத்து நிமிஷம் லேட்டா வந்தாக் கூடக் கதவைத் திறக்க மாட்டாங்களா ? '

'அது தானேய்யா இத்தனை நேரமும் சொல்லுதேன்.. விடிய விடிய ராமாயணம் கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பான்ன கதையிலல்லா பேசுதீய.. என்ன சொல்லுதீய ? '

'சரி சொல்லுங்கம்மா... '

'வீட்டுக்குள்ள கண்ட எடத்துலேயும் ஆணி அடிக்கக் கூடாது. விறகு அடுப்பு வச்சு சமையல் பண்ணக் கூடாது.. சமையல் கட்டுலே ஒரு பொட்டுக் கரியைப் பார்த்தாலும் எனக்குப் புடிக்காது..என்ன சொல்லுதீய ? '

'சொல்லுங்கம்மா.. '

'ஏன்னா எல்லாத்தையும் நீங்க குடி வர்றதுக்கு முன்னாலேயே பேசிக்கிட்டா ஒங்களுக்கும் நல்லது, எனக்கும் நல்லது பாருங்க.. என்ன சொல்லுதீய ? '

சொர்ணத்தாச்சி , நாலு வார்த்தைக்கு ஒரு வார்த்தை 'என்ன சொல்லுதீய.. ? ' 'என்ன சொல்லுதீய ? ' என்று எதிரே இருப்பவரைக் கேட்டுக் கொள்வாள். அப்படியொரு பழக்கம்.

'சொல்லுங்கம்மா.. '

'ஆங்.. சொல்ல மறந்துட்டேனே.. துணிமணிகளை மொட்டை மாடியிலே கொண்டு போய்க் காயப் போடக் கூடாது. மொட்டை மாடிக்கு யாரும் போகவே கூடாது... வத்தல் போடுதேன், துணி காயப் போடுதேன்.. வீட்டுக்கு வந்த விருந்தாளிகளைப் படுக்க வைக்கேன்னு ஆரம்பிச்சிரக் கூடாது.. என்ன சொல்லுதீய ? '

'........................................ '

'இத்தனை கண்டிஷனுக்கும் ஒத்து வர்றதா இருந்தா மவராசனா வாங்க..ம்.. சொல்ல மறந்துட்டேனே. விருந்து கிருந்துன்னு ஊர்லாம்பட்ட ஆட்களை வீட்டுக்குள்ள அடைச்சு வச்சுரப் படாது.. ஏதோ ஒரு ஆளு ரெண்டு ஆளு வந்தாப் பரவாயில்லை. அதுவும் மிஞ்சி மிஞ்சிப் போனா ஒரு மூணு நாளு தங்கியிருக்கலாம். ஒரேயடியா மாசக்கணக்கிலே டேராப் போட்டு உக்காந்தா நீங்க தான் அடுத்த மாசமே வீட்டைக் காலி பண்ணனும். என்ன சொல்லுதீய ? '

' சரிம்மா. சொல்லுங்க.. '

'என்னடா இந்த வீட்டுக்கார ஆச்சி கண்டிசன் மேலே கண்டிசனாப் போடுதாளேன்னு பாக்காதீய.. நாளையும் பின்னையும் நீங்களும் நல்லா இருக்கணும், நானும் நல்லாஇருக்கணும் பாருங்க.. எனக்கு இந்த வீட்டு வாடகை வந்து தான் வயிறு நெறயணும்கறது இல்லை, எம்மவன் மிலிடரியிலே இருக்கான். எங்க வீட்டு அய்யா நயினாகுளம் பக்கத்துலே நாலு மரக்கா வெதைப்பாடும் , பேங்குல ரெண்டு லட்சத்திச் சொச்சம் ரூபாயும் விட்டுட்டுத் தான் மண்டையைப் போட்டாஹ... அந்த அதிகாரி இருந்தாஹன்னா நான் இந்த மாதிரி வீட்டை விட்டு வெளியிலே வந்து நின்னு பேசுவனா ? அது கெடக்கட்டும். . எங்கதை என்னோட . . . இத்தனை கண்டிசன் இருக்கு . சம்மதமுனா வாருங்க .. . இங்க இருக்க எட்டுக் குடித்தன்ங்களும் இபப்டித் தான் இருக்குதுஹ . . என்ன சொல்லுதீய . . ? '

'சரிம்மா . . வீட்டு வாடகை . . '

' வாடகை எரநூறு ரூபா . . ரெண்டாயிர ரூபா அட்வான்சு . . அட்வான்ஸைப் போகும் போது தான் திருப்பித் தருவேன் . . வீட்டைக் காலி பண்றதுன்னா ஒரு மாசத்துக்கு முந்தியே அட்வான்ஸா 'வீட்டைக் காலி பண்ணப் போறேன் ' னு சொல்லிப் புரணும். . என்ன சொல்லுதீய ? . . '

அந்தப் பக்கம் பதில் இல்லை. சிறிது நேர மௌனத்திற்குப் பின்னர் : 'அட்வான்ஸ் தான் கொஞ்சம்.. '

'அய்யா ! அதான் சொல்லிட்டேனே, காலணாக் கூட கொறைக்கறதுக்கு இல்ல.. இஷ்டம்னா வாங்க..என்ன சொல்லுதீய ? '

'ரொம்பச் சரிங்க.. நல்ல நாள் பாத்து வந்துடறோம். நாளக்கிக் காலம்பற அட்வான்ஸ் தந்துடறோம். '

'சொல்லுதேன்னு கோச்சுக்கிடாதீய.. நீங்க அட்வான்ஸ் தர்றதுக்கு மிந்தி ஆராவது வந்து தந்துட்டாஹன்னா அவுஹளுக்குத் தான் வீடு... பொறவு வந்து என்ன ஆச்சி ! வீட்டை விட்டுட்டாஹளான்னு கேளாதீய.. சம்மதமா ? .. என்ன சொல்லுதீய ? '

'சரிம்மா.. காலையிலே எட்டு எட்டரைக்கெல்லாம் வந்து தந்திடுதோம். '

'மவராசனாப் போயிட்டு வாங்க.. '

****

'சொர்ணத்தாச்சி வளவு ' என்கிற அந்த வீடுகளுக்குக் குடி வருகிற நபர்கள் இன்னும் சில விசித்திரமான கண்டிஷன்களுக்கும் ஆளாக வேண்டும். அந்தக் கண்டிஷன்களெல்லாம் வீட்டுக்குக் குடி வந்த பிறகு தான் அனுபவத்தில் ஒவ்வொன்றாகத் தெரிய வரும். ஆச்சியின் கெடுபிடிகளைப் பற்றித் திருநெல்வேலி டவுனில் கேள்விப் படாத ஆளே இருக்க முடியாது.

'ஐயோ , நீங்க சொர்ணத்தாச்சி வீட்டு வளவுலேயா குடியிருக்கீஹ .. அடப் பாவமே.. உக்காந்தாக் குத்தம், நின்னாக் குத்தம்பாளே அந்த ஆச்சி.. ' என்று சொர்ணத்தாச்சி வீட்டில் குடியிருக்கிற ஜீவன்களை, ஏதோ கூண்டுக்குள் அடைபட்டிருக்கிற மிருகங்களைப் பரிதாபத்துடன் பார்க்கிற மாதிரி பார்ப்பார்கள். ஆனால், ஆச்சியின் அத்தனை கெடுபிடிகளுக்கும் மசிந்து கொடுத்து , அந்த வளவில் குடியிருக்கக் காரணம் தண்ணீர் வசதி. பம்பில் எந்த நேரமும் தண்ணீர் வரும். காலையில் ஆற்றுக்குக் குளிக்கப் போவதற்கும் ரொம்பச் சௌகரியம். நெல்லையப்பர் கோவில், காய்கறி மார்க்கெட், பள்ளிக் கூடம் எல்லாம் பக்கத்தில் தான். இந்தச் சௌகரியங்கள், சொர்ணத்தாச்சி தரும் கெடுபிடிகளை மறக்கடிக்கச் செய்து விடுகின்றன.

எல்லா வீடுகளையும் வாடகைக்கு விட்டு விட்ட சொர்ணத்தாச்சி, மாடியில் இரண்டே இரண்டு அறைகளை மட்டும் தனக்கென்று வைத்துக் கொண்டாள். ஓர் அறையில் மிலிட்டரியில் இருக்கிற அவளுடைய ஒரே மகனுடைய மிலிட்டரி ட்ரங்க் பெட்டிகளும், புழங்காத சாமான்களும் கிடக்கும். இன்னொரு அறையைத் தான் புழங்கி வந்தாள்.

எல்லா வீடுகளிலுமாக இரண்டாயிரம் ரூபாய் வரை வாடகை வருகிறது என்றாலும் , ஆச்சி தன் வீட்டில் சமையல் செய்வதைப் பார்க்கவே முடியாது. காலையில் மட்டும் யாராவது பையன்களை அனுப்பி ஹோட்டலில் இட்லி வாங்கிச் சாப்பிடுவாள். மதியமும் , இரவுச் சாப்பாடும் அனேகமாக அங்கே வாடகைக்குக் குடியிருக்கிற குடித்தனக் காரர்கள் வீட்டிலோ அல்லது உறவினர் வீட்டிலோ தான் நடக்கும்.

மனிதர்களுக்கு வம்பளக்கும் பலவீனம் உண்டு என்பது ஆச்சிக்குத் தெரியும். யார் யாருக்கு எந்த மாதிரி வம்புகள் பிடிக்கும் என்பதும் ஆச்சிக்குக் கரதலப் பாடம். இரண்டாவது வீட்டில் குடியிருக்கிற கோமதி நாயகமும், அவர் பொஞ்சாதியும் சினிமாப் பைத்தியங்கள். அவர்கள் வீட்டுக்குப் போனால், தியாகராஜ பாகவதர் காலத்துச் சினிமா கிசுகிசு வரை அவிழ்த்து விடுவாள். குழாயடி வீட்டில் இருக்கிற கௌரிக்கு, வேம்படித் தெருவில் குடியிருக்கிற அவள் நாத்தனாரைப் பற்றிப் பேச ஆரம்பித்தாலே போதும். சோறு தண்ணி கூட வேண்டாம். சொர்ணத்தாச்சி அவள் நாத்தனாரின் நடையுடை பாவனைகளைக் கேலி பண்ணி கௌரியை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விடுவாள். அதற்குள் சாப்பாட்டு நேரமே வந்து விடும்.

'ஏளா பாத்தியா.. பேசிக்கிட்டு இருந்ததுலே நேரம் காலமே தெரியலை! இரு..! போயி ரெண்டு வாயி சோத்தை அள்ளிப் போட்டுட்டு வாரேன்.. ' என்று மெதுவாக எழுந்திருப்பாள், தவறு, எழுந்திருக்கிற மாதிரி பாவனை செய்வாள்.

கௌரி விடுவாளா ? அவள் மனதையெல்லாம் சர்க்கரைப் பாகாக இனிக்க வைத்து விட்டிருக்கிற ஆச்சியின் பேச்சை இன்னும் இரண்டு மணி நேரமாவது கேட்க வேண்டாம ?

'ரெண்டு வாச் சோத்தை அள்ளிப் போடறதுக்காக நீங்க மாடிப்படி ஏறி இறங்கணுமாக்கும் .. அந்தச் சோத்தை இங்க உக்காந்து அள்ளிப் போட்டா தான் என்னவாம். ' என்று தட்டுச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வந்து ஆச்சியின் முன்னால் வைத்தே விடுவாள்.

'எனக்கு மக இல்லாத குறையைத் தீர்க்கத்தான் காந்திமதி அம்மனே உன் ரூபத்திலே வந்திருக்காம்மா. ' என்று சொல்லி விட்டுச் சாப்பாட்டை ஒரு பிடி பிடித்து விடுவாள்.

ராத்திரிச் சாப்பாட்டுக்கு இதே போல் இன்னொரு கோமதி அல்லது கோமதி நாயகத்து வீடு. அவர்களுக்குப் பிரீதியான விஷயத்தைப் பேசி ஆளைக் கிறங்கடித்துச் சாப்பாட்டை முடித்துக் கொள்வாள்.

ஆச்சிக்குத் தெரிய யாரும் அமிர்தாஞ்சனமோ, விக்ஸோ தேய்த்து விடக் கூடாது. வாசனை எந்த வீட்டிலிருந்து வருகிறது என்று கண்டு பிடித்து அவர்கள் வாங்கி வைத்திருக்கிற பாட்டில் காலியாகிற வரை அவ்வப்போது வந்து வாங்கி , தைலத்தை எண்ணெய் மாதிரி தேய்த்துக் கொள்வாள்.

குடியிருக்கிறவர்கள் ரேடியோ வைத்திருந்தால் போச்சு. ஆச்சி ஒரு ரேடியோ பைத்தியம். ராத்திரி பத்து மணிக்கு ஒலி பரப்பாகும் நேயர் விருப்பத்தில் வாரம் தோறும் 'திருநெல்வேலி டவுன் சொர்ணத்தம்மாள் ' என்கிற நேயரின் பெயர் வாசிக்கப் படுவதைக் கேட்டிருக்கிறீர்களா ? அந்த நேயர் நமது வீட்டுக்கார ஆச்சியே தான். தினசரி சென்னை, திருச்சி, திருநெல்வேலி, ரேடியோ நிலையங்களுக்கு , நாலாவது வீட்டில் குடியிருக்கிற அர்ச்சுனனின் மகனிடம் சொல்லி , தனக்குப் பிடித்தமான சினிமாப் பாட்டுகளை ஒலிபரப்பக் கேட்டுக் கார்டுகளைத் தட்டி விட்டுக் கொண்டேயிருப்பாள். அந்தத் தெருவில் நேயர் விருப்ப ஆச்சி என்றே ஆச்சிக்குப் பெயர் உண்டு.

நேயர் விருப்ப நேயராக ஆச்சி இருந்தாலும் ஆச்சியின் வீட்டில் நூறு ரூபாய் டிரான்ஸிஸ்டர் கூடக் கிடையாது. அப்படியானால் ஆச்சி எப்படித் தனக்கு விருப்பமான பாடல்கள் ஒலி பரப்பப் படுவதைக் கேட்கிறாள் என்று உங்களுக்குத் தோன்றலாம். இதிலும் ஆச்சியின் சாம்ர்த்தியமே தனி தான். நேயர் விருப்ப நிகழ்ச்சி இருந்தால் அதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பே சாமர்த்தியமாக வீட்டுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டு , நம்மை ரேடியோ போடவைத்து விடுவாள்.

ஆச்சியின் ரேடியோத் தொந்தரவு தாங்காமல் வீட்டைக் காலி செய்து கொண்டு ஓடிய குடும்பங்கள் பல. சிலர் தங்கள் வீட்டில் இருந்த ரேடியோக்களையே விற்றுவிட்டார்கள்.

எல்லா வீடுகளுக்கும் தனி மீட்டர் இருக்கிறது. என்றாலும் , இரவு அகால நேரத்தில் எந்த வீட்டிலாவது விளக்கு எரிகிறதா என்று ஆச்சி மோப்பம் பிடிப்பாள். எல்லா போர்ஷன்களும்

ஓடு போட்டவை தான். இதனால் வீட்டினுள் விளக்கு எரிந்தால் ஓடுகளுக்கு இடையே உள்ள இடுக்குகளின் வழியாக விளக்கு வெளிச்சம் தெரியும்.

'ஏளா .. இம்புட்டு நேரத்திலே வெளக்குப் போட்டு என்னமா செய்த.. வெளக்கை அணை ' என்ற ஆச்சியின் குரல் கேட்கும்.

தனக்குப் பிடிக்காத குடித்தனத்தைக் காலி செய்ய ஆச்சி கையாளும் நடவடிக்கைகள் ரொம்ப டிப்ளமேடிக் ஆனவை. இந்த விஷயத்தில் ராஜதந்திரிகள் எல்லாம் ஆச்சியிடம் கைகட்டி நிற்க வேண்டும்.

யார் யார் எப்படி என்பதை , ஆச்சியின் கூர்மையான அறிவு அவர்களுடன் பழக ஆரம்பித்த சில தினங்களிலேயே எடை போட்டு வைத்து விடும். ஆளுக்கு ஏற்ற படி காலி செய்யும் நடவடிக்கைகளும் இருக்கும்.

சற்றுப் படித்தவராக இருந்தால் அவர்களுக்குப் புரிகிற மாதிரி ஜாடையாகப் பேசுவாள். கேலி பேசுவாள்., அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் அவர்களைப் பற்றி அவதூறுகளைக் கிளப்பி விட்டு விடுவாள். அந்த வீட்டுக் காரர்கள் பம்பில் தண்ணீர் அடிக்க வந்தால் , அவர்கள் காதில் விழுகிற மாதிரி 'மனுஷாள்கள் தண்ணீர் அடிச்சா மெதுவா அடிப்பாஹ.. மாடுங்க மாதிரி தண்ணீர் அடிச்சா .. பம்ம்பு எத்தனை நாளைக்கி வரும் ? ' என்று சத்தம் போட்டுச் சொல்லுவாள். கொஞ்சம் உணர்வுள்ள குடித்தனக் காரர்கள் இந்த அவமரியாதைகளைச் சகிக்க முடியாமல் காலி செய்து ஓடி விடுவார்கள்.

எதற்கும் மசியாத கடோத்கஜர்களை விரட்ட ஆச்சி கையாளும் நடவடிக்கைகள் அவர்களுடைய குணத்திற்கு ஏற்ற மாதிரி இருக்கும். வீட்டுப் புரோக்கர்கள் மாதிரி , வீட்டைக் காலி செய்து தருவதற்கும் , பழைய பேட்டைக்குப் பக்கத்தில் சில புரோக்கர்கள் இருக்கிறார்கள். சம்பந்தப் பட்ட குடித்தனக் காரர்கள் வேலைக்குப் போய்விட்டுத் திரும்புகிற வழியில் , குடித்து விட்டு அவர்களை வம்புச் சண்டைக்கு இழுப்பார்கள். ஒருத்தன் 'ஆச்சி வீட்டிலே இருந்துகிட்டு காலி பண்ண மாட்டேங்கிறியா ராஸ்கல். ' என்று சத்தம் போடுவான். இதற்கு மசியாத ஆட்களை வீட்டுக்குள் புகுந்து , சாமன்களை எடுத்துப் போட்டு விரட்டி விடுவார்கள்.

'ஆச்சி ஆச்சி யாரோ ஒங்க வளவுலே வீடு வாடகைக்கு இருக்குதுன்னு சொன்னாஹ.. வீடு கிடக்குதா ஆச்சி ? ' என்று விசாரிக்கிறார்கள்.

' ஆரு அட, ராமய்யாவா. ஒனக்கு இல்லாத வீடாப்பா .. வா.. வந்து பாரு.. புடிச்சிருக்குதா பாரு.. அப்புறமா வாடகையைப் பத்திப் பேசுவோம். செத்த முந்தி கூட ஒருத்தர் வந்து பாத்துட்டுப் போனாரு. நீயும் பாரு .. யாரு மிந்தி அட்வான்ஸ் தாரீஹளோ அவுஹளுக்குத் தான் வீடு.. என்ன சொல்லுத ? '

(உள்ளும் புறமும் - சிறுகதைத் தொகுப்பிலிருந்து)

# கணவன், மகள், மகன்

**அசோகமித்திரன்**

தெரு முனையில் சண்முகத்தைப் பார்த்தபோதே அவன் ஏதோ தகவலோடு வந்திருக்கிறான் என்று மங்களத்துக்குத் தெரிந்துவிட்டது. 'ராமு சாருக்கு இன்னிக்கு வீட்டுக்கு வர நேரமாகுமாம். சொல்லிட்டு வரச்சொன்னாரு. ' என்று சண்முகம் சொன்னான்.

'ஏன், ஆபீஸிலேயே நேரமாகுமா ? '.

'ஆபீஸிலியா ? அஞ்சு மணிக்கு இழுத்துப் பூட்டிடுவாங்களே ? வேறெங்கேயோ வெளியே போறாரு போலிருக்குது. '

மங்களம் சுவர்க் கடியாரத்தைப் பார்த்தாள். மணி நான்கரை.

'நீ மறுபடியும் ஆபீஸ்தானே போறே ? '

'ஆமாம். '

'அப்போ ராமுவை இன்னிக்கு நேரே வீட்டுக்கு வந்துடச் சொல்லிடு. எங்கியாவது போறதுன்னா சனி ஞாயிறு போயிக்கலாம். '

'நான் போறதுக்குள்ளே அவர் கிளம்பிடுவார். '

'இருந்தா சொல்லேன். '

'இருந்தா சொல்லறேன். கையோட வீட்டுக்கு வரச் சொன்னாங்கன்னு சொல்லிடறேன். '

சண்முகம் போய்விட்டான். சென்ற வாரம் ஒருமுறை இரவு பதினொன்றாகியும் ராமு வீடு திரும்பாதது கண்டு மங்களம் அவன் போயிருக்கக்கூடும் என்று அவளுக்குத் தெரிந்த இடங்களுக்கு தனியாகப் போனாள். இரு இடங்களில் விளக்கு அணைக்கப்பட்டு எல்லாரும் தூங்க போய் விட்டார்கள். மூண்றாவது இடம் சீட்டு கச்சேரி நடக்கும் மனமகிழ் மன்றம். அங்கு கூட மேஜை நாற்காலிகளை ஒழுங்காக இழுத்துப் போட்டு கதவை தாளிட இருந்தார்கள். ராமு அன்று எட்டரை மணிக்கே கிளம்பிப் போய்விட்டதாக மன்றத்தின் பணியாளர்களில் ஒருவன் சொன்னான். அந்த நள்ளிரவில் திறந்து வைத்திருந்த வெற்றிலைப் பாக்குக் கடைகள், நடை பாதை முட்டை இட்லி வண்டிகள். அருகில் ராமு எங்காவது நின்று கொண்டிருக்கிறானா என்று பார்த்தபடி ம்ங்களம் நடந்து வந்தாள், இல்லை, வீடு வந்த பிறகுதான் அந்த மாதிரிச் சென்றது சரியில்லையோ என்று சந்தேகம் தோன்றியது. பயம் கூடத் தோன்றியது. அவளுடைய உடலில் பொட்டு தங்கம் கூட இருக்காது. ஆனால் இருட்டில் தாக்க வருபவனுக்கு அது தாக்கிய பிறகுதானே தெரியவரும்; அது தெரிந்த பிறகு ஆத்திரம் அதிகமாகும்.

அன்று இரவு முழுவதும் ராமு வரவில்லை. மங்களம் அவளையு மறியாமல் விடியற் காலையில் கண்ணயர்ந்து விட்டாள், பாக்கெட் பால் கொண்டு வந்துத் தரும் ஆயா கதவைத் தட்டிக் களைத்துப் போய்ப் பாலை வாசலிலேயே வைத்து விட்டுப் போய்விட்டாள். அது ஒரு முனையில் ஒழுகித் தரையில் பால் சிறு குட்டையாகத் தேங்கியிருந்தது.

எல்லா வீடுகளிலும் குழந்தைகள் பள்ளி செல்ல தயாராகி, பெரியவர்கள் அலுவலகங்களுக்குக் கிளம்பும் நேரத்தில் ராமு வீட்டுக்கு வந்தான். 'ஏண்டா ராத்திரியெல்லாம் வரவில்லையே ? ' என்று கூட மங்களம் கேடகவில்லை. அவன் படுக்கையை விரித்துப் போட்டு படுத்துக் கொண்டான்.

ஒரு காலத்தில் அந்த வீட்டில் எல்லாமே உரிய நேரங்களில் உரிய முறையில் நடந்தன. ராமுவின் அப்பாவை இன்றும் வெளியார் பலர் தங்கமான மனிதன் என்றுதான் நினைவு படுத்திக் கொள்வார்கள். முதற்பெண் லலிதாவின் கல்யாணத்தைத்தான் எவ்வளவு அமரிக்கையாக நடத்தினார் ' ஐந்தாம் பந்தியில் உட்கார்ந்த சத்திரத்துக் காவற்காரனுக்குக் கூட எல்லோரையும் போல ஒரே மாதிரியான கவனிப்பு. கல்யாணத்திற்கு வந்திருந்த இரண்டு உறவினர் குடைகள் தொலைந்து போனது கூட அவர்கள் திரும்பி ஊருக்குக் கிளம்பும்போது புதுக்குடைகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. ராமுக்கு மைத்துனர் மோதிரம் என்று சம்பந்திக்காரர்கள் போட்டார்கள். அதை அப்பா கழட்டி வாங்கிக் கொண்டார். ராமுக்குப் பதினைந்து வயது. தங்க நகைகளின் சாத்தியங்களை அவனுக்குத் தெரிவித்திருக்க நியாயமில்லை.

இன்னும் பல விஷயங்கள் பலர் தெரிந்துவைத்திருக்கவில்லை. மங்களமும் ஒவ்வொரு நகையாகக் கழட்டிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. இரண்டாவது பெண் உமாவுக்கு வரன் பார்த்து நிச்சயதார்த்தம் செய்வதற்கு முதல் நாள் ராமுவின் அப்பா யார் யாரையோ ஐயாயிர ரூபா கேட்டு அலைந்திருக்கிறார், யாரோ கொடுத்ததாகக் கூட கேள்வி. ஆனால் மறுநாள் காலையிலிருந்து அவர் காணவில்லை. மாலை பிள்ளை வீட்டார் வந்து விட்டார்கள், இவரை காணோம். முதலில் உறவினர், நண்பர் வீடு, ஆபீஸ் என்பது போய்ப் போலீஸ் ஸ்டேஷன், ஆஸ்பத்திரி என்று தேடிப் போனார்கள். அவர் காணாமலே போய் விட்டார்.

ஆனால் வேறு ஏதேதோ தகவல்கள் கிடைத்தன. அதே ஊரில் அவர் இன்னொரு பெண்மணியுடன் குடித்தனம் நடத்தி அவருக்குக் கல்யாணத்திற்குப் பெண் இருந்தது. நிறையப் பேரிடமிருந்து கடன் வாங்கியிருந்தார். சிறு தொகைகள் அல்ல, ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம்... இவ்வளவு பணத்தையும் என்ன செய்தார் ? இரண்டாம் மனைவிக்கும் பெரிதாகச் செய்துவிடவில்லை. பார்க்கப் போனால் அவளிடமிருந்து கூட நகைகளை வாங்கிப் போய் விற்றிருக்கிறார்.

மங்களத்திற்கு ஒவ்வொரு கட்டத்திலும் புதிராக இருந்தது. அவள் இவ்வளவு நாட்கள் எந்த மனிதனோடு வாழ்க்கை நடத்தினாள் ? இருபத்தைந்து ஆண்டுகள் கூடவே இருந்தும் கூட அவளறியாத ரகசியங்கள் இவ்வளவு அவனிடமிருந்ததா ? அவன் மறைத்தானா அல்லது அவள் தான் ஒரேயடியாகக் கண்ணை மூடிக் கொண்டு இருந்து விட்டாளா ? இவ்வளவு குருடாக இருந்தவளால் கணவன் மீது பிடிப்பு வைத்திருக்க முடியுமா ? அதனால் தான் அவன் ஓடிவிட்டானா ?

மங்களத்துக்கு அவளுடைய மண வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் எப்போதோ புதைந்து போன அதல பாதாளத்திலிருந்து மேலெழும்பி வந்தது. அவன் அவளிடமும் கொஞ்சியிருக்கிறான், கோபித்திருக்கிறான், யோசனை கேட்டிருக்கிறான், அவள் விருப்பப்படி ஏராளமான சந்தர்ப்பங்களில் நடந்திருக்கிறான், குழந்தைகளைத் தூக்கி விளையாடியிருக்கிறான், இரவு கண்விழித்திருந்து மருந்து கொடுத்திருக்கிறான், உமாவை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியிருந்த போது ஆஸ்பத்திரி வெராண்டாவில் இரவெல்லாம் காத்து கிடந்திருக்கிறான். பீர்க்க்ங்காய் துவையல் இரு நாட்களுக்கு ஒரு முறை செய்யச் சொல்லியிருக்கிறான், சட்டைக்கு பொத்தான் தைக்கச் சொல்லியிருக்கிறான், வீட்டு வாசலில் புள்ளியிட்ட கோலம் வேண்டாம் என்று கூறியிருக்கிறான், தூக்கத்தில் ஏதேதோ உளறியிருக்கிறான், உடல் நோய்ப்பட்டுப் படுத்திருக்கிறான், அவனுடைய அம்மா இறந்தபோது அழுதிருக்கிறான், வீட்டில் ஒட்டடை அடித்திருக்கிறான், ஆனால் அவளறியாமல் அவன் தனியாக இன்னொரு பெண்ணோடு வாழ்க்கை நடத்தி இப்போது வளர்ந்த மகள் ஒருத்தி வேறு இருக்கிறாள். அங்கும் அந்த பெண்மணியுடனும் கொஞ்சியிருப்பான், கோபித்திருப்பான், ஆலோசனை கேட்டிருப்பான், அந்த வீட்டிலும் ஒட்டடை அடித்திருப்பான்... அவனுக்கு எப்படி இவ்வளவுக்கும் நேரம் இருந்தது ? உடலில் சக்தி இருந்தது ? எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வளவு செயல்களில் ஈடுபட ஓர் உந்துதல் இருந்தது ? அவ்வளவு அசாத்தியமான மனிதனா ? இப்போது எங்கிருப்பான் ? எப்படி இருப்பான் ? அவனை இன்னொரு முறை பார்க்கக் கிடைக்குமா ?

உமாவின் கல்யாணம் நின்று விட்டது. ராமுவின் படிப்பு நின்று விட்டது. அந்த நாளில் அஞ்சல் வழிக் கல்வி, மாலைக் கல்லூரி என்றெல்லாம் கிடையாது. ஒவ்வொரு பாடமாகவும் தேர்வு பெற முடியாது. பகுதி ஒன்று, இரண்டு, மூன்று என்று இருக்கும். ஒவ்வொரு பகுதியையும் மொத்தமாகத் தேர்வு பெறவேண்டும். ஆதலால் கல்லூரி போக முடியாமல் படிப்பு நின்றால் அதோடு படிப்பே போச்சு. ராமு வேலைக்குப் போக ஆரம்பித்தான்.

ராமு வேலைக்குப் போய் அந்தச் சம்பளத்தை எதிர் பார்த்துத்தான் குடும்பம் நடக்க வேண்டி இருந்தது. ராமுவின் அப்பா இன்னும் உயிரோடிருக்கிறார் என்றுதான் அவருடைய அலுவலகத்தில் கருத வேண்டியிருந்தது. ஆதலால் அவர் ஒப்புதல் கையெழுத்து இல்லாமல் எந்தப் பணமும் மங்களத்துக்குத் தர முடியாது போயிற்று. வருடங்கள் பல முடிந்து அவர் ஓய்வு பெறவேண்டிய நாள் வந்தபோது கூட அதிகாரப் பூர்வமாக அவர் உயிரோடு இல்லை என்ற அத்தாட்சியில்லாமல் அலுவலகத்தில் சேர்ந்திருந்த பணத்தை யாருக்கும் தர முடியவில்லை. உமாவும் ஒரு சீட்டு கம்பெனியில் ரசீது எழுதும் வேலைக்குப் போனாள். அவள் வேலைக்குச் சேர்ந்து இரு மாதங்களுக்குள் அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று வேறு யாரோதான் மங்களத்துக்குச் சொன்னார்கள். மங்களத்துக்கு நம்ப முடியவில்லை. அவள் பெண் அன்று காலைகூட ஏதும் புதிதாக நடந்திராத மாதிரிச் சாப்பிட்டுக் கைக்குச் சிறிது மோர்சாதமும் எடுத்துப் போயிருக்கிறாள் ' உமா மாலையில் வீடு வந்தவுடன் அவளை கேட்க வேண்டும் என்றுதான் நினைத்திருந்தாள். ஆனால் கேட்க வாய் வரவில்லை. அடுத்த நாளும் வாய் வரவில்லை. அதற்கடுத்த நாளும்.

பதினைந்து நாட்கள் கழித்து உமாவாகவே தனிக்குடித்தனம் போகப் போவதாகச் சொன்னபோதும் கேட்க முடியவில்லை. அவளுடைய மாப்பிள்ளை இளவயதுக்காரனா, வயதானவனா, சைவமா, அசைவமா என்று கூடக் கேட்க்கவில்லை. உமாவாகவும் அம்மாவுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்ததாக தோன்றவில்லை. வீட்டிலிருந்த பாத்திரங்களிலேயே சிலவற்றை அவள் எடுத்துப் போனாள். அவள் கல்யாணத்தை நினைத்து வாங்கி வைத்திருந்த வெள்ளிப் பாத்திரங்களில் குங்குமச் சிமிழ் ஒன்றுதான் மிஞ்சியிருந்தது.

எவர்சில்வர் பாத்திரங்களில் நான்கைந்து இருந்தன. அவள் அம்மாவை மேற்கொண்டு சீர், வரிசை என்று கேட்கவில்லை. அவளுடைய கணவன், அவள் கல்யாணம் செய்து கொண்டது எதைப் பற்றியும் தனியாகச் சொல்லவும் இல்லை.

லலிதாவிடம்தான் ஒருமுறை மங்களம் இதைச் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டாள். இந்த பெண்ணுக்கு என்ன நெஞ்சழுத்தம் ' நான் வேற்று மனுஷியா ? சத்ருவா ? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லலியே ? போயிட்டு வரேன்னு சொன்னா, ஆனா எங்கே போறேன்னு சொல்லலியே ?

லலிதா வெகு நாட்களுக்குப் பிறகு அங்கு வந்திருந்தாள். முதல் பிரசவம் தாய் வீடு என்றாலும் அதன் பிறகு வரவே இல்லை. இப்போது இரண்டாவது குழந்தைக்கு மூன்றாவது பிறந்த நாள்.

'என்னிடம்தான் ஒரு மூச்சு விடலைன்னாலும் உங்கிட்டேயாவது சொல்லியிருக்கலமே ? ' மங்களம் சொன்னாள், விம்மி விம்மி அழுதாள்.

லலிதா பேசாமல் சிறிது நேரம் இருந்தாள், பிறகு எழுந்து நின்றாள். 'உமா எங்கிட்டே சொல்லிட்டுத்தான் கல்யாணம் பண்ணிண்டா ' என்றாள்.

'என்னது ? '

'அவ கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போறது, வேறே வீடு போகப் போறது எல்லாத்தையும்தான் முன்னாலேயே சொல்லியிருக்கா. '

'என்ன ? '

'எனக்கும் சொன்னா, ராமு கிட்டேயும் சொன்னா. '

'உங்க இரண்டு பேருக்கும் எல்லாம் தெரிஞ்சுமா ஒருத்தர் கூட எங்கிட்டே ஒண்ணுமே சொல்லலே ? '

லலிதா உதட்டைப் பிதுக்கினாள். போய் விட்டாள்.

மங்களம் அவள் போன திசையைப் பார்த்தபடி வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள்.

ஃ ஃ ஃ ஃ ஃ

இப்போது ராமுவுக்கு உடம்பு கெட்டு விட்டது. அவனுடைய ஈரல் முதலிலிருந்தே வலுவானது கிடையாது. உண்ட உணவு ஜீரணமாகாமல் அவன் தவிப்பது குழந்தையாயிருக்கும் நாட்களிலிருந்தே உண்டு. இப்போது அது இன்னும் பழுதடைந்து விட்டது. அவன் வயிறு வீங்கி ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் கிடந்த போதும் மங்களம் பல நாட்கள் சாப்பிடவேயில்லை, ஆனால் அவளால் விழித்திருக்க முடிந்தது. வேளா வேளைக்கு ராமுவுக்காகப் பத்தியமாக ஆகாரம் சமைத்துக் கொண்டு போக முடிந்தது. அவனுடைய உடல் நிலை பற்றி விசாரிக்க வெவ்வேறு வைத்தியர்களுக்காகக் காத்திருக்க முடிந்தது. பெரிய வைத்தியர்கள் எவரும் நேரடியாக மங்களத்திடம் பேசவில்லை. அவர்கள் வேறு சிறிய

வைத்தியர்களிடம் சொல்லுவார்கள். அதை சுருக்கி அல்லது மாற்றி அந்த சிறிய வைத்தியர்கள் மங்களத்திடம் சொல்லுவார்கள். ஆனால் ஒரு பெரிய வைத்தியர் அன்று மங்களத்திடம் நேரிடையாகத் தமிழிலேயே பேசினார். ' உங்க பிள்ளை கண்டதைக் குடிச்சுட்டு மறுபடியும் சீக்கிலே விழுந்தா எழுந்திருக்கமாட்டாரு. '

ராமு அந்த முறை எழுந்து விட்டான். ஆனால் இதோ மறுபடியும் சீக்காளியாவதற்கான பாதையில் இருக்கிறான். அவனை இன்னமும், 'குடிக்காதேடா ' ' என்று ஒரு வார்த்தை அவளால் சொல்ல முடியவில்லை. அவன் குடிப்பது அவளுக்கு தெரியும் என்ற நிலையை உண்டாக்க மனம் வேண்டவில்லை. அவளுக்குத் தன் மகனறிய அவனைக் குடிகாரன் என்று அவள் நினைப்பது கூடச் சாத்தியமாயில்லை. அவனும் அவள் அறியாதவள் என்றுதான் நினைக்க விரும்புவான். இவ்வளவு முற்றிப் போயும் தெரியாமல் இருக்குமா என்ற தோன்றாது. அவளுக்குத் தெரியாதது போல அவள் நடந்து கொள்ளவேண்டும்; அவளுக்குத் தெரியாது, அவளுக்கு தெரிவதை அவன் விரும்பவில்லை என்பது போல அவன் நடந்து கொள்ளவேண்டும்.

வெயில் நன்கு புறப்பட்ட அந்த வேளையில் நினைவிழந்து படுத்துக் கிடக்கும் மகனை மங்களம் பார்த்தபடி நின்றாள். அவனுடைய அப்பா வேறு எப்படி எல்லாம் இருந்தாலும் அவர் குடித்து விட்டு வீட்டுக்கு வந்ததில்லை. அவருடைய அம்மாவிடம் அவர் எப்படி நடந்துக் கொண்டார் என்று அவளுக்குத் தெரியாது, ஆனால் ராமு பல விஷயங்களில் அவனுடைய அப்பா போலவே நடந்து கொள்கிறான். அவளிடம் எரிந்து விழவில்லை. சத்தம் போட்டதில்லை. ஆனால் பல விஷயங்களில் அழுத்தமாக வாயே திறவாமல் இருந்து விடுகிறான். உமாவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. உமாவுக்கு அவள் எதிரியல்லவே ? அவள் மகளின் நலனில் அவளுக்கு அக்கறை இருக்கத்தானே செய்யும் ? அது அவனுக்கும் அவளுக்கும் தோன்றவில்லையே ?

ராமு குடித்தால் இனிமேல் உயிருக்கு ஜவாப்தாரியல்ல என்று வைத்தியர் திட்டவட்டமாக கூறிய பிறகு கூட அவன் குடிக்க போய்விடுகிறான். அதற்கென்று எங்கோ ஏற்பாடு செய்து வைத்திருக்க வேண்டும். கையில் காசு கிடையாது. வீட்டில் தரித்திரம் பிடிங்கி தின்கிறது. ஆனால் இரவெல்லாம் வீடு திரும்பாமல் குடிப்பதற்குப் பணம் கிடைத்துவிடுகிறது. அவள் மட்டும் அவனுக்கென்று எடுத்து வைத்திருந்த சோற்றைக் கண்களில் ரத்தம் சிந்தக் குப்பையில் கொட்ட வேண்டும்.

'ராமு ' ராமு ' ஏண்டா நீயும் என்னை வதைக்கிறே ? குடிக்காதேடா ' நம்ம வம்சத்திலே யாருமே குடிச்சு செத்துப் போனது கிடையாதுடா ' குடிக்காதேடா ' குடிக்காதேயேண்டா ' ' என்று கத்த வேண்டும் என்று மங்களத்துக்கு இருந்தது. ஆனால் ஆயுட்காலப் பழக்கதோஷம் ஒரு சொல் உச்சரிக்க முடியவில்லை. மகனை ஏறிட்டுப் பார்க்க முடியாது இருந்து அவன் தூங்கும்போது தான் நேராக, முழுதாகப் பார்க்க முடிகிறது.

புருஷனிடம்தான் இப்படி இருந்தாயிற்று, மகனிடமுமா என்று அவளுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. அழத்தான் முடியவில்லை.

# பாண்டி விளையாட்டு

**அசோகமித்திரன்**

அவன் ஏறிய பாசஞ்சர் வண்டி திருவாரூர் ஜங்ஷனை அடையப் பன்னிரண்டு மணியாயிற்று. ரயிலில் போகக்கூடிய பல ஊர்களுக்கிடையில் அந்த நாளில் பஸ் வசதி கிடையாது. போலகத்திலிருந்து தஞ்சாவூர் போகவேண்டுமென்றால் மாயவரம் போய் இன்னொரு ரயில் ஏறவேண்டும். அல்லது திருவாரூர் சென்று வேறொரு ரயில் பிடித்து தஞ்சாவூர் அடைய வேண்டும். காலை ரயிலை விட்டால் மீண்டும் மாலையிலும் நள்ளிரவிலும்தான் மாயவரத்திலிருந்து வண்டிகள். ஆதலால் அவன் திருவாரூரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டி இருந்தது. அவனுக்கு அதிகம் பரிச்சியம் இல்லாத பிரதேசத்தில் அவனுடைய பதினைந்தாவது வயதில் இப்படித் தன்னந்தனியாகத் திட்டமிட வேண்டியிருந்தது அவனுக்குப் பயமாகவும் பெருமையாகவும் இருந்தது. பன்னிரண்டு மணிக்கு மே மாத வெயில் வறுத்தெடுப்பது போல காய்ந்து கொண்டிருந்தது. தஞ்சாவூருக்கு ரயில் மாலை நான்கு மணிக்குத்தான்.

அதுவரை அவன் அந்த ரயில்நிலையத்திலேயே காத்திருக்க வேண்டும். அந்த நாளில் எல்லா ரயில் நிலையங்களுமெ சிறியதாகத்தான் இருந்தன. ரயில் சிப்பந்திகள் மூன்று நான்கு பேர்களுக்கு மேல் கிடையாது. நீல சட்டை அணிந்த இரண்டு அல்லது மூன்று போர்ட்டர்கள். நிலையத்தில் கூரையுள்ள பகுதியில் ஐம்பது அறுவது நபர்கள் கூட மழைக்கோ வெயிலுக்கோ ஒதுங்க முடியாது. ஆனால், ரயில் பாதைகளைக் கடந்து வேறொரு ப்ளாட்ஃபாரத்துக்குப் போக மட்டும் விமரிசையாகப் படிக்கட்டு. வெயில் தண்டவாளங்களின் மேல் பகுதி கண்கூச வைக்கும் ஒளிக் கோடாகத் தெரிந்தன. முதலிலிருந்தே அவை இணைகோடுகளாகத் தென்படவில்லை. ஒன்றுக்கொன்று நெருங்கி வந்தபடி எங்கோ கண்ணுக்கெட்டாத தூரத்தில் சேர்ந்துவிடும் என்ற எண்ணத்தைத் தரும்படிதான் இருந்தன. பூமியை தழுவியிருக்கும் காற்றுப் பகுதி வெயிலில் நிலைக்கொள்ளாது தத்தளித்துக் கொண்டிருந்தது. ரயில் பாதையோடு நடந்தே தஞ்சாவூர் போய்விடலாமா என்றுகூட ஒருகணம் யோசனை மின்னி மறைந்தது. போலகத்தில் அவனோர் வீட்டில் விருந்தாளி போலத் தஞ்சாவூரில் ஒரு வீட்டில் அவனுடைய அப்பா விருந்தாளி. அவர்கள் வசித்து வந்த அயல் பிரதேசத்தில் ஒரு வருடகாலமாக அரசியல் அமளி. யார் யாரோ குடும்பம் குடும்பமாக அந்த இடத்தை விட்டு வெளியேறி எங்கெங்கோ சிதறியிருந்தார்கள். ஆனால் அவனும் அவனுடைய அப்பாவும் ஊர்விட்டு வந்ததற்குக் காரணம் அவடைய சகோதரிக்கு வரன் தேடுவதற்க்கு. அவனுடைய அப்பா உத்தியோகம் புரிந்த அரசுக்கு தீடாரென்று ஏதோ சந்தேகம் வந்து மூன்று நாட்களுக்குள் மீண்டும் நீ வேலைக்கு வந்து சேராவிட்டால் நீ கடமையை விட்டு ஓடிப் போனவனாக கருதப்படுவாய் என்ற எச்சரிக்கையை அப்பாவுக்கு அனுப்பி இருந்தது. அவன் தங்கியிருந்த முகவரிக்கு வந்த அந்த கடிதத்தை அன்று மாலையே தஞ்சையில் வரன் தேடிக்கொண்டிருந்த அவனுடைய அப்பாவிடம் கொடுத்து அவர் உடனே கிளம்பினால்கூட அவர்கள் ஊர் அடைய நான்கு நாட்களாகிவிடும். அவனுடைய அப்பா எந்த நெருக்கடியையும் சமாளித்து விடுவார் என்பதில் அவனுக்கு சந்தேகம் இல்லை இந்த உலகத்தில் ஒருவனுக்கு என்னென்ன நெருக்கடிகள் வரக்கூடும், அவற்றை அவன் சமாளிக்கக்கூடியவை எது, எவ்வளவு என்றெல்லாம் அந்த வயதில் தெளிவாகப் புரியவில்லை. அப்பா மட்டும் எல்லா நெருக்கடிகளையும் சமாளித்து விடுவார். அவரிடம் அவன் அக்கடிதத்தைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் போதும்.

அதற்கு இன்னும் பல மணி நேரம் தேவைப்பட்டது. திருவாரூர் ' திருவாரூர்! ' பரமசிவன் நடனமாடிய இடம்.

உலகத்திலேயே மிகப்பெரிய குளமும் தேரும் உடைய இடம். மனுநீதி!சோழனும் முத்துசுவாமி தீட்சிதரும் வாழ்ந்த இடம். இதைப் பார்ப்பதற்கு என்று அவனாக வரப்போவதில்லை. வருவதற்குச் சாத்தியமும் இருக்காது. ஆனால் இப்போது வர நேர்ந்துவிட்டது. இருக்கும் மூன்று நான்கு மணி நேரத்தை இந்த ரயில் நிலையத்திலேயே கழிக்க வேண்டுமா ? தென்னிந்தியாவில் பல இடங்களைப் போலவே இங்கும் ஊருக்கும் ரயில் நிலையத்துக்கும் சம்பந்தமே கிடையாது ஏன் இப்படி ரயிலடியை எங்கோ அமைக்கிறார்கள் ? ஒரு மணி நேர ரயில் பயணத்துக்கு ரயிலடிக்குப் போகவும் ஒரு மணி நேரம் தேவைப்படும் போலிருக்கிறது. புழுதி படிந்த பாதையில் சிறிது நேரம் நடந்துவிட்டு அவன் மீண்டும் ரயிலடிக்கே திரும்பி வந்து விட்டான். கோயிலும் குளமும் தேரும் இன்னொரு சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்க வேண்டும். பிளாட்ஃபாரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சரக்கு மூட்டைகளில் ஒன்று தனியாக விடப்பட்டிருந்தது. அதன் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். முந்தைய வருடம் இதே மாதத்தில் அவன் என்ன செய்து கொண்டிருந்தான் ? அவன் ஊரில் பத்தாவது வகுப்பைத்தான் பள்ளி இறுதியாக வைத்திருந்தார்கள் இறுதிப் பரிட்சை எழுதிவிட்டு முடிவுகளுக்காகக் காத்திருந்தான். அவனுடைய ஊரில் மே மாதக் காலைகள் குரூர மனமுடையவனுக்குக்கூட மென்மையான எண்ணங்களை உண்டு பண்ணும். வயதான மரங்கள் கூட உற்சாகமாகச் சலசல்க்கும். வழக்கமான காக்கை குருவிகளோடு கிளிகளும் வந்து சேரும். காக்கைகளாலும் கழுகுகளாலும் அவற்றுக்கு ஆபத்துதான். ஆனால் அதை பொருட்படுத்தாதபடி அவன் படுக்கைக்கருகில் இருந்த ஜன்னலின் கதவின் மீது வந்து உட்கார்ந்து கொள்ளும். கிளி ' கிளி ' அவனுக்கு பிடித்தமானவர்கள் எல்லோரும் கிளிகள். அவனுடைய முதல் கிளி மங்களம். மங்களம் திருவாரூரில்தானே இருப்பதாகச் சொன்னார்கள் ? மங்களம் என்றவுடன் யாருக்கும் முப்பது நாற்பது வயது மாதுதான் மனதில் தோன்றும் இந்த மங்களத்துக்குப் பன்னிரண்டு, பதிமூன்று வயதுதான் முடிந்திருக்கும். அவனுடைய அப்பாவும் அவளுடைய அப்பாவும் அநேகமாக ஒரு சமயத்தில் ஊரைவிட்டு வடக்கே பிழைப்பைத் தேடிப் போயிருக்கிறார்கள். சேவகப் பிழைப்புதான். மாதம் பதினைந்து ரூபாயாவது உறுதியாகக் கிடைக்கும் என்று தெரிந்த பிறகு மீண்டும் சொந்த ஊருக்கு சென்று அவரவர்கள் மனைவி தாய்தந்தையரை அழைத்து போயிருக்கிறார்கள். மங்களத்தின் அப்பாவுக்கு வரிசையாக மூன்று பெண்கள். திடாரென்று ஒரு நாள் அல்பாயுசில் செத்துப் போய் விட்டார். மங்களத்தின் அம்மாவையும் மூன்று பெண்களையும் உறவினர்கள் அழைத்துப் போய்த் திருவாரூரில் எங்கோ வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அவனுக்கு இதெல்லாம்கூட அவ்வளவு தெளிவாகத் தெரியாது. அவளுடைய அப்பா செத்து கிடக்க, பாவாடை சட்டை போட்ட ஒரு பெண் தன்னுடைய தங்கையச் சமாதானப்படுத்திச் சாதம் ஊட்டிய காட்சிதான் அவனுக்கு நினைவிலிருந்தது. மங்களத்தின் தங்கைகளின் பெயர்கள்கூட அவனுக்கு சரியாக நினைவில்லை. அவனுக்கு திடாரென்று மங்களத்தைப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது. அவனும் மங்களமும் சேர்ந்து விளையாடியவர்கள்தான் அவள் நன்றாகப் பாண்டி ஆடுவாள். அதிலும் ஏரோப்ளேன் பாண்டியாட்டத்தில் அவளை மிஞ்சவே முடியாது. ஒருமுறை சில்லைப் போட ஆரம்பித்தால் அத்தனை ஆட்டத்தையும் முடித்து, கண்ணை மூடியபடி 'ஆம்பியாட் ? ' ( ஆங்கிலத்தில் 'ஆம் ஐ அவுட் ? ') என்று கேட்டபடி எந்த கோட்டையும் மிதியாதபடி பாண்டியின் எல்லா கட்டங்களையும் தன்னுடையதாக்கி கொள்வாள். அவளைவிட அவன் பெரியவன் என்றாலும் திரும்பத் திரும்பத் தோற்றுவிட்டு ' இனிமே உன்னோட விளையாட மாட்டேன் போ ' என்று கோபித்து கொண்டும் போய்விட்டான். அன்றிலிருந்து அவள் அவனிடம் மட்டும் தோற்றுப் போவாள். முதலில் அது அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆனால் போக போக அதுவும் சோர்வு தந்தது. மங்களத்தின்

கையைப் பிடித்துக்கொண்டு, ' இனிமே கோச்சுக்க மாட்டேன் மங்களம். நீதான் நன்னா ஆடறே. நீயே ஜெயிச்சுக்கோ. ' என்றான். அவனைவிட முகத்தை நீளமாக வைத்துக்கொண்டு, 'நான் என்ன பண்றதுடா, உன்னோட ஆடினா தோக்கத்தான் முடியறது. ' என்று அவள் சொன்னாள். அது பொய். ஆனால் அவளுக்கு அதுதான் நிஜமாய் இருக்க வேண்டும் என்று அவன் கண்டு கொண்டான். அவ்வளவு சிறிய வயதில்கூட நிஜம் பொய் பற்றி அவளுக்கு தெரிந்திருந்தது. கோயில் மூடி இருந்தது. நான்கு மணிக்குத்தான் திறப்பார்கள். ஆனால் அதுவரை காத்திருக்க முடியாது. வடக்கே இருந்து தமிழ்நாட்டுக்கு வருபவர்கள் எல்லோருக்கும் கோயில்கள் மூடியிருக்கும் நேரம் பற்றி அதிகமாக தெரியாது. அவனே பலமுறை அவனுடைய பெற்றோருடன் மூடிய கோயில்கள் திறப்பதற்க்காக காத்து நின்றிருக்கிறான். இன்று அவன் வசமிருக்கும் சிறிது நேரத்தில் மங்களம் எங்காவது கண்ணில் படுவாளா என்றுதான் பார்க்க இயலும். எப்படி முகவரி ஏதும் இல்லாமல் திருவாரூரில் ஒரு விதவையையும் அவளுடைய மூன்று பெண்களையும் தேடுவது ? அவனுக்கு அவர்கள் முகம்கூடச் சரியாக நினைவில்லை. ஏதோ நடந்தது ஞாபகத்திலிருக்கிறது. முகங்கள் கலைந்து விடுகின்றன. அவன் கமலாலயத்தை ஒட்டியிருந்த வீடுகளில் பார்த்தபடி சென்றான். யாரும் பெரிய வசதி படைத்தவர்கள் இல்லை. ஆனால் ஆதரவற்ற தன்மையைக் காட்டும் முகமாக ஏதும் தென்படவில்லை. ம்ங்களம் இப்படிக்கூட இருக்கமுடியாது. இன்னும் பரம தரித்திரத்தில், துன்பத்தில்தான் இருக்க வேண்டும். மங்களத்தின் அப்பா செத்துப் போன போது வீட்டில் இருந்த சிறு பாத்திரம் பண்டங்கள் தவிர வேறு விலைமதிப்புடையவை என்று ஏதும் கிடையாது. மங்களத்தின் அம்மாவின் கழுத்தில் ஒழுங்காக ஒரு சங்கிலிகூடக் கிடையாது. அப்படிபட்டவர்கள் திருவாரூர் போன்ற ஊரில் குடியேறினால் எப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்தமுடியும் ? கிழிந்த உடை, பரட்டைத் தலை, கண்களில் எப்போதும் பயமும் அற்ப எதிர்ப்பார்ப்பும், கன்னங்கள் குழி விழுந்திருக்கும். மங்களம் படிப்பை நிறுத்திவிட்டு யார் வீட்டிலேயோ வேலை செய்து கொண்டிருக்க கூடும். செய்த குற்றம், செய்யாத குற்றம் எல்லாவற்றுக்கும் அடி உதை வசவு பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். அவன் அங்கிருந்த சந்து பொந்துகளை அவசரத்தோடு சுற்றி சுற்றி வந்தான். என்ன நம்பிக்கையில் எந்தத் தகவலின் பேரில் இப்படி தேடுகிறான் ? கண்ணில் பட்ட எல்லாப் பெண்களும் மங்களம் மாதிரி இருந்தார்கள். அவனுடைய கற்பனை மங்களம் போல அந்த சிற்றூரில் நிறையப் பெண்கள் இருந்தார்கள். அவனுடைய முழங்கால் வரை புழுதி படிந்திருந்தது. இப்போது அவனே ஒரு பிச்சைக்காரப் பையன் போலத்தான் தோற்றமளித்தான். காலையில் சாப்பிட்ட பழையச் சோறு எப்போதோ கரைந்து போய் விட்டிருந்தது. தஞ்சாவூருக்கு ரயில் டிக்கெட் வாங்க மட்டும் சிறிது சில்லறை இருந்தது. அவனுக்கு தஞ்சாவூருக்கு ஒரே டிக்கெட்டாக வாங்கியிருக்கலாம் என்று தெரியாமல் போய்விட்டிருந்தது. அந்த தெருவில் நான்கைந்து சிறுமியர் பாண்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இது அவன் அறிந்த 'ஏரோப்ளேன் சிட்டி ' விளையாட்டில்லை. எல்லோரையும்விட வயதில் பெரியவளாயிருந்தவள் அவளை தட்டிக் கேட்க யாருமில்லை என்ற உணர்வில் எல்லோரையும் மிரட்டி விரட்டிக் கொண்டிருந்தாள். இவளுக்கும் மங்களத்திற்க்கும்தான் எவ்வளவு வித்தியாசம். 'இங்கே மங்களம்னு ஒரு பொண்ணு இருக்காளா ? '

அந்தப் பெரிய பெண் ஒரு கட்டத்திலிருந்து இன்னொன்றுக்கு ஒற்றைக் காலில் தத்திச் சென்றபடியே, 'என்ன கேக்கறே ? ' என்றாள். 'ம்ங்களம்னு ஒரு பொண்ணு. '

அவன் ஏதோ அபத்தமான செயலொன்றைச் செய்து விட்டது போல அவள் களுக்கென்று சிரித்தாள்.

அவள் சிரிபபதைக் கண்டு இதர பெண்களும் சிரிக்க ஆரம்பித்தனர். சிரிப்பை அடக்க முடியாதபடி மாறி மாறி வெடித்துக் கொண்டு சிரித்தார்கள்.

அவனுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. அவனிருந்த ஊரில் பெண்கள் இவ்வளவு பொல்லாதவர்களாக இருக்க மாட்டார்கள். இப்படி நடுத்தெருவில் பாண்டி விளையாட மாட்டார்கள். யாராவது கேள்வி கேட்டால் உடனே அவனை கேலிச் செய்ய தொடங்கிவிட மாட்டார்கள்.

அவன் அங்கிருந்து நகர்ந்து செல்ல அந்த பெண் கூப்பிட்டாள். 'டேய் பையா ' பையா ' என்ன கேட்டே ' பதில் சொல்றதுக்கு முன்னாலியே போயிடறியே ? ' அவன் நின்றான்.

'மங்களம்னு இந்த தெருவிலே ஒரு பொண்ணு இருக்கா. '

'எங்கே இருக்கா ? '

'பூசணிக்காய் அடுக்கியிருக்கே ஒரு திண்ணை அந்த வீட்டிலே இருக்கா. '

'அவளை அழைச்சிண்டு வரியா ? நான் ரொம்பத் தூரத்திலிருந்து வந்திருக்கேன். '

'அவளை அழைச்சிண்டு வர முடியாது. '

'ஏன் '

'ஏன்னா அவளுக்கு கால் இல்லே. '

'காலு இல்லியா ? '

'அவளுக்கு ஜ்உரம் வந்து இரண்டு காலும் நிக்க முடியாதபடி போயிடுத்தாம். நீ வேணா அவ வீட்டுக்கு போய் பாரு. அவ உக்காந்தபடியேத்தான் நகருவா. ' அவன் அந்த வீட்டுக்கு போக அடியெடுத்து வைத்தான். 'வாசப் பக்கமாய் போகாதே. வீட்டுக்காரா கத்துவா. கொல்லை வழியாய் போ. மங்களம் இருக்கிறதே கொல்லைப் பக்கம்தான். ' அவன் மங்களத்தைப் பற்றி கற்பனை செய்து கொண்டிருந்தது எல்லாமே சரியாய் போயிற்று. அப்பா செத்துப் போய்விட்டால் எப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் வந்து விடுகின்றன ' பாண்டியாடி யாரையும் தோற்கடிக்கும் கால்களுக்குக்கூட வியாதி வந்து செயலிலந்து போய்விடுகின்றன. இனியும் மங்கத்தைப் போய்ப் பார்க்க வேண்டுமா ? இருவரின் துக்கம்தான் பெருகி வழியும். அவனால் அவளுக்கு எந்த உதவியும் புரிய முடியாது. அவளால் எழுந்து வந்து அவனுக்கு ஒரு தம்ளர் தண்ணீர் கூடத் தரமுடியாது. அவனுடைய அப்பாவை அவன் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். அப்பாவின் வேலைக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவரை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும். அவன் ரயில் நிலையம் நோக்கி வேகமாக நடந்தான்.

## சிவப்பாக, உயரமாக, மீசை வச்சுக்காமல் - 1

**ஆதவன்**

சிவப்பாக உயரமாக மீசை வசுக்காமல் - தனக்கு வரப் போகிறவனைப் பற்றிய இந்த மங்கலான உருவம் இப்போது சில நாட்களாக நீலாவின் மனதில் அடிக்கடி ஊசலாடத் தொடங்கியிருந்தது.

வயது இருபத்தி இரண்டு. பெண்குழந்தை . வீட்டில் வரன் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். ஜாதகம், பூர்வீகம், குலம், கோத்திரம், பதவி, சம்பளம் -- இத்யாதி . இந்த முயற்சிகளும் அதன் பின்னிருந்த பரிவும் கவலையும் அவளுக்கு ஒரு விதத்தில் பிடித்துத் தானிருந்தது. என்றாலும், இது சம்பந்தமாக அவளுடைய இளம் மனதிலும், சில அபிப்பிராயங்களும், கொள்கைகளும் இருக்கக் கூடும் என்றோ அவற்றுக்கு ஒரு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றோ தன் பெற்றோர் சிறிதும் நினைக்காதது அவளுக்குச் சற்று எரிச்சலையும் அளித்தது. அதே சமயத்தில் இது சம்பந்தமாகத் தன்னை அவர்கள் விசாரித்தால் தன்னால் தீர்மானமான துல்லியமானதொரு பதிலைச் சொல்ல முடியுமா என்றும் சந்தேகமாகவும் இருந்தது. பெரியோர்களுடைய கருத்துக்கள் எவ்வளவுக்கெவ்வளவு திடமான கன பரிமாணங்களும் உண்மையின் தீவிரமும் உடையதாக இருந்தனவோ , அவ்வளவுக்கவ்வளவு அவளுடைய கருத்துக்கள் அவளுக்கே புரியாததொரு புதிராகவும், பிறர் கேட்டால், சிரிப்பார்களோ என்ற பயத்தை மூட்டுபவையாகவும் இருந்தன.

அவன் சிவப்பாக இருந்தான். அவளுடைய கனவுகளில் இடம் பெற்றிருந்த இளைஞன் சிவப்பென்றால் ஆங்காரச் சிவப்பு இல்லை. மட்டான, பதவிசான சிவப்பு. அவன் உயரமாக இருந்தான் -- நீலாவை விட ஓரிரு அங்குலங்கள் உயரமாக. அவள் சௌகரியமாக தன் முகத்தை அவன் மார்பில் பதித்துக் கொள்ளக் கூடிய உயரம். வெட்கத்தில் தாழ்ந்திருக்கும் அவள் பார்வை சற்றே நிமிரும் சமயங்களில் அவளை உவகையிலும் சிலிர்ப்பிலும் ஆழ்த்தும் உயரம். கடைசியாக ஆனால் முக்கியமாக அவனுக்கு மீசையோ தாடியோ இருக்கவில்லை. மழு மழுவென்று ஒட்ட ஷவரம் செய்யப்பட்ட சுத்தமான மாசு மறுவற்ற முகம் அவனுடையது. அந்த இளைஞனுடன் அவன் தன் கனவுகளில் தனக்கு மிகவும் பரிச்சயமான இடங்களிலும் , தான் பார்த்தேயிராத பல புதிய இடங்களிலும் மீண்டும் மீண்டும் அலைந்து திரிவான். ஜோடியாக அவர்கள் பார்த்து மகிழ்ந்த பேச்சுக்கள் தான் எத்தனை . ஆனால் அந்தக் கனவு இளைஞன் எவ்வளவுக்கு எவ்வளவு அருகில் இருப்பதாகத் தோன்றினானோ அவ்வளவுக்கு அவ்வளவு எட்டாத் தொலைவில் இருப்பதாகவும் தோன்றினான். எவ்வளவுக்கு எவ்வளவு அவனைப் பற்றித் தெரியும் என்று தோன்றியதோ அவ்வளவுக்கு அவ்வளவு அவனைப் பற்றித் தெரியாதென்றும் தோன்றியது. ஓயாமல் அலை பாயும் நீர்ப் பரப்பில் கோணல் மாணலாக நெளியும் ஒரு பிம்பம் அவன்; வேகமாகச் சென்று மறைந்து விட்ட பஸ் ஜன்னலில் பார்த்த முகம் -- அவள் அவனைப் பார்க்கவும் செய்தாள்; பார்க்கவும் இல்லை.

நீலா ஒரு சர்க்கார் ஆபிஸில் வேலை பார்த்து வந்தாள் - குமாஸ்தாவாக. அவளுடைய ஆபிஸில் நிறைய இளைஞர்கள் இருந்தார்கள். ஏன் அவளுடைய செக்ஷனிலேயே ஒருவன் இருந்தான். எல்லாம் -- அவள் பார்வையில் -- படு சாதாரணமாக 'ச்சீப் ஃபெல்லோஸ் '. அவளைப் போன்ற ஓர் அரிய ரத்தினத்தைப் புரிந்து கொள்ளவோ, அதன் அருமையை அறிந்து போற்றிப் பாதுகாக்கவோ லாயக்கில்லாதவர்கள். இந்த மட்ட ரகமான கும்பலிலிருந்து அவளுக்கு விடுதலை அளிப்பதெற்கென்று அவதாரம் எடுத்திருப்பவன் தான் அவளுடைய கனவு இளைஞன்.

'ஓ என் அன்புக்குரியவனே, எங்கிருக்கிறாய் நீ ? நான் கேட்கும் பாடல்களைக் கேட்டுக் கொண்டு , படிக்கும் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டு , நடக்கும் சாலைகளில் நடந்து கொண்டு , கவனிக்கும் போஸ்டர்களைக் கவனித்துக் கொண்டு பயணம் செய்யும் டாக்ஸிகளிலுல், ஆட்டோ ரிக்ஷாக்களிலும் பயணம் செய்து கொண்டு , ஏறியிறங்கும் படிக்கட்டுகளில் ஏறி இறங்கி, உபயோகிக்கும் ஹேர் ஆயிலையும், டூத் பேஸ்டையும் உபயோகித்துக் கொண்டு , அருந்தும் பானங்களை அருந்திக் கொண்டு , என்னைத் தாக்கும் ஓசை, மணங்களினால் தாக்கப் பட்டு , சிலிர்க்க வைக்கும் காட்சிகளைக் கண்டு சிலிர்ப்பில் ஆழ்ந்து, வியர்க்க வைக்கும் வெயிலில் வியர்த்துக் கொண்டு, விசிறும் தென்றலினால் விசிறப்பட்டு, நனைக்கும் மழையிலும் நிலவொளியிலும் நனைந்து கொண்டு, பீடித்திருக்கும் இதே கனவுகளினால் பீடிக்கப் பட்டவனாய் எங்கிருக்கிறாய் நீ ? வா, வந்து விடு, ப்ளீஸ் என்னை ஆட்கொள். என்னைக் காப்பாற்று, என்ன்னைச் சுற்றியிருக்கும் இந்த மனிதர்களிடமிருந்து, இந்த இடங்களிலுருந்து, இந்தப் பொருள்களிலிருந்து, என்னிடமிருந்தே .. . . '

ஆர்ப்பரிக்கும் எண்ண அலைகள், திமிறித்துள்ளும் உள்ளம்.

தினசரி காலையில் பஸ் ஸ்டாண்டில், ஒரரு நீண்ட க்யூவின் மிகச் சிறிய பகுதியாகத் தன்னை ஆக்கிக் கொள்ளும் கணத்தில் , அவளுடைய இதயத்தை ஒரு விவரிக்க முடியாத சோகமும், தவிப்பும் கவ்விக் கொள்ளும் - - 'இதோ மீண்டும் இன்னொரு நாள், நான் பஸ் ஸ்டாண்டில் வந்து நிற்கிறேன்; பஸ்ஸில் ஏறிப் போகிறேன். -- சலித்துப்போன இதே பழைய முகங்களுடன் ' என்று அவள் நினைத்துக் கொள்வாள். சாலையில் படபடவென விரையும் கார்கள் ஸ்கூட்டர்கள், இவற்றை அவளுடைய பார்வை ஆற்றாமையுடன் துரத்தும். துழாவும். பஸ்ஸில் செல்லும் போது பஸ்ஸை ஓவர்டேக் செய்து கொண்டு செல்லும் வாகனங்களையும், இந்த வாகனங்களுக்குள் அமர்ந்திருக்கும் மனிதர்களையும், அவளுடைய பார்வை நீவும்.; அணைக்கும். இந்தக் கார்கள், ஸ்கூட்டர்கள், அதோ அந்தப் போர்ட்டிகோக்கள், பார்க்கிங் லாட்கள், அடுக்கு மாடிக் கட்டடங்கள், ஜன்னல்கள், - - இவை உள்ள உலகம் தான் கனவு இளைஞன் வசித்த உலகம். பஸ் கியூக்களுக்கும் , டிபன் பாக்ஸ்களுக்கும் அப்பாற்பட்ட உலகம். நீண்ட கியூக்களில் கூட்டமான பஸ்களில் , நிரந்தரமாகச் சிறையாகிப் போன அவளை , அவன் எப்படித்தான் கண்டுகொள்ளப் போகிறானோவென்று அவள் பெருமூச்செறிவாள். அவள் கையிலிருந்த- -, நேற்று ஆபிஸ் கிளப்பிலிருந்து எடுத்து வந்திருந்த - - பத்திரிகையின் பின்னட்டையில் , சிகரெட் விளம்பரத்தில் , தன்னைப் போன்ற பெண்ணொருத்தியை ஒரு கையால் அனைத்தவாறு, இன்னொரு கையில் சிகரெட்டை ஒயிலாகப் பிடித்திருக்கும் இளைஞன் கூட ஓரளவு கனவு இளைஞனின் சாயலுள்ளவன் தான். சிகரெட் ஷேவிங் லோஷன், ஹேர் ஆயில் விளம்பரங்களில் இடம் பெறும் இந்த இளைஞர்கள் கூடவெல்லாம் பேச முடிந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்.! இவர்கள் கனவு இளைஞனின் நண்பர்களாய்த் தான் இருப்பார்கள். அவனுடைய விலாசம் இவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

பிறகு ஆபிஸ் . கையிலிருந்த பத்திரிகையைக் குப்பு சாமியின் மேஜை மீது வைத்துவிட்டு , அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரில் கையெழுத்திட்டு விட்டு , அவள் தன் இடத்தில் உட்காருவாள். செக்ஷனில் வேலை செய்யும் சிலர் ஏற்கனவே வந்திருப்பார்கள். மற்றவர்களும் ஒவ்வொருவராக வந்து உட்காருவார்கள். வேலை தொடங்கும். இரவெல்லாம் நிசப்தமாக நிச்சலனமாக இருந்த அந்த அறை திரை தூக்கப்பட்ட நாடக மேடை போலக் குபுக்கென்று உயிர் பெற்று விழித்துக் கொள்ளும். -- குரல்கள், ஓசைகள், அசைவுகள் -- நிற்கும் நடக்கும் , உட்காரும் மனிதர்கள், இவர்களை இணைக்கும் சில பொதுவான அசேதனப் பொருட்கள்.

படபடவெனப் பொரிந்து தள்ளும் டைப்ரைட்டர்கள், சரசரக்கும் , மொடமொடக்கும் காகிதங்கள் , இக்காகிதங்களின் மேல தம் நீல உதிரத்தை எழுத்து வடிவங்களாக உகுத்தவாறு தாவும், ஊறும் தள்ளாடும் பேனாக்கள் , கிரிங்க். . கிரிங்க். . எனத் தன் இருத்தலையும் ஹோதாவையும் அடிக்கடி கர்வத்துடன் பறைசாற்றும் தொலைபேசி பொத் பொத்தென்று வைக்கப் படும் திறக்கப் படும் ரெஜிஸ்தர்கள், டபால் டபால் என்று திறக்கப் படும் மூடப் படும் இழுப்பறைகள் , அலமாரிகள் , தரையுடன் உராயும் நாற்காலிக்கால்கள், காற்றில் சுவரில் உராயும் ஒரு காலண்டர், ஒரு தேசப்படம் ஒன்றோடொன்று உராயும் மோதும், இணையும் , இணையாத ஒலிகள். . .

ஒரே விதமான ஓசைகளின் மத்தியில் , ஒரே விதமான மனிதர்களின் மத்தியில் , ஒரே விதமான வேலையைச் செய்துகொண்டு - - சே! இதில் பிரமாதமான கெடுபிடியும் , அவசரமும் வேறே .. . ' மிஸ் நீலா! டெபுடேஷன் ஃபைல் கடைசியாக யார் பெயருக்கு டிரான்ஸ்ஃபர் செய்யப் பட்டிருக்கிறது ? ' 'மிஸ் நீலா! ஆர். வி. கோபாலன் டிரான்ஸ்ஃபர் ஆர்டர் டிஸ்பாச்சுக்குப் போய் விட்டதா ? ' 'மிஸ் நீலா! பி.என் (பென்ஷன் ) தலைப்பில் புதிய ஃபைல் திறக்க அடுத்த நம்பர் என்ன ? ' கேள்விகள், கேள்விகள், கேள்விகள். அவர்கள் தன்னைக் கேட்காத போது , அவள் தன்னையே கேட்டுக் கொள்வாள். . .மிஸ் நீலா! உனக்கு ஏன் பைத்தியம் பிடிக்க வில்லை ? மிஸ் நீலா! நீ எதற்காக இந்த அறையில் இந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாய் ? மிஸ் நீலா ! உனக்கும் இந்த மனிதர்களுக்கும் என்ன சம்பந்தம் ?

விதம் விதமான மனிதர்கள். வெவ்வேறு ருசிகளும் போக்குகளும் , சாயல்களும், பாவனைகளும் உள்ள மனிதர்கள். ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் குறிப்பிட்ட வட்டத்தில் சுழலும் மனிதர்கள். சலிப்பூட்டும் மனிதர்கள்.!

இந்த செக்ஷனில் இருந்தவரகளிலேயே வயதானவர் தண்டபாணி. நெற்றியில் விபூதி. வாயில் புகையிலை. முகத்தில் எப்போதும் ஒரு கடுகடுப்பு. பெண்கள் வேலைக்கு வருவதைப் பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லாத காரணத்தால் , நீலா என்ற பெண்ணொருத்தி அந்த செக்ஷனில் வேலை செய்த உணர்ந்ததாகவே அவர் காட்டிக் கொள்வதில்லை. செக்ஷனில் உள்ள மற்றவர்கள் ஒரு பெண் இருக்கிறாளே என்று கூறத் தயங்கும் சொற்களை டாபிக்குகளை அவர் வெகு அலட்சியமாகக் கூறுவார் . அலசுவார். வேண்டுமென்று தன்னை அதிர வைக்கும் நோக்கத்துடனேயே அவர் அப்படிப் பேசுவதாக நீலாவிற்குத் தோன்றும்.

குப்புசாமி இன்னொரு ரகம். செக்ஷனில் 'பத்திரிகை கிளப் ' அவர் தான் நடத்தி வந்தார். அவரே கிட்டத்தட்ட ஒரு பத்திரிகை மாதிரி தான்; சதா மேட்டர் தேடி அலையும் பத்திரிகை. பியூன் பராங்குசத்தின் சம்சாரத்துக்குக் கால் நோவென்றால் அதற்குப் பரிகாரமென்னவென்று -- ஹைஸ்கூல் படிப்பை முடித்து விட்ட கணபதி ராமனின் மகன் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று- - அமெச்சூர் நடிகரான சீனிவாசன் எந்த எந்த மேநாட்டு நடிகர்களைப் பின்பற்றலாமென்று -- அடிக்கடி லேட்டாக வரும் கேசவன் தன் தினசரி அட்டவணையை எப்படியெல்லாம் அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாமென்று அவர் ஒவ்வொருவருக்கும் வலிய ஆலோசனை வழங்குவார். நீலாவிடமும் அவர் பேசுவார். 'இன்றைக்கு என்ன சீக்கிரமா வந்துட்டே போல இருக்கே! 'என்கிற ரீதியில் அவர் அவளிடம் வெகு சௌஜன்யத்துடன் பேச முற்படும் போது எரிச்சல் தான் வரும் . தண்டபாணி ஓர் அமுக்கு என்றால், குப்புசாமி ஓர் அதிகப் பிரசங்கி.

கணபதி ராமன் , சீனிவாசன், கேசவன், பராங்குசம் -- இவர்களையும் கூட ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காரணத்துக்காக அவள் வெறுத்தாள். கணபதி ராமன், சதா அவளுடைய வேலையில் ஏதாவது தவறுகளைச் சுட்டிக் காட்டுவதும் ,சின்னப் பாப்பாவின் கையைப் பிடித்து 'அ ' எழுதச் சொல்லித் தருவதைப் போல , ஒவ்வொரு விஷயத்தையும் ஆதியோடந்தம் சொல்லித் தர முற்படுவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. சீனிவாசன் 'மிஸ் நீலா! ' என்று உத்தரவிடும் போதெல்லாம், 'இஃப் யூ டோண்ட் மைன்ட் ', , 'கைண்ட்லி ' என்ற சொற்களைப் பயன் படுத்துவது மரியாதையாகத் தோன்றாமல் ஒரு நாசூக்கான ஏளனமாகவே தோன்றியது. கேசவனுடைய பெரிய மனுஷத் தோரணையும், யாரையும் லட்சியம் செய்யாத (அவள் உட்பட) அலட்சியப் போக்கும் அவளுக்கு அவன் பால் வெறுப்பை ஏற்படுத்தின. பியூன் பராங்குசத்தைப் பொறுத்தவரையில் ரிஜிஸ்தர்களையும் ஃபைல்களையும் , பல சமயங்களில் அவன் அனாவசியமான வேகத்துடன் , ஓசையுடன், தன் மேஜை மீது எறிவதாக அவளுக்குப் பட்டது. சில சமயங்களில் அவள் வராந்தாவில் நடந்து செல்லும் போது , வேறு பியூன்களிடம் தன்னைப் பற்றி மட்டமாக ஏதோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்ததாகப் பட்டது.

செக்ஷனில் இருந்த யாரையுமே அவளுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் , அவளுக்கு மிக அதிகமாகப் பிடிக்காத ஆசாமி கேசவன் தான். செக்ஷனில் உள்ள மற்றவர்கள் அவனை ஒரு செல்லப் பிள்ளை போல நடத்துவதும், அளவுக்கு மீறி அவனைத் தூக்கி வைத்துப் பேசுவதும் அவளுக்குப் பொறுப்பதில்லை. இவர்கள் கொடுக்கும் இடத்தினால் தான் 'இதற்கு ' திமிர் அதிகமாகிறது என்று அவள் நினைப்பாள்.

- லக்கி ஃபெல்லோ சார் . . நோ கமிட்மெண்ட்ஸ். நோ வொர்ரீஸ்

-- ஒரு மாசத்திற்கு எவ்வளவு படம் பார்ப்பாய் நீ கேசவன் ?

-- தனியாகப் பார்ப்பாயா , அல்லது ஸ்வீட் கம்பெனி ஏதாவது ?

-- இந்தக் காலத்துப் பசங்களெல்லாம் பரவாயில்லை. ஸார். இவங்க வயசிலே நாம் இருந்த போது என்ன எஞ்ஜாய் பண்ணியிருப்போம் சொல்லுங்கோ!

அவனுடைய இளமைக்கும் சுயேட்சைத் தன்மைக்கும் அவர்கள் அளிக்கும் அஞ்சலி . தம் இறந்த கால உருவத்தை அவன் வடிவத்தில் மீண்டும் உருவகப் படுத்திப் பார்த்து மகிழும் முயற்சி. அவளுக்குச் சில சமயங்களில் பொறாமையாகக் கூட இருக்கும். தனக்குக் கிடைக்காத ஒரு விசேஷக் கவனிப்பும் , ஸ்தானமும் அவனுக்குக் கிடைத்திருப்பது அவள் நெஞ்சை உறுத்தும். இது போன்ற சமயங்களில் இந்தப் பொறாமையும் உறுத்தலும் வெளியே தெரிந்து விடாமல் அவள் மிகச் சிரமப்பட்டு தன் முகத்தையும் பாவனைகளையும் அலட்சியமாக வைத்துக்கொள்வாள் -- எனக்கொன்றும் இதொன்றும் லட்சியம் இல்லை என்பது போல.

ஒரு நாள் மாலை குப்பு சாமி கேசவனிடம் பேசிக் கொண்டிருந்த போது அவள் இப்படித்தான் மூஞ்சியை அலட்சியமாக வைத்துக் கொண்டிருந்தாள்.

' உனக்கு எந்த மாதிரி வைஃப் வரணும் என்று ஆசைப் படுகிறாய் ? ' என்று குப்பு சாமி கேட்டார்.

' எந்த மாதிரி என்றால் ? '

'அழகானவளாகவா ? '

' அழகானவளாக வரணும் என்று யாருக்குத் தான் ஆசை இருக்காது ? '

' ரொம்ப அழகாயிருந்தாலும் அப்புறம் மானேஜ் பண்றது கஷ்டம் . '

கேசவன் கட கட வென்று சிரித்தான். 'எனக்கு இதிலே உங்களளவு அனுபவம் இல்லை சார். ' என்றான். இப்படி அவன் சொன்னபோது தன் பக்கம் அவன் பார்வை திரும்பியது போல நீலாவுக்குத் தோன்றியது. இதை ருசுப் படுத்திக் கொள்ள அவன் பக்கம் திரும்பவும் தயக்கமாக இருந்தது.

அன்று வீட்டுக்குச் சென்றதும், அவள் முதல் வேலையாகத் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள் -- கேசவன் பார்வை விழுந்த தன் மாலை நேரத்து முகம் எப்படி இருந்தது என்று தெரிந்து கொள்வதற்காக. அது களைத்திருந்தது. வியர்த்திருந்தது. சற்றே புழுதி படிந்திருந்தது. துடிப்பும் பிரகாசமும் இன்றி மந்தமாக இருந்தது.

இது தான் அவளுடைய முகம், அவளுடைய அழகென்று கேசவன் தீர்மானித்து விட்டானோ ? இந்த எண்ணம் தோன்றிய மறு கணமே , சேச்சே , இவன் பார்க்கும் போது என் முகம் எப்படி இருந்தால் என்ன ? இவன் என்னைப் பற்றி என்ன நினைத்தால் என்ன ? என்றும் நினைத்தாள். அவனைப் பற்றி மறக்க முயன்றாள்.

ஆனால் மறு நாள் காலை ஆபிஸ்க்குக் கிளம்பும் போது வழக்கத்தை விட அதிகச் சிரத்தையுடனும் பிரயாசையுடனும், அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். ' அவனுக்காக அல்ல. அவன் மூலம் தன்னைத் திருப்திப் படுத்திக் கொள்வதற்காக. ' என்று அவள் சொல்லிக் கொண்டாள். ' அவனுடைய அலட்சியத்தைப் பிளந்து அவனைச் சலனப் படுத்துவதற்காக அவனுடைய கவனத்தைக் கவர்ந்து அதன்மூலம் என் வெற்றியை ஸ்தாபிப்பதற்காக ' --- இந்தப் போக்கிரித்தனமான எண்ணம் அவள் முகத்தில் ஒரு புன்னகையை எழுப்பியது. அன்று பஸ்ஸில் செல்லும் வழியெல்லாம் அவள் முகத்தில் 'பளிச் பளிச் ' என்று புன்னகை ரேகைகள் தோன்றி மறைந்த வண்ணம் இருந்தன.

அவள் செக்ஷனுக்குள் நுழையும்போது கேசவனின் நாற்காலி காலியாக இருந்தது. அட்டெண்டன்ஸ் மார்க் பண்ணிவிட்டு தன்னிடத்தில் வந்து உட்காரும் போது ' இன்று ஒரு வேளை மட்டம் போட்டு விட்டானோ ? ' என்று நினைத்தாள்.

ஆனால், அவன் மட்டம் போடவில்லை. பத்தே முக்கால் மணிக்கு வந்தான். தாமதமாக வந்த குற்ற உணர்வினால் பீடிக்கப் பட்டவனாய் அவசர அவசரமாக ஃபைல் கட்டுகளைப் பிரித்து வேலையைத் துவக்கினான்.

நீலா கைகளை உயர்த்தித் தன் தலையில் வைத்திருந்த பூச்சரத்தைச் சரி பார்த்துக் கொண்டாள். 'கிளிங் கிளிங் ' என்று வளையல்கள் குலுங்கின. அவன் நிமிரவில்லை. கையிலிருந்த பென்ஸிலைத் தரையில் நழுவ விட்டு விட்டு மேஜைக்கு முன்புறம் போய் உருண்டு விழுந்துள்ள அதை எடுக்கும் சாக்கில் அவள் இடத்தை விட்டு எழுந்தாள். -- சரக் சரக் -- குனிந்து பென்ஸிலைப் பொறுக்கினாள். - 'கிளிங் கிளிங் ' -- ஊகும் அவன் நிமிரவே இல்லை, அவளுக்கு எரிச்சலாக வந்தது. இன்று திடாரென அவன் கவனத்தைக் கவருவது அவளுக்கு ஒரு முக்கியமான விஷயமாக -- கௌரவப் பிரசினையாக -- ஆகி விட்டிருந்தது. அடுத்த

படியாக ஒரு ரிஜிஸ்தரை வேண்டுமானால் கீழே போடலாமா என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போது தான் சீனிவாசன் அவளைக் கூப்பிட்டார்.

' மிஸ் நீலா ! இஃப் யூ டோண்ட் மைண்ட் -- ஒரு லெட்டர் கம்பேர் செய்யணும் '.

அவள் இடத்திலிருந்து எழுந்தாள். கேசவனின் மேஜைக்கு அருகில் உரசினாற்போல புடவை சலசலக்க , வளையல் சப்திக்க , பவுடர் மணக்க , (இன்று கொஞ்சம் பவுடர் அதிகமாகவே பூசிக் கொண்டிருந்தாள். ) நடந்து சென்று அவள் , சீனிவாசனின் மேஜையை அடைந்தாள். கேசவனின் பேனா சற்று நின்றது. அவன் நிமிர்ந்து தன்னைப் பார்ப்பதை அவள் உணர்ந்தாள். 'பாரு, பாரு நன்றாய்ப் பாரு . . ' என்று நினைத்தவாறு அவள் , சீனிவாசனருகில் இருந்த காலி நாற்காலியில் அமர்ந்து அவரிடமிருந்த கடித நகலை வாங்கிப் படிக்கத் தொடங்கினாள். அவர் டைப் செய்யப்பட்ட ஒரிஜினலை வைத்துக் கொண்டு சரி பார்க்கத் தொடங்கினார். தான் படிக்கிறோம் என்பதை நன்கு உணர்ந்தவளாய் அவள் படித்தாள். அவளுடைய அழகிய குரலும் உச்சரிப்பும் இந்த வறட்டு ஆபீஸ் கடிதத்தைப் படிப்பதில் செலவாகிக் கொண்டிருப்பது துரதிர்ஷ்டம் தான். ஆனால், கேசவன் கேட்டுக் கொண்டிருக்கிறான் -- இந்த நினைவு அவளுக்கு ஒரு போதையையும் உந்துதலையும் அளித்தது. கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு மீண்டும் தன் இடத்தில் வந்து உட்கார்ந்ததும், கேசவன் திசையில் அவள் பார்வையைச் செலுத்தினாள். குபுக்கென்று அவன் பார்வை அவளை விட்டு அகலுவதைக் கண்டு பிடித்தாள். அப்படியானால் இவ்வளவு நேரமாக அவன் அவளைத் தான் கவனித்துக் கொண்டிருந்தானா ? அவளுக்குக் கர்வம் தாங்கவில்லை. அன்று அவ்ள் தேவைக்கதிகமாகவே நடமாடினாள். கேசவனின் பார்வை அடிக்கடி தன் திசையில் இழுபடுவதைத் திருப்தியுடன் கவனித்தாள் - கப்பம் கட்டாமல் ஏய்த்து வந்த அண்டை நாட்டுச் சிற்றரசன் ஒருவனுக்குத் தன் பலத்தை நிரூபித்த திருப்தி. இன்னும் பெரிய அரசர்களின் மேல் போர் தொடுக்க முஸ்தீப்பாக அவள் ஈடுபட்ட ஒரு சிறு பலப் பரீட்சையில் வெற்றி.

## சிவப்பாக, உயரமாக, மீசை வச்சுக்காமல் - 2

**ஆதவன்**

அன்று மாலை கனாட் பிளேஸ் கஃபேயில் நண்பர்களுடன் அமர்ந்து காபி அருந்தும் போதும் , பிறகு ஒரு எழுபது மி மி . சினிமாத்தியேட்டரில் பானாவிஷன் பிம்பங்களை 'ஸ்டாரியோஃபோனிக் ' ஒலிப் பின்னணியில், காணும் போதும் , கேசவனின் மனத்தில் திடார் என்று நீலாவின் உருவம் தோன்றிக் கொண்டிருந்தது. 'இன்று இவள் ரொம்பவும் அலட்டிக் கொள்வது போலிருந்ததே -- என்னிடம் ஏதேதோ தெரிவிக்க முயலுவது போலிருந்ததே -- என் பிரமை தானோ ? ' என்று அவன் நினைத்தான். ஒரு வேளை இவளுக்கு என்மேல் காதல் .. . கீதல் . . . ?

இந்த எண்ணம் அவன் முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்தது. ஒரு பெருந்தன்மையான கருணை நிரம்பிய புன்னகை -- 'பாவம், பேதை! ' என்பதைப் போல ' இவள் குற்றமில்லை

நான் ரொம்ப அட்ராக்டிவாக இருக்கிறேன். தட் ஈஸ் தி டிரபிள்... ' என்று அவன் நினைத்தான்.

திடாரென்று அவளுடைய இங்கிலீஷ் உச்சரிப்பு நினைவு வரவே, அவனுடைய புன்னகை அதிகமாகியது. 'சில்லி புரனன்ஷியேஷன்! ' என்று நினைத்தான். திரையில் அட்ரி ஹெப்பர்ன் அழகாக குழந்தைத் தனமாகச் சிரித்தாள். கேசவனுக்கு அப்படியே அவளை கிஸ் பண்ணவேண்டும்போல் இருந்தது. சினிமாவிலிருந்து வெளியே வந்து சிகரெட்டை உறிஞ்சி இப்புகையை ஊதித் தள்ளியபோது அவன் கேசவனாக இல்லை. இந்த நாட்டில் இல்லை. பீட்டர் ஓட்டூலாக மாறி, நியூயார்க் வீதியில் நடந்து கொண்டிருந்தான். அட்ரி ஹெப்பர்னின் சாயலை எதிரே வந்த பெண்களின் முகங்களில் தேடிக்கொண்டிருந்தான். அவனுக்கு மிகவும் பிரியமான நடிகை ஆட்ரி ஹெப்பர்ன் தான். அதற்கு அடுத்தபடி சோபியா லாரன்; பிறகு, ஷெர்லி மெக்லைன்.

அவனுடைய வாழ்க்கைத் துணைவியின் இலட்சிய உருவகம் இந்த பிரியமான நடிகைகளின் சாயல்களில் இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் என்று சிதறிக் கிடந்தது. புடவை, டூத் பேஸ்ட் விளம்பரங்களில் சிரிக்கும் வனிதைகளில் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது. கனாட் ப்ளேஸ் வராந்தாக்களில் காணும் சில முகங்கள், சில நடைகள், சில சிரிப்புகள், சில அபிநயங்கள், இவற்றில் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது. இந்த வெவ்வேறு துணுக்குகளைச் சேர்த்துப் பார்த்தால், அவன் விரும்பியவள் எப்படிப் பட்டவளாக இருப்பாள் என்று ஒரு வேளை புலப்படக்கூடும். ஆனால், அவன் இதுவரை இந்த முயற்சியில் ஈடுபடவில்லை. தன்னுடைய நிச்சயமின்மை அவனுக்குப் பிடித்திருந்தது. அந்தந்தக் கணத்தில் ஆங்காங்கே எதிர்ப்படும் அழகுகளில் சுவாதீனமாக லயித்து ஈடுபட அனுமதித்த அவனுடைய சுயேச்சைத் தன்மை அவனுக்குப் பிடித்திருந்தது. ஒரு குறிப்பிட்ட பிம்பத்துக்கு அடிமையாகி தன் பார்வைக்கும் இலக்குகளுக்கும் எல்லைகள் வகுத்துவிட அவனுக்கு விருப்பமில்லை. 'காதலென்பது வாழ்நாள் முழுவதும் ஒருவன் ஈடுபடும் இடையறாத தேடல் ' என்னும் ரொமாண்டிக் ஐடியா அவனுக்குப் பிடித்திருந்தது. அவனுடைய பெற்றோருக்கு வேண்டுமானால் பாட்டுப்பாடத் தெரிந்த தோசை அரைக்கத் தெரிந்த எவளாவது ஒருத்தி வந்தால் போதுமானதாக இருக்கலாம். ஆனால் அவனுக்கு வாழ்க்கை வெறும் மோர்க்குழம்பும் தோசையும் அல்ல. சீமந்தமும் தாலாட்டும் அல்ல.... இதற்கெல்லாம் அப்பாற்பட்டது. மேம்பட்டது. இந்த மேம்பட்ட சிகரங்களை அவன் எட்டமுடியாமலேயே போகலாம் - அது வேறு விஷயம். ஆனால் இவற்றை எட்டக்கூடிய சுதந்திரத்தை அவன் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இது அவசியம்.

'மிஸ் நீலா ! என்னை நீங்கள் காதலிக்கும் பட்சத்தில், பாவம் , உங்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்! ' என்று அவன் நினைத்தான்.

மறு நாளிலிருந்து மறைத்துக் கொள்ளப் பட்ட ஆர்வத்துடனும், பரபரப்புடனும் அவர்கள் ஒருவரையொருவர் கவனிக்கத் தொடங்கினார்கள். கண்காணிக்கத் தொடங்கினார்கள். 'கேசவன் தன் அழகை ரசிக்கிறானோ ? ' என்று நீலா கவனித்தாள். 'இந்தப் பெண் என்னை பக்தியுடன் பார்க்கிறதோ ? ' என்று கேசவன் கவனித்தான். இருவருமே தான் கவனிப்பது எதிராளிக்குத் தெரியாது என்றும் , தம்மைப் பாதிக்காமல் தம்மைக் காப்பாற்றிக் கொண்டு தாம் மட்டும்

எதிராளியைப் பாதித்து விட்டதாகவும் நம்பினார்கள். இந்த நம்பிக்கையில் குதூகலமும் பெருமையும் அடைந்தார்கள். வெற்றியின் பெருமை, வெற்றியின் கர்வம். நீலாவிடம் எத்தனை விதமான நிறங்களில் , எத்தனை விதமான டிசைன்களில் புடவைகள் இருந்தன என்பதை கேசவன் முதன் முதலாகக் கண்டு பிடித்தான். அவள் காதுகளைத் தலை மயிருக்குள் ஒளித்துக் கொள்ளும் விதம் , வயிற்றுப் பாகம் மறையும் படியாகப் புடவைத்தலைப்பை இடுப்பில் நட்டுக் கொண்டு பிறகு தோலில் படர விட்டிருந்த நாசூக்கு., அவள் பேச்சிலிருந்த ஒரு லேசான மழலை. அவள் விழிகளிலும் பாவனைகளிலும் கரைந்து விடாமல் தேங்கிக் கிடந்த ஒரு குழந்தைத் தனமும் பேதமையும் - இவற்றையெல்லாம் அவன் நுணுக்கமாகக் கவனிக்கத் தொடங்கினான்.

தன் கவனத்தைக் கவர, நீலா ரொம்பவும் பிரயாசைப் படுகிறாள் என்று கேசவன் நினைத்தான். ஆனால், 'நானா கவனிப்பவன் ? ' என்று அவளைக் கவனித்துக் கொண்டே, அவன் நினைத்தான்.

'ஒரு நாளில் கிட்டத்தட்ட ஐம்பது அல்லது அறுபது தடவையாவது , கேசவன் என்பக்கம் பார்க்கிறான் ' என்று நீலா நினைத்தாள். தன் அழகுக்கும் கவர்ச்சிக்கும் ஓர் எளிய பக்தன் அளித்த சிறு காணிக்கையாக இதை அவள் திரஸ்கரிக்காமல் ஏற்றுக் கொண்டாள். 'தன்னுடைய கனவு இளைஞனை அவள் சந்திக்கும் போது, இந்தக் குட்டி பக்தனைப் பற்றி அவனிடம் சொல்லிச் சிரிப்பாள் அவள். கேசவன் அவளைப் பார்க்கப் பார்க்க, கனவு இளைஞனைப் பற்றிய அவளுடைய நம்பிக்கைகளும் ஆசைகளும் மேன் மேலும் உறுதிப் பட்டன. அவளுடைய அழகின் வல்லமையும் , சாத்தியக் கூறுகளும் தெளிவாயின. மறு முறை பார்ககத் தூண்டும் பிரமிக்க வைக்கும் உருவம் அவளுடையது. வடிவம் அவளுடையது. கனவு இளைஞன் அவளை நிச்சயம் தவற விடப் போவதில்லை -- எத்தகைய அதிர்ஷ்டசாலி அவன்!.

செக்ஷனில் இருந்த மற்றவர்கள் மீது அவளுக்கு இருந்த கோபம் கூட இப்போது குறையத் தொடங்கியது. ஏனென்றால் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போதெல்லாம் --- ஏதாவது ஒரு காரியமாக அவர்களை நோக்கி நடக்கும் போதெல்லாம் அவள் உண்மையில் கேசவனுக்காகத் தான் பேசினாள்; கேசவனுக்காகவே நடந்தாள். அவளைச் சுற்றியிருந்த உண்மைகள் திடாரென மறைந்து விட்டிருந்தன. கனவு இளைஞனுக்காகப் போற்றி வந்த அவளுடைய உலகம் ஆகி விட்டிருந்தன.

கேசவனுடைய கண்களிலும் உலகம் மாறித்தான் போயிருந்தது. திடாரென்று தன்னுடைய முக்கியத்துவத்தை பிரத்தியேகத் தன்மையை -- அவன் உணர்ந்தான். காலரியில் உட்கார்ந்து கைதட்டும் பெயரற்ற பலருள் ஒருவனாக -- ஒரு நடிகையின் பல உபாசகர்களுள் ஒருவனாக -- நடைபாதைகளில் மிகுந்து செல்லும் அழகிகளின் பார்வைத்தெளிப்புகளையும் வர்ணச் சிதறல்களையும் பொறுக்கிச் சேர்க்கும் பலவீனர்களுள் ஒருவனாக இருந்தவன், திடாரென்று இந்தக் கும்பல்களிலிருந்து தான் விலகி விட்டதை உணர்ந்தான். தன் ஒருவனுடைய ரசனைக்காகவும், பாராட்டுக்காகவும் மட்டுமே ஒரு அழகு தினந்தோறும் மலருவதை உணர்ந்தான். அவனுக்காகவே எழுப்பப் படும் கவிதை; வரையப் படும் ஓவியம்; இசைக்கப்

படும் இசை. -- அவனுக்காக மட்டுமே ஸ்கிரிப்ட் செய்யப்பட்டு, டைரக்ட் செய்யப்பட்டு, திரையிடப் படும் ஒரு படம் -- எவ்வளவு அபூர்வமான கர்வப் பட வேண்டிய விஷயம்.!

சில சமயங்களில் அவனுக்கு உற்சாகத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ளவே முடியாதென்று தோன்றியது. சாலையில் எதிர்ப்படும் முன் பின் அறியாதவர்களையெல்லாம் நிறுத்தி, விஷயத்தைச் சொல்ல வேண்டும் போல இருந்தது. அடுக்கு மாடிக் கட்டடத்தின் உச்சியில் போய் நின்று கொண்டு , மேகங்களிடம் தன் ரகசியத்தைப் பீற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அவன் தனியானவன்; வேறு பட்டவன்; வேறு யாருக்குமே கிடைக்காத இரு வாய்ப்பையும், ஒரு கௌரவத்தையும், அதன் மதிப்பு எப்படி இருந்தாலும் பெற்றவன்.

கேசவன் கவலைப் படத் தொடங்கினான்.

கவலைகளற்ற சுதந்திரப்பட்சி என்று மற்றவர்களால் கருதப்பட்டவன், திடாரென்று தன் விருப்பமின்றியே ஓர் அதிசயமான சிறையில் அடைபட்டுவிட்டதை உணர்ந்தான்; கரைகளற்ற நீர்ப்பரப்பில், அலைகளின் போக்குக்கேற்ப அலைந்து திரிந்த படகாக இருந்தவன் திடாரென்று ஒரு கரையருகில் ஒரு முனையில் தான் கட்டப்பட்டுவிட்டதை உணர்ந்தான். இந்த மாறுதலை அவனால் முழுமனதாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதே சமயத்தில் இதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவும் முடியவில்லை! ஒரு கோணத்திலிருந்து பார்க்கும்போது இது மகத்தான தோல்வியாகவும் வீழ்ச்சியாகவும் தோன்றியது. ஆனால்-

ஆனால், இந்தத் தோல்வியில் ஒரு கவர்ச்சியும் இருந்தது. ஒரு மர்மமான ஆழமும் அழகும் இருந்தன. அந்தத் தோல்வியை நேருக்குநேர் சந்திக்கவும் பயந்து கொண்டு வந்த வழியே திரும்பிச் செல்லவும் மனம் வராமல், அவன் குழம்பினான்; தவித்தான்.

ஒரு நாள் சினிமாத் தியேட்டரில் சினேகிதிகளுடன் வந்திருந்த நீலாவைப் பார்த்து அவன் சிரித்தான்; அவளும் சிரித்தாள். அவனுக்கு தைரியம் வந்தது. செக்ஷனில் சிரிப்புக்கான சந்தர்ப்பங்கள் வரும்போதெல்லாம் வேடிக்கைப்பேச்சுகளும் கலகலப்பும் ஏற்படும்போதெல்லாம் அவர்களுடைய பார்வைகள் ஒன்றையொன்று நாடின. அவர்களுடைய புன்னகைகள் மோதிக்கொண்டன. மின்சார அலை போல ஒன்று அவர்களிடையே எப்போதும் ஓடிக்கொண்டே இருந்தது. அவள் பார்வைக்கு ஒரு அர்த்தம்தான் இருக்க முடியும். அவள் புன்னகைக்கு ஒரு அர்த்தம்தான் இருக்கமுடியும். ஆனாலும் அவனால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. பிறகு, அவன் நினைத்தான்- இவள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்ட பிறகு, நான் ஏன் வீணாக யோசிக்கவேண்டும் ? எனக்கும் சேர்த்து இவள் முடிவு செய்ததாக இருக்கட்டும். இவளுக்கு நான் ஏன் ஏமாற்றத்தை அளிக்கவேண்டும் ? ஒரு பெண்ணின் மனத்திருப்தியை விட என் அழகின் தேடல் தானா பெரிது ? ஓர் உடைந்த இதயத்தின் பாவத்தை மனச்சாட்சியில் சுமந்து கொண்டு குற்றம் சாட்டும் இரு விழிகளை நினைவில் சுமந்து கொண்டு, எந்த அழகை என்னால் ரசிக்க முடியும் ? எதில்தான் முழு மனதாக லயித்து ஈடுபட முடியும் ? நான் நன்றாக மாட்டிக்கொண்டு விட்டேன். காலியாக நிர்மலமாக இருந்த என் மனத்தை ஒரு குறிப்பிட்ட பிம்பம் பூதாகாரமாக அடைத்துக் கொண்டு விட்டது- இனி செய்வதற்கு ஒன்று தான் இருக்கிறது -

ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது; கேசவன் முடிவுக்கு வந்துவிட்டான்.

ஒருநாள் மாலை நீலா ஆபீசைவிட்டுக் கிளம்பும்போது கேசவனும் கூடவே கிளம்பினான். அவள் முகம் சுளிக்காதது அவனுக்குத் தெம்பை அளித்தது.

'வீட்டுக்கா ? ' என்றான். அசட்டுக்கேள்விதான்.

'ஆமாம் '

'எங்கேயாவது போய் காபி சாப்பிடுவோமே ? '

அவள் இதை எதிர்ப்பார்க்கவில்லை என்று தெரிந்தது. முகத்தில் குப்பென்று நிறம் ஏறியது. சமாளித்துக்கொண்டு 'இல்லை; நான் வருவதற்கில்லை ' என்றாள்.

'ஏன் '

'ஒரு வேலை இருக்கிறது '

'நான் நம்பவில்லை '

அவள் பதில் பேசாமல் நடந்தாள். கேசவனுக்குத் தாளவில்லை. இவ்வளவு நாள் யோசித்து யோசித்து - சே! இதற்குத்தானா ?

'ப்ளீஸ்! ' என்று அவன் உணர்ச்சி வசப்பட்டவனாய் அவள் கையைப் பிடித்தான். அவ்வளவுதான். வெடுக்கென்ற உதறலுடன் தன் கையை விடுவித்துக் கொண்டு அவனை நோக்கி ஒரு முறை முறைத்துவிட்டு, அவள் சரசரவென்று வேகமாக நடந்தாள்.

கேசவன் அவள் நடந்து செல்வதைப் பார்த்தவாறு நின்றான்.

'சீ! என்ன துணிச்சல்! ' - பஸ் ஸ்டாண்டில் நிற்கும்போது, உடை மாற்றிக்கொண்டு கையில் பத்திரிக்கையுடன் அமரும்போது, அவளுக்கு கேசவன் மேல் கோபம் கோபமாக வந்தது. இடியட்! என்ன நினைத்துக்கொண்டிருக்கிறான் இவன்! எப்படிப்பட்டவளென்று நினைக்கிறான்

இவன் அவளை ? காபி சாப்பிட வேண்டுமாம், அதுவும் இவனுடன். என்ன ஆசை ? என்ன ... கொழுப்பு! கையை வேறு பிடித்து -

சே! நல்லதுக்குக் காலமில்லை. அவளைச் சுற்றிலும் இறுக்கமும் வறட்சியும் இல்லாமல் சற்றே சந்தோஷத் தென்றல் வீசட்டும் என்று - அழகின் ஒளிக்கற்றைகள் இருந்த இடங்களில் எல்லாம் பாயட்டும் என்று அவள் சுயநலமின்றிச் சிரித்துப் பேசினால், இப்படியா ஒருவன் தப்பர்த்தம் செய்து கொள்வான் ? முட்டாள்தனமாக நடந்து கொள்வான்!

தன் குட்டி பக்தனை அவள் சிறிதும் மன்னிக்கத் தயாராக இல்லை;

அவனுக்காகவென்று அவள் வகுத்திருந்த சில எல்லைகளை அவன் மீறிவிட்டதாக அவள் நினைத்தாள். நடை வாசலில் நின்று கொண்டிருக்க வேண்டியவன், கர்ப்பக்கிருகத்துக்குள் திபுதிபுவென்று நுழைந்திருக்கக்கூடாதென்று நினைத்தாள். பரிசுத்தமான மனசுடன் அவள் தன் ஜன்னல்களைத் திறந்து வைத்தாள் என்பதற்காக, அவன் உரிமையுடன் ஜன்னலைத் தாண்டி உட்புறம் குதிக்க முயற்சித்திருக்கக்கூடாதென்று நினைத்தாள். எல்லாமே கேசவனின் குற்றத்தையும் அவளுடைய குற்றமின்மையையும் ருசுப்படுத்தும், ஸ்தாபிக்கும், எண்ணங்கள்.

அவன் தான் குற்றவாளி; அவளுடைய நல்ல எண்ணங்களைத் தவறாக புரிந்து கொண்ட குற்றவாளி. இனி இவனிடம் பேசவே கூடாதென்று மறுநாள் ஆபீசுக்குக் கிளம்பும்போது அவள் முடிவு செய்தாள்.

அன்று கேசவன் ஆபீசுக்கு வரவில்லை

PRINTER FRIENDLY

EMAIL TO A FRIEND

Sunday June 18, 2000

## சிவப்பாக, உயரமாக, மீசை வச்சுக்காமல் - 3

**ஆதவன்**

'உம்! பச்சாத்தாபப் படுகிறானாக்கும்; அல்லது தன் காலி நாற்காலியின் மூலம் அதிருப்தியைத் தெரிவிக்கிறானாக்கும். என் அனுதாபத்தைப் பெற முயற்சிக்கிறானாக்கும்! ' என்று அவள்

அலட்சியமாக நினைத்தாள். அவனைப் பற்றி எதுவும் நினைக்காமல் அவனால் பாதிக்கப் படாமல் இயல்பாக இருக்க முயன்றாள். ஆனால் நினைவுகளை யாரால் கட்டுப் படுத்திக் கொள்ள முடியும் ? வேண்டும் வேண்டாம் என்று பாகு பாடு செய்து பொறுக்க முடியும் ? அவன் திசையில் எண்ணங்கள் பாய்வதை அவன் உருவம் மனதில் தோன்றித் தோன்றி மறைவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

மாலையில் வீட்டில் உட்கார்ந்து , கேசவனைத் தள்ளுபடி செய்யக் கூடிய காரணங்களை அவள் தேடிப் பார்த்தாள். செக்ஷனில் வேலை செய்யும் பலருள் ஒருவனாக அவனை அசட்டையாகக் கருதி வந்த தன் பழைய மன நிலையை மீண்டும் உருவாக்கிக் கொள்ள முயன்றாள் ஆனால், அதில் அவளால் வெற்றி பெற முடிய வில்லை. கேசவனை ஒரு தனி மனிதனாக குறிப்பிட்ட சில இயல்புகளும் ருசிகளும் போக்குகளும் உள்ளவனாக எல்லாவற்றுக்கும் மேலாக அவளிடம் சிரத்தை கொண்ட ஒருவனாக, பேச்சுக்கள், பார்வைகள் மூலமாக அவளுடைய மனம் ஒருவிதமாக உருவகப் படுத்தி வைத்திருந்தத்து. இந்த உருவகத்தை அவளால் சிதைக்கவோ அழிக்கவோ முடியவில்லை. முகமற்ற , பெயரற்ற ,உருவற்ற, ஜனத்திரளில் ஒருவனாக -- அவளை எந்த விதத்திலும் பாதிக்காதவனாக -- அவனை மீண்டும் தூக்கி எறிய முடியவில்லை.

'அவனும் இப்போது என்னைப் பற்றி என்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருப்பானோ ? ' இருக்கலாம் ; யார் கண்டது ? என்ன விசித்திரமான தப்ப முடியாத விஷயம் இது ? அவள் அனுமதியின்றி , அவளுக்குத் தெரியாமல் , இந்தக் கணத்தில் அவளை அறிந்த பலர் அவளைப் பற்றி பலவிதமாக நினைத்துக் கொண்டிருப்பார்கள். அந்த நினைவுகளைப் பற்றி அவளால் எதுவும் தெரிந்து கொள்ள முடியாது. அவற்றை ஒடுக்கவோ மாற்றவோ முடியாது; அவற்றிலிருந்து தன்னை மீட்டுக் கொள்ள முடியாது.

என்ன நினைத்துக் கொண்டிருப்பான் கேசவன் ? அவள் கர்வம் பிடித்தவள் என்றா ? இரக்கமற்றவள் என்றா ? எப்படியாவது நினைத்துக் கொள்ளட்டும் -- ஆனால் ஆனால் -- ஆனால் ஒரு வேளை அவன் ரொம்ப வருத்தப் படுகிறானோ ? தன் தவறுக்காகத் தன்னையே கடிந்து கொண்டு கழிவிரக்கத்தில் உழலுகிறானோ ? இந்தக் கற்பனை அவளுக்கு ஒரு பயத்தையும் சங்கடத்தையும் அளித்தது. ' யாரோ என்னைப் பற்றி ஏதோ நினைத்துக் கொண்டு அவஸ்தைப் பட்டால் அதற்கு நானா பொறுப்பாளி ? ' என்று சமாதானம் செய்து கொள்ள முயன்றாள். ரேடியோவில் கேட்ட காதல் பாடலிலும், பத்திரிகை விளம்பரத்தில் இருந்த இளைஞன் முகத்திலும் , தன் மனதை ஈடுபடுத்தி கற்பனைகளை திசை திருப்பி விட முயற்சித்தாள். ஆனால், திடாரென்று இவையெல்லாம் உயிரற்றதாக அர்த்தமற்றதாக் வெறும் போலியாக , அவளுக்குத் தோன்றின. உயிரும் இயக்கமும் உள்ள ஓர் உண்மையாக அவள் பார்த்திருந்த -- அவளுடன் பேசியிருந்த -- கேசவனைச் சுற்றியே மீண்டும் மீண்டும் இந்த மனம் --

மறு நாள் கேசவன் ஆபிசுக்கு வந்தான். ஆனால் அவன் கேசவனாக இல்லை. கலப்பாக இல்லை. சுற்றுமுற்றும் பார்க்காமல், சிரிக்காமல் காரியமே கண்ணாக இருந்தான்.

நீலா அவனுடைய மாறுதல்களைக் கவனித்தவளாய், ஆனால், அதைக் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாதவளாய் அமர்ந்திருந்தாள். கேசவன் வாய்ப்புக் கிடைக்கும் போது அவளிடம் ' ஐ யாம் சாரி ' என்று மன்னிப்புக் கேட்டுக்கொள்ளப் போகிறான் என்று அவள் எதிர்பார்த்தாள். . .ஆனால், கேசவன் ஒரு நாள் லீவில் தன்னைக் கடுமையாக ஆத்ம சோதனை செய்து கொண்டு , பெண்கள் , அவர்களுடைய பார்வைகள், சிரிப்புகள், இவற்றின் அர்த்தங்கள்

ஆகியவற்றிலெல்லாம் முற்றும் நம்பிக்கை இழந்த ஒரு விரக்தி நிலை அடைந்திருந்தான், என்பது அவளுக்குத் தெரியவில்லை.

அன்று லஞ்ச் டயத்திற்குப் பிறகு சில நிமிடங்களுக்குச் செக்ஷனில் அவளும் அவனும் மட்டும் தான் தனியாக இருந்தார்கள். அப்போது கேசவன் , தன்னிடம் பேசப் போகிறான் என்று அவள் எதிர் பார்த்தாள். ஆனால் அவன் பேசவில்லை. அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும் கூட இப்படிப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஆனால் , கேசவன் எந்த சந்தர்ப்பத்தையுமே உபயோகித்துக் கொள்ள வில்லை.

' ரொம்பக் கோபம் போலிருக்கு ! ' என்று அவள் நினைத்தாள்.

அவனுடைய விலகிய போக்கும் உஷ்ணமும் -- ஆபிஸ் வேலை விஷயமாக அவளிடம் பேச வேண்டி வரும் போது மிக மரியாதையுடன் . முகத்தைப் பார்க்காமல் பேசி விட்டு நகருதலும் அவளுக்கு ரசமாகவும் , வேடிக்கையாகவும் இருந்தன. அதே சமயத்தில் இந்தக் கோபத்தின் பின்னிருந்த ஏமாற்றத்தையும் வேதனையையும் ஊகித்துணரும் போது அவளுக்கு அவன் மேல் இரக்கமாகவும் இருந்தது. 'சுத்தப் பைத்தியம் ' என்று அவள் நினைத்தாள். அவள் நிலை அவனுக்கு ஏன் புரிய மாட்டேன் என்கிறது ? அவள் ஒரு பெண். -- விளைவுகளைப் பற்றி சுற்றியுள்ள சமூகத்தின் பார்வையையும் பேச்சுகளையும் பற்றி யோசிக்க வேண்டியவள். எவனோ கூப்பிட்டான் என்று உடனே காபி சாப்பிடப் போக இது என்ன சினிமாவா ? டிராமாவா ?

இப்படியாக, அவன் காப்பி சாப்பிடக் கூப்பிட்டதே தப்பு என்கிற ரீதியில் யோசித்துக் கொண்டிருந்தவள், அவன் அப்படிச் செய்தது சரியாக இருந்தாலும் கூடத் தான் ஏன் அதை ஏற்றுக் கொண்டிருக்க முடியாது ? என்று தனக்குத் தானே நிரூபித்துக் கொண்டு , தன் செய்கை சரிதானா என்று ஸ்தாபித்துக் கொள்ள முயன்றாள். இருந்தாலும் மனதின் அரிப்பையும் , குடைவையும் அவளால் தடுக்க இயல வில்லை. ஒரு வேளை அந்தச் சந்தர்ப்பத்தில் அவள் வேறு வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கலாமோ ? இன்னும் சிறிது பிரியமாக நடந்து கொண்டிருக்கலாமோ ? அவனைப் புண்படுத்தாமலும் அதே சமயத்தில் தன்னைப் பந்தப் படுத்திக் கொள்ளாமலும், சாதுரியமாக நிலைமையைச் சமாளித்திருக்கலாமோ ?

அவள் தான் இப்படியெல்லாம் ஏதேதோ யோசித்துக் கொண்டிருந்தாளே தவிர அவன் அவளைப் பற்றி கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. . . அவள் பக்கம் பார்ப்பதையே அவன் நிறுத்தி விட்டான். ஏன், சீட்டில் உட்காரும் நேரத்தையே அவன் கூடியவரை குறைத்துக் கொள்ளத் தொடங்கியிருந்தான். அவனுடைய அலட்சியம் அவளுடைய ராத்தூக்கத்தைக் கெடுத்து விடவில்லை. ஆனாலும் ஒரு சூனிய உணர்வு அவளை அவ்வப்போது பிடித்து உலுக்கத் தான் செய்தது. அவளுக்குள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த ஏதோ ஒரு பல்பு ஃபியூஸ் ஆனதைப் போல இருந்தது. அந்த பல்பு இல்லாமலும் , அவள் இயங்கக் கூடும் . இருந்தாலும் வித்தியாசம் இருக்கத் தான் செய்தது. குறை தெரியத்தான் செய்தது.

அழகு படுத்திக்கொள்வதிலும் , அலங்கரித்துக் கொள்வதிலும் முன் போல ஆர்வமும் உற்சாகமும் காட்ட அவளால் முடிய வில்லை. தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு முயற்சியாக அவை தோன்றின. கனவு இளைஞனை மண்டியிடச் செய்யும் தேஜஸ் வாய்ந்ததாகத் தோன்றிய தன் அழகின் மேல் முன் போல் அவளால் நம்பிக்கை வைக்க

முடியவில்லை,. அதன் கவர்ச்சியையும் வல்லமையையும் பற்றி தீர்மானமாகவும் இறுமாப்பாகவும் இருக்க முடிய வில்லை. எதை அஸ்திவாரமாகக் கொண்டு அவள் தடபுடலாக மாளிகை கட்டிக்னாளோ அந்த அஸ்திவாரமே இப்போது சந்தேகத்திற்குரியதாக மாறி விட்டிருந்தது. 'இவ்வளவு சீக்கிரம் புறக்கணிக்கக் கூடிய சக்தியா அவள் சக்தி ? பைத்தியம் பிடிக்கச் செய்யும் , நிரந்தரமான , விடுபடமுடியாத , போதையிலாழ்த்தும் அழகு இல்லையா அவளுடைய அழகு ? கேசவன் அவளைப் பார்த்து மயங்கியது கூடத் தற்செயலாக நிகழ்ந்தது தானோ ? அல்லது அவன் மயங்கியதாக நினைத்தது கூட அவள் பிரமை தானா ? தன்னை மறந்து ஒரு நிலையில் -- ஒரு திடார் உந்துதலில் -- அவன் அவளை நெருங்கி வர -, இவள் பைத்தியம் போல அந்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டாளா ? இனி இது போன்ற வாய்ப்புகள் அவள் வாழ்வில் வர நேருமோ, நேராதோ ? அப்பாவும் அம்மாவும் ஜோசியர்களும், தேர்ந்தெடுக்கும் யாரோ ஒரு -- என்ன பயங்கரம் ?

'நான் முட்டாள் படு முட்டாள் ' என்று அவள் தன்னைத் தானே திட்டிக் கொண்டாள். கேசவன் மீசை வைத்திருந்தான். அதனாலென்ன ? சுமாரான நிறம் தான். அதனாலென்ன ? அவன் கேசவன் -- அவளுக்குப் பரிச்சயமானவன். மோசமான டைப் என்று சொல்ல முடியாதவன்.

'உம்! இந்தப் பெண்கள் ! ' -- காலையில் பஸ்ஸில் ஆபிஸை நெருங்கிக் கொண்டிருந்த கேசவன் அனுபவபூர்வமாகவும், கரை கண்டவனாகவும், புன்னகை செய்து கொண்டான். ' இவர்களுக்கு கவனிக்கப் படவும் வேண்டும் கவனிக்கப் படவும் கூடாது. சலுகைகள் எடுத்துக் கொள்ளப்படவும் வேண்டும்; எடுத்துக் கொள்ளப் படவும் கூடாது. காற்றடிக்கவும் வேண்டும்; புடவை பறக்கவும் கூடாது. '

' இந்தப் பெண்களே ஸ்திர புத்தியற்றவர்கள். மோசக்காரிகள் -- பிச்சஸ் - இவர்களை நம்பவே கூடாது ' என்று நினைத்தவனாய் அவன் செக்ஷனுக்குள் நுழைந்தான். தண்டபாணி உரத்த குரலி சீனிவாசனிடம் ஏதோ உரக்க வாக்கு வாதம் செய்து கொண்டிருந்தார். கணபதி ராமன் தன் குறை எதையோ குப்பு சாமியிடம் சொல்லி அழுது கொண்டிருந்தார். நீலா . . .

கேசவன் அசட்டையாக அவள் பக்கம் பார்த்தான். திடுக்கிட்டான். அதே புடவை அணிந்திருந்தாள் அவள்., அன்று அவன் காப்பி சாப்பிடக் கூப்பிட்ட போது அணிந்திருந்த அதே புடவை. அவன் அவள் முகத்தைப் பார்த்தான். அவள் பார்வையில் கூத்தாடிய விஷமத்தையும் உல்லாசத்தையும் கவனித்தான். பிறகு, உதட்டைக் கடித்துக் கொண்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். இல்லை, மறுபடியும் ஏமாறத் தயாராய் இல்லை அவன்.

அட்டெண்டன்ஸ் மார்க் பண்ணி விட்டு அவன் தன் இடத்தில் போய் உட்கார்ந்தான். ஃபைல் ஒன்றைப் பிரித்தான். ,. ' கிளிங் . .கிளிங்.. ' என்ற வளையல் ஓசை -- அவன் நிமிரவில்லை. ' பெரிய மகாராணி ' என்று நினைத்தான். இவள் இஷ்டப் படி போடும் விதிகளின் படி நான் விளையாட வேண்டும் போலிருக்கிறது. அவள், அவன் கவனத்தைக் கவர முயற்சிப்பதும் , அவன் இதை மௌனமாக எதிர்ப்பதுமாக சில நிமிடங்கள் ஊர்ந்தன. திடார் என்று பியூன் பாராங்குசம் கையில் ஒரு காப்பித் தம்ளருடன் செக்ஷனுக்குள் நுழைந்தான். ஒரு தம்ளரை நீலாவின் மேஜை மேல் வைத்தான். இன்னொன்றை கேசவன் மேஜை மீது வைக்குமாறு அவள் ஜாடை காட்டவும், பாராங்குசம் அப்படியே செய்தான்.

கேசவன் நிமிர்ந்தான் -- 'என்னப்பா இது ? '

' நான் தான் வாங்கி வரச் சொன்னேன் ' என்றாள் நீலா. புன்னகையுடன் , ' யூ லைக் காபி, நோ ? '

கேசவன் திணறிப் போனான் . இப்படி ஒரு சந்தர்ப்பத்தை அவன் எதிர் பார்க்க வில்லை. இப்படி நடந்தால் என்ன செய்ய வேண்டும் என்று கணக்குப் போட்டிருக்கவில்லை. உஷ்ணமாக ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது.

' காப்பி சாப்பிடுங்க சார். ஆறிப் போயிடும் ' என்றான் பராங்குசம்.

அவன் குடிக்கப் போவதை எதிர் பார்த்து நீலா தம்ளரைக் கையில் எடுத்து அவனுடன் சேர்ந்து குடிப்பதற்காகக் காத்திருந்தாள். அவள் விழிகளிலிருந்த நிச்சயமும் நம்பிக்கையும்! கேசவன் தான் தோற்று விட்டதை உணர்ந்தான். காப்பியை அருந்தத் தொடங்கினான். அவளிடம் ஏதேதோ கோபப் பட வேண்டும் விஷயங்களைத் தெளிவு படுத்த வேண்டும் என்று அவன் விஸ்தாரமாக யோசித்து வைத்திருந்தான். ஆனால் இப்போது எல்லாமே அநாவசியமானதாக, அர்த்தமற்றதாகத் தோன்றின. அவள் அருகில் சுமுகமான நிலையில் இருப்பதே போதும் என்று தோன்றியது.

'காப்பிக்காக தாங்ஸ் ' என்றான் அவன்.

'குடித்ததற்காக தாங்க்ஸ் ' என்றாள் அவள்.அதற்கு மேலும் ஏதாவது சொல்ல வேண்டுமென்று துடித்தவளாய் , ஆனால், தவறாக எதையும் சொல்லி விடக் கூடாதே என்று தயங்கியவளாய் அவள் ஒரு புன்னகை மட்டும் செய்தாள். அவனுக்கும் பதிலுக்குப் புன்னகை செய்தான்.

ஒருவரையொருவர் ஜெயிக்க நினைத்தார்கள். ஒருவரிடம் ஒருவர் தோற்றுப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.

(முற்றும்)

# நான் இருக்கிறேன்

**ஜெயகாந்தன்**

அந்த சத்திரத்தின் வாசற்கதவுகள் சாத்தி, பூட்டப்பட்டிருக்கும்; பூட்டின்மீது ஒரு தலைமுறைக் காலத்துத் துரு ஏறி இருக்கிறது. கதவின் இடைவெளி வழியாகப் பார்த்தால் உள் சுவர்களைக் கிழித்துக்கொண்டு கம்பீரமாய் வளர்ந்துள்ள அரசஞ்செடிகளும் காடாய் மண்டிக்கிடக்கும் எருக்கம் புதர்களும் தெரியும். சத்திரத்துக்கு எதிரே அதாவது சாலையின் மறுபுறத்தில் நான்கு புறமும் படித்துறையுள்ள ஆழமில்லாத குளம்; குளத்திற்கு அப்பாலும், குளத்தைச் சுற்றிலும் செழிப்பான நஞ்சை நிலப்பகுதி, வரப்பினூடே நடந்து ஏறினால், சற்றுத் தூரத்தில் ரயில்வே

லைன் மேட்டுப் பகுதி. ரயில்வே லைனுக்கு மறுபுறம் - 'இந்தப் பக்கம் செழித்துத் தலையாட்டிக் கொண்டிருக்கும் பயிர்களை வளர்த்ததன் பெருமை என்னுடையதுதான் ' என்று அலையடித்துச் சிலு சிலுக்கும் ஏரி நீர்ப்பரப்பு கண்ணுக்கெட்டிய தூரம் பரந்து கிடக்கிறது.

அதற்கப்புறம் ஒன்றுமில்லை; வெறும் தண்ணீர்தான்; தண்ணீர் பரப்பின் கடைக்கோடியில் வானம்தான் தண்ணீரும் வானமும் தொட்டுக்கொண்டிருக்கின்ற இடத்தில் நிலவின் பெருவட்டம் மங்கிய ஒளியை ஏரிநீரில் கரைத்து மிதந்து கொண்டிருக்கிறது...நிலவு மேலே ஏற ஏற அதன் உருவம் குறுகிச் சிறுத்தது; ஒளி பெருகிப் பிரகாசித்தது. ஒரு கோடியில் எழுந்து, ரயில்வே லைன் மேட்டின் மேலேறிய நிலவு வீசிய வெளிச்சம், மறுகோடியில், சத்திரத்துத் திண்ணையில் உட்கார்ந்து உணவருந்திக்கொண்டிருந்த அந்த வியாதிக்காரப் பிச்சைக்காரனின் புத்தம் புதிய தகரக் குவளையின் மீது பட்டுப் பளபளக்க, அதன் பிரதிபிம்பம் அவன் முகத்தில் விழுந்தது.

திண்ணையில் அவனைத் தவிர யாரும் இல்லை. அவன் அந்தத் தனிமையிலும், தகரக் குவளையில் ஊறிக் கிடந்த ரசத்து வண்டல் சோற்றிலும் லயித்துத் தன்னை மறந்த மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டே ஒவ்வொரு கவளமாய்ச் சாப்பிட்டான். அவன் பார்வை நிமிர்ந்து நிலவில் பதிந்திருந்தது. வாய் நிறையச் சோறுடன் அவன் பாடுவது தெளிவாய் ஒளிக்கவில்லை. கேட்கத்தான் அங்கு வேறு யாரிருக்கிறார்கள் '

தகரக் குவளையை வழித்து நக்கிச் சுற்றிலும் இறைந்து கிடந்த பருக்கைகளை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி விரலோடு சேர்த்து உறிஞ்சிச் சாப்பிட்டானதும் தனது--விரல்கள் குறைபட்ட--இரண்டு கைகளாலும் தகரக் குவளையை இடுக்கி எடுத்துக் கொண்டு சாலையின் குறுக்காய், குளத்தை நோக்கி நடந்தான். கால்விரல்களுக்குப் பிடிப்பு இல்லாததால் குதிகால்களை அழுந்த ஊன்றித் தாங்கி தாங்கித்தான் அவனால் நடக்க முடியும் -- குளத்தின் மேல்படியில் காலிலிருந்த கான்வாஸ்ஷூஉஸ் நனையாமல் நின்றுகொண்டு, தகரக் குவளையை அலம்பி, ஒரு குவளைத் தண்ணீரைக் குடித்தான். தண்ணீரை 'மடக் மடக் ' கென்று குடிக்கும்போது அவசரத்தில் குவளைக்கும் வாய்க்குமிடையே இரண்டு பக்கத்திலும் தண்ணீர் வழிந்து அவன்மேலிருந்த கோட்டின் காலரை நனைக்கவே அவசர அவசரமாகத் தண்ணீரைத் தட்டிக்கொண்டே கோட்டின் மார்புப் பையிலிருந்த பீடியையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்து வேறு பைக்கு மாற்றிக்கொண்டான். மேலேறி வந்த பிறகு தகரக் குவளையைக் கீழே வைத்துவிட்டு, நின்று ஒரு பீடியைப் பற்றவைத்துக் கொண்டான். புகையோடு சேர்த்துத் திருப்தியுடன் ஏப்பம் விட்டவாறு அவன் முனகிக் கொண்டான்.

'நல்லாத்தான் இருக்கு... ' என்று வாய்விட்டு முனகிக் கொள்ளும்போதே மனசில் '--என்ன நல்லாருக்கு ? ' என்ற கேள்வியும் பிறந்தது.

'எல்லாம்தான். தோ... இந்த நெலா, இந்தக் குளம்... அடிக்கிற காத்து, குடிக்கிற தண்ணி...பசி,சோறு, தூக்கம்-எல்லாந்தான். வாழ்க்கை ரொம்ப நல்லா இருக்கு... பீடிச் சொகம் ஒண்ணு போதுமே ' ' என்று நெருப்புகனியக் கனியப் புகையை வாய் நிறைய இழுத்து ஊதினான். சிறிது நேரம் நின்று ஏதோ யோசனைக்குப்பின் சத்திரத்துத் திண்ணைக்கு வந்து ஒரு மூலையில் தகரக் குவளையைக் கவிழ்த்து வைத்து விட்டு, சுவரோரமாகக் கிடந்த கந்தல் துணியால் தரையைத் தட்டிவிட்டு உட்கார்ந்தான்.

'உலகம் இவ்வளவு அழகாயிருக்கு. இதைப் பார்க்கற எம் மனசு சந்தோஷப்படுது. ஆமா, எல்லாப்பொருளும் பார்த்தவங்க மனசை சந்தோஷப்பட வைக்கும்போது, நான்...நான்

என்னைப் பார்த்தவுடனே ஒவ்வொருத்தர் முகத்திலேயும் ஏற்படற மாற்றம் இருக்கே, வியாதியாலே மரத்துப்போன என் உடம்புக்குத் தெரியாத வேதனை, பாவம் அவங்க மனசுக்குத் தெரியுது. அன்னக்கி ஒரு நாளு, ஒரு வீட்டுக்கு முன்னாடி போயி

அம்மா தாயே ' பசிக்குது 'ன்னு நின்னப்ப, சாப்பிட்டுட்டு எச்சில் இலை கொண்டுவந்து வெளியே போட்ட ஒரு பொண்ணு என்னைப் பாத்துட்டு வாந்திவர்ரமாதிரி குமட்டிக்கிட்டு உள்ளே ஓடினப்புறம், ஒரு ஆளு வந்து எட்டிப் பார்த்துட்டு சொன்னானே... 'அம்மா, வெளியே ஒரு தரித்திரம்வந்து நிக்குது; ஏதாவது போட்டு அனுப்பு. இவனெல்லாம் ஏன் தான் உசிரை வெச்சுக்கிட்டு இருக்கானோ இந்தத் தீராத நோயோடே ' ன்னு...

'அந்த வார்த்தையைக் கேட்டவுடனே அங்கே நிக்க முடியாமத் திரும்பினப்போ, 'இந்தப்பா பரதேசி ' ன்னு கூப்பிட்ட அந்தக் குரல் இருக்கே, அதிலே இருந்த ஆறுதல்தான் உலகத்திலே வாழணும்னு ஆசை குடுத்திடிச்சி... ராமலிங்கசாமி மாதிரி காதோரத்திலே முக்காட்டுத் துணியைச்செருகிக்கிட்டு கையிலே சோத்தோட எதிரே ' என் பையன் கொஞ்சம் வாய்த்துடுக்கு...சாகறதும் இருக்கறதும் நம்ம கையிலா இருக்கு ' ன்னு சொல்லிக்கிட்டே கொவளையிலே சோத்தைப் போட்டாங்க.. நான் அந்த அம்மா முகத்தையே பார்த்துக்கிட்டு நின்னேன்.

தன் மகனைப் பார்த்து, 'நீ சாகக்கூடாதா ' ன்னு யாரோ கேட்டுட்ட மாதிரி அவங்க கண்ணில தண்ணி கொட்டிக்கிட்டே இருந்தது... '

--அன்றைக்குப் பிறகு அவன் பகலில் பிச்சைக்குப் போவதில்லை. இருட்டிய பிறகு யார் கண்ணிலும் படாமல் தலையில் முக்காடிட்டுக்கொண்டுதான் போவான். மூன்று வேளைக்கும் முதல் நாளிரவு ஒருவேளை எடுத்த பிச்சைதான் சில நாட்களில் அதுவே அதிகமாகி அடுத்த நாளைக்கும் இருந்துவிடுவதும் உண்டு.

தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் நிறைவாக இருந்த வயிற்றைத் தடவி விட்டுக்கொண்டான். 'சாப்பாடு கொஞ்சம் அதிகம்தான்... ' என்று மறுபடியும் ஒரு ஏப்பம் விட்டவாறு, 'முருகா ' என்று எழுந்தான். தரையில் விரித்த கந்தலை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டினான். மூலையில் இருந்த தடியையும் கையில் எடுத்துக்கொண்டு ஏரிக் கரையை நோக்கி நடந்தான்.

'ம்...உடம்பிலே வியாதி இருந்தா என்ன ? உசிரு இருக்கறது நல்லாத்தான் இருக்கு. நாக்குக்கு ருசியா திங்கிற சொகம்; கண்ணுக்குக் குளிர்ச்சியா பாக்கற சொகம்; காதுக்கு எதமா கேட்கற சொகம்...வியாதி இருந்தால் இதெல்லாம் கெட்டுப்பூடுதா ?... '

ஏரிக்கரையின் ஓரமாக ரயில்வே லைன் மேட்டுச் சரிவில் தடிக்கம்பை ஊன்றியவாறு உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் பீடிப் புகையைக் காற்றில் ஊதிவிட்டான்...

'அப்பாடா ' சாப்பிட்டவுடனே வயித்திலே என்னமோ ஒரு வலி ' திங்கறதிலே ஒண்ணும் சொகமில்லே: ஆனா, தின்னாத்தான் சொகம். ஒடம்பிலே சேத்துக்கறதா சொகம் ? உடம்பிலேருந்து எல்லாத்தையும் போக்கிக்கறதிலேதான் சொகம். உடம்பையே போக்கிக்கிட்டா ?... சொகந்தான் ' ஆனா, உடம்பிலே இருக்கிற சொரணையே போயிட்டா, சொகம் ஏது ? '

இப்பொழுது அவன் முழங்காலளவு தண்ணீரில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான். நிலவும் நட்சத்திரங்களும் அவன் கண்களுக்கும் அழகாகத்தான் தெரிந்தன.

'ம்....தோ... அதான் சப்தரிஸி மண்டலம். அந்த நாலு நச்சத்திரம் சதுரமா இருக்கு; அதுக்கு ஓரமா வாலு மாதிரி மூணு நீட்டிக்கிட்டு இருக்கே; அந்த மூணுலே நடுவாலே இருக்குதே, அதுக்குத் தள்ளி மங்கலா.. அதான் அருந்ததி நச்சத்திரம்...சர்த்தான், நமக்கு ஆயுசு கெட்டி ' அருந்ததி தெரியுதே... அம்மாஞ் சுளுவா எல்லாருக்கும் தெரியுமா அது ? லேசா எழுதிக் கலைச்சிட்ட மாதிரி... புள்ளி மானத்திலே இருக்கா, கண்ணுலே இருக்கான்னு கண்ணைக் கசக்கிட்டு எங்கியுமில்லேன்னு சொல்லிடுவாங்க பலபேரு... அருந்ததியைப் பாத்தவனுக்கு ஆறுமாசத்துக்குச் சாவு இல்லேம்பாங்க... '

நிலவொளியில் பளபளத்துக்கொண்டிருக்கும் ஏரி நீரில் புரண்டு எழுந்து குளுமை பெற்றுவரும் தென்றல் காற்று அந்த வியாதிக்காரனின் உடலையும் தழுவத்தான் செய்தது. நீரின் அலைகள், சின்னஞ் சிறு கால்கள் சலங்கை அணிந்து சதிராய் நடந்து வருவதுபோல் தரையில் மோதி மோதித் தளதளக்கும் இனிய நாதத்தை அவன் செவிகளும் கேட்டன. கரையோரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த காட்டுப் பூக்களின் நெடிமிக்க போதை மணம் அவனது நாசியையும் துளைக்கத்தான் செய்தது... அவன் வாழ ஆசைப்படுவதில் என்ன தவறு ?

வெகு நேரத்திற்குப் பிறகு தண்ணீரிலிருந்து கரையேறி வந்து, அங்கு கழற்றிப் போட்டிருந்த கான்வாஸ் ஷஉஸை எடுத்து குனிந்து நின்று காலில் அணிந்துகொண்டான்; அப்படியே அவன் தலை நிமிரும்போது...எதிரே...

நீண்டுசெல்லும் இருப்புப் பாதையில் வளைந்து திரும்பும் அந்தக் கண்ணுக்கெட்டிய எல்லையில் வெளிச்சம் தெரிந்தது...ஒரு துண்டு வெளிச்சம்தான். அந்த ஒளிக்கீற்றின் அசைவால் தரையில்செல்லும் இருப்புப்பாதையிலும், வானில் செல்லும் தந்திக் கம்பிகளிலும் ஒரு ஜொலிப்புத் துண்டம், விட்டு விட்டுத் தாவிச் செல்லுவது போலிருந்தது. தூரத்தில் ரயில் வருகின்ற ஓசை லேசாகக் கேட்டது.

'அடேயப்பா ' மெயிலு வரானோ ? மணி பன்னனெண்டா ஆயிடுச்சி ' ' என்று தண்டவாளத்தைக் கடப்பதற்காகக் கைத்தடியைச் சரிவில் ஊன்றித் தட்டுத் தடுமாறி ரயில்வே லைன் மேட்டின் மீது ஏறும்போது தூரத்தில்...

நீண்டு செல்லும் இருப்புப் பாதையின் வளைந்து திரும்பும் கண்ணுக்கெட்டிய எல்லையில் இரண்டடி உயரத்திற்கு, வெள்ளையாய் அசைகின்ற உருவம்...ஏதாவது மிருகமா ? அல்லது...

கால்களை மண்டியிட்டு தரையில் ஊர்ந்து வந்த அந்த மனித உருவம், ரயில்வேலைன் மீது ஏறியதும் எழுந்து நின்றது. சுற்றிலும் ஒருமுறை பார்த்து, தன் பின்னால் பிச்சைக்காரன் வரும் திசையைப் பார்க்கத் திரும்பியபோது அதற்குள் நிற்க முடியாமல் கால்கள் நடுங்க, மெல்லக் கைகளைத் தரையில் ஊன்றித் தண்டவாளத்தின்மீது உட்கார்ந்துகொண்டது. பிறகு உறுதியுடன் இரண்டு தண்டவாளங்களுக்கும் குறுக்காக விறைத்து நீட்டிப் படுத்துக்கொண்டது.

'அடச்சே, மனுசப்பயதான் டோய் ' உசிரை வெறுத்துட்டான் போல... ஐயையோ ' உங்களுக்கு ஏண்டா புத்தி இப்படி போவுது ? வெளிச்சம் வேகமா வருதே ' ' என்று பதறியவாறு, விரல்களில்லாத பாதங்களுக்குப்பாதுகாப்பாய் இருந்த கான்வாஸ் ஷஉஸ் தேயத் தேய

இழுத்தவாறு தாவித் தாவி ஓடிவந்த பிச்சைக்காரனின் செவிகளில் தூரத்து ரயில் சத்தம் பேரோசையாகக் கேட்டது.

ரயிலின் ஓசை சமீபித்துவிட்டது. பிச்சைக்காரன் ஓடி வந்த வேகத்தில், கண்களை இறுக மூடித் தண்டவாளத்தின் குறுக்காக விறைத்து நீட்டிக் கிடந்தவனின் விலாவுக் கடியில் கைத்தடியைக் கொடுத்து, மயானத்தில் பிணத்தைப் புரட்டுவது போல் நெம்பித் தள்ளினான். அவனைத் தள்ளிய வேகத்தில், வியாதிக்காரன் இரண்டு உள்ளங் கைகளாலும் பற்றிப் பிடித்திருந்த கைத்தடி எகிறி விழுந்தது. தண்டவாளத்திலிருந்து உருண்டு எழுந்த அந்த இளைஞன் ஒன்றும் புரியாமல் எதிரிலிருப்பவனை வெறித்து விழித்தான். மறுபடியும் தன்னைத் தள்ளிவிட்டு அவன் ரயிலின் முன்னே போய் விழுந்துவிடுவானோ என்ற பயத்துடன் தனது கைகள் இரண்டையும் அகல் விரித்துக்கொண்டு அவன் மீது பாய்வதுபோல் நின்று, 'வேணாம் ஐயா, வேணாம் ' உசிரு போனா வராது... ' என்று கெஞ்சினான் வியாதிக்காரன். அவன் முன்னே இரண்டு கால்களும் வெடவெடக்க உடலே நடுங்க நின்றிருந்தான் அந்த இளைஞன்.

அப்பொழுது 'ஹோ 'வென்ற பேரிரைச்சலோடு வந்த மெயில்வண்டி, அந்த இருவரின் மீது தன் நிழலை ஏற்றி இழுத்தவாறு கடகடத்து ஓடியது. ரயிலின் பேரோசை அருகே அதிர்ந்து நகரும்வரை மௌனமாய் நின்றிருந்த இருவரும், ரயில் அவர்களை கடந்து போனபின் அதன் பின்புறத்தைப் பார்த்தனர். செக்கச் சிவந்த ஒற்றை விளக்கு ஓடி ஓடித் தூரத்தில் மறைந்தது. நின்றிருந்த இளைஞன் கால்கள் நிலைக்காமல் உட்கார்ந்துக்கொண்டான். வியாதிக்காரன் கையிலிருந்து எகிறிப் போன கைத்தடியைத் தேடி எடுத்துக் கொண்டு வந்தான். 'யோவ் ' உன்னைச் சொல்லி குத்தமில்லை ஐயா...இந்த எடத்து ராசி அப்படி ' ஆமா, இந்த எடத்துக்கு ஒரு காவு வேணுமினு இருக்கு. ஒண்ணு ரெண்டு உன்னோட மூணு ஆச்சு, நாளைக்கிப் பொழுது விடியட்டும்; ரெண்டு எலுமிச்சம் பழத்தையாவது வாங்கி வெக்கணும். முந்தாநாளு அப்படித்தான்--ஏரிக் கரையிலே யாரோ ஒரு அம்மாவும் ஐயாவும் கொழந்தையை விட்டுட்டு கட்டுச்சோத்தை அவுத்து வெச்சிச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க... அதுக்கென்னா தெரியும் -- பச்சைபுள்ளை ' நடந்து நடந்து வந்து தண்டவாளத்திலே ஏறிட்டுது...இந்த இடம்தான். ரயிலு வார நேரம்...அப்புறம், நான் பாத்துட்டேன்...வேற யாரையுங்காணோம். சர்த்தான், ஆபத்துக்குப் பாவமில்லேன்னு தொட்டுத் தூக்கிட்டேன்... ' என்று சொல்லிவிட்டு ஒரு வநாடி மௌனமாகி நின்றான். பிறகு எதையோ நினைத்துப் பெருமூச்சுடன், ம்.....இருக்காதா...பெத்தவங்களுக்குத்தான் தெரியும் புள்ளை அருமை ' ' என்று தன் நினைவுக்கு அவனே சமாதானம் சொல்லிக்கொண்டு தொடர்ந்தான்; 'எதுக்குச் சொல்ல வந்தேன்னா, இந்த இடத்து ராசி அப்படி இன்னக்கிக் காத்தாலே கூட ஒரு எருமை மாடு... ஆபத்துன்னு வந்தா மனுசனுக்கே புத்தி மாறிப்பூடுது. எருமை என்னா பண்ணும் ? கூடுஸஉ வண்டி வந்துட்டான். இஞ்சினுக்காரன் ஊதறான்...ஊதறான்...இது என்னடான்னா, லைனைவுட்டு நவுறாம, நேரா ஓடிக்கினே இருக்குது. அவன் வந்த வேகத்திலே பிரேக் போட்டாப் புடிக்கிதா, என்னா எழவு ?...ரயிலும் ஓடியாருது, எருமையும் ஓடுது. நானு ஒரு பக்கத்திலே ஓடி, கல்லுங்களை எடுத்து அடிச்சிக்கினே இருக்கேன். அப்புறம், சும்மா ஒரு மயிரிழையிலே தப்பிச்சிதுன்னு வெச்சிக்கியேன்... ' என்று அந்த இடத்தின் ராசியை விவரித்தான் வியாதிக்காரன்.

அந்த இளைஞன் தலையைக் குனிந்து மௌனமாய் உட்கார்ந்திருந்தான். வியாதிக்காரன் ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். 'நா ' ஒருத்தன் இந்தப் பக்கந்தானே சுத்திக்கிட்டிருக்கேன் ' இப்ப என்னடான்னா, ஏதாவது ஆடு கீடு வந்து நிக்குதோன்னு ஓடியாந்தேன்...நல்லவேளை; ஒரு மனுஷனைச் சாவுலேருந்து தடுத்தாச்சி...ம்...நாம்பளா தடுக்கறோம் ?...ஒனக்கு இன்னம் ஆயுசு இருக்கு...என்னமோ, தடுக்கணும்னு இருக்கு,

தடுத்தாச்சி...இல்லாட்டி, மனுசன் தடுத்தா வர்ர சாவு நின்னுடப்போவுது ? ' என்று வாயில் புகையும் பீடியுடன் தோளில் கிடந்த துண்டை எடுத்துத் தலைப்பாகையைச் சுற்றிக்கொண்டான். பிறகு, மண்ணில் தலைகுனிந்தவாறு காலை மடக்கிப்போட்டு உட்கார்ந்திருந்த அந்த இளைஞனை மௌனமாக உற்றுப் பார்த்தான். அவன் அழகாக இருந்தான்; நல்ல நிறம். தலைமயிர் நிலா வெளிச்சத்தில் கருகருவெனப் பளபளத்தது. வெள்ளை ஷர்ட்; எட்டுமுழ வேட்டி உடுத்தியிருந்தான். அவன் தன்னைப் போல் பரம ஏழையோ, பிச்சைக்காரனோ, வியாதிக்காரனோ அல்லவென்று தோன்றியது. 'வறுமையோ பட்டினியின் கொடுமையோ அந்த இளைஞனிடம் தெரியவில்லை. பின் எதற்காகத் தற்கொலை செய்து கொள்ள வந்தான் ? ' என்று தெரிந்துக்கொள்ளத் துடித்தது வியாதிக்காரனுக்கு.

'சர்த்தான், எந்திரிச்சி வாய்யா ' தோ...அங்கே சத்தரத்துத் திண்ணையிலே போயிக் குந்துவோம்...இந்தச் சத்தரம் இருக்கே... ' என்று பேசிக்கொண்டே நடந்து திரும்பிப் பார்த்த பிச்சைக்காரன், அவன் இன்னும் எழுந்திருக்காமல் தூரத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். 'என்னாயா, குந்திக்கினே இருக்கியே ? இனிமே அடுத்த ரயிலு காத்தாலே ஆறு மணிக்கு வடக்கே போற பார்சலுதான்; வா போவோம் ஒலகத்துலே மனுசன்னு பொறந்துட்டா கஸ்டமும் இருக்கும் சொகமும் இருக்கும். கஸ்டத்துக்குப் பயந்து செத்துபூட்டா, சொகத்தை அனுபவிக்கிறது யாரு ? கஸ்டத்தைப் பார்த்து சிரிக்கணுமய்யா. ஏன்னா, கஸ்டம் வருதுன்னா பின்னாடிச் சொகம் காத்துக்கிட்டு இருக்குதுன்னு அர்த்தம்...ம், எழுந்திரு, போலாம்... ' என்று உற்சாகமாகப் பேசும் பிச்சைக்காரனை நிமிர்ந்து பார்த்துக் கலங்குகின்ற கண்களோடு முகத்தில் பரிதாபகரமான புன்சிரிப்போடு அந்த இளைஞன் எழுந்திருப்பதற்கு முன்னால் உதவிக்குக் கை நீட்டினான்.

'தெய்வமே '... இவன் கையை புடிச்சி நான் தூக்கறதாவது ? ' என்று விலகிக்கொண்டான் பிச்சைக்காரன். அந்த இளைஞன் தன் முயற்சியால் கைகளை ஊன்றி ஒருவாறு எழுந்து நின்றான். பிறகு நிதானித்து, காலைப் பதனமாக ஊன்றி மறு காலை உயர்த்தும்போது தடுமாறி விழ இருந்தவன், பிச்சைக்காரனின் தோள்களைப் பிடித்துக்கொண்டு நின்றான். அவன் பிடித்த வேகத்தில் நிலைகுலைந்த பிச்சைக்காரன் சமாளித்தவாறு, அப்பொழுதுதான் அந்த இளைஞனின் கால்களைப் பார்த்தான். அவை பார்ப்பதற்கு ஒழுங்காக இருப்பன போன்று தோன்றின. என்றாலும் கணுக்காலில், தொடைகள் சேர்கின்ற இடம் முழுதும் -- முழங்கால் மூட்டுக்கள் உறுதியற்று நடுங்கிக் கொண்டிருந்தன. முழங்காலுக்கு கீழே நான்கு புறமும் மடங்கும் தன்மையுடன் கால்கள் தொளதொளத்துச் சூம்பிக் கிடந்தன.

சற்று நேரத்துக்குமுன் தூரத்துப் பார்வைக்கு இரண்டடி உருவமாய்க் குறுகித் தெரிந்த அந்த உருவம் நினைவுக்கு வந்தது பிச்சைக்காரனுக்கு. அந்த இளைஞன் நடக்க முடியாமல் மண்டியிட்டுத் தவழ்ந்து வந்திருக்கிறான் என்பதை யூகித்து, 'இந்தாய்யா ' இந்த கம்பை வச்சிக்கிட்டு நடக்கிறியா ? ' என்று கைத்தடியைக் கொடுத்தான்.

'ஊஹஉம், முடியாது. இப்பிடியே வர்ரேன்...நீ நடந்தா நானும் வருவேன்... ' என்று அவன் தோள்களை இறுகப் பற்றியவாறு கூறினான் நொண்டி.

வியாதிக்காரன் லேசாகச் சிரித்தான். 'கம்பு இல்லாம நானும் நடக்கமுடியாது...இருந்தாலும் சமாளிச்சிக்கிடலாம்னுதான் குடுத்தேன்...கையிலே கம்பு இருந்தா உன்னைத் தூக்கிக்கிட்டுகூட நடப்பேன்...வா போவோம் ' என்று கைத்தடியைப் பூமியில் உறுதியாய் ஊன்றித் தாங்கித் தாங்கி நடந்த வியாதிக்காரனின் தோளில் தொங்குவதைப்போல் பிடித்துக்கொண்டு ஊனக் கால்களைத் தத்தித் தத்தி இழுத்தவாறு நகர்ந்தான் நொண்டி.

'ஐயா... '

'ம்.... '

'ரொம்பப் பாரமா இருக்கேனா ?....உம்....உம்...பார்த்து.... '

'அதெல்லாம் ஒண்ணுமில்லே....பயப்படாம வா... '

'இப்பிடி எல்லாருக்கும் பாரமா இருக்கப் பிடிக்காமத்தான்...பிடிக்காமத்தான்... ' என்று விம்மினான் நொண்டி.

---உசிரையே விட்டுடலாம்னு பாத்தியா ? ஏய்யா எப்பப்பார்த்தாலும் உன்னைப் பத்தியே உனக்கு நெனப்பு ?... '

'என்னாலே எல்லாருக்கும் கஷ்டம்தான்... '

அவர்கள் இருவரும் தட்டுத் தடுமாறிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

நொண்டியும் வியாதிக்காரனும் நிலா வெளிச்சம் இறங்கிக் கொண்டிருக்கும் திண்ணையில் படுத்திருந்தனர். வியாதிக்காரன் பாதிபடுத்தும் பாதி படுக்காமலும் தூணில் சாய்ந்து கால்களை நீட்டிக்கொண்டு பீடி புகைத்துக்கொண்டிருந்தான்..

'பீடி குடிக்கிறியா ஐயா ? '

'வேண்டாம்; பழக்கமில்லை... ' என்று குப்புறப் படுத்திருந்த நொண்டி பதில் சொன்னான். திடாரென்று குப்புறக் கிடந்த முகத்தைத் திருப்பி வியாதிக்காரனைக் கேட்டான் நொண்டி: 'கஷ்டத்துக்கு அப்புறம்தான் சொகம்னு சொன்னியே...எனக்கு இனிமே ஏது சொகம் ? சொகமே வராதுன்னு தெரிஞ்சும் எதுக்கு நான் இருக்கணும் ? '

'சொகமே வராதுன்னு முடிவு சொல்லறதுக்கு நீ யாரு ? கஷ்டம் வரப் போவுதுன்னு நீயா முன்கூட்டியே சொன்னே ? அது திடார்னு வந்தமாதிரி இது வராதா '....அதெல்லாம் அவன் பார்த்துச் சொல்லணும் ' என்று வானத்தை நோக்கிப் புகையை ஊதினான் பிச்சைக்காரன்.

வியாதிக்காரனுக்கே தான் சொன்ன பதில் நொண்டியின் மனச் சமாதானத்துக்குத்தான் என்று தெரிந்தது.

'சாகப் படாது ஐயா...அதான் ஒரு நாளைக்கு எல்லாருமே சாகப் போறமே ?... அதுவரைக்கும் இருந்துதான் சாவமே... ' என்று சமாதானம் கூறினான். 'அது சரி; நீ பாட்டுக்குச் சாகறதுக்கு வந்துட்டியே...உனக்கு தாயி, தகப்பன், குடும்பம்னு ஒண்ணுமில்லியா ? என்னை மாதிரி அநாதைதானா ? ' என்றான் வியாதிக்காரன்.

'அம்மா... ' என்று பெருமூச்செறிந்தவாறு எழுந்து உட்கார்ந்த நொண்டி, சில விநாடிகள் மௌனமாய்த் தலை குனிந்திருந்துவிட்டு, விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்.

'வருத்தப்படாதே ஐயா ' என்று ஆறுதல் கூறினான் பிச்சைக்காரன். முகத்தைத் துடைத்துக் கொண்டு சொன்னான் இளைஞன்.

'அதோ தெரியுது பாரு ' என்று ரயில்வே லைனுக்கு நேரே வரிசையாகத் தெரியும் சில வீடுகளின் கொல்லைப்புறத்தைக் காட்டி, 'அங்கேதான் எனக்கு வீடு. அம்மா இருக்காங்க, தம்பி இருக்கான். தம்பிக்கிக் கல்யாணமாகிக் கொழந்தைகள்கூட இருக்கு. என்னாலேதான் யாருக்கும் உதவியுமில்லே, சந்தோஷமுமில்லே. நான் வயித்திலே ஜனித்ததிலிருந்து எங்க அம்மா என்னைச் சுமந்துகிட்டே இருக்காங்க. அம்மாவுக்கு ஒரே நம்பிக்கை--எனக்கு காலு வந்திடும்னு...எப்பப் பார்த்தாலும் தம்பிகிட்டே 'அந்த டாக்டரைப் பார்க்கணும்னு ' பணத்தை வாங்கிக்கிட்டு டாக்டர்களைப் பார்த்ததுதான் மிச்சம். அவன் என்ன பண்ணுவான் ?...வரவரத் தம்பியும் குடும்பஸ்தனாக மாறிப் புள்ளைகளும் பெண்டாட்டியுமா ஆனப்புறமும் நான் ஒரு சொமையா இருக்கிறதா ? எனக்காக அம்மாவும் தம்பியும் தினம் சண்டை போடறாங்க...தம்பி கோவத்திலே என்னை நொண்டின்னு சொல்லிட்டான். அம்மா, 'ஓ ' ன்னு அழுதுட்டாங்க ' என்று நொண்டி சொல்லும்போது வியாதிக்காரனின் மனசில், ராமலிங்கசாமி மாதிரி காதோரத்திலே முக்காட்டுத் துணியைச் சொருகிக்கொண்டு 'பரதேசி ' ன்னு கூப்பிடும் அந்த குரலும் முகமும் தோன்றின. நீட்டிய காலகளின் முழந்தாள் முட்டுகளைப் பிசைந்துகொண்டே சொன்னான் நொண்டி:

'நேத்து ஏதோ ஒரு நாட்டு வைத்தியர் இந்தமாதிரிக் குறையெல்லாம் தீத்து வைக்கிறார்னு யாரோ சொன்னாங்க -- அம்மா கையிலே இருந்த காசை முந்தானையிலே முடிஞ்சுண்டு 'வாடா ' ன்னு உசிரைவாங்கி என்னை அழைச்சிண்டு போறப்ப நான் என்ன பண்ணுவேன், சொல்லு, சரின்னு அம்மா தோள்லே தொத்திண்டு போனேன். அந்த வைத்தியன் இருக்கிற இடம் நாலு மைல் இருக்கு...பஸ்ஸிலதான் போகணும்...போனோம்...அம்மா ஆசையிலே, வழக்கம்போல இல்லாம ஒரே தடவையிலேயே மண்ணு விழுந்திட்டுது...என் காலைப் பாத்துட்டு முடியாதுன்னுட்டான் அவன். 'இவன் ஒண்ணும் நல்ல வைத்தியன் இல்லே...ஊரை ஏமாத்தறவன் ' னு என்னை அழைச்சிண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்துட்டாங்க அம்மா... பஸ்ஸிலே ஒரே கூட்டம்... '

ஒரு நிமிஷம் பேச்சை நிறுத்திக் கண் கலங்க எங்கோ பார்த்தவாறு வெறித்த விழிகளுடன் நெஞ்சில் பெருகி, தொண்டையில் அடைத்த துயரை விழுங்கினான் நொண்டி. அவன் வாழ்வின் மீது கொண்ட வெறுப்புக்கெல்லாம் எந்த ஒரு நிகழ்ச்சி காரணமாய் அமைந்து அவனைச் சாவின் பீடத்துக்குக் கொண்டு வந்து தள்ளியதோ -- அந்த நிகழ்ச்சி மனசில் தெரிந்தது. அதை மனசால் பார்த்துக்கொண்டே வியாதிக்காரனிடம் விவரித்தான் நொண்டி.

அந்த காட்சி --

வெள்ளைப் புடவையுடுத்தி முக்காடிட்ட அந்த வயோதிகத் தாயின் தோளைப் பற்றி, தன்னுடலின் முழுப் பாரத்தையும் அவள் மேலே சுமத்திக்கொண்டு, 'கட்டாலே போறவன்; யாராரோ சொன்னாளேன்னு நம்பி வந்தேன். இவன் ஒண்ணும் வைத்தியன் இல்லே; பில்லி சூனியம் வைக்கறவன்... நீ கவலைப்படாதேடா கண்ணா ' நான் உன்னை அடுத்த மாசம் வேலூர் மிஷன் ஆஸ்பத்திரிக்கி அழைச்சிண்டு போயி... ' என்று ஏதோ சொல்ல வரும்போது, அவள் தோளில் நெற்றியைத் தேய்த்துக்கொள்வதுபோல் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சொன்னான் மகன்:--

'எனக்குக் 'காலில்லையே 'ங்கற கவலைகூட இல்லேம்மா; நீ எனக்காகப்படற சிரமத்தைப் பார்த்தாத்தான் ரொம்பக் கஷ்டமா இருக்கம்மா... ' என்று விம்முகின்ற குரலோடு அவள் தோளில் நெற்றியைத் தேய்த்துக்கொண்டே இருக்கும்போது, பஸ் வந்தது.

'கண்ணா, கெட்டியாப் பிடிச்சுக்கோ...பாத்து, பாத்து...இதோ, இப்பிடி உட்காந்துக்கோ ' என்று மகனைச் சுமந்து இழுத்தவாறு பஸ்ஸில் அவள் ஏறுவதற்குள், முன்பக்கத்தில் டிக்கட் கொடுத்துக் கொண்டிருந்த கண்டக்டர், 'ஆச்சா ? எவ்வளவு நாழி ? ' என்று அவசரப்படுத்தினான். ஒருவாறு சிரமத்திற்குப்பின் பஸ்ஸில் ஏறியதும், எதிரில் இருந்த இருவர் உட்காரும் ஸீட்டில் மகனைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு உட்கார்ந்தாள் அம்மா.

பஸ் போய்க்கொண்டிருக்கும்போது, அவனது தாய் சேலைத் தலைப்பிலிருந்த சில்லறையை எடுக்கும்போது, அவன் அகஸ்மாத்தாகத் திரும்பும்போது அவர்கள் ஸீட்டுக்கு மேலே எழுதியிருந்த 'பெண்கள் ' என்ற வாசகம் அவன் கண்களில் பட்டது. அப்பொழுது ஒரு ஸ்டாப்பில் பஸ் நின்றது. அழகிய இளம் பெண்ணொருத்தி பஸ்ஸில் ஏறினாள். அவளைப் பார்த்தவாறே அருகில் வந்தான் கண்டக்டர். நொண்டி ஒரு விநாடி பெண்ணைப் பார்த்தான்; அவளது இடத்தில் தான் உட்கார்ந்திருப்பதை உணரும்போது அவனது ஆண்மை உணர்ச்சி அவனுள் ரகசியமாக வதைபட்டுக் கொண்டிருக்கும் அதே சமயம், அதைக் கொல்லுவதுபோல் கண்டக்டரின் குரல் ஒலித்தது: 'இந்தாய்யா ஆம்பளே ' பொம்மனாட்டி நிக்கிறாங்க இல்லே ? '

அந்த நொண்டி திடாரென்று கால்கள் வந்துவிட்டது போல் எழுந்து நின்றான். அவன் எழுந்த வேகத்தில் அந்தப் பெண் அந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டாள். எழுந்து நின்ற நொண்டியின் கால்கள் நடுங்கின...

'ஐயா '...ஐயா ' 'என்ற தாயின் பரிதாபகரமான குரல் கண்டக்டரையும், அந்த பெண்ணையும் பஸ்ஸிலுள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இன்னொருவர் சொல்லித்தன் காதால் கேட்கப் பொறாத அந்த வார்த்தையை அவளே சொல்லவேண்டிய நிர்ப்பந்தம்... 'ஐயா ' அவன் நொண்டி ஐயா ' நிக்க முடியாதையா '.... ' என்று சொல்லிக் கண்களில் வழிந்த கண்ணீருடன் எழுந்து தன் இடத்தைக்காட்டி, 'கண்ணா, நீ இப்படி உக்காந்துக்கோடா ' என்று சொல்லும்போது தடுமாறி விழ இருந்த மகன், தாயின் தோளைப் பிடித்துக்கொண்டு சொன்னான்; 'இல்லேம்மா, நான் நிப்பேன். '

'உன்னாலே முடியாது கண்ணா ' என்று அந்தப் பெண்ணின் பக்கத்தில் மகனை உட்கார வைத்து அந்தத் தாய் நிற்கும்போது, அந்தப் பெண் எழுந்து அவன் தாயிடம் மன்னிப்புக் கேட்பதுபோல், 'நீங்க உக்காருங்க அம்மா ' என்று வற்புறுத்திக் கெஞ்சினாள். கண்டக்டரின் முகம் அழுவதுபோல் மாறிவிட்டது 'ஸார், மன்னிச்சுக்குங்க, எனக்கு முதல்லே தெரியலை ஸார்... ' என்று நொண்டியிடம் குனிந்து சொன்னான். நொண்டி யாருக்கும் ஒன்றும் பதில் சொல்லாமல், யார் முகத்தையும் பார்க்காமல், பக்கத்தில் அமர்ந்திருந்த தாயின் பின்னால் ஒரு குழந்தையைப்போல் முகம் புதைத்து, அழுகையை அடக்கி, நெற்றியை அவள் தோளில் தேய்த்துக் கொண்டே இருந்தான்.

பஸ் போய்க் கொண்டிருந்தது. பஸ்ஸிலிருந்த எல்லோரின் அநுதாபமும் அவன் நெஞ்சில் கனமேற்றி அவன் உயிரையே அரிப்பதுபோல்...

---நொண்டி சொல்லிக் கொண்டிருந்ததை எல்லாம் மௌனமாய்க் கேட்டவாறிருந்த வியாதிக்காரன் தன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

'இவனுக்கு இன்னும் வயசு இருக்கு, வாழ்க்கை இருக்கு... இவனுக்கு ஒரு கஸ்டம்னா வருத்தப்படறதுக்கு, உதவி செய்யறதுக்கு உறவுக்காரங்க இருக்காங்க. இவன் வாழணுன்னு ஆசைப்படறதுக்கு அன்பான தாய் இருக்கா...இவன் நொண்டின்னு தெரிஞ்சு அன்பு காட்ட, பரிதாபப்பட, பிரியம்காட்ட உலகமே இருக்கு....இவன் எதுக்கு சாகணும் ? ' என்று ஆரம்பித்த மனம் தன்னைப்பற்றி எண்ணும்போது...

'எனக்கு யார் இருக்கா ? எனக்கு ஒரு கஸ்டம்னா, வருத்தப்படறதுக்கு, உதவி செய்யறதுக்கு உறவு இருக்கா ? உறவுங்கெல்லாம் உதறித்தள்ளி எத்தனையோ காலம் ஆயிடுச்சே ? நான் வாளணும்னு ஆசைப்படற ஜீவன் என்னைத் தவிர இன்னொண்ணு உண்டா ? எனக்கு அன்பு காட்ட, பரிதாபப்பட, பிரியங்காட்ட யார் இருக்கா ? உலகமே வெறுத்து முகம் சுளிச்சு என்னைப் பாக்குது ' என்றெல்லாம் எண்ணி மௌனமாய் உட்கார்ந்திருந்தான் வியாதிக்காரன்.

நொண்டியின் இமைகளைத் தூக்கம் அழுத்த, அவன் கொட்டாவி விட்டான். அந்த சப்தம் கேட்டு வியாதிக்காரன் நொண்டியைப் பார்த்தான், 'இந்தாய்யா, நீ சாகப்படாது,....சொல்லிட்டேன். ஒனக்குக் காலு இல்லேங்கிற நெனப்பினாலேதான் நீ கஸ்டப்படறே, மத்தவங்களையும் கஸ்டப்படுத்தறே. '

'நான்தான் சொல்றேனே, எனக்குக் காலில்லாம மத்தவங்களுக்குத் தான் பாரமா இருக்கேனே ' எங்கம்மா வைத்தியனுக்குன்னு தம்பியைப் பணம் கேக்கறப்போ அவங்க ரெண்டு பேருக்கும் என்னாலே எவ்வளவு சண்டை ' எவ்வளவு வருத்தம் ' ' என்று நொண்டி சொல்ல, குறுக்கிட்ட வியாதிக்காரன், 'ஆமாய்யா, நீ சதாநேரமும் உங்கம்மா தோளைப் புடிச்சுத் தொங்கிக்கிட்டே இருந்தா அப்படித்தான் சண்டை வரும். காலு இல்லாட்டிப்போனா என்னாய்யா ? கையாலே இந்த உலகத்தையே வளைக்கலாமே ' வாழ்றத்துக்குக் காலும் கையும் வேணாமய்யா. நல்ல மனசு வேணும், அறிவு வேணும். மனுசனோட அறிவு யானையைக் காட்டிலும் சிங்கத்தை காட்டிலும் வலுவானது. இல்லேங்கறதுக்காகச் செத்து இருந்தா மனுச சாதியே பூண்டத்துப்போயிருக்கும். காலு இல்லாட்டி அது இல்லாத் கொறையை மாத்திக்கிட்டு எப்படி இருக்கிறதுன்னு யோசிக்க ஆரம்பிச்சேன்னா, காலு இருக்கிறங்களைக்காட்டிலும் நீ வேகமா ஓடிடமாட்டியா ?

'மனுசனுக்கு ரெக்கை இருந்திருந்தா அவனும் பறந்துகிட்டிருப்பான். ரெக்கை இல்லாததனாலேதான் 'விர்ரு விர்ரு ' ன்னு இப்ப ஏரோப்ளேன்லே பறக்கிறான். இன்னும் மானத்துலே எங்கெங்கேயோ போயி என்னென்னாத்தையோ புடிக்கிறான். இல்லேன்னு சாவறதா ? உங்கம்மாவேதான், என் மகனுக்குக் காலு இல்லாட்டி என்னா, என்னென்னா காரியம் பண்றான்னு நெனைக்க வெச்சிட்டியினா அவுங்க ஏன் உன் தம்பிகிட்டே போயி வம்புக்கு நிக்கப் போறாங்க ? நீ என்னா என்னை மாதிரி தீராத நோயாளியா ? நானே வாழறப்போ நீ சாகப்போறேங்கறியே... ' என்று சொல்லும்போது வியாதிக்காரனின் தொண்டை அடைத்தது. அவனது பேச்சால் வியாதிக்காரனின் நெஞ்சிலிருந்து, வாழவேண்டுமென்ற ஆசை, வாழ முடியும் என்ற நம்பிக்கை நொண்டியின் இதயத்தில் தொற்ற ஆரம்பித்தது. நொண்டி புதியதோர் நம்பிக்கையுடன் தலை நிமிர்த்தி வியாதிக்காரனைப் பார்த்தான். வியாதிக்காரன் தொடர்ந்தான்.

'நீ என்னமோ சொல்றியே, பஸ்ஸிலே உன்னை எந்திரிக்கச் சொன்னான், அப்புறம் உட்காரச் சொன்னான்னு... அதுக்காக உன் மனசு கஸ்டப்பட்டது, நாயந்தான். தோ, என்னைப்பாரு. என்னை அந்த பஸ்ஸிலே ஏறவுடுவானாய்யா ? நீ என்னைப் பகல்லே பாத்தா இப்பிடி பக்கத்திலே உக்காந்து பேசக்கூட மாட்டே, தோ... வெளிச்சத்திலே பாரு இந்தக் கையை '

என்று தன் குறைபட்ட கைகளை மேலே இருந்த கோட்டை இழுத்து விட்டுக் கொண்டு நிலா வெளிச்சத்தில் நீட்டி விம்மினான்: 'இந்தக் கை கொஞ்ச நாளைக்கு முன்னே முழுசா இருந்தது. உனக்குக் காலு இல்லே-- அவ்வளவுதான். எனக்கு இருக்கிறதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா இல்லாமாப் போயிக்கிட்டே இருக்கு... இந்தக் கையாலே முந்தாநாளு ஒரு கொழந்தையைத் தூக்கிட்டேன். கொழந்தையைத் தூக்கணும்கிற ஆசையினாலேயா தூக்கினேன் ? சீ அந்த ஆசை எனக்கு வரலாமா ? தண்டவாளத்திலே வந்து நிக்குதே, ரயிலு வர்ர நேரமாச்சேன்னு பதறித்தூக்கிட்டேன். நான் வியாதிக்காரந்தான். என் உடம்பிலே சொரணைன் அத்தே போயிடுச்சி. ஆனாலும் ஒரு குழந்தையை தூக்கறோம்கிற நெனைப்பிலேயே என் மனம் சிலிர்த்துப் போச்சு... ஆனா, ஆனா.... அதுக்காக அந்தப் பெத்தவங்க என்னை அடிக்க வந்துட்டாங்க, தெரியுமாய்யா ?... மனுசனாப் பொறந்தும், மனுசனுக்குள்ள எந்தச் சொகத்தையும், எந்த உரிமையையும் அநுபவிக்க முடியாம் நான் வாழறேனே... ஒரு பிசாசு மாதிரி தனியா குந்திக்கிட்டு, வாழறதா நெனச்சி என்னையே ஏமாத்திக்கிறேனே ' என்று சொல்லும்போது கொஞ்சம் கொஞ்சமாக விம்ம ஆரம்பித்து விக்கிவிக்கி அழுதான் வியாதிக்காரன்.

சற்று நேரத்திற்குப்பின் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு வரண்ட சிரிப்புடன் சொன்னான்:

'ஆமா, பெத்தவங்களுக்குத் தெரியும் புள்ளை அருமை.... சாவைக் காட்டிலும் கொடியது இல்லையா, இந்த நோயி ? அப்புறம் விஷயத்தைச் சொன்னப்புறம் ஒருமாதிரி சமாதானம் ஆனாங்க...அப்பக்கூட, 'ஒரு கொரலு, எங்களைக் கூப்பிட வேண்டியதுதானே...நீயா தூக்கறது ? 'ன்னு கேட்டிச்சி ---அந்த அம்மா. 'நீங்க சொல்றது நாயந்தான். தெரியாம செஞ்சிட்டே ' ன்னு மன்னிப்பு கேட்டுகிட்டு வந்தேன், ஏன்னா, இது பொல்லாத நோயி, மனுசனுக்கு வரக்கூடாது; ஆரம்ப காலம்னா தீத்துடலாம். இது ரொம்ப முத்தின கேஸஉ ' இனிமே கொறையாது; பரவும். மத்தவங்க ஜாக்கிரதையாத்தான் இருக்கணும். ஒரு தாய்க்குத் தன் குழந்தை செத்தாலும் பரவாயில்லே; இந்த நோய்வரப் பொறுக்கமாட்டா ' என்று அவன் தன்னையுணர்ந்து தனக்குள் முனகுவதுபோல் பேசினான்.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு நொண்டி இரண்டாவது முறை கொட்டாவி விட்டான்.

'தூக்கம் வருதா ? படுத்துக்க, ஐயா ' தூங்கர்து ரொம்பச் சொகம். செத்தாத் தூங்கமுடியாது, கேட்டுக்க, பொழுது விடிஞ்சி பெத்த மகராசிக்குப் புள்ளையாப் போய்ச் சேரு ' உனக்கு நான் கடைசியாச் சொல்றது இதுதான்: காலு இல்லேன்னு நெனச்சி நீ யாருக்கும் பாரமா இருக்காதே. இப்ப யாரோட துணையுமில்லாம எப்பிடி சாக வந்தியோ, அந்த மாதிரி வாழப் போ. அதிலே ஒண்ணும் வெக்கப்படவேணாம். உன்னையே பாத்து உங்கம்மா மகிழ்ந்து போவாங்க, பாரு... ' என்று, அணைந்திருந்த கடைசிப் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான் வியாதிக்காரன். படுத்த சற்று நேரத்துக்கெல்லாம் நொண்டி தூங்கிப் போனான். வியாதிக்காரன் தூக்கம் வராமல், கீழே கிடந்த துண்டுப் பீடிகளைப் பொறுக்கிப் பற்றவைத்துக் கொண்டு தூணில் சாய்ந்து வானத்தை வெறித்தவாறு உட்கார்ந்திருந்தான்.

'அதோ, ரொம்ப தூரம் தள்ளி வந்திருச்சே சப்தரிஸி மண்டலம்...நாலு நச்சத்திரச் சதுரத்திக்கு ஓரமா, வாலு மாதிரி இருக்கற மூணுக்கு நடுவாலே, ஓரத்திலே, ஆமாமா, அருந்ததி...அருந்ததியைப் பார்த்தவனுக்கு ஆறு மாசத்துக்குச் சாவில்லே ' அடிச் செருப்பாலே ' இன்னும் ஆயுசு அதிகம் வேணுமா என் கட்டைக்கி ? ' என்று விரக்தியும் வேதனையும்

குழைய முனகிக்கொண்ட வியாதிக்காரன், கையிலிருந்த பீடியைத் தரையில் நசுக்கித் தேய்த்தான். அவன் பார்வை சப்தரிஷி மண்டலத்தை வெறித்தது.

விடிந்து ஆறு மணிக்கு வடக்கே போகும் பார்சல் வண்டியின் அவலமான கூக்குரல் கேட்டு, சத்திரத்துத் திண்ணையில் தூங்கிக்கொண்டிருந்த நொண்டி கண் விழித்தான்.

அவனருகே வியாதிக்காரனின் கறை படிந்த கந்தலும், பளபளப்பான புதிய தகரக் குவளையும் தனியாகக் கிடந்தன. அங்கே ஈக்கள் மொய்த்தன.

தூரத்தில், நீண்டு செல்லும் இருப்புப் பாதையின் வளைந்து திரும்பும் எல்லையில் புகை கக்கி அழுதவாறு பார்சல் வண்டி நின்றிருந்தது ' அங்கு மனிதர்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

'இங்கே சுத்திக்கினு இருப்பானே -- அந்தப் பெருவியாதிக்காரன், ரயிலு முன்னாடி போயி விழுந்துட்டான் '... '

'அவன் எனக்கு வாழக் கற்றுக் கொடுத்தான்; நான் அவனுக்குச் சாகக் கற்றுக் கொடுத்தேன். அவன் என்னைச் சந்திக்காமல் இருந்திருந்தால் ? ' --நொண்டியின் கண்கள் கலங்கின.

'அந்த இடத்தின் ராசியோ ?--தன்னையே காவு தந்து இன்னொரு விபத்து ஏற்படாமல் தடுக்க முயற்சியோ ? அவன் மேனியிலிருந்ததா பயங்கர தொத்து வியாதி ?...இல்லை; என் மனசில் தோன்றியதே---தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் --அந்த 'வாழ்க்கையின் வெறுப்பு ' த்தான் பயங்கர வியாதி...அதற்கு அவன் பலியாகிவிட்டான். '

திடாரென்று ரெயில்வே லைனுக்கு அப்பால் வரிசையாகத் தெரியும் வீடுகளின் கொல்லைப்புறக் கதவுகளைத் திறந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோரின் நடுவே இருந்து, 'ஐயோ ' கண்ணா ' ' என்ற அலறல் ரயில்வே லைனுக்கு அப்பால் வெகு தூரத்திலிருந்த நொண்டியின் வயிற்றைக் கலக்கியது.

'அம்மா ' நான் இருக்கிறேன்....அம்மா ' ' என்று கோஷித்தவாறு வேகமாய்த் தவழ்ந்தோடினான் அவள் மகன்.

'மகனே '....மகனே '... ' என்று ரயில்வே லைன் மேட்டின் மீது விழுந்து புரண்டு கொண்டிருந்த அவன் தாய் 'நான் இருக்கேன் ' என்ற குரல் கேட்டு அவனைப் பார்த்து ஒன்றும் புரியாமல் அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு கண்ணீருடன் சிரித்தாள். பிறகு, 'யார் பெத்த மகனோ ' ' ரயில் சக்கரத்தைப் பார்த்து அழுதாள்.

அவள் அருகே வந்த அவள் மகன் அவள் தோளில் முகம் புதைத்து நெற்றியைத் தேய்த்து அழுதுகொண்டே சொன்னான்: 'அம்மா ' நான் இருக்கேம்மா...அது உன் மகனில்லே... அது. அந்த மனுஷன்...அவன் செத்திருக்கக் கூடாது அம்மா....ஆ '.... ' என்று பெருங்குரலில் கதறி அழுதான் நொண்டி.

# கொடியேற்றம்

**-அசோகமித்ரன்.**

நான் பள்ளியில் எட்டாவது வகுப்பு வரும்வரை சுல்தான் பஜார் என்று ஒன்று இருப்பதே தெரியாது. எங்கள் வீட்டிலிருந்து ஏழெட்டு மைல் தூரத்தில் இருந்த அந்த இடத்தை நான் ஒரு பாடபுத்தகத்தைக் காலாகாலத்தில் வாங்காததால் பழகிக் கொள்ளும்படி ஆயிற்று. சிகந்திராபாத்தில் இருந்த மூன்று புத்தகக் கடைகளிலும் 'சுல்தான் பஜாருக்கு போ ' என்று சொல்லி விட்டார்கள். அந்த நாளிலே மிகுந்த ஜனநெரிசல் இருந்த அந்தப் பகுதியில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் ஒரு மிகப்பெரிய அரசமரம் பரம சுதந்திரத்தோடு செழுங்கிளைத் தாங்கி நின்று கொண்டிருந்தது. ஒருமுறை சுல்தான் பஜார் சென்று வந்த பிறகு ஒரு பென்சில் வாங்க வேண்டுமென்றால்கூட எனக்கு அங்குதான் போகத்தோன்றியது. சைக்கிளில் அவ்வளவு தூரம் சென்று வருவது பெருமையாகவும் உற்சாகமாகவும் இருந்தது. ஒவ்வொரு முறையும் அந்த அரசமரத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு வருவேன்.

பத்தாவது வகுப்பில் இருக்கும்போது நாட்டு அரசியல் தீவிரமடைந்தது. கல்கத்தாவில் 'நேரடி நடவடிக்கை 'யில் தெருவெல்லாம் நூற்றுக்கணக்கில் பிணங்கள். சரியோ தப்போ பாகிஸ்தான் என்று ஒரு தனிநாடு உண்டாகாமல் இந்தியப் பிரச்சினை தீராது என்றாயிற்று. பாகிஸ்தான் உறுதி என்றான பிறகு நிஜாமுடைய ஹைதராபாத் சமஸ்தானம் என்னாகும் ? நிஜாமுடைய ஹைதராபாத் சமஸ்தானமாகவே இருக்கும் என்று நிஜாம் தீர்மானித்தார்.

ஆனால் நிறையப் பேர்வேறு அபிப்பிராயம்கொண்டிருந்தார்கள். ஹைதராபாத் ஒழுங்காக இந்தியாவுடன் சேர்ந்துவிட வேண்டும் என்று நினைத்தார்கள். இந்த நிஜாம் இவ்வளவு நாட்கள் வெள்ளைக்காரனிடம் 'விசுவாசமான சகபாடி என்று பட்டம் பெற்று வாழ்ந்தாயிற்று. இனி இந்தியாவின் நண்பன் என்று இருந்துவிட்டுப் போகட்டுமே.

எனக்கும் மதன்மோகனுக்கும் இவ்வளவெல்லாம் தெரியாது. சுதந்திரம் வரப்போகிறது. அந்த ஆகஸ்ட் 15ம் தேதியன்று மூவண்ணக் கொடியை எங்காவது பொது இடத்தில் பறக்கவிட வேண்டும். எப்படியோ எங்கள் வீட்டில் ஒரு மூவர்ணக் கொடி வந்து சேர்ந்திருந்தது. அதை இப்போது பயன்படுத்திவிட வேண்டும்.

ஆனால் ஜஉலை மாதத்திலிருந்தே காங்கிரஸ், வந்தே மாதரம் போன்ற குரல் கேட்ட மாத்திரத்தில் நிஜாமின் போலீஸ்காரர்கள் தடியை உயர்த்தினார்கள். போலீஸ் மட்டுமல்லாது காசிம் ரஸ்வி என்றதொரு மனிதன் கூட்டிய ரஜக்கார் படை கதர் சட்டைக்காரர்களையும் கதர் குல்லாக்காரர்களையும் சாத்தியமான போதெல்லாம் தாக்கியது . பொதுவாகவே எல்லோருமே பயங்கண்டு இருந்தார்கள் இந்தச் சூழ்நிலையில் நாங்கள் மூவண்ணக்கொடியை எங்கு பறக்க விடுவது ? மதன்மோகனும் நானும் சிகந்திராபாத்திலேயே பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். பழகிய இடங்கள் என்பதாலேயே வேண்டாம் என்று முடிவு செய்தோம்.

'சுல்தான் பஜாரில் முயற்சி செய்யலாமா ? ' என்று கேட்டேன். அன்று மாலை பள்ளிக்கூடம் முடிந்த பிறகு நாங்கள் இருவரும் சைக்கிளில் கிளம்பினோம்.

ஜ்உலை, ஆகஸ்ட் மாதங்களில் அந்தப் பிரதேசத்தில் கொஞ்சம் மழை பெய்யும். நிறையக் காற்று அடிக்கும். எத்திசையில் போனாலும் எதிர்க்காற்று வீசுவதுபோல் இருக்கும். நாங்கள் இருட்டும் வேளையில் வியர்த்து விருவிருக்க சுல்தான் பஜார் போய்ச் சேர்ந்தோம்.

அங்கு ஏற்கெனவே அமளி. கதர் உடை கதர்குல்லா அணிந்துக் கொண்டு இரண்டு இளைஞர்கள் 'வந்தே மாதரம் ' 'இந்தியன் யூனியன் ஜிந்தாபாத் ' ' என்று கோஷம் போட்டிருக்கிறார்கள். அந்த இளைஞர்களை ஒரு டாங்கா வண்டியில் கைது செய்துக் கொண்டு போயிருக்கிறார்கள். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பத்துப் பதினைந்து பேருக்கு தடியடி. நானும் மதன்மோகனும் சுல்தான் பஜார் சாலையில் நுழைந்தபோது ஈ காக்காதான் அங்கிருந்தன.

சுல்தான் பஜார் என்று சொல்லிவிட்டேனே தவிர கொடியை எங்கு, எப்படிக் கட்டுவது என்று நினைத்துப் பார்க்கவில்லை. அங்கு போன பிறகுதான் அதிலுள்ள சிரமங்கள் தெரிந்தன. லாந்தல் கம்பத்தில் கட்டலாம். ஆனால் பிறர் கவனிக்காதபடி அதைச் செய்ய முடியாது. பட்டம் ஏதாவது அப்பக்கம் அறுந்து வந்து மின்சாரக் கம்பியில் சிக்கிக் கொண்டால் அதை எடுக்க முயற்சி செய்வது போல் கம்பத்தில் ஏறலாம். அறுந்தப் பட்டத்தைப் பிடிக்க யாருக்கும் சலுகைகள் உண்டு. ஆனால் எங்களுக்கென்று ஆகஸ்ட் 14-ம் தேதி அங்கு பட்டம் அறுந்து விழுமா ?

மதன் மோகனுக்கு உற்சாகம் குறைந்து போய்விட்டது சிகந்திராபாத்திலேயே 'கிளாக் டவர் ' அருகில் எங்கள் ஸ்கவுட் கம்பையே கொடிமரமாக்கிப் பறக்க விடலாம் என்றான். ஸ்கவுட் இயக்கத்தில் கொடிமரம் கட்டுவது ஒரு பாடம். எங்களுக்குக் கொடுக்கப்படும் தடிகளில் இரண்டை ஒன்றோடொன்றாகக் கட்டி இப் பாடத்தில் தேர்வு அடைவோம். எல்லா தெலுங்கு சினிமாக்களிலும் கிராமத்து ஆண்கள் கையில் ஆளுக்கொரு தடி வைத்திருப்பார்கள். எங்கள் ஸ்கவுட் தடி அது போன்றது. அதிகம் போனால் ஐந்தடி நீளமிருக்கும். இந்தத் தடி (அல்லது) கழியில் கொடியைக் கட்டுவதற்குப் பதில் நாங்களே அதைப் பிடித்துக் கொண்டு ஓடலாம்.

எங்களுடைய சுதந்திர தாகம் தணிந்து வீடு திரும்ப இருந்தபோது எனக்கு அரச மரம் ஞாபகம் வந்தது. 'வா மதன் நான் நல்ல இடம் காட்டுகிறேன், ' என்றேன்.

'நீ போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போறியே ? ' என்றான் மதன்மோகன்.

'அதுக்குப் பக்கத்திலேதான் நான் சொல்லற இடம் இருக்கு. '

'போலீஸ் ஸ்டேஷன் பக்கத்திலேயா ? '

'வாயேன், பாக்கலாம். முடிஞ்சா செய்யறது. இல்லாட்டா விட்டுடறது. '

அந்த அரசமரம் போலீஸ் ஸ்டேஷன் ஒட்டி இருந்தது. அந்த மரத்தைச் சுற்றி புண்ணியம் அல்லது பலன் அடைய விரும்புபவர்கள் போலீஸ் ஸ்டேஷனையும் சுற்ற வேண்டும். இன்னொரு புறத்தில் அரச மரத்துக்கும் அடுத்த கட்டடத்துக்கும் இடையில் மிகச் சிறிய இடைவெளி. அங்கு ஆடுகள் நுழைந்து போலீஸ் ஸ்டேஷன் சுவர் மீதேறி வாய்க்கெட்டிய அரச இலைகளை தின்று கொண்டிருந்தன.

'அப்படியே மரத்து மேலே ஏறி ஏதாவது கிளையிலேந்து கொடியைத் தொங்க விடலாம். ' என்று நான் சொன்னேன்.

எங்களுக்கே அது நம்ப முடியாத்தாக இருந்தது. அந்த போலீஸ் ஸ்டேஷன் தளம் போட்ட கட்டடம் என்றாலும் மாடிப்படி கிடையாது. ஒருவன் எப்படியோ கூரை மீது ஏறி விட்டால்

அவன் ஒரு எளிதாக யார் கண்ணிலும் படாமல் அரசமரத்தின் உயரக்கிளைகளை அடைந்து விடலாம் '.

அன்றே கொடியைக் கொண்டு வராமல் போனோமே என்று வருத்தப்பட்டுக் கொண்டோம். ஆகஸ்ட் 13 அல்லது 14-ம் தேதி மாலை கொடியுடன் சிறுது சணல் கயிறுடனும் வந்து இந்திய சுதந்திரத்தை வரவேற்க எங்களாலான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று முடிவு செய்தோம்.

ஆகஸ்ட் 13-ம் தேதி காலையிலிருந்தே மழை. பகலில் சிறிது நேரம் வெயில் அடித்தது. ஆனால் மறுபடியும் மழை பெரியதாகக் கொட்ட ஆரம்பித்தது.

நான் மழையில் நனைத்து கொண்டுதான் மதன் மோகன் வீட்டை அடைந்தேன். அவன் படுக்கையில் சுரமாகப் படுத்துக் கொண்டிருந்தான் என்று அவனுடைய அம்மா என்னைத் தெருவில் வைத்தே திருப்பி அனுப்பி விட்டாள்.

ஒரு கடையில் ஒண்டிக் கொண்டு தலையில் இருந்த மழை நீரை வழித்து உதறினேன். எனக்குத் தும்மல் வந்தது. அடுத்தடுத்து தும்மல் வந்தபடியே இருந்தது. காகிதத்தில் சுற்றி வைத்திருந்த மூவண்ணக் கொடியால் என் தலையை துடைத்துக் கொண்டு ஈரம் போகப் பிழிந்தேன். வண்ணம் வண்ணமாய் தண்ணீர் கொட்டியது. இப்படிச் சாயம் போகும் கொடியைக் கட்டினால் எதற்குக் கோபித்துக் கொள்வது என்று நிஜாம் போலீஸ் திணறும்.

இந்திய சுதந்திரத்தின் உதயத்தை நானும் மதன் மோகனும் சுரத்துடன் தான் வரவேற்றோம். அன்று ஊரெல்லாம் ஒரே பரபரப்பு. யாரோ மூவண்ணக் கொடியை ஹைதராபாத்தில் ராவோடு ராவாகப் பறக்க விட்டிருக்கிறார்கள் ' போலீஸ் படையில் ஐந்தாறு பேர் சஸ்பெண்டு '

கொடி எங்கு கட்டப்பட்டது என்று அறிய நான் தவித்தேன். போலீஸ்காரர்கள் பாதிக்கபட்டிருந்ததால் சற்றுக் கடுமையாகத்தான் இருந்தார்கள். என் அப்பாவின் நண்பர் போலீஸ் காரியாலயத்தில் ரைட்டராக இருந்தார். அப்பாவுக்குத் தெரியாமல் அவரிடம் விசாரித்தேன். அவர் சுல்தான் பஜார் என்றதும் என் பரபரப்பை அடக்க முடியவில்லை.

'என்னடா ஆச்சு ' என்று கேட்டார்.

'போலீஸ் ஸ்டேஷன் பக்கத்திலே இருக்கிறமரத்திலேயா மாமா ? ' என்று கேட்டேன்.

'உனக்கெப்படிடா தெரியும் ? ' என்று அவர் கேட்டார்.

என்னதான் இருந்தாலும் அவர் போலீஸ்காரர். நான் சொல்லவில்லை

# பாக்கி

**- அசோகமித்ரன்**

போலீஸ் ஸ்டேஷன் எதிர் சந்தில் நுழைய வேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் மறந்து விட்டது. சந்தில் திரும்பி நான்கு அடி வைப்பதற்குள் சுந்தரி.

நான் சுந்தரியைப் பார்க்காதது போலத் தாண்டிச் சென்றேன். ஆனால் அவள் உரத்த குரலில், 'என்னாங்க என்னாஙக ' ' என்று கூப்பிட்டாள். சந்தில் போய்க் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் என்னை பார்த்தார்கள். நான் நின்றேன்.

சுந்தரி அருகில் வந்து, 'ரெண்டு நிமிஷம் வீட்டுப் பக்கம் வந்துட்டுப் போங்க ', என்றாள். நான் அவளைப் பின் தொடர்ந்தேன்.

சந்தினுள் சந்தாக மூன்று முறை திரும்பி அவள் வீட்டை அடைந்தோம். அங்கிருந்த வீடுகள் சுவர்கள் கொண்டிருந்தன என்பதைத்தவிர சேரிப் பகுதியிலிருந்து அதிகம் மாறுபட்டவை அல்ல. சுந்தரி இருந்த வாசல் கதவைத் திறந்தவுடனேயே இருந்த ஆளோடியின் நடுவில் பெரிய சாக்கடை. இருபுறங்களிலும் இருந்த அறைகளில் ஏராளமான குடும்பங்கள் அந்த வீட்டிலும் மாடி இருந்தது. அங்கு ஒரே ஒரு தனி அறை. அது சுந்தரியுடையது.

பகல் நேரத்தில் அங்கு வெளிச்சத்துக்குக் குறைவில்லை. 'எங்கே சுவர்க் கடியாரம் ? ' என்று கேட்டேன். அது நான் வாங்கியது.

'மார்வாடிக் கடைக்குப் போயிருக்கு, ' என்றாள்.

'இருபது ரூபா கூடக் கிடைக்காதே ? '

'அதுகூடக் கையிலே இல்லாத போது என்ன செய்யறது ? '

'ஏன், பிரபாகர் இல்லையா ? '

'அவரைப் பத்தி விசாரிக்கத்தான் உங்களைக் கூப்பிட்டேன். '

'ஏன், என்னாச்சு ? '

'தெரியலைங்க. அவரு இங்கே வந்து மூணு மாசம் ஆறது. '

என் மனத்தில் எங்கோ ஓர் மூலையில் 'நல்லா வேணும் உனக்கு, ' என்று சொல்லத் தோன்றியது.

'ஓகோ, ' என்றேன்.

திடாரென்று சுந்தரி விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

நான் சுந்தரி அழுது பார்த்தது கிடையாது. உண்மையில் பிறரைக் கதறக் கதற அடிப்பதில்தான் அவள் பெயர் பெற்றவள். ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு என் வீட்டு முன்னால் ஊரைக் கூட்டி எப்படியெல்லாம் மானத்தை வாங்கினாள் ? யாரோ ஒருவர் ஒரு போலீஸ்காரனையும் அழைத்து வந்துவிட அதன் பிறகு போலீஸ் ஸ்டேஷனில் விசாரணை. தற்கால நாகரீகத்தில் ஆண் ஒருவனுக்குக் கௌரவம் என்று ஒன்று இருப்பதை துளிப் பாக்கி இல்லாமல் சுந்தரி

அங்கு குதறிப் போட்டு எடுத்தாள். இவ்வளவு ஆன பிறகு ஒருவன் உடனே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவான். அல்லது தூக்குப் போட்டுக் கொண்டு உயிரை விடுவான். நானும் அதெல்லாம் யோசித்தேன். ஆனால் அதெல்லாவற்றையும் விட இன்னும் தீவிரமான முடிவு எடுத்தேன். சுந்தரி கழுத்தில் தாலி கட்டுகிறேன் என்று சொன்னேன். அப்படிச் செய்வதற்கு வசதிப்படவில்லை. மூன்று வருடங்கள் அவளுடன் இருந்தேன். எனக்கு வந்த சம்பாத்தியம் அனைத்தையும் அவளிடம் கொடுத்து அவள் பொங்கி போடும் சாதத்தை விழுங்கினேன். காதலுக்காகவும் ஒரு பெண்ணுக்காகவும் எல்லாவற்றையும் தியாகம் புரிபவன் அல்லது நல்லது கெட்டது சுரணையற்ற அறிவு மதித்தவன் என்றெல்லாம் நான் என்னைப் பற்றி நினைத்துச் சொல்லவில்லை. நடுநடுவில் சந்தோஷமாகக் கூட இருந்தேன். அப்போது பிரபாகர் நுழைந்தான். பெரிய கூச்சல் குழப்பம் இல்லாமல் ஆறு மாத காலத்தில் அவன் சுந்தரியின் அறையில் குடியேற மீண்டும் நான் என் உறவுகாரர்கள் மத்தியில் என்னைப் பொருத்திக் கொண்டேன். எனக்கு இப்போது இரண்டாவது பெண் பிறந்து நான்கு வாரங்கள் ஆகின்றன.

சுந்தரியின் அழுகை தானாக ஓய்ந்தது. நான் எழுந்தேன். அவள் கண்ணையும் மூக்கையும் துடைத்துக் கொண்டு சற்றுத் திகிலுடன், 'எங்கே போறீங்க ? ' என்று கேட்டாள்.

'ஏன், என்ன ? '

'ஒண்ணுமே சொல்லாமலேயே போறீங்களே ? '

நான் அறையைச் சுற்றிப் பார்த்தேன். முன்பிருந்த பாத்திரங்களில் பாதிதான் பாக்கியிருந்தது. பக்கெட் மாறியிருந்தது. சுருணைத் துணியாகத் தொங்கியது என்னுடைய ஒரு ஜிப்பா. மிகவும் உறுதியான துணியாக இருக்க வேண்டும்.

'டா கொண்டு வரச் சொல்லட்டுமா ? ' என்று கேட்டாள்.

'ஏன், இங்கே கொதிக்க வைக்க முடியாதா ? '

'டாத் தூள், பாலு, சர்க்கரை எல்லாமே கடன் வாங்கணும். அதுக்கு ஒரேயடியா டாயையே கடனா வாங்கிடலாம். '

'இவ்வளவு சாமர்த்தியக்காரியாக இருந்து கோட்டை விட்டுட்டியே ? எனக்கு பிரபாகர் பத்தி ரொம்ப தெரியாது. கிரவுன் டாக்கீஸ் பக்கத்து சந்துன்னு எப்பவோ சொன்னான். நீ போய்ப் பாத்தியா ? '

'போனேன். அங்கே அவன் அம்மாதான் இருக்கா. அவ பெரிய பஜாரி. அவ பையன் பணமெல்லாம் பிடுங்கிட்டேன்னு கத்தி அவர்களம் செய்து போலீசெல்லாம் வரவழைச்சிட்டா. ஆனா அந்தப் படுபாவி எங்கே போனான்னே தெரியலே. '

'நான் மட்டும் என்ன பண்ண முடியும் ? எனக்கு அந்த ஆளை அதிகம் தெரியாது. '

'உங்க சீஃஃப் மேக்கப்மேனுக்கு உறவுன்னு முன்னே சொன்னீங்களே ? '

'என்ன, என்ன ? '

'நரசிம்மராவ் சாருக்கு உறவுன்னு நீங்கதான் சொன்னீங்க. '

'நானா சொன்னேன் ? '

'ஆமாங்க. '

எனக்கும் அது நிழல் போல நினைவில் தோன்றியது. நரசிம்மராவ் ஒரு முறை அவன் ஊருக்கு போய் ஒரு பெண்ணை அழைத்து வந்தான். சில நாட்களுக்கு பிறகு தான் தெரிந்தது, அவள் ஏற்கேனவே இன்னொருத்தருடைய மனைவி என்று. இருவர் போக்கிலும் உள்ள ஒற்றுமைக்காகத்தான் நரசிம்மராவுடைய தம்பி பிரபாகர் என்று நான் கூறியிருக்க வேண்டும்.

'நாலு வருஷம் அவன்கூட வாழ்ந்திருக்கே, அவன் மனுஷாளுங்க யாரு என்னன்னு தெரிஞ்சு வச்சுக்க கூடாதா ? '

நான் முற்றிலும் தளர்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து அவள்தான் என்னைப் பற்றி எவ்வளவு தகவல்கள் தெரிந்து வைத்திருந்தாள் ' இதெல்லாம் அவள் என் வீட்டு முன்னால் அமர்க்களம் செய்த போதும் பின்னர் போலீஸ் ஸ்டேஷனிலும் விசேஷமாக பயன்பட்டன. நான் எப்படி நாக்கைப் பிடுங்கிச் சாகவில்லை என்று எனக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பிரபாகர் அவளை வைத்து காப்பாற்றவில்லை என்பதோடு விஷயம் முடியவில்லை. அவளிடமிருந்த ஓரிரண்டு தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரம், பட்டுப் புடவை எல்லாவற்றையும் காசாக்கிக் கொண்டு செலவழித்திருக்கிறான். அவன் குடிக்க மாட்டான். சுந்தரி என்னை அவளுடைய வாழ்க்கையிலிருந்து விலக்கிவிட்டு அவனைத் தேர்ந்தெடுத்ததற்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும். முழுக்க முழுக்கச் சுயநினைவுடனேயே அவளைச் சுரண்டியிருக்கிறான்.

நான் மறுபடியும் எழுந்து நின்றேன். சாட்டை போன்ற நாக்கு ஒன்றை நம்பியே இவ்வளவு நாட்கள் இவ்வளவு பெரிய நகரில் காலம் தள்ளியவள் இப்போது வழுவிழந்து துவண்டு போய் நிற்கிறாள். நான் அவளோடு வாழ்க்கை நடத்திய போதும் அவளுடைய குடும்பத்தினர், நெருங்கிய உறவினர்கள் என்று யாரும் வந்தது கிடையாது. அவளுடைய ஊர்க்காரர்கள் யாராவது அவளை எப்படி எப்படியோ விசாரித்துக் கொண்டு வந்து சேருவார்கள். ஒருவேளை அல்லது இருவேளைச் சாப்பாட்டோடு சரி, சுந்தரி அவர்களைக் கிளப்பி விடுவாள். பிரபாகரோடு இருந்த போது, ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று நம்புவதற்கில்லை. நான் என்னிடம் இருந்ததெல்லாம் கப்பம் போல் அவள் காலடியில் சேர்த்திருக்க, அவன் மட்டும் அவளிடமே சூறையாடியிருக்கிறான். கில்லாடி தான். அவனை அதிகம் பழக்கம் செய்து கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை.

'சுந்தரி, இப்போ முன்னைப் போல எதுவுமே இல்லை. நானே முன்னைப் போல இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. நான் கட்டியிருக்கிறவள் கிட்டே உன் ஆர்ப்பாட்டம், அட்டகாசம் ஒண்ணும் பலிக்காது. '

'அப்படியெல்லாம் நினைக்கலேங்க. உங்க வீட்டுப் பக்கமே நான் வரவே இல்லியே. அதுலேயிருந்து தெரியலீங்களா என் மனசு ? '

'அவனுக்கு வந்த கடுதாசு ஏதாவது இருக்கா ? அவன் வேலை பார்த்த இடத்திலேர்ந்து கொடுத்த சம்பளக் கவர் பட்டியல் ஏதாவது இருக்குமே ? '

'ஒரு தகரப் பெட்டியிலே மூணு நாலு கிழிஞ்ச துணிதாங்க இருக்கு. ஒரு போட்டோவும், சாமிபடமும் இருக்கு. '

'அது இரண்டையும் கொண்டா. '

அந்தப் புகைப்படத்தைக் கொண்டு எதுவும் ஊகிக்க முடியவில்லை. படத்திலிருப்பது ஆணா பெண்ணா என்று கூடத் தெரியாதபடி வெளுத்துப் போயிருந்தது. சாமி படம் நரசிம்மருடையது. அளவுக்கு மீறி வாயைத் திறந்தபடி பிரகலாத ரட்சகன் காட்சியளித்தார். பானக நரசிம்மன் என்று பெயர். குண்டூர் அருகே மங்களகிரி என்ற ஆந்திரப் பிரதேச மலை மீதிருக்கும் அந்த நரசிம்ம விக்கிரகத்தின் வாயில் எந்த அளவுப் பாத்திரத்திலிருந்தும் பானகம் தயாரித்து வாயில் ஊற்றினாலும் பாதிப் பாத்திரம் முடியும் போது வாய் நிரம்பிவிடும். பிரபாகர் விஜயவாடா - குண்டூர் பக்கத்து ஆளாக இருக்க வேண்டும்.

'சரி, விசாரிச்சுப் பார்க்கிறேன், ' என்று சொல்லி விட்டுத் திரும்பினேன்.

'ஒரு நிமிஷங்க, ' என்றாள்.

'நீ ரொம்ப 'ங்க ' போடறது எனக்கு என்னவோ போல் இருக்கு. '

'அது இல்லீங்க... '

'சரி, சீக்கிரம் சொல்லு. '

'நிலைமை ரொம்ப மோசம். சீக்கிரமா அந்த மனுஷனைப் பார்த்து என்ன ஏதுன்னு கேட்க முடியலேன்னா, நான் மறுபடியும் ஸ்டூடியோ பக்கம்தான் போக வேண்டியிருக்கும். '

நான் கொடூரமாக ஏதாவது பேசி விடுவேனோ என்று அவள் கண்களில் தெரிந்த பயம் எனக்கு அளவிட முடியாத வேதனை அளித்தது. திரும்பத் திரும்ப அந்த போலீஸ் ஸ்டேஷன் தோற்றம் கண் முன் வந்தது.

என் சட்டைப் பையிலிருந்து ஒரு பழைய கவரை எடுத்தேன். நான் பணத்தைக் காகிதக் கவர்களில் வைத்துக் கொள்வதுதான் வழக்கம். சுந்தரி அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

முப்பது ரூபாய் இருந்தது. அவளிடம் நீட்டினேன். வாங்கிக் கொண்டாள்.

'இதை இப்போ வச்சுக்க. நான் அப்பப்போ வந்து போறேன். '

நான் இதை எந்தப் பொருளில் சொன்னேன் என்று எனக்கே தெரியவில்லை. அவளுக்கும் தெரியவில்லை என்று அவள் முகம் காட்டியது.

அன்று மாலை நான் மீண்டும் அவள் அறைக்குப் போனபோது அங்கு பேச்சுக் குரல் கேட்டது. பிரபாகர் திரும்பி வந்துவிட்டான். நான் பாதி மாடிப்படியிலிருந்து இறங்கி வந்து

விட்டேன். எனக்கும் சுந்தரிக்கும் உறவு பாக்கி இருந்ததோ இல்லையோ, பிரபாகருக்கு நான் எந்த ஜென்மத்திலோ கடன் பட்டிருக்க வேண்டும். சுந்தரி அறையிலிருந்து சமையல் வாசனை தடபுடலாக வந்து கொண்டிருந்தது.

# துறவு

**ஜெயகாந்தன்**

'எங்கே, போனவங்களெ இன்னங் காணலியே..... ' என்று முனகிக்கொண்டே, வாசற்படியை ஒரு கையால் பற்றியவாறு, பாதித்தெருவரை உடம்பை வளைத்து நீட்டித் தெருக்கோடி வரை பார்த்தாள் பங்கஜம் அம்மாள்.

அப்பொழுதுதான் அடுத்த வீட்டு வாசலில், சேலைத் தலைப்பில் ஈரக் கையைத் துடைத்துக்கொண்டு வந்து நின்றாள் மரகதம்.

'என்ன மரகதம்....பகலெல்லாம் காணவே இல்லியே ? வேலை சாஸ்தியோ ? ' என்று ஆரம்பித்தாள் பங்கஜம்.

'அதெல்லாம் ஒண்ணுமில்லே அக்கா; என்னவோ நெனப்பிலேயே நேரம் போயிடுச்சி... '

அந்த இரண்டு வீடுகளையும் இணைக்கும் அல்லது பிரிக்கும் அந்தச் சாய்வுத் திண்ணையின் இரு புறங்களிலும் இருவரும் உட்கார்ந்து கொண்டனர்.

---இரண்டு பெண்கள் கூடிப் பேசுவதென்றால் அந்தப் பரஸ்பர இன்பம் அவர்களுக்கல்லவா தெரியும் ?

'மணி எட்டு இருக்குமா ? ' என்றாள் பங்கஜம்.

'இப்பத்தானே ஏழரை அடிச்சிது ? வேலையெல்லாம் ஆச்சுதா ?... '

'ஆச்சு.... வேலை ஆயி என்ன பண்றது ? 'பொழுதோட வீட்டுக்கு வந்தமாம், சாப்பிட்டமாம் 'கிற பேச்சேதான் எங்க வூட்டு ஐயாவுக்கு கெடையாதே ' கோயிலும் கொளமும் சுத்திப்பிட்டு ராத்திரி மணி ஒம்பதோ, பத்தோ ?---அவுக போறதுமில்லாம அந்தப் பய சோமுவையும் கூட்டிக்கிட்டுப் போயிடறாவ.... '

'சோமு வீட்டிலே இல்லே ?---குரல் கேட்டுதே ' '

--மரகதம் பேச்சை வளர்க்கவே அப்படிக் கேட்டு வைத்தாள்.

'அவன் அடிக்கிற கூத்தை எங்கே போயிச் சொல்றதம்மா... பக்தி ரொம்ப மீந்து போச்சி...வௌக்கு வெச்சா வீட்டிலே தங்கமாட்டேங்கிறான். உபந்நியாசம் கேக்கப் போயிடறான்....போன வருசமே பெயில்...எப்பப் பார்த்தாலும் சாமியும், பாட்டும்தான்.... கறி திங்கமாட்டானாம்; முட்டைகூட வேண்டாம்கிறான்....அவுகளுக்கோ அந்த வாசமில்லாம சோறு எறங்காது. இவனோ, அதைத் தொட்ட கையைக் களுவாம, சோத்தெத் தொடாதேங்கிறான்...இந்த ரெண்டு பேருக்கும் ரெண்டு சமையல் பண்ண என்னால் ஆகுமா ?.... கெடக்குக் களுதைன்னு வெறும் ரஸத்தோட விட்டுட்டேன் இன்னக்கி.... '

'என்ன அக்கா சமையல் ? '

'ஆறு மணிக்குமேலே குப்பம்மா வந்தா, கடைக்குப் போறேன்னா... ஒரு எட்டணாவெ குடுத்து அனுப்பிச்சேன், ஆறணாவுக்கு--- தோ...இத்தினி இத்தினி நீளத்துக்கு எட்டு கெளுத்தி வாங்கியாந்தா...அதோட ரெண்டு மாங்கா கெடந்தது, அதையும் போட்டுக் கொளம்பு வச்சேன்... அவனுக்குத் தொட்டுக்க என்ன பண்றதுன்னு ஒண்ணுந் தோணலே... வெறும் ரசத்தோட விட்டுட்டேன்... எனக்கு ஒண்ணுமே முடியலே... காத்தாலே இருந்து ரெண்டுத் தோளும் என்னா கொடைச்சல் ' அப்படியே இத்துப் போவுது... சின்னப்பையன் ரமணி வேறே ராவிக்கெல்லாம் இருமித் தொலைக்கறான்... தூக்கமா வருது ? இந்த லெட்சணத்திலே ரெண்டு கறி, ரெண்டு கொளம்பு வைக்க யாராலே முடியும் ? பிள்ளையா பொறந்ததுவ, இருக்கறதைச் சாப்பிடணும்... 'அது வேணாம், இது வேணாம் '...சைவமாம், சைவம் '...இவனும் இவன் சைவமும்...நான் என்னத்தைப் பண்ண...மூஞ்சியை மூணு மொளம் நீட்டிக்கிட்டு வெறும் ரசத்தை ஊத்தித்திங்கும்...ஹ்உம்...

--பங்கஜம் அம்மாள் மூச்சுவிடாமல் கொட்டி அளந்து சலித்துப்போய்ப் பெருமூச்செறிந்தாள் ' மரகதம் ஆரம்பித்தாள்:

'அதை ஏன் கேக்கறீங்க அக்கா....எங்க வீட்டிலே இருக்கறவரு... மத்தியானம் அப்பிடித்தான், பாருங்க.... காலையிலே ஆபீசுக்குப் போகும்போது, 'முருங்கைக்காய் சாம்பார் வச்சி, உருளைக்கிழங்கு வறுவல் பண்ணு 'ன்னு சொல்லிட்டு போனாவ....பதினோரு மணி வரைக்கும் சாம்பாரை வச்சி, சாதத்தையும் வடிச்சிட்டு உக்காந்திருந்தேன், உக்காந்திருந்தேனோ அப்பிடி உக்காந்திருந்தேன். கட்டையிலே போற காய் கறிக்காரனைக் காணவே இல்லை....மணியோ பதினொண்ணு ஆயிடுச்சி. அதுக்கு மேலே யாரைப் புடிச்சிக் கடைக்கு அனுப்ப ? அவுவ பன்னெண்டு மணிக்கெல்லாம் வந்து எலையெப் போடுன்னு பறப்பாவளேன்னு, ரெண்டு வாளக்காய் கெடந்தது; அதை வறுத்து வச்சேன்...எலை முன்னே வந்து உக்காந்ததும் மனுசனுக்கு ஏன்தான் அப்பிடி ஒரு கோவம் வருமோ, ஆண்டவனே.... 'எளவெடுத்த வாளைக்காய்க் கருமந்தானா ?ன்னு தட்டோட வீசி, எறிஞ்சாவ பாருங்க...நா என்னக்கா பண்ணுவேன் என்று சொல்லும்போதே கண்களை முந்தானையால் கசக்கிக்கொண்டாள், கடைசியிலே....நானும் அதெக் கையாலே தொடலே...அப்பிடியே கெடக்கு.... '

மரகதம் எதையெதையோ சொல்லி வருத்தப்படவே, பங்கஜம் பேச்சைத் திருப்பினாள்:

'அது கெடக்கு...ஒன் நாத்தனார் முளுவாம இருந்து 'அபார்ஸ 'னாயி ஆசுபத்திரியிலே கெடக்கான்னியே....என்னாச்சு ?...காயிதம் வந்துதா... '

மரகதம் குரலின் தொனி இறங்கி ஒலிக்கப் பேசினாள்:

'பாத்தீங்களா, மறந்தே போனேனே...அபார்ஸனும் இல்லே, கிபார்ஸனும் இல்லே.... அவளுக்குத்தான் ஏழுமாசம் ஆயிடுச்சே...என்னாநடந்துதோ.... காத்தாலேருந்தே வயித்துப் புள்ளெ அசையிலியாம்---தடபுடலா போயி ஆசுபத்திரிக்கிக் கொண்டு போயிருக்காவ.... வயித்தை அறுத்து.....

----மிகவும் மும்முரமாக சம்பாஷணை 'கிளைமாக்ஸ் ' அடையும் தருணத்தில் வாசற்படியில் செருப்பின் மிதியோசை கேட்டது ' --சப்தத்திலிருந்தே, வருவது தன் கணவர்தான் என்பதைப் புரிந்துக்கொள்வாள் பங்கஜம்---ரெண்டு பெணகளும் எழுந்து நின்றனர்.

பங்கஜம் அம்மாளின் கணவன் சதாசிவம் பிள்ளையும், மகன் சோமுவும் திருநீறு துலங்கும் நெற்றியுடன் சிவப் பழங்களாய் உள்ளே நுழைந்தனர்.

மரகதம் குரலைத் தாழ்த்தி ரகசியம் பேசுவது போல் கூறினாள்:

'ராஜியை அனுப்புங்க அக்கா.....வாளைக்காய் குடுத்தனுப்பறேன் சோமுவுக்கு... '

'எதுக்கம்மா ? என்று தயங்கினாள் பங்கஜம்.

'தம்பிக்குத்தான்...கெடக்கு, ராஜியை அனுப்புங்க அக்கா..... ' என்று புன்னகையுடன் கூறிவிட்டு உள்ளே போனாள் மரகதம்.

அடுக்களைக்கு வந்த பங்கஜம், மகனுக்கும் கணவனுக்கும் இலையிட்டு, மணைபோட்டு....

'ஏட்டி, ராஜி ' அடுத்த வீட்டு அக்கா, என்னமோ தாரேன்னா...போயி வாங்கியா... ' என்றாள்.

'என்னது ?....என்ன வாங்கியாரச் சொல்றே, இன்னேரத்திலே.... ' என்று அதட்டல் குரல் போட்டார் பிள்ளை.

'அதுவா ? நீங்க பெத்து வச்சிருக்கீங்களே சைவப்பளமா, ஒரு பிள்ளை, அதுக்கு, சாதத்துக்குத் தொட்டுக்க ஒண்ணுமில்லே...அதுக்காவத்தான்...இல்லாட்டி தொரை கோவிச்சிக்குவாரில்லே.... ' என்று இரைந்தாள் பங்கஜம்.

---அவளுக்குத் தெரியும், பிள்ளையிடம் எந்தச் சமயத்தில் எந்த ஸ்தாயியில், எந்த பாவத்தில் குரலை முடுக்கிப் பேசினால், சொன்னதை அவர் ஏற்றுக்கொள்வார் என்று.

முற்றத்தில் கைகால் அலம்பிக்கொண்டிருந்த சோமு இந்த அஞ்ஞானிகளுக்காக வருந்துவதுபோல் மெல்லச் சிரித்தான். பிறகு, மாடத்திலிருந்த திருநீற்றை அள்ளிப் பூசிக்கொண்டு கூடத்திலிருந்த திருநீற்றை அள்ளிப் பூசிக் கொண்டு கூடத்திலிருந்த படங்களின் முன் நின்று 'அருட்சோதி தெய்வமென்னை ' என்று கசிந்துருக ஆரம்பித்தான்.

சோமுவுக்கு வயது பதினைந்துதான்---அதுதான் மனிதனுக்குப் 'பித்து 'ப் பிடிக்கும் பருவம்.

---அது சமயப் பித்தாகவோ, கலைப் பித்தாகவோ, அரசியல் பித்தாகவோ அல்லது பெண் பித்தாகவோகூடப் பிடிக்கலாம் '

சோமுவுக்கு அங்க வளர்ச்சிகளும், ஆண்மை முத்திரைகளும் ஏற்படும் பருவம் அது. முகம் குழந்தை மாதிரிதான் இருந்தது. உடலிலும் மனசிலும் சதா ஒரு துடிப்பும் வேகமும் பிறந்தது. மனம் சம்பந்தமில்லாத ஸ்தாயிகளிலெல்லாம் சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது. உலகையும், வாழ்வையும் அறிய உள்ளம் பரபரத்தது. ஏதோ ஒரு இடத்தைத் தொட்டவுடனே எல்லா இடத்தையும் தொட்டுவிட்டதாக எண்ணி இறுமாந்தது. 'தான் புதிதாக அறிந்த விஷயங்கள் எல்லாம் புதிதாகப் பிறந்தவை ' என்று நம்பி, அவற்றை மற்றவர்கள் அறியமாட்டார்கள் என்ற எண்ணத்தினால், மற்றவர்களைவிடத் தன்னை உயர்த்திப் பாவித்தது. மனசில் வாழ்வும், உற்றாரும், உறவினரும் ---எல்லாமே வெறுப்புத்தான், சதா நேரமும் 'சிடுமூஞ்சி 'யும் கலகலப்பின்மையும், எதையோ நினைத்து ஏங்குவதுபோலவும், ஏகாந்தத்தை நாடுவதும்.... வீடே வெறுத்தது '

சோமுவுக்கு வேதாந்தப் பித்துதான் '

பொழுதோடு வீட்டுக்கு வராமல் பள்ளிக்கூடத்திலிருந்து ஓடக்கரைக்கும், கொய்யாத் தோப்புக்கும் போய் விளையாடிவிட்டு இரவு ஏழு மணிக்கோ, எட்டு மணிக்கோ வீடு திரும்பி, ஆடிய களைப்பில் உண்ட மயக்கத்துடன் உறங்கிப் போவதையே வழக்கமாக கொண்டிருந்த சோமு போன வருஷம் எட்டாம் வகுப்பில் 'கோட் ' அடித்து விட்டான்.

வீட்டில் வசவுகளும் கண்டிப்பும் அதிகமாகி இனிமேல் பள்ளிக்கூடம் விட்டவுடன் நேரே வந்து வீட்டு வாசலைத்தான் மிதிக்கவேண்டும் என்ற கட்டளை பிறந்தது. இரவு சாப்பாடு வரை படிக்கவேண்டும் என்ற தண்டனை வேறு.

வீட்டுக் கூடத்தில் அவனது தம்பிகளான சீனாவும் ரமணியும் கொஞ்ச நேரம் படித்துவிட்டு, மற்ற நேரமெல்லாம் தங்கை ராஜியுடன் விளையாடிக்கொண்டிருக்க, சோமு மட்டும், துயரமும் கவலையும் தோய்ந்த முகத்துடன் --- புத்தகத்தையும், சன்னல் வழியே வெளியுலகத்தையும் பார்த்தவாறு -- தந்தையின் உத்தரவை மீற முடியாமல் படித்துக் கொண்டிருப்பதைக் கண்ட பங்கஜம் அம்மாளுக்குப் பாவமாய் இருந்தது.

'போதும் ' நீ படிச்சிக் கிளிக்கிறது. கொஞ்சம் காத்தாட வெளியிலே போயி வா....உம்... ' என்று அவன் கையிலிருந்த புத்தகத்தை பிடுங்கி வைத்தாள்.

சோமு தந்தையை எண்ணித் தயங்கி நின்றான்.

'நீ போயிட்டு வா....அவுக வந்தா நா ' சொல்லிக்கிறேன், அவுக மட்டும் வீட்டிலேயேதானே இருக்காவ ?.... கோயிலுக்கு போவாம அவுவளாலே, ஒரு நாளு இருக்க முடியுதா ?.... நீயும் போயி அந்த நடராஜா கிட்டே 'எனக்கு நல்ல புத்தியெயும், தீர்க்காயுசையும், படிப்பையும் குடுடா ஆண்டவனே 'ன்னு வேண்டிக்கிட்டுவா....அவுவ வந்தா நான் சொல்லிக்கறேன்.

அவள் சொல்லி முடிக்கும் முன் சட்டையை மாட்டிக் கொண்டு ஒரே ஓட்டம்....

'சீக்கிரம் வந்துடுடா சோமு... ' என்று இரைந்து கூவிச் சொல்லும் தூரத்துக்குப் போய்விட்டான் அவன். காதில் விழுந்ததோ, என்னவோ...

எட்டு மணிக்கு, சதாசிவம் பிள்ளை வரும்போதோ, 'சோமு எங்கே ?.... ' என்று கேட்டுக்கொண்டு வந்தார்.

'ஆமா.... சோமு சோமுன்னு அவனை வறுத்துக் கொட்டிக்கிங்க.... அவனுக்கு மட்டும் வீடே கதியா ?..... நான்தான் என்ன பாவம் பண்ணிப்பிட்டோ இந்த ஜெயில்லே கெடக்கேன்.... ஒரு கோயில் உண்டா, கொளம் உண்டா ?.... திருநாள் உண்டா, பெருநாள் உண்டா ?.... என் தலைவிதி ஒங்களுக்குகெல்லாம் உளைச்சிக் கொட்டிச் சாகணும்னு..... என் வயித்திலே பொறந்தததுக்குமா, அந்த பாவம்.... பிள்ளையப் பார்த்தா பாவமா இருக்கு.... என்ன தான் அதிகாரம்னாலும் இப்பிடியா ? ' என்று கண்ணைத் துடைத்து. மூக்கைச் சிந்தி, முந்தானையை மடக்கி, முன்கையை நீட்டிக்கொண்டு எழுந்து வந்தாள் பங்கஜம்.

'எங்கே சோமுன்னுதானே கேட்டேன் ' என்று பம்மிப் பதில் கொடுத்தார் பிள்ளை.

----இனிமேல் விஷயத்தைத் தெரிவித்தால் ஒன்றும் சொல்லமாட்டார் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பிறகு சாந்தமான குரலில் முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு சொன்னாள் பங்கஜம்;

'கோயிலுக்கு போயிருக்கான்... நான் தான் அனுப்பிச்சேன். நீங்க அவனை ஒண்ணும் மூஞ்சியைக் காட்டாதீங்க. பையனைப் பார்த்தா பாவமா இருக்கு.... '

முற்றத்தில் இறங்கி கால் அலம்பிக்கொண்டிருந்த பிள்ளை, 'சரி, சரி, நானே நெனச்சேன்... நாளையிலேருந்து வடக்கே இருந்து ஒரு பெரிய மகான் வந்து 'லெக்சர் ' பண்ணப்போறார்.... அவர் பேரு அருளானந்தராம்.... பெரிய இவுராம்.... '

பங்கஜம் தந்த டவலில் முகம் துடைத்துக்கொண்டார் மாடத்திலிருந்த திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டார். 'சரி, எலையெப் போடு.....என்ன வச்சிருக்கே ?.... ' என்று சொல்லிவிட்டு, படங்களுக்கு முன்னே கரம்கூப்பி நின்றார்.

'கத்திரிக்காய் வதக்கிக் கொளம்பு....அப்பளம் ' '

---கண்மூடித் தியானத்தில் ஆழ்ந்திருந்த அவர் முகத்தில் ஒரு சுளிப்பு '.....

சேவிப்பு முடிந்தது; முகம் கடுகடுத்தது '

'என்னடி வச்சிருக்கேன்னே.... '

'கத்திரிக்காய் வதக்கிக் கொளம்பு; அப்பளம் ' '

'சனியன்.....ரெண்டு கருவாடு கூடவா கெடைக்கலே....அதுகூடப் போட்டுக் கொதிக்க வைக்க... சீ சீ, நாளு பூரா மனிசன் கொரங்குத் தீனியா திம்பான்.... ' என்று சலித்துக் கொண்டார்.

----சதாசிவம் பிள்ளை சிவபக்தர்; நர மாமிசம் கேட்காமலிருக்கிறாரே போதாதா ?....

மறுநாளிலிருந்து சோமு தந்தையுடன் கோயிலுக்குச் செல்ல ஆரம்பித்தான்.

'சாமி ஆண்டவனே....இந்த வருஷம் நான் பாஸாகணும் ' என்று ஆரம்பித்த பக்தி, ஜீவகாருண்யமே திறவுகோல் என்று வளர்ந்து, 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் ' என்று சோமுவின் மனத்தில் கனியலாயிற்று.

சுவாமி அருளானந்தரின் பிரசங்கம் தொடர்ந்து இருபத்தியேழு நாட்கள் ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது அல்லவா ?....

சோமுவுக்கு ஞானம் பொழிய ஆரம்பித்தது.

'ஆமாம்....தாய் தந்தை, உடன்பிறந்தார், செல்வம், சுற்றம், உலகம் எல்லாம் பொய்தானே.... சாவு வரும்; அது மட்டும்தான் உண்மை. அந்த பெரிய உண்மைக்கு நேரில் இவையெல்லாம் அற்பப் பொய் '

'படிப்பு ஏன் ?....சம்பாதனை எதற்கு ?.....

'முடிவில் ஒருநாள் செத்துப்போவேனே.... அப்பொழுது இவற்றில் ஏதாவது ஒன்று....யாராவது ஒருவர் என்னை மரணத்திலிருந்து காப்பாற்ற முடியுமா, என்ன ?....

'தாய் அல்லது தந்தை இவர்களில் யாரேனும். யாராயிருந்தாலும் முடிவில் எல்லோரும் ஒருநாள் செத்துப் போவார்கள்...இவர்களில் யாரையாவது நான், அல்லது என் கல்வி, எனது சம்பாதனை காப்பாற்ற இயலுமா என்ன ?....

'முடியாது ' '

'அப்படியானால் இவர்களுக்கும் எனக்கும் என்ன உறவு ?....நான் யார் ?....இவர்கள் யார் ? வீடு என்பதும், பந்துக்கள் என்போரும் அந்நியர் என்போரும், இன்பம் என்பதும் துன்பம் என்பதும்.....

'எல்லாம் வெறும் பொய் ' '

'மரணத்தை மனிதன் வெல்லமுடியாது. ஆனால் ஆசைகளைத் துறப்பதன் மூலம் மனிதன் கடவுளை அடையமுடியும்.

'கடவுளை அடைவது என்றால் ?.....

'கடவுளை அடைவது என்றால்--- உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து இப்படிப்பட்ட பாசபந்தச் சுழலில் சிக்கி, பாவகிருத்தியங்கள் புரிந்து மீளா நரகத்தில் விழாதிருக்க, பிறவி நீத்துக் கடவுளின் பாதாரவிந்தைகளை அடைந்து.....

'ஆமாம்....ஆசைகளைத் துறக்கவேண்டும் ' இந்த அற்ப வாழ்வில் ஆசைகொள்ள என்ன இருக்கிறது ?.... '

---அந்த இளம் உள்ளம் ஏகாந்தத்தை நாடித் தவித்தது. அவன் கற்பனையில் ஒரு தவலோகமே விரிந்தது.....

....ஹிமவானின் சிகரத்தில், பனிச் செதில்கள் பாளம் பாளமாய், அடுக்கடுக்காய் மின்னிப் பளபளக்கும் அந்தப் பாழ்வெளியில், மேகம் திரண்டு ஒழுகுவதுபோன்ற---ஹிமவானின் புத்திரி கோதிவிடும் வெண் கூந்தல் கற்றைபோல் விழும் --- நீரருவியில், அதன் அடிமடியில் ஓங்காரமாய் ஜபிக்கும் பிரணவ மந்திர உச்சாடனம் போன்ற நீர்வீழ்ச்சியின் இரைச்சலில், சிவனின் புகழ்பாடும் எண்ணிறந்த பறவை இனங்களின் இன்னிசையில்.... எதிலுமே மனம் லயிக்காமல், பற்றாமல், உலகத்தின் அர்த்தத்தையே தேர்ந்த பெருமிதத்தில், தெளிவில் மின்னிப் புரளும் விழிகளை மூடி, இயற்கையின் கம்பீரத்துடன் நிஷ்டையில் அமர்ந்திருக்கிறாரே அந்த ரிஷிக் கிழவர்.... அவர்தான் லோக குரு '

---அருளானந்த சுவாமிகள்விட்ட கவிதாநயம் மிகுந்த சரடு சோமுவைப் பின்னிப் பிடித்துக் கொண்டது.

அங்கே சென்று லோக குருவைத் தரிசித்து அவர் பாதங்களிலே வீழ்ந்து, அவருக்கு பணிவிடை செய்ய வேண்டுமாம். அதையே பிறவியின் பயனாகக் கொள்ள வேண்டுமாம். மற்றக் கருமங்கள் யாவையும் மறந்து ஆசைகளை, பந்தங்களை, தன்னை, உலகை யாவற்றையும் துறந்து.....

---துறந்துவிட்டால் லோக குருவாகப்பட்டவர் சோமுவை ஒரே தூக்காகத் தூக்கி, இமயமலைக்கு மேலே, எவரஸ்டையும் தாண்டி, கைலாயத்திற்கும் அப்பால் சுவர்க்கத்திற்கு அனுப்பி விடுவாரல்லவா ?....

'சம்போ மஹாதேவா '..... ' என்றவாறு படுக்கையை விட்டு எழுந்தான் சோமு.

'ஏது, பிள்ளையாண்டான் இன்னக்கி இவ்வளவு விடிய எழுந்திரிச்சிட்டாரு. வா வா ' எண்ண தேச்சுக்க.... ' என்று கூப்பிட்டாள் பங்கஜம்.

'இந்த கட்டைக்கு இதெல்லாம் எதற்கு ? ' என்று கேட்க வேண்டும் போல் தோன்றியது. 'இன்றைக்கு ஒரு நாள்தானே ' என்ற சமாதானத்தில் அவன் ஒன்றும் பேசவில்லை.

'என்ன நாளைக்கு ?.... நாளைக்கு என்ன ஆய்விடப்போகிறாய் ? '

அதை நினைக்கும்பொழுதே மாய வாழ்வை உதறியெறிந்த எக்களிப்பு முகத்தில் தோன்றியது.

'ஏ, மூதி ' நிஜாரோட நிக்கிறதைப் பாரு... போயி கோமணத்தைக் கட்டிக்கிட்டு வா... '

'அப்பா ' தலையிலே எவ்வளவு முடி ?... முடி வெட்டிக்கிட்டா என்னா ?... ' என்று முனகிக்கொண்டே தலையில் எண்ணெயை வைத்துத் தேய்த்தாள்.

'முடி வெட்டிக் கொள்வது என்ன, மொட்டையே அடித்துக்கொள்ள வேண்டியதுதான் ' ' என்று மனம் முணகியது.

--அவனுக்குத் தலைமுடி ஒரே அடர்த்தி. சுருள் சுருளாக, வளையம் வளையமாக, வாரிவிட்டால் வங்கி வங்கியாக...

'ஓங்க தாத்தாவுக்குத்தான் இந்த மாதிரி சுருட்டை முடி... '

--மகனின் முடிப் பெருமையைப்பற்றி அவள் அடிக்கடி பேசிக் கொள்வாள் '

'எல்லாப் பெருமையும் நாளைக்கு... '

-- 'சம்போ மகாதேவா ' என்று சோமுவின் மனம் கோஷித்தது.

'நாளைக்கு...நாளைக்கு ' என்று மனம் குதூகலித்துக் கொண்டிருந்தது.

அந்த 'நாளை ' யும் வந்தது.

மூன்று மாதங்களுக்குமுன் ஒரு 'பிளாஸ்டிக் பெல்ட் ' வாங்கவேண்டுமென்ற பெரும் லட்சியத்திற்காக, பள்ளிக் கூடத்தருகே விற்கும் வேர்க்கடலை, பட்டாணி, நாவற்பழம் இத்தியாதி வகையறாக்களைத் தியாகம் செய்து கிடைத்த காசையெல்லாம் சேர்த்துவைத்த செல்வம் மேஜை டிராயரில் 'புரூக்லாக்ஸ் ' டப்பியொன்றில் இருந்தது, அதை எடுத்து எண்ணிப் பார்த்தான். கிட்டத்தட்ட ஒரு ரூபாய் ' அந்தப் 'பாப மூட்டை ' யைச் சுமக்க மனமில்லாமல் தர்மம் செய்து விடுவது என்று தீர்மானத்தான் சோமு.

கொஞ்ச காலமாகவே அவன் தனது நண்பர்களை--அவர்கள் ஞானமேதுமறியா ஈனஜன்மங்கள் என்பதனால்--விட்டு விலகி ஒதுங்கி நடந்தான்.

உபாத்தியாயரோ-- 'மாணவர்களோடு சேர்ந்து கொச்சையாகவும் விரசமாகவும் கேலி பேசி மகிழும் அந்தத் தமிழ் வாத்தியார் இருக்கிறாரே, அவர் ரௌத்ரவாதி நரகத்துக்குத் தான் போகப்போகிறார் ' என்று டிக்கட் கொடுத்த புக்கிங் கிளார்க் மாதிரி முடிவு கட்டிவிட்டான் சோமு.

'ஊனைத் தின்று ஊனை வளர்க்கும் தகப்பனார் என்ன கதி ஆகப்போகிறாரோ ? ' என்று வருந்தினான்.

தாயா ?--அது ஒரு மூடாத்மா...

'இந்த அஞ்ஞான இருளில் அமிழ்ந்து கிடக்கும் மானிடப் பிறவிகளுக்கு மெய்ஞ்ஞான தீபத்தின் ஒளி என்றுதான் கிட்டுமோ ?... '

'ஸ்வாமி அருளானந்தரும், அவருக்கும் மேலாக ஹிமாலயத்தின் அடிவாரத்தில் தபஸில் லயித்திருக்கும் லோக குருவு இவ்விருவருக்கும் அடுத்தபடியாய்த் தானும் ஆகவேண்டிய பிறவி லட்சியம்... '

'சம்போ மஹாதேவா ' '

அடுத்த நாள் அதிகாலை, சட்டை நிஜார் அனைத்தையும் துறந்து--இடையில் ஒரு துண்டு மட்டும் உண்டு--மடியில் தனது 'மாயா செல் ' வத்தை முடிந்துகொண்டு, எல்லோரும் எழுந்திருக்கும் முன்னே சித்தார்த்தன் கிளம்பிச் சென்றது போல் நழுவினான் சோமு.

வெளியிற் கலக்க எண்ணி, வீட்டை வெளியேறிய சோமு நேரே மேலச் சந்நிதிக் கோபுரத்தடிக்குப் போனான்.

அங்கே ஒரு டஜன் பண்டாரங்கள் நின்றிருந்தன. அவர்கள் எல்லோருக்கும் தலைக்கு ஓரணாவாகத் தனது செல்வத்தைத் தானமிட்டுவிட்டு, தில்லைநாயகனுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு நேரே குளத்தங்கரைக்கு ஓடினான். அங்கே அரசமரத்தடியில் காலையிலிருந்து தவமிருக்கும் 'பழனிநாத ' னிடம், இருந்த சில்லரையைக் கொடுத்துவிட்டுக் குரு உபதேசம் கொள்வதுபோல் குனிந்து உட்கார்ந்தான்.

'குரு ' அவன் காதில் குனிந்து கேட்டார்:

'என்ன தம்பி...மொட்டையா ? '

'ஆமாம்... '

வேணாம் தம்பி... கிராப்பு அளகா இருக்கே '... '

--மாயையை வென்ற ஞானிபோல் அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தான் சோமு.

'மகனே ' என்றழைத்து உபதேசம் செய்யப் போவது போல் இருந்தது அவன் தோற்றம்.

'அப்பனே...முடியை இழக்க யோசனை செய்கிறோமே, முடிவில் ஒருநாள் இந்தச் சடலத்தையே வைத்து எரிப்பார்களே அதைப்பற்றிச் சிந்திக்கிறோமா ?... முடிதரித்த மன்னர்கள் எல்லாம்கூட முடிவில் ஒருநாள் பிடி சாம்பராய்த்தானே போனார்கள் ' என்று 'குரு உபதேசம் ' செய்துவிட்டுக் குனிந்து கொண்டான்.

--அவனுக்குத் தான் பேசியதை நினைக்கும்போது, பேசியது தான்தானா என்றே ஆச்சரியமாய் இருந்தது. 'என்ன ஞானம் ' என்ன ஞானம் ' ' என்று தன்னையே மனசுக்குள் பாராட்டிக் கொண்டான்.

'பேசிப் பயனில்லை; ஞானம் முற்றிவிட்டது '

நினைத்த நாவிதன் அவனைப் 'பக்குவ 'ப்படுத்த ஆரம்பித்தான்.

உச்சந்தலைக்குக் கீழே நாவிதனின் கத்தி 'கருகரு 'வென்று வழிந்து இறங்கும்போது எதிரில் பெட்டியின்மீது சாத்தி வைத்திருந்த கண்ணாடியில் முகம் கோரமாய்த் தெரிந்தது.

அதைப் பார்த்த சோமுவின் கண்கள் ஏன் கலங்க வேண்டும் ?.....

'சம்போ மகாதேவா ' என்று மனசுக்குள் முனகி, தன்னை அடக்கிக் கொண்டான்.

பிறகு, குளத்தில் இறங்கி நாலு முழுக்குப்போட்டு விட்டு 'ஜெய் சம்போ ' என்ற குரலுடன் கரையேறினான்.

பாசம், பந்தம், சுற்றம் சொந்தம், செல்வம், செருக்கு யாவற்றையும் இழந்த ஏகாங்கியாய் அவன் வடதிசை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

----ஆமாம்; இமயமலை அங்கேதான் இருக்கிறது '

'இமயமலை இங்கிருந்து ஆயிரம் மைல் இருக்குமா ?.....இருக்கலாம் ' '

'ஒரு மனிதன் ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து மைல் நடக்க முடியாது ?....நிச்சயமாக முடியும் ' '

'அப்படியானால் மொத்தம் நூறு நாட்கள்---அதாவது மூன்று மாதமும் பத்து நாட்களும்.... '

'இரண்டாயிரம் மைலாக இருந்தால்.... அதுபோல் இரண்டு மடங்கு '.... எப்படி இருந்தாலும் போய்விட வேண்டியதுதானே '.....பிறகு, என்ன யோசனை ?.... '

'போகும் வழியெல்லாம் எவ்வளவு புண்ணிய ஷேத்திரங்கள் '.... எவ்வளவு தெய்வ பக்தர்கள் '.... எவ்வளவு மகான்கள் '.... எவ்வளவு முனிவர்கள் '......

சோமு தனது புனித யாத்திரையைத் துவங்கி ஆறு மணி நேரமாகி இருந்தது. போகும் வழியில்.....ஆம்; ஹிமாலயத்தை நோக்கிப் போகும் வழியில்தான்----குறுக்கிடுகிறது பரங்கிப்பேட்டை '

அந்த நகரில் அன்று சந்தை '

சோமு கடைத்தெரு வழியாக நடந்து வந்துக்கொண்டிருந்தான்.

கிராமத்து மக்கள் கும்பல் கும்பலாகப் போவதும் வருவதுமாய்....ஒரே சந்தடி '

மூட்டை முடிச்சுகளுடன் பறந்து பறந்து ஓடுகிறவர்கள், கூடைச்சுமைகளுடன் ஒய்யாரமாய் கைவீசி நடக்கிறவர்கள், தோளில் உட்கார்ந்து கொண்டு கரும்பு கடிக்கும் பிள்ளைச் சுமையுடன் துள்ளி நடப்பவர்கள், கட்டை வண்டிகளில் அழிகம்பைப் பிடித்துக்கொண்டு நகத்தை கடித்தவாறு சிரித்துச் செல்லும் கிராமத்து அழகிகள், தெரு ஓரங்களில் குந்தி இருந்து வியாபாரம் செய்பவர்கள், கூடியிருந்து பேசி மகிழ்பவர்கள், வியாபராம் செய்தவாறு வேடிக்கை பேசுபவர்கள், விலை கூவியவாறு பாட்டுப் பாடுபவர்கள். வேடிக்கை பார்த்தவாறு வழிவட்டம் போடுபவர்கள், கேலி பேசிவாறு 'கேளிக்கை 'க்கு ஆயத்தமாகிறவர்கள்--- மனிதர்கள் திருநாள்போல் மகிழ்ந்திருந்தனர். வாழ்வின் உயிர்ப்பு எத்தனையோ கோலத்தில் வளைய வந்துகொண்டிருந்தது அங்கே.

வாய்க்காலைத் தாண்டுவது போல் வாழ்க்கையைத் தாண்டிவிடலாம் என்று எண்ணி வந்த சோமு அந்தச் சந்தையைக் கடக்கும்போது --- வாழ்க்கையின் அந்தக் காட்சிகளில் தன்னை மறந்து லயித்துவிட்டான்.

அதோ, அந்த மர நிழலில் --- ஓர் இளம்பெண் நாவல் பழத்தை அம்பாரமாய்க் குவித்து வைத்துக்கொண்டு விலை கூவி விற்கிறாள். நாவல் பழ நிற மேனி; அந்தக் கருமேனியில் --- அவள் முகத்தில் முத்துப் பற்களும், அவற்றிற்கு வரம்பமைத்த வெற்றிலைச் சாறூரும் உதடுகளும் எல்லோரையும் வலிய அழைத்து நாவற்பழம் தருகின்றன. அவளது கண்கள் வெள்ளை வெளேரென்று. அவற்றின் நடுவே இரண்டு நாவற்பழங்களைப் பதித்து வைத்ததுபோல் புரளும் கருவிழிகள்.....

அந்த விழிகள் சோமுவை, நாவல்பழத்தை வெறித்து நோக்கிய சோமுவின் விழிகளை நோக்கின.

'கல்கண்டு பளம்.....கருநாவப் பளம்....படி ஓரணா, படி ஓரணா.... ' என்று பாட்டுபாடி அவனை அழைத்தாள்.

'படி ஓரணா.... பரவாயில்லையே ...பள்ளிக்கூடத்துக்கு எதிரே வண்டியில் வைத்து நாலைந்து பழங்களைக் கூறுகட்டி கூறு காலணா என்று விற்பானே.... ' என்ற நினைவும் வரவே சோமுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

---அவனுக்கு நாவற்பழம் என்றால் உயிர் ' அதுவும் உப்புப் போட்டு தின்பதென்றால் ?....

அவன் வாயெல்லாம் நீர் சுரந்தது '

அதுவும் இந்தப் பழங்கள் '....

கன்னங்கரேலென்று, ஒரு பெரிய நெல்லிக்காய் அளவு..... கனிந்து லேசாக வெடித்த பழங்கள்... வெடிப்பின் இடையே சில பழங்களில், கறுமையும் சிவப்பும் கலந்த பழச்சாறு துளித்து நின்றது, பக்கத்தில் ஒரு சிறு கூடையில் உப்பும் வைத்திருந்தாள்...

கும்பலில் இருந்தவர்கள் காலணாவும் அரையணாவும் கொடுத்துக் கைநிறைய வாங்கிச் சென்றனர். சிலர் உப்பையும் சேர்த்துக் குலுக்கித் தின்றனர்.

அதோ, ஒரு கிழவர்....

அவர் வாயைப் பார்த்ததும் சோமுவுக்குச் சிரிப்பு வந்தது, அவர் மூக்குக்கும் மோவாய்க்கும் இடையே ஒரு நீளக்கோடு அசைந்து நெளிந்துகொண்டிருந்தது. அதுதான் உதடு, வாய், பற்கள் எல்லாம்....

'அரையணாவுக்கு பளம் குடு குட்டி ' ' அந்தக் கிழவர் பொக்கை வாயால் 'பளம் ' என்று சொல்லும்போது வெளியே தெரிந்த நாவையும் வாயின் அசைவையும் கண்ட சோமுவுக்குச் சிர்ப்புப் பொத்துக்கொண்டு வந்தது.

ஒரு காகிதத்தில் நாவல்பழத்தைப் பொறுக்கி வைத்து ஒரு கை உப்பையும் அள்ளித் தூவிக் கிழவரிடம் கொத்தாள் நாவற்பழக்காரி.

'ஏ, குட்டி, கெளவன்னு ஏமாத்தப் பாக்கிறியா ? இன்னம் ரெண்டு பளம் போடுடி...வயசுப் புள்ளைவளுக்கு மட்டும் வாரி வாரிக் குடுக்கிறியே... ' என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டார் கிழவர்.

'அடி ஆத்தே....இந்தக் கெழவனுக்கு இருக்கற குறும்பைப் பாரடி அம்மா ' ' என்று கையைத் தட்டிக் கன்னத்தில் வைத்துக்க்கொண்ட நாவர்பழக்காரி கண்களை அகல விரித்தவாறு சிரித்தாள்.

'மீதி சில்லறை குடு குட்டி...என்னமோ ஆம்படையான் சம்பாதிச்சுக் குடுத்த காசு கணக்கா வாங்கிப் போட்டுக்கிட்டு நிக்கறியே.... ' என்றார் கிழவர்.

'ஏ, தாத்தா...என்னா வாய் நீளுது.... ' என்று கிழவர் கன்னத்தில் லேசாக இடித்தாள் பழக்காரி.

'பாத்தியா...ஒரு ஆம்பிளை கன்னெத்தெ தொட்டுட்டா...எம்மேலே அம்மாம் பிரியமா, குட்டி... ? ஒங்கப்பங்கிட்டே சொல்லி நாளு பாக்கச் சொல்றேன்...எந்தப் பய கால்லேயாவது சீக்கிரம் கட்டாட்டி நீ எம்பின்னாலே வந்துடுவே போல இருக்கே... ' என்று சொல்லிக் கிழவர் அனுபவித்துச் சிரித்தார். பழக்காரி வெட்கத்தினால் இரண்டு கைகளினாலும் முகத்தை மூடிக்கொண்டாள்.

'போ...தாத்தா ' ' என்று கண்டிப்பதுபோல் கிழவரைப் பார்த்தாள்.

கிழவர் சிரித்துக்கொண்டே, கையிலிருந்த பழங்களில் ஒன்றை எடுத்து--உப்பில் நன்றாக அழுத்தி எடுத்து--இரண்டு விரல்களால் வாய்க்கு நேர உயர்த்திப் போட்டுக் குதப்பிச் சப்பிக் கொட்டையைத் துப்பினார்...

'அடெ, இத்தினூண்டு கொட்டை ' பழம், நல்ல பழம் தான் ' --கிழவரின் வாயசைப்பையும் சுவை ரசிப்பையும் கவனித்து அனுபவித்த சோமு வாயில் சுரந்த எச்சிலைக் கூட்டி விழுங்கினான்.

இந்த மொட்டைத்தலைச் சிறுவன் தன்னையே கவனித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்த கிழவர்.

'இந்தாடா, பையா... ' என்று சோமுவிடம் ஒருகை பழத்தை அள்ளிக் கொடுத்தார்.

சோமுவுக்குச் செவிட்டில் அறைந்ததுபோல் இருந்தது ' அந்த நாவற்பழக்காரி அவனைப் பார்த்தாள். சோமு, கிழவனையும், நாவற்பழக்காரியையும் மாறி மாறிப்பார்த்தான். அவனுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது '

'நா ஒண்ணும் எச்சப் பொறுக்கி இல்லே... ' என்று அவனிடம் நீட்டிய கிழவரின் கையிலிருந்த பழத்தைத் தட்டிவிட்டான்.

கிழவர் சிரித்தார்:

'அட, சுட்டிப்பயலே...என்னமோ ஒன்னெப் பாத்தா ஆசையா இருந்தது...எம் பேரப்பையன் மாதிரி...கோவிச்சிக்கிட்டியே...நான் ஒன் தாத்தா மாதிரி இல்லே... ' என்று வாஞ்சையுடன் அவன் தலையைத் தடவிக் கொடுத்தார்.

சோமுவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

'ஒங்க தாத்தாவுக்குத்தான் இந்தமாதிரி சுருட்டை மயிர் ' என்று சொல்லும் அவன் தாயின் குரல் செவிகளில் ஒலித்தது.

'இந்தாடா பையா...ஏதுக்கு அளுவுறே ? நீ யாரு வூட்டுப் பையன்... ' என்றார் கிழவர்.

சோமு ஒன்றும் பதில் பேசவில்லை.

'ஒனக்கு என் கிட்டே கோவம், இல்லே ?...பரவாயில்லே...தாத்தாதானே...இந்தா, பழம் தின்னு...
'

'ஊஹ்உம்...எனக்கு வேணாம் '

'சேச்சே... அப்பறம் எனக்கு வருத்தமா இருக்கும். ஒண்ணே ஒண்ணு ' ' என்று அவன் கையில் வைத்தார். அவனால் மறுக்க முடியவில்லை. அதை வாங்கி வாயில் போட்டுக் கொண்டு அந்த இடத்தில் நிற்க முடியாமல் நகர்ந்தான்.

'பாவம்...யாரோ அனாதை ' மொகத்தைப் பாத்தா பாவமா இருக்கு... '

'நான் அனாதையா ?...பிச்சைக்காரனா ?... ' வாயிலிருந்த பழத்தைச் சுவைத்துக் கொட்டையைத் துப்பினான். 'அந்தக் கிழவனின் முகத்தில் அறைவதுபோல் நானும் ஒரு காலணாவுக்குப் பழம் வாங்கித் தின்றால் ?... '

'திங்கலாம்...காசு ?... '

--அவன் தனது மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டே நடந்தான்.

அதோ, அந்த மரத்தடியில் வேர்க்கடலை, பட்டாணி வறுக்கிறார்கள். அப்பா '...என்ன வாசனை ?...

--திடாரென அவன் மனசில் மின்னல்போல் அந்த எண்ணம் விசிறி அடித்தது.

'நாம் எங்கே போகிறோம் ?...நமது லட்சியம் என்ன ?

--அவனுக்கு நெஞ்சில் 'திகீல் ' என்றது. அவனே தேர்ந்துகொண்ட அந்த முடிவு அவனை இப்பொழுது முதல் தடவையாக மிரட்டியது ' ஒருகணம் சித்தம் கலங்கியது; உணர்வற்று நின்றான், உடலிலும் நெஞ்சிலும் ஒரு துடிப்புப் பிறந்தது. தன்னை ஏதோ ஒன்று பின்னாலிருந்து திரும்ப அழைப்பதுபோல் உணர்ந்தான். அந்த அழைப்பின் பாசம், பிடிப்பு...அதிலிருந்து பிய்த்துக்கொண்டு விலகிவிட எண்ணிக் கண்ணை மூடிக்கொண்டு ஒரே ஓட்டமாய்ச் சந்தைத் திடலைவிட்டு ஓடினான்...கடைத்தெருவைக் கடந்து சாலை வழியே வந்தபின் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

வெகுதூரத்தில், வாழ்வின் கீதம்போல் ஒலிக்கும் சந்தை இரைச்சல் அவன் காதுகளில் மெல்லெனக் கேட்டுக் கொண்டே இருந்தது.

அவன் ஏன் அழுதுகொண்டே நடக்கிறான் ?...

சிதம்பரத்திலிருந்து கடலூர் செல்லும் சாலையில் கிட்டத்தட்ட, பதினைந்தாவது மைலிலுள்ள ஆலப்பாக்கத்தருகே புழுதி படிந்த உடலுடன் நடக்க முடியாமல் தளர்ந்து தள்ளாடி நடந்து வருவது--ஹிமாலயத்தை நாடிச் செல்லும் ஞானச் செம்மல் சோமுதான்.

நடக்க முடியவில்லை; வயிற்றைப் புரட்டுகிறது ஒரு சமயம், வலிக்கிறது மறுசமயம்...பசிதான் '

--சுமைகளை உதறி எறிந்துவிட்டு வந்த சோமுவுக்கு,

சோறில்லாமல் வெற்றுடல் சுமையாய்க் கனக்கிறது '

இனிமேல் ஒரு அடி எடுத்து வைக்க முடியாது என்ற ஸ்தம்பிப்பு ' நிற்கிறான்...பார்வை வெகுதூரம் வரை ஓடி வழியை அளக்கிறது....

பார்வை மறைகிறதே.....கண்ணீரா ? பசிக் கிறுகிறுப்பா ?....

இமயமலைக்கு இன்னும் ரொம்ப தூரம் இருக்கிறது '

சிரமப்பட்டு ஒரு அடி எடுத்து வைக்கக் காலை அசைத்தவுடன் காலில் பெருவிரலிலிருந்து அடித்தொண்டை வரைக்கும் ஒரு நரம்பு--கொரக்குப் பிடித்து சுண்டி இழுப்பது போல்....

'ஆ ?....என்ன வலி '..... ' பல்லைக் கடித்துக்கொண்டு தரையில் மெல்ல உட்காருகிறான்.

----எத்தனை நாழி ?....

எழுந்திருக்க மனமும் வரவில்லை; உடலும் வரவில்லை.

இருள் பரவ ஆரம்பித்தது;

மேற்குத் திசையில் வானம் சிவந்து கறுத்தது. அந்தச் சாலையின் நெடுகிலும் வளர்ந்து படர்ந்திருந்த ஆல விருக்ஷத்தின் விழுதுகள் சடைசடையாய் ஆடிக்கொண்டிருந்தன. இருளைக் கண்டதும்.... பாவம், பிள்ளைக்குப் பயத்தால் மனத்தில் உதறல் கண்டுவிட்டது.

அந்தச் சாலையில் விளக்குகளும் கிடையாது. 'இன்று நிலாவும் இல்லை ' என்று சொல்வதுபோல் நான்காம் பிறை கடைவானில் தலைக்காட்டிவிட்டு கீழிறங்கிக் கொண்டிருந்தது. 'எங்காவது ஒரு குடிசை கண்ணுக்குத் தெரிகிறதா ? ' என்று பார்த்தான்....ஹூம், இன்னும் இரண்டு மைலாவது நடக்க வேண்டும்.

'இரவு படுக்கை ?..... '

---வீட்டில் படுக்கும் மெத்தையும், பஞ்சுத் தலையணையும், கம்பளிப் போர்வையும் நினைவுக்கு வந்தன.... 'இதெல்லாம் என்ன விதி '..... '

'பசிக்கிறதே '.... '

'யார் வீட்டிலேயாவது போயி, சம்போ மகாதேவான்னு நிக்கிறதா என்ன ? '

'யாராவது பிச்சைக்காரன்னு நெனைச்சி வெரட்டினா ?.... '

வீட்டில்--மெய்ஞ்ஞானம் கைவரப்பெறாத அம்மா, பாசத்தை விலக்க முடியாமல், மகனென்ற மாயையில் சிக்கி பக்கத்தில் அமர்ந்து பரிந்து பரிந்து சோறிட்டுப் பறிமாறுவாளே---அந்த அம்மா, ஆசை அம்மா---அவள் நினைவு வந்ததும்....

'அ...ம்....மா... ' என்று அழுகையில் உதடுகள் விம்மித் துடித்தன '

'சீ ' இதென்ன பைத்தியக்காரன்போல் ஓடிவந்தேனே ' இதென்ன கிறுக்கு ?.... ' என்று தன்னையே சினந்துகொண்டான்.

இந்நேரம் ஊரில், வீட்டில் அம்மா, தன்னைக் என்னென்ன நினைத்து, எப்படியெப்படிப் புலம்பி அழுவாள்.....

அப்பா ? அவர் ஊரெல்லாம் தெருத் தெருவாய் அலைந்து திரிந்து எல்லோரிடத்திலும் 'சோமுவைப் பார்த்தீர்களா சோமுவை... ' என்று விசாரித்தவாறு சாப்பிடாமல் கொள்ளாமல் ஓடிக் கொண்டிருப்பார்...

'ஐயோ ' என்னால் எல்லாருக்கும் எவ்வளவு கஷ்டம் ' ' என்று எண்ணிய சோமு.

'அம்மா '...நா வீட்டுக்கு வந்துட்றேன் அம்மா...ஆ...ஹ்உ...ம்... ' என்று ஜன நடமாட்டமே இல்லாத அந்தச் சாலையில், திரண்டு வரும் இருளில் குரலெடுத்துக் கூவி அழுதான்.

சிறிது நேரம் மனம் குமுறி அழுது சோர்ந்தபின், மனம் தெளிந்து புத்தி செயல்பட ஆரம்பித்தது.

நேரமோ இருட்டுகிறது, நடந்துவந்த வழியை எண்ணினான். 'மீண்டும் திரும்பி நடப்பதென்றால் வீட்டுக்குப் போய்ச் சேருவது எப்போது ?......எப்படியும் விடியற்காலையிலாவது வீட்டுக்குப் போயாக வேண்டுமே...இந்த இருட்டை, ராத்திரியைக் கழிப்பது எங்கே ?...

அவனுக்கு அழுகை வந்தது.

'இதெல்லாம் என்ன விதி ? '

'விதியல்ல கொழுப்பு ' ' என்று பல்லைக் கடித்துக் கொண்டு வாய்விட்டுச் சொன்னான்.

பக்தி வெறியும் வேதாந்தப் பித்தும் சற்றுப் பிடி தளர்ந்தன.

'பெற்றோர்க்கும் எனக்கும் என்ன பந்தம் ? '

'பெற்ற பந்தம்தான் ' பந்தமில்லாமலா என்னை வளர்த்தார்கள் ? நான் சிரிக்கும்போது சிரித்து, அழும்போது அழுது... '

'பாசத்தை யாரும் வலியச் சென்று ஏற்காமலே பிறக்கிறதே...அதுதானே

பந்தம் ' '

'ஆமாம் பந்தங்கள் இருந்தால்தான், பாசம் கொழித்தால்தான் பக்தியும் நிலைக்கும். '

'பந்தமும் பாசமும் பொய்யென்றால், ஸ்வாமி அருளானந்தரின் மீதும், லோக குருவின்மீதும், பரம்பொருளின் மீதும் கொண்டுள்ள பக்தி...அதுவும் ஒரு பாசம்தானே ? '

சாலையில் கவிந்திருந்த இருளில் மரத்தடியில் அமர்ந்து தன்னைச் சூழ்ந்து பின்னிக்கொண்டிருந்த வேதாந்தச் சிக்கல்களையும், தத்துவ முடிச்சுகளையும் அவிழ்த்து, சிக்கறுத்துத் தள்ளித்தள்ளித் தன்நிலை உணர்ந்துகொண்டிருந்த சோமு, இருளும் நன்றாகப் பரவிவிட்டது என்று உணர்ந்தான்.

கண்ணுக்கெட்டிய தூரம் இருளின் கனம்தான் தெரிந்தது. வெகு தொலைவில் ரயில் சப்தம் கேட்டது. வானத்தில் சிதறிக் கிடக்கும் நட்சத்திரச் சிதைவு இருளின் கருமையை மிகைப்படுத்திக் காட்டின. யாரோ ஒரு பிரம்ம ராக்ஷஸனின் வரவுக்காக 'பாரா 'க் கொடுத்து திண்டுமுண்டான ராக்ஷசக் கூட்டம் அணிவகுத்து நிற்பதுபோல் அசையாமல் தோன்றும் மரங்களின் கரிய பெரிய பரட்டைத் தலைகளின் மீது ஜிகினா வேலை செய்ததுபோல் மின்மினிப் பூச்சிகள் கூட்டமாய் மொய்த்தன.....

திடாரென் 'சரசர 'வென்ற அந்தச் சப்தம் '.....எங்கிருந்து வருகிறது ?....

சோமுவின் கண்கள் இருளைக் கிழித்து ஊடுருவின.... காதுகள் கூர்மையாயின....

'எங்கே '....என்னது ?..... '

'அதோ....அதுதான்; அதுவேதான் ' '

---சாலையின் வலது புறத்தில்---சோமு உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு நேரே பத்தடி தூரம் தள்ளி---கடலைக் கொல்லையிலிருந்து மேலே உயரும் சாலைச் சரிவில், உதிர்ந்து நிரவிக் கிடக்கும் ஆலிலைச் சருகுக் குவியலின் நடுவே, நெல்லுக் குத்தும் மர உலக்கை ஒன்று லாகவம் பெற்று நெளிவதைப்போல நகர்ந்து வந்தது....இருளில்கூட என்ன மினுமினுப்பு '

'பாம்பு '....தப்பு....தப்பு.....சர்ப்பம்.... சர்ப்ப ராஜன்.... ' வாய் குழறிற்று. காலும் கையும் தன் வசமிழந்து உதறின. சாய்ந்து உட்கார்ந்திருந்த அடிமரத்தில் முதுகை ஒட்டிக் கொண்டு எழுந்தான். எழுந்திருக்கும்போது மொட்டைத் தலையில் 'நறுக் 'கென்று மரத்தின் முண்டு இடித்தது.

-அந்த 'உலக்கை ' மேட்டில் ஏறி, சாலையின் குறுக்கே நீண்டு நகர்ந்தது. நீளக் கிடந்து நகர்ந்த அந்த உலக்கை ஒரு துள்ளுத் துள்ளிச் சாடி நெளிந்தது.

'வ்வோ....மொ....ழொ....ழொ.... ' வென்று பயந்தடித்துக் குளறினான் சோமு. உலக்கையின் சாட்டத்தைத் தொடர்ந்து கிளம்பிய தவளை ஒன்றின் பரிதாப ஓலம் சில வினாடிகளில் ஓய்ந்து போயிற்று.

'ஏறுமயில்....ஏறிவிளையாடு முகம் ....ஒன்று ' என்று 'பய-பக்தி 'க் குரலில் முருக ஸ்தோத்திரம் செய்தான் சோமு.

அந்த 'உலக்கை ' சாலையின் மறு இறக்கத்தில் 'சரசர 'வென்ற ஓசையுடன் இறங்கி மறைந்தது.

திடாரென அவனுக்கு உடம்பு சிலிர்த்தது. 'திடாரென மரத்தின் மீதிருந்து ஒரு 'உலக்கை ' சுருண்டு விழுந்து தன் மீது புரண்டு சாடி.... '

'ஐயோ '.... '

தலையைத் தொட்டவாறு தொங்கும் ஆல விழுது. நாக்கை நீட்டித் தலையை நக்கும் பாம்புபோல்....

இன்னும் கொஞ்ச நேரத்தில் பாம்பின் படம் மொட்டைத்தலையின் மீது கவிந்து, 'பொத் 'தென அடித்து, மேலெல்லாம் புரண்டு, சுற்றி, இறுக்கி....

திடுதிடுவென இருண்ட சாலையின் நடுவே ஓடினான். கால் நரம்புகள் நொந்து வேதனை தந்தன....முழங்காலுக்குக் கீழே ஒரே பதட்டம்...ஓடிவந்த வேகத்தில் முழங்கால் மடங்க, குப்புற விழுந்தான்.

முன்காலில் அடிபட்டவுடன் கண்கள் இருண்டன....

அவன் தன் நினைவின்றி, பசி மயக்கத்தில், நடந்த களைப்பில் மிருதுவான செம்மண் புழுதியில் அசைவின்றிக் கிடந்தான்.

அடுக்கடுக்காய்த் திரண்டு வந்த இருள் திரட்சி அவன் மீது கனமாகக் கவிந்தது '

ஜல்....ஜல்....ஜல்.....ஜல்.....

'அது என்ன சப்தம் ? கைலயங்கிரியில் தாண்டவமாடும் சர்வேச்வரனின் கழலொலி நாதமா ?.... '

'தூரத்தில், வான்முகட்டில் கேட்கிறதே... '

'ஜல்....ஜல்... '

'தா...தா...ஹேய்.... '

'ஜல்...ஜல்....ஜல்.... '

'ஹாவ்....ஹாவ்.....அதார்ரா அவன், நடுரோட்டிலே படுத்துக் கெடக்கிறது ?.... ' என்ற வண்டி ஓட்டுபவனின் குரலைத் தொடர்ந்து,

'எறங்கிப் போயிப் பாரேண்டா....நில்லு, நானும் வாரேன்.... ' என்ற மற்றொரு குரலும் சோமுவின் செவியில் விழத்தான் செய்தன....அனால் அவை எங்கோ சந்தையில் ஒலிக்கும் தூரத்துக் குரல்கள்போல் தோன்றின.

வண்டியிலிருந்து இறங்கிய மனிதர், வண்டிக்குக் கீழே புகை மண்டி எரியும் ராந்தல் விளக்கை அவிழ்த்துக் கொண்டு அவனை நெருங்கினார்.

சோமுவின் மூடிய இமைகளினூடே வெளிச்சத்தின் சாயை படரவே, கனத்து அழுத்திக்கொண்டிருக்கும் இமைகளைத் திறந்தான்....ஒளிபட்டுக் கண்கள் கூசின. இமைகள் பிரிந்து பிரிந்து ஒட்டின. அவன் கைகளை ஊன்றி எழுந்து உட்கார்ந்தான். உட்கார்ந்ததும் கண்களைக் கசக்கிக் கொண்டு விம்மி விம்மி அழுதான்....

'அடடே....சந்தையிலே பாத்த பையனில்லே நீ..... '

சோமு அழுவதை நிறுத்திவிட்டு வெளிச்சத்தில் அவர் முகத்தைப் பார்த்தான்.

---ஆமாம்; சந்தையில் நாவற்பழம் தந்த பொக்கை வாய்க் கிழவர் '

'ஒனக்கு இவனைத் தெரியுமா, தாத்தா ? ' என்றான் வண்டி ஓட்டி வந்த வாலிபன்.

'தெரியாம என்னா ? ஒன்ன மாதிரி ஒரு பேரன் ' '

'நீ யாருடா, பயலே... இங்கே எப்படி வந்தே ?....அதுவும் இந்நேரத்திலே...எந்த ஊரு... என்னாடா பையா, எல்லாத்துக்கும் அளுவுறே.... சேச்சே.... ஆம்பிளைப்புள்ளே அளுவறதாவது... எனக்கு வெக்கமா இருக்கு.....சரி, நீ எங்கூட வா....தோ, பக்கத்திலேதான் வூடு இருக்கு; போயிப் பேசிக்கலாம்...வவுத்தெப் பசிக்குதடா, கெழவனுக்கு...உம் வா '.... ' என்று அருகே இழுத்து அணைத்துக்கொண்டார் கிழவர்.

இருக்கும் சொந்தத்தை உதறிவிட எண்ணிய சோமுவும், எல்லாரிடமும் சொந்தம் பாராட்டும் கிழவரும் ஒருவரையொருவர் ஒரு கணம் பார்த்துக்கொண்டனர். கிழவர் சிரித்தார்.

அந்த இரட்டை மாட்டுக் கட்டை வண்டியில் கூடைகளும், வாழையிலைச் சருகுகளும் குப்பைபோல் நிறைந்திருந்தன. உயரமான வண்டியின் சக்கரங்களில் காலை வைத்துத் தாவியேறினார் கிழவர்.

சோமுவால் ஏற முடியவில்லை; கிழவர் கைகொடுத்தார். கிழவரின் பேரன் வண்டியை ஓட்டினான். மடியிலிருந்து சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டே சோமுவிடம் பேச்சுக் கொடுத்தார் கிழவர்:

'பையா....நீ எங்கேருந்து வாரே....எங்கே போறே....கேக்கறத்துக்குச் சொல்லு..... '

'நா....நா '....வந்து....இமயமலைக்குப் போலாமின்னு.... ' அவனுக்குத் தொண்டை அடைத்தது.

'இமயமலையா ?....அது எங்கேல 'யிருக்கு ?..... '

'அதான் தாத்தா...நீ கைலாசம்னு சொல்லுவியே.... ' என்று குறுக்கிட்டான் அவர் பேரன்.

'அடெ பைத்தியக்காரப் புள்ளே....அந்த மலைக்கி இந்தச் சரீரத்தோட போவ முடியுமா 'லே.... காரைக்காலம்மையாரே தலையாலே நடந்தில்லே போனாவ....நாமெல்லாம் செத்தப்புறம்தான்

போவமுடியும்...நீ பசலை...இன்னம் எவ்வளவோ அனுபவிக்கக் கெடக்கு...படிச்சி, சம்பாதிச்சு, கலியாணம் காச்சின்னு கட்டிக்கிட்டு, புள்ளெக் குட்டியெல்லாம் பெத்து, என்னெ மாதிரி ஆனப்புறம் இந்தப் புத்தி வந்தா சரிதான்....இப்பவேவா ?....இது என்னடா, கிறுக்குத்தனமால்லே இருக்கு....எனக்குக்கூட இல்லே அந்த மாதிரிப் புத்தி வரமாட்டேங்குது... ' என்று சொல்லிக்கொண்டிருந்த கிழவர் ஏதோ பழைய நிகழ்ச்சியில் லயித்தவர்போலச் சிரித்துக் கொண்டார்.

'தாத்தா '.... ' என்று சோமுவின் குரல் ஒலித்தது.

'என்னலே... ' என்று கிழவர் அவன் தோள்மீது கைவைத்தார்.

அவன் விம்மி விம்மி அழுதான்.

'தாத்தா இனிமே....நா ' எங்கேயும் போகமாட்டேன், தாத்தா...வீட்டிலே இருந்துகிட்டே சாமியெல்லாம் கும்பிட்டுக்குவேன் தாத்தா....அம்மா அப்பாகிட்டே சொல்லிக்காம இனிமே எங்கேயும் போகமாட்டேன்... நீங்க மட்டும்....என்னெ எப்படியாச்சும் செதம்பரத்திலே கொண்டுபோய் சேர்த்திடணும்....தாத்தா....நாளைக்கே, நான் வூட்டுக்குப் போயிடணும் ஒங்களெ நா ' மறக்கவே மாட்டேன் தாத்தா.... ' என்று கெஞ்சிக் கெஞ்சி அழுதான் சோமு.

கிழவர் சிரித்தார்.

'என்ன தாத்தா சிரிக்கிறீங்க....என்னெக் கொண்டு போயி விடமாட்டாங்களா ?.... செதம்பரத்துக்கு வேண்டாம், புவனகிரியிலே விட்டாகூட போதும். அங்கேருந்து போயிடுவேன்..... '

சோமுவுக்கு தான் வந்த வழியை...தூரத்தை....நினைக்கும்போது மலைப்பாய் இருந்தது. வந்ததுபோல் திரும்பி நடந்து போய்விடமுடியாது என்று தோன்றிற்று.

'கிளாஸ் டாச்சர் ராதாகிருஷ்ணய்யர் எவ்வளவு அன்பாகப் பேசுவார்.... எவ்வளவு செல்லமாகக் கொஞ்சுவார்....ஒருநாள் கூட 'ஆப்ஸன்ட் ' ஆகாதவன் என்று புகழ்ந்து பேசுவாரே.... இரண்டு நாட்கள் வராவிட்டால் வீட்டிலிருந்து போய் அவரைக் கேட்கமாட்டார்களா ?.... அவரும் வருத்தப்படுவாரே... ஸார், நா ' இனிமே இப்படிச் செய்யவே மாட்டேன்.... '

'....ஐயோ ' வண்டி இன்னும் வடக்கே போய்க்கொண்டிருக்கிறதே ' யார் இந்தக் கிழவன் ? என்னை கொண்டுவிடவும் மாட்டேன் என்கிறான்...இன்னும் அதிக தூரத்துக்கு இழுத்துக் கொண்டு போகிறானே.... '

'தம்பி...வீணா மனசைப் போட்டுக் கொளப்பிக்காதே ' மூணு மணிக்கு எவனாவது செதம்பரத்துக்கு எலைக்கட்டு ஏத்திக்கிட்டுப் போவான்...அப்போ உன்னையும் எளுப்பி வண்டியிலே ஏத்திவுடறேன்.... நீ போயிடலாம்...ராவிக்கு எங்கவூட்லே சாப்பிட்டுட்டுப் படுத்துக்க... நானும் ஒன் வயசிலே இப்படி ஓடியிருக்கேன்....அப்புறம்தான் தெரியும் அந்த சுகம் '.... ' என்று சொல்லிவிட்டுக் கிழவர் பழைய நினைவுகளில் லயித்துக் தனக்குள் சிரித்துக்கொண்டார்.....

---அவன் முகத்திலும் வாழ்வின் சுவைபோல் சிரிப்புப் பூத்தது '

விடிவுக்கால இருள் மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்தது.

புவனகிரியின் எல்லையில் 'கடக் கடக் ' கென்று இரட்டை மாட்டுக் கட்டை வண்டியொன்று ஏற்றியிருந்த இலைக்கட்டுச் சுமையுடன் நகர்ந்துக்கொண்டிருந்தது. கழுத்து மணி 'சலசல 'த்தது; சக்கரத்தின் ஓசை விட்டுவிட்டுக் கிறீச்சிட்டது.

இலைக்கட்டுகளின்மேல், குளிருக்குக் கோணிப்பையைப் போர்த்தியவாறு உறக்கமும் விழிப்புமாய் உட்கார்ந்திருந்த சோமுவுக்கு ஊர் நெருங்குவதில் பயமும் மகிழ்ச்சியும் தோன்ற உறக்கம் கலைந்தது.

'சிதம்பரம் 1 மைல் ' ' ----என்ற கைக்காட்டி மரத்தைக் கண்டவுடன்,

'ஐயோ '---- ' என்று குதூகலிக்கும் குரலில் கூப்பிட்டான் சோமு.

வண்டிக்காரன் நுகத்தடியில் கால்களை உந்திக் கொண்டு, மாடுகளின் மூக்கணாங்கயிற்றை வலிந்திழுத்தான்; வண்டி நின்றது.

வண்டியிலிருந்து, சக்கரத்தைப் பற்றித் தொத்திக் கீழே இறங்கிய சோமு வண்டிக்காரனின் முன் கைகூப்பி நின்றான்.

'ஐயா, ஒனக்குக் கோடி நமஸ்காரம்...இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன். தாத்தாகிட்ட போயி இதைச் சொல்லு....அவுரு தங்கமான தாத்தா... ' சோமுவின் குரல் தழுதழுத்தது....கண்களில் கண்ணீர் மல்கியது.

வண்டிக்காரன் வாய்விட்டு, மகிழ்வோடு சிரித்தான்:

'தம்பி....வண்டி ஒறவு. வண்டியோடப் போயிடக் கூடாது...நா ' வாரா வாரம் சந்தைக்கு வருவேன்....தாத்தாகூட வருவாரு....மாருகட்டுலே அந்த மேக்கால கேட்டு இருக்குல்ல.... அங்கதான்....வந்து பாக்கிறியா ?.... '

'அவசியம் வாரேன்...தாத்தாவுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்றியா ?...நா ' போயிட்டு வாரேன் ' என்று வார்த்தைகளைச் சொல்லி முடிக்காமல் வைகறை வானத்தை புலர் பொழுதின் வெள்ளிய வான்வெளியை, இருளிலிருந்து ஒளியை நோக்கி ஓடி மறைந்தான் சோமு.

தெருக்களின் நடுவே வரும்போது வீடுகளின் முன்னே பெண்கள் சாணம் தெளித்துக் கொண்டிருந்தனர்.

இடையில் ஒரு முழத் துண்டு மட்டும் தரித்த சோமு, குளிருக்கு அடக்கமாய், கைகளை மார்பின் குறுக்காகத் தோளில் சேர்த்துக் கட்டியவாறு வேக வேகமாய் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

அவன் வீட்டருகே நெருங்கும்போது, பங்கஜத்தம்மாள் வாசலில் கோலமிட்டுவிட்டு உள்ளே நுழைந்தாள். வாசலில் நின்று, கோலத்தை ஒருமுறை கவனித்துவிட்டு...உள்ளே திரும்பும்போது சோமு ஓட்டமாய் ஓடிவந்து வாசலில் நின்று 'அம்மா ' ' என்று விக்கும் குரலில் கூப்பிட்டான்.

அந்தக் குரல் அவள் செவியில் அரைகுறையாகவே விழுந்தது.....

'போ போ....விடிஞ்சுதா--அதுக்குள்ளே..... ? ' என்று திரும்பினாள் '

பிரஷ்டம் செய்யப்பட்ட பாபியைப்போல் வாசலில் நின்று,

'அம்மா.... நாம்மா...சோமு ' என்று கூறிய சோமு 'ஓ 'வென்று அழுதுவிட்டான்.

'அடப்பாவி....இதென்னடா கோலம் '.... ' என்று கையிலிருந்த கோலப் பொடி டப்பாவைப் போட்டு விட்டு ஓடிவந்து பிள்ளையை வாரியணைத்துக் கொண்டாள் பங்கஜம் '

'நா '....நா '.....பண்டாரமா போயிடலாம்னு...நெனைச்சி...நெனைச்சி...போனேம்மா... போனா..போனா வழியிலே ஒன் ஞாபகம் வந்திடுச்சிம்மா...ஆ...ஆ... ' என்று குரலெடுத்து அழுதவாறு தாயை இறுக அணைத்துக்கொண்டு விக்கினான் சோமு.

'பைத்தியக்காரப் புள்ளே.... என்னெ விட்டுட்டு நீ போலாமா ?... 'தாயிற் சிறந்த கோயிலுமில்லே 'ன்னு நீ படிச்சதில்லையா ?....வா... உள்ளே வாடா.... ' என்று ஒரு கையில் அவனை அணைத்துக் கொண்டு, மறு கையால் கண்களைத் துடைத்துக் கொண்டான் பங்கஜம்.

உள்ளே----போகும்போதே, 'பாத்தீங்களா, உங்க பிள்ளையை....அத்தை வீட்டுக்குப் போயிருப்பான்னீங்களே ----சந்நியாசம் போயிட்டுத் திரும்பி இருக்கு.... ' என்று கண் கலங்க சிரித்துக்கொண்டே கூவினாள் அவன் தாய்.

'ஏண்டா, ஒனக்கு நல்ல எளுத்து நடுவே இருக்கையிலே கோண எளுத்து குறுக்கே போச்சி ?.... அட, பரதேசிப்பய புள்ளே.... அளகா இருந்த கிராப்பை எடுத்துப்பிட்டு....சரி சரி, அந்த மட்டிலே வந்து சேந்தியே... கண்ணும் மூஞ்சியும் பார்க்க சகிக்கலே....போ.... போயி, பல்லை வெளக்கி மூஞ்சி மொகத்தைக் களுவிப்பிட்டுச் சாப்பிடு....அடியே, வட்டிலெ எடுத்துவச்சி பழையதைப் போடு....இந்தா, நானும் வந்துட்டேன் ' என்று சாமி கும்பிடக் கூடத்துக்குச் சென்றார் சதாசிவம் பிள்ளை.

அண்ணனைக் கண்டதும், அப்பொழுதுதான் படுக்கையிலிருந்து எழுந்த இரண்டு தம்பிகளும், ராஜியும் அவனிடம் ஓடிவந்து அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு,

'எங்கேண்ணா போயிட்டே நேத்தெல்லாம் ?.... ' என்று விசாரித்தனர்.

ராஜி அவன் மொட்டைத் தலையைப் பார்த்து வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தாள்.

அவனுக்கு வெட்கமாயும், வருத்தமாயும் இருந்தது '

'இங்கே பாரும்மா, ராஜியை...என்னைப் பார்த்துப் பார்த்துச் சிரிக்கறா ' என்று கத்திக்கொண்டே அவனைப் பிடிப்பதற்கு ஓடினான்.....

கூடத்தில் சுவாமி படத்தருகே நின்று, நெற்றியில் திருநீற்றை அள்ளிப் பூசிக்கொண்டு. கண்மூடி கரம்கூப்பி,

'ஆங்காரம் தனை அடக்கி ஆணவத்தைச் சுட்டெரித்துத் தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம் ' ' என்று உருகிக்கொண்டிருந்த சதாசிவம் பிள்ளையின் கால்களை ஓடிச் சென்று கட்டிக்கொண்டு, சோமுவை எட்டிப் பார்த்துப் பல்லைக் காட்டிப் பரிகாசித்தாள், ராஜி.

குழந்தையை ஒரு கையால் அணைத்துப் பிடித்துக் கொண்டு, ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார் பிள்ளை.

அதற்குள் அடுக்களையிலிருந்து தாயின் குரல் கேட்கவே சோமு சாப்பிடப் போனான்.

வட்டிலில் பழையதைப் பிழிந்துவைத்து, முதல்நாள் மீன் குழம்புச் சட்டையை அகப்பையால் துழவிக்கொண்டே,

'என்ன ஊத்தவா ? ' எனப்துபோல் சோமுவைப் பார்த்தாள் பங்கஜம்.

அவன் தலையைக் குனிந்துகொண்டான்.

# சாப்பாடு போட்டு நாற்பது ரூபாய்

**- தி. ஜானகிராமன்**

'மணியார்டரா ' எனக்கா ' '

'ஆமா ஸ்வாமி ' உங்களுக்கேதான் ' '

'உத்ராபதி, உனக்கு வயசு நாப்பதாயிருக்கும், சாளேசரம் போட்டுக்கற வயசு ' நல்லா பாத்துச் சொல்லு. நான் வாணா கண்ணாடி தரட்டுமா ? ' என்று துருப்பிடித்த வினோலியா ரோஸ் சோப் பெட்டியைத் திறந்து, வெற்றிலைக்கும் வெட்டுப் பாக்குக்கும் மேல் படுத்துக் கொண்டிருந்த மூக்குக் கண்ணாடியைத் தொட்டார் முத்து.

'கண்ணாடியும் வாணாம், சீப்பும் வாணாம். உங்களுக்குத்தான் வந்திருக்கு. நீங்களே அந்தக் கண்ணாடியை மாட்டிக்கிட்டுப் பாருங்க...எம். சாம்பமூர்த்தி யாரு ? '

'அக்கணாக்குட்டியா ? நம்ம புள்ளையா ? இப்ப மெட்ராஸிலேயா இருக்கு அது ? '

முத்து அவசர அவசரமாக மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டி, இடது காதில் நூலைச் சுற்றிக் கொண்டார்.

'ஆமா, வேலைக்குப் போயிட்டானே அக்கணாக்குட்டி ஒரு மாசத்துக்கு முன்னால, உனக்குத் தெரியாது ? '

'தெரியாதே. எங்க வேலையோ ? ' என்று மணியார்டர் பாரத்தில் இரண்டு இடத்தில் இண்ட்டு போட்டுக் கொடுத்தார் உத்ராபதி. கையெழுத்தானதும் அடிக் கடிதத்தைக் கிழித்து முப்பதொன்பது ரூபாய்க்கு நோட்டும் ஒரு ரூபாய்க்கு சில்லறையுமாகப் பையிலிருந்து எடுத்து நீட்டினார்.

'சில்லறையும் மாத்திப்ட்டு நாற்பது ரூபாயைக் கொடுப்பானேன் ? அரை ருபாயைக் குறைச்சுண்டு கொடுக்கப் படாதோ ? ' என்று அரை ரூபாயை நீட்டினார் முத்து.

'நாலணாப் போதும் சாமி. உங்ககிட்ட அதுக்கு மேலே வாங்கறது பாவம் ' என்று பாதியைத் திரும்பிக் கொடுத்து விட்டார் உத்ராபதி.

'முதல் சம்பளம் வாங்கி அனுப்பிச்சிருக்கான் அக்கணாக்குட்டி. எட்டணாவாத்தான் இருக்கட்டுமேன்னு நினைச்சேன் ' என்று நாலணாவைத் திரும்பி வாங்கிக் கொண்டார் முத்து.

'பிறத்தியார் பணம் அனுப்பிச்சா, ரண்டுகையாலும் வீசி வீசி தருமம் பண்ணுவாங்க சாமி ' என்று சொல்லிக் கொண்டே குறட்டில் இறங்கி வந்தாள் அவர் மனைவி.

'ஏழைக்குதாம்மா தெரியும் ஏழை கஷ்டம். நீங்க சொல்றீங்களே, மாசம் நானூறு ரூபா அனுப்பறாரு ரட்டைத் தெரு மகாலிங்கய்யரு மகன், மிலிட்டரியிலே கர்னலா இருக்குறாராமே. மகாலிங்கய்யரு அப்படியே வாங்கிட்டு குந்தினாப்பல உள்ளே போயிடுவாரு. ஒரு பத்துகாசு டாத்தண்ணிக்கு ? மூச்சுப் பிரியப்படாது... முகத்தைப் பார்த்தாத்தானே ?... அக்கணாக்குட்டி என்ன வேலையாயிருக்கு ? '

'என்ன வேலையோ ? நம்ம எம். கே. ஆர். கிட்ட போய் புலம்பினேன் ஒரு நாளைக்கு, நம்ம பையனுக்கு ஒரு வழி பண்ணப்படாதா செட்டியார்வாள் ' இப்படி உதவாக்கரையாத் திரியறானேன்னு நின்னேன். ஒரு மாசம் கழிச்சு சொல்லியனுப்பிச்சார். போனேன். உம்ம பையனை அனுப்புரீராய்யா மெட்ராஸஉக்கு ? ஒரு பெரியமனுஷன் வீட்டிலே கூடமாட ஒத்தாசையா இருக்கணுமாம். ஒரு பையன் இருந்தாத் தேவலைன்னு சொல்றாங்க. பெரிய இடம், புள்ளீங்க பள்ளிக்கூடத்துக்குப் போகும். கொண்டு விடணும், கடை கண்ணிக்குப் போகணும். இப்படி சில்லரை வேலையா இருக்கும் போலிருக்கு. நல்லா கவனிச்சிப்பாங்க. வீட்டோடு சாப்பாடு போட்டு வைச்சிப்பாங்கன்னார் எம். கே. ஆர்.

'அனுப்புறீமான்னு கேக்கணுமா ? நான்தான் கஞ்சிவரதப்பான்னு தவிச்சுண்டு கிடக்கேன். இன்னிக்கே அனுப்பிக்கறேன்னேன். நாலு நாக்கழிச்சு அவர் காரியஸ்தர் மெட்ராஸ் போனார். அக்கணாக்குட்டியை அழச்சிண்டு போயிட்டார். சரியா ஒண்ணரை மாசம் ஆச்சு. பணம் வந்திருக்கு. '

'என்னமோ சாமி கண்ணைத் திறந்தாரு. நீங்க முன்னாலே, இந்த மூக்கு கண்ணாடிக்கு அந்த நூலை எடுத்திட்டு ஒரு காது வாங்கிப் போடுங்க. அப்புறம் ஒரு உறையிலே போட்டு வச்சுக்குங்க. இப்படியே சீவல் மேலேயும் பாங்கு மேலேயும் வச்சிட்டிருந்தா பழங்கோலி மாதிரி கீறல் விளாம என்ன பண்ணுமாம் ' ' என்று சொல்லிக்கொண்டே உத்திராபதி நகர்ந்தார்.

சம்சாரம் முத்துவைப் பார்த்தாள்.

'இப்படிக் கொடுத்திட்டு நேரே உள்ள வரட்டும். பற மோளம் மாதிரி ஊரெல்லாம் போய் தம்பட்டம் கொட்டிண்டு நிக்கவேண்டாம் ' என்று பல்லோடு பல்லாகச் சொல்லி வெற்றிலைப் பெட்டி மேலிருந்த நோட்டுகளை பெட்டிக்குள் போட்டு மூடி, பெட்டியையும் எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

வெற்றிலைப் பெட்டி கையை விட்டுப் போனதும் கூடவே விரைந்தார் முத்து. அவர் உள்ளே வந்ததும் கதவைத் தாழிட்டாள் சம்சாரம்.

முத்து தோளிலிருந்த மூன்று முழம் ஈரிழையை இடுப்பில் கட்டி, அவள் கையிலிருந்த பெட்டியை வாங்கித் திறந்து நோட்டுகளை எடுத்து, பறையிலிருந்த பரமேச்வரனின் படத்தின் அடியில் வைத்து, நெடுங்கிடையாக விழுந்து மூன்று தடவை நமஸ்காரம் செய்தார்.

'ஏன் நிக்கறே ' நீயும் பண்ணேன் ' '

'எல்லாம் பண்றேன் ' என்றுதான் அவள் வழக்கமாகச் சொல்லிவிட்டு நின்றிருப்பாள். ஆனால் மனசு பாகாகிக் கிடந்ததால் அவரே சம்பாதித்து விட்டாற்போல, பதில் பேசாமல் கீழே குனிந்து மூன்று முறை வணங்கி எழுந்தாள். அவளுக்கு, அந்தக் காலத்து முத்துவின் ஞாபகம் வந்தது. ஏழு வருடங்களுக்கு முன்னால் முத்து இப்படிக் கிழம் சென்று போகவில்லை. மயிர் கருகருவென்றிருக்கும், அள்ளிக்கட்ட வேண்டிய கூந்தலாக இருக்கும். மூக்கிலிருந்து இரண்டு கோடுகள் இந்த மாதிரி விழவில்லை. மார்பும் இரு பிளவாக அடித்தென்னை மட்டை மாதிரி வைரமாக இருக்கும். இப்படிச் சரியவில்லை. தோள்பட்டை இப்படிச் சூம்பவும் இல்லை. ஆடு சதை, துடைச் சதை எல்லாம் இப்படி கழளவுமில்லை. அப்போது வெற்றிலைப் பெட்டி பித்தளைப் பெட்டி. இப்பொழுது குப்பைத் தொட்டிபோல ஒரு வயதானத் தகரப் பெட்டி. அப்பொழுது வெள்ளிச் சுண்ணாம்புக் கரண்டான். இப்பொழுது பிரம்மோத்சவத்தில் தெருவோரக் கடைப்பரப்பில் வாங்கின தகரக் குழாய். அதுவும் துரு. கழுத்துக் குழியை தங்க ருத்ராட்சக் கொட்டை மறைத்ததுபோய், இப்பொழுது குழிதான் தெரிகிறது. மேனிபோய், தெம்பு போய் கங்காளி மாதிரி நிற்கறதைப் பார்த்துதான் 'ரண்டாம் தாரமாம்மா ' ' என்று போன வருஷம் அமர்த்தின புதுத் தயிர்க்காரி கேட்டாள் போலிருக்கிறது. இப்படியா விசுக்கென்று இந்த பிராமணன் கிழண்டு போகும் ' மருந்துக்குக்கூட மயிரில் கறுப்பில்லாமல், கூந்தல் கொட்டைப் பாக்காகி....பல் விழவில்லை, ஆனால் கோணவும் பழுப்பேறவும் ஆரம்பித்து விட்டது.

ஆனால் இது ஒன்றும் அவள் கண்ணை இந்தக் கணம் உறுத்தவில்லை. 'என்ன இருந்தாலும் இதுக்கு இருக்கிற சாமர்த்தியம் சாமர்த்தியம்தான் ' என்று உவந்தாள்.

அவளுக்குச் சற்று சிரிப்பாகக்கூட இருந்தது. நம் பிள்ளையைப் பார்த்து நாற்பது ரூபாய் சம்பளம் போட்டு சாப்பாடும் போடத் தோன்றிற்றே ஒருவனுக்கு ' இந்த உலகத்தில் எத்தனை அசடுகள் இருக்கமுடியும் '

இல்லை....அண்ணாக்குட்டி நிஜமாகவே சமர்த்துதானோ ' நமக்கு ஒரு பிள்ளை. செல்லப்பிள்ளை. அசட்டுத்தனமேதான் கண்ணில்பட்டது. வெளியே போனதும் மறைந்திருந்த சமர்த்து வெளி வந்துவிட்டதோ என்னவோ.

....இல்லை....பணத்தையே தின்று, பணத்தையே உடுத்தி, பணத்திலேயே படுத்துப் புரளுகிற கொழுப்பு ஜன்மங்களால் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சாப்பாடு போட்டு, துணிமணி

வாங்கிக் கொடுத்து நாற்பது ரூபாய் கொடுக்கவாவது '...கொழுப்போ டம்பமோ, மனது நல்ல மனது. இந்தப் பாச்சைக்கு, பேச்சைக்காலும் பேச்சைக்கையும் கொன்னல் பேச்சுமாக இது கிடக்கிற லட்சணத்துக்கு இப்படி ஆதரிக்க வேண்டும் என்று தோன்றிற்றே.

'தட்சிணாமூர்த்தே, வைதீச்வரா, லோகமாதா ' நீங்கள்ளாம்தான் காப்பாத்தணும் ' என்று பயந்துபோய் நின்றாள் அவள்.

'சரி, காவேரியிலே போய் ஸானம் பண்ணிட்டு வந்துடறேன்...சில்லறை ஏதாவது கொடேன். கீரைத்தண்டு பாற்காய்னு ஏதாவது வாய்ண்டுவரேன் ' என்று முடுக்கினார் முத்து. 'இன்னிக்கு கூடவா வத்தக் குழம்பும் சுட்ட அப்பளமும் ? ', என்று சொல்லாமல் பிணங்குகிற முறுக்கு அது. நாலணாவை எடுத்துக் கொடுத்தாள். கன்னத்தில் அவளை செல்லமாக நிமிண்டிவிட்டு அவர் வெளியே போகிறார். பணம் வந்தால் இந்த நிமிண்டல், குழையல் எல்லாம் இரண்டு பேருக்கும் சகஜம்.

அவர் குளிக்கப் போனது நடந்து போகிற மாதிரி இல்லை. குதி போடுகிறது போலிருந்தது. அவனை --- அதை, ரூபாய் அனுப்பும்படி யாரும் சொல்லவில்லை. அது அது வேலை என்று போனால் போதும் என்றிருந்தது. அது போய் நாற்பது ரூபாய் அனுப்பவாவது ' 'நீ உருப்படமாட்டே, நீ உருப்படவே மாட்டே ' என்று அவனைச் சபித்ததெல்லாம் நினைவுக்கு வந்தது, வயிற்றில் பிறந்த பிள்ளையை இப்படியா சபிப்பார்கள் ' நம்ம புத்தி இவ்வளவு கட்டையாக ஏன் போயிற்று ? இப்பொழுது பணத்தை அனுப்பி நம்ம புத்தியில் கரியை பூசிவிட்டதே ' இந்தப் பிள்ளை ' அக்கணாக்குட்டி, இனி மேல் உன்னை அதட்டக் கூடமாட்டேண்டா என்று தன்னைத் திட்டிக்கொண்டு நடந்தார் முத்து ஒரு பிள்ளை '

பிள்ளைகளெல்லாம் தாயையும் தகப்பனையும் கொள்ளாமல் பாட்டனையும் பாட்டியையும் கொள்ளுமாமே, --அதுபோல் அக்கணாக்குட்டியைப் பற்றிய வரையில் மெய்தான். அவன் முத்துவின் மாமாவைக் கொண்டு விட்டான். முத்துவைக் கொண்டிருந்தால் அண்டா, தவலைகளை அலட்சியமாக உருட்டுகிற வலுவு வந்திருக்கும். ஆயிரம் பேருக்கானாலும் ஒரு கல் உப்போ, புளியோ ஏறாமல் குறையாமல் சமைத்துப் போடுகிற நளபாகம் கை வந்திருக்கும். முத்துவின் சம்சாரத்தைக் கொண்டிருந்தால் பார்க்கவாவது லட்சணமாக வளர்ந்திருக்கலாம்.

மீனாட்சி லட்சணம் தான். சமையற்கார முத்து பெண்டாட்டி என்று யார் சொல்ல முடியும் ? நூத்தம்பது வேலி பண்ணைவீட்டு எஜமானி எண்ணெய் ஸ்நானத்துக்காக நகைநட்டுகளைக் கழற்றி வைத்தாற் போலிருக்கும் .....ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி உள்ளே நுழைந்த கையோடு ஈர வேட்டியோடேயே அவளை அப்படியே அம்மென்று திணறத் திணறக் கட்டிக் கொள்ள வேண்டும். ம்க்கும்...ம்க்கும் இதுவேறயாக்கும் என்று சொன்னாலும் சொல்லுவாள். கட்டிண்டு தொலை என்று சொல்வது போல மரம் மாதிரி நின்றாலும் நிற்பாள். அவளுக்குப் பிறந்த பிள்ளை அந்த மாதிரி மூக்கும் முழியுமா இருக்கக் கூடாதோ ? மூக்கில் வற்றாத ஜலதோஷம். ஷ் ஷ் என்று நிமிஷத்துக்கு ஒரு உறிஞ்சல். முட்டிக்கால், முட்டிக் கை. குதிகால் கீழே படாமல் இரண்டு குதியிலும் முள்குத்தினாற் போன்ற விந்து நடை, வாயைச் சற்று திறந்தாலே ஓட்டுக் கூரை மாதிரி பல் வரிசை --- வரிசை இல்லை கோணல் --- ஓடு மாற்றி நாலு வருடமானாற் போல. அந்த பல்லுக்கு ஏற்ற சொல், எச்சிலில் குளித்துக் குளித்து வரும் ஒவ்வொரு பேச்சும். எப்ப வந்தேல் மாமா சேக்யமா ? நாலானன் சேக்யமார்க்கானா, (நாலானன் என்றால் நாராயணன்) செலுப்பு பிஞ்சு போச்சுப்பா இன்னிக்கி காவேரி ரண்டால் ஆலம்.... வயசு பதினைந்து முடிந்தும் இதே பேச்சுதான். படிப்பு வரவில்லை. எலிமெண்டரிக்கு

மேல் ஏறவில்லை. ஐந்து வருஷம் வீட்டோடு கிடந்ததும் போன வருஷம் ஒரு மளிகைக் கடையில் இழுத்துவிட்டார். அங்கே ஒரு நாள் எண்ணெயைக் கொட்டி ரகளை. வேலை போய்விட்டது. சைக்கிள் பழுது பார்க்கிற கடையில் கொண்டுவிட்டார். நாலு நாளைக்குப் போய்விட்டு வந்து ஜஉரமாகப் படுத்துக் கொண்டு விட்டது. நான் மாட்டேன்; சைக்கிலுக்குப் பம்பு அடிக்கச் சொல்றான். கண்டு கண்டா மார் வலிக்குது. நான் மாட்டேன் போ என்று திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டது. முத்து அலையாத இடமில்லை. பையனை அழைத்துக் கொண்டு வர்ச் சொல்லுவார்கள். போவார், பையனைப் பார்த்ததும் சொல்லியனுப்புகிறேன் என்று அனுப்பி விடுவார்கள். விறகு கடையில்கூட வேலைக்கு வைத்துப் பார்த்தாயிற்று. ஒரு கட்டையைத் தூக்க நூறு முக்கல். தினமும் நகத்திலும் விரல் இடுக்கிலும் சிலாம்பு. வீட்டுக்கு வந்து போகமாட்டேன் என்று அடம். நீ உருப்படவே மாட்டே என்று அப்பா அம்மா பாட்டு ' ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டான் அவன். பேசாமல் போய் திண்ணையில் உட்கார்ந்து வாசலில் போகிற வெள்ளாட்டையும் குட்டியையும் முக்கை உறிஞ்சி உறிஞ்சிப் பார்த்துக் கொண்டிருப்பான். இல்லாவிட்டால் வீட்டுக்கார வாத்தியார் பெண்ணோடு 'நேத்திக்கி ரிசவாகனம் பாக்கலியே நீ தூங்கிப் போயிட்டியே ' என்று திருநாள் சேதிகளைப் பேசிக் கொண்டிருப்பான்.

ஸ்வாமி நினைத்தால் என்ன செய்யமாட்டார் ' ஊமைக்கும் அசடுகளுக்கும் அவர் தானே கண். என்னப்பா ' வைத்தீச்சுவரா ' இந்த மட்டுமாவது பாதை காட்டினியே '

முதல் தடவை பணம் வந்து ஆச்சரியத்தில் கழிந்தது. இரண்டாம் தடவைகூட அந்த ஆச்சரியம் குறையவில்லை. மூன்றாம் தடவை இரண்டு மூன்று நாள் தாமதமாயிற்று. வேதனையாயிருந்தது. பயமாக இருந்தது. ஐந்தாவது தடவை ஒரு வாரம் தாமதம். கோபம் வந்தது. கோபத்தை சமாளித்துக்கொண்டு என்ன கஷ்டமோ இடைஞ்சலோ என்று சமாதானம் செய்து கொண்டு சாந்தமான சமயத்தில் பணம் வந்து குதித்துவிட்டது. 'இது சம்பாதிச்சு நான் சாப்பிடணுங்கறது இல்லை ஸ்வாமி. என்னமோ முன்ன மாதிரி கண் சரியாகத் தெரியலை. கை நடுங்கறது. என்னமோ குழப்பம். மொளகாப் புளியெல்லாம் முன்ன மாதிரி திட்டமா விழமாட்டேங்கிறது. இல்லாட்டா என்ன விட்டுட்டு ஆனந்தம் பயலைக் கூப்பிடுவாளோ ஏலாவூர் பண்ணையிலே ' எத்தனை கலியாணத்துக்கு அங்கே டின்னரும் டிபனுமா பண்ணிப்போட்டிருக்கேன் ? இந்தப் பய இப்படி பிள்ளையா பிறந்து இப்படி நிக்கறதேங்கிற கவலையிலே எனக்கு கையி, தீர்மானம், தைரியம் எல்லாம் ஆடிப்போச்சு ஸ்வாமி. இப்ப அது நிமிர்ந்துட்டுது. என் குழப்பம் நிமிரலே, என்ன பண்றது ' இல்லாட்டா இது சம்பாரிச்சா நான் சாப்பிடணும் தலையெழுத்து ' என்று மணியார்டர் வாங்கும்போது வந்து, விசாரிக்கிற பார்வையாகப் பார்த்த வீட்டுக்கார வாத்தியாரிடம் உருகினார் முத்து.

அந்தச் சமயத்தில்தான் வண்டிக்காரத் தெருவிலிருந்து வக்கீல் குமாஸ்தாவின் காரியஸ்தன் வைத்தியநாதய்யன் வந்து செய்தி சொல்லிவிட்டுப் போனான். மத்தியானம் முடிந்தால் வீட்டுப்பக்கம் வந்துவிட்டுப் போகச் சொன்னாராம் அண்ணாவையர்.

வக்கீலுக்குக் குமாஸ்தா. அந்த குமாஸ்தாவுக்கு ஒரு காரியஸ்தனா ? இது உலகத்தில் இல்லாத ஆச்சரியம் இல்லையோ ? ஆனால் நடக்கிறதே. அண்ணாவையனுக்கு காரியஸ்தன் ஒருவன் இல்லை, இரண்டு மூன்று பேர் உண்டு. இந்தா என்றால் ஏன் எங்கேயென்று ஓடக் காத்திருக்கிற எடுபிடி ஆட்கள் மூன்று பேர் --அண்ணாவையன் முத்துவுக்குக்கீழ் சமையலாக இருந்தவன்தான். திடாரென்று ஒரு நாளைக்கு வக்கீல் ஜகதுவுக்கு குமாஸ்தாவாக ஆனான். மூன்று வருஷத்தில் ஜகதுவையே உட்கார்த்தி வைத்துவிட்டான். தானே வக்கீல் மாதிரி தொழில் நடத்தத் தொடங்கிவிட்டான். முதலிமார் கேஸ்கள், செட்டி நாட்டுக் கேஸஉகள் --

பாகப் பிரிவினைகள் வியாஜ்யங்கள் என்று பிரளயமாடுகிறான். கோர்ட்டு ஏறாமலே எத்தனை மத்தியஸ்தங்கள் ' பல மத்தியஸ்தங்கள் வாசல் திண்ணையில் நீட்டின கால்களை முடக்காமலே நடக்கும். மலையாளத்து இரட்டைத் தாழம் பாயில் திண்டுமீது சாய்ந்து....ஏ அப்பா ' என்ன கார்வார் ' என்ன மோக்ளா '

முத்து கீரைத்தண்டு சாம்பார் சாதத்தைச் சாப்பிட்டு வினோலியா டப்பாவுடன் வண்டிக்காரத் தெருவுக்குப் போனார். போகாமல் எப்படி இருக்க முடியும் ' விறகு கடையிலும் சைக்கிள் கடையிலும் அக்கணாக் குட்டியை வேலைக்கு வைத்தது அண்ணாவையன் தானே. இது வேலையை விட்டால் அவன் என்ன செய்வான் ?

வழக்கம் போல நீட்டின காலை மடக்காமலே 'வா முத்து, உட்காரு ' என்று அண்ணாவையன் திண்ணையில் தாழம் பாயில் சாய்ந்தவாறே அழைத்தான்.

'வைத்தா வந்து சொன்னான், அய்யர்வாள் கூப்பிட்டார்னு '

'ஆமா. முத்து ' என்று எழுந்து புகையிலையை உமிழ்ந்துவிட்டு வந்து, 'ராத்திரி மெட்ராஸ் போறேன். இந்த தடவை யாராவது கூட இருந்தா தேவலை போலிருக்கு. ஒரு வாரமா ஜஉரம். முந்தாநாத்தான் ஜலம் விட்டுண்டேன். நாளைக்கு அர்ஜண்டா கேஸஉ ஹைக்கோர்ட்டிலே. பத்தியச் சாப்பாடு. ஹோட்டல்ல தங்கப்போறதில்லெ. தம்முடு கலியாண மண்டபத்திலே தங்கப் போறேன். நீகூட வந்து ஒரு ரசம் சாதமோ தொகையலோ பண்ணிப் போட்டா தேவலைன்னு தோணறது. அதான் கூப்பிட்டனுப்பிச்சேன் '

'அதுக்கென்ன செஞ்சுபிடறது. '

'நீ தீர்க்காயுசா இருக்கணும், நாலாநாள் திரும்பி விடலாம். நீ போறதுக்கு ரெடி பண்ணிக்கோ. நாளை நாளன்னிக்கி ஒண்ணும் அச்சாரம் வாங்கலியே '

'இப்ப என்ன ஆடி மாசத்திலே அச்சாரம் ? '

'ரொம்ப நல்லது போ. அப்ப ரண்டு நாள் கூடத் தங்கினாலும் பாதமில்லேன்னு சொல்லு. '

'ஒரு மாசமாத்தான் இருக்கட்டுமே. நீங்க கூப்பிடறச்சே நான் வெட்டி முறிக்கப் போறேனோன்னேன். என்ன பேச்சு இது ? '

'சரி, இந்தா--இதோ இருவது ரூவா இருக்கு. மீனாட்சி கிட்ட கொடு. செலவுக்கு வேணுமே அவளுக்கு... ' ராத்திரி ஏழு மணிக்கு வந்துடு. இங்கேயே சாப்பிட்டுப் புறப்படலாம்.

'சாப்பிடறேன். இது என்னத்துக்கு ? ' என்று உபசாரமாக பணத்தை மறுத்தார் முத்து.

'எது என்னத்துக்கு ? --கொடுத்தா பேசாம வாங்கிவச்சுக்கோயேன். நீதான் மகாப் பிரபுன்னு தெரியுமே எனக்கு. '

'சரி ' என்று புன்சிரிப்புடன் இரண்டு நோட்டையும் வினோலியாப் பெட்டிக்குள் வைத்து மூடி 'நானே போகணும் போகணும்னு நெனச்சிண்டிருந்தேன். நீங்க கூப்பிட்டுது பால்லெ பழம் விழுந்தாப்பல ஆயிட்டுது ' என்றார் முத்து.

'என்ன ? '

'நம்ம அண்ணாக்குட்டி அங்கதானே இருக்கான்... போறபோது அவனையும் ஒரு நடை பார்த்துட்டு வந்துடலாமே '

'ஒஹோஹொ. ரண்டு மாசம் முன்னாலேயே சொன்னியே-- யாராத்திலெயோ இருக்கான்னு. எனக்கு மறந்தே போயிடுத்து பாரேன். பலசரக்குக் கடைக்காரனுக்கு பைத்தியம் புடிச்சாப்பல ஆயிடுத்து என் புத்தி... பேஷ்-- '

பட்டணத்துக்கு வந்த நாலாம் நாள்தான் முத்துவுக்கு ஒழிந்தது. அண்ணாவையருக்கு சமைத்துப்போட்டு விட்டு அவரோடும் சுற்ற வேண்டியிருந்தது. மூன்று நாளுக்குப் பிறகுதான் அண்ணாவையருக்குத் தைரியம் வந்தது. தனியாக நடமாடலாம் என்று. அன்று சனிக்கிழமை. வேங்கடாசலபதி பெயரைச் சொல்லி ஒரு சர்க்கரைப் பொங்கல் பண்ணச் சொன்னார் அண்ணாவையர். அவருக்குச் சாப்பாடு போடுவதற்கு முன்னமே சொல்லி விட்டார் அவர். 'முத்து, நான் சாப்பிட்டுக் கோர்ட்டுக்குப் போறேன். நீ அக்கணாக் குட்டியைப் பார்த்துட்டு சாயங்காலத்துக்குள்ள வந்துரு. ராத்திரி வண்டிக்கே கிளம்பும்படியா இருக்கும். முடிஞ்சா அந்தப் பயலையும் அழச்சிண்டு வா. நானும் பார்க்கறேன் ' என்ரு அவர் சொன்னதும் அவிழ்த்துவிட்ட கழுதை மாதிரி ஓட வேண்டும் போலிருந்தது முத்துவுக்கு. நெஞ்சுக்குள் குதியாகக் குதித்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு அவருக்குச் சாதத்தைப் போட்டார். டாக்சி பிடித்துக் கொண்டு அவரை ஏற்றி வழியனுப்பி விட்டு, ஒரு எவர்சில்வர் டப்பாவில் சர்க்கரைப் பொங்கலைப் போட்டுக்கொண்டு மாம்பலம் பஸ்ஸில் ஏறினார்.

வீடு கண்டு பிடிப்பது சிரமமாக இல்லை. வீடா அது பங்களா. பங்களாகூட இல்லை. சின்ன அரண்மனை. ஒரு மாஞ்சோலைக்கு நடுவில் இருந்தது. கேட்டைக் கடந்து நுழைந்ததும் நடுவில் ஒரு நாகலிங்க மரம். இப்பாலும் அப்பாலும் இரண்டிரண்டு மாமரங்கள். ஒரே நிழலாக இருந்தது. தள்ளிப்போனால் கார் நிற்கும் முகப்பு. காரும் இருந்தது. நாகலிங்க மரத்துக்குப் பக்கத்தில் சிமண்டு சோபா இரண்டு திண்ணைபோல கட்டியிருந்தன, அங்கே நான்கு பையன்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

'அம்பி ' ' என்று இரண்டு தடவை கூப்பிட்டார் முத்து. அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. மாமரத்தில் ஒரு குயில் கத்திற்று. கீழே நாகணவாய் இரண்டு மஞ்சள் மூக்கும் குழைந்த கூவலுமாக ஆடி ஆடி நடந்து கொண்டிருந்தன.

'நான் டபிள்ஸ் எத்தனையோ தடவை போயிருக்கேன்டா இதே சைக்கிள்ளே என்ன செஞ்சிடுவாங்க ? எங்க தாத்தா ஹைகோர்ட் ஜட்ஜஉ கான்ஸ்டபிள் என்னைப் பிடிச்சிடுவானா ? '

'ம்க்ம்...நீ யார் க்ராண்ட்ஸன்னாயிருந்தா போலீஸ்காரனுக்கு என்னடா ? அவன் டூட்டி செய்யத்தான் செய்வான். '

'பெட்டு ? --நான் டபுள்ஸ் போறேன், மணியோட..... பிடிக்கிறானா பார்ப்பமா ? அஞ்சு ரூபா பெட்டு ' இந்தா ' என்று சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்து வைத்தான் அந்தப் பையன்.

பன்னிரண்டு வயதுக் குழந்தையின் பையிலிருந்து 'பெட்டு 'க் கட்ட ஐந்து ரூபாய் பணம் வருவதைப் பார்த்து முத்து பயந்து போய்விட்டார். இந்தப் பையன்களைத்தான் அக்கணாக்குட்டி பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு விடுகிறானா ' அவருக்குப் பயமாகவும் இருந்தது. பெருமையாகவும் இருந்தது.

'அம்பி ' ' என்று மறுபடியும் கூப்பிட்டார். பதிலில்லை. அன்று சனிக்கிழமை, பள்ளிக்கூடம் இல்லை போலிருக்கிறது.

மறுபடியும் கூப்பிட்டார்.

'யாரு ? '

'சாம்பமூர்த்தின்னு ஒரு பையன் கும்மாணத்திலிருந்து வந்திருக்கானே அவன் இஞ்சதானே இருக்கான். '

'தெரியாது '

'இதுதானே குப்புசாமி அய்யர் பங்களா ' '

'யார்றா குப்புசாமி அய்யர் ? '

'போடா ' நம்ம மோகன் தாத்தா தாண்டா. அவர் வீடுதான் '

'நீங்க இந்த வீடு இல்லையா ? '

'இல்லை. நாங்க எங்க ப்ரண்டு மோகனைப் பார்க்க வந்திருக்கோம். மோகன் உள்ளே சாப்பிடப் போயிருக்கான். '

முத்து மெதுவாக நகர்ந்து வீட்டின் முகப்புக்குப் போனார். அங்கு யாருமில்லை. உள்ளே ஹாலுக்குப் போனார். பாதி இருட்டு. அங்கே பெரிய மைசூர் மகாராஜா ராணியோடு நிற்கிறபடம், கொம்பு, மான்தலைகள், யாரோ தலைப்பாகை நீளக்கோட்டு கால்சட்டை போட்ட மனிதரின் படம் எல்லாம் மாட்டியிருந்தன. அங்கும் யாருமில்லை. அதையும் தாண்டினார். ஒரு கிழவன் அந்தண்டை நடையில் ஒரு ஸ்டூல்மீது உட்கார்ந்திருந்தான்.

'யாரு ? '

'ஏம்பா சாம்பமூர்த்தின்னு ஒரு பையன் இங்க இருக்கானே தெரியுமோ ? '

'பையன்னா ? எந்தப் பையன் ? '

'இங்கே வேலைக்கிருக்கான்பா ஒரு பையன் --- கும்மாணத்திலிருந்து வந்திருக்கான். '

'அப்படிச் சொன்னால் தெரியும் ? சாம்புவைத்தானே கேக்கறீங்க ---பெரிய அய்யரோட இருக்கே அந்தப் பையன்தானே ? '

'அது என்னமோ, இங்க வேலையா யிருக்கான் அந்தப் பையன் ? '

'கும்பகோணத்துப் பையன்தானே ? '

'ஆமாம். '

'அப்ப இப்படி இறங்கி அதோ அங்கே போங்க --- காட்டேஜஉக்கு, அங்கதான் இருப்பான் பையன், இப்பதான் அய்யரோட வெளியே போய் வந்தான். '

'இங்கே ? ' என்று நடை முடிவில் இருந்த வாசற் படியைக் காட்டினார் முத்து.

'இங்க சின்ன ஐயா ரண்டுபேரும் இருக்குறாங்க... பெரியய்யா இருக்கிற இடம் அதுதான். அங்கதான் அந்தப் பையன் இருக்கான்... நீங்க யாரு ? '

'நான் அந்தப் பையனோட தோப்பனார். '

'அப்படியா ' சரி சரி, போங்க. '

முத்து நடையிலிருந்து இறங்கி தோட்டத்தோடு போனார். ஏ அப்பா எத்தனை பெரிய வீடு ' எத்தனை மரங்கள் ஒரு ஆளைக் காணவில்லை. வாசலை இப்படி ஹோவென்று போட்டுவிட்டு உள்ளே எங்கேயோ இருக்கிறார்களாம். ஒரு ஈ காக்கையைக் காணோம் ' முந்நெற்றி மயிரைப் பிடித்தாலும் தெரியாது போலிருக்கிறது.

ஒரே நிசப்தமாக இருந்தது. தோட்டப் பாதையில் நடந்து அங்கே காட்டேஜின்படி ஏறினார் முத்து.

தாழ்வாரத்தில் வந்து 'சார் ' என்றார்.

'யாரு ? '

'நான்தான் ' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

அங்கே ஒரு பெரிய மேஜை, அதன்மேல் தடிதடியாகக் கணக்குப் புத்தகங்கள். அதன் பின்னால் நாற்காலியில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் கறுப்பாக மூக்குக் கண்ணாடி, மேஜையில் ஒரு நீலக்கடுதாசி. அதன் மேல் வரைபடம். அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு பையன் பக்கத்தில் நின்று அவருடைய தலையை, கிராப்புத் தலையை வரக்கு வரக்கு என்று சொரிந்து கொண்டிருக்கிறான்.

கறுப்பு கண்ணாடியின் உடலும் லேசாகக் கறுப்புத்தான். முத்து உள்ளே நுழைந்ததும் அவர் கறுப்புக் கண்ணாடியைக் கழற்றாமலே நிமிர்ந்து பார்க்கிறார்.

'யப்பா ' என்று ஒரு குரல்.

அக்கணாக்குட்டியின் குரல்தான், மேஜை மீதிருந்த மங்கிய விளக்கின் கறுப்பு மறைவுக்குப் பின்னால் அக்கணாக்குட்டியின் முகம் தெரிந்தது.

'எப்பப்பா வந்தே ? ' என்று ஹ் என்று உறிஞ்சிக் கொண்டே சிரிக்கிறான் அவன்.

'யார்றா சாம்பு ? '

'எங்கப்பா மாமா ' என்று அவர் தலையைச் சொறிந்து கொண்டே அக்கணாக்குட்டி 'எப்பப்பா வந்தே ? ' என்று சிரித்தான்.

'நமஸ்காரம் ' என்றார் முத்து.

'நமஸ்காரம். சாம்பு அப்பாவா -- வாங்கோ ' '

'வந்தேன் '

'உட்காருங்கோ '

ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார் முத்து. வெய்யிலிருந்து உள்ளே வந்ததும் கண்ணை மறைத்த இருள் மெதுவாக விலகிற்று. கண் நன்றாகத் தெரியத் தொடங்கிற்று.

'சௌக்கியமா ? ' என்றார் கறுப்புக் கண்ணாடி.

'சௌக்யம் '

முகத்தை நன்றாகப் பார்த்தார் முத்து. உதடு அறுந்தது மாதிரி அதைத்துத் தொங்கிற்று. கன்ன எலும்பில் இரண்டு அதைப்பு. காது வளையமெல்லாம் அதைப்பு. மேஜை மீது படிந்திருந்த கைகளை பார்த்தார். கைகள் படியவில்லை. கட்டைவிரல் மற்ற விரல்களெல்லாம் மடங்கியிருந்தன. நீட்ட முடியாத விரல்கள் என்று பார்த்தாலே தெரிந்தது.

'எப்பப்பா வந்தே...ஹ் ? ' என்று பல் வரிசையைக் காட்டிக் கொண்டே கேட்டான். அக்கணாக்குட்டி. அவருடைய தலையைச் சொறிவதை மட்டும் நிறுத்தவில்லை.

'இப்ப தாண்டா வரேன் '

'இப்ப ஏதுப்பா வண்டி....ஹ் ? '

'வண்டி முன்னூறு நிமிஷம் லேட்டு. தெரிஞ்சவா வீட்டிலே வந்து இறங்கினேன். சாப்பிட்டேன், உடனே புறப்பட்டு வரேன் ' என்று தன்னறியாமல் பொய் சொன்னார் முத்து.

அப்பொழுது கறுப்புக் கண்ணாடிப் பெரியவர் கன்னத்தை சொரிந்து கொண்டார். எல்லாரும் விரல் நுனியால் நகத்தால் சொறிந்துகொள்வார்கள். அவர் மடக்கின விரலின் பின்பக்கத்தால் சொறிந்து கொண்டார். முத்துவுக்கு பகீர் என்றது. இரண்டு மூன்று விரலில் நகமே இல்லை.

முத்துவுக்கு உட்கார முடியவில்லை. மேலெல்லாம் அரிப்பது போலிருந்தது. அந்த அறையில் காலைப்பாவவிட்டாலே உள்ளங்கால் அரிக்கும்போலிருந்தது. முள்மேல் உட்கார்வது போல குறுகிக்கொண்டார்.

பெரியவர் என்னென்னமோ வெல்லாம் கேட்டார். தப்பும் தவறுமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தார் முத்து. காதில் ஒன்றையும் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை. அவருக்கு உள்ளே பூஞ்சதை நரம்பெல்லாம் அழுவதுபோல் ஒரு கசிவு.

'போரும்டா சாம்பு ' என்றார் பெரியவர்.

அக்கணாக்குட்டி சொறிவதை நிறுத்தினான்.

'பையன் ரொம்ப சமர்த்தாயிருக்கான். அவன் இருக்கிறது எனக்கு ஆயிரம் பேர்கூட நிற்கிறாப்போல இருக்கு ' என்றார் பெரியவர். சொல்லிவிட்டு 'சித்தே இருங்கோ, இதோ வந்துடறேன் ---சாம்பு இப்படி வாயேன் ' என்றார்.

அக்கணாக்குட்டி அருகில் வந்து நின்றான். பெரியவர் எழுந்து அவன் தோளில் கையைப் போட்டுக்கொண்டார். அக்கணா நடந்தான். அவரும் விந்தி விந்தி துணி பூட்ஸ் காலால் நடந்தார். அவரை ஹாலின் ஒரு கோடியில் உள்ள கதவைத் திறந்து உள்ளே விட்டு வெளியே காத்து நின்றான்.

'உங்க மாதிரி யார் இருப்பா ? விளக்கேத்தி வச்சேளே என் குடும்பத்துக்கு. நிஜமாகச் சொல்றேன். அக்கணாக்குட்டி அனுப்பிக்கிறானே மாசாமாசம் அதிலே தான் வயிறு ரொம்பறது. யார் செய்வா இந்த மாதிரி இந்தக் காலத்திலே ? அவனையும் ஒரு ஆளாக்கி....அவன் ஒரு கால் காசைக் கண்ணாலே காணப்போறானோன்னு ஒடிஞ்சு போய்விட்டேன். ஸ்வாமிதான் உங்க ரூபத்திலே வந்து அவன் கண்ணைத் திறந்துவிட்டார்.... ' அக்கணாக்குட்டியைப் பார்க்கபோகும் போது அவனுடைய எஜமானரைப் பார்த்தால் இப்படி என்னென்னவெல்லாமோ சொல்ல வேண்டும் என்று நினைத்துக்கொண்டே வந்திருந்தார் முத்து.

இப்போது வாயைத் திறக்கவில்லை. முடியவில்லை அந்த நினைவெல்லாம் தோன்றிய சுவடே இல்லை. மனதில் ஒரு பீதி. ஒரு குமைச்சல். குமட்டல். ஒரு கோபம். 'பாவி ' நீ நன்னாயிருப்பியா ? ' என்று அடிவயிற்றிலிருந்து கதற வேண்டும் போலிருந்தது. அக்கணாக்குட்டி ஹால் ஓரத்தில் பெரியவர் வருவதற்காகக் காத்து நின்றவன் அப்பாவைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்தான். ஹ் என்று உறிஞ்சினான்.

முத்துவுக்கு நெஞ்சில் கட்டி புறப்பட்டாற்போல் வலித்தது. இவனையும் தாண்டி கதவைப் பார்த்தது அவர் கண். வெளியே நெளியப் போகும் நல்ல பாம்பைப் பார்ப்பது போல் ஒரு கிலி வேறு சூழ்ந்துகொண்டது.

'இந்தண்ட வாடா ' என்று வாயால் தலையை அசைத்தார் --- அவசரமாக, சுளிப்பாக.

அவன் புரிந்து கொள்ளவில்லை. புன்சிரிப்புடனேயே சாத்தியிருந்த கதவைக் கையால் காண்பித்து சைகை காட்டினான்.

பெரியவர் காவி பூட்ஸஉம் காலுமாக வந்தார். சுவரில் பதிந்த ஒரு பளபள கம்பியிலிருந்த ஒரு துண்டை எடுத்து அவரிடம் நீட்டினான் அக்கணா. அவர் கையைத் துடைத்துக் கொண்டதும், தோளைக் கொடுத்தான். பிடித்துக் கொண்டு வாத்து நடை நடந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

முத்து ஆரம்பித்தார். 'சம்சாரத்துக்கு ஊரிலே உடம்பு ரொம்ப மோசமாயிருக்கு. பதினஞ்சு நாளா படுத்த படுக்கையாயிருக்கா. பிள்ளையைப் பார்க்கணும் பார்க்கணும்னு புலம்பறா, ஜஉரம் இறங்கவே இல்லை.... '

'அடடா....நீங்க ஒரு வார்த்தை எழுதப்படாதோ ? '

என்னமோ சாதாரண ஜஉரம்னு நெனச்சிண்டிருந்தேன். அது என்னடான்னா இறங்கற வழியாயில்லெ. அப்புறம் அவ தங்கைக்கு லெட்டர் போட்டு வரவழச்சேன், கிராமத்திலேர்ந்து. இவளானா புலம்பறா. உங்ககிட்ட விஷயத்தைச் சொல்லி பயலை அழச்சிண்டு போகலாம்னு வந்திருக்கேன் ' என்று அடுக்கிக் கொண்டே போனார் முத்து.

பெரியவர் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். கறுப்புத்தான் கண்ணை மறைத்திருக்கிறதே என்ன தெரியும் ? அந்த முகத்தில்தான் என்ன தெரியும் ? தடிப்புத்தான் தெரிந்தது.

முத்துவுக்கு மட்டும் தான் சொன்னதை அவர் நம்பவில்லையோ என்று வயிற்றில் கனத்தது.

பெரியவர் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தார்.

'ஊர்லெ சிநேகிதர் ஒருத்தர் காரிலே வந்திருக்கார். சேர்ந்து போயிடுவமேன்னார். ரயில்காரனுக்கு கொடுக்கறதையாவது மிச்சம் பண்ணலாம்னு நினைச்சேன். '

பெரியவர் வாய்தடிப்பு ஒரு புன்னகையாக மலர்ந்தது. சிரித்தால் அழகாகத்தான் இருக்கிறது. யார் சிரித்தால் என்ன என்று தோன்றிற்று முத்துவுக்கு.

'பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும் ' என்றார் முத்து.

'பாதகமில்லை ' என்று ஒரு புத்தானை அழுத்தினார் பெரியவர்.

'சாம்பு, அப்பா கூப்பிடறாரேடா போறியா ? ' என்று கேட்டார்.

'அம்மா ரொம்ப ஜஉரமாக கிடக்காடா. உன்னைப் பார்க்கணும்னு பேத்திண்டேயிருக்கா-- ராவில்லே பகலில்லே ' என்றார் முத்து.

'சரிடா சாம்பு. வேட்டி சட்டையெல்லாம் எடுத்து வச்சுக்கோ ' என்றார் பெரியவர். 'பையன் ரொம்ப ஒத்தாசையாயிருந்தான் ஸ்வாமி. சுருக்கக் கொண்டு விட்டு விடுங்கோ. '

'ம் ' உடம்பு சரியாயிருந்தா, அங்கே என்ன வேலை ? ' என்றார் முத்து.

அக்கணா பின்னாலிருந்த இன்னொரு அறைக்குப் போனான்.

வாசலிலிருந்து ஒரு தட்டில் டிபன் காபி எல்லாம் பரிசாகரன் கொண்டு வந்தான். அதற்குத்தான் புத்தானை அழுத்தினார் போலிருக்கிறது பெரியவர்.

'சாபிடுங்கோ. '

'நான் இப்பத்தானே சாப்பிட்டேன். '

'இங்கே வந்து வெறும் வயத்தோட போகலாமா ? '

முத்துவுக்குச் சொல்ல மெல்ல முடியவில்லை. 'பாலாம்பிகேச வைத்யேச ' என்று மனத்துக்குள் சுலோகம் சொல்லிக் கொண்டே காபியை மட்டும் எடுத்து கண்ணை மூடி மளமளவென்று விழுங்கினார். பரிசாரகன் பாத்திரங்களை எடுத்துப் போனான்.

அக்கணாக்குட்டி பையும் கையுமாக வந்தான். வெளிச்சத்தில் நன்றாகப் பார்க்கும்போது அவன் எவ்வளவு மாறிவிட்டிருக்கிறான் என்று தெரிந்தது. தலையை வழவழவென்று சீவி விட்டிருந்தான், வெள்ளை வெளெரென்ற சட்டை, வெள்ளை வேட்டி, முகத்தில் ஊட்டத்தின் பொலிவு, சட்டைக்கு வெளியே தெரிந்த முன்னங்கைகூட பளபளவென்று நிறம் ஏறியிருந்தது.

'என்னை ரொம்ப மன்னிச்சிக்கணும் ' என்று எழுந்து கும்பிட்டார் முத்து.

'எதுக்காக ? ரொம்ப நன்னாருக்கே. '

'நமஸ்காரம் பண்ணிட்டு போய்ட்டு வரேன்னு சொல்லிக்கோடா ' என்றார் முத்து.

அக்கணா விழுந்து வணங்கி எழுந்து 'போய்ட்ரேன் மாமா ' என்றான்.

'போய்ட்டுவா. போய் லெட்டர் போடு, அம்மாவுக்கு உடம்பு எப்படியிருக்குன்னு. எப்ப வரேன்னும் எழுதணும். '

'சரி மாமா. '

இருவரும் வெளியே நடந்தார்கள்.

இவ்வளவு சீக்கிரம் காரியம் நடக்கும் என்று நினைக்கவில்லை, சிங்கத்தின் குகையிலிருந்து வருவது போல, திரும்பிப் பார்க்காமல் வேகமாக வெளியே வந்து தோட்டத்தை தாண்டி தெருவுக்கு வந்து சாலைக்கு வந்தார் முத்து. 'மெதுவாப் போப்பா ' என்று கூடவே விரலால் நடந்து சிறு ஓட்டமாக ஓடிவந்தான்.

சாலைக்கு வந்து பஸ் ஏறினதும்தான் வாயைத் திறந்தார் முத்து.

'ஏண்டா மக்கு ' இந்த மாதிரி உடம்பு அந்த மாமாவுக்குன்னு நீ சொல்லவே இல்லியே ' என்றார்.

'என்ன உடம்பு ? '

'உனக்குத் தெரியலியா ? ரொம்ப கரிசனமா தலையைச் சொறிஞ்சு விட்டியே, புத்திதான் இல்லை, கண்ணுகூடவா அவிஞ்சு போச்சு ? '

'அது ஒட்டிக்காதாம்பா ? '

'ஒட்டிக்காதா ' யார் சொன்னா ? '

'அவாத்து மாமி, மாமா, மோகன் எல்லோரும் சொல்வாலே. '

'பின்னே அந்த மோகன், மாமி, மாமா எல்லோரும் வந்து அவர் தலையைச் சொறியப்படாதோ ? '

'அவாலுக்கெல்லாம் வேலையில்லியாக்கும் ? மோகன் பல்லிக்கூடம் போறான். மாமா என்ஜீனியர், மாமி பூ நூல்லே பை பனியன்லாம் போடறா. அவாலுக்கு டயம் ஏது ? அவா சொறியப்படாதோங்கிறீயே. '

'உன்னை ஏமாத்தியிருக்காடா எல்லாரும், அசட்டுப் பொணமே '

'ஒண்ணும் இல்லே. இத பாரு பேப்பர்லேயே போட்டிருக்கு ' என்று பையின் பிடியை அகட்டி உள்ளேயிருந்து நாலு சினிமாப் பாட்டு புத்தகங்களை எடுத்தான் அக்கணா. ஒரு புத்தகத்தைப் பிரித்து அதிலிருந்துஒரு தினசரிதாள் பக்கம் ஒன்றை எடுத்தான். அதிலெ ஒரு வெள்ளைக்காரப் பெண் யாரோ ஒரு ஆணின் கையைப் பிடித்துத் தடவிக் கொண்டு நிற்கிறாள். கருப்புக் கண்ணாடிகாரருக்கு இருந்த மாதிரியே கை, மூக்கு எல்லாம்.... 'இது யாரு தெரியுமா ? வெல்லைக்கார தேசத்திலே ரானி. போன மாசம் மெட்ராசுக்கு வந்தா --- ராஜாவோட. இந்த ஊருக்கு வந்து சினிமா, டிராமால்லாம் பார்க்கலியாம், காரை எடுத்துண்டு ஒரு கிராமத்துக்குப் போனாலாம். மாமா மாதிரி அங்கே முப்பது நாப்பதுபேர் இருக்கலாம். மருந்து சாப்பிடறாலாம். அவால்லாரையும் பார்த்து, கையெல்லாம் தடவிக் கொடுத்தா வெல்லைக்கார ரானி, போட்டோ போட்டிருக்கா பாரு தடவிக் கொடுக்கறாப்பல, ஒட்டிக்கும்னா ரானி தடவிக்கொடுப்பாலா, பேத்தியம் மாதிரி பேசறியே ? '

'பேத்யம் மாதிரியா ? நானா பைத்தியம் ? ' என்று படத்தைப் பார்க்க ஆரம்பித்தார் முத்து.

'படத்தை மட்டும் பாக்கறியே. கீலே எலுதியிருக்கு பாரு. ' என்று விரலை அந்த வரிகள் மீது ஒட்டிக் காண்பித்தான் அக்கணா.

'பாலாம்பிகேச வைத்யேச ' என்று சுலோகம் சொல்லிக் கொண்டே வினோலியா பெட்டியைத் திறந்து கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு படிக்க ஆரம்பித்தார் முத்து.

## மக்களை ஈர்த்த மகராசர்

**தி. ஜானகிராமன்**

விமானம் தரை தட்டிற்று. ஓடி நின்றது. 'இங்கு ஐம்பது நிமிஷம் நிற்கும். தொடர்ந்து பிரயாணம் செய்பவர்கள் இறங்கி, ட்ரான்ஸிட் கூடத்தில் இளைப்பாறி திரும்பி வரலாம். ' என்று பெண் குரல் அறிவித்தது. அவர் வெள்ளைகாரர் படிக்கட்டில் இறங்கினார். நடந்து 'ட்ரான்ஸிட் ' கூடத்திற்குப் போனார்.

இன்று என்ன விசேஷம் இந்த ஊரில் ? ஏன் இவ்வளவு இரைச்சல். ' ஏன் இத்தனை கூட்டம் ?

கண்ணாடிச் சுவர் வழியாகப் பார்த்தார் வெள்ளைக்காரர். தலை, தலை, எங்கும் தலைகள் '

பத்தாயிரம் தலைகள். ஆமாம் பத்தாயிரம் பேருக்குக் குறையாது. மேலும் மேலும் கார்கள் வந்து கொண்டிருந்தன. சின்னக்கார்கள், பெரிய கார்கள், உள்நாட்டு கார்கள். வெளிநாட்டு கார்கள் கதவுகள் திறந்தன. மனிதர்களைக் கொட்டிவிட்டு அப்பால் கார் கூட்டத்தோடு சேர்ந்து நின்றன. பத்தாயிரம் பேர் கூட்டத்தின் முன் வரிசையில் ஒரு முந்நூறு பேர் ரோஜா மாலைகளும் கைகளுமாக நிற்கிறார்கள். ஒரு மொத்தமான மனிதரின் கழுத்தில் மாலையைப் போட்டு கும்பிடுகிறார்கள். பின்னே போகிறார்கள். மாலைகளுக்குள் உடல் மறைந்தது, முகம் மறைந்தது, சுமை தாங்காமல் போனதும், மொத்தமான மனிதர் மாலைகளை ஒவ்வொன்றாக கழற்றுகிறார். பக்கத்திலிருப்பவர்களிடம் பார்க்காமலேயே கொடுக்கிறார். பக்கத்திலிருப்பவர் இன்னொருவர். மாலைகளை மூன்று அல்லது நான்காகச் சேர்த்துக் கழற்றிக் கழற்றி உதவுகிறார். இன்னொரு குழு முன்னால் வருகிறது. மாலைகளைப் போடுகிறது. மீண்டும் மாலைகளுக்குள் உடல் மறைகிறது. தோள் தாங்க முடியவில்லை. மொத்தமான மனிதர் தானாகவும், பக்கத்திலிருப்பவர்கள் உதவியுடனும் மாலைகளை எடுத்து கொடுக்கிறார். அவர் முகத்தில் மாறாத புன்னகை, கை குலுக்கல், கும்பிடுகள். சிலர் குழந்தைகளிடம் மாலையைக் கொடுத்து, குழந்தைகளையே உயரத் தூக்கி மாலைகளை அணி விக்கச் செய்கிறார்கள். போலீஸ்காரர்கள் தடியும் கையுமாகக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துகிறார்கள். எம்பிஎம்பியும் குதித்துக் குதித்தும் கூட்டத்தின் நடுவில் உள்ளவர்கள் மொத்தமான மனிதரைப் பார்க்க முயலுகிறார்கள். மாலைகள் வந்து கொண்டேயிருக்கின்றன. போட்ட வண்ணமும் கழன்ற வண்ணமும் இத்தனை மாலைகளையும் போட இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகுமே என்று கணக்குப் போடுகிறார் வெள்ளைக்காரர். அரைமணி ஆகிவிட்டது. அவர் கைக் கடிகாரத்தைப் பார்க்கிறார். படபட வென்றும் சடசட வென்றும் விறுவிறு வென்றும் கூட்டம் நகர்ந்து நகர்ந்து வேகமாக, விரைவாக, நொடிக்கொன்றாக மாலைகளைப் போட்டுவிட்டது.

'உலகம் காணும் உத்தமனே சென்று வா. '

'திருமகனே வெற்றி கொண்டு திரும்பி வா '

'அயல் நாடு காணும் ஆண்டகையே

புயல் பிரயாணம் கண்டு வா '

நாடு போற்றும் நாயகா

நீடு புகழ் பரப்பி வா. '

இப்படி நூற்றுக் கணக்கான வெவ்வேறு வகை கோஷங்கள் விமான நிலைய வெளியை நிரப்ப, போலீஸ்காரர்கள் பாதை விலக்க மக்கள் கூட்டம் முண்டி முண்டிப் பின் தொடர, மொத்தமான மனிதர், காக்கி உடை பாதுகாப்பாளர் உச்சி முதல் உள்ளங்கால் வரை தடவிவிடும் பரிசோதனையினின்றும் விலக்குப் பெற்று விமானத்தை நோக்கி நடந்தார். அவர் பின்னால் போக ஐந்தாறு பேர்தான் அனுமதிக்கப்பட்டார்கள்.

வெள்ளைக்காரரும் மற்றவர்களும் உடலைத் தடவும் பாதுகாப்பாளரிடம் உடலைக் காட்டி அனுமதி பெற்று விமானத்திற்குத் திரும்பினார்கள். அதே கோஷங்கள் விமானம் வரையில் வானைப் பிளந்தன. மொத்தமான மனிதர் உடல் முழுதும் ரோஜா இதழ்கள். கோட்டு கால் சட்டை தலை--முகம்--காது மேல் இமை தோள்--எங்கும் ரோஜா இதழ்கள். இரண்டு மாலைகளை மட்டும் கழற்ற விடாமல் அணிந்து கொண்டே இருக்குமாறு கூட்டம் வற்புறுத்திற்று.

'யார் இந்த ஜென்டில்மேன் ? ' என்று பக்கத்தில் நடந்து வருபவரிடம் கேட்டார் வெள்ளைக்காரர்.

'தெரியவில்லை யாராவது மந்திரியாக இருக்கலாம். '

'என்ன தெரியவில்லை ? இவர் ரொம்ப பெரிய வி.ஐ.பி. போலிருக்கிறதே ? ' என்று கேட்டார் வெள்ளையர்.

'அதான் சொன்னேனே. மந்திரியாக இருக்கலாம் ' என்று.

'மந்திரி என்றால் நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டுமே '

'இந்த் நாட்டில் பல ராஜ்யங்கள் உள்ளன. சில ராஜ்யங்களில் முப்பது நாற்பது மந்திரிகள் உண்டு. மொத்தம் கணக்குப் பார்த்தால் ஐந்நூறு மந்திரிகளுக்கு மேல் இருக்கலாம். நான் எண்ணியதில்லை. அந்தக் காலத்தில் படிப்பு முடிந்ததும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகள் எழுதுவதற்காக காபினெட் மந்திரிகள், ராஜ்ய மந்திரிகள், உதவி மந்திரிகள், ஏழு உலக அதிசயங்கள் ---என்றெல்லாம் பெயர்களை மனப்பாடம் பண்ணியதுண்டு. இப்போது யார் எதற்கு மந்திரி என்றெல்லாம் தெரிந்து கொள்ள நேரம் இல்லை. '

'வாஸ்தவம், இந்தியா மிகப் பெரிய நாடுதான். '

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு ஐயாயிரம் ஜனங்கள் போலீஸ் பந்தோபஸ்துகளை மீறி உள்ளே திமுதிமுவென்று ஓடி வந்தார்கள்.

'செல்வமே சென்று வா '

'பாரதத்தின் திருமணீ '

வான் ரதம் ஏறிவா '

என்றெல்லாம் கூட்டம் மீண்டும் கோஷங்கள் எழுப்பிற்று. இளைஞர்கள் குரல் கம்ம, கழுத்து புடைக்க உரக்க உரக்க கோஷமிட்டனர். சில இளைஞர்கள் பூமியிலிருந்து எம்பி எம்பிக் குதித்து கோஷம் எழுப்பினார்கள்.

வெள்ளையர் படிக்கட்டில் ஏறி தன் இருக்கையில் அமர்ந்தார். ஜன்னல் வழியாகப் பார்த்தார். விமான நிலைய அதிகாரிகள் கூட்டத்துக்கு நல்ல வார்த்தை சொல்லி விமானம் புறப்பட வசதி செய்து கொடுக்குமாறு வேண்டிக்கொள்வதைப் பார்த்தார். கடைசியில் ஒருவழியாக

மொத்தமான மனிதர் மூன்று மாலைக் கழுத்தும் மேனிமுழுதும் பூவிதழ்களுமாக உள்ளே வந்தார். விமான அழகி, வழிகாட்டி இடம் காட்ட இருக்கையில் உட்கார்ந்து கொண்டார்.

வெள்ளையருக்கு ஆச்சரியமாகி விட்டது. அவருக்குப் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து கொண்டார் மொத்தமான பிரமுகர்.

விமானம் புறப்பட்டது. தரையை விட்டு எழும்பிற்று.

'ரொம்ப அழகான மணமான ரோஜாக்கள் ' என்று பூமணத்தை முகர்ந்து பாராட்டினார் வெள்ளையர். இந்தியப் பிரமுகர் சிரித்தார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

'நான் பசுபதிநாத். பாலிடிக்ஸில் பதிமூன்று வருஷமாக இருக்கிறேன். தேசிய உளுந்து வாரியத்தின் தலைவனாக சென்ற வாரம் நியமித்தார்கள் என்னை '

'உளுந்து ? '

'உளுந்து என்பது ஒருவகைப் பருப்பு, கறுப்பு நிறம் ' என்று ப்ரீஃப்கேஸைத் திறந்து ஏழெட்டு பொட்டலங்களைக் காண்பித்தார் பசுபதிநாத். ஒரு பொட்டலத்தை கிழித்து ஒரு தேக்கரண்டி யளவு உளுந்தை வெள்ளையர் கையில் போட்டு வாயில் போட்டு மெல்லச் சொன்னார். வெள்ளையர் மென்றார்.

'மொட்டுக் மொட்டுக்.... ப்சப் சப்சப்சப் ' என்று ருசி பார்த்தார். 'ம்...குட் ' என்றார்.

'இது அப்படியே ப்ரொட்டான். கோழி, முட்டை, மாமிசத்தில் உள்ள புரதம் எல்லாம் இதில் உண்டு. தோசை, இட்லி, வடை, அடை, கொழுக்கட்டை என்ற பெயர்களைக் கேட்டிருக்கிறீர்களா ? '

'அப்படி என்றால் ? '

'பரவாயில்லை ' என்று உளுந்து தேன் குழல் ஒன்றை ஒரு பையை கிழித்து எடுத்துக் கொடுத்து சாப்பிடச் சொன்னார் பத்ரிநாத்.

'கரக், கரக் கரக் கரக் ப்சப் சப்சப் ? ' என்று வெள்ளையர் ருசி பார்த்தார். 'நைஸ், தாங்க்யூ ' என்றார்.

'எங்கள் ஊரில் தென்னாட்டு சைவர்கள் வட நாட்டு வைஷ்ணவர்கள் என்ற சாகபட்சிணிகள் இதைத் தான் புரதத்துக்காக உண்பார்கள். இந்த உளுந்தை எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று பார்க்கத்தான் நான் இப்போது பல மேல் நாடுகளுக்குப் பயணம் தொடங்கியிருக்கிறேன். '

'நல்லது. அதிருக்கட்டும், நீங்கள் மிகமிகப் பெரிய பிரமுகர் என்பதை அறிந்து கொண்டேன் பல்லாயிரக்கணக்கில் வந்து மக்கள் வழி அனுப்புகிறார்களே ' என்ன கூட்டம் என்ன கூட்டம் ' எத்தனை நூறு மாலைகள். '

'ஹி ஹி ஹி. என்ன பிரயோசனம் ? பதிமூன்று வருஷம் ஆச்சு, அரசாங்கம் இதைப் புரிந்து கொள்ள. பத்து லட்சம் தேர்தலுக்கு கொடுத்தேன். ஒன் மிலியன் டாலர். இல்லாவிட்டால் இந்த உளுந்து போர்டு தலைமை கூடக் கிடைத்திராது. '

'ஓ....வாட் எ பிட்டி ' '

எட்டு மணி நேரம் இறங்காமல் பறந்தது விமானம். பிறகு இறங்கிற்று. இறங்குகிற வரையில் ஷாம்ப்பேன் விஸ்கி பீர் எல்லாம் வாங்கிச் சாப்பிட்டார் பசுபதிநாத். வெள்ளையருக்கும் உபசாரம் செய்தார். ஒரு பெக் விஸ்கி சாப்பிட்டு நன்றி கூறி விட்டுத் தூங்கினார்.

பசுபதிநாத் இன்னும் தொடர்ந்து பறக்க வேண்டும். வெள்ளைக்காரர் 'நான் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. ' என்று விடை பெற்றுக் கொண்டார்.

பசுபதிநாத் 'நானும் ட்ரான்ஸிட் லௌஞ்சிலிருந்தே உங்கள் நாட்டை பார்க்கிறேன் ' என்று இறங்கி கூடவே வந்தார். திடாரென்று 'நீங்கள் என்ன செய்கிறீர்கள் ? பிஸினஸா. சர்க்கார் வேலையா ஒன்றும் கேட்கவில்லை. கேட்கலாம் என்றிருந்தேன். தூங்கிவிட்டார்கள். ஸாரி. நீங்கள்.... ? '

'நான் இந்நாட்டின் உதவிப் பிரதம மந்திரி '

'ஆ ' இந்த நாட்டுக்கு உதவிப் பிரதம மந்திரியா ? '

'ரொம்ப ஆச்சரியப் படாதீர்கள். உங்கள் இந்தியாவில் எட்டில் ஒரு பங்குதான் எங்கள் நாடு. ஜனங்கள் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இராது. '

'அது சரி. நீங்கள் உதவி பிரதமர் என்கிறீர்கள்: உங்களை யாரும் வரவேற்க வரவில்லையா ? '

'அதோ என் மனைவி -- அதோ பாருங்கள் --- அப்புறம் என் செக்ரட்டரி. பக்கத்தில் நிற்கிறார் பாருங்கள் '

'போலீஸ் கீலீஸ் ஒன்றும் வர வில்லையா ? '

'போலீஸ் எதற்கு ? -- வரவேற்கவா ? '

'உங்கள் நாடு ஜனநாயகம் இல்லையா ? '

'ஜனநாயகம் தான் '

'பின்னே மக்கள் யாரும் வரவேற்க வரவில்லையா ? '

'ஜனநாயக நாடல்லவா ? அதனால்தான் யாரும் வரவேற்க வரமாட்டார்கள்.... நான் வருகிறேன். ஹாப்பி லாண்டிங்க்ஸ்... அப்புறம் மறுமடியும் ஒரு தாங்க்ஸ். உங்களோடு டிரிங்ஸ் சாப்பிடும் வாய்ப்பை அளித்ததற்கு. ஓ ' இவர் என்னுடைய பர்சனல் அஸிஸ்டண்ட் -- இவர் மிஸ்டர் பசு..... ' என்று விமானத்தின் பின்பக்கத்திலிருந்து இறங்கி பின்னால் வந்த ஒரு

இளைஞனை அறிமுகப் படுத்தி விட்டு மறுபடியும் 'ஹாப்பி ' லாண்டிங்ஸ் மிஸ்டர் பசு ' சொல்லிவிட்டு நடந்தார் வெள்ளையர் '

'ஜனநாயகமா.... பூ ' என்று மனதுள் சிரித்துக் கொண்டு ட்ரான்ஸிட் கூடத்துக்குள் நுழைந்தார் ' தேசீய உளுந்து வாரியத்தலைவர்.

# விஞ்ஞான வெட்டியானும் ஞான வெட்டியானும்

**தி. ஜானகிராமன்**

வராந்தாவில் நடக்கும்போதே சீராவன் மைத்துனரை எச்சரித்தான். 'துடை வரைக்கும் எடுத்தாச்சானு அவளுக்குத் தெரியாது முழங்காலுக்குக் கீழே தான் எடுத்திருக்குன்னு இன்னும் நினைச்சிட்டிருக்கா அவ ரண்டாந் தடவை க்ளோராஃபாம் கொடுத்தப்ப, வேற எதுக்கோ சின்ன ஆப்ரேஷனுக்காக கொடுக்கறாங்கன்னு சொல்லிருக்கு. முத ஆப்ரேஷனை சரிபண்றதுக்குன்னு சொல்லி வச்சிருக்கு. நீங்களும் துடை வரைக்கும் எடுத்தாச்சாமேன்னு கேட்டுடாதீங்க. தானே கொஞ்சம் கொஞ்சமா தெரிஞ்சுக்கட்டும்னு இருக்கிறோம். '

மைத்துனர் பதில் பேசவில்லை. கோபமும் துயரமுமாக வாய் மூடியாக நடந்தார்.

நோயாளியின் அறைக்குள் நுழைந்தார்கள்.

'வாங்கண்ணா '

கட்டிலில் மல்லாந்து படுத்திருந்த தங்கை வரவேற்றாள். கழுத்திலிருந்து கால்வரை போர்த்தியிருந்தது.

'போட்மெயில்லியா வந்தீங்க ? '

'ஆமாண்டா கண்ணு ' அண்ணன் கட்டிலின் தலைப்புக்கு அருகில் போய் தங்கையின் நெற்றி முகட்டிலிருந்து தடவிக் கொடுத்தார்.

'அண்ணி வரலியா ? '

'இல்லே. '

'நாத்தனார் முடமானதைப் பார்க்க வாண்டாம்னா ' என்று லேசாகச் சிரித்தது அந்தப் பெண்.

அந்தச் சிரிப்பு இரண்டு கணம்தான் அடுத்த கணம் சிரிப்பைக் கண்ணத்தின் கீழே தள்ளிவிட்டு கொடகொடவென்று கண்ணீர்.

'முழங்காலுக்குக் கீழ எடுத்திட்டாங்களாம் அண்ணா ' என்று உதட்டைப் பிதுக்கிக் குழந்தை போல அழுதது அந்தப் பெண்.

அண்ணன் உதட்டை உதட்டால் அழுத்திக் கொண்டார் திரும்பி தங்கையின் கணவனைப் பார்த்தார். அவன் உதடும் கன்னமும் கோணித்துடிக்க விம்மலை அடக்க முயன்று கொண்டிருந்தான்.

இதெல்லாம் அடங்க இரண்டு நிமிஷம் ஆயிற்று.

'அழாதீங்க அண்ணா. '

'நீ எனக்கு தைரியம் சொல்ற. அப்படியே இருக்கட்டும். உசிரையாவது விட்டுவச்சானே ஆண்டவன். முழங்கால் போனாப் போகட்டும் ' என்று மீண்டும் அண்ணன் அவள் நெற்றி உச்சியைத் தடவிக் கொடுத்தார்.

'முழங்காலுக்கு கீழே முப்பத்திரண்டு வயசிலேயே எடுத்தாச்சுன்னா. மிச்ச வயசை எப்படி அண்ணா போக்கறதாம் ? இப்ப நான் பொழச்சு யாருக்கு லாபம் ? அவர்களுக்கும் கஷ்டம். நான்கு குழந்தைகளுக்கும் யாரு செஞ்சு போடுவாங்க ? '

'பேசாம இருடா கண்ணு. நாங்கெல்லாம் எதுக்காக இருக்கோம் ? '

'முடத்துக்குச் செஞ்சு போட. '

'சும்மா இரேன். '

'சும்மா இருன்னு சொல்லாதீங்கண்ணா. பேசிட்டேயிருந்தா, கால் வலி தெரியலே. யாரும் இங்க இல்லென்னு வச்சுக்குங்க. உடனே காலையே நினைக்கிறேனா வலி விண்விண்ணுன்னு உசிரு போகுது. '

அண்ணன் ஊர்க்கதை, உலகக்கதை, உரவுக்காரங்க கதை எல்லாம் பேசத் தொடங்கினார்.

தங்கை ரொம்ப ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள், வலி தெரியாமலிருப்பதற்காக. வலி தெரியவில்லை.

திடார் என்று அவர்களுக்கு அப்பால் பார்த்து 'நீ சாப்பிட்டியாம்மா ? ' என்றாள்.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

நிலையோரமாக நின்றிருந்த பெண், 'சாப்பிட்டாச்சாம்மா... தூங்கினீங்களா ராத்திரி ? '

' ரண்டு தடவை முழுச்சிக்கிட்டேன். வலி கொன்னிடிச்சு, நர்சம்மா ரண்டு தடவ வந்து மாத்திரை கொடுத்தாங்க... தூங்கிட்டேன். நீ என்ன சாப்பிட்டாயாம் ? '

'அல்லாம் சாப்பிட்டேம்மா. இடியாப்பம். ரண்டு இட்லி, டாத்தண்ணி எல்லாம் ஆயிடிச்சு '

'இந்தப் பொண்ணுதாண்ணா இங்க எல்லாம் செஞ்சிட்டிருக்கு எனக்கு. '

நடையில் சரசரப்பு.

பெரிய டாக்டர் வராங்க என்று ஏதோ மகாராஜா வருவதைச் சொல்லுவதைப் போல தொண்டை யோடு தொண்டையாகச் சொல்லி விட்டு மறைந்தது தோட்டிப் பெண்.

பெரிய டாக்டர் வந்தார். கூட இரண்டு மூன்று டாக்டர்கள். இரண்டு நர்சுகள்.

சற்று நின்று நோயாளியைப் பார்த்தார் பெரிய டாக்டர். கட்டில் முனையில் தொங்கவிட்டிருந்த கடுதாசியைப் பார்த்தார்.

'ஓகே, கன்டின்யூ '-- என்று நர்சைப் பார்த்துச் சொன்னார். நோயாளியின் இடது கை நாடியைக் கால் நிமிஷம் பார்த்தார். அபயம் தருவது போல அவள் இடது தோளை மெதுவாகத் தட்டிவிட்டு வெளியே நடந்தார். பரிவாரம் கூடவே அடக்கமாக, மரியாதையாக ஓடிற்று.

'போச்சு முப்பத்தஞ்சு ரூபா ' என்று சிரித்தது நோயாளிப் பெண்.

அண்ணன் தங்கையை திரும்பிப் பார்த்தான்.

'பெரிய டாக்டர் இப்ப வந்திட்டுப் போனார்ல. முக்கா நிமிஷம் அவருக்கு இருபத்தஞ்சு ரூவா, கூட ஒரு நர்சு வந்தாங்கள்ள. அவங்கதான் பெரிய நர்சு. அவரு இப்படி வந்துட்டுப் போனார்னா, பத்து ரூவா, ஆக மொத்தம் முப்பத்தஞ்சு ரூவா. '

'என்னது ' புரியாமல் விழித்தார் அண்ணன்.

திரும்பி தங்கையின் கணவனைப் பார்த்தார்.

'ஆமாம் ' என்றான் சீராளன்.

காலமே பெரிய டாக்டரும் பெரிய நர்சும் வருவாங்க. அதுக்கு முப்பத்தஞ்சு ரூவா. சாயங்காலம் ஒரு சின்ன டாக்டரும் சின்ன நர்சும் வருவாங்க. அதுக்குப் பதினைஞ்சு ரூவா. '

'தினமுமா ? '

'பின்னே ? மாசத்துக்குன்னா நெனைச்சீங்க ' எங்க ஊரு மருதமுத்து வைத்தியர்னு நெனச்சீங்களா வருஷத்துக்கு ஆறு கலம் நெல்லு வாங்கிக்கிட்டு கூப்பிட்ட குரலுக்கு ஓடியாந்து மாத்திரை, கசாயம்லாம் கொடுக்கறதுக்கு ? '

'தினமும் அம்பது ரூபாயா ' '

'ஆமாண்ணா, இன்னியோட நாப்பத்து நாலு நாளாச்சு இவங்க விசிட்டிங் சார்ஜ் மாத்திரம் ரெண்டாயிரத்து சொச்சம் ஆயிடிச்சு. '

'இது இவரோட ஆஸ்பத்திரிதானே ' '

'ஐயய்ய இது அசுபத்ரியும் இல்லெ. மருத்துவமனையுமில்லே. அவரோட சொந்த க்ளினிக்கு பாலி க்ளினிக்கு.

'பாலி க்ளினிக்கோ, போலி க்ளினிக்கோ ' தன்னோட ஆஸ்பத்திரியிலே படுத்திருக்கிற நோயாளியைப் பார்க்கறதுக்கு இருபத்தஞ்சு ரூபாயா ? அதுவும் இப்படி முக்கா நிமிஷம் எட்டிப் பார்த்துட்டுப் போறதுக்கா இது ராத்திரிக் கொள்ளைகூட இல்லே. பகல் கொள்ளெ ? '

அவங்க அமெரிக்கா, லண்டன், ஜெர்மனி யெல்லாம் படிச்சிட்டு வந்தவரு அண்ணா ' அதனாலதான் இவங்க நாலு வருஷமா நெல்லுவித்து சேத்த பணம் இருபத்திரண்டாயிரத்தையும் போன வாரம் பில்லு அனுப்பிச்சு வாங்கிட்டாரு. '

சீராளன் சொன்னான் 'ஸ்கானிங்கறாங்க. அதுங்கறாங்க இதுங்கறாங்க. அந்த மாதிரி சோதனைங்களுக்கே ஆறாயிரம் ஆயிடிச்சு. அப்பறம் ஆபரேஷனுக்கு பதினைஞ்சாயிரம். '

'சரி, நீங்க அந்தப் பொண்ணை வரச் சொல்லிவிட்டு அந்தாண்ட இருங்க ' என்றாள் நோயாளிப் பெண்.

இருவரும் எழுந்தார்கள்.

'நீங்க ஏதாவது சாப்பிட்டிங்களாண்ணா ? '

'இல்லெ. '

'வெளியிலெ போய் காபி க்ளப்பிலெ சாப்பிட்டு வாங்க. ஏங்க. இங்க ஆசுபத்ரி காண்டானிலெ சாப்பிடாதீங்க. இங்க ஒரு இட்டலி ஒரு ரூவா. காபி ரண்டு ரூவா. வெளியிலெ போய் சாப்பிடுங்க.... சட்டுனு வரச் சொல்லுங்க. அந்தப் பொண்ணை. '

இருவரும் அவசரமாக வெளியே வந்து தோட்டிப் பெண்ணை கூப்பிட்டார்கள். அவள் நோயாளியின் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். அதற்கு முன்பே அவளை நிறுத்தி துடை வரையில் காலை எடுத்திருப்பதை அவளிடம் சொல்லவேண்டாம் என்று எச்சரித்து அனுப்பினான் சீராளன்.

வராந்தாவில் நடக்கும் போது சொன்னான் அவன். 'பெரிசு கலியாணத்துக்குன்னு கொஞ்சம் கொஞ்சமா சேர்த்துகிட்டு வந்தேன். அஞ்சு வருஷமா ? அந்த இருபத்தாறாயிரமும் காலியாயிடிச்சு. இவ காலும் போயிடிச்சு. சின்ன டாக்டரைக் கேட்டேன் இன்னும் எத்தனை ஆகும்னு. மிஞ்சி மிஞ்சி இன்னும் பன்னண்டாயிரத்துக்கு மேல போகாதுங்கறாரு அவரு. '

'இன்னும் பன்னண்டாயிரமா ? '

'இல்லாட்டி வெளியிலெ விட மாட்டாங்க....அடுத்த ரூம்லெ ஒரு மைசூர்க்காரங்க வந்திருக்காங்க. காலு புரையோடி எடுக்கணும்னாரு. பழயபில்லு எல்லாம் இருபதாயிரம் கொடுத்தப்பறம் தான் காலை எடுப்பேன்னிட்டாங்க. காலை எடுக்காட்டி உசிரு போயிடும். அதுக்காக இந்த பேஷண்ட்டோட தம்பி, அத்தாரிட்டி லெட்டர்லாம் வாங்கிட்டு, ஊருக்குப் போயி நிலத்தையோ, நகைங்களையோ, வீடயோ அடமானம் வச்சி இருபதாயிரம் கொண்டாந்தாரு. அப்பறம்தான் காலை யெடுத்தாங்க. ரண்டு நாளு முன்னாலெ எடுத்திருந்தா பாதத்தோட போயிருக்கும். இந்தப்பில்லு தகராறில் ஊருக்குப் போயிபணம் புரட்டி வரதுக்குள்ளார புரை கணைக்கால் வரை ஏறிடிச்சு, கணைக்காலோட வெட்டிட்டாங்க. '

மைத்துனர் சிறிது மலைத்து நின்றார்.

'நீ எப்படி இந்தக் கொள்ளைக்காரங்க கையிலெ மாட்டிகிட்டே ? ஒரு காலை வெட்றதுக்கு நாப்பதாயிரமா ? இவன் என்ன டாக்டரா ? வெட்டியானா ? '

'விஞ்ஞான வெட்டியான் ' என்ற ஒரு குரல்.

ஒரு நாற்பது வயதுக்காரர் 'என் தங்கை பையன் வயித்து வலின்னு நாலு மாசமாச் சொல்லிக்கிட்டிருந்தான். பெரிய டாக்டராச்சேன்னு கொண்டு சேர்த்தேன். நாலு எக்ஸ்ரே ஆச்சு. ரத்தம், மூத்ரம். எச்சில்ன்னு ஒண்ணு பாக்கியில்ல, ஒரு சோதனை பாக்கியில்லெ. ஆத்மான்னு ஒண்ணு இருக்காமே. அதைத்தான் இன்னும் சோதிக்கலெ. கண்ணுக்குத் தெரிஞ்சு கையிலியும் அகப்பட்டா அதையும் சோதிக்கறேன்னு ஒரு ரண்டாயிரத்தைப் பிடுங்கியிருப்பான்....முப்பது வருஷம் முன்னாலெ நான் மதுரைப்பக்கம் போயி ஒரு மாசம் தங்கியிருந்தேன். கண்ணெல்லாம் எரிஞ்சு தலைவலியா இருந்தது. பக்கத்திலெ யாரோ ஜெர்மனிக்குப் போய்வந்த டாக்டர்னு போர்டு போட்டிருந்தது. போனேன். அந்த ஆளு ஒரு ரண்டு நிமிஷம் என்னை முறைச்சு, என்னமோ யோசிக்கறாப்பல பார்த்தான். பதினைஞ்சு நாளாதலை வலிக்குதுன்னா, மண்டைக்குள்ள ஏதாவது கோளாறு இருக்கலாம். நல்லா டெஸ்ட் பண்ணித்தான் சொல்லணும். இன்பேஷண்ட்டா இருக்கணும்னான். கேட்டுக்கிட்டு வந்து சொல்றேன்னு தங்கியிருந்த உறவுக்காரர்கிட்ட சொன்னேன். 'அடபாவி ' நீ தினமும் ரண்டு காஸாலெட்டு மாம்பழம் தின்னுகிட்டிருக்கே. நீல மாம்பழத்துக்கு மதுரையிலெ காஸலெட்டும்பாங்க. மாம்பழத்தோட பால் சாப்பிடணும். இல்லாட்டி வறட்சி கொடுத்து மண்டைவலிக்கும். இங்க, ஒரு எல்.எம்.பி. இருக்காரு. அவர்கிட்டே போய்ச் சொல்லுங்க 'ன்னாரு. போனேன். எட்டணாக்கு ஆறுவேளை மிக்சர் கொடுத்தாரு. மூணு வேளையிலேயே சரியாப் போச்சு. அப்பல்லாம் இப்படி ஊருக்கு ஒரே ஒரு டாக்டர்தான் எங்கேயோ படிச்சிட்டு வந்து பயமுறுத்துவான். இப்ப எல்லா டாக்டருமே அப்படி ஆயிட்டான். தலைவலிக்குது, காலைக் கடுக்குதுன்னு சொன்னாப் போதும். ஒரு லிஸ்ட் கொடுக்கறாங்க பாரு --- அந்த டெஸ்ட்டு இந்த டெஸ்ட்டுன்னு ....உங்க சம்சாரம் கேஸைப் பாத்துக் கிட்டுத்தான் இருக்கேன், சுருக்க டிஸ்சார்ஜ் வாங்கிட்டுப் போங்க ' என்று தர்மாஸ் ப்ளாஸ்க்குடன் வராந்தாவில் நடந்தார் நாற்பது வயது.

வெளியே போய் காபி க்ளப்பில் பொங்கல் வடை காப்பி சாப்பிட்டுவிட்டு சீராளனும் மைத்துனரும் உள்ளே வந்தார்கள்.

'இந்த அக்ரமத்தைக் கேக்காம விடப்போறதில்லெ நான் பெரிய டாக்டர்கிட்டே போய் கத்தப்போறேன். உன் சொந்த ஆஸ்பத்திரியிலெ படுத்திருக்கிற நோயாளிகளுக்கு தினம் விசிட்டிங் சார்ஜ்உன்னு அம்பது ரூவா வாங்கிறேய்யா, இந்தக்காசு ஜரிக்குமான்னு கத்தப்போறேன். இன்னும் என்னல்லாமோ கேக்கப் போறேன். இல்லேன்னா கோர்ட்டு வரைக்கும் போய்ப் பார்த்திடப் போறேன். ' என்று முகம் சிவக்க உதடு துடிக்கக் கத்தினார் மைத்துனர்.

'இப்ப ஒண்ணும் பண்ணாதீங்க. இந்த டாக்டர்கிட்டே பெரிய பெரிய தலைவர்ங்க, அதிகாரிங்கல்லாம் கூட உடம்பைப் பார்த்துக்கறாங்க. ஒண்ணும் நடக்காது. தலைக்கு வந்தது துடையோட போச்சுன்னு ஊருக்குப் போய்ச் சேரப் போறேன் உங்க தங்கையை அழைச்சிட்டு. இப்ப ஒண்ணும் கலாட்டா பண்ணவாண்டாம்.....

'நோயாளியின் கதவு இன்னும் திறக்கவில்லை. அதை ஒட்டியிருந்த தங்கும் அறைக்குள் இருவரும் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

'வணக்கங்க ' என்று சீராளனுக்கு வணக்கம் சொல்லி உள்ளே வந்தான் ராயப்பன். தோட்டிப் பெண்ணின் கணவன் அவன்.

'ரண்டாம் தடவையும் ஆம்புடேசன் செஞ்சிட்டாங்களாமே ' ' என்று முகம் தொங்கக் கேட்டான்.

'ஆமாம்பா '

'போன வாரம் முழங்கால் வரைக்கும் எடுத்தாங்க. அதைக் கொண்டு எரியறதுக்கு பதினைஞ்சு ரூபா கொடுத்தாங்க எனக்கு. நான் நேத்து லீவு. தருமநாதன்கிட்ட கொடுத்தாங்க. அறுத்துப்போட்டதைப் புதைக்கறதுக்கு அவனுக்கு இருபது ரூவா கொடுத்தாங்களாம் ஆபீசுலெ. '

'லீவிலெ இருந்திட்டது வருத்தமா இருக்காக்கும் உனக்கு ? உனக்கும் ஏதாவது வேணும்கிறியா ? '

'என்னா சார் அப்படிக் கேக்கறீங்க ? '

'பின்ன என்ன கேக்கணும் ? '

'நான் சொல்ல வந்ததுவேற சார். காலோ, கையோ ஆம்புடேசன் பண்ணினா அதைச் சுடுகாட்டிலெ கொண்டு போடுன்னு உங்ககிட்ட நாப்பது அம்பதுன்னு பில்லு போட்டு வாங்கறாங்க சார். எங்களுக்குக் கொடுக்கறது என்னமோ பதினைஞ்சு ரூவாதான் சார். நீங்கள்ளாம் சேர்ந்து ஆபீசிலெ சொல்லி முப்பது நாப்பதாவது கொடுக்கச் சொல்லக்கூடாதுங்களா சார் ? '

'ஏண்டா, ஞான வெட்டியான் தோட்டிக்கிட்ட கூடவா இங்க கமிஷன் கேக்கறாங்க ? ' மைத்துனர் வாயைப் பிளந்து ராயப்பனைப் பார்த்தார்.

சீராளன் அடுத்த வருட சாகுபடிக்கு விரை, தச்சுகூலி, எரு-இதற்கெல்லாம் எங்கே கடன் புரட்டலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

'அம்மா உங்களைக் கூப்பிடறாங்க ' என்று நோயாளிக்குக் காலை கடன் உதவிகளைச் செய்துவிட்டு வந்த தோட்டிப்பெண் அழைத்தாள்.

'இவ்வளவு பணத்தைக் கொள்ளையடிச்சு என்ன செய்வான் ஒரு மனுசன் ' ' என்று குழம்பிக்கொண்டே மைத்துனர் எழுந்து கொண்டார்.

# பொம்மை

**ஜெயகாந்தன்**

அந்த வீதியிலேயே பெரிய வீடு கிருஷ்ண மந்திரம். பெரிய வீடு என்றாலும் நாற்புறமும் மதிலால் வளைக்கப்பட்ட இந்தக் காலத்து பங்களா அல்ல; பழைய காலத்து மாளிகை. வீட்டின் முன்புறம் சலவைக் கற்கள் பதித்த பெரிய திண்ணைகளும் ரேழியும் உண்டு.

அந்த வீட்டுப் பெரியவரின் பேத்திக் குழந்தையாக ராணி பிறக்கும் வரை, திண்ணைகளும் ரேழியும் சுதந்திரமாகத்தான் இருந்தன. பேத்திக் குழந்தை தவழ ஆரம்பித்து, ஒருநாள் தவழ்ந்துகொண்டே வந்து வாசலில் இறங்கி விட்ட பிறகு, அதைப் பார்த்துக்கொண்டே வந்து வண்டியில் இறங்கிய பெரியவர், குழந்தையை வாரியெடுத்துக்கொண்டு வேலைக்காரர்களை ஒரு முறை வைது தீர்த்த பிறகு--குழந்தையின் பாதுகாப்புக்கு இந்த வேலைக்காரர்களை நம்புவது ஆபத்து என்ற தீர்மானத்துடன் வீட்டின் முன்புறம் கம்பி அழிகள் வைத்து அடைத்து, திண்ணைகளும் ரேழியும் சிறை வைக்கப்பட்டன. குழந்தை ராணி, சுதந்திரமாய்த் தவழ்ந்து திரிந்தாள்.

இப்பொழுது ராணி நடந்து திரிகிறாள், வயசு நாலு ஆகிறது. ராணிக்கு ஒரு அங்கச்சியும் பிறந்து விட்டாள்.

திண்ணை நிறைய செப்பும் பொம்மையும் இறைந்து கிடக்க, நாளெல்லாம் விளையாடிக்கொண்டிருப்பாள் ராணி. தாத்தா, ராணிக்குப் புதிசு புதிசாகப் பொம்மைகளும் விளையாட்டுச் சாமான்களும் வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருப்பார். ராணி ஒவ்வொன்றையும் புதுமோகம் தீரும் வரை, உண்ணும்போதும் உறங்கும்போதும் கூடக் கையிலேயே வைத்திருந்து விளையாடி உடைத்து, விளையாட்டுச் சாமான்களுக்காக வைத்திருக்கும் பிரம்புப் பெட்டியில் பத்திரமாக வைத்துவிடுவாள். அவளாக உடைக்காமல் கை தவறி விழுந்து உடைந்துவிட்டால், தலையைப் பிய்த்துக் கொண்டு புரண்டு புரண்டு, காலையும் கையையும் உதைத்துக் கொண்டு அழுவாள். தாத்தா உடனே புதிசு வாங்கிக் கொண்டு வந்து தருவார்.

அவளுக்கென்ன---ராணி '

அந்தப் பிரம்புப் பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து திண்ணை மீது வைத்துவிட்டு, முக்கி முனகித்தானும் திண்ணையில் ஏறிப் பெட்டியைத் திறந்து எல்லாவற்றையும் கொட்டிய ராணி, 'ஹை.....எவ்வளவோ சொப்பு ' ' என்று ஆச்சரியத்தால் கூவிய குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

வெளியே---கம்பிகளுக்கிடையே பரட்டைத் தலையை அடைத்துக் கொண்டு மோதிர விரலையும் நடு விரலையும் வாயிலிட்டுச் சப்பியவாறு, பிறந்த மேனியாக நின்றிருந்த ராணியின் வயதேயுள்ள ஒரு கறுப்புக் குழந்தை ராணியைப் பார்த்துச் சிரித்தாள்.

அரைஞாண்கூட இல்லாத கரியமேனியில், புழுதியில் விழுந்து புரண்டதால் அழுக்கின் திட்டுக்கள் படர்ந்திருந்தன. மூக்கிலிருந்து ஒழுகியது, வாய் எச்சிலுடன் கலந்து, மோவாயில் இறங்கி மார்பிலும் வயிற்றின் மேலும் வடிந்துகொண்டிருந்தது.

அந்தக் குழந்தையை பார்க்க ராணிக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்தக் குழந்தையும் முகமே இரண்டு கண்களாய் விரிய ராணியைப் பார்த்தது.

'ஐயய்யே....நீதான் தத்தையே போடல்லியே.... ' என்று கையை நீட்டி இளித்துக் காட்டிவிட்டு, அந்த அம்மணக் கோலத்தைப் பார்க்க வெட்கப்படுவதுபோல் முகத்தை மூடிக்கொண்டாள் ராணி.

ராணியின் வெட்கம் இரவல்தான்; ராணி சட்டையில்லாமல் திரிந்தால், தாத்தா அப்படிச் சொல்லிக்கொண்டு முகத்தை மூட்டிக்கொள்வார். ராணி அம்மாவிடம் ஓடிச் சட்டையும் ஜட்டியும் போட்டுக்கொண்டு வந்து, முகத்தில் மூடியிருக்கும் தாத்தாவின் கையை விலக்கி, தான் போட்டிருக்கும் சட்டையையும், சட்டையை தூக்கிவிட்டு ஜட்டியையும் காட்டுவாள். முகத்தைத்தான் மூடிக்கொள்ள தாத்தா கற்றுக் கொடுத்திருந்தார்; கண்ணை மூடிக்கொள்வதற்கு ?....தாத்தாவும் விரல் இடுக்கு வழியாக பார்ப்பாரே ' அதே போல் பார்த்த ராணி, முகத்திலிருந்த கையை எடுத்துவிட்டு கேட்டாள்:

'ஆமா, ஒனக்குத் தத்தை இல்லே ?.... '

'ஓ ' இருக்கே..... '

'எங்கே ஈக்கு ?... '

'தோஓ '....அங்கே ' ' என்று கையைக்க் காட்டியது கறுப்புக் குழந்தை.

'எங்கே, உங்க வீத்திலேயே ?.... '

'ஆமா.... '

'உங்க வீது எங்கே ?... '

'தோ....இங்கேதான் ' என்று கையைக் காட்டியது கறுப்புக் குழந்தை.

ராணி திண்ணையிலிருந்து ரொம்பப் பிரயாசைப்பட்டுக் கீழே இறங்கி வந்து கம்பி அடைப்பின் அருகே, கையில் நேற்று தாத்தா வாங்கித் தந்த புதிய வர்ணப் பொம்மையுடன் நின்று, அவள் காட்டிய திசையில் பார்க்க முயன்றாள். தலையை வெளியே தள்ளிப் பார்க்க முடியாததால் அந்தக் குழந்தையின் வீடு தெரியவில்லை. கறுப்புக் குழந்தை ராணியின் கையிலிருந்த பொம்மையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

கறுப்புக் குழந்தை காட்டிய இடம் அதிக தூரத்தில் இல்லை. கிருஷ்ண மந்திரத்துக்குப் பக்கத்தில் நீண்டு செல்லும் சுவர் ஓரமாக, பிளாட்பாரத்தில் ஒரு பெரிய முருங்கை மரம் நிழல் பரப்பி நிற்கிறது. அதன் நிழலில் சுவரின்மீது 'முனீஸ்வரர் அபயம் ' என்று பாமரர்களால் எழுதி வைத்துக் கொண்டாடப்படும் ஒரு பாமரக் கடவுள், முழுச் செங்கல் உருவத்தில் எழுந்தருளியிக்கிறார், அவருக்குப் பக்கத்தில் இரண்டு 'ட ' னா ஆணிகள் அடித்து, ஒரு கோணியின் இரண்டு முனைகளை ஆணியில் மாட்டி, இன்னொரு முனையை முருங்கை மரத்தில் பிணைத்து, நாலாவது முனையை ஆதரவில்லாமல் காற்றில் திண்டாடிவிட்டு அந்த முனையை ஒரு பக்கத்து மறைப்பாகக் கொண்டு அதில் ஒரு குடும்பம் வாழ்கிறது.

கறுப்புக் குழந்தை காட்டிய அந்த இடம் ராணிக்குத் தெரியவில்லை.

'ஒனக்குத் தத்தை யாது வாங்கித் தந்தா ? தாத்தாவா ? '

'எனக்குத் தாத்தாத்தான் இல்லியே ' '

'தாத்தா இல்லே ?--பாத்தி ? '

'ஊஹ்உம். '

'அம்மா ? '

'ஓ...அம்மா இருக்கே ' எங்கம்மா வேலைக்குப் போயிருக்கு. அப்புறமா...நாளைக்கு வரும்போது எனக்கு முறுக்கு வாங்கித் தரும். சொல்லூ '

'உங்க வீத்லே பொம்மை யீக்கா ? '

கறுப்புக் குழந்தை பதில் சொல்லாமல்....ராணியின் கையிலிருந்த பொம்மையையே பார்த்துக் கொண்டிருந்தது. ராணி பதிலை எதிர்பார்த்தா கேள்வி கேட்டாள் ? அவளுக்கு ஏதாவது கேள்வி கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் ' பதில் வந்தாலும் வராவிட்டாலும் கேட்க வேண்டும். அதில் ஒரு லயிப்பு.

'ம்...ம்...அப்பதம்....கப்பல்----கப்பல் ஈக்கா ? '

கறுப்புக் குழந்தை தலையை ஆட்டியது. அந்தத் தலையாட்டலுக்கு 'இல்லை ' என்றும் கொள்ளலாம்; 'இருக்கு ' என்றும் கொள்ளலாம். அதை எங்கே இவள் கவனித்தாள் ? எங்கோ பார்த்துக்கொண்டு கண்களைச் செருகிச் செருகி 'ம்....ம்....ம்....ம் ' என்ற சுருதியிசையோடு, 'அப்பதம்....லயில் ஈக்கா ? கார் ஈக்கா, வண்டி ஈக்கா ? ' என்று கேட்டுக் கொண்டே இருந்தாள் ராணி. அவள் கேட்பதற்கெல்லாம் தலையாட்டினாள் கறுப்புக் குழந்தை.

வீடு இருந்தாலல்லவா வீட்டில் என்னென்ன இருக்கும் என்று தெரியும் ? வீதியிலிருப்பதெல்லாம் வீட்டிலிருப்பதாகத்தான் கறுப்புக் குழந்தைக்கு நினைப்பு. வீதியே வீடாகி விட்டபின்.....

அந்தக் 'கேள்வி கேட்கும் ' விளையாட்டு சலித்துப் போய்விட்டது ராணிக்கு. 'நா....வெள்ளையாதப் போதேன் ' என்று கூவிக்கொண்டே திண்ணைமேல் ஏறிய ராணி, 'உங்க வீத்லே பொம்மை ஈக்கா ? ' என்று கடைசியாக மறுபடியும் ஒரு முறை கேட்டு வைத்தாள். கறுப்புக் குழந்தை வழக்கம்போல் தலையாட்டினாள்.

திண்ணைமீது உட்கார்ந்துகொண்டே ராணி தன்னிடமிருந்த வர்ணப் பொம்மைக்குச் சட்டை போட்டாள்.

'ஹை...சின்ன சட்டை '.... ' என்று மகிழ்ச்சிக் குரல் எழுப்பினாள் கறுப்புக் குழந்தை.

'போ.... ' நீ தான் அதது....பாப்பா கூத தத்தை போத்துக்கித்தா...பாப்பாதான் தமத்து, நா ரொம்ப தமத்து...மானம் வரைக்கும் தமத்....தூ ' என்று கைகளை அகல விரித்துக் கொண்டு சொன்னாள் ராணி.

இவள் என்ன பேசுகிறாள் என்று கூட கறுப்புக் குழந்தைக்குப் புரியவில்லை. கறுப்புக் குழந்தைக்குப் புரிந்ததெல்லாம் 'தனக்கும் ஒரு பொம்மை வேண்டும், அதற்குச் சின்ன சட்டை போட்டு அழகு பார்த்துச் சிங்காரிக்க வேண்டும், தானும் ஒரு சட்டையைப் போட்டுக்கொள்ள வேண்டும் ' என்பவைதான்.

உள்ளேயிருந்து குழந்தை அழும் சப்தம் கேட்டது. கறுப்புக் குழந்தை கால்களை எக்கிக்கொண்டு கம்பிகளின் வழியாக எட்டிப் பார்த்தது.

'அங்கச்சிப் பாப்பா அயுதா....அங்கச்சிப் பாப்பாக்குத் தலைக்கு ஊத்துதா.... உங்க வீத்திலே பாப்பா ஈக்கா ? ' என்று கைகளைத் தட்டிச் சிரித்தவாறு கேட்டாள் ராணி.

எதைச் சொல்ல வந்தாலும் அதைத் தொடர்ந்து ஒரு கேள்வியாகத்தான் முடிக்கத் தெரியும் ராணிக்கு.

'எனக்குத் தான் தம்பி இருக்கானே ' '

'தம்பிப் பாப்பாவா.... ' உங்க பாப்பாவை இங்கே அயெச்சிண்டு வருவியா ? '

வீட்டின் உள் முற்றத்தில் குழந்தைக்குத் தலைக்கு ஊற்றிக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் காட்சியில் லயித்திருந்த கறுப்புக்குழந்தை வழக்கம்போல் இதற்கும் தலையாட்டினாள்.

அப்பொழுது 'ஏ ' ....செவாமி.... ' என்ற குரல் கேட்டு, வலது கையால் கம்பியை பிடித்துக் கொண்டு, வலது காலைக் கம்பியில் உந்திக்கொண்டு இடது காலையும் இடது கையையும் வீசிக்கொண்டே திரும்பிய கறுப்புக் குழந்தை 'இங்கேதாம்மா இருக்கேன் ' என்று பதில் குரல் கொடுத்தது.

'ஏங் கொரங்கே ' பாப்பாவெப் பாத்துக்காம அங்கே எங்கே போயித் தொலைஞ்சே ' வாடி, அங்கேயே நின்னுகிட்டு. எனக்கு வேலைக்குப் போவணும், வந்து கொட்டிக்க ' ' என்று தாயின் குரல் அழைத்தது.

'பொம்மை நல்லாருக்கு ' அம்மா கூப்புடுது, நா போயி 'பயேது ' துன்னுட்டு வர்ரேன் ' என்று சொல்லிவிட்டுத் தாயை நோக்கி ஓடினாள் சிவகாமி.

சிவகாமியின் தாய் ரங்கம்மாள் அந்தத் தெருவின் மறுகோடியில் புதிதாய்க் கட்டுகின்ற ஒரு வீட்டில் சித்தாள் கூலியாக வேலை பார்க்கிறாள். வேறு எங்காவது தொலைவில் வேலை இருந்தால் மத்தியானம் சாப்பிட வரமாட்டாள். பக்கத்திலிருப்பதால் குழந்தைக்கும் போட்டுத் தானும் சாப்பிட வந்தாள். அவளுடைய கைக்குழந்தைக்கு, பிறந்தது முதலே சீக்கு. கைப்பிள்ளை வயிற்றில் ஆறு மாதமாய் இருக்கும் போது புருஷன் க்ஷயரோகத்தால் செத்துப் போனான். அந்தத் துயரத்தை மாற்ற வந்தது போல் அவளுக்குப் பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகவும், புருஷனைப் போலவேயும் இருந்ததில் அவளுக்கு ஒரு தனி மகிழ்ச்சி.

பிறந்து எட்டு மாதமாகியும் சற்றும் வளர்ச்சியின்றி நரம்பும் தோலுமாய்க் கிடக்கிறது குழந்தை. நாள்தோறும் காலையில் பக்கத்திலிருக்கும் முனிசிபல் தர்ம ஆஸ்பத்திரி மருந்தை வாங்கிக் கொடுத்துக் கொண்டுதானிருக்கிறாள்; அதுவும் குடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

ரங்கம்மாளுக்குக் கைக்குழந்தையின் மீதுதான் உயிர். சிவகாமி 'பொட்டச்சி ' தானே என்ற அலட்சியம். கைக்குழந்தைதான் ஆம்பிளைச் சிங்கமாம்; அவன் வளர்ந்துதான் சம்பாதித்துப் போட்டுப் பெற்றவளுக்குக் கஞ்சி ஊற்றப் போகிறானாம். நோய் பிடித்து, நரம்பும் தோலுமாய் உருமாறி, நாளெல்லாம் சிணுங்கி அழுது, சோர்ந்து உறங்கிச் செத்துக்கொண்டோ, வாழ்ந்துகொண்டோ---எப்படி இருந்தால் தான் என்ன ? ஒரு தாயின் கனவுகளை வளர்க்க ஒரு குழந்தை போதாதா ?

இரண்டு நாளாகக் கைக்குழந்தைக்குக் காய்ச்சல் வேறு. வழக்கம்போல் முனிசிபல் ஆஸ்பத்திரி மருந்தை வாங்கி வந்து குழந்தைக்கு ஊற்றிவிட்டு, பக்கத்திலிருந்த குப்பைக் குழியில் தன்னையொத்த குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்த சிவகாமியை அழைத்து, வயிற்றுக்கு 'நீத்தண்ணி 'யை வடித்துக் கொடுத்து, 'பாப்பாவை பாத்துக்கோ, எங்கியும் பூடாதே ' ' என்று காவலுக்கு வைத்துவிட்டுப் போன ரங்கம்மாள், வரும்போது சிவகாமியை அங்கு காணாமல் கோபத்துடன் கூவியபோது---பக்கத்திலிருந்து, 'இங்கேதானேம்மா இருக்கேன் ' என்ற குரல் கேட்டதும் சாப்பிட அழைத்ததாக தன் கோபக் குரலை மாற்றிக் கொண்டாள் ரங்கம்மாள்.

வரும்போதே 'அம்மா அம்மா.... ' என்று கொஞ்சிக் கொண்டே வந்தாள் சிவகாமி.

'இன்னாடி ? '

'உம்....எனக்குச் சட்டை குடும்மா, சட்டை ' வெக்கமா இருக்கு ' என்று முழங்காலைக் கட்டிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள் சிவகாமி.

'எங்கே இருக்கு சட்டை ? '

'ஐயே, பொய்யி சொல்றே, பெட்டிக்குள்ளே இருக்குது ' சிரித்துக் கொண்டே தலையாட்டினாள் சிவகாமி.

'ஒரே ஒரு கிழிசல் இருக்கு. அதையும் போட்டுப் பொரட்டி அழுக்காக்கிப் போட்டுடுவே ' '

'இல்லேம்மா ' அழுக்காக்காம அப்பிடியே புதுச்சா வெச்சிக்கிறேம்மா ' அம்மா, ஐய, அம்மா ' சட்டை, இல்லாம எனக்கு வெக்கமா இருக்கு. அங்கே அந்த வூட்டுப் பாப்பா பூச்சட்டைப் போட்டிருக்கு ' எம்மா அழகு தெரியுமா, அந்தப் பாப்பா ' '

'சரி சரி, தின்னு ' '

அலுமினியத் தட்டிலிருக்கும் பழைய சோற்றையும் ஊறுகாயையும் தன் சின்னஞ்சிறு விரல்களால் அள்ளி அள்ளிச் சாப்பிட்டாள் குழந்தை. ரங்கம்மாள் பானையில் பருக்கைகளுடன் கலந்திருந்த தண்ணீரில் உப்பைப் போட்டுக் கலக்கிப் பானையோடு தூக்கிக் குடித்தாள்.

'அம்மா, அம்மா ' '

'இன்னாடி ? '

'எனக்கு ஒரு பொம்மை வாங்கித் தரியா '

'தர்ரேன்... '

'எப்ப வாங்கித் தரே ? '

'நாளைக்கி.... '

'அந்தப் பாப்பா நெறையச் சொப்பு வெச்சிருக்கும்மா.... ' என்று பொம்மையைப் பற்றியும் செப்புகளைப் பற்றியும் சட்டையைப்பற்றியும் பேசிக்கொண்டே சாப்பிட்டாள் சிவகாமி.

சாப்பிட்டு முடித்த பிறகு சுவரோரமாக வைத்திருந்த ஜாதிக்காய்ப் பெட்டியைத் திறந்து அதில் கிடந்த கந்தல்களைக் கிளறி ஒரு பழைய கிழிந்த கவுனை எடுத்துச் சிவகாமிக்கு அணிவித்தாள் ரங்கம்மாள். கவுனில்---இடுப்பிலும் தோளிலும் கிழிந்தும், கையிலிருந்த கிழிசல்கள் தைத்தும் இருந்தன. அதைப் போட்டவுடன் சிவகாமிக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. 'ஹை ஹை ' என்று குதித்தாள். கவுனிலிருந்த கிழிசலில் விரலை விட்டுப் பார்த்துக்கொண்டே, 'அம்மா, அந்தப் பாப்பா புதுச்சட்டை போட்டிருக்கும்மா... ' என்றாள்.

'அவுங்கள்ளாம் பணக்காரங்க.... ' என்று சொல்லிக்கொண்டே கவுனின் பொத்தானைப் போட்டுவிட்டாள் ரங்கம்மாள்.

'நாம்ப..... ? '

'நாம்பல்லாம் ஏழைங்க....சரி, நீ பாப்பாவைப் பாத்துக்க; நா வேலைக்கிப் போயிட்டு வர்ரேன்....இங்கேயே இரு ' என்று சொல்லிவிட்டுப் புறப்படும்போது, ரங்கம்மாள் கைக்குழந்தையைத் தூக்கிப் பால் கொடுத்தாள். அது கண்ணைக்கூடத் திறக்காமல், ஜ்உரவேகத்தில் பால் குடிக்க மறந்து மயங்கிக் கிடந்தது.

ரங்கம்மாளுக்கு நெஞ்சு பதைபதைத்தது. 'வேலைக்குப் போகாமல் இருந்துவிடலாமா ? ' என்று ஒரு விநாடி யோசித்தாள். போகாவிட்டால் ராத்திரி சோற்றுக்கு என்ன செய்வது ? அரைநாள் வேலை செய்தாகிவிட்டது. இன்னும் அரை நாள் செய்தால்தானே முக்கால் ரூபா கூலி கிடைக்கும் '....என்று நினைத்தவள். 'அப்பா ' முனீஸ்வரனே ' எங்கொழந்தையைக் காப்பாத்து ' என்று வேண்டிக்கொண்டு புறப்பட்டாள்.

ரங்கம்மாள் புறப்படும்போது, சிவகாமி ஞாபகப்படுத்துவதுபோல் கேட்டாள்: 'அம்மா, பொம்மை..... '

ரங்கம்மாள் சிவகாமியின் பரட்டைத் தலையைக் கோதியவாறே சொன்னாள்: 'நீ அந்தப் பணக்காரக் கொழந்தையைப் பாத்துட்டு ஒண்ணொண்ணும் கேட்டா நா எங்கேடி போவேன் ? '

'உம்...அது கிட்டே பொம்மை இருக்கு....நீ பாப்பாகிட்டே வெளையாடிக்கிட்டே இரு.... ' என்று முரண்டினாள் சிவகாமி.

'நம்ப கிட்டே பாப்பா இருக்கு.....நீ பாப்பா கிட்டே வெளையாடிக்கிட்டே இரு.... ' என்று சிவகாமியின் கன்னத்தில் முத்தம் கொடுத்துவிட்டு ஓட்டமும் நடையுமாய் வேலைக்குப் போனாள் ரங்கம்மாள்.

ரங்கம்மாளின் தலை மறையும் வரை, குழந்தையின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிவகாமி மெள்ள எழுந்து, தான் போட்டிருக்கும் சட்டையைத் தடவித் தடவிப் பார்த்து மகிழ்ந்தவாறு 'கிருஷ்ண மந்திர 'த்தை நோக்கித் துள்ளித் துள்ளி ஓடினாள்.

'தோ பாத்தியா... நானும் சட்டை போட்டுக்கிட்டேன்..... எங்கம்மா போட்டுச்சி.... ' என்று கத்திக்கொண்டே கம்பிக் கதவருகே வந்து நின்ற சிவகாமியைப் பார்த்த ராணி 'உஸ்... தத்தம் போதாதே....பாப்பா தூங்குது.... முயிச்சின்தா அயும் ' என்று தன் மொம்மையை மடியில் போட்டுத் தட்டிக் கொடுத்தாள்.

'உன் தத்தை ஏன் கியிஞ்சி ஈக்கு ? ' என்றாள் ராணி.

'நாங்கல்லாம் ஏழைங்க ' என்றாள் சிவகாமி. ராணிக்குப் புரியவில்லை.

'உன் பொம்மை எங்கே ? ' என்றாள் ராணி.

'எனக்கு பொம்மையில்லே. தம்பிப் பாப்பாதான்.... அவனோடதான் நான் வெளையாடணுமாம்.... ' என்றாள் சிவகாமி.

கிருஷ்ண மந்திரத்திற்குள், மத்தியான நேரமானதால் பெரியவர்கள் எல்லொரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

திண்ணையிலிருந்து இறங்கி மெள்ள வீட்டுக்குள் எட்டிப் பார்த்தாள் ராணி. எல்லோரும் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். முற்றத்து ஓரத்தில் அண்டா நிறையத் தண்ணீர் இருக்கிறது.

அன்று காலை அந்த முற்றத்தில்தான் அங்கச்சிப் பாப்பாவுக்குத் தலைக்கு ஊற்றியது ராணியின் நினைவுக்கு வந்தது. தன் குழந்தைக்கும் தலைக்கு ஊற்ற எண்ணிய ராணி மெள்ள உள்ளே சென்று அண்டாவுக்குப் பக்கத்திலிருந்த குவளையில் தண்ணீரை மொண்டு எடுத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து திண்ணைமேல் வைத்தாள். இந்தக் காரியங்களின் இடையிடையே, சிவகாமியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். சிவகாமியும் ரகசியமாகச் சிரித்தாள். சத்தம் ஏதுமில்லாமல், குழந்தைக்குக் 'குளிப்பு ' வைபவம் நிகழ்ந்தது.

வர்ணப் பொம்மையின் தலையில் தண்ணீரை ஊற்றித் தேய்த்ததும் பொம்மையின் கண்ணும் மூக்கும் அழிந்து போயின. மீண்டும் தண்ணீரை ஊற்றிக் கழுவியதும் வெறும் மண்ணில் பொம்மை உருவம்தான் இருந்தது. ராணி அழ ஆரம்பித்தாள்....கண்ணைக் கசக்கிக் கொண்டு விம்மல் விம்மலாய் ஆரம்பித்த அழுகை 'தாத்தா ' வென்ற பெருங் குரலோடு வெடித்தது. ராணி அழுவதைக் கண்டதும் பயந்துபோன சிவகாமி முருங்கைமரத்து நிழலை நோக்கி எடுத்தாள் ஓட்டம்.

முருங்கை மர நிழலில் சுவரோரமாய்ப் படுத்திருந்த தம்பிப் பாப்பாவைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள் சிவகாமி. லேசாக அவன் முகத்தைத் தடவினாள்... குழந்தை சிணுங்கி

அழுதான். அது அவளுக்கு வேடிக்கையாய் இருந்தது. அடிக்கொருதரம் அவனைச் சீண்டிக்கொண்டே இருந்தாள். அவன் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தவாறு அவனுடைய சின்னஞ்சிறு கால்களையும் கையையும் தொட்டுப் பார்த்தாள். அப்புறம் கழுத்து வரை போர்த்தியிருந்த கந்தலை எடுத்துப் பார்த்துவிட்டு, வெட்கத்தால் முகத்தை மூடிக்கொண்டாள் சிவகாமி.

'ஐயய்யோ, தம்பிக்குத்தான் சட்டை இல்லையே ' ' என்று சொல்லிக்கொண்டே குழந்தையைப் பார்த்து, 'ஒனக்கும் சட்டை வேணுமாடா ? ' என்று கேட்டாள். பிறகு எழுந்து பக்கத்திலிருந்த ஜாதிக்காய்ப் பலகைப் பெட்டியைத்திறந்து, அதிலிருக்கும் கந்தலைக் கிளறி ஒரு கிழிந்த ரவிக்கையை எடுத்துக் கொண்டு பெட்டியை மூடிவிட்டு, குழந்தையின் அருகே வந்து உட்கார்ந்தாள். போர்வையை எடுத்து விட்டுச் சட்டை அணிவிக்க முற்படும்போது, அவளுக்கு இன்னொரு விளையாட்டுத் தோன்றியது. மோதிர விரலையும் நடு விரலையும் சேர்த்து வாயிலிட்டுச் சப்பிக்கொண்டே எழுந்து 'ஹை...ஹை ' என்று தோளை உயர்த்திக் கொண்டு குதித்தாள்.

சுவரோரமாக வைத்திருந்த 'மூன்று கல் ' அடுப்பு மீது பானை இருந்தது. அதனுள்---பானை நிறையப் பச்சைத் தண்ணீர். பக்கத்திலிருந்த தகரக் குவளையில் ஒரு குவளைத் தண்ணீர் மொண்டு கொணர்ந்து தம்பிப் பாப்பாவின் அருகில் வைத்தாள்.

அந்த வீட்டுப் பாப்பா செய்த்ததுபோலவே குழந்தையின் அருகே இரண்டு காலையும் நீட்டிப் போட்டுக் கொண்டு, தன் சட்டை நனையாமல் இருக்க முன் பக்கத்தை எடுத்து மேலே சொருகிக் கொண்டாள். குழந்தையை, படுத்திருந்த இடத்திலிருந்து முக்கி முனகித் தூக்கிக் கால்களின் மீது கிடத்திக் கொண்டு, தண்ணீர் படாமல் பாயையும் ஒதுக்கி வைத்துவிட்டு---- குழந்தையின் தலையில் ஒரு கைத் தண்ணீரை வைத்து 'எண்ணெய் ' தேய்த்தாள்; பிறகு முகத்தில், மார்பில், உடம்பில் எல்லாம் எண்ணெய் தேய்ப்பதுபோல் தண்ணீரைத் தேய்த்தாள். குழந்தை ஈன சுரத்தில் சிணுங்கிச் சிணுங்கி அழுதான். பிறகு டப்பாவிலிருந்த தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குழந்தையின் தலையில் ஊற்றினாள். குழந்தை வயிற்றை எக்கி எக்கிக் கேவியது.... 'சீ '.... இந்த பானை கைக்கு எட்டலியே ' என்று முனகியவாறு காலில் கிடத்திய குழந்தையோடு இன்னும் கொஞ்சம் தள்ளி, உட்கார்ந்த இடத்திலிருந்தே கைக்குப் பானை எட்டுகின்ற தூரத்திற்கு நகர்ந்து கொண்டாள்.

----தெருவில் ஜனங்கள் நடமாடிக்கொண்டிருந்தனர். ஆனால், கட்டுவதற்கு ஆணியுமில்லாமல், முருங்கை மரத்திற்கும் எட்டாமல் தொங்கிக்கொண்டு காற்றில் ஆடிக்கொண்டிருந்த அந்தக் கோணியின் நான்காவது முனை, குழந்தையையும் சிவகாமியையும் மறைத்துக் கொண்டிருந்தது. இந்தப் பக்கம் குப்பைத் தொட்டி. கோணியை விலக்காமல் இவளை யாரும் பார்க்க முடியாது. பார்த்தாலும் முதுகுப்புறம்தான் தெரியும்.

இரண்டாவது குவளைத் தண்ணீரைக் குழந்தையின் தலையில் ஊற்றினாள். குழந்தையின் வயிறு ஒட்டி மேலேற ஒருமுறை கேவிற்று. 'ரோ....ரோ....அழாதேடா கண்ணு.... ' என்ற கொஞ்சலுடன் தண்ணீரை ஊற்றிக்கொண்டே இருந்தாள்.

ஒவ்வொரு குவளைத் தண்ணீருக்கும் குழந்தைக்கு மூச்சுத் திணற வயிறு ஒட்டி மேலேறிக் கேவிற்று. அந்தக் குழந்தையின் திணறல், இந்தக் குழந்தைக்கு வேடிக்கையாய் இருந்தது. ஒன்று....இரண்டு...மூன்றாவது குவளைத் தண்ணீரைச் சாந்தமாக, அமைதியாக எவ்வித சலனமும் உடலிற் காட்டாமல் ஏற்றுக் கொண்டது குழந்தை.

'தம்பி குளிச்சிட்டானே ' ' என்று நாக்கைத் தட்டிக் கொண்டு குழந்தையின் தலையையும் உடம்பையும் துடைத்தாள் சிவகாமி. பிறகு அந்த ரவிக்கையைச் சட்டையாக அணிவித்து முக்கி முனகித் தூக்கி வந்து பாயில் கிடத்தினாள். 'இப்போது தான் நல்ல பாப்பா ' என்று குழந்தைக்கு முத்தம் கொடுத்தாள் சிவகாமி.

'சீ, தலைமயிர் மூஞ்சியிலே விழுதே ' என்று மரச்சீப்பை எடுத்துத் தலை வாரினாள். பொட்டு ? அதோ செங்கல் உருவில் பக்கத்தில் எழுந்தருளியிருந்த முனீஸ்வரனின் மேலிருந்த குங்குமத்தையெல்லாம் சுரண்டி எடுத்துக் கொண்டு வந்து தம்பிக்குப் பொட்டு வைத்தாள். கால்கள் இரண்டையும் சேர்த்து வைத்தாள். கைகளை மார்பின் மீது குவித்து வைத்து, துவண்டு கிடந்த தலையை நிமிர்த்தி வைத்தாள்.

'தம்பி ஏன் அழலே.... ? ' என்ற நினைவும் வந்தது. 'தம்பி தான் பட்டுப் பாப்பா....அழவே மாட்டான். '

'தம்பி தம்பி ' என்று எழுப்பினாள். குழந்தையின் உடம்பு சில்லிட்டிருந்தது.

'அப்பா ' ரொம்ப 'சில் 'லுனு இருக்கு. தம்பி, ஏண்டா சிரிக்கமாட்டேங்கிறே ? கையை ஆட்டு... ஆட்டமாட்டியா ? கண்ணைத் திற ' என்று இமைகளை விலக்கிவிட்டாள்; கண்கள் வெறித்தன....

'என்னடா தம்பி, பொம்மை மாதிரி பார்க்கிறியே... நீ பொம்மை ஆயிட்டியா ? ' என்று கைகளைத் தட்டிக் குதித்தாள் சிவகாமி.

சாயங்காலம் ரங்கம்மாள் வேலையிலிருந்து திரும்பி வரும் போது 'கிருஷ்ண மந்திர 'த்தின் அருகே வர்ணம் போன ஒரு மண் பொம்மை---தூக்கி எறிந்த வேகத்தில் கால் பகுதி மட்டும் கொஞ்சம் உடைந்து கிடந்தது--- காலில் தட்டுப்பட்டது. ரங்கம்மாள் குனிந்து அதைக் கையில் எடுத்தாள்.

'மத்தியானமெல்லாம் குழந்தை பொம்மை.... வேணும்னு அழுதாளே ' என்று நினைவு வந்ததும் கையிலெடுத்ததை மடியில் கட்டிக் கொண்டாள்.

சற்றுத் தூரத்தில் சிவகாமி ஓட்டமாய் ஓடி வந்தாள்.....

'எங்கேடி ஓடியாறே ? வீட்டுக்குத்தானே வர்ரேன் ? இந்தா ஒனக்குப் பொம்மை.... ' என்று வர்ணம் போன பொம்மையைக் கொடுத்தாள்.

'இதுதான் அந்தப் பாப்பாவோட பொம்மை ஒடஞ்சி போயிடுச்சி.... அம்மா, நம்ப தம்பிப் பாப்பா இல்லே. தம்பிப் பாப்பா---- அவன் பொம்மையாயிட்டாம்மா.... வந்து பாரேன். அந்தப் பாப்பாவோட பொம்மைதான் கெட்டுப் போச்சு.... தம்பி நல்லா இருக்கான், வந்து பாரேன்... ' என்று தாயை இழுத்தாள் சிவகாமி.

'என்னடி சொல்றே, பாவி ' ' என்று பதறி ஓடிவந்த ரங்கம்மாள்--- குளிப்பாட்டி, சட்டை போட்டு, தலைவாரி நெற்றியில் பொட்டு வைத்து நீட்டிக் கிடத்தியிருக்கும் தன் ஆசை மகனைப்பார்த்து, 'ஐயோ மவனே.... ' என்று வீழ்ந்து புரண்டு கதறி அழுதாள்.

சிவகாமிக்கு ஒன்றும் புரியவில்லை. மோதிர விரலையும் நடு விரலையும் வாயிலிட்டுச் சப்பிக்கொண்டு, முகமே கண்களாய் விரியப் பேந்தப் பேந்த விழித்தவாறு நின்றிருந்தாள். அவள் கையில் ராணி குளிப்பாட்டியதால் வர்ணம் போய், தூக்கி எறிந்த வேகத்தில் கால் உடைந்துபோன அந்த நொண்டிப் பொம்மை இருந்தது.

அம்மா எதற்கு அழுகிறாள் என்று சிவகாமிக்குப் புரியவே இல்லை. ஆனாலும் அவள் உதடுகளில் அழுகை துடிக்கிறது---- அவள் அழப் போகிறாள்.

# பூட்டுகள்

**தி.ஜானகிராமன்**

'ரொம்ப பிஸியா இருக்காப்பிலியோ ? '

புத்தான் துவாரத்தில் நூல் கோத்த ஊசியை நுழைத்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து பார்த்தேன். உப்பிலி இடைக்குழி நிலையின் நாதாங்கியில் ஒரு கையும், எதிர் நிலையில் ஒரு கையுமாக முதுகை முன்னே வளைத்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பல் எல்லாம் தெரிகிற புன்னகை. கால் நிலைக்கப்பால் இடைக்கழியில்.

'ஒரு பிஸியும் இல்லை. புத்தான் விழுந்துடுத்து. தைச்சிண்டிருக்கேன். வாங்கோ- '

'பரவால்லே '

'என்ன பரவால்லெ. படிதாண்டா விரதமா-வாங்கோ. '

'இல்லெ ஸ்வாமி-அவசரம். ஊருக்குப் புறப்பட்டுண்டிருக்கேன்-- '

'எந்தூருக்கு ? '

'அம்மா சத்திரத்திலெ ஒரு கல்யாணம். '

'உள்ள வந்து சொல்லலாமே. ஊருக்குப் புறப்பட்டுண்டிருக்கேன்றேள், சட்டை கூட போட்டுக்கலெ எப்ப போறதாக ? '

'பதினோரு மணி வண்டிக்குத்தான். '

'மணி எட்டுக்கூட அடிக்கிலியே. இன்னும் மூணு மணி நேரம் இருக்கே. வாங்களேன். '

'காரியம் இருக்கு ஸ்வாமி சமாசாரத்தைச் சொல்லிட்டுப் போயிடலாம்னு வந்தேன் ' என்று நிலையைத் தாண்டி அடி எடுத்து வைத்தார் உப்பிலி. ஸ்டூல் மீது உட்கார்ந்தும் கொண்டார்.

'எப்ப யாருக்குக் கலியாணம் ? எந்த ஊர்ல ? '

'ஒண்ணுமில்லெய்யா. எங்க அண்ணா மாப்ளெயோட தங்கைக்குக் கலியாணம். கிட்டின உறவும் இல்லே. ஆனா அண்ணா கோச்சுக்குவன் கோச்சுக்கறான். அண்ணா மாப்ளெ கொஞ்சம் வெறப்பு 'நீயும் வரணும்டா உப்பிலி/ இல்லேன்னா நாக்கிலெ நரம்பில்லாமெ ஏதாவது பேசிடுவா. நீங்கள்ளாம் பெரிய இடம்; பணக்காரா, என் தங்கைக்குக் கலியாணம்னா வருவாளா உங்கள் தம்பி, அவர் குடும்பம் எல்லாம்னு உன்னைத் தாண்டா முதல்லெ இழுப்பன். பேசாம வீட்டைப் பூட்டிண்டு எல்லாரையும் அழைச்சிண்டு வா. தலையைக் காமி. தாலி கட்டற வரைக்கும் இரு. ஒரு வா சாப்பிடு. திரும்பி வந்துடுங்கறான் அண்ணா. தட்ட முடியலெ. நாளை சாயங்காலத்துக்குள்ள வந்துடுவோம். நீர் வாசல்லெ வந்து சித்த வீட்டைப் பார்த்துக்கணும். கொல்லைப் பக்கம் மத்யானம் சாயங்காலம், ராத்திரி படுத்துக்கப் போறதுக்கு முன்னாலெ ரண்டு தடவை அப்படிக் கொஞ்சம் போய்ப் பார்த்துண்டா போதும்... '

'படுத்துக்கப் போறதுக்கு முன்னாலெ என்ன ? ராத்திரியும் ரண்டு தடவை முழிச்சிண்டு போய் கொல்லைப் புறம் போய்ப் பார்த்துக்கறேன். என்ன ப்ரமாதம்/ '

'ராத்ரி எப்படி முழிச்சிப்பேள் ரண்டு தடவை ' என்று பல் தெரிய சிரித்தார் உப்பிலி.

'அலாரம் வச்சுக்கறேன் நடுநிசிக்கு எழுப்புறதுக்கு ஒரு தடவை பார்த்துட்டு வந்து, அதை விடியகாலம் மூணுமணிக்குத் திருப்பி வச்சுக்கறது. '

'என்னத்துக்கு அத்தனை சிரமம் '.... சரி. ரண்டு தடவை பார்த்துண்டா நல்லது தான் இருந்தாலும்... ' 'பரவால்லெ '

'என்னோட டார்ச் லைட்டையும் கொடுத்துட்டுப் போறேன். ஒரு சமயம் ராத்ரி கரண்டு ஆஃபாயிடுத்துன்னா '

மடியை அவிழ்த்து ஒரு, சின்ன டார்ச் விளக்கை எடுத்து மேஜை மீது வைத்தார் உப்பிலி.

'நீங்களும் பார்த்துக்கோங்கோ. ' என்று பார்வையைத் திருப்பினார். நானும் திரும்பினேன். என் மனைவி அடுக்களை நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

'நாளை சாயங்காலத்துக்குள்ள வந்துடுவோம், ' என்றார் அவளைப் பார்த்து.

பிறகு என்னைப் பார்த்தார் 'யாராவது வந்து கேட்டா, நான் அவ்வளவு தூரம் போயிருக்கேன்னு சொல்ல வாண்டாம். அக்கரைக்கு கல்யாணம் விசாரிக்கப் போயிருக்கா. இன்னிக்கு ராத்ரிலே எட்டு மணிக்கே வந்துடுவான்னு சொல்லி வையுங்கோ, பொன்னுசாமி கிட்டவும் அப்படியே சொல்லுடான்னு சொல்லியிருக்கென், வாசல்லெ திண்ணையிலெயே அவனைப் படுத்துகச் சொல்லியிருக்கேன். ராத்திரி மட்டும் நீங்க படுத்துக்கப் போறதுக்கு முன்னாலெ அவனை உங்க வீட்டுக்குள்ளாகவே கொல்லை வரையில் பார்த்துட்டு வரச் சொல்லியிருக்கேன். உங்களை டிஸ்ரட்ப் பண்ணாம போய்ட்டு வந்துடுவன். நீங்களும் ராத்திரி ஏந்துண்டு ரண்டு தடவை பார்க்கறேன்னேளே அப்ப அவனை எழுப்பிக் கூட அழைச்சிண்டு போகலாம் துணைக்கு அவசியம் இல்லே இருந்தாலும் ஒரு ஹத்து. ஒருத்தர் கூட இருந்தா சித்தை மனசுக்குத் தெம்பு '

இன்னும் சில பந்தோபஸ்துகளைக் கூறிவிட்டு 'டார்ச்லைட்டை நாளைக்கு நான் வந்தப்பறம் கொடுத்தாப் போரும். பொன்னுசாமிட்ட கொடுக்கவாணாம் ' என்று டார்ச் விளக்கு வீடு

எல்லாவற்றையும் காபந்து பண்ணிவிட்டு இடையில் வந்து அவா துடை மீது உரசிக்கொண்டு நின்ற நாலு வயது பையனையும் அழைத்துக் கொண்டு போனார் உப்பிலி.

சற்று கழித்து அவன் மனைவி வந்தாள், என் மனைவியிடம் மாலையில் பசும்பால்காரி வந்ததும் பாலை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவளிடமும் தாங்கள் ஊரில் இல்லாததைச் சொல்ல வேண்டாம் என்றும் பசும்பாலை நாங்கள் உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் அதற்கான காசைக் கொடுக்க வேண்டியதில்லை என்றும் அதற்கு பதிலாக நாளை மாலை அவர்கள் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் தனக்கும் கணவனுக்கும் காப்பி மட்டும் போட்டு ஒவ்வொரு டம்ளர் கொடுத்தால் போதும் (பிரயாணக் களைப்புத் தீர) என்றும் சொல்லிவிட்டுப் போனாள்.

பத்து மணிக்கு அடுத்த வீட்டிலிருந்து குழந்தைகள் கத்தும் சத்தம். உப்பிலியின் மனைவி குழந்தைகளுக்கு தலை வாரிப் பின்னும்போது சிடுக்குகளைக் கீற உபாதை எழுப்பும் கூச்சல்கள். ரெயிலடி ஒன்றரை மைல் தூரம் பத்தேகாலுக்காவது கிளம்பினால் தான் ரெயிலடிக்குப் போகிற சாலையில் ஆயச்சல் மேடு பள்ளங்களைக் கடந்து உப்பிலியின் மாட்டு வண்டி எலும்புகளை நொறுக்காமல் பெருநடையாகப் போகமுடியும். ஆனால் ஒன்பது மணிக்கே சட்டை முதலியவற்றைப் போட்டு குழந்தைகளைத் தயார் செய்தால் ஊருக்குப் போகிற செய்தி அண்டை அயலுக்குத் தெரிந்துவிடும் என்று புறப்பட சிறிது நேரத்திற்கு முன்பே இந்த வாத்சல்யப் பணியை மேற்கொண்டிருந்தாள் கஸ்தூரி அம்மாள். இடையிடையே கொல்லைக் கதவு, இரண்டாம் கட்டின் நடைக்கதவு இவற்றின் தாழ்ப்பாள்களின் ஓசையும் அவற்றைப் பூட்டும் ஓசைகளும் கேட்டன. மீண்டும் அந்தக் கதவுகள் திறக்கப்பட்டு சாத்தப்பட்டு தாழ்--பூட்டுகளின் ஓசைகள்.

இந்த மத்தியில் பொன்னுச்சாமி தெருக்கோடியில் உள்ள உப்பிலியின் புளியங் கொல்லைக் கொட்டகையிலிருந்து வண்டியைப் பூட்டி வந்து வாசலில் அவிழ்த்துப் போட்டிருந்தான்.

பத்து இருபத்தைந்து அடுக்களைக் கதவு முன் கதவு இடைக்கழிக் கதவுகள் சாத்திப் பூட்டப்பட்டன. குழந்தைகள் வாசலில் வந்து நின்றார்கள், பொன்னுச்சாமி ஒரு பெட்டியையும் இரண்டு பைகளையும் திண்ணையில் கொண்டு வைத்தான். பிறகு ஏழு வயதுப் பெண்ணும் நாலு வயதுப் பையனும் வந்தன. கஸ்தூரி அம்மாள் கையில் ஒரு பையுடன் பட்டுப் புடவையும் வைர அட்டிகையும் கல்லிழைத்த கை வளைகளுமாக வந்தாள். பொன்னுச்சாமி மாடுகளை அதட்டி வண்டியைப் பூட்டினான். குழந்தைகளும் கஸ்தூரியும் வண்டியில் ஏறினார்கள்.

உப்பிலியும் வந்தார். ஒல்லி உடம்பும் திருமண்ணும் உயரத்தினால் சற்றே வளைந்த முதுகும் தட்டுச் சுற்றுப் பட்டுக் கரை வேட்டியும் கழுத்து மூடின சட்டையும் செருப்பும் குடையுமாக நின்றார். வண்டிக்குள் ஏறுவதற்குள் ஏதோ ஞாபகமாக, மீண்டும் வாசல் பூட்டைத் திறந்து தாழை அகற்றி, இரண்டாம் கட்டின் நடைக்கதவு, இரண்டாம் கட்டுக் கதவு, கிணற்றங்கரைக் கதவு கொல்லைக் கதவு எல்லாவற்றையும் ஒரு முறை எட்டிப் பார்த்து கதவுகளை ஒன்றன் பின் ஒன்றாக சாத்தித் தாழிட்டு பூட்டி வாசல் கதவையும் பூட்டிவிட்டு வாசலில் வந்து பொன்னுச்சாமி நுகத்தடியை அழுத்திக் கொள்ள ஒரு காலை வண்டியின் மிதிபட்டையில் வைத்து என்னைப் பார்த்து 'வரேன் ஞாபகமிருக்கட்டும் நான் சொன்னதெல்லாம் ' என்று பற்கள் தெரிய கன்னம் நிரம்ப, கண்கள் சுருங்கப் புன்னகைத்துவிட்டு வண்டியில் ஏறினார். இனி எந்தத் திருடனும் வரமாட்டான் என்று எனக்கும் என் மனைவிக்கும் நம்பிக்கை திடமாயிற்று. இத்தனை தடவை திறந்து சாத்தித் தாழிட்டுப் பூட்டின இத்தனை கதவுகளை யார்

திறக்க முடியும் ? யார் திறக்கத் துணிவான் ? பால்காரிக்கும் தெரியப் போவதில்லை. நான் வேறு இருக்கிறேன். என் மனைவி--பிறகு பொன்னுச்சாமி வேறு. பயமில்லை.

பொன்னுச்சாமி தலைப்புக்கயிற்றை லாகவமாக உள்ளங்கையில் உருவி இடது மாட்டின் பின் பக்கத்தைச் சிறிது ஒதுக்கி ஒரு எம்பு எம்பி உட்கார்ந்து 'த ' என்றதும் விறுட்.

வண்டி கிளம்பி விட்டது.

குழந்தைகள் எங்களுக்கு டாட்டா காட்டின. உப்பிலியின் மாடுகள் புலிகளாய்ப் பாயும். ஒரு நான்கு கணத்தில் தெருத்திருப்பத்தில் மறைந்து விட்டது.

மணி பத்து முப்பத்தைந்து. அதனால் என்ன ? ஆய்ச்சலோ, குண்டோ, குழியோ ஒன்றரை மைல் போக உப்பிலியின் மாடுகளுக்கு பத்தே நிமிஷம். டிக்கட் வாங்கிய பிறகு ஐந்து ஏன், பத்து நிமிஷம் காத்திருக்கலாம். பத்து ஐம்பத்தெட்டுத்தான் ரயில்.

'ஐயையோ ' என்று உள்ளேயிருந்து என் மனைவி கத்திக்கொண்டு ஓடி வந்தாள்.

'என்ன என்ன ? '

'குழந்தை கத்தறதே '

'குழந்தையா ' '

'ஆமான்னா--கஸ்தூரி மாமியோட கைக் குழந்தைதான். தொட்டில்லேர்ந்து கத்தறாப்பல இருக்கு. '

'என்ன பேத்தறே ? '

'பேத்தறேனா... வந்து கேளுங்களேன் ' கையை உதறி உதறி ஏதோ புருஷனை கீழே விட்டு விட்டு ரயில் தன்னை மட்டும் ஏற்றிக் கொண்டு நகர்ந்துவிட்டாற் போல் கத்தினாள் மனைவி.

உள்ளே ஓடினேன். ஆமாம். அடுத்த வீட்டிலிருந்து தான் சத்தம். குழந்தை தான்.

'அந்த மாமி குழந்தையை எடுத்துண்டு போனாப்பல இருந்ததே--நான் பார்த்தேனே, '

'இல்லே நான் பார்க்கலே. கையில் குழந்தை இல்லெ கோதையும் கண்ணனும் தான் ஏறிண்டது. அதுகளை தான் நான் பார்த்தேன்.. '

வீல் வீல் என்று வ்ராச் வ்ராச் என்று மூச்சு நின்று விடுவது போல ஒரு குழந்தையின் கத்தல். இந்த வீட்டு மனைவியின் கை உதறல், நான் அடுத்த வீட்டு வாசலுக்கு ஓடினேன். திரும்பி வந்தேன். சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு ஓடினேன்.

ஐந்து நிமிஷம் ஆய்விட்டது. குழந்தையின் கத்தல்,

உப்பிலியின் வண்டி தெரு திரும்பிற்று. வண்டி வந்து நின்றது. உப்பிலி இறங்கினார். ஓடி வந்தார். வெள்ளி மோதிரம் போட்ட ஆள் காட்டி விரலில் சாவிக்கொத்துடன் ஆளோடியில் ஏறினார். அவர் மனைவி இறங்கினாள்,

'பொகு சமத்து. வழிச்சுண்டு சிரிப்பா. ' என்று பல்லைக் கடித்தார்.

'ம்க்கும். கௌம்புன்னு கிட்டிகட்டினேள் என்னமோ தீவட்டிக் கொள்ளக்காரன் வந்துடறாப் போல கொல்லைக்கும் வாசலுக்கும் எத்தனை நடை, எத்தனை தடவை பூட்றது திறக்கறது. அப்பா--அப்பா போறும் ' கஸ்தூரி மாமி உருட்டி விழிக்கிறாள்.

'ஏண்டி நானா பத்து மாசம் சுமந்தேன் ? பேசாதே. குழியவேற பறிக்கிறியே '

'ம்க்கும் பறிக்கிறேன். மெதுவாப் பேசட்டும் '

கதவு திறந்தது. இடைக்கழிக் கதவு திறந்தது. ஒரு நிமிஷம் கழித்து குழந்தை அழுகை நின்றது.

குழந்தைகள் இறங்கி வந்தன.

பொன்னுச்சாமி வண்டியை அவிழ்த்து சக்கரத்தில் மாடுகளைக் கட்டினான்.

இனி மேல் மாலை மூன்றே முக்காலுக்குத் தான் அடுத்த ரயில்.

'ஓய் தீட்சிதரே. இப்படியுமா ஒரு தாயாருக்கு மறந்துபோகும் ? '

'போச்சுய்யா போச்சு. எங்கிட்டதான் சொல்லிண்டார் உப்பிலி. நான் தான் இன்னிக்கு ராத்திரி பசும்பாலை வாங்கிண்டேன். ராத்திரி அலாரம் வச்சு ரண்டு தடவை கொல்லைப்பக்கம் பாட்டரி வெளிச்சத்திலே போனேன். கன்னம் வைக்கிறவன் தீவட்டிக் கொள்ளைக்காரன்லாம் வராம நான் தான் இந்த தண்டு தீட்சிதன் தான் பார்த்துண்டேன் போருமா '

'நல்ல பொம்மனாட்டி நல்ல தாப்பாள்யா '

'உங்களுக்கு பணத்தோட சொத்தோட அருமை தெரியுமா பேசாம இரும். ' தண்டு தீட்சிதர் என்னை இடித்துக் காட்டினார். தன்னையும் சேர்த்துக் கொண்டார்.

# மிதிபட....

**வண்ணதாசன்**

'உன்னை யாரு வரச் சொன்னாண்ணு வந்து நிக்க ? ' முத்து படுத்துக் கிடந்த ஜமுக்காளத்திலிருந்து அப்படியே சிகரெட்டோடு எழுந்து வந்த போது பொன்னுலட்சுமி வாசலிலேதான் நின்றாள். ஒரு வித மட்டி ஊதாக் கலரில் பெயிண்ட் அடித்த ஒரு கதவு சாத்தியிருக்க, கையில் சற்றுக் கனமாகத் தொங்குகிற பையுடனும் இன்னொரு கையில்

ஊரிலிருந்து கொண்டு வந்திருக்கிற மண்ணெண்ணெய் ஸ்டவ்வுடனும் உள் நுழையச் சாத்தியமற்று அவள் வெளியிலேயே நிற்கும்படி ஆயிற்று.

தனியாய் இருட்டோடு இருட்டாய்ப் புறப்பட்டுப் பலவித மனக் குழப்பங்களோடு பஸ் ஸ்டாண்டில் வந்து இறங்கி, கடையில் போய் கேட்க, 'ஸாருக்கு இன்று வார லீவுல்லா ' என்று சொன்னதைக் கேட்டதும் திக்கென்றிருந்தது. வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் 'போதும் போதும் நீ அவன் கூடப் போய்க் குடித்தனம் போட்டது ' என்று ஒரேயடியாகச் சொல்லி விட்டார்கள். அண்ணன் ஆபீசுக்குப் போய், கூட வர முடியுமா என்று கேட்கப் போனாள். கட்டுக் கட்டாகச் சாயந்திரப் பதிப்பு வெளியே போய்க் கொண்டிருந்தது. கேட்டில் உள்ள போர்டில் கூட அன்றையப் பதிப்பின் தலைப்புச் செய்திகள் அச்சடித்தாள் ஒட்டப் பட்டு விட்டது. 'சேலத்துக்கு முதல் பரிசு ' என்று பெரிய எழுத்துக்களில் முதல் வரியும் இரண்டாம் வரியும் மடங்கியிருந்தன.

அண்ணன், உள்ளே போய்ப் பார்க்கையில், துடைத்துக் கொண்டிருந்த வேஸ்ட்டும் மசிக்கறையுமாகப் பிரும்மாண்டமான மிஷினுக்குப் பின்னால் இருந்து அவன் சற்று எரிச்சலோடுதான் வந்தான். இவளுடன் வாசலிலிருந்து வந்த கூர்க்கா சிரித்ததற்குப் பதில் சிரிப்புக் கூடச் சிரிக்கவில்லை. என்னமோ அவளை யாருக்கும் பிடிக்காமலேயே போய் விட்டது.

ஒழுங்காய் வேலைக்குப் போய் விட்டு வந்து கொண்டிருந்தவளை எல்லோருமாய்ச் சேர்ந்து, 'இம்புட்டாவது கட்டிக்கிடுதேண்ணு சொல்லி ஒருத்தன் வரும் போது ரெண்டாம்தாரம் அது இதுண்ணு யோசிச்சா முடியாது ' என்று சொல்லி விட்டார்கள். 'கல்யாணம் முடிஞ்சு மூணு வருஷமாப் பிள்ளையில்லாமல் இப்பத்தான் உண்டாச்சாம். சின்ன உசிரு விழுந்தும் பெரிய உசிரு ஆயிடுச்சி போல். பாவம், இந்தப் பையனை பார்த்தால் ஏறு நெத்தியும் மீசையுமா சித்துப் போல இருக்கு. வயசு தெரியலை அப்படியொண்ணும் ' என்று இந்த அண்ணன் தான் சொன்னான். 'இரண்டாம் தாரத்துக்கு என்ன இவ்வளவு யோசிக்கக் கிடக்கு. நம்ம சங்கரன் கோயில் பேச்சியம்மைச் சித்தி மூணாம் தாரமா வாக்கப்பட்டா, அதுக்குப் பிறகு மூணு ஆணும் மூணு பொண்ணும் பெத்தா, காரும் வண்டியுமா இப்ப போட்சா இருக்கா. ஒரு நேரத்துக்கு அது மாதிரி ஆகப்படாதுண்ணா இருக்கு ' என்று இந்தக் கல்யாணத்திற்கு மத்தியஸ்தர் மாதிரி வந்த செவல் பிள்ளை சொன்னார்.

பொன்னுலட்சுமிக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. சின்ன வயசிலேயே அம்மாவைச் சாகக் கொடுத்து விட்டு எப்படி எப்படியோ, சரியில்லாத அப்பாவுடன் வளர்ந்து சீரழிந்து மாதம் நூற்றிருபது ரூபாய்ச் சம்பளம் என்கிற அளவுக்காவது முன்னிலைக்கு வந்திருக்கும் போது, மறுபடியும் இது என்ன என்றிருந்தது.

ஆனாலும் யார் சொல்லுக்கும் கட்டுப் படாமல் வேகவேகமாகக் கல்யாணம் ஆகி, கல்யாணம் ஆன நாளிலிருந்து இரண்டு மாதம் கூட ஒத்துப் போகாமல். தெருவில் நடந்து கொண்டிருக்கும் போதே ஜன்னல் வழி வந்து முன்னால் விழுகிற எச்சில் இலைபோல் எறியப்பட்டு விட்டது எல்லாம். யோசனை கேட்க அண்ணனையும் மதினியையும் தவிர ஆளும் கிடையாது. இத்தனை நாள் இங்கே இருந்ததற்கு அண்ணன் ஒன்றும் சொல்லவில்லை. இப்படி ஆபீஸைத் தேடி வந்து நான் ஊருக்குப் போகலாம்னு பாக்கேன், என்று சொல்லும் போதும் ஒன்றும் பேசாமல் இருக்கிறான். 'ஒத்தையில் புறப்பட்டுப் போயிடுவியா நீ. இப்ப பஸ் ஏறினாலும் கருகருத்த நேரமாயிடுமே போய்ச் சேருகிறதற்குள்ளே. கூட வந்து விட்டுட்டு வரட்டுமா ' என்று எதையும் சொல்லாமல் எரிந்து எரிந்து மட்டும் விழுந்தான்.

'காலையில் எல்லாம் புறப்படணும்னு தோணலையா மூணு மணிக்குத்தான் யோசனை உதிச்சுதாக்கும். இங்கே வந்து நிக்கிதியே ஊருக்குப் போகணும்னு. அவன் அந்தால வாவாண்ணு ஆரத்தி எடுத்துக் கூட்டிக் கிட்டுப் போகப் போகிறானாக்கும். அப்பன் கிட்டே கேட்கணும் ஆத்தாக்கிட்டே கேட்கணும்பான். அண்ணன் பொண்டாட்டி கிட்டே யோசனை கேட்கணும்பான். இம்புட்டும் பத்தாம, மூத்தவடியா படத்துக்குப் படையல் வச்சுக் குறிகேட்கணும்பான். புத்தியை இரவல் கொடுத்துட்டு நிற்கிற மனுஷன்லா அவன் ' இப்படியே பேசிக் கொண்டு போனானே தவிர முடிவாக ஒன்றும் சொல்லவில்லை. எப்படியும் ஆகிறது என்றுதான் புறப்பட்டு வந்தான்.

வீட்டில் இருக்க வேண்டுமே என்ற யோசனையோடே, பஸ் ஸ்டாண்டிலிருந்து இரண்டு கையிலும் இரண்டு சாமான்களுடன் நடந்து, பஜாரிலிருந்து பரிந்து வெளிச்சக் குறைவான இந்தத் தெருவுக்குள் வந்து, இந்தத் தெருவின் முனையிலிருக்கிற சாராயக் கடையில் இருப்பானோ என்றும் யோசித்துக் கொண்டு, நாகஜோதி விலாஸ் மிட்டாய்க் கடைக்குச் சரக்குப் போட்டுக் கொண்டிருக்கிற அடுப்பிலிருந்து தக தகக்கிற வெக்கையும், தண்ணீர் வண்டியையும், கம்பிக் கட்டில் போட்டு வீட்டுக்கும் விறகுக் கடைக்கும் நடுவில் வளர்ந்து நிற்கிற பூவரச மரத்தடியில் யாரோ குப்புறப் படுத்திருக்கிற சோலை நாடார் காம்பவுண்டையும் தாண்டி. வாசலில் காயப் போட்டிருக்கிற தீப்பெட்டி டப்பாக் குவியலுக்கு ஒதுங்கி வந்து நிற்கிறவளை 'யாரு வரச்சொன்னா ' என்று கேட்டால் எப்படியிருக்கும் ? கைவலியைத் தாங்காமல் சற்று இறக்கி வைப்பதற்காவது இவள் உள்ளே போக வேண்டும்.

ஒருச்சாய்ந்து சற்று பயத்துடனே அவள் உள்ளே நுழைந்து ஸ்டவ்வையும் பையையும் வைத்தாள். சைக்கிள் மேலும், கொடியிலும், அங்குமிங்கும் சொல்ல முடியாத புழுக்கத்துடன் செடிவாடை அடித்துக் கொண்டு அவனுடைய துணிகள் தாறுமாறாய்த் தொங்கின. மூன்று மாதத்திற்கு முன்னால் அவள், 'பிடிக்கலைண்ணா ஊரிலே கொண்டி விட்டிருங்க ஒரேயடியா. கூட வச்சுக்கிட்டு இந்த இம்சை பண்ண வேண்டாம். தாங்க முடியலை மனுசிக்கு ' என்று சொன்னதும், அவன் 'இதுதான் வழி, இந்தானைக்குப் போயிட்டுவா, நல்லதாப் போச்சு ' என்று கையைக் காட்டினதும் இவள் புறப்பட்டதுமான நேரத்தில் களைந்து போட்டிருந்த சேலையும் உள்பாடியும் அப்படியே கொடியில் கிடந்தது.

'ஓங்கப்பனும் அண்ணனும் முந்திக்குப் பின்னாலேயே வருவான்களே. எங்கே காணோம். வாசல்ல நிண்ணு வாய் பார்த்துக்கிட்டிருக்காங்களா '

'ஒத்தையிலே போனேன். ஒத்தையிலே வந்திருக்கேன். '

'இந்த வாயிலதானே தீய வைக்கணும் உனக்கு. எங்கம்மைகிட்டேயும் இந்த வாயடிதானே அடிச்ச உனக்குக் கொழுப்புட்டி. வேலைக்குப் போற கொழுப்பு. வேலையும் வேண்டாம் தாலியும் வேண்டாம்ணுதானே வீட்டில் கிடண்ணு தள்ளினேன். அப்படியும் திமிர் அடங்கலையே உனக்கு. ' இப்போது மட்டுமில்லை. ஆதியிலே இருந்து இதையேதான் சொல்கிறான். திமிர் கொழுப்பு என்று எதைச் சொல்கிறான் என்றும் பிடிபடவில்லை. கன்னம் ஒட்டி உலர்ந்து கிள்ளச் சதையில்லாமல்தான் இருக்கிறது உடம்பில்.

பொன்னுலட்சுமிக்கு துணிமணியிலிருந்து கிளம்பின வாடையை நிஜமாகவே தாங்க முடியவில்லை. அருவருப்புக்குச் சுளுக்கிய மூக்கைக் கட்டுப் படுத்த முடியவில்லை. இடது மூக்கும் இடது பக்க வாயும் குறுக்கே சரிந்து வலதுபுறம் போய்த் திரும்பியது மூச்சிழுப்புடன்,

இது நடந்தது ஒரு வினாடிக்குள்தான் என்றாலும் முத்துவுக்குத் தாங்க முடியாத ஆத்திரம் வந்தது.

'ஆமா நீ சுளிக்கத்தான் செய்வே, அப்படியே போத்திகிளப் அத்தரும் புனுகும் பூசிக்கிட்டுப் பொறந்தல்லா நீ. இந்த நாத்தம் ஒரு மாதிரித் தான் தெரியும் உனக்கு. மகராசி அவ பெத்துப் போட்டுக் கண்ணை மூடியிருக்கா. அந்த அருமைக்காக உன்னைக் கட்டியிருக்கேன். நீ அதோட பீத்துணியைக் கசக்கிட்டு, மதினிகிட்டே, 'சோப்பு இருக்கா கை கழுவ 'ண்ணு கேக்கிறே, எம்பிட்டு இருக்கு உனக்கு. ஆமாமா, உனக்கு நாத்தம் அடிக்கத்தான் செய்யும். சிந்தா மதார் பிரஸ்ஸில் நாலு பேர்கூட இடிச்சுக்கிட்டு நின்னா உனக்கு மணக்கும் '.

பொன்னுலட்சுமிக்கு எந்த மாறுதலுமின்றி, அதே இடத்தில் இத்தனை மாதமும் நிற்பது போலிருந்தது. எந்தப் புள்ளியில் தன்மேல் சந்தேகம் என்று அவளுக்குப் புரியவில்லை. வேலை பார்க்கும் போதும், நாலு பேருடன் ஒன்றாக இருக்கும் போதும் அவள் சந்தோஷமாக இருந்தது வாஸ்தவம்தான். ஏன் ? இவனே கூட நாலு பேருக்கு மத்தியில் சந்தோஷமாகவே இருந்தான். பாத்திரக்கடை கோமதிநாயகம், குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் முதலாளி, இவளுடன் வேலை பார்க்கிற அம்மன் தழும்புச்சிவராமன், கன்னமெல்லாம் அடர்த்தியான தாடியுடன் வெள்ளைச் சட்டை போட்டுச் சிரித்துக் கொண்டே இருந்த மிட்டாய்க் கடை ராஜப்பா இவர்கள் மத்தியில், இவர்களை எல்லாம் இவர்களுக்கு அறிமுகம் பண்ணின கையோடு கல்யாணத்தன்றைக்கு இவள் இருந்த போது ரொம்பச் சந்தோஷமாகவே இருந்தாள். அதற்கு என்ன செய்வது ?

இவள் ஒன்றுமே சொல்லாமல் நின்று இப்படி பையை வைத்துவிட்டு, உள்ளே போய்ப் பானையை, குடத்தை எல்லாம் ஒழுங்கு பண்ணி இங்கேயே உட்கார்ந்து விடுவாளோ என்று பயந்தது போல மறுபடியும் ஆத்திர மூட்டிக் கேட்டான்.

'என்ன மயித்துக்கு இங்கே வந்த ? '

பொன்னுலட்சுமிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை என்றாலும், ஒரு பதிலாக இருக்கட்டுமே என்பது போலவும் நிஜமாகவே அவள் இங்கு வர ஒரு தூண்டுதலாக இருந்த இவனுடைய சிநேகிதன் சிவராமனைப் பத்து நாளைக்கு முன் பிரஸ்ஸிலிருந்து வரும்போது தற்செயலாகச் சந்தித்து, இவர்கள் வாழ்க்கையை ஒக்கிட்டுக் கொள்வது குறித்து நீண்ட நேரம் பேசியதையும், 'நீ முதல்லே புறப்பட்டுப் போ. நான் அவனைப் பார்த்துப் பேசிக்கிடுறேன். எல்லாம் சரியாகிப் போகும் ' என்று சிரித்துக் கொண்டே சொல்லி அனுப்பியதையும் நினைத்தவளாக 'சிவராமன் வரச் சொன்னார் ' என்று சுருக்கமாகச் சொல்லி முடிப்பதற்குள்,

'அவன் படுக்கச் சொன்னாம்னா படுப்பியா ' என்று முத்து விகாரமான நிதானத்துடன் இவளைக் கேட்டதும், 'இவனைச் சங்கை நெறித்து அப்படியே கொண்ணுரலாமா ' அவ்வளவு ஆங்காரம் வந்தது. அப்புறம் மேற்கொண்டு என்ன செய்ய இருக்கிறது.

எப்போதும் இறந்து போனவள் பெயர் சொல்லிக் கொண்டு, இவளையும் இவள் வாழ்க்கையையும் விமர்சித்து கேலி பேசுகிறதற்குத் திருப்பிச் செய்கிற ஒரு கேலியாக, ஒரு சற்றே அன்னியோன்னியமான நேரத்தின் உரிமையில் இறந்து போனவள் பற்றி ஏதோ ஒன்று இவள் சொல்ல, மேல் துணிகூட இல்லாத இவளை அப்படியே உதறிக் குப்புறத் தள்ளி, விளக்கு மாடத்துக்கு முன் கும்பிடச் சொல்லி உதைத்தவனில்லையா இவன் ?

எல்லாம் அறிந்து, பின் எதற்கு மடக்கி மடக்கி உள்ளேயே வந்து விழுந்தோம். கல்யாணமாகி வேலையை இவன் விடச் சொன்னதற்காக விட்டு, இந்த ஊர் வந்து, ஊருக்கு திரும்பிய கொஞ்ச நாளில் மறுபடி அதே பிரஸ்ஸில் வேலைக்குப் போய், இன்று மறுபடி பஸ் ஏறி இவன் முன்னால் வந்து கேவலப்பட எது காரணம் ? மெல்ல மெல்ல மறுபடி படிந்து கொண்ட வாழ்க்கையை மறுபடி கலைக்கிறது போல இவளே திரும்பிக் கொண்டது எவ்விதம் ? தான் வந்த எத்தனையோ பஸ்களின் டயர்களில் மிதிபடுவதற்கென்றே ரோட்டின் நடுவில் அறுவடைத் தானியக் கதிரைக் குவித்து ஒதுங்கி நின்றவர்கள் போல, இவனிடம் மிதிபட வாழ்க்கையைக் கொடுக்கும்படி இவளைத் தூண்டுகிற விசை எது ?

பொன்னுலட்சுமிக்குள் முடிவற்ற கேள்விகள் தெறித்துச் சிக்கலாகிக் கொண்டிருந்த போது, கப்பென்று இருட்டுப் படர்ந்து வலையாக விழுந்தது. மில் சங்கின் சத்தம் உய்யங்கென்று கேட்டது. 'லைன் மாத்துதானா, ஓ. ' என்று பொன்னுலட்சுமி நிதானித்து, மறுபடி வெளிச்சம் வரக் காத்திருந்த நேரத்தில், அவள் மேல் இரண்டு கைகள் விழுந்தன. உடம்பை இழுத்து நெருக்கி மிகுந்த பரபரப்புடன், இந்த இருட்டே ஒரு அனுகூலம் போன்று வெறியுடன் அவள் முகத்துடன் முகம் அப்பியது. முத்து தான். அவன் கைகள். அவன் வாடை. இவ்வளவு நேரம் நாயை விரட்டுகிற மாதிரி விரட்டினவன். எவன் வரச் சொன்னான் என்று கேட்டவன்.

பொன்னுலட்சுமி மிகுந்த மூர்க்கத்துடன் பலம் திரட்டி, உதறித் தள்ளவும் அவன் இருட்டுக்குள், கதவு, சுவர் என்று எதனுடன் எல்லாமோ மோதி விழவும், மறுபடியும் வெளிச்சம் வந்தது.

வெளிச்சம் முழுவதுமாகத் தான் வீழ்ந்திருப்பதைக் காட்டிவிடக் கூடாது என்பது போல, ஒரு மிருகம் நிகர்ந்து, அவசரம் அவசரமாகப் பாய்கிற முயற்சியில், அவன் விழுந்து கிடந்த இடத்திலிருந்து வேட்டியைப் பற்றிக் கொண்டு எழுந்து----

'வெளியே போயிரு ' என்று கத்தினான்.

பொன்னுலட்சுமிக்கு வேறு எந்த யோசனையுமின்றி வெளியே போவதற்கு மிகுந்த உடன்பாடு தோன்றிற்று. பையை எடுப்பதற்கு அவள் குனியும் போது இடுப்பில் அவன் மிதிக்கக்கூடும் என்ற பயத்தை மட்டும் தவிர்க்க முடியவில்லை.

## எண்கள்

**அசோகமித்ரன்**

இந்த ஆள் எப்போ முடிப்பார்னு தெரியலை. தினம் இந்த மாதிரிதான் ஆயிடறது. ஒவ்வொருநாளும் கொஞ்சம் முன்னாலே வந்து பேப்பரை முழுக்கப் பாத்துட்டுப் போகலாம்னா நாம வரத்துக்குள்ளே நாலு பேராவது ஏற்கனவே வந்துடறாங்க. இவங்க வீடெல்லாம் பக்கத்திலேயே இருக்கோ என்னவோ. இந்த ஆள் வீடு ரொம்பப் பக்கத்திலே இருக்கணும். ரொம்ப ரொம்பப் பக்கத்திலே இருக்கணும். இந்தச் சாலையிலே இரண்டு சாரிலேயும் ஒரே பாங்குகளும் கடைகளுந்தான் இருக்கு. இந்தப் பாங்குகளையும் கடைகளையும் எட்டு மணிக்குத்தான் திறக்கிறான். இந்த ஒரு இடந்தான் ஏழு மணிக்கே திறக்கிறான். ஏழு மணிக்கே வந்தா இங்கே வர இரண்டு மூணு பேப்பரையும் அஞ்சு நிமிஷத்துலே பாத்துட்டுப்

போயிடலாம். நாளைக்காவது ஏழுமணிக்கு வந்துடணும். ஏழு மணிக்கு வந்தா வீட்டிலே தண்ணி பிடிச்சு வைக்க முடியாது. எட்டு குடும்பம் நடுவிலே ஒண்டுக் குடித்தனம் வாழற அழகிலே ஒழுங்காக் கொல்லைப்புறம் போயிட்டு வரமுடியாது. ஏழு மணிக்குள்ளே பழைய சோத்தைக் கொட்டிண்டு கிளம்ப முடியாது. பேப்பரைப் படிச்சுட்டு மறுபடியும் வீட்டுக்குப் போய் குளிச்சிட்டுச் சாப்பிட்டுட்டு கிளம்பறதுக்கு நேரம் இருக்காது. வெறும் வயத்தோட ஒன்பதே முக்கால் மணி வரை எப்படி இருக்கிறது ? ஒன்பதே முக்காலுக்குத்தான் காண்டானுக்குள்ளேயே நுழையலாம். இந்தப் பேப்பரையே படிக்காம போயிடலாம். பேப்பரைப் படிக்காம போற நாளிலேதான் சர்க்கரைகார்டு பத்தி ஏதாவது புதிதாச் சொல்லறான். நாலு நாளைக்கு பால் கார்டு தர மாட்டேன்னு சொல்லறான். இது தெரியாம அரைநாள் லீவு போட்டுட்டுப் பால் ஆபீஸஉக்குப்போனா, 'போங்க திங்கக்கிழமை வாங்க, படிச்சவங்களெல்லாம் இப்படி வந்துடறீங்களே ? பேப்பர்லதான் போட்டாங்களே ? ' அப்படான்னு பால் ஆபீஸ் பியூன் கேக்கறான். பேப்பரை வீட்டிலேயே வாங்கித் தொலைக்கலாம். முழுக்க அஞ்சு நிமிஷங்கூடப் படிக்கிறதுக்கு விஷயம் இல்லாத பேப்பரை

மாசம் எட்டு ஒம்பது ரூபா கொடுத்து அழ வேண்டியிருக்கு. ஒம்பது ரூபாயிலே எவ்வளவோ காரியம் நடக்கும். ஆனா இந்த நாள்லே ஒம்பது ரூபாலே என்ன காரியம் நடக்கிறது ? ஒழுங்கா இரண்டு படி அரிசி வாங்கிண்டு வர முடியலை. இரண்டுபடி அரிசி இரண்டு நாள்லே தீந்துபோயிடறது. நாள் கணக்கிலே கிரஸினாயிலே கிடைக்காம போய் அன்னிக்கு வாசல்லே வந்த வண்டிக்காரன் கிட்டே இருந்த காசெல்லாம் கொடுத்து மூணு பாட்டில் எண்ணை வாங்கித்து. அளவெல்லாம் மோசம். சொன்னா அதுவும் இல்லைன்னு அடிச்சுடறான். அன்னிக்கு அந்த அஞ்சு ரூபா நோட்டை வாங்கிக்க மாட்டேன்னு அழ அழ வைச்சான். போஸ்டாபீஸ்லே கொடுத்த நோட்டு. போஸ்டாபீஸ். அவனும் சில்லறை இல்லைன்னு நாயா அங்கேயும் இங்கேயும் ஓட வைச்சு அப்புறம் கொடுத்த நோட்டு. கையை விட்டா அப்படியே பறந்து போயிடும். அது காசுன்னு இல்லைன்னா அந்தக் குப்பையை எவனும் கோலெட்டுக்கூடத் தொடமாட்டான். ஆனா இப்பத் தெருவிலே இருக்கிற காகிதக் குப்பையைச் சின்னத் துண்டு விடாம தூக்கிண்டு போறாங்க. இந்தக் காகிதம் பொறுக்கிறவங்க கண்ணே ஏதோ மாதிரி மாறிடறது. அவனுக்கு உலகத்திலே வேறே எந்தச் சிந்தனையும் கிடையாது. அவன் தோளிலே இருக்கிற சல்லடையா இருக்கிற சாக்கு, அப்புறம் குப்பை. தெருவிலே போறவங்க, வரவங்க, வண்டி, சைகிள், மாடு, வீடு எதுவும் அவன் கண்ணிலே படறதும் கிடையாது. படவும் முடியாது. கண்ணிலே படறது இல்லேன்னு சொல்ல முடியாது. அப்படி இல்லேன்னா தினம் ரோடிலே கார் ஏறிச் சாகறவங்க எல்லாரும் இந்தக் குப்பை பொறுக்கிறவங்களாத்தான் இருக்கணும். ஒரு வேளை அப்படித்தானோ என்னவோ. குப்பை பொறுக்கிறவங்க இவ்வளவு பேர் செத்தும் இன்னும் குப்பை பொறுக்கிறவங்க இவ்வளவு பேர் இருக்காங்கன்னா இந்த ஊர்லே குப்பை பொறுக்கிற வேலைதான் எவனுக்கும் உடனே கிடைக்கக்கூடியதுன்னு குழந்தைகூடத் தெரிஞ்சுகும். எவ்வளவு நல்லகாலம் இந்தக்குப்பை பொறுக்கறவங்க அத்தனைபேரும் திருடப்போகாம, கொள்ளையடிக்க போகாம இருக்கிறது ' நாளெல்லாம் குப்பை பொறுக்கினா அதிலே எவ்வளவு கிடைக்கும் ? ஒரு ரூபாய்--இரண்டு ? இரண்டு ரூபாலே ஒத்தன் என்ன பண்ண முடியும் இந்தக் காலத்திலே ? அது சரி, அவனே இரண்டு ரூபாய்க்கு வாங்கித் தின்னுட்டான்னா அவன் குழந்தை குட்டிங்க ? அவனுக்கு மட்டும் குழந்தை குட்டி கிடையாதா ? வீடு வாசல் துணி இல்லாம இருக்கலாம், குழந்தை குட்டி இருக்காது ? அந்தக் குழந்தைக் குட்டிகளும் இவன் மாதிரித்தான் குப்பை பொறுக்க போயிடுமோ ? குப்பைன்னா என்ன குப்பை ? தெருவிலே கிடக்கிற பாதிக்குப்பை குழந்தைப்பீயை வழிச்சுப் போட்ட குப்பைத்தானே ? அந்தப்பீயைத்தான் அந்தக் குழந்தைகளும் தோள்மேல் சுமந்துண்டு போகும் ? பீயைச் சுமக்கிறதுக்கா இங்கே குழந்தை குட்டிங்க பொறக்கிறாங்க ? பீ. பீ. பீ. எல்லாம் ஒரே பீ, இந்த ஆளு விடாம ஒரு வரி

விடாம படிக்கிற இந்தக் காகிதம் கூட நாளைக்குப் பீயோட தெருவிலே கிடக்கும். அதை ஒத்தன் பீன்னுகூடப் பாக்காம சாக்கிலே எடுத்துப் போட்டுண்டு இன்னும் பீக் காகிதத்தைப் பொறுக்கப் போயிண்டே இருப்பான்.......

அந்தக் கிழவர் படித்துக்கொண்டிருந்த தாளை அவனும் ஒரு முனையில் தூக்கிப் பிடித்தான்.

இந்தப் பக்கத்தை இந்த ஆளு அஞ்சு நிமிஷமாப் படிச்சுண்டிருக்கார். படிச்சுண்டிருக்கார் என்ன வேண்டியிருக்கு ' கான். குனிஞ்ச தலைநிமிராமப் படிச்சுண்டிருக்கான். இந்த ரீடிங் ரூமிலே வேறே பேப்பரும் கிடையாது. இது தர்மத்துக்கு நடத்தற ரீடிங் ரூம். அவன்தான் எவ்வளவு பேப்பர் வாங்கி போடுவான் ? பிராஞ்சு லைப்ரரியை எட்டரை மணிக்குத்தான் திறக்கிறான். இந்த கால்காசு வேலைகூட இல்லேன்னா அங்கே போய்ப் படிக்கலாம். அதுவே வேலை இல்லாதவர்களுக்குத்தான் நடத்தறானோ என்னவோ. இது எட்டரை மணிவரை ரீடிங் ரூம். அப்புறம் கிண்டர் கார்டன் ஸ்கூல். சுவரிலே ஒரு ஆணி விடாம படம். இல்லாதபோனா போதனைகள். அன்பே சிவம். உழைப்பே தெய்வம். சுத்தம் சோறு போடும். உண்மையே பேசு. சத்தம் போடாதே. சத்தம் போடாமதான் இந்தக்கதிக்கு வந்தாச்சு. இந்த ஆளு சத்தம் போடாமதான் படிச்சுண்டு இருக்கான். படிச்சுண்டே இருக்கான். நானும் காத்திண்டே இருக்கேன். இவன் படிக்கிற பக்கத்திலே பாதிலே ஒரு பாங்க் பாலன்ஸ் ஷீட். ஒரு எண்கூட எட்டு இலக்கத்துக்குக் குறைஞ்சு கிடையாது. எட்டு, ஒன்பது, பத்து, பதினொண்ணு கூட இருக்காப்போல இருக்கு. பதினொரு இலக்கத்து எண்ணை ரூபாயாக் கற்பனை பண்ணிக்கூடப் பாக்க முடியலை. இதுவே பட்ஜெட் தாளாக்கூட இருக்கலாம். அப்பவும் பத்து, பதிணொண்ணு, பன்னெண்டுன்னு பெரிய பெரிய எண்கள். அவன் பத்து இலக்கத்துலே போட்டாலும் ஒண்ணுதான். இருபது இலக்கத்துலே போட்டாலும் ஒண்ணுதான். இவ்வளவு ரூபாயைப்பத்தி நிஜமாத் தெரிஞ்சவங்க நிச்சயம் இருப்பாங்க. அவங்க எப்படி இருப்பாங்க ? என் மாதிரி இருக்கமாட்டாங்க. இந்த ஆள் மாதிரி கூட இருக்கமாட்டாங்க. இலவசப்பேப்பர் பறக்கப் பறக்கப் படிச்சுட்டுப் போறவங்களுக்கு மூணு இலக்க எண் தெரிஞ்சாலே பெரிய விஷயம். அது பிச்சைக் காசு பிச்சைக்காரங்களுக்குப் பிச்சைக்காசு பத்தித்தான் தெரியும். லட்சம் கோடியெல்லாம் பள்ளிக்கூடத்திலே பரீட்சை பாஸ் பண்ணற அளவுக்குத் தெரிஞ்சாப் போதும். அவ்வளவுதான் தெரியும் வேறே. இந்த ஆளு எவ்வளவு பரீட்சை பாஸ் பண்ணியிருப்பான் ? அதிகமா இருக்காது. இவன் ஷவரம் பண்ணி அஞ்சாறு நாளாகியிருக்கும். மூஞ்சி தலையிலே இருக்கிற மயிர்லே கருப்பு மயிரை எண்ணி எடுக்கலாம். ஒண்ணு, இரண்டு, மூணு, நாலு.... சீ, மயிரை எண்ணறதுக்கா இங்கே வந்து உக்காரணும் ? ஆனா என்னதான் பண்ணறது ? பேப்பர்லே இருக்கிற மூணுதாளும் மூணு ஆளுங்க கிட்டே சிக்கியிருக்கு. அந்த இரண்டையும் நான் பார்க்கக்கூட வேண்டியதில்லை. எனக்கு ஸ்போர்ட்ஸ்உம் வேண்டியதில்லை, சினிமாவும் வேண்டியதில்லை, பால கிருஷ்ண சாஸ்திரியின் காலஷேபச் சுருக்கமும் வேண்டியதில்லை. இந்த ஆளு பக்கத்தைப் புரட்டினாலும் தேவலை. பாங்க் பாலன்ஸ் ஷீட்டை ஒரு வரி, ஒரு எண் விடாம படிக்கிறான். இவனே பாங்க்லே இருக்கானோ ? இந்த நாள்லே பாங்க்கிலே வேலை பாக்கிறவங்க பளபளன்னுதானே இருக்கிறாங்க ? நிஜமா அவங்ககிட்டே போய் என் அஞ்சு ரூபா, பத்து ரூபாயை சேவிங்க்ஸ் கணக்கிலே போடுன்னு சொல்லறதுக்கே வெக்கமாயிருக்கு அந்தக் கணக்கிலேந்து நான் பத்து ரூபா வாங்கப் போனப்போ அரைமணி காஷ் கௌண்டர்லே காத்திருக்க வேண்டியிருந்தது. ஏன்னா பக்கத்திலே ஜெனரேட்டர் வைச்சு வெளிச்சம் போடற புடவைக் கடைக்காரன் கத்தை கத்தையா நோட்டைக் கொண்டுவந்து பாங்க்கிலே போட்டிருக்கான். அதை அரை மணியா அந்த பளபளா பாங்க் ஆளு எண்ணிண்டிருந்தான். தினம் ஒரு லட்சம் கொண்டு வந்து கட்டறானாம் அந்தக் கடைக்காரன். அந்த பாங்கிலே என் அஞ்சு பத்து ரூபா என்ன மாத்திரம் ? வெக்கம், அவமானம். அந்த அவமானத்துக்கு இந்த ரீடிங் ரூம் அவமானம் பெரிசில்லை.

ஆனா இந்த ஆள்தான் பாங்க் பாலன்ஸ் ஷீட்டை விடாம படிச்சிண்டே இருக்கான். இவனுக்கு இந்த எண்ணெல்லாம் அர்த்தம் ஆகணும். சீக்கிரம் படிச்சுத் தொலைச்சாத் தேவலை. இங்கேந்து ஏழு அம்பதுக்குக் கிளம்பினாக்கூட எட்டு பதிமூணுக்கு டைம் கீப்பர் கேட் கிட்டே போயிடலாம். இந்தச் சனியன் பேப்பர் படிக்காமயே போயிருக்கலாம். போயிருந்தா அப்பவே போயிருக்கணும். இவ்வளவு நேரம் இவன் பக்கத்திலேயே இந்தத் தாளைப் பிடிச்சுண்டு உக்காந்துண்டு சுவரிலே இருக்கிற வாக்கியங்களை எல்லாம் படிச்சிருக்க வேண்டாம். இந்த மகா மகா வாக்கியங்களைக் குழந்தைகளே படிச்சுண்டு இருக்கட்டும். குழந்தைகளால்தான் இதைப் படிச்சுட்டு வயறெறியாம இருக்கமுடியும். தர்மம் பண்ணறவங்க இந்தப் போதனைகள் பண்ணாம இருந்தாத் தேவலை. ஆனா ஒத்தன் தர்மம் பண்ணறதே அவன் போதனை பண்ணறதுக்கு ஒரு வாய்ப்புன்னுதானே.

இப்போது அவன் அந்தக் கிழவர் படித்துக் கொண்டிருந்த தாளைச் சிறிது உறுதியாகவே பிடித்தான்.

இது விடாது போலேயிருக்கு. பாலன்ஸ் ஷீட்டுக்கு மேலே இருக்கறதைத்தான் எத்தனை தடவை படிக்கறது ? நாலு டெண்டர் நோட்டாஸ். இரண்டு சங்கீத சபா விளம்பரம். நடுவிலே கால் பத்தி செய்தி. என்ன செய்தி ? 'சோவியத் ரஷ்யா ஆக்கிரமிப்பு செய்யும் என்று நேடோ கருதவில்லை. ' பக்கத்திலேயே 'எம். ஐ. ஆர். வி. எஸ் ஏவுகணைகளைப் பயன்படுத்த ரஷ்யா தயார். ' இந்த எம். ஐ. ஆர். வி. எஸ்.னா என்ன ? அதெல்லாம் தெரிஞ்சுக்கறதுக்கு நேரம் எங்கே இருக்கு ? இந்த ஆளுக்கு தெரிஞ்சிருக்கலாம். நான் இங்கே வர நாளெல்லாம் இவனும் வரான். நான் வராத நாளெல்லாம் கூட வருவான். வந்து இப்படி ஒரு எழுத்து விடாம. படிச்சுத் தீர்ப்பான். இதெல்லாம் படிக்கறது இவன் தலையெழுத்து. இவன் தலையிலே இருக்கிற மயிரெல்லாம் நரைச்ச மயிர். இவன் காதிலேயும் மயிர் நிறைய முளைச்சிருக்கு. அந்த மயிர் கறுப்பாயிருக்கு. இவன் புருவ மயிர் எப்படி இருக்கும் ? இவன் கண்ணையே பாக்க முடியலையே ? அப்படித் தலையைக் குனிஞ்சிண்டு படிக்கறான். கன்னம் ஒட்டித்தான் கிடக்கு. நேத்திக்குச் சோறு சாப்பிட்டானோ என்னவோ ? எவ்வளவோ நாள் சாப்பிடாமக் கிடந்தாத்தான் இப்படி ஒட்டிப் போக முடியும். இல்லை, பெரிய சீக்காளியா இருக்கணும். இல்லை இரண்டுமா இருக்கணும். இவனுக்கு என்ன சீக்கு இருக்கும் ? பொண் சீக்கு இருக்கறதுக்கு நியாயமில்லை. பித்தம், காசம், ஹெர்னியா, டயாபிடாஸ், ரத்தக் கொதிப்பு, மயக்கம். நேத்திராத்திரி அது ஏதோ ஜாஸ்தியாப்போய் சாப்பிடாம படுத்திருப்பான். வெறும் வயத்திலே படுத்துண்டதனாலே தூக்கம் கண்டிருக்காது விடிஞ்சதும் விடியாததுமா இங்கே வந்துடறான். நான் மட்டும் என்ன பண்ணறேன் ? அவனும் என்னைப் பத்தி அப்படித்தான் நினைச்சிண்டிருக்கணும் இந்த மாதிரி இந்த ஊர்லே இருக்கிற ஆயிரம் ரீடிங் ரூமிலேயும் ஆயிரக்கணக்கான பேர் இப்படித்தான் ஆயிரக்கணக்கானப் பேரைப் பத்தி நினைச்சிண்டிருப்பாங்க. மத்தவங்களைப் பத்தியும் நினைக்க முடியுமா இந்தக் காலத்திலே ? எனக்குத் தோணலை. ஒரு ஆளைப் பத்தி நினைக்கிறதுக்கு கூட மனசிலே ஒரு அமைதி இருக்கணும். ஒரு உற்சாகம் இருக்கணும். இங்கே எவன் மூஞ்சியைப் பாத்தா உற்சாகமா இருக்கிற மாதிரி இருக்கு ? எல்லார் மூஞ்சியிலேயும் சோர்வு, ஏக்கம், நாள் முழுக்க முழுக்க ஏதேதோ காரணங்களுக்காக மனம் நொந்து போய், அந்தத் தனித்தனி காரணங்களெல்லாம் ராத்திரி தூக்கம் என்கிற ரசாயனத்திலே அப்படியே பாகாப் போய், மூஞ்சியிலேயும் முதுகிலேயும் இறுகிப் போய்க் கிடக்கு. ஒத்தன் மூஞ்சி தெளிவாயில்லே. ஒத்தன் முதுகு நேராயில்லை. இவுங்க எல்லாம் விவரம் தெரிஞ்சவங்க. இந்த மண்லே விவரம் தெரிஞ்சவங்க எவனும் கூனிக் குறுகாம இருக்க முடியலை. ஏதோ தடால் புடால்னு கார்லே ஸ்கூட்டர்லே போறவங்களைப் பாத்தாக் கூட இந்தக் கூனிக் குறுகல் தெரியறது. இவ்வளவு பெரிய பாலன்ஸ் ஷீட்டைப் பக்கத்திலே பாதி அடைச்சுக்கிற மாதிரி அச்சிட்டுக் காண்பிச்சாக்கூட இந்தக்

கூனிக் குறுகல் தெரியறது. இது நோய் நொடினாலே இருக்கணும், இல்லே, அயோக்யத்தனத்தாலே இருக்கணும். இந்த மண்ணிலே இன்னிக்கு இருக்கிறவங்க எல்லாம் ஒண்ணு நோயாளிங்க, இல்லேன்னா அயோக்யங்க. இந்தப் பாரத புண்ய பூமி---- அதோ அந்த ஆணியிலே பாரத புண்ய பூமி பத்தி பெரிய பாட்டு அட்டையிலே குழந்தைகளுக்காக தொங்கறது ---- பாரத புண்ய பூமி. பாரதியார் பாடிட்டுப் போயிட்டார். டி. கே. பட்டம்மாள் ரிகார்டு போட்டா. இப்போ குழந்தைகள் பாடறது. பாடறதுன்னுதான் நினைக்கிறேன். இந்த ரூம்லேயே இன்னும் அரை மணி கழிச்சுக் குழந்தைகள் பாடும். பாரத புண்ய பூமி. இந்த ரீடிங் ரூம் பாரத புண்ய பூமிதான். வெளியிலே போல உள்ளேயும் பெருக்காத குப்பை நிறையக் குவிஞ்சு கிடக்கு. இங்கே குழந்தைகளும் ஒண்ணு இரண்டு சொல்லும். கிழவங்களும் பத்து இலக்க எண், பன்னெண்டு இலக்க எண் படிப்பாங்க. சுவர்லே நிறைய போதனைகள். இந்தக் கிழவன்கிட்டே இந்தத் தாளுக்காகக் காத்திருக்கிறதுக்குச் சுவரிலே போய் முட்டிக்கலாம். சுவர்லே முட்டிண்டா உடனே சுவர் எல்லாம் பாட ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சுடும். என்ன பாட்டு ? பாரத புண்ய பூமி. சீ ' இவ்வளவு கசப்பா எனக்குள்ளே அடைஞ்சு கிடக்கு ? பாவம், பாரதம் என்ன பண்ணும், பூமி என்ன பண்ணும் ? ஆனா ஏன் இவ்வளவு கசப்பு ? எனக்கு மட்டுந்தானா கசப்பு ? லட்சக்கணக்கான பேர், கோடிக் கணக்கான பேர் கிட்டே இந்தக் கசப்பு இல்லை ? இப்ப எப்படி லட்சம், கோடி யெல்லாம் அர்த்தம் ஆறது ? அவுங்க மனுஷங்கன்ற காரணத்தினாலா ? மனுஷங்களை வெறும் எண் மாதிரி ஒதுக்கிவிட முடியுமா ? அதனாலேதான் இந்த ஆள் இப்படிக் கால் மணியா இந்த ஒரே தாளை, அதுவும் இந்த பாங்க் பாலன்ஸ் ஷீட் இருக்கிற தாளைப் படிச்சிண்டு இருக்கிறப்போ விடுடா அதைன்னு சொல்லிப் பிடுங்க முடியாம இருக்கா ? இவன் சட்டையைத் தோச்சு வாரக் கணக்கிலே ஆயிருக்கணும். காலர் கிட்டே அழுக்கு அப்படியே வண்டி மசையாப் பதிஞ்சு போயிடுத்து. இவனுக்கு குடும்பம் பெண்சாதி யாரும் கிடையாதோ ? இவனே இந்தச் சட்டையைத் தோய்க்கிறதுன்னா மணிக் கணக்கிலே தோய்க்கணும். அப்ப கூடப் பெரிசா இந்தக் கழுத்து மசைமாறிடப் போறதில்லை. எங்கெங்கேயோ விழுந்திருக்கிற மூக்குப்பொடிச் சளிக் கறை போயிடப்போறதில்லை. இவன் ஒழுங்காச் சவரம் பண்ணிண்டா இவன் முகம் அழகாகக் கூட இருக்கலாம். ஒரு காலத்திலே ரொம்ப அழகாக இருந்திருக்க வேண்டிய முகந்தான். இவனுக்கு விவரம் தெரிஞ்சு முப்பது வருஷம், நாப்பது வருஷம் வாழ்ந்து இடிபாடுகள் பட்டு, யார் யாரையோ கெஞ்சு, எது எதுக்காகவோ கதறி, அழுது, பொருமி, ஆத்திரத்தை யடக்கி, இழிவுபட்டு, நோய்வாய்ப்பட்டு, உதவி இல்லாம, ஒத்தாசை இல்லாம, பராமரிப்பு இல்லாம, சரியாச் சாப்பாடு இல்லாம, நாளை பத்தி ஒரு நிச்சயமில்லாம, நிச்சயமில்லாததுனாலே பயம் கொண்டு, பீதி கொண்டு, வெறுப்பு கொண்டு, கசப்பு கொண்டு, கண்ணைத் திறந்து வெளியிலே பாத்தா பட்டினியும் வேதனையும் குரூரமும் நிர்தாட்சண்யமும் அவலமும் அயோக்யத்தனமும் பீக் காகிதத்தைக் குழந்தைகள் பொறுக்கிக் கால் வயிறு ரொப்பிக் கொள்ள வேண்டிய அநியாயமும் காணச் சகிக்காம, இவனாலே ஒண்ணும் பண்ணமுடியாம, சாகறதுக்கும் தைரியமில்லாம, சாராயம் குடிச்சும் நினைவு தவறிக் கிடக்கக் காசில்லாம, இங்கே வந்து, இந்த ரீடிங்ரூமிலே வந்து எவனோ கொட்டிச் சேர்த்துக் கொம்மாளம் அடிக்கிற பணத்தைக் கணக்கு பாத்து, இவன் கற்பனையும் பண்ணிப்பாக்க முடியாத எண்களைக் கண் வழியா மூளையிலே போதையேத்திண்டு மயங்கிக் கிடக்கான். இந்தப் போதை கூட இவனுக்குக் கிடைக்க வழியில்லைன்னா இவன் என்னாவான் ? இவன் போதையிலே மயங்கிக் கிடக்கட்டும். தாராளமாகக் கிடக்கட்டும். தாராளமாகக் கிடக்கட்டும். இந்தப் போதை ஒண்ணுதான் இவனுக்கும் இவன் மாதிரி இருக்கிற கோடிக்கணக்கானவங்களுக்கும் இன்னிக்குக் கிடைக்கக் கூடியது. நான் கூட இந்தப் போதைக்குத் தான் இங்கே வருகிறேனோ ?

மணி ஏழு ஐம்பைத்தைந்து ஆனதில் அவன் தாங்க முடியாத அவசரத்தில் அவன் பக்கத்தில் உட்கார்ந்து குனிந்தபடி படித்துக் கொண்டிருந்த கிழவர் கையிலிருந்து அந்தத் தாளைச் சிறிது

உறுதியாகப் பிடித்து உருவினான். முந்தின இரவு உண்ணாமல் படுத்திருக்கக் கூடியவர், அல்லது அப்படிப் பல நாள் உண்ணாமல் இருந்திருக்கக் கூடியவர், பலநாள் சவரம் செய்யாத முகமுடையவர், அழுக்கு மசையாகப் பதிந்து போய்விடும் அழுக்குச் சட்டை உடுக்க வேண்டியவர், பித்தம் காசம்--டயாபிடாஸ்-ரத்தக்கொதிப்பு அவதிக்குள்ளாகியிருக்கக் கூடியவர், தன்னுடைய நீண்ட வாழ்வின் சோகத் துயர இழிவுகளை மறக்கப் பிரமாண்டமான எண்களைப் படித்துப் போதையேற்றிக் கொள்ளவேண்டியவர் சிறிது நேரம் முன்பாகவோ அல்லது வெகு நேரமாகவோ தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். அந்தத் தாள் அவன் கையுடன் வந்து விட்டது.

# பெயர் தெரியாமல் ஒரு பறவை

**வண்ணதாசன்**

இந்த நடையிலிருந்து மலையைப் பார்ப்பது போல உட்கார்ந்திருந்தாலும் நான் மலையைப் பார்க்கவில்லை. சிலசமயம் எரிகிற தீயும் மலையில் இன்று எரியவில்லை. மழைக்குத் தயாராகவே பகலின் அடையாளங்கள் முழுவதுமிருந்தது. அதை உத்தேசித்தே தீயை ஒத்திப் போட்டிருக்கலாம். தீ எரிவதைப் பார்க்காமலே புரிந்து கொள்கிற அளவுக்கு இந்த ஒன்றரை மாதத்திற்குள் புலன்கள் படிந்து விட்டிருந்தன. வாடகைக்கு வீடு கிடைத்துக் குடும்படும் குழந்தைகளும் வந்தபின் அடுப்புத் தவிர வேறெதுவும் தெரியும் என்று தோன்றவில்லை.

இன்று குழப்பமெல்லாம் குப்புறக் கிடந்த அந்தப் பறவையைப் பற்றித்தான்.

சாப்பாட்டையும் ஒரேயடியாக வெளியே முடித்துக் கொண்டு அதிகம் வெளிச்சமற்ற, இந்த வீட்டுக்கான லேசான சரிவில் இறங்கி அருகில் வந்த போதே, வீட்டின் மரக்கதவை வக்கீல் வீட்டுக் கறுப்புநாய் முட்டிக்கொண்டே இருந்தது. மாமிச உறுமலுடன் கீழே முட்டி முட்டி அது ஏற்படுத்துகிற சிறு விம்பல், மேலே இடப்பட்டிருக்கிற கொக்கியின் ஆதாரத்தில் எதிர்ப்படைந்து மறுபடி பொருந்திக்கொள்ள, இந்தத் தொடர்ந்த முயற்சியில் மரமும் இரும்பும் கலந்த சப்தம் விட்டுவிட்டுக் கேட்டது.

இன்றைக்கு அந்தச் செய்கையைச் சிநேகமாக எடுத்துக் கொள்ள முடியாது போயிற்று. இன்றைக்கும் நாளைக்கும் முழுவதுமாக, மற்ற நான்கு அறைவாசிகளும் திங்கட்கிழமை வரும்வரை (ஒருவர் நாளை நிசிக்குமேல் வந்து வெளியில் கிடக்கிற கம்பிக் கட்டிலில் படுத்திருப்பது மறுநாட்காலை தெரியும்) தனியாகத்தான் அடைந்து கிடக்க வேண்டும் எனினும் இந்த நாயின் துணை, தனிமையை அதிகப்படுத்தும் என்றே தோன்றிற்று. மேலும் எனக்கு முன்பு முன்னுரிமை எடுத்துக்கொண்டு, இந்த இருட்டில் அது கதவைத் திறக்கப் பிரயாசைப் படுவதையும் அனுமதிக்க முடியவில்லை. 'ச்சூவ் ' என்ற சப்தம் விசையான கல்போல என்னிடமிருந்து எறியப்பட்டு, அது சற்றே பின் வாங்கிய சமயத்தில் , நான் சாதுரியமாகக் கதவைத் திறந்து நுழைந்து மூடியும் விட்டிருந்தேன்.

நுழைந்த உடனேயே சப்போட்டாப் பழமரத்து வெளவால்கள் வாசனை அடித்தது. இதுவும் இந்த ஊர் காட்டின புது விஷயம். வீட்டின் இரண்டு பக்கமும் சப்போட்டாப் பழமரங்களுடன் இந்த வாசனையும் பிரிக்கமுடியாதபடி அடர்ந்து கிடந்தது இந்த ஊரில்தான்.

எனக்குத் தெரிந்தது வேப்பமரமும் முருங்கை மரமுமே தவிர வேறில்லை. வளவு சேர்ந்த வீட்டில் அம்மைக்கட்டுக்குப் பற்றுப்போட கொழுந்து பறிக்கும் போது வேப்பமரத்தில் மட்டும் ஏறியிருக்கிறேன். முருங்கை மரம் நான்கு வீட்டுக்காரர்களாலும் சதா கண்காணிக்கப்படுகிற ஒன்றாகையால் அதில் ஏறி விளையாட வாய்ப்பில்லை. ஓட்டாஞ்சல்லியில் ஒட்டிச் சிப்ளாக்கட்டை தட்டுவதற்காகப் பிசின் எடுக்கக்கூட அனுமதியில்லாத முருங்கைமரம் யாருக்கு வேண்டும் ? அடை அடையாகக் கம்பளிப் பூச்சி அப்பி, ஓலையைப் போட்டுக் கீழே எரிக்கச் சுருண்டு சுருண்டு தீயின் மீதே விழுந்து சடசடவென்று உயிரின் வெடிப்புடன் எல்லாம் பொசுங்கின ஞாபகம் மட்டுமே இருக்கிறது அதுபற்றி.

சப்போட்டா பார்க்க வசீகரமான ஒரு மரமில்லை என்றாலும் அது பிடித்துப் போயிற்று. கனி தருவதால் மட்டும் என்று தோன்றவில்லை. வந்த இரண்டொரு தினத்தில், தூக்கம் வராது படுத்துக் கிடந்த இருட்டில், மற்றவர் அனைவரும் உறங்க, சன்னமான ஒரு படபடப்பு மாறி மாறிக் கேட்டுக் கொண்டே இருந்தது. அது பழம் தின்னி வௌவால்களுடையது என்று மறுநாள் தெரிந்தது. அந்த வௌவால்களை நான் இதுவரை பார்க்கா விட்டால் கூட அன்றைக்கு இரவில் கேட்ட அந்தச் சன்னமான இறகடிப்புக்கு மாறி மாறிக் கிளைகளில் இடம்தந்த ரகசியமே என்னை இந்த மரத்திடம் சேர்க்கப் போதுமான காரணமாக இருந்தது.

இன்னும் ஒரு அடி, இப்படி சப்போட்டா மரத்தை நினைத்துக் கொண்டே மேலும் வைத்திருந்தால், அந்தப் பறவையைச் சதக்கென்று மிதித்து இருப்பேன்.

உள்ளே நுழைந்ததும் கதவுக்குக் கொண்டி போடுவது, பாதி நடந்ததும் இன்னும் பாதி நடந்தாலே வரப்போகிற கதவின் பூட்டுக்கான குளிர்ந்த துருச்சாவியை இப்போதே எடுத்துக் கொள்வது என்று அனிச்சையாகவே நடந்து பழகியபடி இன்னும் சாவியை எடுத்தபோதுதான் அது தலைக்குப்புறச் சிறகு பறத்திக் கிடந்தது.

திறந்த பூட்டும் சாவியுமாகப் படியிலேயே வைத்துவிட்டு வெளிச்சத்தைப் பொருந்திய நேரத்துக்குள் என்னவெல்லாமோ தோன்றிற்று.

குழந்தைகளை மனிதர்களையெல்லாம் அடித்து இரவோடிரவாக இப்படி வாசல்களில் நிர்த்தாட்சண்யமின்றி எறிந்துபோகிற சமீபத்திய இனக்கலவரங்களின் ஞாபகம் வந்தது. வயலில் அகோரமாய்ச் செத்துக் கிடக்கிற கிழவி, வரிசை வரிசையாக் வயிறூதிக் கிடத்தப்பட்டிருக்கிற சிசுக்களின் வரிசையை அதிகப்படுத்த ஒருத்தன் கைகளில் ஏந்திவருகிற இன்னொரு மல்லாந்த குழந்தையின் ஊதின வயிற்றுத் தொப்பூழ், இறந்து கிடக்கிற தன் குழந்தையின் உடல்கண்டு. அதனருகே உட்கார்ந்து அழுகிற தகப்பனின் கிழிந்த முகம் அப்படிக் கிழிந்த நிலையில் ஒரு கைத்துப்போன சிரிப்புப் போலப் புகைப் படலத்தில் பதிவாகியிருப்பது எல்லாம் கலந்து இந்த ஒற்றைப் பறவையாகக் குப்புறக் கிடந்தது.

மரங்களைப் போலவே பறவைகளை அதிகம் அறிந்தவனுமில்லை. ஒரு நகரம் உனக்குப் போதும் என்று காட்டுகிறவைகளை மட்டுமே பார்த்திருக்கிறவன்தானே நானும். பார்த்திருப்பது எல்லாமே தெரிந்தவை ஆகிவிடாது அல்லவா.

மார்க்கெட்டுக்குப் பக்கத்தில் பலூன் விற்கிறவன் போல நரிக்குறவர்கள் மூங்கில் தட்டியில் ஒருதடவை நிறையத் தேவாங்குகளையும், ஒரு கம்பிக் கூண்டில் காடை கவுதாரி என்று கூவி விற்றுக் கொண்டிருந்தவை தவிர, காக்கையும், அப்புறம் கோழியும்தான் அறிந்த பறவைகள். சுடலைமாடன் கோவில் தெரு சின்னக் கோபால் 'புறாக் காட்டுகிறேன் ' என்று அவனுடைய

சொந்தக்காரர் வீடான சாவடிப் பிள்ளை வீட்டுச் சவுக்கைக்குக் கூப்பிட்டுக் கொண்டுபோய்க் கூட்டம் கூட்டமாகப் புறாப் பார்த்தது ஏன் ஞாபகமிருக்கிறது என்றால்,அன்றைக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வராமல், ஊர் சுற்றிவிட்டு வருவதற்காக விளார் விளாராக அடிபட்டதுதான் காரணம். வாய்ப்பாடு ஒப்பிப்பதில் இருந்து புறாப் பார்க்கிற காரியம் நம்மை உருப்படாமல் போகச் செய்யும் என்பது அப்பாவின் தீர்மானம்.

இது என்ன பறவையென்று சத்தியமாகத் தெரியவில்லை. குனிந்து கையில் எடுக்கும்போது முதற்பார்வைக்கு மைனா மாதிரித்தான் இருந்தது. இந்த வீட்டை ஒட்டிய சாலைப் புளியமரத்தில் அடைகிற மைனாக்களில் ஒன்றோ என்றுதான் நினைத்தேன் இதுவரை மைனாக்களைக் கையில் எடுக்கவில்லை என்றாலும் 'இது மைனா இல்லை ' எனும்படியாக மைனாக்களைப் பற்றிய என் அறிவிருந்தது. அந்தப் பறவையும் உறுதி செய்தது அதை.

உடம்பின் அடிப்பாகத்தில் எந்த வெதுவெதுப்புமில்லை. எடுக்கும்போதே கீச்சுகிற அளவுக்குக் கூராக இருந்த நகங்களின் தீவிரக் கூர்மை விரைப்பேறி விட்டிருந்தது, குச்சிபோன்று இருந்த கால்கள், இந்தப் பறவை தரையின் அமர்கையில் தரையை விட்டுப் பறவையை உயர்த்திக் காட்டும் சாத்தியத்துடன் நீண்டிருந்தன. கால்களில் மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு என்று வேற்று நிறம் எதுவுமில்லை. மொத்தப் பறவையுமே சாம்பல் கருப்பின் வெவ்வேறு அடர்த்தியில் வர்ணிக்கப்படும்படியிருந்தது. உயரங்களுடனும் காற்றுடனும் சம்பந்தப்படுத்தியிருந்த தன் ரகசியங்கள் அனைத்தையும் என் முன் விசிறிக் கொள்வது போல, சிறிதுசிறிதாகக் கோர்க்கப்பட்ட இறகுகள், நான் விரித்துப் பார்த்த விரலை எடுத்ததும் அசைந்தசைந்து நுணுக்கமாகச் சுருங்கி நின்றது மறுபடியும். சற்றே செருகின கண்கள். கருத்த சிறிய காட்டுப்பழம் போலத் திரண்டிருந்தது. பறவைகளுக்கும் சாகிற நேரத்தின் துயரம் இருக்கக் கூடும்தான். ஆனால் கருப்பின் திரட்சி அந்தக் கண்களில் அதற்கு முந்தின வினாடியின் சந்தோஷத்தை மிச்சம் வைத்திருந்ததுபோல உணரும் அளவுக்கு அதைக் கையில் ஏந்தியிருந்த நேரத்தில் எனக்குத் தோன்றிவிட்டது.

'சந்தோஷமாக இருந்த ஒரு உயிர் ' என்று நான் அதன் உச்சியைத் தொட, அது கழுத்தைச் சுருக்கிக் கண்களை ஜவ்வாக மூடி ஏற்றுக் கொண்டால் ஆகாதா என்ன ? யோசித்தபடியே வெளியே கிடந்த கம்பிக் கட்டிலில் உட்கார்ந்தேன்.

இந்தப் பிரதேசத்து ஜனங்கள் என்னவோ, சந்தைக்குச் சந்தை இப்படிக் கம்பிக் கட்டில்களைப் புதையல் கிடைத்த மாதிரிச் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு போகிறார்கள். உட்காரக்கூட வசதிப்படாத இதில், ஒரு விரிப்பும் விரிக்காமல், பகலில்கூடத் தூங்குகிற அந்த நண்பர்-- அதுதான் நாளைக்கு நடுராத்திரிக்கு வந்து பையைத் தலைக்கு வைத்துப் படுத்திருப்பாரே-- இப்போது இருந்தால் என்ன பறவை என்று ஒருவேளை சொல்லக்கூடும்.

அவரிடம்தான் இந்தப் பக்கத்து மனிதரின் தன்மைகளும் குணங்களும் இருந்தன. நல்ல அலுவலகம், கை நிறையச் சம்பளம் எல்லாம் கூட அவரை அவருடைய பிரதேச எளிமையிலிருந்து அப்புறப்படுத்திவிட முடியவில்லை. தன்னுடைய ஜாதிக் கட்டுகளுக்கு அடங்கிய ஒரு கட்டப்பஞ்சாயத்தில் தனக்குக் கட்டிவைத்த பையனை விட்டுவிட்டு, தனக்குப் பிடித்த பையன் ஒருவனுடன் வாழ்வதற்குத் தீர்மானித்த ஒரு சின்னப் பெண்ணின் பதில்களை ஒருநாள் இரவு சொல்லிய, நிகழ்த்திய என்றே சொல்லவேண்டும், விதம் எனக்குப் பிடித்துப் போயிற்று.

அவர் இருந்தால் இந்தப் பறவையின் பெயரைச் சொல்வார். பெயருடன் மட்டும் நிறுத்தாமல் அந்தப் பறவை அதன் வசிப்பிடங்கள், இரை, இரையெடுக்கிற விதம், அதன் முட்டை நிறம், அடைக்காலம், அந்தப் பறவையைத் தாக்குகிற பறவையினம் எது என்று வெவ்வேறு விஷயங்களையும் சொல்லிப் போவார். தன்னுடன் எல்லோரையும் தான் நடக்கிற இடங்களுக்கு நடத்திச் செல்கிறதும், அப்படிக் கிறங்கி மறுபேச்சு இல்லாமல் தன்னுடன் நடந்து வருகிறார்களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடப்பதுபோலக் கேட்டு கொண்டிருக்கிற எங்களின் முகங்களை ஒரு தடவை பார்த்துச் சிரித்துக் கொள்வதுமாக அவர் இருக்கவேண்டிய கட்டிலில் நான் இப்படி உட்கார்ந்திருக்கும்படி ஆயிற்று.

உட்கார்ந்திருக்கும்போதே ஈரமான வாடை திரண்டு அப்பியது எதிரே விளிம்பு காட்டுகிற மலைகளில் மேகநிழல் நகர்வதை இங்கு காணமுடிவது போல, பாத்தி பாத்தியாக மழை நகர்ந்து நகர்ந்து வருவதையும் எத்தனையோ தடவை காணமுடிந்துவிட்டது இந்த ஊரை இணைக்கிற ரயில்வே ஸ்டேஷன் பக்கம் பஸ் நிற்கும்போது ஒரு சொட்டு மழை இருக்காது. ஆனால் பஸ்ஸிலிருந்து இறங்கினால் டாக்கடைக்குள் ஓடும்படி பெய்யும். இன்றைக்கு மட்டுமிது புதிதில்லை.

கையிலிருந்த பறவையை அப்படியே போடவும் இல்லை. வீட்டின் நடையிலிருந்து, இடதுபக்க முதல் அறை பிதுங்கி வெளியே நிற்கிற மூலையில் வைத்துவிட்டு வராந்தாவில் நாற்காலியை இழுத்துப் போட்டேன்.

கழற்றிப் போட்ட காலணிகளும் அதைச் சார்ந்த அழுக்கான உறைகளும் செய்தித் தாட்களும் ஊருக்குப் போகிற அவசரத்தில் கழுவாமல் விட்டுப் போயிருக்கிற ரேசர் செட்டுமாக இருக்கிற இந்த முன் தாழ்வாரத்தில் நாற்காலியில் இருக்கிறோம் என்பதிலிருந்து நம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக உருவி வெளியில் எறிந்துவிடும் படியாக மழை கனத்துப் பெய்தது. அது பெய்கிற கனத்துக்கு ஏற்பச் சிறுசிறு மாறுதல்களுடன் மழையின் சப்தமும் மாறிக் கொண்டே இருந்தது.

மழையைப் பார்ப்பது போல ஏமாற்றி அழைத்து, மழையைத் தவிர்த்த வேறெங்கேயோ நம்மை அனுப்பி விட்டு மழைமாத்திரம் தனித்துப் பெய்கிற வழக்கமான காரியம்தான் நடந்தது. எந்தச் சூழலிலும் மழை தன்னுடைய தன்னிச்சையைக் காப்பாற்றிக் கொள்ளும்படியாகவும், பார்வையாளனாக நாம் இருந்து செய்கிற இடையூறுகளைக்கூட மிகச் சுலபமாக அப்புறப்படுத்தி விடுவதாகவும் மட்டுமே தோன்றுகிறது மறுபடியும், தொலைந்து போனதிலிருந்து நம்மை மீட்டுக்கொண்டு வரும்போது மழை அநேகமாகச் சிரித்துக்கொண்டே நின்று விட்டிருப்பதுதான் தெரியும்.

எப்போது சிகரெட்டைப் பற்றவைத்தோம், ஒன்று இரண்டு என இந்தச் சிவப்பு அவாய்ச் சாம்பல் கிண்ணத்தை அடுத்தடுத்து நிரம்ப வைத்தபோது எதை யோசித்திருந்தோம் என்பதெல்லாம் கூட நினைவில்லை.

தடால் என்ற விரியலுடன் திறந்த மரக்கதவோடு 'ஸார் ' என்று ஒரு சப்தமும், சப்தத்துடன் ஒரு சைக்கிளைத் தள்ளியபடி ஒரு உருவமும் உள்ளே வந்தது. பிரம்பு நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிச் சட்டென்று எழுந்திருப்பதற்கு முன்னால் மறுபடியும் 'ஸார் இல்லையா ' என்று கேட்டது. பதிலுக்கு காத்திராமல், மழைத்தாள் சுற்றிக் கட்டப்பட்டிருந்த அட்டைப் பெட்டியை சைக்கிளின் பின்பக்கத்திலிருந்து அகற்றி உள்ளே கொண்டு வந்து 'என்னைப் பெத்த அம்மா ' என்ற முனகலுடன் வைக்கும் போதுதான் அந்த மனிதரின் உருவமே சரியாகத் தெரிந்தது.

முழுக்க முழுக்க நனைந்துவிட்டிருந்த அவரின் முகம், தாடி, தோள்வரை தொங்கியமுடி, எல்லாவற்றிலும் சொட்டு சொட்டாக இறங்க ஆரம்பித்தது. பனியனுக்கும் அரைக்கால் சட்டைக்கும் கீழே தொடையும் ஆடுசதையும் அளவற்ற உறுதியுடன் ஆனால் சற்றுச் சூம்பியது போன்ற வடிவத்துடன் நீண்டிருந்தன.

சிரித்துக்கொண்டே, 'ரெண்டு நூஸ் பேப்பர் எடுத்துக்கிடுதேன் ஐயா ' என்று பழகின இடம்போல எட்டி எடுத்துக் கொண்டார். அப்படி எட்டும்போது நான் சற்று ஒதுங்கி நின்று அவருக்கு இயங்க இடமளித்ததற்கு நன்றி சொல்லுவது போல 'நீங்க இருங்க சாமி ' என்று சொல்லிக் கீழே உட்கார்ந்தார். செய்தித் தாட்களை இரண்டிரண்டாக விரித்தார். நீவி விட்டார், அட்டைப் பெட்டியின் காது போன்ற மூடியை இரண்டு பக்கமாக மடக்கிவிட்டு, உள்ளிருப்பதை எடுக்க ஆரம்பித்தார்.

புளித்த வாடையுடன் மெதுமெதுவென்று ரொட்டிக் கருகலுக்கே உரிய, மேற்பக்க நிறத்துடன் அவை இருந்தன.

'அடிச்ச மழையில எல்லாம் நனைஞ்சு பொதுமிப்போச்சு ', 'மழையின்னா மழையா ' ' 'இது இப்ப காயலையோ ரெண்டு நாளில் வம்பாப் போகும் ' விளக்கம் போல அவ்வப்போது சொல்லிக்கொண்டு. முதல் வரிசையில் அதிகம் நனைந்து இருந்ததை ஒரு பக்கமாகவும், பெட்டியின் ஆழத்திற் கேற்பக் கூடுதல் குறைவாய் பாதிக்கப்படாது இருப்பதை மிகக் கவனத்துடன் இன்னொரு பக்கமாகவும் வைத்துக் கொண்டே வந்தார். இன்னும் உடம்பு எங்கெங்கே மடங்குகிறதோ அங்கெல்லாம் தண்ணீர் உதிர்ந்துகொண்டே இருந்தது. காற்சட்டையின் ஈரம் அமுக்கப்பட்டுப் பாதத்தைச் சுற்றிப் பெருகியிருந்தது. தலையிலுள்ள ஈரம் தாடி மயிர்க்கற்றைகளில் இறங்கி, அது இறங்கிய இடம் தவிர்த்து வேறெங்கேயோ ஒரு துளியாக முளைத்துத் திரண்டு வடிந்தது. மிகக் கூர்மையாக இருந்த மூக்கு நுனியிலும் தண்ணீர் வழியாமல் இல்லை.

ஒரு பிளாட்டிங் பேப்பரால் ஒற்றுவதுபோல அவர் ரொட்டிகளைப் பட்டும் படாமல் ஒற்றிக் கொண்டிருந்தார். ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத நிலையில் அவர் ரொட்டிகளுடன் மட்டும் கவனம் கொண்டு இருப்பதைப் பார்க்க கஷ்டமாக இருந்தது.

'மழைக்கு முந்தி ஆஸ்பத்திரியிலே சேர்த்துப்பிடலாம்னுல்லா நினைச்சேன் '

அவர் பேசியது அனைத்தும் ஒரு வகையில் அந்த ரொட்டிகளுடன் மட்டும் என்றிருந்தது வேறு சொல்ல முடியாத துன்பம் கொடுத்தது. உள்ளே போய்க் கொடியில் கிடந்த துண்டை உருவி எடுத்து அவர் மேல் போட்டேன். கனமான அந்தத் துண்டு தோளில் விழவும் 'அக் ' என்ற சத்தத்துடன் ஏறிட்டுப்பார்த்தார். 'மொதல்லே, எழுந்திரிச்சுத் தலையை துவட்டும்யா '. 'அக் ' மறுபடியும் லேசாகத் திடுக்கிடுவது போன்ற அந்த சப்தத்துடன், மேலே விழுந்த துண்டைப் பற்றிக் கொண்டே எழுந்தார். லேசாகக் கண் கலங்கினது மாதிரி இருந்தது. நடைப்பக்கம் போய் 'அய்யா, துவட்டுகிறதுக்குப் பழைய துணி எதுவும் இல்லையா ' என்றார். 'சும்மா துவட்டும் ' என்ற குரலுக்குக் கீழ்ப்படிவதுபோல மடமடவென்று துவட்டிக் கொண்டார்.

'தீப்பெட்டி இருக்காய்யா ? ' என்று என்னிடம் வாங்கிப் பீடி பற்றவைத்துக் கொண்டே, குத்தவைத்துக் கீழே உட்காரப் போனவர்தான், வெளியே பார்த்துக் கொண்டே--- 'நாயி உள்ள வந்து எதையோ கவ்விக்கிட்டுப் போதே ' என்று சொன்னார்.

எனக்குப் புரிந்துவிட்டது.

'ரொட்டியை இல்லை ' என்று மட்டுமே அவரிடம் சொல்ல முடிந்தது.

# மிஸ்டர் கோடு கோடு கோடு

**தி. ஜானகிராமன்**

(ஒரு இசைக்கலைஞர் சொன்ன கதை)

'நீர் எழுத்தாளர். கதை கிதை எல்லாம் எழுதுகிறீர். எனக்குப் பாடத்தான் தெரியும். எழுதத் தெரியாது. அதனால் நான் சொன்னதை அப்படியே நீர் எழுதும். நீர் தான் கண்டதையும் கேட்டதையும் எழுதுகிறவர் ஆச்சே.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் இசைக் கல்லூரியில் பயின்று பட்டம் வாங்கினேன். நானும் என்னுடைய சகபாடிகளான இன்னும் பத்தொன்பது பேரும் சேர்ந்து பட்டத் தாளைப் பெற்றுக் கொண்டோம். அதற்காக வழக்கம் போல ஒரு பட்டமளிப்பு விழா நடத்தினார்கள். நாங்கள் இருபது பேரும் மகா பாக்கியசாலிகள், ஏனென்றால் பட்டத்தாள்களை தன் கையாலேயே நேரிடையாக வழங்கினவர் இந்தியாவின் தலையாய அரசியல் பொருளதார --வியாபார--இலக்கிய--தொழில் பேரறிஞர். ஆவர் கையால் பட்டத்தாளைப் பெறக் கொடுத்து வைக்க வேண்டுமே ' அவர் என் பட்டத்தாளை என் கையில் கொடுத்து, என் கையைக் குலுக்கி, கும்பிடவும் கும்பிட்டு ஒரு புன்னகையும் புரிந்தார். எத்தனை பெரிய வாய்ப்பு ' இந்த விழாவுக்காகவே பிரத்யேகமாக 1500 மைல் ஏரப்ளேனில் பிரயாணம் செய்து வருகை தந்திருந்தார் அவர்- இந்த விழாவுக்காக--பிரத்யேகமாக --எங்களுக்குப் பட்டத்தாள்களை நேராக, தம் கையால் கொடுக்கவே நாங்கள் எவ்வளவு இறும்பூது எய்திருப்போம் என்பதை நீரே, கற்பனை செய்து கொள்வீர். நீர்தான் எழுத்தாளர் ஆச்சே '

எங்களை அவ்வளவு இறும்பூது கொள்ளச் செய்த பெரும்தகை யார் என்றா கேட்கிறீம் ? ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது. பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லக்கூடாது. ஊரைப் பேரைச் சொன்னாலும் ஜாதிப் பேரைச் சொல்லக் கூடாது. அதனால் அவரை மிஸ்டர் கோடு கோடு கோடு என்று அழைக்கிறேன். மிஸ்டர்.....

திரு கோடு கோடு கோடு என்று திரு போட்டால் அவர் தமிழர் என்று நீர் கண்டு பிடித்து வம்பு பண்ணுவீர். அதனால்தான் அவரை மிஸ்டர் கோடு கோடு கோடு என்று அழைக்கிறேன். மேலும் இப்போதெல்லாம் சென்னையில் நாயுடு ரோடை, --ரோட் அதாவது கோடுரோடு என்றும் முதலியார் ரோடை - ரோட் அல்லது கோடு ரோடு என்றும், கிருஷ்ணமாச்சாரிரோடை கிருஷ்ணமா தார்பூசு ரோடு என்றும், வெங்கட அய்யர் ரோடை வெங்கட தார்பூசு ரோடு என்றும், சின்னசாமி கவுண்டர் ரோடை சின்னசாமி தார்பூசு ரோடு என்றும் மாற்றியுள்ளதை நீர் அறிந்திருப்பீம். எனவே ராஜத்துரோகமான காரியத்தைச் செய்யக்கூடாது என்றே எங்களுக்குப் பட்டமளித்த பெருந்தகை மிஸ்டர் கோடு கோடுகோடு என்று அழைக்கிறேன். முதல்கோடு ஊர் பெயர். இரண்டாவது கோடு இயற்பெயர். மூன்றாம் கோடு சாதிப் பெயர்.

பட்டத்தாள்களை அளிப்பதற்கு முன்னால் அவர் இந்தியாவின் தொன்மையான இசைக்கலை பற்றியும், மிக மிதத் தொன்மையான தமிழிசை பற்றியும் ஒரு மணி நேரம் உரையாற்றினார். சிலப்பதிகாரம் என்ன, சர்மவேதம் என்ன, திருக்குறள் என்ன, பரதமுனி என்ன, கூத்த நூல் என்ன -- இவைகளிருந்தெல்லாம் மேற்கோள்கள் காட்டி பாரத நாட்டு இசையின் பெருமையையும், முக்கியமாக தமிழகத்து இசையின் பெருமையையும் எடுத்து விளக்கியபோது, ஆகா ஆகா என்று சிலிர்த்துப் போனேன். அதே சமயம் நான் ரொம்ப சின்னவனாகியும் விட்டேன். எங்கள் வாத்தியார்களும் சின்னவர்களாகி விட்டார்கள். இசையை கரைத்துக் குடித்திருக்கிறார் இந்தப் பெரியவர். அஞ்சு வருஷம் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்த வாத்தியார்கள் இதில் ஆயிரத்தில் ஒன்றைக் கூடச் சொல்லவில்லையே, ஏமாத்தி விட்டான்களே என்று வருந்தினேன். எங்களுக்கு சங்கீதம் கற்பிக்கிறேன் பேர்வழி என்று மடாத்தப்பளை மாதிரி கத்தியே அஞ்சு வருஷம் கத்திக் கத்திப் பொழுதை போக்கி விட்டான்களே, இந்தப் பெரியவர் ஒரு மணி நேரம் சொன்னதில் பத்தாயிரத்தில் ஒன்றுகூடச் சொல்லவில்லையே என்று மனம் கசிந்தேன். பட்டமளிப்பு முடிந்ததும். என்னைப் பாடச் சொல்லி ஏற்பாடு செய்திருந்தார்கள். எனக்கு உள்ளூர பயம். முன் வரிசையில் திரு கோடு கோடு கோடு உட்கார்ந்திருக்கிறார். இசைக்கடல். பார்த்தால் ஒன்றும் தெரியாத மாதிரி உட்கார்ந்திருக்கிறார். இசை அறிவோ ஆழங்காணாத அறிவு. கஜமுகனே கணநாயகனே என்று பிரணவ சொரூபியான பிள்ளையார் மீதே பாரத்தைப் போட்டுப் பாடத் தொடங்கினேன். திரு கோடு கோடு கோட்டைக் கூடிய வரை பார்க்காமலே பாடிக்கொண்டிருந்தேன். நடு நடுவே அவரைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை. அவர் அசையாமல் முகத்தில் எந்தக் குறியும் இல்லாமல் என்னையே பார்ப்பது தெரிந்தது. சில சமயம் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்ப்பார். யாராவது பலே என்று பாராட்டினால் அவரைத் திரும்பி பார்ப்பார். இன்னும் யாராவது ஆகா என்றால் அவரைத் திரும்பிப் பார்ப்பார். பிறகு என்னைப் பார்ப்பார். சாதாரண அல்பசந்தோஷி இல்லை என்று தீர்மானித்துக் கொண்டு நன்றாக உழைத்துப் பாடினேன். விரலால் தாளம் போடுவதைக் கூட அவர் யார் கண்ணிலும் படாதது போலவும் என் கண்ணில் கூட படாதது போலவும் பாடுவார். ஒன்றரை மணி நேரம் கழுவில் ஏற்றிவைத்தாற் போலிருந்தது. எப்படியோ தைரியமாகப் பாடி முடித்தேன்.

இசை அரங்கு முடிந்ததும் பிரின்சிபால் வந்தார். 'நல்லாத்தேறிட்டே போ ' என்று வாழ்த்தினார். திரு கோடு கோடு கோட்டின் முன்னாலேயே மற்றவர்களும். 'பிரமாதம் ' என்றும், 'ரொம்ப சுத்தம், ரொம்ப சுத்தம் ' என்றும், 'ரொம்ப பெரிசா வரப் போற ' என்றும் வாழ்த்தினார்கள். மிஸ்டர் கோடு கோடு கோடு தன் கையை நீட்டி என் கையைக் குலுக்கினார். 'ரொம்ப மகிழ்ச்சி. ரொம்ப ரொம்ப நல்லா பாடிட்டாங்க ' என்றார். அப்பாடா ' உயிர் வந்தது. நிஜமாகவே பிழைத்தேன். ஒரு சிங்கத்தின் வாயிலிருந்து புறப்பட்டுவிட்டேன். என்னைக் காப்பாற்றிய கணநாயகனுக்கு முன்னால் மனதுக்குள்ளேயே எண்சாண்கிடையாக விழுந்து விழுந்து கும்பிட்டேன். பத்திரிக்கைகளில் இசையரங்குகளைப் பற்றி விமர்சனம் எழுதிப் பணம் சம்பாதிக்கும் கால் வேக்காடு அரை வேக்காடுகள் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். அவங்களெல்லாம் முக்காலே மூணு முக்கால் வீசம் மூங்காட்டுத் தம்பட்டம் என்றும் புலித்தோல் போர்த்தின புனுகு பூனை என்றும் எனகக்குத் தெரியும். நான் பயப்படுகிறதெல்லாம் இதையெல்லாம் கண்டுக்காமல் மந்திரி, தலைவர் மானேஜிங் டைரக்டர் என்றெல்லாம் பெரிய பெரிய பதவிகளில் இருந்து கொண்டு இரண்டாம் பேர் அறியாமல் சங்கீதத்தைக் கரைத்துக் குடிக்கும் மிஸ்டர் கோடு கோடு கோடு போன்றவர்களிடம் தான். நிஜமான சங்கீதம் அவர்களுக்குத் தான் தெரியும். அவங்களுக்கு இசை தொழில் இல்லையே. யாருக்கு பயப்பட வேண்டும் அவர்கள் ? அதனால் தான் மிஸ்டர் கோடு கோடு கோட்டின் வாயிலிருந்து 'ரொம்ப நல்லா பாடிட்டாங்க ' என்று வந்ததும் எனக்கு உயிரும் தைரியமும் வந்தது.

'வாங்கடா இப்ப அரை வேக்காடு விமர்சனங்களா ' ' என்று துடை தட்ட வேண்டும் போல் கை கூட புருபுருத்தது.

அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லாது போய்விட்டது. மறுநாள் காலை என்னை பிரின்சிபால் கூப்பிட்டார். 'மிஸ்டர் கோடு கோடு கோடு அவருடைய ஊரில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் நடத்துகிறார். அதில் இசையை ஒரு பாடமாக நுழைக்கப் போகிறார். உன்னைத் தான் அந்தப் பிரிவுக்கு முக்கிய ஆசிரியராகக் கூப்பிடுகிறார். ரொம்ப அதிர்ஷ்டம். இத்தனை சம்பளம் எடுத்த எடுப்பில் யாரும் குடுக்க மாட்டாங்க ' என்று சம்பளத் தொகையைச் சொன்னதும் உடனே ஒப்புக்கொண்டுவிட்டேன். ட்யூஷனே வைத்துக் கொள்ளவேண்டாம். கலியாணம். கோயில் திருவிழா என்றெல்லாம் நாடறிந்த வித்வான்களைத் தான் பாடக் கூப்பிடுகிறார்கள் என்னைப் போன்ற புதுசுகளுக்கு ஒரு தட்டில் குண்டஞ்சி ஐந்து முழம் அங்க வஸ்திரமும் வண்டி சார்ஜஉம் தான் கொடுப்பார்கள். ரேடியோக்காரன் வருஷத்துக்கு ரண்டுசான்ஸ் கொடுத்தால் பிரளயம். அதுக்கே ஆடிசனுக்கு வா. மனுப் போடு. பணம் கட்டு என்று எழுதுவான். கிடைச்சால் தான் போச்சு. எனவே மிஸ்டர் கோடு கோடு கோட்டின் பள்ளிக் கூடத்திலேயே இசைப் பேராசிரியராக வேலை ஒப்புக் கொண்டேன்.

நாலு மாசம் ஆயிற்று. ஏதோ தகராறில் பதவியை ராஜினாமா செய்து விட்டு மிஸ்டர் கோடு கோடு கோடு ஊரோடு வந்து தம்முடைய தொழிற்சாலைகளையும் வியாபாரங்களையுமே கவனிக்கத் தொடங்கினார். வெளி நாடுகளுக்குப் பெரிய பதவியில் அனுப்புகிறது என்றதையெல்லாம் மறுத்து தம் தொழிற் சாலைகளையும் கல்விச்சாலைகளையும் கவனிக்கத் தொடங்கினார்.

எங்கள் கல்லூரித் தலைவர் மிஸ்டர் சுப்ரமண்ய கோடு (ஜாதி பெயரைச் சொல்லாததற்கு மன்னிக்க வேணும்) என்னிடம் அடிக்கடி, 'பெரியவர் உங்களைப் பார்க்கணுமாம். அடிக்கடி சொல்லுகிறார் ' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். எனக்குப் பயமாகத்தானிருந்தது. எதற்காக என்னைப் பார்க்க வேணுமாம் ?

அப்படி ஒரு கட்டம் இரண்டு தடவை வந்தது. பயம். நல்ல வேளையாக, குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாள் என் தகப்பனார் காலமானார். பிழைத்தேன். இரண்டாவது தடவை மிஸ்டர் கோடு கோடு கோடே ஒரு அவசர மீட்டிங் என்று சந்திப்பைக் கான்சல் செய்தார். மூன்றாம் தடவை தப்பித்துக் கொள்ள முடியவில்லை. என் உறவினர் யாரும் பரலோகம் போகவில்லை. மிஸ்டர் கோடு கோடு கோட்டிற்கும் அவசர் மீட்டிங்கும் இல்லை. அன்று ஞாயிற்றுக் கிழமை. ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்று மாட்டிக்கொள்ளலாம். அவருடைய இரண்டு தொழிற்சாலைகளில் லாக்-அவுட்.

எதற்காக கூப்பிடுகிறார் ? ஏதாவது 17 அட்சரம், 19 அட்சரம், 37 அட்சரம் என்று தெரியாத தாளத்தில் பல்லவி பாடச் சொல்லப் போகிறாரா ? இல்லை. வடமொழி தெலுங்கு கீர்த்தனத்திற்குப் பொருள் கேட்கப் போகிறாரா ? கணநாயகன் இப்போதும் காப்பாற்றுவான் என்று மீண்டும் அவர் மீது பாரத்தைப் போட்டு நடந்தேன்.

மிஸ்டர் கோடு கோடு கோட்டின் வீடு பெரிய அரண்மனைமாதிரி. வாசலில் இரண்டு கூர்க்கா ரயில்வே லெவல் கிராஸிங் பாய்ண்ட்ஸ் மேனின் கூண்டு போன்ற ஒரு கூண்டில் ஒரு காவலாளி காக்கி உடுப்பில் டெலிபோனுடன் உட்கார்ந்திருப்பார். அவர் ஃபோன் பண்ணி, அனுமதி பெற்று என்னை உள்ளே அனுமதித்தார்.

மிஸ்டர் கோடு கோடு கோடு தன்னறையில் வேட்டி சட்டை அணிந்து தனியாக உட்கார்ந்திருந்தார். போனவுடனே பிஸ்கட், மைசூர்பாகு, இட்டலி, சாம்பார் வடை, சுத்த நெய் எல்லாம் வந்தன. அவரும் என்னுடனே சாப்பிட்டார்.

'வேலை கடுமை. அதனாலே உங்களைச் சந்திக்க முடியவில்லை ' என்று மன்னிப்புக் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டார்.

'எனக்குத் தெரியாதா ? இப்படி உங்களோடு உட்கார்ந்து பேச முடியுமா ' உங்களுக்கு எத்தனை ஜோலி ' '

அறையில் வேறு யாருமில்லை.

'ஒன்றுமில்லை உங்களைக் கூப்பிட்டது ஒரு சின்ன விஷயத்திற்குதான். நீங்கள் எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் '

'பேஷா '

'ரொம்ப நாளாக கத்துக்கணும்னு ஆசை, வேலை பளுக்கள், வெளிநாட்டுக்குப் போறது இந்த மில்லுங்களை கவனிக்கிறது..... '

'எனக்குத் தெரியாதா ? நீங்க சொல்லணுமா ? என்னமோ சொல்லிக் கொடுக்கணும்னு சொன்னீங்களே, எதுவானாலும், எனக்குத் தெரிஞ்சவரையில் நான் சொல்லத் தயார். எதிலெ சொல்லணும். எனக்கு இந்த சங்கீதம் ஒன்று தானே தெரியும் ' '

'அதுலெதான். சங்கீதத்துலெதான். '

'என்ன சொல்லணும் ? நான் என்ன சொல்லணும் ' நீங்களே சமுத்ரமாச்சே, '

'சமுத்ரம்தான் சமுத்திரத்திலே கப்பலோட்டலாம். மீன் பிடிக்கலாம். இன்னும் எவ்வளவோ செய்யலாம். ஆனால் ஒரு அவுன்ஸ் கூட குடிக்க முடியாதே. '

'எனக்குப் புரியிலியே நீங்க சொல்றது. '

'ஒண்ணுமில்லெ. நீங்க இதைச் சொல்லிக் கொடுத்தாப் போதும். '

'எதை ? '

'இப்ப உங்க மாதிரி ஒரு பெரிய வித்வான் பாடுகிறார். கேட்கறவங்க பல பேர் 'ஆகா ஆகாங்கறாங்க. பலேபலேங்கறாங்க. நல்லதுடாப்பா நல்லதுடாப்பாங்கறாங்க அப்படியே கண்ணை மூடிக்கிறாங்க. இதெல்லாம் எப்படி செய்யறாங்க ? இதெல்லாம் எப்ப எப்ப செய்யணும் ? எப்ப கண்ணை மூடிக்கிறது ? எப்ப ஆகான்னு சொல்லணும் ? சும்மாகேட்டுக் கிட்டே இருக்கறாங்க. திடார்னு ஆகாங்கறாங்க. ஐயோன்னு கசியறாங்க. நம்ப மானேஜரு கேக்கறதைச் சில கச்சேரிங்கள்ள பார்த்திருக்கேன். திடார்னு ஆகாங்கறார். ஒரே ஒரு சமயம் கண்ணைத் துடைச்சுக்கிறார். இதெல்லாம் எப்படி ? எப்ப செய்யறது ? எதுக்காக இப்படி

செய்யத் தோணுகிறது. இது தெரிஞ்சாப் போதும். இதுக்குத்தான் உங்களைக் கூப்பிட்டனுப்பிச்சேன். '

இதுதான் நடந்தது. நான் இப்போது ஒரு நிஜசிங்கத்தின் வாயிலேயே நுழைந்து விட்டதாகத் தோன்றிற்று.

மிஸ்டர் கோடு கோடு கோடு இப்போது இல்லை. சிலவருடங்கள் முன்பு காலமாகிவிட்டார். அந்த சந்திப்பை நினைத்தால் இப்போது என் உடல் நடுங்குகிறது. ஏனாம், நீர் எழுத்தாளராச்சே சொல்லும்.

# இரண்டு குழந்தைகள்

**ஜெயகாந்தன்**

இரண்டு அடுக்கு மூன்று அடுக்கு மாடிகள் உடைய கட்டிடங்கள் நிறைந்த அந்தத் தெருவில் பெரிய உத்தியோகஸ்தர்கள், டாக்டர்கள், வக்கீல்கள் முதலியோர் வாழ்ந்தனர். அது மட்டுமல்லாமல், அநேகமாக ஒவ்வொரு வீட்டிற்கும் பக்கத்தில் சற்றுத்தள்ளியோ நெருங்கியோ அமைந்துள்ள கொட்டகைகளில் மாடுகள், பசுக்கள் வசித்தன. சில கொட்டகைகளில் கார்கள் இருந்தன.

சேதன அசேதனப் பொருட்கள் யாவற்றுக்கும் இடம் கொடுத்த அந்தத் தெரு சிவப்பிக்கும் அவள் மகன் சோணையாவுக்கும் இடம் தந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்று சொல்லிவிட முடியுமா ?....

முதலில் ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலிருந்தும் அவளையும் அவள் குழந்தையையும் விரட்டினார்கள். பிறகு அந்த ரிட்டையர்ட் சப்ரிஜிஸ்திரார் சுப்புஜயரின் மனையாள் தயவின் பேரில், அவர்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த மாட்டுக் கொட்டகையில் இடம் பிடித்தாள் சிவப்பி.

மழையென்றும் குளிரென்றும் இயற்கை தொடுக்கும் தாக்குதல்களுக்கு அரணாய் அமைந்தது அந்தக் கொட்டகை. தினசரி அந்த மாட்டுக்கொட்டகையை அவள் சுத்தம்செய்வாள். அவள் படுத்துக்கொள்ளும் இடத்தை அவள் சுத்தம் செய்து கொள்ளுகிறாள். அதற்குக் காசு கொடுப்பார்களா, என்ன ?....

பகல் பொழுதெல்லாம் இடுப்பில் பிள்ளைச் சுமையுடன், அந்தத் தெருவின் கோடியில் உள்ள விறகுக் கடையில் அவளைப் பார்க்கலாம். விறகுச் சுமை கிடைத்துவிட்டால், பிள்ளைச்சுமை இறங்கிவிடும். அவன் கையில் காலணாவுக்கு முறுக்கை வாங்கிக் கொடுத்து அங்கேயே மரத்தடியில் குந்தி இருக்கச் சொல்லிவிட்டு ஓடுவாள். பிள்ளையை விட்டுவிட்டுப் போகும் துடிப்பில், சுமையுடன் ஓட்டமாய் ஓடி ஒரு நொடியில் திருப்புவாள். சோணையாவும் புத்திசாலித்தனமாய், அம்மா வரும் வழியைப் பார்த்தவாறே உட்கார்ந்திருப்பான். அதுவரை முறுக்கைக் கடிக்கவேமாட்டான். தாயைக்கண்டதும் ஒரு சிரிப்பு மலரும். அவளும் ஓடி வந்து பிள்ளையைத் தூக்கி முத்தமிடுவாள். தாயுள்ளம் அந்தப் பிரிவைக் கூடத் தாங்க முடியாதது

என்பது அவள் தவிப்பில் தெரியும். கையிலுள்ள முறுக்கைத் தாயின் வாயில் வைப்பான் சிறுவன். அவள் கொஞ்சம் கடித்து, அதை எடுத்து அவன் வாயில் வைத்து, 'நீ தின்னுடா ஐயா.... ' என்று சொன்ன பிறகு தான் தின்பான்.

விறகுச் சுமை இல்லாத நேரங்களில் கடைத்தெருவில் சென்று கடைகளில் தானியம் புடைப்பாள்.

மாலை நேரத்தில் அந்தப் பெரிய தெருவின் ஒரு மூலையில், மரத்தடியில் மூன்று கற்களைச் சேர்த்து அடுப்பு மூட்டிச் சோறு சமைத்துத் தானும் தன் மகனும் உண்டபின் மாட்டுக் கொட்டகையில் வைக்கோல் பரப்பில் நித்திரை கொள்வாள்.

அந்தத் தெருவில் எல்லா வீட்டுக்கும் அவள் வேலை செய்வாள். அதிலும் சுப்பு ஐயர் வீட்டுக்காரர்களுக்கு அவளிடம் தனிச்சலுகை. அவளும் மற்ற வீட்டுக்காரர்களிடம் செய்யும் வேலைக்குக் கூலியாகக் காசு பெறுவது உண்டு. சுப்பு ஐயர் வீட்டில்...எப்பொழுதாவது அவர் மனைவி கொடுத்தாலும்கூட வாங்குவதில்லை. அவள் செய்யும் வேலைகளுக்காக மீந்துபோன சோறு, கறி குழம்பு வகையறாக்கள் அவளைச் சாரும். சுப்பு ஐயர் வீட்டில் அவளாகக் கேட்டு வாங்குவது, மத்தியான நேரத்தில் ஒரு குவளை சோறு வடித்த கஞ்சி மட்டும்தான்.

அந்தக் கஞ்சியில் அவளுக்கு அபரிமிதமான சுவை. சுப்பு ஐயர் வீட்டுக்குக் கிராமத்தில் இருந்து நெல் வருகிறது. நல்ல வீட்டு அரிசி; பச்சரிசிக் கஞ்சி மணக்கும்; அவளுக்குக் குடிக்க குடிக்க அது இனிக்கும். எந்த வேலை எப்படிப் போனாலும் பத்து பதினோரு மணிக்கு ஐயர் வீட்டு வாசற்படியில் தகரக் குவளையும் கையுமாய் வந்து நின்று விடுவாள்.

சுப்பு ஐயர் திண்ணையருகே ஈஸிச்சேரில் சாய்ந்திருக்கிறார். கையிலுள்ள விசிறி லேசாக அசைகிறது.

திண்ணையில் தகரக் குவளையின் சப்தம் கேட்கவே ஐயர் நிமிர்ந்து பார்க்கிறார்.

'அடியே...ஒன் ஸ்வீகாரம் வந்திருக்கா; பாரு '

சுப்புஐயருக்கு சிவப்பியைப் பார்த்தால் கொஞ்சமும் பிடிக்காது. மனைவி அவளிடம் பிரியமாய் இருப்பதே அதற்குக் காரணம். தனது வெறுப்பை எப்படியெப்படி யெல்லாமோ காட்டிக் கொள்வார்.

'என்னடா பயலே, வயசு நாலாகுதோன்னோ ? இன்னம் என்ன ஆயி இடுப்பைவிட்டு எறங்கமாட்டேங்கறே. நீயும் போயி வெறகு தூக்கறதுதானே.... எப்பப் பார்த்தாலும் சவாரிதான்; நாளைக்கு நடந்து வரலேன்னா ஒன்னெ என்ன செய்றேன் பாரு.... ' என்று வேடிக்கை பேசவே சிவப்பி மகிழ்ந்து போனாள். ஐயர் தன் பிள்ளையைக் கொஞ்சிவிட்டார் என்ற நினைப்பில் சோணையாவை முத்தமிட்டாள்.

அதற்குள் சுப்பு ஐயரின் மனைவி உள்ளே இருந்து கஞ்சியில் உப்பைப் போட்டுக் கலக்கிக் கொண்டே வந்தாள். திண்ணையோரமாய் ஒதுங்கி, எட்டி நின்றவாறே புடவையைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு சிவப்பி கையிலேந்தி நிற்கும் தகரக் குவளையில் அவள் கஞ்சியை வார்க்கும்போது, ஈஸிச்சேரில் சாய்ந்திருந்த சுப்பு ஐயர் நிமிர்ந்து உட்கார்ந்து கூர்ந்து கவனித்தார்.

கஞ்சியிலிருந்து ஒரு பருக்கை விழுவது தெரிந்ததோ, போச்சு, அவ்வளவுதான் '.... ஐயர் வீட்டு அம்மாள் இருந்த இருப்பும், இந்தக் கஞ்சித்தண்ணிக்குக்கூட வக்கில்லாமல் அவள் அப்பன் அடித்த 'லாட்ரி 'யும்.... வம்ச பரம்பரையாகக் குலமுறை கிளர்த்த ஆரம்பித்துவிடுவார்.

'என்னடி அது 'லொடக் 'னு கொட்டித்தே ?... ' என்று புருவத்தை உயர்த்தினார்.

அம்மாளுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

'காட்டுடா...ஐயர்கிட்டே கொண்டுபோய்க் காட்டு. கையைவிட்டுத் துழாவிப் பாருங்கோ... இந்த ஆத்து சொத்தெல்லாம் கொண்டுபோய்க் கொட்டிட்டேனேன்னோ.... இவர் துப்புக் கண்டுபிடிக்கிறார்.... ' என்று இரைந்துவிட்டு உள்ளே போனாள்.

'ஒண்ணுமில்லே சாமி....வெறும் கஞ்சி ஆடை ' என்று அதை விரலால் எடுத்துக் காட்டி தூக்கி எறிந்தாள் சிவப்பி.

'அடி அசடே....அதை எறிஞ்சுட்டியே...அதிலேதான் 'வைடமின் பி ' இருக்கு. '

'எனக்கு அதொண்ணும் வாணாம் சாமி.... ' என்று கஞ்சிக் குவளையுடன் நகர்ந்தாள் சிவப்பி.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஐயர் தனக்குள் சொல்லிக் கொண்டார்:

'ஹ்ம்...கஞ்சித் தண்ணியைக் குடிச்சுட்டு என்ன தெம்பா, இருக்கா ' அதிலேதான் சத்தெல்லாம் இருக்கு ' என்று முணகியபின், உரத்த குரலில்....

'அடியே...இனிமே சோத்தெ வடிக்காதே. பொங்கிப்பிடு. அதிலேதான் சத்தெல்லாம் இருக்கு. ஒடம்புக்கு ரொம்ப நல்லது.... ' என்று சொன்னார்.

'ஆமா...இப்போ இருக்கற சத்தே போறும் ' என்று சலித்துக்கொண்டு உள்ளே போனாள் அம்மாள்.

அம்மாள் எத்தனை தடவைகள் சலித்துக் கொண்டாலும், ஐயருக்கு சிவப்பியைப் பார்க்கும் போதெல்லாம் --- லோகத்தில் இருக்கும் சத்தெல்லாம் தன் வீட்டுக் கஞ்சித் தண்ணீரில் தான் இருப்பதாகத் தோன்றும்.

ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து 'பஞ்சம் பிழைப்ப 'தற்காக மதுரை வந்தவள் சிவப்பி.

பெயரளவில் சிவப்பி. கரிய ஆகிருதி...ஆரோக்கியமும் திடமான உடற்கட்டும் உடைய அவள் பஞ்சத்திலடிபட்டு இந்த நகரத்திற்கு வந்தவள்தான் என்றாலும், இங்குள்ளவர்கள் கண்டு வியக்கும்படிதான் இருந்தது அவள் உடல் வனப்பு. செழிப்பாக இருக்கும் பூமியில் வளமாக வாழும் வாய்ப்பும் கிட்டியிருந்தால் நிச்சயம் இவளால் முறம் கொண்டு புலியை விரட்டி இருக்க முடியும் '

ஆனால் இப்போது....

முறம் கொண்டு தானியங்கள் புடைப்பதும், கூலிக்கு விறகு சுமப்பதுமாய் உழைத்துத் தானும் ---- கருப்பையாத்தேவனின் வாரிசாக திகழ்ந்து, தன் சிரிப்பிலும் புன்னகையிலும் அவள் கணவனின் சாயல் காட்டி, ஆறுதல் தரும் நான்கு வயது மகனான --- சோணையாவும் வயிறு வளர்ப்பது தான் அந்த மறத்தியின் உடல் வலு புரியும் மகத்தான சாதனை.

இடுப்புக் குழந்தையும் தாயுமாய் அவளை இங்கே விட்டு விட்டு, ஏதாவது வேலை தேடி வருவதாகச் சொல்லி, வடக்குச் சீமைக்குப் போன அவள் புருஷன் கருப்பையாத் தேவனின் முகதரிசனம் ஆறு மாசமாகியும் கிடைக்கவில்லை.

அன்று ஐயரவர்களுக்கு பிறந்த தின வைபவம். வீட்டில் விசேஷமானதால் விருந்தினர்களும் வந்திருந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் பந்தி நடந்ததால் சிவப்பி கஞ்சிக்காகக் காத்திருக்க வேண்டி இருந்தது.

பிள்ளை பசியால் துடித்தான்.

அவனுக்கு 'பராக்கு 'க் காட்டிப் பேசிச் சிரித்து விளையாடியவாறு கொட்டகையின் ஓரத்திலிருந்த மர நிழலில் குந்தியிருந்தாள் சிவப்பி.

'ஓங் ஐயா எங்கலே.... ' என்று மகனின் முகவாயைப் பிடித்துக் கொஞ்சினாள் சிவப்பி.

'ஐயா...ஓ....போயித்தாரு... '

'எப்பலே வரும் ஓங்க ஐயா... ' என்றதும் அவன் அவள் மடியிலிருந்து இறங்கி நடந்து, தெருவில் போய் நின்று இரண்டு பக்கமும் மாறி மாறிப் பார்த்துவிட்டு வந்தான்.

'ஆத்தா...ஐயா....ஊம் ' என்று இரண்டு கையையும் விரித்தான். அவன் முகத்தில் ஏமாற்றமும் சோர்வும் படர்ந்திருந்தது.

'ஐயா நாளைக்கு வந்துடும். வாரப்போ ஒனக்கு முட்டாயி, முறுக்கு, புதுச் சட்டை எல்லாம் கொண்ணாந்து குடுத்து...அப்புறம் நாம்ப நம்ம ஊருக்குப் போயி, நம்ம ஊட்லே இருக்கலாம்.... ' என்று கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது; கண்களில் நீர் துளிர்த்தது. மகனின் முகத்தில் முத்தம் கொடுக்கும் போது அவன் முகத்திலேயே கண்ணீரையும் துடைத்துக் கொண்டாள்.

இந்த சமயத்தில் ஐயர் வீட்டு வாசலில் இலை வந்து விழும் சப்தம் கேட்டது----

'ஆத்தா...கஞ்சி....கஞ்சி... ' என்று குழந்தை பறந்தான்.

மகனை தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு, கையில் தகரக் குவளையுடன் போய் நின்றாள் சிவப்பி.

சுப்பு ஐயர் அப்பொழுதுதான் சாப்பாடு முடிந்து, திண்ணைக்கருகே ஈஸிசேரில் வந்து சாய்ந்து ஏப்பம் விட்டார்.

'என்ன சேப்பி ?... '

'இன்னக்கி விசேஸங்களா சாமி ? '

---அவள் சாதாரணமாய், உபசாரத்திற்குத்தான் கேட்டு வைத்தாள்.

'என்னத்தெ விசேஷம் போ....ஊர்லேந்து பொண்ணு வந்திருக்காளோன்னா ?... அதான்...ஹி...ஹி.... '

---இவளுக்கு ஏதாவது தரவேண்டி இருக்குமோ என்ற பயத்தில் பூசி மழுப்பினார் ஐயர்.

உள்ளேயிருந்து அம்மாளின் குரல் மட்டும் கேட்டது.

'யாரது சேப்பியா.... ? '

'ஆமாங்க. '

'சித்தெ சந்துவழியா கொல்லப்புறம் வாயேண்டி....ஒன்னத்தான் நெனச்சிண்டே இருந்தேன். தொட்டியிலே.... ரெண்டு வாளி ஜலம் சேந்தி நெரப்பு... சாப்பிட்டவாளுக்குக் கையலம்பக்கூட ஜலம் இல்லே....சீக்கிரம் வா.... ' என்று அம்மாவின் குரல் ஒலித்ததும் இடுப்பிலிருந்த குழந்தையுடன் உள்ளே போகும் சிவப்பியைப் பார்த்து,

'இடுப்பைவிட்டு எறங்காமே ஒன் உசிரை வாங்கறதே, சனி அத்தெ எறக்கி விட்டுட்டுப் போ '... ' என்றார் ஐயர்.

குழந்தையை இறக்கி மர நிழலில் உட்கார வைத்து 'ஆத்தா போயி கொஞ்சம் தண்ணி எறைச்சி ஊத்திட்டு வாரேன்; அழுவாமே குந்தி இருக்கியா, ஐயா ?... ' என்று அவனை முத்தம் கொஞ்சினாள் சிவப்பி.

'சரி ' என்று சமர்த்தாகத் தரையில் சம்மணம் கட்டி உட்கார்ந்து கொண்டான் சிறுவன்.

சந்துப் பக்கம் போகும் போது சிவப்பி திரும்பித் திரும்பித் தன் மகனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சென்றாள். அவனும் சிரித்தவாறு உட்கார்ந்திருந்தான்.

பையன் அழாமல் அடம் பிடிக்காமல் இருந்ததில் ஐயருக்குக் கொஞ்சம் ஏமாற்றம்; ஆத்திரம் என்று கூடச் சொல்லலாம்.

உள்ளேயிருந்து ஆரோகண அவரோகண கதிகளிலெல்லாம் குரலை முழக்கிக் கொண்டு வந்தான் அவர் மகள் வயிற்றுப் பேரன். அவனுக்கும் வயது நான்குதான் இருக்கும். நான்கு விரலையும் வாய்க்குள் திணித்தவாறு சிணுங்கிக் கொண்டே அவருகே வந்தான் பேரன்.

'ஏண்டா கண்ணா அழறே ? இப்படி வா...மடியிலே வந்து தாச்சிக்கோ ' என்று பேரனை அழைத்தார்.

'மாத்தேன் போ....அம்மா...ஆ...ஆ ' என்று வாயைப் பிளந்து கொண்டு அழ ஆரம்பித்தான் குழந்தை.

'அம்மா சாப்பிடறாடா கண்ணா...சாப்டுட்டு வந்து ஒன்னெத் தூக்கிண்டுடுவா. சமத்தோன்னோ ?....அதோ பாரு, அந்தப் பையனை...அவ அம்மாவும் எங்கேயோ போயித்தான் இருக்கா...ஒன்னெ மாதிரி அவன் அழறானோ ? ' என்று சோணையாவைக் காட்டினார் ஐயர்.

சோணையா கையைத் தட்டிக்கொண்டு ஐயரின் பேரனைப் பார்த்துச் சிரித்தான்; அவனோ காலை உதைத்துக் கொண்டு அழுதான் '

---தனது பேரனுக்கு அவனை வேடிக்கை காட்டப்போய், தன் பேரன் அவனுக்கு வேடிக்கையாகிப் போனானே என்ற ஊமை ஆத்திரம் ஐயருக்கு...

'ஏண்டா சிரிக்கிறே ? அப்படியே போட்டேன்னா... ' என்று விளையாட்டாய்க் கண்டித்து தம் எரிச்சலைத் தீர்த்துக் கொண்டார் ஐயர். 'அந்தப் பையன்தான் அசடு....அவனை நன்னா அடிப்போமா ? '

---அவர் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் கத்தினான் பேரன்.

'இதெவிட அசடு லோகத்திலே உண்டோ.... நன்னா ஒதைக்கணும் ' என்று கருவிக்கொண்டே ஐயரின் மகள் எச்சில் இலையுடன் தெருப்பக்கம் வந்தாள். இலையைப் போட்டுக் கையைக் கழுவிய பின்,

'சனியனே, கத்திப் பிராணனைத் தொலைக்காதே ' ' என்று பல்லைக் கடித்துக் கொண்டு வந்து மகனைத் தூக்கிக் கொண்டாள்.

'என்னடி பொண்ணே, ஒன்னும் சாப்பிடாம இலையைக் கொண்டு வந்து எறிஞ்சிருக்கே... எல்லாம் அப்படியே இருக்கு ...ஜாங்கிரிகூடன்னா அப்படியே கெடக்கு ? இப்படி 'வேஸ்ட் ' பண்ணுவாளோ ?... ' என்று அரற்றினார் ஐயர்.

'இந்த சனி என்னெ சாப்பிட விட்டாத்தானே... ? '

'சரி...அவனெக் கத்த விடாதே ' அவனுக்கு ஒரு ஜாங்கிரி குடு ' என்று சொல்லிவிட்டு சோணையாவைப் பார்த்தார்.

'ஏண்டா பயலே, நோக்கு ஜாங்கிரி வேணுமா ? ' என்றார் கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

---பையனுக்கு புரியவில்லை.

'மிட்டாயிடா...மிட்டாய், வேணுமா ? '

மிட்டாயி என்றதும் பையனுக்குப் புரிந்துவிட்டது. சந்தோஷத்துடன் தலையை ஆட்டிக் கொண்டு எழுந்து வந்தான்.

'அதோ, அதான்...மிட்டாயிடா... எடுத்துத் தின்னு பாரு, இனிக்கும்.... ' என்று நாக்கைச் சப்புக்கொட்டி ஆசை மூட்டி எச்சில் இலையைக் காட்டினார் ஐயர்.

சோணையா தனது பிஞ்சுக் கரங்களால் எச்சிலையில் கிடக்கும் துண்டு ஜாங்கிரியை எடுத்து வாயில் வைத்துச் சுவைத்தான்....

'எலே...எலே...போடுலே கீளே----தூ.... ' என்று கூவியவாறு சந்திலிருந்து ஓடிவந்த சிவப்பி அவன் கையிலிருந்த ஜாங்கிரியைத் தட்டிவிட்டாள். 'துப்புலே.... துப்பு... ' என்று அவன் தலையில் 'நறுக் ' கென்று குட்டினாள். சோணையா அழுதான்; அவன் பிளந்த வாய்க்குள் விரலைவிட்டு அந்த ஜாங்கிரித் துண்டை வழித்து எறிந்தாள்.

'நா எலும்பை முறிச்சி கஞ்சி ஊத்தறேன்....எச்சப் பொறுக்கறியா ?... ' என்று முதுகில் அறைந்தாள்.

'கொழந்தேயெ அடிக்காதே சேப்பி... ' என்றார் ஐயர்.

'இல்லே சாமி...நாங்க இல்லாத ஏளைங்க....இப்பவே கண்டிக்காட்டி நாளைக்கி எச்சிக்கலை பொறுக்கியாவே ஆயிடும்... ' என்று சொல்லிவிட்டு இடுப்பில் இருக்கும் சோணையாவின் முகத்தைத் துடைத்து 'இனிமே எச்சியெல்லாம் எடுக்காதே ' ' என்று சமாதானமாய்க் கேட்டாள்.

பையன் விம்மிக் கொண்டே ஐயரைக் காட்டி, 'சாமி....சாமிதான் எடுத்துத் திங்கச் சொல்லிச்சு... ' என்று அழுதான். சிவப்பிக்கு உடம்பு பதைத்தது, கண்கள் சிவக்க ஐயரைப் பார்த்தாள்.

'ஏன் சாமி...ஒங்க புள்ளையா இருந்தா சொல்லுவீங்களா ?... ஒங்க எச்சி ஒஸத்தியா இருந்தா ஒங்களோட, எம் பையனுக்கு ஏன் அதைத் தரணும்... ' என்று கோபமாய்க் கேட்டாள்.

'என்னடி அது சத்தம் ? ' என்று கேட்டுக் கொண்டே பாத்திரத்தில் கஞ்சிக் கொண்டு வந்தாள் வீட்டு அம்மாள்.

'நீயே பாரும்மா...எம்மூட்டப் புள்ளைக்கி எச்சிலைத் திங்கப் பளக்கிக் கொடுக்கிறாரும்மா, சாமி... ' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் சிவப்பி.

'நான் என்ன பண்ணுவேண்டி...நேக்கு அவர் ஒரு பச்சைக் கொழந்தை...ஒன் கொழந்தையை நீ அடிக்கறே; நா என்ன பண்றது, சொல்லு ? '

'ஏண்டி சேப்பி, நான்தான் அவனை எடுத்துத் திங்கச் சொன்னேன்னு சொல்றயே, நான் சொன்னதை நீ கண்டையா ?.... ' என்று எழுந்து வந்தார் ஐயர்.

'எம்மவன் வறவனுக்கு பொறந்தவன். பொய் சொல்ல மாட்டான் சாமி... ' ஆக்ரோஷத்தோடு இரைந்தாள் சிவப்பி.

ஐயர் அசந்து போனார் '

'ஆமா; சொன்னேன்னுதான் வச்சுக்கோயேன்...எங்க வீட்டுக் கஞ்சியெ தெனம் குடிக்கறயே, அது மட்டும் எச்சல் இல்லியா ?... அதுவும் எச்சல்தான் தெரிஞ்சுக்கோ... ' என்று பதிலுக்கு இரைந்தார் ஐயர்.

'இந்தாங்க சாமி...ஓங்க எச்சிக் கஞ்சி ' நீங்களே தான் குடிச்சிக்குங்க... இந்த எச்சில் எனக்கு வாணாம்... ' என்று தகரக் குவளையைத் 'தடா 'லெனச் சாய்த்துவிட்டு, மகனைத் தூக்கி இடுப்பில் பொத்தென இருத்திக்கொண்டு வேகமாய் நடந்தாள் சிவப்பி; இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்து மனம் பொறுக்காமல் 'எல்லாம் என் கர்மம், என் கர்மம் ' ' என்று தலையிலடித்துக் கொண்டு உள்ளே போனாள் ஐயரின் மனைவி.

உள்ளே தோட்டத்தில் தொட்டி நிறைய---சிவப்பியின் உழைப்பால் நிறைந்திருந்த---தண்ணீரையும் பாத்திரம் நிறைய அவளுக்காக எடுத்து வைத்திருந்த சோற்றையும் குழம்பையும் பார்த்த அம்மாளுக்குக் கண்கள் கலங்கிப் போயின.

'அடியே...பாத்தையோ, நம்மாத்துக் கஞ்சியெக் குடிச்சு வந்த கொழுப்புடா... இனிமே அவளுக்கு கஞ்சி ஊத்தப் படாது சொல்லிட்டேன்... நாளையிலேருந்து சாத்தெ வடிக்காதே.... பொங்கிப்பிடு.... அதிலேதான், சத்து இருக்கு... ' என்ற ஐயரின் வழக்கமான பல்லவி திண்ணையிலிருந்து சற்றுக் கண்டிப்பான குரலில் ஒலித்தது.

மறுநாள் ஐயர் வீட்டில் சோற்றை வடித்தார்களோ, பொங்கினார்களோ,.... ஆனால், வழக்கமாகக் கஞ்சி வாங்க வரும் சிவப்பியை மட்டும் மறுநாள்... மறுநாள் என்ன, அதன் பிறகு ஒரு நாளும் அந்தத் தெருவில் காணவில்லை.

# செம்மங்குடி (தன் ஊர் தேடல்)

**மௌனி**

என் ஊர் செம்மங்குடி என நான் நினைக்கும்போது, அதற்கான ஒரு முக்கிய நியாயத்தையும் சொல்ல வேண்டி வருகிறது. என் தந்தை வழி மூதாதையர் அநேக தலைமுறைகள், சமீபகாலம் வரை, இந்த ஊரில் வீடு, சொத்து, சுதந்திரத்துடன் வசித்து வந்திருக்கிறார்கள்.

கர்நாடக சங்கீத உலகில் மிகவும் புகழ்பெற்று, இப்போது இருக்கும் செம்மங்குடி ஸ்ரீனிவாஸ அய்யரையும், காலஞ்சென்ற பிடில் வித்துவான் நாராயணசாமி அய்யரையும், அகால மரணம் எய்திய அவர் குமாரன் கலியாணசுந்தரத்தையும் தெரியாதவர்கள் மிகச் சிலரே, அவர்களும் இவ்வூர்காரர்களே.

ஒரு காரணச் சிறப்புப் பெயரென, ஓர் ஊரைக் குறிக்கும் இப்பெயர். (செம்--அம்-குடி; செம்--மன்--குடி; குடியிருக்கச் செம்மையான ஊர்.) மேலும் தஞ்சை ஜில்லாவில் அநேக கிராமங்களுக்கும் இப்பெயர் இருப்பதன் காரணமாக, எங்கள் ஊரை 'தீபங்குடி செம்மங்குடி ' என்று பக்கத்து ஊரையும் சேர்த்துச் சொல்லுவது வழக்கம். பெயர்க் குழப்பத்தில் கடிதங்கள் தவறிச் சென்று விடாதிருக்க தபால் இலாகாவினர் செம்பங்குடி என்ற முத்திரையைக் கொடுத்திருக்கிறார்கள்.

கும்பகோணம் திருவாரூர் பஸ் பாதையில், குடவாசலைக் கடந்து, மேலும் ஐந்து மைல் செல்ல, காப்பணாமங்கலம் கிராமம் வரும். காப்பணாமங்கலத்திலிருந்து நேர் வடக்கே இருக்கும் பெரும்பண்ணையூர் செல்ல, ஆற்றிற்கு அங்கு ஒரு பாலம் இருக்கிறது. அதைக் கடந்தவுடன்

கிளை பாதை என ஆற்றின் வட கரையிலும் தோப்பினுள்ளும், கோணல் மாணலாக செல்லும் ஒரு குறுகிய வண்டிப்பாதையில் அரை மைல் கிழக்கே சென்றால் செம்மங்குடியை அடையலாம். அடையுமுன் மேலக் குடியானத் தெருவையும், சமீபத்தில் ஊர்ச் செலவிலும் முயற்சியினாலும் ஏற்பட்ட செம்மங்குடி உயர்நிலைப் பள்ளியையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

இது ஒரு சிறிய கிராமம். வரிசைக்கு சுமார் இருபது வீடுகளைக் கொண்ட ஒரு கிழக்கு மேற்கு வீதிதான் அக்கிரஹாரம். மேலக் கோடியில் தெருவைப் பார்த்து நிற்கிறது ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவில். கீழ்க் கோடியில் நேராக இன்றிச் சிறிது வடக்கே தள்ளி கிழக்கே எட்டிய தூரம் வரையில் காணக் கிடக்கும் வயல் வெளியைப் பார்த்து நிற்கும் கோவில் ஆனந்தவல்லி சமேத அகஸ்தீச்வரர் கோவில். கோவில்கள் எல்லாம் நல்ல நிலைமையிலே ஊர்க்காரர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அக்கிரஹாரத்தின் கீழ்க் கோடியிலிருந்து, தெற்கே செல்லும் சிறிது இரட்டை வரிசைத் தெருதான் கீழ்க்குடியானவர் தெரு. இது தெற்கே குடமுருட்டியாறு வரையிலும் சென்று முடிகிறது. ஊராருக்குக் குல தெய்வமாக விளங்கும் 'கரும்பாயிரம் கொண்டவர் ' ஆற்றங்கரையிலே தேடிக் கண்டு பிடிக்கும் வகையில் ஒரு சிறு கூரைக்கு அடியில் இருக்கிறார்.

செம்மங்குடி ஒரு பாடல் பெற்ற ஸ்தலமல்ல. ஆயினும் இதைச் சுற்றி இரண்டு மூன்று மைல்களில் இருக்கும் பாடல் ஸ்தலமாகிய எண்கண், தலையாலங்காடு, ஸ்ரீவாஞ்சியம், அய்யம்பேட்டை முதலியவற்றிற்கு நடுநாயகம் போன்றே மத்தியில் இருக்கிறது. இது ஒரு புராதன ஜைன ஷேத்திரம். இங்கு ஒரு பழைய ஜைன கோயில் உண்டு. மேலும் இது, முதலாம் குலோத்துங்கன் சபையில் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கிய வரும், 'கலிங்கத்துப்பரணி ' ஆசிரியருமான ஜயங்கொண்டாருடைய ஊராகும்.

தஞ்சை ஜில்லா பிராமண சமூகத்தில் 'வாத்திமர் ' என்றொரு பிரிவுண்டு. இதிலும் அநேக உட் பிரிவுகள் உண்டெனினும் 'பதினெட்டுக் கிராமத்து வாத்திமர் ' என்ற சுமார் ஆயிரம் குடும்பத்தினர் மாயூரம், கும்பகோணம், நன்னிலம் தாலுகாக்களில் உள்ள பதினெட்டுக் கிராமங்களில் இன்றுவரையில் வழிவழியாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த வாத்திமர்களில், ஒரு கோத்திரத்தினரைத் தவிர வேறொருவரும் இன்றி வசிக்கும் கிராமம்தான் செம்மங்குடி என்பது. ஆகவே கிராமத்தினர் எல்லோரும் நெருங்கிய பங்காளிகள். மூல புருஷனிடமிருந்து பதினான்கு தலை முறைகள் தாண்டாதவர்கள். அந்த முதல் மனிதன் என்று சொல்லக் கூடியவர். (ஸ்வர்ண சாஸ்திரி என்பார்கள்) சுமார் 450 வருஷங்களுக்கு முன் (சோழராஜ்யம் சீர்குலைந்து அரசியல் குழப்பமான நாளில் ) இந்த ஊரில் குடியேற ஆந்திர சோழ பிரதேசத்திலிருந்து வந்தார் எனச் சொல்லப்படுகிறது. இவர் குடி வந்த காலத்திற்கு முன்பே சுற்று வட்டாரத்தில் அநேக கிராமங்களில் இருந்தும், சகவாசத்திற்கு தூரத்தையும், வாசத்திற்கு தனிமையையும் விரும்பியவர் போன்று இந்த குடமுருட்டியாற்றின் கடைசி படுகையென சொல்லக்கூடிய செழிப்பிலும் விஸ்தீரணத்திலும் குறைவுகொண்ட இந்த இடத்தைப் பிடித்தார் போல்லும். அவர் வழி வந்தவர்களாகத்தான் இக்கிராமத்தினர், கிராமச் சண்டை பூசலின்றியும், அக்கம் பக்கம் கிராமத்தாருடன் நெருங்கிய சிநேகித தொடர்பு கொண்டும் இதுவரையிலும் வாழ்ந்து வருகிறார்கள். இக் கிராமத்தினர் பொது அறிவும் பகுத்தறிவும் கொண்ட புத்திசாலிகள். ஒரு நியாயப் போக்கு நடைமுறைகளும் இதற்கு மேலாக ஒரு critical sense சும் இவர்களிடம் இருப்பதை பழகி அறிய முடியும். தன்மானமுடையவர்கள். பிழைப்பிற்காக எதையும் செய்யலாம் என்ற நியதியை உடையவர்கள் அல்ல.

ஊரில் உள்ள மூன்று குளங்களில் இரண்டு, எப்போதும் எதற்காகவும் என எல்லோருக்கும் பயன்பட முடியாதென்பதில் ஒன்று ஒருவருக்கும் பயன்படாது, கவனிக்கப்படாது, பாழடைந்து கொண்டிருக்கின்றன.

சிவன் கோவில் குளம் மட்டும் ஒரு காவலில் உபயோகிக்க இருக்கிறது. ஆற்றங்கரையிலுள்ள ஸ்நானத்துறையும், பக்கத்து நந்தவனம், மடம் தோப்பு எல்லாமே இந்தக் கதிக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. பழைய குதூகலம் மாறிவிட்டது. பேச்சில் சுவாரஸ்யம் குன்றி விட்டது. மனிதர்களிடம் மனச்சோர்வும் காண இருக்கிறது. ஊரும் தன் தனித்தன்மை இழந்து வருகிறது.

எப்பவோ ஆற்று வெள்ளத்தில் போய்விட்ட அக்காவை நினைத்து, புது வெள்ளம் வருமுன்னே அக்காவை திரும்பிப் பார்க்கும் ஆவலில் எங்கிருந்து எல்லாமோ அக்குக் குருவி சோகமுற கத்துவது கேட்கிறது. ஆங்காங்கே தோப்போடு அழிவுறாமல் தனித்து நிற்கும் மா மரங்களினின்றும் கேட்கும், குயில் கூவுதலிலும் இனிமை இல்லை. நந்தவனம் இப்படி தோன்ற இருப்பதிலேயே ஏன் பாழ்தோற்றம் கொள்ளுகிறது ? அநேக எதிரிகள் தங்கிப் போவதற்கும், ஊருக்கு பொது மடமாக இருந்தது இடம் தெரியாது பூமியில் புதைவு கொண்டு விட்டது. அரச மரங்கள் இரண்டு, சுற்றுவார் இல்லாது நின்று கொண்டிருக்கின்றன.

எங்கிருந்தோ மகிழம்பூ மணம் மூக்கில் இனிக்க உணர, அந்த இரண்டு மரங்கள் இருந்த இடத்தைப் பார்க்கிறேன். காலடியில் சிதறிய தன் பூக்களின் வாசனையை தாமே குனிந்து மகிழ்ந்து நிற்பது போன்றவை, இருந்த இடத்தில் இல்லை. ஆயிரம் காலத்திற்குப் பின்னும் வாட வாட மணம் கமழ விட்டு எங்கேயோ சென்றனவே போலும்.......... வெகு அப்பாலிருந்து செம்மங்குடியின் சங்கீதமும், பிடிலும் லேசாக மிதந்துவருகிறது....ஆம். எப்போதோ சிவன் கோயிலில் நடந்த கச்சேரிதான்.

இப்படி இவ்வளவு காலம் தாவி தூரத்தில் தான் இனிமையெனப் படுகிறதா ? குடமுருட்டி ஆறும் இரு கூறாக பிரிக்கப்பட்டு வாய்க்காலாக தேய்ந்துவிட்டது.

இருட்டு காணும் முன்பு மாலை வந்து கொண்டிருக்கிறது. மயக்கமும் கூட வருகிறது. இன்று நடுப்பகல் வெயில் வெகு கடுமை.... வசீகர எண்ணங்கள் மறைய, வருங்கால நினைவுகள் தோன்ற இருக்கிறது.

இருள் சூழுமுன் , உள்ளூர் ஆற்றை கடக்குமுன் பயமேதும் தோன்றவில்லை. அப்பால் எல்லையில் உள்ளூர் மயானம் குறுக்கிடும்போது.... எரியும் சவ ஒளியில் முன் நீண்டு ஓடும் நிழலை பிடிக்க ஓடும் விளையாட்டா இந்த நடையின் ஓட்டம். இரவின் இருளில் கரையும்போது. தான் என்ன, தன் நிழல் என்ன ? நிசியில் தவறிய காகத்தின் கரைதலும் ஒளி கொள்ளுவதை அறிவிப்பதாகுமா ? வருங்கால நல்லுலகின் வானில் ஒளியை காண என் பவிஷ்ய புராண படிப்பு உதவாததை உணருகிறேன்.

எங்கிருந்தோ குலை நடுங்க ஓர் ஊளையிடும் சப்தம் கேட்க ஓடுவதைப் பார்க்கிறேன். எட்டிய வெளியில் தமுக்கொலி ஓர் அவல்யத்தில் ஊரை பிடிக்க வரும் துர்த்தேவதைகளை விரட்ட இருக்கிறது.

எங்கேயோ எட்டிய சகவாசத்திற்கும், தனிமை வாசத்திற்கும் என என் ஊரைத்தான் நான் தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்.

# பக்கவாத்தியம்

**- அஸ்வகோஷ்**

பாழாய்ப் போன செருப்பு ' நேரங்காலம் தெரியாமல் அறுந்துத் தொலைத்தது. சந்தர்ப்பம் தெரியாமல். கடைத்தெருவில். நாலுபேருக்கு மத்தியில்; விட்டுவிடவும் மனமில்லை. ஒரு நாலணா செலவு செய்தால் இன்னும் ரெண்டு மாசம் உழைக்கும். கழற்றிக் கையில்தான் எடுத்துக் கொண்டேன். யாராவது பார்த்தால் அசிங்கமாக....அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. செருப்பு என்னுடையதுதானே ' அதன் அருமை எனக்கல்லவோ தெரியும் '

நகரத்தின் மையப் பகுதி. நான்கு தெருக்களும் கூடும் நெருக்கமான சந்திப்பு. மார்க்கெட், கடைத்தெரு, பஜார், எல்லாம் அதுதான். சந்திப்பின் ஓரம் தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த 'கலைஞனிடம் '--- (தொழில் வினைஞர்)---கையில் எடுத்துப் போனதைக் கொடுத்தேன்.

அவன் அதை வாங்கி ஒரு மாதிரியாகப் பார்த்தான். இளக்காரமாக இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்தான். நிமிர்ந்து என்னைப் பார்த்தான். என் பரதேசிக் கோலம் அவனுக்கு எப்படியிருந்ததோ ' ரொம்ப அனுதாபத்துடன் 'சும்மா தச்சா சொகப்படாது சார் ' ரெண்டு நாளுல பிச்சிக்கும். கீழே ட்யர்போட்டு, பட்டய மாத்தி ஸ்ட்ராங்கா தச்சிட்டா அது பாட்டுங் கெடக்கும் சார் ஒரு வருஷத்துக்கு ஒண்ணும் கை வைக்க வேண்டில்ல....ஒண்ணோ முக்கா ரூவா குடுத்துடுங்க..... '

நான் கொஞ்சம் யோசித்தேன். எனக்கு அதில் திருப்திதான். 'ஒரு வருஷத்துக்கு ஒண்ணும் கை வைக்க வேண்டியதில்லை; அது பாட்டுங் கெடக்கும்; ஸ்ட்ராங்கான தையல் ' என்பதெல்லாம் ரொம்ப நல்ல விஷயங்கள்தான். ஆனால் ஒண்ணே முக்கால் ரூபாய் என்பதும் அதிகம்தான்.

கேட்டதை கொடுத்து விடுவதா ? பேரம் பேச வேண்டாமா ?

பேசினேன். அவன் ஒண்ணரை ரூபாய்க்கு ஒப்புக் கொண்டான். 'பாவம் அவனுக்கு தொழில் கிடைத்தா மாதிரி.... எனக்கும் ஒரு வருஷ பிரச்சினை தீர்ந்த மாதிரி ' என்று எண்ணமிட்டவனாக, சோமனை சுருக்கிக் கொண்டு தொட்டி விளிம்பில் குத்துக் காலிட்டுக் குந்தினேன்.

அவன் கைவேலையை எடுத்து அப்புறம் ஒதுக்கிவிட்டு, என் செருப்பை ஆபரேஷன் செய்கிற வேலையிலே இறங்கினான்.

எவ்வளவு நேரந்தான் டேக்கா போடுவதையும், ஊசி குத்துவதையும், நூல் மாட்டி இழுப்பதையுமே பார்த்துக் கொண்டிருப்பது ?

மாலை நேர வியாபாரத்தால் சந்திப்பு களை கட்டியிருந்தது. மஞ்சள் வெயில்கூட எங்கும் அஸ்தமித்துவிட்டது. கடைகளில் இங்குமங்குமாக ஒவ்வொன்றாக மின் விளக்குகள் தோன்றின. எதிர்தாற் போலிருந்த சொக்கநாதன் செட்டியார் ஜவுளிக் கடையண்டை டவுன் சப்

இன்ஸ்பெக்டர் யாரோ நாலு பேருடன் பேசிக்கொண்டிருந்தார். பக்கத்தில் அரிசிக் கடை, மளிகைக் கடை, வெற்றிலை பாக்குக் கடை, பீடி வத்திப்பெட்டி, சிகரெட், சுருட்டு, பெட்டிக்கடை......

தெருவில் நெரிசல் நிறைந்திருந்தது. வியாபாரம் மும்முரமாகியிருந்தது.

'எடு நாலேணா.... நாலேணா எடு.... நாலேணா..... '

பக்கத்துச் சாரியில் மாங்காய் கூறு கட்டியிருந்தவன் கத்திக் கொண்டிருந்தான். நடைபாதை யோரம் நலிந்துபோன 'மலிவு விலைச் ' சரக்குகள்; அழுகிய தக்காளி; வண்டரித்த மாம்பழங்கள்; ஈ மொய்க்கும் பலாச் சுளைகள்; உதிர்ந்து நொந்த திராட்சைப்பழங்கள். எல்லாம் கூறுகூறாக, மொத்தை மொத்தையாக.

'நேத்து ஒண்ணேகால் ரூவா வித்தது. அதுக்குள்ளாற வெலையேறிப் போச்சா ? '

'எதுதான் சார் நித்ய வெல விக்யுது. அது பெங்களூர் சரக்கு, இது நாடு சரக்கு சார். வெலையப் பத்தி பாக்காதீங்க; வாங்கிப் போங்க அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க '

'ஒண்ணும் பூச்சி கீச்சி இருக்காதே ? '

'பேசலாமா ? எண்ணை ஊத்தி வதக்கி மாத்தரம் கொழம்பு வச்சிட்டுப் பாருங்க.... அப்படியே தேன் மாதிரி கரையும் வாயில '

'சரி சரி கால் கிலோபோடு '

தெரு விளக்குகள் மாற்றி மாற்றி கண் சிமிட்டுகின்றன. கொஞ்சம் நிதானமடைந்து பிரகாசிக்கின்றன. ஏனோ ஒன்றிரண்டு விளக்குகள் எரிய மறுத்து விட்டன. இருந்தாலும் ஒளி தெருவில் வெள்ளம் பாய்ச்சியது. அரிசிக் கடைகளிலும், மளிகைக் கடைகளிலும் கூட்டம் கொஞ்சம் அதிகமாகவேயிருந்தது. ஜனங்கள் நெருக்கத்தில் அசைந்து கொண்டிருந்தார்கள்.

'படி எப்படிப்பா..... ' '

'படி ஏதுய்யா இப்ப...... எல்லாம் லிட்டர் தான் ' '

'இது என்னா அரிசி இது ' '

'கிச்சிலி சம்பா; ஆக்கிப் போட்டா சும்மா வாழைப் பழமாட்டம்; உள்ள எறங்கறதே தெரியாது.... '

'எப்பிடி.... ' '

'ரூவா அறுவது காசு..... '

'இதுவா.... ' '

'ஆருய்யா கஷ்டந் தெரியாத ஆளு நீ ' அங்கங்க மானங்காஞ்சி போய் அரிசியே வெளிய வரமாட்டென்னுது, கண்ணால பாக்கறதே அரிதா கீது. என்னமோ இதுவான்னு அலர்றியே ' '

'இது எப்படி.. '

'இது கார் அரிசி; தோசைக்கி. ரூவா முப்பது காசு '

'சரி ரெண்டு லிட்டர் போடு.... '

வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருந்தது பேரம் பேசுவோரின் குரல்களும், விற்பனையாளர்கள் அறைகூவல்களும் சாகசங்களும் சளசளவென்று ஒலித்துக் கொண்டிருந்தன.

'எடு நாலேணா சார் ' நாலேணா நாலேணா சார் நாலேணா '

'என்னா மீனும்மா இது.... '

'தெனம் வாங்கற '..... கானாங்கழுததான் ' '

'எப்பவும் இதே தானா.... ' '

'மழத்தண்ணியில்லாமெ புதுசா எங்கமா படுது.... '

'நொந்து கிந்து போயிட்டிருக்காதே.... '

'ம்.....நீ வேற.... திப்ப பொழுதாக பட்ட மீனும்மா இதெல்லாம்.... '

'அதோ அந்தக் கூற எடு..... '

கூட்டம் உழன்று கொண்டிருந்தது. சுற்றிச் சுற்றி... ஏதோ ஒரு வட்டத்துக்குள்ளேயே வலம் வருகிற மாதிரி பார்த்த முகங்களே மீண்டும் மீண்டும் தோன்றின. புதுப்புது முகங்கள் நெரிசலில் கலங்கின.

மீன்கடைப் பக்கம் தான் என்ன கோலாகலமான காட்சிகள். கலர் கலராக.... விதம் விதமாக.... பாஷன் பாஷனாக... ஹேர் ஸ்டைல்தான் எத்தனை விதம்.... ' அழகழகான கண்கள், அழகழகான முகங்கள் மறக்க முடியாத கோணங்கள்.....

'ஏமா சென்னாகுன்னி யிருக்குதா.... ' '

'ஆமா இப்பல்லாம் எங்க பெரிய எறாவையே காணம்..... '

'நண்டு எப்படிமா...த...த... ஓடுது பார். புடி; புடி... கால சரியா கட்டலியா.... '

மீன் மார்க்கட்டுக்கு அப்பால் உலர்ந்த சரக்குகள், இந்தப் பக்கம் தகரக்கடை, மருந்துக்கடை, பெயிண்டுக்கடை, பாக்கு புகையிலை மண்டிகள் வரிசையான பூக்கடைகள்.

'எடு நாலேணா எடு.... நாலேணா சார் நாலேணா..... '

சந்திப்பு சந்துஷ்டியால் நிரம்பி வழிந்தது. 'ணிங்....ணிங் ' என்று மணியடித்தவாறு வரும் சைக்கிள்கள் சந்து பொந்துகளில் புகுந்து சர்க்கஸ் வித்தை போல ஓடின. இன்ஸ்பெக்டர் இன்னும் அங்கேதான் நின்று பேசிக் கொண்டிருந்தார். நியூ சினிமாவில் முதலாட்டம் ஆரம்பித்து விட்டதன் அறிகுறியாக ஹ்உஸேன் பாய் டெய்லர் கடை வரைக்கும் நின்றிருந்த கியூ மறைந்து ஒழிந்தது. வீலில் சிக்குகிற அளவுக்கு நீளமாக ரெட்டைக் கரைத் துண்டு போட்ட நகரக் கவுன்சிலர் ஒருவர் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும், சைக்கிளில் போனவாறே 'நமஸ்காரங்க ' என்று கையை உயர்த்திக் காட்டியபடி மிதப்போடு சென்றார்---- விளக்கில்லாமல் தான்....

பதிலுக்கு இன்ஸ்பெக்டர் லேசான புன்முறுவல் பூத்து ஸ்டைலாக தலையை அசைத்துக் காட்டி வணக்கம் தெரிவித்தார்.

'எடு நாலேணா சார் ' நாலேணா... '

வாய் வலிக்கக் கத்திக் கொண்டிருந்தவன் சோர்ந்துபோய் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். குரல் கரகரத்து ஒலிக்க, மீண்டும் கத்த விரும்பாதவன் போல வெறித்த நோக்கில் ஜனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மாம்பழ மண்டிகளில் வாழைப் பழ தார்கள் அடுக்கியிருந்தார்கள். தெரு முடக்கிலிருந்த தமிழ் மருந்துக் கடையில் பன்னீர், சந்தனம், ஊதுவத்தி, ஜவ்வாது குங்குமப்பூ, வாசனைகள் கணபதி விலாஸ் மசால் தோசை மணத்துடன் சங்கமித்து என்னவோ மாதிரி மூக்கை வருடியது.

வலப்பக்கம் தெருவில் நட்டிருந்த கழிக்கொம்பில் தீவட்டியாட்டம் எரியும் காடாவிளக்கை மாட்டி விட்டு, மூட்டை அவிழ்த்து கடை விரித்த ஏலக்காரன், முதல் போணியை உற்சாகமாகத் தொடங்க ஆரம்பித்தான்.

'அருமையான நைலக்ஸ்; அழகான பூப்போட்டது. ஏக்கிளாஸ் டிசைன்சார். முக்கா மீட்டர். ஓல்டு மாடல்னா ஒரே ரவிக்கதான். லேட்டஸ்ட் மாடல் லோ கட்டுன்னா ரெண்டு....கடையில எடுத்தா ஒம்பது ரூபா, இப்ப இதும் வெல ஒரே ருபா சார்.... ஒரு ரூபா..... '

'ஒண்ணே கால்..... '

'ரூபா ஒண்ணே கால்.... ஒண்ணே கால் ரூபா '

'ஒண்ணரை.... ' '

'ரூபா ஒண்ணரை '

'ஒண்ணே முக்கால் '

'ஒண்ணே முக்கால் '

கூட்டம் லேசாகக் கரைந்த மாதிரி தெரிகிறது. சாலை கொஞ்சம் அமைதியில் விசாலமிட்டது. பரவலாக தெருவில் நடந்த ஜனங்கள் சிறுசிறு கும்பலாக கடைகளுள் குழுமியிருந்தார்கள். விற்று முடித்த தட்டுக் கூடைகள் வியாபாரத்தை ஏறக்கட்டின. மீன் மார்க்கெட்டில் கலகலப்பு ஓய்ந்தது. 'எடு நாலேணா ' நாலேணா ' சார்; நாலேணா ' ' ஒன்றும் திருப்தியில்லாத வியாபாரமாக இனிமேலும் எதுவும் விற்காது என்று சோர்வோடு சாக்கைச் சுருட்டினான்.

'அப்போ நான் வரட்டுங்களா ? '

சைக்கிளில் ஏறி உட்கார்ந்து இடது காலைத் தரையில் ஊன்றி வலது காலை பெடலில் வைத்துப் புறப்பட யத்தனித்தவராகக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'செய்யுங்கோ ' பவ்யமாக தலையை தாழ்த்தி கைகளை நெஞ்சு பக்கம் கொண்டு வந்து, வழியனுப்பும் வார்த்தையை உதிர்த்தார் செட்டியார். இன்ஸ்பெக்டர் புறப்படாமல் தெருவில் எதையோ உறுத்து நோக்கினார்.

அங்கே ஒரு சின்னப் பையன் அவசர அவசரமாக சைக்கிளிலிருந்து இறங்கி நிதானத்தோடு தள்ளிக் கொண்டு வந்தான்.

'டாய்.....இங்க் வா..... ' '

குரலைக் கேட்டு பையன் நடுங்கி விட்டிருக்க வேண்டும். பயந்து போனவனாக, அடக்கமாக இன்ஸ்பெக்டரிடம் தள்ளிக் கொண்டு வந்தான். சோர்வடைந்த கண்களில் மிரட்சி; நாள் முழுக்க சைக்கிளில் அலைந்து திரிந்த களைப்பின் அறிகுறிகள். கேரியரில் ஒரு பெயிண்ட் டின். குறுக்கே ஒரு பிரஷ். பையன் எங்காவது பெயிண்டர் கிட்டே வேலை செய்கிறானோ என்னவோ பார்க்கப் பரிதாபகரமாயிருந்தான்.

'ஏண்டா வெளக்கில்லாம வந்த..... ? '

'........... '

'என்னாடா முழிக்கற சரி சரி வால்ட்யூபப் புடுங்கு ' ' வார்த்தைகள் அதிகாரத் தோரணையில் ஒலித்தன.

'சார் ' குரல் கெஞ்சியது. 'பசாத்து வரைக்கும் போவணம் சார்.... கையில் காசி கூடம் இல்ல சார் காத்தடிக்க.... '

இன்ஸ்பெக்டரின் முகத்தில் கொஞ்சம் இரக்கத்தின் சாயல். அதே சமயம் அவர் ஒரு மிடுக்கோடு சுற்றிலும் பார்வையை ஓட்டினார். அவர் முகம் மாறியது. தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தவர்கள் அங்கங்கே நின்ற வாக்கில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள். 'என்னாடா தபாய்க்கற---- சொன்னத செய்..... ' '

'இல்லசார்... இனிமே.... '

இன்ஸ்பெக்டருக்கு ஸ்வரம் ஏறிவிட்டது. 'ப்ளாக்கார்ட்ஸ்.... மரியாதையா சொன்னா கேக்கமாட்டானுங்க.... கீழ எறங்கி கழுத்துல நாலு வக்கணும்... அப்பத்தான் புரியும்.... '

பையன் அதிர்ந்து போனான். கண்களில் கலவரம் கசிவு நீர்; நிராதரவு. அவன் ஒன்றும் பேசவில்லை.

சுற்றியிருந்தவர்கள் சும்மாயில்லை.

'ஏண்டா...ஐயா தான் சொல்றாரே புடுங்கிட்டுப் போயேன் '.

'சே ' பசங்களுக்கு வர வர மரியாதையே தெரியமாட்டன்னுது. யார் யார் கிட்ட எப்பிடி நடந்துக்கிறதுன்னு ' செட்டியார் பக்க வாத்தியம்.

'தம்மத் தோண்டு இருந்தாலும் ஆணவத்தப் பாத்தியா ? எங்கன்னா வணங்கறானாப் பாரேன் '

'ப்ச்சங் அடிச்சிடப் போராரு புடுங்கிட்றா '

பையன் அழுது கொண்டே குனிந்து வால் டியூபைப் பிடுங்கினான்.

'புஸ் 'ஸென்று வெளியேறிய காற்றில் இன்ஸ்பெக்டரின் ஸ்வரம் இறங்கியது. முகத்தில் சாந்தம்.

'கொண்டா இப்பிடி ' இன்ஸ்பெக்டர் வால்வை வாங்கிக் கொண்டார்.

'சார் ' சிறுவன் தேம்பினான்.

'இனிமே வெளக்கில்லாம வரமாட்டியே '

சிறுவன் இல்லையென்று தலையாட்டினான். இன்ஸ்பெக்டர் வெற்றிப் பெருமிதத்தில் எழுந்த லேசான புன்முறுவலுடன் வால்வை பையன் கையில் கொடுத்து விட்டார்.

அவர் சைக்கிள் 'விர் 'ரென்று பறந்தது விளக்கில்லாமல் தான்.

காற்றுப் போன டியூபால் இளைத்துப்போன டயர் தடக்...தடக்கென்று ஒவ்வொரு சுற்றுக்கும் ஒலியெழுப்பி சிணுங்க, கண்களில் வழியும் நீரைத் துடைத்தபடியே சைக்கிளைத் தள்ளிப் போய்க் கொண்டிருந்தான் சிறுவன்.

'தடக்...தடக்... ' சத்தம் நெஞ்சைப் பிளப்பது போலிருந்தது. துயரம் தோய்ந்த கண்களால் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

'சார். போட்டுப்பாருங்க ' குரல் என்னை என் செறுப்பு உலகத்துக்கு அழைத்தது.

# போய்க் கொண்டிருப்பவள்

**வண்ணதாசன்**

கன்னங்கரேல் என்று சிறு சிறு குமிழ்களுடன் அசைவே அற்றுப் பல வருடங்களாகக் கிடப்பது போன்று தோன்றுகிற அந்தச் சாக்கடையைத் தொடர்ந்து போனாவே ஜ்உடி வீடு வந்து விடும்.

மூன்றாவது தடவையோ, நான்காவது தடவையோ இந்த ஊருக்கு வருகிற சமயம் வந்து எட்டிப் பார்க்கிற எனக்கே எப்படியோ அருவருப்பாக இருக்க, அதென்னவோ ஒரு காம்பவுண்ட் சுவர் மாதிரி நொதித்துக் கிடக்கிற சாக்கடை பற்றிக் கவலையற்று இந்த வீட்டுக்காரர்கள் நடமாடுகிறார்கள். இரண்டு மூன்று முட்டைத் தோடு, இப்போதுதான் எறியப்பட்ட பளீர் வெள்ளையுடன் அந்தச் சாக்கடைக் கருப்பில் வினோதமாகக் கவனம் பெறுகிறது. ஒரு வதங்கிய பூச்சரம் வேறு. இப்படி அற்பமாகக் கவனம் சிதைக்கிற சிலவற்றைத் தாண்டித்தான் அன்னம் ஜ்ஊடி வீட்டிற்குப் போக வேண்டியதிருக்கிறது.

ஜ்ஊடியைப் பார்க்க முதலில் விருத்தா கூடத்தான் வந்தேன். விருத்தா அல்லாமல் இந்த அன்னம் ஜ்ஊடியை அறிந்திருக்க எனக்கு எந்த முகாந்திரமுண்டு. இன்னொரு ஸ்டூடியோவில் வேலை பார்த்துக் கொண்டு கல்யாண வீட்டுப் புகைப்படங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருந்த விருத்தாவும் நானும் சிநேகிதர்களாகி விட்டது இந்த வாழ்க்கையின் எத்தனையோ விசித்திரமான உண்மைகளில் ஒன்று.

என் அலுவலக சகா ஒருவனின் கல்யாணத்திற்குப் புகைப்படம் எடுத்த இவன். ஏதோ ஓர் கோளாறால் வரவேற்புப் புகைப்படம் ஒன்றுகூடப் பதிவாகவில்லை என்ற சங்கடமான விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருந்த தினத்தில்தான் அறிமுகமானேன். என் அந்த சகாவே அதிகம் கவலைப்படாதிருந்த போது, இனிமேல் மறுபடியும் திரும்ப வர முடியாத அந்த வரவேற்பு வேளைக்காக விருத்தாசலம்தான் திரும்பத் திரும்ப அதிகம் வருந்தினான்.

'இது மாதிரி நூறு சாயங்காலம் வரும்ங்க சார். ஆனால் கல்யாணம் ஆகிற சாரோட முகத்திலிருக்கிற, முழுப் பகலோட சந்தோஷம், களைச்சுப் போனாலும் துடைச்சுத் துடைச்சு மேலே வருகிற ஒரு குதூகலம், என்னண்ணு தெரியாத ஒரு பதட்டம், சில செயற்கையான அசைவு, கையை இப்படித் தூக்கறத்துக்குப் பதிலா கொஞ்சம் வீசி மடக்கித் தூக்குவீங்க. கடியாரத்திலே மணி பார்க்கிறதுகூட ஸ்டைலா இருக்கும். வழக்கமாச் சிரிக்கிறபோது கவுந்து சிரிச்சா, இன்றைக்குத் தலையைத் தூக்கி கனம்மாச் சிரிக்கிறது. பக்கத்திலே எட்டிப் பாக்கிற குட்டிப் பிள்ளைகளை வளைச்சு செல்லங் கொஞ்சுகிறது. இப்படியாப் பட்ட முகம் மறுநாள் வருமா. ரெண்டு நாள் கழிச்சா வருமா, வராதே. போச்சுங்களே ஸார். தப்பா போச்சே '-- இப்படித்தான் பேச்சை என்னிடம் ஆரம்பித்தான். அவனுடைய தவிப்பும், அதை முழு ஈடுபாட்டோடு சொன்ன விதமும் எனக்குப் பிடித்துப் போயிற்று.

இதைத் தவிர அவனுக்குப் புத்தகங்கள் பற்றியோ, எனக்குக் காமெராக்களின் நுணுக்கம் பற்றியோ ஒருவர்க்கொருவர் பற்றிக் கொள்ளும் படியாக எந்தத் தூண்டுதலும் மத்தியில் இல்லை. அவரவர் விஷயங்களின் உன்னதமான சிகரங்களை நோக்கியே கவலையாவது எங்கள் இரண்டு பேருக்கும் அவரவர் இடமாவது தங்கியிருந்ததா என்று கேட்டால் கூடச் சொல்ல முடியாததுதான்.

விருத்தா ஒரு அற்புதமான கலைஞன் என்று எனக்குத் தோன்றச் செய்தது. அந்தப் புகைப்படம் ஒன்றைப் பார்த்ததும்தான், வில் வண்டிக்குள் ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறது போன்ற அற்புதமான படம். பாதையோ, முன்புறம் பூட்டியிருக்கிற காளைகளோ, வண்டிக்காரனோ, விழுந்து தொலைவுக்கு இட்டுச் செல்கிற தெருவோ எதுவும் தெரியவில்லை. வில்வண்டி உட்பகுதியின் வளைந்த பிரம்பு வரிசைகள் கொஞ்சம் தெரிகிறது. அந்தப் பெண்

வண்டிக்குள் இருக்கிறாள். இவ்வளவுதான். இதை அவன் எடுத்திருந்த விதத்தில் ஏதோ ஓர் மாயமிருந்தது. அந்த வண்டி நகர்வது தெரிந்தது. பாதையில் இருக்கிற சிறிய நொடியொன்றில் கடக் என்று சக்கரம் இறங்கி ஏறுகையில் வண்டியின் விட்டத்திலிருந்து தொங்குகிற கைபிடிக் குஞ்சலம் ஆடி மோதுவது தெரிகிறது. அந்தப் பெண், பார்க்கிற ஒவ்வொருவரிடமிருந்து விடைபெற்றுத் தவித்துக் கொண்டு செல்வது தெரிந்தது. தனிமையின் அடர்வுக்குள் இருந்தும், அவள் நம்பிக்கையுடன் இந்த வாழ்க்கையை நேசிக்கிறதே உகந்தது எனத் தீர்மானித்துக் கொண்டுவிட்ட பாவனை தெரிந்தது. இளகிப் பரவிக் கொண்டிருக்கிற பார்வையில் வண்டியிலிருந்து அப்படியே அவளைக் காப்பாற்றி அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டுவிடச் சொல்லும் ஒரு அபூர்வமிருந்தது. எப்படியெல்லாமோ கிளர்ச்சியூட்டிக் கடைசியில் அணைத்துக்கொள்ள வேண்டும் எனக்குப் பட்டதை வெளிக்காட்ட முடியாத ஒரு தனித்த பரவசத்தில் நான் அமைதியாக இருந்தேன்.

அவள்தான் அன்னம் ஜ்ஊடி. இந்தப் பெயரை வெகுகாலத்திற்குப் பின்தான் விருத்தா எனக்குச் சொன்னான் அவளுக்கும் மாடியில் இருந்த அவனுக்கும் இருந்திருந்த புரிபடாத உணர்வுகள் காதல்தான் என்பதை நான்தான் ஒரு நேரத்தில் உடைத்துச் சொன்னேன். நிறையப் புத்தகம் படித்த பாவத்தில், நான் அறிந்துவைத்திருந்த கதைக்கான சூத்திரங்களையும் வாய்ப்பாடுகளையும் போட்டு பார்க்கையில் எனக்கு வந்த விடை அதுவாக இருந்ததால் அப்போது அப்படிச் சொல்லிட, சொன்ன நேரத்திலிருந்து, ஆமாம் அப்படித்தான் என்று அவர்களும் ஒப்புக் கொண்டுவிடப் பெரிய சிக்கலாகி விட்டது எல்லாம்.

அன்னம் ஜ்ஊடிக்கும் விருத்தாவுக்கும் இடையில் நானும் இது பற்றிப் பேச நேர்கிற சந்தர்ப்பங்களை விருத்தாவே உண்டாக்கித்தர, அவளைப் பார்த்து விட்டுப் போன பையனை நிராகரித்து அனுப்பி வைக்கத் தோதுவான கற்பனை வாசல்களை நாங்கள் மூன்றுபேரும் ஒவ்வொரு பக்கமும் திறந்து திறந்துவைத்துப் பார்த்தோம். நடப்பில் ஒன்றும் பிரயோஜனமில்லை. அறிக்கை வாசித்ததின்படி, அந்தக் குருடர் பள்ளிக்கூடச் சர்ச்சில், முற்றின சோளக் கதிர்கள் குளிர்ந்த காற்றில் அசைந்து ஆட, இதமான வெயிலில், புழுக்கத்தில் மேன்மேலும் வழவழப்பான மரப்பெஞ்சு ஒன்றில் நானும் விருத்தாவும் அமர்ந்து, கையில் கொடுக்கப்பட்ட அச்சடித்த சிறுபுத்தகங்களுடன் பாட்டுப்பாடிச் சேர்ந்து கொள்ள, அன்னம் ஏதுமறியாத ஒரு வெள்ளை இறகுபோலக் கனமற்று திருமணச் சடங்குகளில் மிதந்திருந்தாள்.

முற்றிலுமாகவே அவள் அந்த தினத்துக்குள் பணிவன்புடைய ஒரு மனைவியாக மாறி எங்களையெல்லாம்கூட அறிமுகப்படுத்தி வைத்தாள். கனவான்களுக்கு மத்தியில் கனவான்களாக நடக்கிற மரபை ஒட்டி, நான் அன்னம் ஜ்ஊடி என்றுகூட எழுதாமல் திருமதி, சந்திரன் தேவநேசன் என்று ஜாக்கிரதையாகப் புத்தகத்தில் எழுதிக் கொடுத்தேன். விருத்தா புகைப்படக்காரன் என்பதால் என்னைவிடப் பிரகாசிக்க முடிந்தது. அவர்களை வெவ்வேறு தோற்றங்களில் மிகச் சலுகையான நெருக்கத்தில் எடுத்துக் கொண்டிருந்தான்.

புகைப்படம் எடுக்கும்போது ஒவ்வொரு தடவையும் அவன் வேறு மனிதனாகி விடுகிறான். நான் ஒருவன் நிற்கிறேன் என்றோ அவள் அன்னம் என்றோ, அவர் இன்னார் என்றோ நினைக்கிறதை ஒழித்து வெவ்வேறு பரிமாணங்களுக்கு அந்த புகைப்படத்தை இட்டுச் செல்கிற முழுக் கவனத்துடன் இயங்குவான். புன்னகைக்க வைக்கிற கோணங்கித் தனங்களைப் பிறர்போல பிரயோகிக்காமல் நெற்றி இறுகி இறுகி புருவமத்தியில் ஒரு பள்ளம் விழுந்து கொண்டே போக, எதிரிலிருப்பவர்களை அவர்களின் பாவனைகளிலிருந்து உதறி எடுத்த ஒரு சட்டென்ற நொடியில் பிடிப்பான். சேலை மடிப்புகளை நீவிவிடுவது, காலணி மேல் மடங்குகிற கால்சட்டைகளை ஒழுங்கு செய்வது போன்ற எதுவுமின்றி ஆடைகள் எல்லாம் இடையூரு

அல்ல ஒரு நல்ல புகைப்படத்திற்கு என்ற வகையில் இயல்பின் சுபாவமான அவிழலில் எல்லாம் அதனதன் இடத்திலிருக்க, ஒவ்வொரு முகத்துக்கும் ஒரு ஜீவனை வருத்தியிருப்பான்.

ஆல்பத்திற்கு அல்லாமல் அவனுடைய சொந்தத் தேர்விற்கென்று வைத்திருக்கும் புகைப்படங்களில் ஜ்ஊடியின் அந்தக் குருடர் பள்ளி சோளக்கதிர் பக்கம் நின்று காகித மாலையணிந்த வாடகைக் காரை ஒட்டிய புகைப்படமும் இருந்தது.

அது அவள் நடந்து செல்கிற தோற்றத்தில் கைகளில் சரிந்த சேலையை முழுவதுமாக அள்ளி மறுபடி மேலே வீசிக்கொள்கிற நேரத்தின் படம். ஒரு கை தோளுக்குச் சென்று கொண்டிருக்க, ரவிக்கைக்கு முழுக் கனத்தைக் கொடுத்திருந்த மார்பும், தோளின் செழுமையும் பக்கவாட்டில் தெரிய, புடவை ஒரு சந்தோஷமான பாய்மரம் போலப் பின்பக்கம் விசிறி அந்தரத்தில் இருக்க, அவள் கண்கள் மூடியிருக்கும். வாய்கொள்ளாத சிரிப்பில் கன்னத்து ரோஸ் பவுடர் பூச்சுத் திரண்டு மேடிட்டு ஓரிரண்டு ஜிகினா மினுங்கும்.

விருத்தா அதைக் காட்டுகையில் சொன்னான். 'கண்ணை மூடியிருக்கிறது எவ்வளவு வாய்ப்பா இருக்கு பாரு '. 'வாய்ப்பாக ' என்கிற அந்த வார்த்தையின் சுகத்தில் அமிழ்ந்திருக்கையில், மூடின கண்களை எல்லாம் தாண்டி, மறுபடியும் அந்தப் புகைப்படம் எனக்கு அணைத்துக் கொள்வதையே யோசிக்க வைத்தது. இப்படித் தோன்றுவதும். அப்புறம் அவரவர் பாடுகளைப் பார்க்கத் தீராது அலைவதில் எல்லாம் சரியாகப் போவதும் நியமமாகிப் போயிற்று.

ஆபீஸ் வேலையாக நாடாக்கட்டின தாட்களையும் அட்டையையும் இந்தப் பட்டணத்து மேஜைகளில் நகர்த்தி, இரண்டு மூன்று பச்சைக் கையெழுத்தை வாங்கி முத்திரை குத்தி மறுபடி கட்டிவைத்து இன்னொரு அலுவலக ஊழியரின் சொசைட்டி லோனுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, எலெக்ட்ரிக் ட்ரெய்னில் தொங்கின தொங்கலுக்கு எளிமையான ஆசுவாசமாகப் பன்னீர் சோடா குடித்துக் கொண்டிருக்கிறவரை இன்றைக்கு அன்னம் ஜ்ஊடி பற்றி எந்த நினைப்புமில்லாமலே இருந்தது.

அப்படிக் குடித்துக் கொண்டிருந்தபோது தான் 'ஹலோ... ' என்று நான் கல்யாணத்துக்குப் பரிசளித்த புத்தகத்துப் பெயரையும் என்பெயரே போலச் சொல்லிக் கூப்பிடுகிற தேவநேசனின் குரல் கேட்டது. லட்சியங்களின் உன்னத விளிம்புகளை ஒரு எவ்வு எவ்விப் பிடிக்கச் சொல்கிறதுபோல ஒரு புத்தகத்துக்கு மிகப் பொருத்தமாக இருந்த அந்தப் பெயரை, என் பெயராகச் சொல்லி கூப்பிடும் பொழுது ஒரு கிண்டல் தானாகவே கிடைத்தது. இப்படி என் பெயரை விட்டுவிட்டு நான் பரிசளித்த புத்தகத்தின் பெயரையே சொல்லிக் கூப்பிடுகிற இவருடைய வழக்கத்தை எப்படி எடுத்துக் கொள்ள ?

இந்தக் கிண்டல் போதாமல் ஏற்கனவே இவரைப் பற்றி, விருத்தா கூறியிருக்கிற விஷயங்களாலும் இவர் மீது கோபம் அடைந்திருக்கிற நான் 'அடடே, வாங்க ' என்று அகலமாகச் சிரித்ததுதான் கொடுமையான விஷயம். அலுவலகத்தில் வேலை பார்க்க எவ்வளவு கேவலமான சாயல் எல்லாம் வந்து சேர்ந்து விடுகிறது.

பின்னே இவன் என்ன மனுஷன் ?

அன்னம் ஜ்ஊடிமாதிரி ஒரு பெண் கிடைத்திருக்க, இவனோ எனில் வெவ்வேறு வக்கிரங்களுடன் திரிகிறானாம். கல்யாணம் ஆன ஆரம்ப தினங்கள் என்று எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டிருந்த அன்னத்துக்கு, அவனுடைய ஒவ்வொரு காரியமும் தாங்க முடியாத

இம்சையாகி விட்டதாம். வேளை பாராமல், நாள் பாராமல் இவளைத் தின்று தீர்ப்பது போக, இரண்டொரு சிறுபையன்களுடனேயே திரிவதன் அசிங்கம்தான் அன்னத்துக்கே தாங்க முடியாதிருக்கிறதாம்.

'மடியிலே கிடந்துக் கிட்டு அப்படியே பச்சைப் பிள்ளை மாதிரி அழுதா. சும்மா தட்டிக் கொடுத்துச் சின்னப் பிள்ளையக் கண்ணைத் துடைச்சு விடுகிறது மாதிரித்தான் இருந்தது முதல்லே '-விருத்தா அன்றைக்கு அதற்கு பிறகு சொல்லுவதை இப்படித்தான் ஆரம்பித்தான். கலர் பிரிண்ட் போட என்று வருகிற போதெல்லாம் விருத்தா அன்னத்தைப் பார்ப்பது என்றாயிற்று. மாற்றியும் சொல்கிற அளவுக்கு இருக்கும் என்றே எனக்குப் பட்டது. என் இஷ்டத்திற்குப் பூர்த்தி செய்து கொள்ளும்படியாக அவன் இடையிடையில் காலியிடங்களைத் தந்தே வந்தான்.

'அந்த ஆளை, அவனோட தீராத இம்சையைப் பொறுக்காமல் கூனிக் குறுகிக் கட்டையாய்க் கிடந்து கிடந்தே இந்த ரெண்டு மூணு வருஷமும் கழிஞ்சு போச்சு. கல்லைப் புரட்டிப் போட்டு வாசலை அடைச்சது மாதிரித்தான் 'னு கூட வச்சுக்கலாம். நிச்சயமாச் சொல்வேன். நாளைக்கு ஒண்ணு பொறந்துச்சுன்னா, அதுக்கும் உனக்கும்தான் பேச்சு. '--அன்னம் தன் அடிவயிற்றில் கையை வைத்துக் கொண்டு விருத்தாவிடம் சொன்னதெல்லாம், விருத்தா திருப்பி என்னிடம் சொன்னான்.

அங்கங்கே நட்டுச் செல்வதற்கு வசதியாகப் புத்தகம் படிக்கிறவன் கணிசமாகத் தன் கையில் திசைகாட்டிகள் வைத்திருப்பான் என்று விருத்தாவிடம் எதிர்பார்ப்புகள் இருந்தன. ஒழுங்காகத் தாலிகட்டிக் குடித்தனம் நடத்தி நல்ல பெயர் எடுத்துக் கொண்டிருக்கிறவனான எனக்கு விருத்தாவிற்குச் சொல்லப் புதிய புதிய யோசனைகள் தோன்றிற்று.

'நான் ஏன் அன்னத்தைக் கட்டிக் கொள்ளக்கூடாது ? ' என்று லேசாகக் கேட்பான் எனில், விருத்தாவிடம் அழுத்தம் திருத்தமாக இவ்வளவு நடந்ததற்கும் பிறகு, இப்படி நடந்ததற்கான பொறுப்பேற்காவிடில் உனக்கும் அந்தத் தேவநேசனுக்கும் வித்தியாசம் இருக்காது என்றே சொல்ல முற்பட்டேன். குழந்தை பெறுவதற்கு முன்பு அப்படிச் செய்வதா, அல்லது பெற்ற பின்பா என்று அதிலுள்ள சட்டப் பிரச்சனைகள் பற்றி விருத்தா கேட்டதும், இதை ஏன் அவளிடமே கேட்கக்கூடாது என இரண்டு பேருமாக நேரே புறப்பட்டோம்.

அப்போது தான் அன்னம் ஜ்ஊடி வீடிருக்கிற இந்த இடத்திற்கு வந்தது. சாக்கடையைத் தாண்டி உள்ளே போனதும் அப்போது தான்.

விருத்தாவுடன் இந்த வீட்டுக்குள் நுழைந்த போது அன்னம் கிணற்றிலிருந்து இன்னோர் பெண்ணுடன் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். சாக்கடையா, உறை இறக்கிய கிணற்றிலிருந்து வாரிக் கொட்டியிருந்த சேற்று வாடையா என்றில்லாத ஒரு தண்ணீர்க் கரை வாடை அடித்தது. பிளாஸ்டிக் குடம் ஒன்றை இறக்கி வைத்துவிட்டு எங்களை வரவேற்றாள்.

இது ஜ்ஊடியல்ல. வேறு யாரோ என்றிருந்தது எனக்கு; நாலு பிள்ளை பெற்றவள் போலிருந்தாள். மினுமினுப்பனைத்தும் உதிர்ந்து ரசமற்று உலர்ந்திருந்தது உடம்பு. மிகவும் அசிரத்தையாகச் சுற்றப்பட்டிருந்த சேலையுடன் குனிந்து இரண்டு மோடாக்களை அவள் இட்டபோது புறங்கழுத்திலும் மேல் முதுகிலும் பொரிப் பொரியாக வெடித்திருந்தது. ஒரு உயரமான இரும்பு ட்ரங்குப் பெட்டியில் அவள் எப்படியோ ஒரு வசத்தில் உட்கார முற்பட்டபோது வயிற்றின் பூச்சு மேடிட்டது.

விருத்தாவும் அவளும் பேசினார்கள். இவன் என்னைப் பற்றி அவள் எதுவும் கேளாமலே, தற்செயலாக நான் வந்ததாகச் சொல்ல, பதிலுக்கு அவள் அதைவிட முக்கியமற்றதாக இன்னொன்று சொல்ல, எனக்கு மட்டும் இவளா, இவளையா என்று வட்டம் சுழன்று சுழன்று நின்றது. கொடிகள் முழுவதும் துணிகளும் சட்டைகளுமாய் அடைந்து தொங்க, இந்தப் புழுங்கிய இரண்டு அறைகளே உள்ள வீட்டில் அன்னத்தைக் கொண்டு வந்து ஆகாதது போகாததை எடுத்துப் பரண்மேல் வீசுகிறது மாதிரி வாழ்க்கை வீசியிருப்பதிப் பார்க்கத் துயரமாயிற்று.

நானும் பேசனேன். அவள் எதையோ குடிக்கக் கொடுத்து உபசரித்தாள். குடித்தோம். எது பற்றியும் பேச ஒன்றுமில்லை என்பது போலவும், அந்தச் சாக்கடையை இரண்டு தடவை தாண்டுவதற்காக மட்டும் ஊரிலிருந்து புறப்பட்டு வந்தது போலவும், ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டோம்.

இரண்டு பையன்கள் பாடப் புஸ்தகங்களுடன் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன்தான் 'அக்கா, யாரோ வந்திருக்காங்க ' என்றான்.

கலர் தாள்களில் ஏதேதோ வெட்டி ஒட்டிக் கொண்டிருந்த கையுடன் ஜ்ஊடி நிமிர்ந்தாள். 'வாங்கண்ணா ' என்றாள். இப்போது இரண்டு முறையாகத்தான் இப்படிக் கூப்பிடுகிறாள். கண்களின் புரண்டு திரும்பிய விரியலில் சிறு பிரகாசம் ஏறியது. உட்கார்ந்திருந்த இடத்தின் ஜன்னல்கள் இரண்டும் மூடியிருக்க, சமையலறைப் பக்கத்திலிருந்து வந்த வெளுச்சம் மட்டுமிருந்து, எங்கே உட்கார்வது என யோசித்துக் கொண்டும், ஜ்ஊடியைப் பார்த்துக் கொண்டுமிருந்தேன்.

பவுடர் டப்பாக்களைப் பிரித்து அடித்த தகர முற்றத்தில் கீரையும், பாதி அளவு பின்னி வரி வரியாக நைலான் ஒயர்கள் முடியக் காத்திருக்கிற நிலையில் ஒரு மஞ்சட் பையும் இருந்தன. அதை இடம் மாற்றிக் காலியாக்கினதும் என்பக்கம் உட்கார நகர்த்தினாள்.

'அப்புறம் சொல்லித் தாரேன் ' என்று சொன்னதும் பையன்கள் சரி சொல்லிக் கொண்டு புத்தகங்களை ஒழுங்கு செய்தார்கள். கீழ்த்தாடையும் கழுத்தும் தீக்காயம் ஏற்பட்டது போல வழுவழுவென்று கையகலம் சுருங்கி ஒட்டியிருக்கிற பையன் என்னைப் பார்த்த படியே போனான்.

'ட்யூஷனா ' என்றபடி இன்னும் உட்காராமலே நான் ஜ்ஊடியைப் பார்த்தேன். அவள் ஒரு மூலையிலிருந்த டேபிள் ஃபேனைச் சிரத்தையுடன் தூக்கி வைத்து இணைப்புக் கொடுத்துக் கொண்டே 'பொழுது போகணுமல்லவா ' என்றாள். எந்த அதிகப்படியான கனமுமல்லாத இந்த சாதாரண பதிலைத் தொடர்ந்து அவள் அழுவாள் என எதிர்பார்க்கவில்லை. மிக மெல்லிய ஒரு இழையில் அவளின் கஷ்டம் முழுவதும் முட்டிக் கொண்டு நின்றது போலவும், அந்தப் பதிலின் சிறு அதிர்வே, அது உடைந்து பெருகப் போதுமானதென்றும் தோற்றம் தர அப்படியே மடங்கி உட்கார்ந்து அழுதாள்.

இந்த சூழ்நிலைக்கெல்லாம் நான் தயாராகவே வரவில்லை. காலையில் பன்னீர் சோடாக் குடிக்கும் நேரத்தில் தேவநேசன் என்னைப் பார்க்கும் பொழுது, 'அதே வீட்டிலதான் இருக்கோம். இங்கேயிருந்து தான் பாசஞ்சர்ல போயிட்டு வந்திட்டு இருக்கேன். மட்டன் எடுத்து வைக்கிறேன். காலையிலே வீட்டுக்கு வாங்க... ' என்று எலெக்ட்ரிக் ட்ரெயினைப் பிடிக்கப் போகிற அந்த அவசரத்திலும் நான் பரிசளித்த அந்தப் புத்தகப் பெயரையே

என்னுடையதாகச் சொல்லிக்கொண்டு, முகத்தைப் பின்பக்கமாகப் பொருத்திக் கொண்ட ஒரு உருவத்துடன் நகர்ந்தார். 'நாளைக்குக் காலையில் இல்லை உடனடியாக அப்போதே ' என்று தீர்மானித்துக் கொண்டு, ஒரு மிகத் தனிமையான ஜ்ஊடியுடன் சற்று நேரம் பேசுகிற திருப்திக்காக வந்த இடத்தில் இந்த அழுகை ஒரு வினோதமான இக்கட்டில் நிறுத்தியது.

'ரெண்டு வருஷமா எல்லாத்தையும் மறந்துட்டு அவங்க அவங்கபாடு அவங்களுக்குன்னு இருந்தோமில்லையா. இப்போ எதுக்கு இந்தமாதிரி ஒரு போட்டோவைப் பத்திரிகைக்கு அனுப்பி எல்லாரு முன்னாலியும் என் மானத்தை வாங்கணும். '

ஜ்ஊடி காலை மடக்கிய நிலையில், கழுத்தை திருப்பி இடது தோளில் அடிக்கடி கண்ணீரைத் தேய்த்துத் தேய்த்துத் துடைத்துக் கொண்டு குழறிக் குழறிச் சொல்கிற எதுவும் எனக்குப் புரியவில்லை.

'அவங்க ஸ்டுடியோ வைக்கிறது, முன்னுக்கு வர்றது, கல்யாணம் கட்டுறது, புள்ளையப் பெத்துக்கறது. இதெல்லாம் சந்தோஷம்தான். அதுக்காக இப்படி ஒரு போட்டோவைத் தேடிப் புடுச்சுப் பத்திரிகையிலே போட்டுக் கேவலப்படுத்த வேண்டாம். நான் கட்டின மனுஷன்கிட்டப் படுகிற அசிங்கம் பத்தாதுண்ணு, இப்ப ஊர் உலகம் முழுதும் படும்படி ஆயிட்டுது. '

இவளுடைய சத்தமான அழுகையைக் கேட்டு, வெளியிலிருந்து யாரோ வாசல் பக்கம் நிழலாக உள்ளே நகர்ந்து வருவது மாதிரிப் பட்டது. கழுத்தில் தீக்காயம் பட்ட பையன் மிகத் தயங்கி வந்து அழுதுகொண்டிருக்கிற ஜ்ஊடியைத் திகைத்தபடி பார்த்துக் கொண்டே அவன் விட்டுச் சென்றிருந்த புத்தகங்களை எடுத்துக் கொண்டு போனான்.

மோசமாக ஒத்துழைக்கிற, அந்த டேபிள் ஃபேனின் இரைச்சலும் அவள் அழுகையின் காரணம் புரியாமையுமாக நான் அந்த இடத்தில் அசைவற்ற ஒரு சிக்கலாகக் கிடந்தேன்.

'இவ்வளவுதானா இதுக்கு மேற்கொண்டு இன்னும் ஏதாவது எடுத்திருக்கானா அவன் 'னு கேட்டுக்கிட்டு ஒரு மிதி. அன்னிக்கு நான் பட்டிருக்கிற அடிக்கும் உதைக்கும் கூட நான் போய்ச் சேரலைண்ணா அது இந்தப் பயல் ஜீவா மேலே இருக்கிற அக்கறையால் தான். வேற எதுக்காக இல்லாட்டியும் ஜீவாவுக்காகச் சுட்டியாவது நான் இருக்கணும் '

அன்னம் உட்கார்ந்தபடியே சற்றுச் சாய்ந்து கையால் தையல் மெஷினுக்கும் அதற்கடுத்த தோல்பெட்டி ஒன்றின் சந்திற்கும் இடையில் மடித்துச் செருகியிருந்த அந்தப் பத்திரிகையை உருவிப் போட்டாள். அழுகையும் அழுகைக்கு அனுசரணையுமான அசைவுகளுமாகவே இயங்குகிற அவளுடைய இறுகின மொத்த உருவத்திலும் கங்குபோல் ஒரு மினுக்கம் கனிந்து விசிறியது.

'என் படத்தைப் போடணும்னு தோணினா இதையா போடணும் '--அன்னம் அந்த ஆங்கிலப் பத்திரிகையை என் முன்னால் போட்டாள்.

மிகப் பிரபலமான வாரப் பத்திரிகையான அதுவும் ஒரு புகைப்பட சுருள் தயாரிக்கிற நிறுவனமும் இணைந்து நடத்திய போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறதாக வெளியாகியிருக்கிற இந்தப் படம் பற்றிய விபரம் இப்போதுதான் முதன்முதலாக எனக்குத் தெரிகிறது. வாரப் பத்திரிகைகளில் அடைந்து கிடக்கிற நூலாம் படைகளில் என்னுடைய தேர்ந்த வாசகச் சிறகுகள் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று விலகி லைப்ரரியின் அச்சாணித்

தட்டுகளின் தூசியில் மூச்சு முட்டிக் கொண்டிருக்கிற எனக்கு இப்படி நேர்ந்ததில் ஆச்சர்யமில்லை.

பெரிதுபடுத்தப்பட்ட புகைப்பட அளவாலும், அற்புதமான அச்சாலும் அருமையாக இருந்தது புகைப்படம்.

அன்னம் ஜ்ஊடி நடந்து செல்கிற தோற்றத்தில் கைகளில் சரிந்த சேலையை அள்ளி வீசுகிற படம். ரவிக்கைக்கு அழுத்தமாகக் கனமூட்டியிருக்கிற மார்பு. தோளின் பக்கவாட்டுச்செழுமை, வாய்க்கொள்ளாத சிரிப்பு, மூடிய அந்தக் கண்கள்.

'பழகின பழக்கம். குத்திக் குத்தி எடுத்தாலும் உசிரைப் பிடிச்சுக்கிட்டு இந்த ஜீவாப் பயலுக்காக நான் இருக்கிற இருப்பு. இதெல்லாம் ஞாபகமில்லை. இந்த உடம்பு ஒண்ணுதான் ஞாபகம் இருக்கு போல '--கிட்டதட்ட விருத்தா என்பக்கத்தில் தலை கவிழ்ந்து இந்நேரம் நிற்பதான பாவனையுடனேயே ஜ்ஊடி பேசினாள்.

நான் இதையெல்லாம் அவனிடம் சொல்வேன்; சொல்ல வேண்டும் என்ற குரலில் கொஞ்சம் கொஞ்சமாக இதைப் பகிர்ந்து கொண்டே வந்தாள். என்னிடம் தேறுதலை எதிர்பார்க்கிறதான அடையாளமில்லை. அவளுடைய கணவனைப் பற்றிய மிகையான அவதூறுகளை எடுத்து என் முன்னே விசிறி. 'பார், நான் எவ்வளவுக்கு மத்தியில் இருக்கிறேன் ' என்ற இரக்கம் சம்பாதிக்கவுமில்லை. விருத்தாவுக்கும் அவளுக்கும் ஜீவாவுக்கும் என்று நேர்ந்திருக்கிற ஒரு துல்லிய உறவின் மீது, பின்னப்படுத்துவது போலப் பதிகிற வேற்று ரேகைகளைத் துடைத்துத் துடைத்து அப்புறப்படுத்துகிற ஒரு காரியமாகவே இருந்தது.

இத்தனைக்கிடையிலும், ஒரே ஒரு மிகச் சிறு கணம், ரொம்பவும் குலைந்துகிடக்கிற அவளைப் பார்க்கும் போது அவளை அப்படியே சற்று ஆறுதலாக அணைத்துக் கொள்ளலாம் என்று தோன்றியது எனக்கு. அதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பட்டது. உடனேயே கேட்டேன்

'ஜீவா எங்கே, ஸ்கூலுக்கா ? '

அன்னம் சட்டென்று எழுந்தாள். சேலையால் முகத்தை மிக அழுத்தி துடைத்துக் கொண்டாள். தலையை அவசரமாக ஒழுங்கு செய்தாள்.

'அவனுக்குத்தான் சாப்பாடு கொண்டு போகணும். பேசிக்கிட்டே இருந்ததில் நேரமாயிட்டுது. பெல் அடிச்சிருவாங்க '--போய் அடுக்களையிலிருந்து சின்னப் பாத்திரத்தில் எதையோ மாற்றினாள். ஒரு ப்ளாஸ்டிக் குடுவையில் தண்ணீர் ஊற்றித் திருகினாள். இரண்டு பிஸ்கட்டுகளை ஒரு பாலிதீன் பையில் மடித்து எல்லாவற்றையும் ஒரு வயர் பையில் வைத்துவிட்டு குடையையும் எடுத்துக் கொண்டு 'போவோமா ' என்றாள்.

முழுமையான இன்னொரு பாத்திரமாகத் தன்னை ஒன்றிணைத்துக் கொண்டு அவள், ஃபேனை நிறுத்தி, 'பூனைச் சனியன் எல்லாவற்றையும் இழுத்து இழுத்து வாயை வைக்கும் ' என்று சொன்னபடி ஜன்னல் கதவு அடைத்து செருப்புப் போட்டு கதவை சாத்திப் பூட்டிக் கையால் இழுத்துக் கொண்டு வேகமாக முன்னால் சாக்கடைப் பக்கம் நின்றுகொண்டிருந்த என்னிடம் வந்து மறுபடியும் சிறு தெளிவுடன் 'போகலாமா ' என்று கேட்டாள்.

போகலாமா என்று என்னிடம் கேட்டாலும், போய்க் கொண்டே இருப்பவள் என்று அவளைப்பற்றி எனக்குத் தோன்றிற்று.

## கண்ணாடி

**அசோகமித்ரன்**

டிசம்பர் குளிருக்கு அந்தக் கோட்டு மிகவும் இதமாக இருந்தது. ஏனோ தினமும் அதைப் போட்டுக் கொள்ள முடிவதில்லை. கோட்டைப் போட்டுக் கொண்டு செருப்புக் காலுடன் வெளியே போனது கிடையாது. ஆதலால் பூட்ஸ். ஆனால் அந்தப் பூட்ஸைப் போட்டுக்கொள்ளும்போதே சுண்டுவிரல் வலித்தது. அரை மைல் நடந்து, நகர ஆரம்பித்துவிட்ட பஸ் பின்னால் ஓடி அதில் தொத்திக் கொண்டதும் வலி பொறுக்க முடியாத அளவுக்குப் போய்விட்டது.

இவ்வளவிற்கும் அந்த பூட்ஸ் நான் குறைந்தது இரண்டாண்டு காலம் தினமும் போட்டுக்கொண்டு திரிந்ததுதான். அப்புறம் ஐந்தாறு இண்டர்வியூக் காலங்களில் அணிந்து கொண்டிருக்கிறேன். அதெல்லாம் நான் வேலையை விட்டு ஒருவருடம் ஆவதற்குள். அப்போதெல்லாம் சுண்டுவிரல் வலித்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை வேலை கிடைத்துவிடும் என்று எதிர்பார்ப்பு-- மன நிலையினால் உடலின் மறு கோடி வலி உரைக்காமல் இருந்திருக்கலாம். இப்போதோ இந்த வேலைக்கு நான் பொருத்தம், என்னுடைய திறமைகள் இவர்களுக்கு ரொம்பப் பயனுள்ளதாகத் தோன்றும், இந்த வேலை கிடைத்தால் கடைசிப் பையனுக்கு டான்ஸில் ஆபரேஷன் உடனே ஏற்பாடு செய்துவிடவேண்டும் என்றெல்லாம் மனதில் தோன்றுவது கிடையாது. யாராவது ஓடிவந்து 'நீ உடனே ஒரு வேலை கேட்டு விண்ணப்பம் எழுதிப் போடு ' என்றால் அந்தப் பணியை எப்படியெல்லாம் ஒத்திப்போட முடியுமோ அப்படியெல்லாம் செய்வேன். பார்க்கப் போனால் விண்ணப்பம் எழுதியே ஆகவேண்டும் என்று நான் காகிதமும் பேனாவுமாக உட்கார்ந்துகொண்டால்கூட 'அன்பார்ந்த ஐயாவுக்கு ' மேல் எழுத்தே ஓடாது. ஆனால் பூட்ஸ் மட்டும் நன்றாக வலிக்கிறது.

பூட்ஸ் அழுத்தி வலிக்கிற காலும் தொளதொள கோட்டும் ரெக்ஸைன் கைப் பையுமாக அமைந்தகரை மார்க்கெட் பஸ் ஸ்டாப்பில் இறங்கினேன். ஆவடி என்னும் இடம் சென்னைக்கு வடக்கே (அல்லது வடமேற்கே) இன்னும் வெகு தூரத்தில் இருந்தாலும் புது ஆவடி ரோடு அந்த மார்க்கெட்டுக்கும் முன்னாலேயே தொடங்குகிறது என்று கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தேன். ஆதலால் பஸ் வந்த வழியிலேயே சிறிது தூரம் நடந்து வந்தேன். கண்ணில் பட்ட முதல் டாக்ஸியை நிறுத்தினேன். நான் போக வேண்டிய இடத்தை முதலிலேயே சொல்லி 'இந்த வண்டி வராது ' என்று பதில் கிடைத்துத் திண்டாடிய நினைவுகள் நிறைய உண்டு. ஆதலால் ஒன்றுமே சொல்லாமல் கணப்போதில் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். மீடர் போடப்பட்டது.

'எங்கே போகணும் ? '

'புது ஆவடி ரோடு. '

'எங்கே ? '

'டிரேட் ஃபேர். உலக சந்தை ஆபீஸஉக்கு. '

வண்டி முடுக்கப்பட்டு, அந்த இடத்திலேயே முழுக்கத் திரும்ப இருந்தது.

'இங்கே எங்கே போறீங்க ? புது ஆவடி ரோடு அந்தப் பக்கமில்லே இருக்கு ? '

'நீ எங்கே போகணும் ? புதுசா எக்ஸிபிஷனுக்குக் கட்டிட்டு இருக்காங்களே, அங்கத்தானே ? '

'ஆமாம். ஆனா அது புது ஆவடி ரோடில்தானே இருக்கு. '

'ஆமாம் சாமி. அதுக்கு இந்தப் பக்கந்தானே வழி. '

'புது ஆவடி ரோடு அங்கே பச்சையப்பாஸ் காலேஜ் கிட்டேனாப்பா தொடங்கறது ? '

'எக்ஸிபிஷன் இந்தப் பக்கம் சாமி. நான் அங்கேந்து இப்பத்தானே வாரேன். '

'நான் எக்ஸிபிஷனாண்டை போகலை. ஆபீஸஉக்குப் போகணும். அது புது ஆவடி ரோடிலேதான் இருக்கு. '

எதிரே பூதாகாரமான லாரி ஒன்று நின்று கேவலமாக ஹார்ன் அடித்தது.

'எக்ஸிபிஷன் ஆபீஸஉ எக்ஸிபிஷனண்டை இல்லாமே எங்கேயிருக்கும் சாமி ? நான் இப்போ அங்கேந்துதான் வாரேன்னு சொல்லறேன். '

'அதெல்லாம் தெரியாதப்பா. புது ஆவடி ரோடுன்னா புது ஆவடி ரோடுதான். '

இப்போது எங்கள் பின்னால் வரிசையாக இரு பஸ்கள், மற்றும் கார்கள் மாட்டு வண்டிகள் எல்லாம் நின்றுகொண்டிருந்தன.

'நீ போப்பா. புது ஆவடி ரோடு போன்னா போயேன். '

வண்டி சீறிக்கொண்டு கிளம்பி அரை நிமிஷத்திற்குள் புது ஆவடி ரோடு தொடக்கத்திற்குச் சென்றடைந்து நின்றது. 'இப்போ எங்கே போகணும் ? '

'நீ இந்த ரோடிலேயே போயிண்டிரு. நான் சொல்லறேன். '

டாக்ஸி வேகமாகப் போய்க்கொண்டேயிருக்க நான் பதட்ட நிலையில் சீட் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு சாலை இருபுறங்களிலும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். டாக்ஸி ஒரு மைலுக்கு மேலாகப் போயிருக்கும். நிறைய வீடுகள் வந்தன. காரியாலயமாக ஒன்றும் தட்டுப் படவில்லை. இந்தத் தேடலில் டாக்ஸி டிரைவரின் ஒத்துழைப்புக் கிடையாது என்கிற சூழ்நிலை. திடாரென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்து எனக்குப் பகீரென்றது. முன்பு ஒரு சமயம் வேறொரு காரியாலயத்திற்கு ஹாடோஸ் சாலை என்று விலாசம்

கொடுத்திருந்தது. ஒரே ஃபர்லாங்கு நீளமிருக்கும் ஹாடோஸ் சாலையில் ஒரு மணி நேரம் அலைந்து திரிந்த பிறகு அந்தக் காரியாலாயம் ஹாடோஸ் சாலையில் பிரிந்து போகும் ஒரு சந்துக் கோடியில் இருந்தது தெரிய வந்தது. அதேபோல இந்த உலகச் சந்தையும் ஒரு சந்தின் கோடியில் காரியாலயம் அமைத்துக் கொண்டிருந்தால் ?

திடாரென்று வீடுகள் முடிந்து சாலை ஒரு மேட்டில் ஏறி ஒரு திறந்தவெளிப் பிரதேசத்தில் திரும்பியது. அப்போது டாக்ஸியிலிருந்து பார்த்ததில் உலகச் சந்தை விளம்பரங்கள் எல்லாவற்றிலும் காணப்பட்ட கோபுரம் வெகுதூரத்தில் தெரிய வந்தது. ஆனால் புது ஆவடிச் சாலை அதை நோக்கிச் செல்லவில்லை. 'இது புது ஆவடி ரோடுதானே ? ' என்று கேட்டேன். நான் கேட்டது என் காதுக்கே சரியாகக் கேட்கவில்லை.

இன்னும் ஒரு மைல் சென்றபின் டாக்ஸி மீண்டும் நின்றது. 'இப்படியே போனா ஆவடிக்குப் போகலாம். ஆனா எக்ஸிபிஷனாண்டை போகமுடியாது. '

நான் அதற்குள் என் கலவர நிலையிலும் ஒரு முடிவிற்கு வந்துவிட்டிருந்தேன். 'சரி எக்ஸிபிஷனுக்கே போங்க. அங்கே போய்க் கேட்டுண்டு போகலாம். '

டாக்ஸி புதிதாகப் போடப்படும் மிக அகலமான சாலையில் திரும்பியது. பெரிய சரளைக் கற்களைப் போட்டு சமதளமாக்கியிருந்தார்கள். இன்னும் தார் போடவில்லை.

டாக்ஸி கடகடவென்று சப்தமெழுப்பிக்கொண்டு மெதுவாக முன்னேறியது. சரளைக் கற்கள் சக்கிரத்தடியில் அழுந்தித் தெறித்து விழுந்தன. கோபுரம் சிறிது சிறிதாகத் தோற்றம்கொள்ள ஆரம்பித்தது. அத்துடன் இன்னும் பல கட்டிடங்கள் புதுமையான விநோதமான உருவங்களில் எழுப்பப்படுவதும் தெரிந்தது. இன்னும் இரு வாரங்களில் சந்தை தொடங்கியாக வேண்டும். ஏற்கெனவே செய்து முடித்த வேலை மலைக்க வைக்கும்படியாக இருந்தது. அதே நேரத்தில் இன்னும் செய்ய வேண்டியது ஏராளமாக இருக்க வேண்டும் என்றும் தோன்றிற்று. எவ்வளவு லட்சக் கணக்குச் செலவில் எவ்வளவு ஆயிரம் பேர் எவ்வளவோ நாட்களாகச் செய்து வரும் விவரம் எனக்கு ஒழுங்காக அறிந்துகொள்ள முடியவில்லை. அந்தக் காரியாலயம் எங்கே என்றுகூடச் சரியாகத் தெரியாது.

சந்தை முன்வாசல் எதிரே டாக்ஸி நின்றது. முன் வாசலுக்கு முன்னே, சாலைக்கு மறுபுறத்தில் ஒரு புது தனிக் கட்டிடம். போர்டெல்லாம் ஒழுங்காக மாட்டியிருந்தார்கள். இவ்வளவு குறுகிய காலத்தில் அங்கே தோட்டம் போடப்பட்டுச் சில செடிகளில் பூக்கள்கூடத் தோன்றியிருந்தன.

என் ரெக்ஸைன் பையைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கினேன். நிற்கவே முடியாமல் பூட்ஸ் வலித்தது. 'உன் டிரிப்புக்கு முன்னாலே இதே இடத்திலேந்துதான் நான் வாரேன். ' புது ஆவடி ரோடு என்று நான் பிடிவாதமாக இல்லாதிருந்தால் எப்போதோ இங்கு வந்து சேர்ந்திருக்கலாம். செலவு மிகவும் குறைந்திருக்கும்.

டாக்ஸியை அனுப்பிவிட்டு அந்தக் காரியாலயம் முன்னால் நின்றேன். கல்யாணத்திற்காகத் தைத்த கோட்டும் காலை நசுக்கும் பூட்ஸஉம் வேஷமணிந்து கொண்டு இங்கு வந்து நின்றது பொருத்தமாகப் படவில்லை. குளிருக்கு அடக்காமாயிருந்தது என்பதைத் தவிர.

காரியாலயத்திற்குள் சென்றேன். தற்காலிகமாகக் கட்டப்பட்ட கட்டிடம். ஆனால் தடபுடலான மேஜை நாற்காலி, சோபாக்கள். சுவரில் பெரிய பெரிய வரைபடங்கள், போஸ்டர்கள்.

வரவேற்பறையில் ஒரு சோபாவில் சாய்ந்திருந்த ஒரு நபரைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஒரு கணத் தயக்கம். அந்த சோபாவிடம் சென்று 'விளம்பர அதிகாரி எங்கேயிருக்கிறார் ? ' என்று கேட்டேன். அந்த ஆளின் கோட் துணிக்கும் டையின் தரத்திற்கும் நான் ஆங்கிலம் தவிர வேறு மொழியில் பேசியிருக்க முடியாது. அவன் பதில் தராமல் சாய்ந்து கொண்டிருந்தான். நான் மீண்டும் கேட்டேன். 'அங்கே கேளு, ' என்று அவன் ஹிந்தியில் சொன்னான். அவன் கைகாட்டிய திசையில் டெலிபோன் ஸ்விட்ச்போர்டு இருந்தது. நான் அங்கே போய் நின்றேன். சோபா ஆளும் எழுந்து வெளியே போய்விட்டான். நான் இன்னும் அவனை ஏதாவது கேட்டுக் கொண்டிருப்பேன் என்று எண்ணியிருக்கலாம்.

ஒரு காரிடாரிலிருந்து ஒருவன் இரைந்துகொண்டே வந்தான். அவன் கையில் கத்தைக் காகிதங்கள் இருந்தன. டெலிபோன் ஸ்விட்சுபோர்டில் ஒரு சிறு வட்டப் பட்டை கிர்கிர்ரென்று சப்தமெழுப்பிக் கொண்டிருந்தது யாரோ பாவம், வெகுநேரமாகக் காத்துக் கொண்டிருக்கவேண்டும்.

வந்தவன் ஒரு பித்தானைக் கீழே தள்ளி டெலிபோனைக் காதில் மட்டும் வைத்துக் கொண்டு கேட்டுவிட்டு இருகம்பிகளை இரு துளைகளில் நுழைத்தான். ஒரு கைப்பிடியை இருமுறை சுற்றி டெலிபோனைக் கீழே வைத்தான். 'என்ன வேணும் ? ' என்று என்னைத் தமிழில் கேட்டான்.

'விளம்பர அதிகாரியைப் பாக்கணும். '

'எதுக்கு ? '

'பாக்கணும் '

டாக்ஸி டிரைவருக்கு நான் ஏற்படுத்திய மனநிலையை இவனுக்கும் ஏற்படுத்திவிட்டேனோ என்று சந்தேகிக்க வைக்கும் ஒரு கண இடைவெளி.

'இந்த காரிடாரிலே நேராப்போய் அஞ்சாவது கதவு. '

அந்த காரிடாரில் நடக்கும்போது நான் நொண்டுவதாக உணர்ந்தேன். டெலிபோன் ஆள், 'அஞ்சாவது ரூம், அஞ்சாவது ரூம், ' என்று கத்தினான். முதல் நான்கு அறைகளுக்கு ஒரு பொதுத் தன்மை. ஐந்தாவது அறை ஏர்கண்டிஷன் செய்யப்படாமல் சாதாரணமாக இருந்தது. அந்த அறையில் உட்கார்ந்திருந்த விளம்பர அதிகாரியும் சாதாரணமாக, ஒரு வேளை அவரும் சுண்டுவிரலை நசுக்கும் பூட்ஸைப் போட்டுக் கொண்டிருக்கிறாரோ என்று சந்தேகப் படும்படி, உட்கார்ந்திருந்தார். அதிக விற்பனையாகும் தினசரிப் பத்திரிகைகள் பலவற்றை மேஜைமீது விரித்து வைத்துக் கொண்டு ஒரு சிவப்பு பென்சிலால் சில பகுதிகளைக் குறியிட்டுக் கொண்டிருந்தார். அப்பகுதிகள் இன்னும் பதினைந்து நாட்களில் தொடங்கப்போகும் உலகச் சந்தையின் விளம்பரங்கள்.

'என்ன சார் வேணும் ? ' என்று தமிழில் கேட்டார்.

நான் விவரமாக சொன்னேன்.

'எவ்வளவு வருடமாகப் பத்திரிகை வெளிவரதுன்னு சொன்னேள் ? '

'இது அஞ்சாவது வருடம். இந்த நாட்டிலிருக்கிற முக்கியமானவங்க எல்லார் கைக்கும் இது போறது. '

'என்ன சர்குலேஷன் ? '

நான் சொன்னேன். நாட்டில் முக்கியமானவர்கள் எண்ணிக்கை சிறிது குறைவாகத்தான் இருந்தது.

'அடுத்த வாரம் வாருங்களேன். கேட்டுப் பார்க்கிறேன். ஸ்பெசிமன் காபியும் டாரிஃபும் கொடுத்துட்டுப் போங்கோ, ' என்றார்.

என்னிடம் அதற்கும் மேலும்கூட இருந்தது. உலகச் சந்தை சேர்மேனுக்கு விண்ணப்பம், விளம்பர அதிகாரிக்கு ஒரு தனிக் கடிதம். கடைசி ஆயுதமாக உபயோகிக்க வேண்டியது அது. அந்தக் கட்டத்தை அடைந்தாகி விட்டது என்றே எனக்குத் தோன்றிற்று. அவர் தன் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். 'ஓகோ, உங்க பத்திரிகையிலே கோதண்டராமும் இருக்காரா ? எவ்வளவு நாளா வெளிவரதுன்னும் சொன்னேள் ? ' என்றார்.

நான் சொன்னேன். அவர் ஒருகணம் எதையோ ஞாபகப்படுத்திக் கொள்வதுபோலத் தோன்றினார். 'ஏன் சார், இதுதானே மிஸ்டர் எஸ். ஆர். வாசுதேவனும் இன்னொருத்தரும் சேர்ந்து ஆரம்பிச்ச பத்திரிக்கை ? ' என்று கேட்டார்.

'ஆமாம். '

'வெரிகுட், வெரிகுட். மிஸ்டர் வாசுதேவன் எப்படி இருக்கார் ? '

நான் பதிலே சொல்லாமல் சமாளித்தேன். 'வாசுதேவனும் நானும் சேர்ந்துதான் பாட்னாவிலே இருந்தோம். அவர் அங்கேயிருந்து டில்லிக்குப் போய் விட்டார். நான்தான் இடியட் மாதிரி மெட்ராஸ் வந்தேன். '

எனக்கு அவருடைய பூட்ஸ் பற்றி மறுபடியும் நினைக்கத் தோன்றியது.

'வெரி எண்டர்பிரைசிங் டைப். எப்படியிருக்கார் ? ஜமாய்ச்சிண்டிருப்பாரே ? '

நான் எவ்வித அர்த்தமும் தோன்றாத ஒரு சிரிப்புச் சிரித்தேன். 'ஆமாம் ' என்றேன்.

விளம்பர அதிகாரி தொடர்ந்து, 'வெரி எண்டர்பிரைசிங் டைப். அவர் இருந்து கூடவா உங்கள் சர்குலேஷன் இப்படி இருக்கு ? '

இப்போது வெறுமனே சிரித்தேன்.

'உங்களுக்கு வரவு செலவுக்குக்கூட கட்டிவராதே ' நீங்க என்ன பண்ணறேள் இதிலே ? '

நான் சொன்னேன். இம்மாதிரிக் கேள்விகளுக்கு என்றே நான் பதில் தயாரித்து வைத்து, நான்கைந்து ஆண்டுகளாக உபயோகித்து வருகிறேன். விஷயம் அவ்வளவு புரியவும் புரியாது, அவர்கள் மீண்டும் கேள்விகளும் கேட்கமாட்டார்கள்.

'வாசுதேவனும் நானும் சேர்ந்து பாட்னாலே இருந்தப்போ அநேகமாத் தினமும் பாட்னா பத்தி எதாவது பேப்பர்லே வந்திண்டேயிருக்கும். ஒரு தடவை ஒரு ஆர்மி பார்ட்டிக்குப்போயிட்டு--காட், அன்னி ராத்திரி ஒரே ரகளையாப் போயிடுத்து. பிளாக்கவுட் வேறே. வாசுதேவனாலே நிக்க முடியலே, ஆனா ஒரு டாங்காவாலாவை அடிச்சுட்டான். அப்பல்லாம் நீங்க பொறந்திருக்கக்கூடமாட்டாங்க. சாயந்திரம் கிளப்புலே போய் உக்காந்துண்டா நானும் அவனும் எட்டு மணிக்குள்ளே அரை பாட்டில் விஸ்கி தீத்துடுவோம். எப்படியிருக்காரோ இப்போ ? நீங்க கடைசியா எப்போ பாத்தீங்க ? '

நான்கு ஏர்கண்டிஷண்ட் அறைகளுக்குப் பக்கத்திலேயே ஒரு சாதாரண அறையில் வேலை பண்ண வேண்டியிருந்த அந்த மனிதர் அந்தச் சூழ்நிலையில் அதற்கு முன்னர் இவ்வளவு உற்சாகமாக இருந்திருக்கவே மாட்டார் என்பது போல எனக்குத் தோன்றியிருக்க வேண்டும். வாசுதேவன் எங்கள் பத்திரிகையுடன் எப்போதோ துண்டித்துக் கொண்டுவிட்டதை நான் அவரிடம் சொல்லவில்லை. 'அது ஒரு காலம். அந்த மாதிரி இனிமே வரப்போறதில்லை. அந்த நாளே வேறு, ' என்றார்.

அவர் மிகவும் சந்தோஷமாக இருந்தார். நான் சொன்னேன், 'நீங்க சுலபமா ஒரு முழுப்பக்கம் எடுத்துக்கலாம். பின் அட்டைகூட எடுத்துக்கலாம். '

அவர் சந்தோஷம் தடைப்பட்டவராகத் தோன்றினார்.

'இது மாசப் பத்திரிகைதானே, சார். நீங்க ஒரு இன்ஸர்ஷன் தான் தரமுடியும், ' என்றேன்.

'ஆமாம், ' என்றார். பிறகு, 'நீங்க ஒரு பத்துநாளைக்கு முன்னாலே வந்திருக்கக் கூடாதா ? அம்பதோட அம்பத்தொண்ணா ஒரு மாதிரி சமாளிச்சிருக்கலாம். இப்பல்லாம் சேர்மென் ஒவ்வொரு செலவு அயிட்டத்துக்கும் என்ன என்னன்னு கேக்கறார், ' என்றார்.

'நாங்க உங்க ஃபேரை முழுக்க கவர் பண்ணறதா இருக்கோம். '

'அது சரி, அது வந்து, சேர்மென் கிட்டே காண்பிச்சு நீங்க அடுத்த இஷ்யூ கொண்டு வரத்துக்குள்ளே ஃபேரே முடிஞ்சிருக்கும். '

'அதுக்குத்தான் இப்பவே வந்தேன். '

அவர் இப்போது முற்றிலும் பழைய மாதிரியே ஆகியிருந்தார். அவர் சொன்னார்; 'நீங்க நாளைக்கு வாருங்கோ, உங்களுக்கு ஒரு பாஸ் வாங்கித் தரேன். '

'பாஸா ? '

'ஆமாம். ஃபேரேல்லாம் சுத்திப் பாக்கறதுக்கு. முடிஞ்சா இனாகரேஷனுக்கு இன்விடேஷன் அனுப்பறேன். அந்த லிஸ்டெல்லாம்கூட ஒருமாதிரி முடிச்சாச்சு. இருந்தாலும் பாக்கறேன். '

'எங்களுக்கு இருபத்தெட்டாந்தேதி வரைக்கும் கூட பிரஸ்ஸிலே ஃபாரம் ஓடிண்டிருக்கும். நீங்க இருபத்தைஞ்சாந்தேதி ரிலீஸ் ஆர்டர் கொடுத்தாக்கூட பின் ராப்பர்லே சேத்துண்டுடலாம். '

'நான் சேர்மனைத்தான் கேக்கனும். ஒவ்வொண்ணுக்கும் அவரைத்தான் கேக்க வேண்டியிருக்கு. அதான் ப்ராப்ளம். '

இப்போது அவர் ஒரு தனி அறையில் உட்காரும் அதிகாரியாகக் கூடத் தோன்றவில்லை.

'நாளைக்கு வாங்கோ நீங்க. நான் பாஸ் வாங்கித் தரேன். '

நான் எழுந்து நின்று கொண்டேன். அவரும் எழுந்து என் கையைப் பலமாகக் குலுக்கினார். அப்போது நானும் அவரும் ஒருமாதிரி இருந்தோம்.

'வாசுதேவனுக்குச் சொல்லுங்கோ, நான் அவரை ரொம்ப விசாரிச்சேன்னு, ' என்றார்.

எனக்கு வாசுதேவனைக் கொஞ்சமும் தெரியாது. 'சரி, ' என்றேன்.

அவர் மீண்டும் தினசரிப் பத்திரிகைகள் குவியலில் மூழ்கினார். நான் காரிடாருக்கு வந்து, நான்கு ஏர்கண்டிஷண்ட் அறைகளைத் தாண்டி வரவேற்பறையையும் கடந்து வெளியே வந்தேன். வெயில் சுளீரென்று அடிக்க ஆரம்பித்திருந்தது. நான் கோட்டைக் கழட்டி மடித்துக் கையில் தொங்கவிட்டுக் கொண்டேன். கால்வலி கொஞ்சம் குறைந்த மாதிரி இருந்தது. அந்தக் கட்டிடத்தின் வெளிப்புறமாகவே நடந்து அதன் பின்புறத்தை அடைந்தேன். ஒரு மூடிய கதவுக்குமேல் 'ஆண்கள் ' என்று எழுதியிருந்தது.

## உறவு, பந்தம், பாசம்...

**-மௌனி**

இரவு முழுதும் கொண்ட பிரயாண அலுப்பிலும், அசதியிலும்கூட, ரயில் தன்னூர் நிலையத்தைக் காலையில் அடைந்தபோது, இவன் மனது ஒரு குதூகலம் கொண்டது. ஆனால் இறங்கியதும் ரயிலடியைப் பார்வைக் கொண்டபோது, மனது, குதூகலம் அதிர்ச்சியென மாறலாயிற்று. ஊர் தவறி இறங்கியதென எண்ண முடியாதபடி எதிரே தன்னூர்ப் பெயர்ப்பலகை தன்னை வெறித்து நிற்பதைக் கண்டான். சமீபத்தில் பெரிய அளவில் நிர்மாணித்துக் கட்டப்பட்டிருந்ததால், தான் முன்பு பார்த்ததான எண்ணமே கொள்ள முடியாது தோன்றியதை ஜடமென வெகு நேரம் அவன் கண்டு நிற்கவில்லை. புறக்காட்சியில் மனது ஒருமையில் அனுபவம் கொள்ள, அனுமானம் கொண்டு, திகைப்பு நீங்கச் சிறிதுநேரம் ஆகியது போலும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே, ஊரை விட்டகன்றவன்; வெளியூர் வாசம் செய்து, வசதியில் திரும்பியவன். வசீகரமெனத் தோன்றிய, தன்னூர்ப் பாலிய கால வாழ்க்கையை நினைத்து, தன்னுடைய பிற்கால வாழ்க்கையையும் அங்கே கழிக்கத் திரும்பியவன். வீட்டை அடையும் வழிநெடுக ஒரு புதிய ஊர்ப்பிரவேசம் எனத்தான் அடிக்கடி தோன்ற இருந்தது. பழைய இடங்களில் புது வீடுகள் தோற்றமும், அங்காங்கே வெற்றிடங்களில் சிறுசிறு குடிசைகளும், மேலும் ஒரு பெரிய சினிமாக் கொட்டகை, அநேக ஹோட்டல்கள், எல்லாம் முன்பே இவனுக்கு அறிமுகமானதென, மௌனமாக வரவேற்க

நின்றிருந்தன போலும்...தன் வீட்டை அடைந்தான். வீட்டின் முன் அறை ஒன்றை மட்டும் தன் உபயோகத்திற்கென வைத்திருந்து, ஏனைய பாகங்களை வாடகைக்கு விட்டிருந்தான்.

வெகு நாட்களாகப் பூட்டப்பட்டிருந்த அறையைச் சுத்தம் செய்வித்து, குடியிருக்க வசதி செய்து, காலைக் காரியங்களை முடித்துக் கொண்டிருக்கும்போது, இவன் வருகையை அறிந்த இரண்டு நண்பர்கள் இவனைப் பார்க்க வந்தனர். திண்ணையில் அவர்களோடு அமர்ந்து கொண்டு தெருவையும் கவனித்தபடிப் பேசிக்கொண்டிருந்தான். தான் இல்லாத கால, ஊர் நடப்புகள் என அநேக விஷயங்களை அவர்கள் சொல்லியும் இவன் கேட்டும் தெரிந்து கொண்டான். தன் தெருவே மாறியிருப்பதையும், ஜன நடமாட்டம் பெருகி இருப்பதையும் கண்டு கொண்டிருந்தான். மனது ஏதோ ஒருவகையில் சஞ்சலம் அடைந்து கொண்டிருந்தது. இரண்டொரு நாள் வாழ்க்கையில், பழக்கத்தில், எல்லாம் சரியாகி விடும் என்ற நினைப்பில் பேசிக்கொண்டிருந்தான். முக்கியமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களை மறந்தும், ஏதேதோ அது இதை விசாரித்துக் கொண்டிருந்தான். ஒரு நண்பனைப் பார்த்து, '...அந்தக் கிழவி சௌக்கியமாக இருக்கிறாளா ? ' என்று கேட்டபோது அவர்கள் சிரிக்கலாயினர். எதிரே தெருவில் இருபது வயது மதிக்கத்தக்க ஒரு பெண், இடுப்பில் ஒரு குழந்தையுடன் சென்று கொண்டிருந்தாள். கையைப் பிடித்து நடத்தி அழைத்துப்போன மற்றொரு குழந்தையுடன், தன் வயிற்றிலும் ஒரு சிசுவைச் சுமந்தாளென ஒரு பூரண கர்ப்பிணி என அவள் தோன்றினாள்.

'...அதோ போகிறாள் பார் நீ கேட்ட கிழவி... ' என்று இவன் நண்பன் மேலும் சிரித்தான். இவன் திடுக்கிட்டு என்னவென்றதற்கு 'நீ கேட்ட பாட்டியின் பேத்தி அவள் இறக்கும்போது இவள் பிறக்கவில்லை என நினைக்கிறேன்... ' என்றான். மேலும் 'நீ ஊரைவிட்டுச் சென்று எவ்வளவு நாளாகிறது, ஏதோ மறந்து போனதுபோல விசாரிக்கிறாயே. வந்த அசதி போலும் ' என்று சொன்னான். பிறகு வந்து பார்ப்பதாக அவர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

சாப்பிட்டு, களைப்பு தீர உறங்கி, இவன் எழும்போது, மாலை நான்கு மணிக்கு மேலாகிவிட்டது. காபி சாப்பிட்டு வெளியே சென்று சுற்றி வரலாமென வீட்டை விட்டுப் புறப்பட்டான். கடைவீதியாகச் சென்று மற்றுமொரு வீதியையும் கடந்து மேற்குச் சந்நிதியை அடையலாம். அதையும் கடந்து கோயில் குறுக்காக ரயிலடியை அடைந்து, சிறிது உட்கார்ந்து, வீடு திரும்பினால், சாப்பிட்டுப் படுக்க நேரம் ஆகிவிடும் என்று எண்ணிக் கிளம்பினான். கடைவீதிக் கூட்டத்தைச் சாவதானமாக நடந்து கடந்துவிட்டான். மற்றொரு வீதியைக் கடக்கும்போது ஜன நடமாட்டம் குறைந்து விட்டது தெரிந்தது. இவன் மனதில் பழைய கால ஞாபகங்கள் சிறிது சிறிதாகத் தோன்றலாயின. சந்நிதித் தெருவை அடைந்து, ஒரு வீட்டைக் கடக்கும் போது, இவன் மனதில் ஒரு பரபரப்புக் கண்டது. அவ்வீட்டிற்கு இவன் அநேகதரம் தன்னுடைய மிக நெருங்கிய நண்பனுடன் சென்று இருக்கிறான். அவனை ஊரில் சந்திக்கும் ஆர்வமும், அவனோடு சேர்ந்து இப்போது வாழ்க்கை கொள்ளலாம் என்ற எண்ணமும்தான் இவன் ஊர் திரும்ப ஒருவிதக் காரணம். காலையில் அவனைக் காணாததும், ஏனையோரிடம் அவனைப்பற்றி விசாரிக்காததும், வெகு உணர்ச்சியில் தன் தவறென இவனுக்குத் தோன்றியது...

அவ்வூர்க் கோவில் மிகப்பெரியது. சரித்திரப் பிரசித்தி பெற்றது. மகோன்னத தசையில் ஆண்ட சோழ மன்னன் ஒருவனால், வெகு காலம் முன்பு கட்டப்பட்டது.

ஒரு காலத்தில் அவ்வூரே அந்தக் கோவிலைப் பொருத்து நிர்மாணம் ஆனது. ஆனால் இப்போது அகலமான தேரோடும் வீதிகளையும், சந்நிதிகளையும், தெற்கே ஒதுப்புறமாகப் பாழ்படும் ஒரு அமைதியில் விட்டு, தற்போதைய நகரமென்பது வடக்கே வெகுதூரம்

வியாபகம் கொண்டிருந்தது. மேற்கு வீதிக்கப்பால் மேற்கே நெடுந்தூரம் அத்துவான வெளியென, தொடுவானம் வரையில் கண்டவெளி வீதியை மறைக்க ஒன்றுமில்லை. மேற்கே சூரியன் மறைய இருந்தான். மறையும் சூரிய ஒளி சந்நிதித் தெரு முழுதும் படர்ந்து கோபுரவாயிலையும் கடந்து கொடிமரம் வரையில் சென்று தெரிந்தது. மாலையில் கோவிலுக்குச் செல்லுபவர்கள் நிழல்கள், அவர்களை முந்திக் கொண்டு கர்ப்பக் கிருஹ இருளில் மறைந்து ஒன்றாவது, ஒரு உன்னதக் காட்சியென மனதில் கொள்ள இருக்கும்.

மேற்கு கோபுரத்தைத் தாண்டி உட்சென்றவன், பக்கத்தில் இருந்த ஒரு சிறு மண்டபத்தில் உட்கார்ந்தான். ஒருபுறம் கோபுரமும், மறுபுறம் ஈசுவர சந்நிதியும் தெரியும். முன்னும் பின்னும், இடிந்துகொண்டிருக்கும் பிரும்மாண்ட மதில்சுவர்களின் பாழ்படும் தோற்றம். கர்ப்பக்கிருஹம் இப்போதே இருள் கொண்டுவிட்டது. சர விளக்குகள் ஏற்றப்பட்டுத் தெரிந்தன. அந்த ஆழ்ந்த மௌன இருள் ஒளி அமைதியில் அருஉரு என எட்டிய லிங்கம் சோபையில் புலனாகித் தெரிந்தது. மதில்சுவர் இடிபாட்டிற்கிடையில் முளைத்து இருக்கும் புற்பூண்டுகளை, காலம் தவறி மேய்ந்து கொண்டிருந்தன, இரண்டொரு ஆடுமாடுகள்; மற்றும் சில, மூடிய கண்களுடன் அசைபோட்டுப் படுத்துக் கிடந்தன. ஒரு அமானுஷ்ய மயான வெளி அமைதி, அறிவிற்கப்பால் உணரும் வகை, ஒரு சங்கேத மௌனப் புதிரென, புறக்காட்சித் தோற்றம் கொடுத்தது.

எதிரே, ஒளிபடர்ந்த தரையில் நீண்டு வளர்ந்து வரும் நிழல்கள், ஒன்றுகூடிப் பிரிந்து சலிக்கும் ஒரு விநோதக் காட்சியில், உட்கார்ந்திருந்த இவன் லயித்திருந்தான் போலும். யாரோ சிலர் கோவிலுள் நுழைகிறார்கள் போலும். நான்கைந்து பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவள், சிறிது தூரத்திலிருந்தே இவனைக் கவனித்து வந்ததில், இவனைத் தெரிந்து கொண்டவள் போன்று, இவனைக் கடக்கும்போது, பார்த்து, ஒரு புன்சிரிப்பில் நின்றாள். இவன் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என்பதை உடன் உணர்ந்து, நடந்து, ஏனையோருடன் கூடிக் கோவிலுக்குள் சென்றாள். அவள் தோற்றம், வசீகரம், புன்னகை எல்லாம் கொஞ்சம் தாமதித்தே இவன் மனது கண்டது போன்று அவளைத் தெரிந்துகொள்ள, அவள் போவதையே கவனித்திருந்தான். அவள் ஒரு தரம் திரும்பி இவனைப் பார்த்தாள். மாலை ஒளி அவள் முகத்தில் விழ அவள் வெகு வசீகரமாகத் தோன்றினாள். அவளை யாரென இவன் தெரிந்துகொள்ள முடியவில்லை. கோவிலுள் சென்று அவர்கள் மறைந்து விட்டனர். ஞாபகம் காண, மறதியைத் தேடுவதில் ஜடமென இவன் அவ்விடத்திலேயே வீற்றிருந்தான். எவ்வளவு நேரமென்பது இவனுக்கு நிதானம் இல்லை. உலகு இருள் கொண்டுவிட்டது. உள்ளே சரவிளக்குகள் வெகு சோபையில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. திடாரென மணி ஓசை அதிரக் கேட்டது. கோயில் மாலை பூஜை ஆரம்பமாகியது......

அவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தனர். எல்லோருமே நாற்பது வயதைக் கடந்தவர்கள். இவனைக் கடக்கும்போது, அவள் இவனுக்கு வெகு சமீபமாக வந்து நின்று '.....யோஜனைகள் இன்னும் முடியவில்லையா...கோவிலுள்ளாவது வந்து இருக்கலாமே..... ' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். இவனுக்கு அவளைத் தெரியவில்லை. மேலும் அவனுக்கு சஞ்சலம் கொடுக்காவகைக்கு எண்ணியவள் போன்று '....ஏன் தனியாக ? உங்கள் நண்பர் கூட வரவில்லையா ? ' என்றதும், மனதில் ஒரு ஒளி பாய்ந்ததென அவள் யாரெனக் கண்டு கொண்டான். '...என்ன கௌரி. உன் மாதிரித் தோன்றியும் நீயென நினைத்துப் பெண்களோடு பேச முடிகிறதா ?...... ' என்று சொன்னவன், ஏனையவர்கள் எட்டிக் காத்து நின்று இருப்பதைப் பார்த்து, எழுந்து அவளுடன் நடக்கலானான். '.....அங்கே அந்த வீட்டிலேதானே....நான் இன்று காலையில்தான் வந்தேன்....சாப்பிட்டு இரவு வருகிறேன். உன்னிடம் சில விஷயங்கள் பேசித் தெரிந்து கொள்ளவேண்டும்....... ' என்றவன் கோபுர

வாயிலைத் தாண்டி அவர்களைப் பிரிந்து சென்றான். அவன் பேச்சுகளுக்குக் கௌரி பதில் பேசவில்லை. இருவரும் தத்தம் பழைய வாழ்க்கைச் சிந்தனைகளில் சென்று கொண்டிருந்தனர்.

இவன் வீட்டிற்குப் போகும் வழியில் இரண்டொரு சிநேகிதர்களைச் சந்தித்தான், வெகு அவசரத்திலும்--காலையில் மறந்தது எனத் தோன்றியதை-- தன்னுடைய பாலிய நண்பனைப் பற்றி விஜாரித்தான். அவர்கள் சொன்னது இவனுக்கு ஆச்சரியம் கொடுக்க இருந்தது. சில வருஷங்களுக்கு முன்னால் அவன் சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டு ஊரை விட்டுப்போய் விட்டதாயும் எக்காரணம் என ஒருவருக்கும் தெரியாதெனவும் அவர்கள் சொன்னார்கள்.

சாப்பிட்டு, சீக்கிரமாகவே கௌரி வீட்டிற்குச் செல்லுவதில் தன் மனது ஆர்வம் கொள்ளுகிறது என்பதை, இவன் கண்டுகொள்ளாமலில்லை. பழைய நினைவுகள் வசீகர மெனப்படுவதிலும், சோகமும் கலந்ததென இவனுக்குத் தோன்றியது. ஊரை விட்டோடிய தன் நண்பனுடன் வெகுகாலம் ஒன்றென வாழ்ந்தவள் கௌரி. எவ்வளவோ நாட்கள் அவனுடன் கூடிக் கொண்டு இவன், அவள் வீட்டிற்குப் போய்ப் பேசியிருக்கிறான். அவனை இப்போது பார்க்க முடியாதது வெகுவாக வருத்தமெனத் தோன்றுகிறது.

இவன் கௌரி இருந்த மேல சந்நிதித் தெருவை அடையும்போது, ஊர் அரவம் அடங்கி, அரை இருளில் தெருவே ஒரு தூக்கத்தில் ஆழ்ந்ததெனத் தோற்றம் கொடுத்தது. ஒரு காலத்தில் அத்தெரு முழுவதும் தேவதாஸிகள் இருந்தனர். வழி வழியாக வாழ்ந்து வந்த ஒவ்வொரு குடும்பப் பிரபல தாஸிகள், அவர்களின் இசை நாட்டிய கலைத் தேர்ச்சி, பழைய பெரிய மனிதர்களுடைய ஈடுபாடு.....என அநேக ஞாபகங்களைக் கொண்ட தெரு அது. ஒரு வசீகரம் பாழ்பட்டுக் கொண்டிருக்கும் காட்சியை அது இப்போது அளித்துக் கொண்டிருந்தது. யார் யார் இப்போது அங்கு வசிக்கிறார்கள் என்பதற்கில்லை. பழைய வீடுகள் நடுநடுவே பெரிய புது வீடுகளும் இருந்தன. திடுக்கிட எங்கிருந்தோ கேட்ட ஒரு நாயின் குரைப்பு, இவனைக் கடந்து ஓடிக் கொண்டிருந்தது. ஒரு சுவான லக்ஷியம் எட்டிய இருளிலும் உருவாகியது போலும்......

கௌரி, தன் வீட்டுச் சிறு திண்ணைத் தூணில் சாய்ந்து நின்றிருந்தாள். பாலிய கால தன் வாழ்க்கை நினைவுகளை எதிர் மாடத்தில் தெரிந்த விளக்கொளியில் கண்டு நின்றாள் போலும். அவள் நிழல் பாதிக்குமேல் பக்கவாட்டில் கீழ் குறட்டுச் சுவரில் ஆடிக் கொண்டிருந்தது. வீட்டு வாயிலை அடைந்தவன் அவள் நிழலைத்தான் முதலில் கண்டான்போலும். ஒரு பயங்கரம், இனிமையைத் தூண்டி இழுக்கும் பிரமையை அடைந்தான். இவனை, இவன் வந்ததை, கௌரி கவனிக்கவில்லை. '....என்ன கௌரி..... ' ' என்ற சப்தம் கேட்டு இவனைப் பார்த்தாள். எதிரே தீபத்தின் சுடரொளியில் தன் நிருத்தியம் கலைவுபட்டதென, ஒரு இனிய கனவு கலைய இந்த நினைவா என்பதில் இவள் மனம் வருத்தமடைந்து..... 'உள்ளே போகலாம் ' எனச் சொல்லி இவன் தொடர அவள் உட்சென்றாள். கூடத்தில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இவனை உட்காரச் சொல்லி அவளும் சிறிது தூரத்தில் உட்கார்ந்துகொண்டாள். வாயிற் கதவு திறந்தபடியே இருந்தது. சாத்தவில்லை. வாயிற் புரைக்கை விளக்கையும் உள்ளே எடுத்து வரவில்லை.

தன் நண்பனுடன், இவன் அநேகந்தரம் இந்த வீட்டிற்கு வந்து இருக்கிறான். கடந்த காலம் பிளவு கொண்டது எனத் தோன்றாவகைக்கு, நேற்றுக்கூடத்தான் இங்கு வந்ததான எண்ணம் கொடுக்கும் வகைக்கு, அவ்வீடு பழைய நிலைமையிலேயே தோன்ற இருந்தது. ஒரு வகையில், காலையிலிருந்து தன் மனம் கொண்ட சஞ்சலம் சிறிது குறைந்ததென இவனுக்கு தோன்றியது.

அநேக குடும்ப நினைவு ஞாபகங்களுக்கு வசீகரம் கொடுக்க நின்ற இந்த வீட்டில்தான் கௌரி, வழி வழியாக வந்த ஒரு கௌரவ தாஸி குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வந்தவள். தன் வழிக்குப் பின் வாரிசு இல்லாது தன் குடும்பமும் தன்னுடன் முடிவு பெறாது இருக்க, அதன் லக்ஷியத்தின் சாசுவதத்தை இப்போது வாழ்வில் கடைப்பிடிக்கிறாள் போலும். பெண்மையின் சக்தி தோன்ற, அவள், பார்ப்பவர்களுக்கு ஒரு இனிமை, கவர்ச்சி, ஒரு பயங்கரம் தோன்ற இருப்பவள் போல ஒருவரிடமும் ஒட்டாது, வெகு சகஜமாக யாரிடமும் பழகுபவள். சிற்சில சமயங்களில் அவள் நடையுடை பாவனைகளிலும் பேச்சிலும், ஒரு நிச்சயம் தோன்றா பிரமிப்புத் தெரிய இருக்கும்.

உட்கார்ந்து கொண்டவன் சிறிதுநேர மௌனத்திற்குப்பின் '.....இன்று காலையில்தான் வந்தேன்.... உன்னைக் கோவிலில் சந்தித்த பிறகு சிறிது நேரம் சென்று கேள்விப்பட்டேன்..... ' என்றான். அவள் குறுக்கிட்டு '.....என்ன..... ' என்றாள். '.....உன் சிநேகிதன்..... நம் நண்பன் ஊரை விட்டுப் போனதை உன்னை விட்டு. ' எனச்சொல்ல அவளும் சிரிக்கலானாள். '.......இல்லை நீங்கள் அதற்கு முன்பே ஊரைவிட்டுப் போய் விட்டார்கள்... ' அவள் பேசியது சிரிப்பது இவனுக்கு ஒரு வகையில் திருப்தி அளிப்பதாக இருந்தும் ஏன் என்பது புரியவில்லை.

இவன் '....உன்னைக் கேட்கலாம் என வந்தேன்... உன்னைவிட்டு ஊரைவிட்டுப்போன காரணம் ? வெகு வருத்தமாகத் தோன்றுகிறது. சொத்தை எல்லாம் விற்று ஊரை விட்டுப்போனது.... ' இவன் பேசுவது இவனுக்கே பொருத்தம் காணாது தட்டுத் தடுமாறியது போன்று இருந்தது. இவன் உதவிக்கென கௌரி பேச்சை ஆரம்பித்தாள். '.....எனக்கும் காரணம் தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள நீங்கள் வந்த காரணமும் தெரியவில்லை.....எதை, எப்படி நான் சொல்லமுடிகிறது ?..... ' ' என்று சொல்லி அவள் வருத்தத்தை, இவன் தன் சிரிப்பில் கலந்து கொண்டாள். தன் வீட்டை ஒரு தரம் மௌனமாகச் சுற்றிப் பார்த்துவிட்டு இவனையும் பார்த்தாள். அவள் அலக்ஷிய பாவத்தை இவனால் ஏற்கமுடியாது. 'என்ன இருந்தாலும்--தாஸி ' என இவன் மனம் எண்ணியது.

சிரித்துக்கொண்டே மேலும் கௌரி பேசலானாள். 'பழைய கதையை, கனவெனக் கண்ணெதிரில் மடிவதைக் கண்டும், அதில் ஒரு வசீகரம் உங்களுக்குக் காணமுடிகிறது. நடந்தது எல்லாம் கண்முன் அர்த்தம் மாறி இசைவு கொள்ள முடியவில்லை ? நடப்பில் என்ன முழுமை காண இருக்கிறது ? நடந்ததின் சாயையும் நடக்கப்போவதின் நிச்சயமின்மையும் கலந்து புதிராகப்படவில்லையா ? '

'என்ன கௌரி உன் வேதாந்தம், வேடிக்கையாக இருக்கிறதே.... ' என்றான்.

'ஆமாம், நான் ஒரு தாஸிதானே....ஒரு பெண் தானே உங்களுக்கெல்லாம்.... ' என்றவள், 'நீங்கள் சாய்ந்து கொண்டிருக்கும் தூணைக் கேட்டுப் பாருங்கள் சொல்லும்...உங்கள் நண்பர் போன காரணம்... ' இவன் நண்பன் இந்தத் தூணடியில்தான் உட்கார்ந்து பேசுவது இவனுக்கு ஞாபகம் வந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் முகமடையும் வசீகரம், அவள் வயதைக் குறைத்துக் கொண்டிருந்தது. அவள் பேச்சுகளும் பாவமும், பாலியக் குறுகுறுப்பை அளிப்பதாக இருந்தன.

'உங்கள் நண்பரைப் பற்றித் தெரிந்துகொள்ள நீங்கள் இப்போது என்னிடம் வந்து கேட்பதில் உங்களைக்கண்டு கொள்ள முடியாதா ? காரணம், நம்பிக்கை கொடுக்காவிடின் என்ன

பிரயோஜனம்......அவர் சொத்து சுதந்தரம் எல்லாம் விட்டுப் போய்விட்டார். ஏன், என்னையும் உங்களையும் கூட விட்டுவிட்டுச் சிலர் க்ஷேத்திராடனம் போய் இருக்கிறார் என்று சொல்லவில்லை ? அல்லது எங்கேயோ தாங்கள் க்ஷேத்திராடனத்தின்போது, அவரை, அவரைப் போன்ற ஒருவரைச் சாமியாராகக் கண்டு பேசுமுன் மறைந்த மர்ம மகிமையைக் கூறவில்லையா ? சில நாட்களில் நீங்கள் கேள்விப்படலாம்....அல்லது ஜீவன் முக்தனெனத் தோன்ற, தாடி வளர்த்துக் கொண்டு தமுக்குடன் எட்டிய அடிவானத்தையும், யாராவது தன்னுடன் பேச வருகிறார்களா என்ற ஆசையில் திருட்டுப் பின்னோட்டம் விட்டுக் கொண்டு, கடற்கரையில் அவரைக் கண்டதாகச் சொல்லவில்லையா ? கைகட்டி வாய்புதைத்து வரும் கதாசிரியர்களுக்கு ஞானோபதேசம் செய்ய--பூர்வாசிரமம்--கருகிய காதல்--சாதல் இவைகளைக்--கதாநாயகனாகத் தன்னைக் காணத் தமுக்கடிக்கவில்லை ? அப்படியாக நீங்கள் அவரைப் பார்த்துத் தெரிந்து கொண்டால் நானும் ஒரு வகையில் கதாநாயகியாயிருப்பேன் அல்லவா..... ? அவருக்குச் சாமி பூதத்தில் நம்பிக்கை இல்லை. நான் எப்போவாவது அவரைத் திடுக்கிடச் சாமி என்று அழைப்பது உண்டு. ரொம்பப் படித்த அறிவாளிதான். கூப்பிட்ட தோஷம் அவரே சாமியாராக ஓடிவிட்டார் போலும்.... ' என்னெதிரில் ஆக முடியவில்லையே என்ற வெட்கம் கொண்டு, நான் பார்க்க முடியாது, சாமியாராகத்தான் ஓடியிருக்க வேண்டும்.... ' எனச்சொல்லி '......நான் சொல்லுவது சரிதானே....... ' என்று சிரித்தாள்.

அவள் பேசுவது ஒரு சமயம் வேடிக்கையாகவும், பின்பு பரிகாசமாகவும் இவனுக்குத் தோன்றியது. மேலும் அப்போதைக்குப் புரியாது பின்பு புரியவிருக்க ஏதோ உளதாகியதாகவும் பட்டது. ஆதிநாளிலிருந்து தனக்கு அவளைப்பற்றித் தெரிந்த விதம், எப்படி என எண்ண முடியவில்லை. அவளை அவன் நேராகப் பார்க்காது, அடிக்கடி வீட்டைச் சுற்றிப் பார்வை கொண்டிருந்தான். ஆங்காங்கே ஒளிபடராத இருள்மூலை முடுக்குகளில் பழைய நினைவுகள் ஒன்று கூடிப் புரிந்து கொள்ள முடியாவகையில், சதி ஆலோஜனை செய்து கொண்டிருந்தன போலும். முற்றத்தில் ஒரு முல்லைக்கொடி, பகலில் சூரிய வெப்பம் காட்டாது, பந்தலின் மேலே படர்ந்து இருந்தது. இந்த இரவில், பார்வையில்படாது, மலர்ந்த மலர்களினின்றும் பிரிந்து வரும் மணம் வீடு நிரம்பக் கணிசம் கொள்ளுகிறது. வானின்று நுகர ஊர்ந்துவரும், ஒரு கனிவு இவன் மனதில் படுவது என இது இல்லை.

பேசிய பிறகு ஏன் பேசினோம் என்ற மனக்குறை ஏற்படுவது எல்லோருக்கும் உண்டு. ஆனால் கௌரிக்கு அது மாதிரி தோன்றவே முடியாது. அவள் பேசியது அவள் பேசினதாகவே தோன்றாது சப்தம் கொள்ளுகிறது. பேசும்போது அவள் சரீர ஒரு சிறு நெளிப்பில், தான் பேசியதையே தன்னின்றும் எப்படி உதறிவிடுகிறாள் ? தான் பேசியதைத் தானே கேட்பவள் போன்று இருக்கிறது அவள் முகபாவம். எவ்வகையில், காரியத்தில், எவ்விதப் பொறுப்பையும் சுமக்காமல் உதறி, அவளால் வாழ்க்கை காணமுடிகிறது ?

'......அல்லது தன்னை விட்டுப் போன தன் மனைவியை தேடிக்காண ஓடியிருப்பாரோ என்னவோ, யாருக்குத் தெரியும் ? ' என்று அவள் சொல்லி முடித்தது இவனை யோஜனையினின்றும் கலைத்துத் திடுக்கிட வைத்தது. அவள் அறியாமையை நினைக்க, ஒருபுறம் வேடிக்கையாகவும் இருந்தது. தன்னைப் போலவே தன் நண்பனும் கலியாணம் ஆகாதவனென்பது இவளுக்குத் தெரியவில்லை போலும் '

திறந்து இருந்த வாயிற்படியைத் தாண்டி, வெகு சமீபம் வரை வந்தவளை இவன் கவனிக்கவில்லை. '....பேச்சுச் சத்தம் கேட்டுப் பார்க்க வந்தேனக்கா ' என்று சிரித்துக்கொண்டே, ஒருவள் வெகு நிதானமாக வந்து கூடத்தில் ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்டாள். அவளைத் தொடர்ந்து வந்த ஒரு சிறுவனைப் பார்த்துக் கௌரி, 'தம்பி,

ஐயாவுக்குக் காபி, வெற்றிலைபாக்கு, வாங்கி வா..... ' என்றவளை ஒன்று வேண்டாமென இவன் தடுத்தும் சோடாவாவது வாங்கி வரச் சொன்னாள். மேலும் இவன் பணம் எடுத்துக்கொடுப்பதைத் தடுத்து '.....என்ன ஐயா செய்வது ? அவமானப்படுத்தவா ? விருந்தாளியாக வந்தவரின் அபேக்ஷைகளை நாங்கள் திருப்தி செய்யவேண்டாமா....என்ன அனசூயா நான் சொல்லுவது ' என்று வந்தவளைப் பார்த்துக் கேட்டாள். 'ஆமாம்.....இவர் நம்ப சாஸ்திரபுராணம் படித்ததில்லையோ என்னவோ..... ' என்று ஒரு அசட்டுச் சிரிப்புத் தோன்றச் சொன்னாள்.

அன்று இரவு இவன், அவர்களுடன் பேசிவிட்டு வீடு திரும்பும்போது இரவு வெகுநேரம் ஆகிவிட்டது......

மறுநாள் காலையிலிருந்தே இவனுக்குக் கௌரி வீடு செல்லும் ஆவல் தோன்ற ஆரம்பித்தது.....அன்று மாலை சீக்கிரமாகவே அவள் வீட்டிற்குச் சென்றான். நேராக உள் சென்றவன், இரண்டொரு பெண்களுடன் அவள் பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்தான். இவனையும் கூப்பிட்டு உட்காரச் சொன்னாள். நேற்றுக் கோவிலில் பார்த்தவர்கள் எனவும், அவர்களும் தாஸிகளெனவும் கண்டு கொண்டான். சிறிது நேரம் ஊர் உலகம் பேச்சுகளெனப் பேசினர்.

கௌரி இவனைப் பார்த்துக் கேட்டாள். 'நேற்றுத்தானே வந்தது.....மனைவி குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுதானே..... ' அவள் வசீகரம் மிகக் கடுமையாக இவனைத் தாக்கியது. மனது ஒரு வகையில் குதூகலம் கொண்டது.......

'நீ நினைப்பது எல்லாம் இப்படித் தவறாக இருக்கிறதே ' நானும், அவனும் கல்யாணமே செய்து கொள்ளாதவர்கள்--என்னைப் பற்றித் தெரியாதது இருக்கட்டும். அவனைப்பற்றிக்கூட அவ்வளவு பழகியும் உனக்குத் தெரியாதது சிரிப்பாகத்தான் இருக்கிறது...... ' என்று நெருங்கிப் பேசும் வகையில் கூறினான். ஏனையோரின் ஒருமித்த சிரிப்பில், இவள் கலந்து கொள்ளவில்லை. அதன் எதிரொலி என சிறிது சென்று இவள் முகத்தில் புன்சிரிப்புத் தோன்ற, அதிலும் ஒரு கடுமை தொனித்தது போலும். ஆண்களின் தன்மை ஒருவரிடமும் ஒருவிதத்திலும் சரியெனப்படவில்லை. ஆண் பெண் பாகுபாட்டை, உலகே தவறாகக் கண்டு கொண்டிருக்கிறது. உறவு, பந்தம், பாசம், எல்லாமே வியர்த்தமாகத் தோன்றும் வகைக்கு, தர்மமும், சீர்குலைந்து, ஒத்துப் போவதாகக் காண்கின்றனர் போலும். இவள் மனம், யாரை எதற்காக நொந்து கொள்ளுவது என்பது புரியாது தவித்தது.

'.....எவ்வளவு தவறு. தெரிந்து கொள்ளாதது எவ்வளவு சரியாகவும் இருக்கிறது.... ' என்று ஆரம்பித்த கௌரியைத் தடுத்து...... . 'சரி தவறு எல்லாம் தவறாகவே உனக்கு ஒன்றுதான்.... ' என்றான். எல்லோரும் சிரித்தனர். கௌரியின் சிரிப்பு, மேலும் தன்னைப் பற்றிய அவர்கள் எண்ணம் என்னவென்பதும் புரியவில்லை. மேலே யோசிக்க முடியாது கௌரியைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பைத்தியக்காரச் சதியில் சிக்கித் தவிப்பதான லேசான ஒரு எண்ணம். தன்னை விடுவித்துக் கொள்ள கௌரியை விட்டு வெளிச் செல்லுவதும் மனதுக்குப் பிடித்தமாக இல்லை.

'...ஐயா... ' என்று இவனைக் கூப்பிட்டு அவள் பேச ஆரம்பித்தது ஒரு ஆறுதலாக இருந்தது... 'ஐயா நான் ஒரு பெண்--அதுவும் ஒரு தாஸிப் பெண். தாஸிகளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்து இருந்தாலும் பெண்களையும் பற்றித் தெரியுமோ... ? நீங்கள் கல்யாணம் ஆகாதவர்கள். செய்து கொள்ளாதது ஒரு வகையில் சரி. யாரோ, ஒருவன் மனைவி என,

யாரோ ஒருவன் மனைவி என உங்களிடம் கற்பிழந்துகொண்டு நிற்க முடியாத வகைக்கு... ' என்று சொல்லிச் சிறிது பேச்சை நிறுத்தினது, இவனுக்குத் திடுக்கிட இருந்தது. சிறிது கோபத்தில் 'என்ன...என்ன சொல்லுகிறாய்--தனக்குப் புரியாது, பிறருக்கும் புரியாத வகைக்கு... ' என்றான் இவன். இவன் பேசுவதையே கவனிக்காதவள் போன்று, 'நாங்கள் பெண்கள்-- அதுவும் தாஸிப் பெண்கள். ஒருவிதத்தில் கல்யாணமானவர்கள், மனைவிகள் எனவும் கொள்ளமுடியும். கல்யாணமான ஒருவள், மறதியில் தன் கணவனை எங்கேயோவிட்டு, எங்கும் தேடுவதான பாவனையை என் மனது அடிக்கடி கொள்ளுகிறது ஐயா. ஆண்களால் கலியாணமின்றி வாழமுடியும். பெண்களால் முடிகிறதில்லை. இந்து தர்மம் அப்படித்தானே.... கன்னியென வாழவும் கூடாது.... முடியாது. குமரிக் கன்னியும் ஒருவனை அடைய ஏங்கி, சாசுவதத்தில்தானே, கன்னியெனவாகிறாள்..... மனைவி எனக் கணவனிடம் வாழ்க்கைப்படுவதி, தன் மனத் தூய்மையை, அவனால் எப்போதும் இழக்காமல் இருக்க முடியும் என்று எந்த மனைவியால் நம்பமுடியும் ? தன் புனிதம் தன் கணவனால் பறிபோக, கற்பிழந்தவளாகத் தன்னை அவள் அப்போது கருதமுடியாதா ? ஒருக்கால் உங்களைப் போன்றவர்களால் அவ்வகையில், கணவனாக முடியும் போலும்.... ஆனால் கல்யாணம் செய்துகொள்ளாமல் நிற்கிறீர்களே..... பெண்ணைப் படைத்த 'அவன் ' பெண்மையையும் மறக்கவில்லை..... ' என்று சொல்லியவள் 'என்ன அனசூயா நான் சொல்லுவது ' என்று அவள் அசட்டு ஆமோதிப்பைப் பெற நினைத்து அவனைப் பார்த்து சிரித்தாள். 'உங்கள் நண்பரை அவசியம் கண்டு கொள்ளுங்கள்..... அவர் புரிந்துகொண்டவர் ஒருவள் 'நாழிகை ஆகவில்லையா அக்கா ' ' என்று கேட்டாள். 'ஆமாம் ' என்றவள் இவனைப் பார்த்து 'நீங்களும் வாருங்கள் கோவிலுக்கு....நாழிகை ஆகிவிட்டது ' என்றாள் கௌரி.

மாலை சூரியன் மறைய இருக்கிறான். சந்நிதித் தெரு முழுவதும் சூரிய ஒளி பரவி இருந்தது. கோபுரம் தாண்டியும், கொடி மரம் வரையிலும்கூட இவனும் அவர்களுடன் கூடச் சென்றான். முன் நீண்டு சென்ற நிழல்கள் சலித்து ஒன்றைச் சென்று கலந்தும் விலகியும் தெரு வழியே சென்று கொண்டிருந்தன. முன் சென்ற அவர்கள் உட்சென்று மறையும் வரையில் பார்த்து நின்று இருந்தான். அப்பால் கர்ப்பக்கிருஹ சரவிளக்குகள் ஏற்றப்பட்டுத் தெரிந்தன. ...உட்சென்று மறைந்தவர்களை இவனால் பார்க்கமுடியவில்லை..... விளக்குகள் கலைந்து, மறைந்து, தெரிந்து கொண்டிருந்தன.

# ...ப்பா

**தி.ஜானகிராமன்**

நான் தூங்குகிறேனா என்ன ' இல்லையே.....நான் விழித்துக்கொண்டிருக்கிறேனே. பின்னே ஏன் இந்தச் சந்தேகம் ? ஒரு நாய் எப்படி இங்கிலீஷில் குரைக்கும் ?

நாய்க்கு மொழி ஏது ? இருக்கிறது ஒரு மொழிதானே ? குரைப்பு ஒன்றுதானே மொழி...இல்லாவிட்டால் மீமீ என்று சன்னக் குரலில் குழையும் வாலையும் குழைக்கும். பின்னே ஏன் எனக்கு மட்டும் ஒரு நாய் இங்கிலீஷில் குரைப்பதுபோல் கேட்கிறது ' கனவா ' இல்லையே. அரைத் தூக்கம் கூட இல்லையே. நல்ல முரட்டு விழிப்பாகத்தானே உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். இங்கிலீஷில்தான் குரைக்கிறது. என்ன வார்த்தைகள் இவை...

கூர்ந்து கேட்கிறார் அவர்.

'வௌவ் வௌவ்...டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ்...வௌவ் வௌவ்...டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ்... வௌவ் வௌவ்...டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் ' இப்போது தெளிவாகக் கேட்கிறது...ஆமாம். ஒரு நாய்தான் ....டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் என்றுதான் குரைக்கிறது...இது என்ன டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ்...அப்படி என்றால் ?

அவர் வாசல் விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்து வெளியே பார்த்தார்.

குரைக்கின்ற நாய் அவர் பக்கம் திரும்பிற்று.

'கூப்பிட்டார்களா ? ' என்று கேட்கிறது.

'இல்லையே. '

'பின் ஏன் விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்தீர்கள் ? '

'நீதானே இங்கிலீஷில் குரைத்தாய் ? '

'இங்கிலீஷிலா குரைத்தேன் ? '

'பின்னே, டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் என்ன தமிழா; இல்லே உருது என்ற எண்ணமோ ? '

'எனக்கு அதெல்லாம் தெரியாது. அந்த ஜகதுசாரும் உப்பிலியும் பேசிக்கொண்டிருந்தார்கள். கேட்டேன். சரி, நம்ம விஷயமாச்சே என்று அந்த வார்த்தையைப் பிடித்துக் கொண்டேன். அதையே சொல்லிக் குரைக்கிறேன். '

'இதுக்கு என்ன அர்த்தம் ? '

'அதெல்லாம் இங்கே நடுவாசலில் நின்று பேச முடியாது. '

'உள்ளே வந்து சொல்லேன். '

'நான் உள்ளே வரலாமா ? '

'ஏன் வரக்கூடாது ? இங்கிலீஷில் குரைக்கிறாய் ? '

'தெரு நாய் ஆச்சே நான். '

'பரவாயில்லே. இங்கிலீஷில் குரைக்கிறபோது, உள்ளே வந்தால் என்ன ? வா. வா...உட்காரு... '

'நான் உட்கார வேண்டாம். அதெல்லாம் அதோ சோபாவில் வெல்வெட் குஷனில் சுகமாகத் தூங்கி, என்னைக் கண்டதும் பயந்து, இறங்கிச் சமையல் உள்ளுக்குள் ஓடுகிறதே...அந்த மியாவ் மியாவுக்கே உங்கள் சொகுசு சோபாவெல்லாம் இருக்கட்டும். '

'சரி நீ குரைத்ததற்கு அர்த்தம் சொல்லு. '

'சொல்கிறேன். ஆனால், நான் ஒன்று கேட்கிறேன். முன்னால் அதுக்குப் பதில் சொல்லுங்கள். அப்புறம் நான் சொல்லுகிறேன். '

'என்ன ? '

'நாயேன் உன்பாலன்றி எங்கே செல்வேன் ' என்று ஒரு பாட்டில் வருகிறதே, கேட்டிருக்கிறீர்களா ? '

'கேட்ட ஞாபகம். '

'நாயேன் ஏழைபால் தயை செய்வாயே ' என்ற பாட்டில் வருகிறது. '

'ஆமாம் ஆமாம்...பாபநாசம் சிவன் பாட்டு என்று நினைக்கிறேன். '

'இருக்கலாம். பாடினவர் புத்திசாலிதான். பைரவி ராகத்தில் பாடியிருக்கிறார். பைரவி என்றால் எங்கள் நாய் இனத்தையும் குறிக்கும். '

'பொல்லாத நாயா இருக்கியே ' '

'நல்ல நாய் என்று சொல்லுங்கள். நாயேன் உன் பாலன்றி எங்கே செல்வேன் என்று ஏதோ நாயாரைப் பற்றிக் கேட்கிறான் ஒரு மனுஷன். இதன் அர்த்தம் என்ன ? '

அவர் யோசித்துவிட்டு நாய்க்குப் பதில் சொல்கிறார்: 'நாய் நன்றி உள்ள பிராணி. எசமானை விட்டு எங்கும் போகாது. வேறு யாரிடமும் வாலைக் குழைத்துக்கொண்டு பல்லை இளிக்காது. '

'கரெட்...எங்கள் எசமானில்லாத ஒருவன் நூறு பிஸ்கட்டைக் காட்டினால்கூடப் பல்லை இளித்துக்கொண்டு ஓடமாட்டோம். கட்சி மாறமாட்டோம். அப்படி இருக்கும் போது நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு, நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்றெல்லாம் கட்சி மாறும் மனிதர்களை ஏன் திட்டுகிறார்கள் ?எங்களைத் திட்டுகிறார்களா ? அந்த மனுஷங்களைத் திட்டுகிறார்களா ? '

'...... '

'பதில் சொல்லுங்கள் '

'..................... '

'என்ன யோசிக்கிறீர்கள் ? '

'எசமான் இருக்கிற நாய்தானே, இன்னொரு ஆள் நூறு பிஸ்கட்டைக் காட்டினால் கூடப் பல்லை இளித்துக்கொண்டு போகாது என்று சொன்னாய். எசமான் இல்லாத நாய்கள் எத்தனை இருக்கு ?

'என்னைப் போல இண்டிபெண்டெண்ட்டா, சுதந்திரமா, எசமானே இல்லாத நாய்களைச் சொல்கிறீர்களா ? '

'ஆமா. '

'நீங்கள் இந்தக் கேள்வி கேட்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். எனக்கு இந்தத் தெரு, எசமான். இந்தத் தெருவில் உள்ள நீங்கள், இன்னும் மற்றவர்கள், அவர்களுடைய குடும்பம், குழந்தைகள் எல்லோரும் சேர்ந்து மொத்தமாக எசமான். அப்படிச் சொல்வதை இந்தத் தெரு என் சொத்து மாதிரி. நான் உங்களுக்குக் காவலாளி ' நான் இதை விட்டு வேறு எங்கும் போகமாட்டேன். இந்த ஊரிலேயே வேறு தெருவுக்கு அல்லது வார்டுக்கு தேர்தலுக்கு நிற்க மாட்டேன். நான் அந்த வேறு தெருவைச் சேர்ந்தவன் என்றெல்லாம் 'டூப் ' அடிக்கமாட்டேன். நாய்களும் அதை ஒப்புக்கொள்ளாது. இந்த நாய் இந்தத் தெரு, அந்த நாய் அந்தத் தெரு. அந்தத் தெரு நாய் இங்கே வந்தாலும் குதறித் தீர்த்துவிடுவேன். வேற்று நாய் இங்கே வரவும் துணியாது. இண்டிபெண்டெண்ட் என்று யாரும் இந்த நாய் வர்க்கத்தில் கிடையாது. ஒரே தெருவுக்குள் ஒரு நல்ல மனிதன் இருந்தால் பிரியமாக இருப்பேன். பொல்லாத மனிதன் இருந்தால் ஒதுங்கி நிற்பேன். இந்த அளவில் இண்டிபெண்டெண்ட் என்று சுமாராகச் சொல்லலாம். நல்ல ஆள்களிடம் பிரியம் காட்டுகிறவர்கள்தான் இண்டிபெண்டெண்ட், அதுதான் நிஜமான சுதந்திரம். '

'ரைட். ஆனா நீ என் கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலியே ? '

'எது ? '

'டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ். '

'நாசமாய்ப் போச்சு. அதைத்தான் இத்தனை நேரமும் சொல்லிக்கொண்டிருந்தேன். ஜகது எதையோ உப்பிலியிடம் சொல்லிக்கொண்டிருந்தார். இந்த உலகத்தில் தான் படைத்த ஜீவஜந்துக்கள் எல்லாவற்றுக்கும் ஆண்டவன் ஒரு நிலம்-- ஒருடெரிடெரி கொடுத்திருக்கிறாராம். அந்த நிலத்தில் வேறு யாரும் உரிமை பாராட்டக்கூடாது. அது அதுக்குத் தன் பிராந்தியத்துக்கு மேல் ஒரு ஆட்சி, ஒரு உரிமை உண்டு. அதுதான் டெர்ரிடோரியல் இம்பரேட்டிவ் என்று, ஜகது உப்பிலியிடம் சொல்லிக்கொண்டிருந்தார். கட்சி மாறிகளைப் பார்த்து நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று கிண்டல் பண்ணுகிறான்களே, நெசம்மா நாய்களுக்கு எது தெரிஞ்சதுன்னா நம்மை எல்லாம் என்ன பண்ணுமோ, என்று ஜகது சொல்லிக்கொண்டிருந்தார். 'கரெக்ட் ' தெருவுக்கு ஒரு நாய் இருந்தால் போருமே, ஆயிரம் பூட்டுக்குச் சமானம் ' என்று உப்பிலி மாமாகூட சொல்லிக் கொண்டிருந்தார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தேன். இந்த 'டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் ' என்கிற வார்த்தை கடகடவென்றும் படபடவென்றும் அதிகாரத்தை வெளிப்படுத்துகிற மிடுக்கு வார்த்தையா இருந்தது. அதைச் சொல்லிக் குரைக்கிறேன். குரைக்கக் குரைக்க எனக்கே ஒரு தன்னம்பிக்கை, மிடுக்கு, பெருமிதம் எல்லாம் உடம்பில் மதமதக்கிறது. இனிமேல் உப்பிலி மாமா மாமாங்கத்துக்கு ஒரு தடவை வீட்டைப் பூட்டிக்கொண்டு போனால்கூட வாசல்பூட்டு, கொல்லைப்பூட்டு மட்டும் போட்டால் போது. நான் இருக்கிறேன். நீங்களும்

கவலைப்படவேண்டாம். இந்தத் தெருவுக்கு நான் ராஜா. இது என் டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ். '

நாய் கம்பீரமாகப் பார்த்து.

'நல்ல ஆளப்பா நீ. '

'ஆளப்பாவா ? நாயப்பா.... ' என்று நாய் வெளியே போயிற்று.

'கதவைச் சாத்திக்கொள்ளுங்கள். வௌவ் வௌவ் வௌவ், டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ். '

ஏதோ தெருவுக்கே பட்டா வாங்கிவிட்டது போல், நாய் வீறாப்பாகக் குரைக்கத் தொடங்கிற்று.

## சங்கிலி

**வண்ணதாசன்**

'புள்ளை கழுத்தில சங்கிலி கிடக்கான்னு பாருங்க ' '-- பஸ்ஸை விட்டு இறங்கியும் இறங்காமலும் சொன்னாள். இறங்குகிற கூட்டத்தின் கடைசி ஆள் தரையில் காலை வைப்பதற்குள்ளாகவே மூன்று நான்குபேர் பஸ்ஸிற்குள் தங்களைத் திணித்துக்கொண்டிருக்க, குழந்தையும் கையுமாக விலகி வந்து வந்து நின்றவன்--

'இந்தா, நீயே பாத்துக்கோ ' என்று கொஞ்சம் கோபமாகவே அவளிடம் குழந்தையை நீட்டினான். குழந்தை அதன் நான்கைந்து வயது உற்சாகத்துடன், கூட்டத்தை, பஸ்ஸை, இரைச்சலை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. கழுத்தில் செயின் கிடக்கிறதையே அறியாத மலர்ந்த விழிகளுடன், அதனுடைய உலகத்தின் வேலியற்ற சந்தோஷத்தில் மிதந்து நின்றது முகம். அதை வாங்கிக் கொண்டே, அவனுடைய கோபத்தை ஏற்றுக்கொள்கிற ஒரு உள் உதட்டுச் சிரிப்புடன் அவள் நடந்துகொண்டு வந்தாள். அவளுடைய கை தன்னையறியாமல் குழந்தையின் கழுத்தில் கிடந்த செயினையும், அதன் சட்டையுடன் ஊக்கால் மாட்டப்பட்டிருக்கிற இடத்தையும் தடவி அதன் பத்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தது.

அவன் மறுபடியும் கொஞ்சம் அதிகமாகக் கோபப்பட்டான்.

'நான்தான் வீட்டைவிட்டுப் புறப்படும்போதே செயின் எல்லாம் என்னத்துக்குப் போடுதே, நாம என்ன கல்யாண வீட்டுக்கா போறோம்...ஃப்ரண்டு வீட்டுக்குத்தானேன்னேன் கேட்டாத்தானே. '

அவனுடைய கோபத்தை மேலும் குறும்பாகக் கிளறி விடுகிறதுபோலே, இன்னும் கொஞ்சம் அதிகமாகவே சிரித்துக்கொண்டு-- 'கல்யாண வீட்டுக்குன்னாப் போட்டுக் கிடலாமோ. அப்பவும்தான் சொல்வீங்களே தங்கச் சப்பரம் புறப்பட்டாச்சான்னு. '

அவளுடைய சிரிப்பை இதைச் சொல்லும்போது அவள் குரலில் ஏறி இறங்கின நடிப்பை உணர்ந்தபோது அவனுக்கும் சிரிப்பு வந்தது. 'எத்தனை தடவை நீ, நான் அப்படிச் சொன்ன உடனே எல்லாத்தையும் கழட்டி ஒழுக்கறைப் பெட்டியிலே வச்சுட்டுப் போயிட்டே ' அப்படிப் போனதிலே மற்றவங்க உன் வெறுங் கழுத்தைப் பார்த்து வான்னு கேட்காமப் போயிட்டாங்க ' என்று மறுபடியும் கேட்கலாம். ஆனால் மறுபடியும் சிரிக்கத்தான் போகிறாள். எதுக்கு இவ்வளவும் சொல்கிறான் என்று யோசிக்கப்போவதில்லை. கண்டிப்பாக நகையெல்லாம் போடக்கூடாது என்று சொல்லவும் முடியவில்லை. எல்லாம் அவள் கல்யாணத்தோடு போட்டுக்கொண்டு வந்தது இப்போது குழந்தைக்குப் போட்டிருக்கிற வாத்து டாலர் போட்ட செயின்கூட அவள் அம்மா வீட்டிலிருந்து கல்யாணத்தில் போட்டதுதான்.

இவள் கேட்கமாட்டாள். இன்னொருத்தி என்றால் தான் புதிதாக எதுவும் செய்து போடாததை இங்கே குத்தி அங்கே வாங்குகிறது போல 'கல்யாணத்துக்குப் பொறவு நீங்க பண்ணிப் போட்ட மூணு வடம் சங்கிலியையும் ஒட்டியாணத்தையும் வேணும்னா நான் ஒரு இடத்துக்கும் போட்டுக்கிட்டு வரலை ' என்று சொல்லி குரூரமாகத் திருப்திப்படலாம். அப்படியும் இருப்பார்கள். அப்படிச் சொல்லக்கேட்டு அதற்குப் பதில் சொல்லமுடியாது குனிபவர்களும் இருப்பார்கள்.

இவன் இப்படியாக யோசித்துக்கொண்டு வருவதை எப்போதாவது ஒன்றாக வெளியே வருகிற இவன், இதே போன்ற கோபத்துடனேயே இருந்து, இந்தச் சாங்காலத்தையே இதன் மூலம் மகிழ்ச்சிக் குறைவானதாக்கிவிடக்கூடாது என்று உணர்ந்து, அதைத் தவிர்ப்பதுபோல்--

'உங்க ஃப்ரண்ட் வீட்டில இருப்பாரா இப்ப ? ' என்று ஒரு பொதுவான கேள்வியைக் கேட்டாள். குழந்தை அவளுடைய தோள் பக்கம் திரும்பிப் பின்னால் நகர்கின்ற மரங்களை, வாகனங்களை, சைக்கிள் ரிக்ஷாவின் அலாதியான மணியடிப்பை எல்லாம் பார்த்துக்கொண்டு வந்தது.

'இருப்பான். இல்லாமல் எங்கே போகப்போறான். எவ்வளவு நாளாகக் கூப்பிட்டுக்கிட்டு இருக்கான். இன்றைக்குத்தான் நமக்கு நாள் வாய்ச்சிருக்கு இதுக்கு ' என்று அந்தப் பிரியமான சிநேகிதனின் ஞாபகமும், அந்த ஞாபகம் கிளம்பின அவனுடைய முகமும் பாவனைகளும், கருநீல ஈறு தெரியச் சிரிக்கிற நிறைந்த சிரிப்பும், ரொம்பப் பல சமயங்களில் அதிகபட்ச மனிதாபிமானத்துடன் அவன் நடந்து கொள்கிற முறைகளும் டா கொண்டுவந்து விநியோகிக்கிற ஒரு கிழிந்த டிராயர்ப் பையனிடம்கூட ஒரு நெருக்கத்தை உடனடியாக அடைந்துவிட முடிகிற அவனுடைய சுபாவமும் எல்லாம் அவனுக்குள் சொல்லமுடியாத ஒரு சந்தோஷத்தைக் கொடுத்தது.

காரியம் காரணம் எல்லாம் பார்த்துப் பழகுகிறவர்களே அதிகம் இருக்கிற அலுவலக உலகத்தில், தன்னை இவன் சிநேகிதனாகத் தேர்ந்து எடுத்துக்கொண்டது எவ்விதம் என்று புரியாது. ஆனால் அப்படி நிகழ்ந்ததற்கான நெகிழ்ச்சியுடன் நடந்துகொண்டிருந்தான். அந்தச் சிநேகிதத்தின் ஒட்டு மொத்தமான பரிமாணத்தை, இதோ அவன் வீட்டைச் சமீபிக்கிற இப்போதுதான் உணர்ந்ததுபோலவும், உணர்ந்ததை ஒரு பாடலைப் போலப் பாடி நடக்கவேண்டிய நேரம் இதுவென்றும் அவனுக்குப் பட்டது. குழந்தையை மனைவியிடமிருந்து வாங்கி, மாறி மாறிக் கொஞ்சிக் கீழே விட்டு நடத்திக் கூட்டிக்கொண்டு போனான். கூட ஒருத்தி வாராங்கிறதாவது ஞாபகமிருக்கட்டும் ' என்று சீண்டிக்கொண்டு அவளும் உடன் நடந்தாள்.

மனதின் அலைகளுக்கேற்பச் சுற்றுப்புறமும் வர்ணங்கள் அடைந்ததுபோல எல்லாம் கலகலத்துக் கொண்டிருந்தது. அவர்களைச் சுற்றி, ஏப்ரலின் மலர்ச்சியைக் கிளை நுனிகளில் ஏந்திக்கொண்டு கம்மென்று வாகை மரங்கள் வாசனையைப் பெய்து கொண்டிருந்தன. வெகுதூரம் வரை கூடவே வந்து நம் விரட்டலுக்குப் பின் மனமின்றித் திரும்புகிற செல்லமான வீட்டு நாய்க் குட்டியாக வேப்பம்பூவின் வாசனையும் விட்டுவிட்டுக் கூடவே வந்து போய்க்கொண்டிருந்தது.

ஒரு டவுனின் கடைசியில், இப்படி ஒரு கிராமத்தின் அடையாளங்கள் அடங்கிய தெரு இருப்பதே நன்றாக இருந்தது. கட்டிடங்களுக்கு மத்தியில் துண்டு விழுந்தது போல ஒரு மைதானம் இருந்தது. பிந்தின அறுவடைக்குக் களம் போட்டுப் பிணையல் அடித்துக் கொண்டிருந்தார்கள் அதில்.

அந்தத் திருப்பம் தாண்டினால் சிநேகிதனுடைய வீடு தான். சட்டென்று கொரகொரவென்று ஒரே சப்தமாக வந்தது. நூறு நூற்றைம்பது என்று பழுப்பும் வெள்ளையுமாக ஒன்றுக்குள் ஒன்று புகுந்து கலைந்து நெருங்கி மறுபடி முன்புகுந்து செருகி என்று தாராக் கோழிகள் கொஞ்சம் கொஞ்சமாக அடைத்துப் பெருகி இவர்கள் பக்கம் வந்து சற்றுப் பள்ளமாக மடிந்து மைதானத்துக்குள் இறங்கியது. குழந்தை தாராக் கோழிக்குப் பின்னால் ஓடியது.

அது கொஞ்சம் ஓடுவது வரை அனுமதித்துவிட்டு, ஒரு பாதுகாப்பற்ற எல்லைக்குள் அது நுழைத்துவிட்டதைத் திடாரென்று கண்டதுபோல் 'ஓடியா, ஓடியா. அங்கே எல்லாம் போகக்கூடாது. பூச்சாண்டி பிடிச்சிக்கிட்டுப் போயிடுவான். யாராவது சங்கிலியை அறுத்துக்கிட்டு இப்படி குறுக்கே மைதானத்தில் விழுந்து ஓடினாக்கூடத் தெரியாது ' என்று தானே அந்த இடம் போய் குழந்தையை அந்த அரூபமான திருட்டுக் கைகளிலிருந்து காப்பாற்றிவிட்ட நிம்மதியுடன் வந்துகொண்டிருந்தாள். குழந்தையின் பார்வை அதன் பிடிமானத்திலிருந்து நழுவி தாராக்கோழிகள் போவதையே துரத்திப் பிடித்தது. 'போவ்...போவ்வ் ' என்று வாத்துக்காரன் சத்தம் போடுவது மைதானத்தின் மத்தியில் கேட்டது.

வீட்டில் சைக்கிள் இருந்தது.

அவனுடைய சிநேகிதன் உபயோகிக்கிற அந்த லேடாஸ் சைக்கிள் இருந்தால் அவன் இருக்கிறதாகத்தான் அர்த்தம். வீட்டு வாசலில் காட்டுக்கொடிகள் போல விறைப்பாக முறுக்கிக்கொண்டு மேலேறிப்போய் படர்ந்து கிடக்கிற ரங்கூன் க்ரீப்பரின் அதிகம் கவர்ச்சியற்ற எளிமையான நீண்ட பூக்கள், இன்னும் இருட்டாத சாயங்கால மங்கல் வெயிலில் தொய்வாக அசைந்து ஆடின. உதிர்ந்ததும் வாடினதுமாக அந்தத் தாழ்வாரப் பகுதியும் மிகுந்த உபயோகத்திற்குள்ளான பிரம்பு நாற்காலிகள் கிடக்கிற இடமும், வாசலும் பூச்சிந்தின கோலத்துடன் இருந்தது.

சின்னப் பிள்ளைகளுக்குப் பூவை விடவும், இலைகளை விடவும், அந்திமந்தாரை விதைகளை விடவும், பசலிப் பழத்தை விடவும் கூடின சிநேகிதம் உண்டா என்ன ? 'வாங்க வாங்க ' என்ற சிநேகிதனும் அவருடைய மனைவியும் வரவேற்று அழைத்தபோதும், எல்லோருமாக உள்ளே சென்ற போதும் எல்லாம் குழந்தை வாசலிலேயே தங்கி, அவற்றைக் கைநிறைய, மடி நிறையச் சேகரிக்க ஆரம்பித்துவிட்டது. தனிமை தெரியாத, பயம் தெரியாத, தனக்குத்தானே பேசிக் கொள்கிற அந்தச் சின்னஞ்சிறு உலகத்தின் சந்தோஷத்துடன் அது தனித்திருந்தபோது உள்ளிருந்தே பதறிக்கொண்டு வந்து, ' நல்ல வேளையாப்போச்சு. இங்கேதானே இருக்கே. கழுத்தில் செயின் வேறே கிடக்கு. எங்கேயும் தெருவாசலுக்குத்தான் போயிட்டயோண்ணு

பயந்து போயிட்டேன் ' என்று குழந்தையைப் பார்த்துச் சொல்லி, அதன் இது வரையிலான பிரத்தியேக உலகங்கள் நொறுங்கும்படியாக உள்ளே எடுத்துக்கொண்டு போனாள். படியில், நடையில், அறையில் என்று சிதறிக்கொண்டே போன க்ரீப்பர் பூவுடன் குழந்தையின் அழுகையும் கசங்கிக் கசங்கிக் கேட்டது. 'வேண்டாம் வேண்டாம் ' என்று சொல்லியும் சமாதானம் ஆகிறதாக இல்லை.

முதல் தடவையாகத் தாய்மையடைந்து வயிறு கனத்து அமர்ந்திருக்கிற வெட்கத்துடன் சிநேகிதனின் மனைவி பேசிக் கொண்டிருக்க, சிநேகிதனே சிறுசிறு தின்பண்டங்களை எடுத்துவந்து உபசரித்தான். உயரமான கண்ணாடிப் பூந்தம்ளர்களில் டா கலந்து கொண்டுவந்து கொடுத்தான். போலியற்ற அவனுடைய உலகத்தில் நுழையத் தயங்கத் தனக்கோ, தன் மனைவிக்கோ அவசியமில்லாததுபோல இருந்தது.

சிநேகிதனுக்குச் சுலபமாகக் கிண்டல் பண்ண முடிந்தது. சிரிக்க வைக்கவும் ஒருமையில் கூப்பிட்டு இன்னும் சிறிது கேக் கூடுதலாக எடுத்துக்கொள்ளச் சொல்லவும் முடிந்தது. முதலில் 'ஐயையோ, போதும் ' என்று மறுத்தவளிடம் வெட்கமான புன்னகையைத் தருவித்து அந்தச் சிரிப்புடன் கேக்கின் பிறிதொரு விள்ளலை வாங்க வைக்க முடிந்தது.

எல்லாம் இதமாக இருந்தது. போகவேண்டிய தூரம், டவுன் பஸ் நெரிசல், ஞாயிற்றுக்கிழமை அரசியல் கூட்டத்துக்காகச் சுற்றி வளைத்துப் போய் நிற்கிற பஸ், ஒருவேளை குழந்தை தூங்கிப்போய்விட்டால் அப்படி பஸ் நிற்கிற இடத்திலிருந்து வீட்டிற்குச் சுமந்து செல்லவேண்டிய சிரமம். எல்லாம் இல்லாவிட்டால் ரொம்ப நேரம் இங்கேயே இருந்துவிட்டுப் போகலாம்.

அந்தச் சமயத்தில்தான் தெருவில் மிட்டாய்க்காரன் சத்தம் கேட்டது. 'இவர் இங்கேயும் வருவாரா ' என்று கேட்டுக்கொண்டிருக்கும்போதே குழந்தை எழுந்து தெருவுக்கு ஓடியது. இவனுக்கே இந்தத் தடவை குழந்தை கழுத்தில் சங்கிலி கிடப்பது ஞாபகம் வந்தது. குழந்தையின் பின்னால் புறப்பட்டு அதன் பெயரைச் சொல்லி நிறுத்தினான். அது நடையிலேயே நின்று தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அவரேதான். அதே ஜவ்வு மிட்டாய்க்காரர்தான். இவன் சின்ன வயதாய் இருக்கும்போதே, இவனுக்குக் கையில் வாட்ச் மிட்டாய், தேள் மிட்டாய் எல்லாம் கட்டி, கடைசியில் ஒரு பிசுக்கை உதட்டிலும் ஒட்டிவிடுகிற அதே அம்மன் தழும்புக்காரர். தலைப்பாகை, கோட்டு, மீசை, பூ விழுந்த கண், ஒரு குடையைப்போல மூடப்பட்டிருக்கிற மிட்டாய்த்தடி, அவர் தோளில் தொங்குகிற தகரக் குழாயை உதட்டில் பொருத்தி, 'பாப்பா, ஏ, பாப்பா ' என்று அதன் உலோக விசித்திரம் நிறைந்த குரலிலேயே கூப்பிடுகிற நேர்த்தி--எல்லாம் இன்னும் அப்படியே இருந்தன.

தோளில் பம்பரக் கயிறு கட்டித் தொங்கவிட்டிருந்த மணியை, எல்லாப் பிள்ளைகளும் அடித்துக்கொண்டிருந்தார்கள். சட்டை போடாத, தலை கலைந்த, அறுப்புக் களத்திலிருந்தும் பிணையல் அடிப்பில் இருந்துமெல்லாம் ஓடிவந்து சுற்றிச் சூழ நின்றுகொண்டிருந்த அந்தப் பிள்ளைகள், மாறி மாறி அந்த மணியை விடாமல் அடித்துக்கொண்டு, காசு வாங்காமல் கடைசியில் மிட்டாய்க்காரரே அவர்கள் உதட்டில் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தடவிவிடப் போகிற மிட்டாய்த் துண்டை எதிர்ப்பார்த்தபடி அவரைச் சூழ்ந்திருந்தார்கள். அதனதன் உடம்பின் உயரத்திற்கேற்பக் கபடும் பயமும் அற்ற முற்றிலும் குழந்தைத்தனமான அந்த முகங்கள் தாழ்ந்தும் உயர்ந்தும் வாய் பிளந்து கிடந்தன. ஒருவேளை, மிட்டாய்க்

கிடைக்காமற்போகிற ஏமாற்றத்திலுங்கூட அந்த முகங்களில் மாறாத இந்தப் பிள்ளைத்தனம் இருக்குமென்று பட்டது.

நடையில் நின்றுகொண்டு, தன் கட்டளையை எதிர் பார்த்திருக்கிற தன் குழந்தை அதன் வயதுக்குரிய தன்னிச்சையை, அடிப்படையான பிள்ளைத்தனத்தை இழந்திருப்பது போலவும் பாதுகாப்பைப் பிறரிடமிருந்து எதிர்பார்க்கிற ஒரு பய உணர்வுடன் தயங்கித் தயங்கி இது நிற்பதுபோலவும் கழுத்தில் கட்டியிருக்கிற சங்கிலியே காலில் கட்டின சங்கிலி போல இதை இதன் எல்லையற்ற சுபாவங்களிலிருந்து தடுத்தும் விலக்கியும் போட்டிருப்பது போலவும் பட்டது.

'என்ன, வெளியே எழுந்திரிச்சு வந்து ரொம்ப நேரம் நின்னாச்சு ? ' என்று அவனுடைய சிநேகிதன், சிநேகிதனுடைய மனைவி, அவனுடைய மனைவி எல்லாம் வீட்டிற்குள்ளிருந்து எழுந்து வாசலுக்கு வந்தபோது, அவன் எல்லோருக்கும் ஒரே பதிலாகச் சொல்வதுபோலத் தெருப்பக்கமாய்க் கையைக் காட்டினான்.

தெருவிளக்கின் வெளிச்சத்தில், அந்த மிட்டாய்க்காரின் மணியை அடிக்கிற பிள்ளைகளோடு பிள்ளையாக அவனுடைய குழந்தையும் தன்னை மறந்து நின்றுகொண்டிருந்தது. யானைக்குட்டி தெருவில் வருவதைப் பார்க்கிற, கட்டடம் கட்டுவதற்குத் தட்டின ஆற்று மணலில் விளையாடுகிற, பஞ்சு மிட்டாய் விரும்பித் தின்கிற எல்லாப் பிள்ளைகளின் முகத்தையும் இவன் குழந்தை இப்போது அடைந்துவிட்டது போலிருந்தது. அவனுடைய சந்தோஷத்தையும் மீறி அவனுடைய மனைவி எதையோ கேட்க அவசரப்பட்டு உதடு பிரித்தபோது அவன் அவளை அவசரமாக அமைதிப்படுத்திக் கையை நீட்டினான்.

கழற்றின சங்கிலி கையில் இருந்தது.

## யந்திரம்

**ஜெயகாந்தன்**

முத்தாயியை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

ஏனென்றால் நீங்கள் எங்கள் காலனியில் வாழ்பவரல்ல; வாழ்ந்திருந்தாலும், அல்லது வாழ்ந்துகொண்டிருந்தாலும் உங்களுக்கு அவளைத் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு ஐந்து வயதுக்குமேல் பத்து வயதுக்குள் ஒரு மகன் அல்லது மகளிருந்தால் அந்தப் பிஞ்சு மனம் அவளைத் தெரிந்து வைத்திருக்கும்.

நீ தெரிந்துவைத்திருக்கிறாயே என்கிறீர்களா ? அது வேறு விஷயம். எனக்குக் கூடுவிட்டுக் கூடுபாயத் தெரியும். அதன்படி, நான்--குழந்தை, பெண், தாய், கிழவன், கிழவி, மிருகம், பறவை, அசுரன், தேவன் '...

அதுபோகட்டும் ? அப்படி முத்தாயி என்ன தேவேந்திரப் பெண்ணா என்று கேட்காதீர்கள்.

அவளை என்னவென்று சொல்வேன் ' பாசமும் கனிவும் அன்பும் ஆதரவும் மிக்க ஒரு பாட்டி என்று கூறலாமா ?...

அல்ல; அவள் ஒரு யந்திரம்.

எங்கள் காலனியில் முப்பது வீடுகளுக்குக் குறைவில்லை. சராசரி கணக்கெடுத்தால் அவளது துணையுடன் பள்ளி செல்லவேண்டிய பருவத்தில் உள்ள பிள்ளைகள் வீட்டுக்கு ஒன்று தேறும்.

இது என் மானசிகக் கணிப்புத்தான். தவறாக இடமில்லை. ஏனென்றால் குழந்தைகளை என்னைப்போல் கவனிக்க யாராலும் முடியாது....--எனக்குத்தான் வேறு வேலை '... நாளெல்லாம் வீட்டு வராந்தாவில் நின்றுகொண்டு--அங்கு நின்று பார்த்தால் எங்கள் காலனியில் இருக்கும் எல்லா வீடுகளையும் கவனிக்க முடியும்...காய்கறிக்கரிகளை, பிச்சைக்காரர்களை, பள்ளி செல்லும் மாணவ மாணவிகளை, சமயா சமயங்களில் குறிப்பாகப் பெண்களைக் கவனித்தவாறு நிற்பது எனக்கு ஓர் அருமையான பொழுதுபோக்கு. சிலர் சில சமயங்களில் என்னைப் பார்ப்பார்கள்...நானும் பார்ப்பேன்.

பார்த்துப் பார்த்துப் பழகிய சிநேகிதிகள் எனக்கு ஏராளம் ' பேசவோ பழகவோ நான் விரும்பியதில்லை. அவர்களில் சிலராவது விரும்பினார்களா என்று எனக்குத் தெரியாது.

ஆனால் நிச்சயமாக அந்த வட்டாரத்தில் நடமாடும் பெண்கள் அனைவருக்கும் என்னைத் தெரியும். எனக்கும் அவர்கள் எல்லோரையும் தெரியும்.

ஆனால் ?...

நான் பார்த்தும் என்னைப் பார்க்காத, நான் ஒருவன் அங்கு நின்று விழி வட்டம் போடுவதை அறியாத ஒரு பிறவி அங்கு உண்டு என்றால், அறுபதையும் கடந்த அந்த முதுகிழவி முத்தாயி ஒருத்திதான் '

நான் அந்தக் காலனிக்குக் குடிவந்த ஏழு ஆண்டுகளாய் முத்தாயியை அறிவேன்.

பஞ்சுபோல் நரைத்த சிகை; பழுத்து வதங்கிய சருமம்; குழி விழுந்த தொங்கிய கன்னங்கள்; இன்னும் பற்கள் இருக்கின்றன; நல்ல உயரமானவளாய் இருந்திருக்க வேண்டும்.

--இப்பொழுது, வாழ்ந்த வாழ்வின் சுமையால் வளைந்து போயிருக்கிறாள்.

அவள் கண்கள்...

அவற்றைத்தான் நான் பார்த்ததில்லையே...

எங்கள் காலனியின் நடுவே இருக்கும் மணிக்கூண்டு காலை ஒன்பது மணிக்கு ஒலிக்க ஆரம்பிக்கும்போது அவள் வருவாள். அவள் நடையில் சதா ஒரு வேகம்; அவசரம்.

--வாழ்வைக் கடக்கப் பறந்தோடும் அவதியா, என்ன ?...அவளது இயல்பே அப்படித்தான் '

--வாழ்வு நடக்க நடக்க மாளாதது. ஏனென்றால் தனிப்பட்ட ஒருவருடையதா வாழ்க்கை ? அது மனித சமூகத்தின் ஆதி அந்தமற்ற சரிதை '

அதைப்பற்றியெல்லாம் அவள் சிந்திப்பதில்லை...ஏன், நேரமில்லையா ? நேரம் உள்ளவர்களெல்லாம் சிந்திக்க முடியுமா ? சிந்தனை ' அதன் முழு அர்த்தத்தோடும் சொல்கிறேன்...அது விளக்க முடியாதது...சிந்தனை ஒரு வரப் பிரசாதம் ' சிந்தனையின் ஆதியும் அந்தமும்...சிந்திக்கச் சிந்திக்க வியப்பாகத்தான் இருக்கிறது '

அவளைப் பார்த்தால் எதைப்பற்றியும் சிந்திப்பவளாகத் தெரியவில்லை.

என்ன சொன்னேன் '...ஆமாம்; முத்தாயியைப்பற்றி...அவள் தினசரி காலை ஒன்பது மணிக்கு வருவாள். அவசரம் அவசரமாக வருவாள்.

வரும்போதே...

'பாலா...பாலா...நாழியாச்சே....பொறப்படலியா... ' என்ற குரல் நாலு வீடுகளுக்குக் கேட்கும். பாலா என்ற இளஞ் சிறுவன் அந்த வீட்டிலிருந்து தோளில் தொங்கும் பையுடன் அவசரம் அவசரமாக ஒரு காலில் மேஜோடும் மற்றொரு காலில் ஷூஸ்உமாக நிற்பான்...அதையெல்லாம் அவள் கவனிக்கமாட்டாள்.

ஒரு காலில் மேஜோடும் ஒரு கையில் ஷூஸ்உமாக அவனைத் தூக்கிக்கொண்டு, அதை சரியாகவோ சரியில்லாமலோ அவன் காலில் மாட்டியவாறே, அடுத்த வீட்டு வாசலில் நின்று, 'சங்கர்...சங்கர் ' என்று அவள் கூவுவாள்.

சங்கர் அப்பொழுதுதான் சாப்பிட்டுக்கொண்டிருப்பான்.

'சீக்கிரம்...சீக்கிரம் ' என்று முத்தாயி குரல் கொடுப்பாள். சாப்பிட்ட வாயைக் கழுவாமல்கூட அவன் ஓடி வருவான். அவனையும் அழைத்துக்கொண்டு அடுத்த வீட்டுக்குச் சென்று, 'கௌரி...ராமு... ' என்று அவள் கூச்சலிடுவாள்.

இப்படியாக இருபது முப்பது பிள்ளைகள் புடைசூழ அரைமணி நேரத்தில் காலனியைக் காலி செய்துவிட்டுப் போய்விடுவாள் முத்தாயி.

அந்தச் சில நிமிஷங்களில், அந்தத் தெருவில் வானத்து மோகினியே கீழிறங்கி வந்தாலும் என் பார்வை அவள் பக்கம் திரும்பாது.

குழந்தைகள்--ஆம்; அந்தக் கொத்துமலர்ப் பூங்கொடிகள்--கும்பல் கும்பலாகப் பவனி செல்வதைப் பார்த்துக்கொண்டே நிற்கும்போது துன்பத்திலும் விரக்தியிலும் காய்ப்பேறிய எனது நெஞ்சத்தில் வாழ்வின்மீது நம்பிக்கை சுரக்கும். நெஞ்சத்தில் காய்த்துப்போன திரடுகள் இளகிக் கனிவு பெறும்.

ஆமாம்: குழந்தைகள் ' அவற்றின் அங்கங்களை, பவள அதரங்களை, பிரபஞ்ச சிருஷ்டியின் ரகசியங்களையெல்லாம், கவிஞனின் கற்பனைகளையெல்லாம் தோற்றோடச் செய்யும் மானிடச் சாதியின் பிஞ்சுப் பருவக் கனவுகள் மின்னும் அந்தக் குழந்தைக் கண்களை நீங்கள் கூர்ந்து பார்த்திருக்கிறீர்களா ?

நீங்கள் பேசும் அறிவாற்றலும் பிரதாபங்களும் அந்தக் கண்ணொளியின் முன்னே மண்டியிடத்தான் வேண்டும்.

இல்லையா ?... இல்லாவிட்டால்...அட சீ ' நீ என்ன மனிதன் '...

--எனக்கு அந்த முத்தாயியின்மீது அளவு கடந்த வெறுப்பு ' ஆம்; வெறுப்புத்தான் ' அவள் என்ன மனுஷியா ?...பெண்ணா ?...தாயா ?...சே ' யந்திரம் '

அந்தக் குழந்தைகளின் முகத்தை ஒருமுறை அவள் பார்த்திருப்பாளா ? கனிவு ததும்ப ஒருமுறை பேசி இருப்பாளா ' சற்றே கனிவுடன் நயமாக அழைத்துச் செல்கிறாளா ? அந்தக் குழந்தைகளை, ஆட்டு மந்தைபோல் ஓட்டிச் செல்கிறாள். அதே மாதிரி கொண்டுவந்து வீடு சேர்க்கிறாள். அவர்களை அலங்கோலமாக, அவர்களின் அழகுத் தோற்றங்களை எல்லாம் கெடுத்து இழுத்துக்கொண்டு போகிறாளே...

இவளை நம்பி, இவள் குரல் கேட்டவுடன் தங்களது குலக் கொழுந்துகளை அலங்க மலங்கக் கூட்டியனுப்புகிறார்களே, என்ன பெற்றோர்கள் '

ஆமாம்; முத்தாயி ஒரு யந்திரம். அந்த யந்திரம் காலை ஒன்பது மணிக்குப் பிள்ளைகளை அள்ளிக்கொண்டு போகும்; மாலை நாலரை மணிக்கு அத்தனை குழந்தைகளையும் கொண்டு வந்து கொட்டும் '

எங்கள் காலனிக்கு அடுத்த தெருவில் இருக்கும் 'கான்வென் 'டில் அதற்காக அந்த யந்திரத்திற்குப் பதினைந்து ரூபாய் மாதச் சம்பளம் கொடுக்கிறார்கள்.

ஆயாள் என்ற பட்டம் பெற்ற அந்த யந்திரம்தான் முத்தாயி.

அன்று வழக்கம்போல் நான் வராந்தாவில் நின்றிருந்தேன். அதோ, ஒரு வானவில் வருகிறது. அது ஒன்பதாம் நம்பர் வீட்டிலிருந்து வருகிறது...

(நான் அந்தக் காலனியில் உள்ள குமரிகளுக்கெல்லாம் மானசிகமாகப் பெயர்கள் வைத்திருக்கிறேன். இவள் எப்பொழுதும் வர்ண பேதங்கள் நிறைந்த ஆடைகளையே அணிவாள்.)

என்னைக் கடந்து செல்லும்போது அவள் நடையில் செயற்கையாக வருவித்துக்கொண்ட ஒரு வேகமும் 'படபட 'ப்பும் '

என்னை நெருங்க நெருங்க அவள் தலை தாழ்ந்து தாழ்ந்து குனிந்து போகும்.

அவளை எட்டிப் பிடிக்க வருவதுபோல் வருகிறாளே, இவள் தான் 'லைட் ஐஸ் '.

--இவள் என்னைப் பார்க்காத மாதிரியே மார்பில் அடுக்கிய புத்தகக் குவியலைப் பார்த்தமாதிரி வருவாள். அருகே வந்தவுடன் நேருக்கு நேராய் ஒருமுறை விழிகளை உயர்த்திப் 'பளிச் ' சென்ற பார்வையால் தாக்கி மீண்டும் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு போவாள்...

--இருளில், சாலையில் வரும் ஒரு கார்... 'திடும் ' என ஒரு சிறு பள்ளத்தில் இறங்கி ஏறினால் எப்படி நம்மீது காரின் வெளிச்சம் விழுந்து தாழும்--அது போன்ற பார்வை--அத்தனை பெரிய கண்கள் '

அதோ, அந்த எதிர்வீட்டுச் சன்னலில் கையிலொரு பத்திரிகையுடன் படிக்கும் பாவனையில் அமர்ந்து, என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறதே--ஓர் அகலக்கண்--அதுதான் 'போக்கஸ் லைட் ' '

நடன அரங்கில் ஆடுபவளைச் சுற்றி விழுந்துகொண்டு இருக்குமே ஓர் ஒளி வட்டம், அதுபோல இவளுடைய கண்கள் என்னையே துரத்திக் கொண்டிருக்கும்.

'பாலா...பாலா...நாழியாச்சு. பொறப்படலியா ?... ' என்ற முத்தாயியின் வறண்ட குரல் கேட்கிறது '

இனிமேல் நான் ஏன் இந்தப் பெண்களைப் பார்க்கப் போகிறேன் ?

இதோ, இப்பொழுது ஓடி வரப்போகிறான் அந்த இளம் மதலை '

எனது பார்வை முத்தாயி நின்றிருக்கும் வீட்டு வாசலையே நோக்கி நிற்கிறது '

'பாலா, பாலா... '

--உள்ளிருந்து பாலனின் தாய் வருகிறாள்.

'ஆயா, அவனுக்கு உடம்பு சரியில்லை; இன்னிக்கு வர மாட்டான்... '

அவள் சொல்லி முடிக்கவில்லை; 'சங்கர்...சங்கர்... 'என்று கூப்பிட்டவாறு அடுத்த வீட்டுக்குப் போய்விட்டாள்.

--சீ, இவள் என்ன ஜன்மமோ ' 'குழந்தைக்கு என்ன ' என்று உள்ளே போய்ப் பார்க்கமாட்டாளோ ?...பார்க்க வேண்டாம், 'உடம்புக்கு என்ன ? ' என்று கேட்கவாவது வேண்டாமோ '

'ஐயோ பாவம் ' பாலனுக்கு உடம்புக்கு என்னவோ ' என்று என் மனம் பதைத்தது.

முத்தாயி வழக்கம்போல் மற்றப் பிள்ளைகளை இழுத்துக் கொண்டு போனாள்.

மறுநாள்...

முத்தாயி வந்தாள்.

'பாலா..பாலா... '

'இன்னிக்கு வரமாட்டான்... '

முத்தாயியின் குரல் அடுத்த வீட்டில் ஒலிக்கிறது.

'சங்கர்...நாழியாச்சு... '

'மணி ' '

'கௌரி...ராமு... '

முத்தாயி போய்விட்டாள்.

மூன்றாம் நாள்.

முத்தாயி வந்தாள்...

'பாலா...பாலா... '

'இன்னிக்கும் ஒடம்பு ரொம்ப மோசமாக இருக்கு ஆயா '... '

--பெற்றவளின் குரல் அடைத்தது.

'சங்கர்...பொறப்படலியா ?... '

'மணி... '

'கௌரி, ராமு..உம், சீக்கிரம்... '

--அந்த யந்திரம் நகர்ந்தது '

இப்படியே, நான்கு, ஐந்து, ஆறு நாட்களும் ஓடின...

ஆறாம் நாள் இரவு. நான் ஒரு கனவு கண்டே. பொழுதெல்லாம் மழை பெய்துகொண்டே இருக்கிறது...

மழையென்றால்...பிரளய கால வருண வர்ஷம் '...

வீதியெல்லாம் வெள்ளத்தின் நீர் அலைகள் சுருண்டு மடிந்து புரள்கின்றன.

அந்த வெள்ளத்தில் தலைவிரிகோலமாய் முத்தாயி வருகிறாள். முத்தாயியின் கோலம் முதுமைக் கோலமாக இல்லை. நடுத்தர வயதுள்ள ஸ்தீரியாக முத்தாயி வருகிறாள்...

'ராசா...ராசா... ' என்று திக்குகளையெல்லாம் நோக்கிக் கதறுகிறாள். வெற்றிடங்களை யெல்லாம் நோக்கிப் புலம்புகிறாள்...

'ராசா...ராசா... ' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு நீரில் விழுந்து புரண்டு எங்கோ ஓடுகிறாள்.

வெள்ளம் சுருண்டு புரண்டு அலைகொழித்து மேலேறிச் சீறிப் பெருகுகிறது '

அதோ. முத்தாயி ஓடுகிறாள்...இடுப்பளவு நீர் மார்பளவு உயர்கிறது...கைகளை அகட்டி வீசிப் போட்டுப் பாய்ந்து பாய்ந்து செல்கிறாள்...வெள்ளப் பெருக்கில் மூழ்கி மூழ்கிப் போகிறாள்...

சற்று நேரம் ஒரே நிசப்தம்...பெருகி வந்த வெள்ளம், மாயம் போல், இந்திரமாசாலம்போல் வடிந்து மறைகின்றது...

நீரோடி ஈரம் பரந்து வரிவரியாய், அலை அலையாய் வெள்ளத்தின் சுவடு படிந்த மணல் வெளியில், ஓர் இளம் சிறுவனை மார்புற அணைத்தவாறு பிலாக்கணம் வைத்து அழுதுகொண்டிருக்கிறாள் முத்தாயி...

அவள் மடியில் கிடக்கும் சிறுவன் அடுத்த வீட்டுப் பாலனைப்போலவே இருக்கிறான்...நீரில் விறைத்த அச்சிறுவனின் கையில் ஒரு தூண்டில் ' ஆமாம்; அவன் மீன் பிடிக்கச் சென்றானாம்.

'தண்ணியிலே போவாதே என்

தங்கத்தொரெ ராசாவே

பன்னிப் பன்னிச் சொன்னேனே இந்தப்

பாவி சொல்லக் கேட்டாயோ...ஓ...ஓ... '

என்ற முத்தாயியின் ஓலம் வயிற்றைக் கலக்கியது...

திடுக்கிட்டு விழித்தேன் ' கனவு கலைந்தது...எழுந்தேன்; உடல் நடுங்கியது. சன்னலைத் திறந்தேன்...

இருள் விலகாத விடிவு நேரம்...

பாலன் வீட்டு வாசலில் முகமறியாத மனிதர் பலர் வீற்றிருக்கக் கண்டேன்...தெருவெல்லாம் ஏதோ ஒரு சோக இருள் கப்பிக் கவிந்து அழுதுகொண்டிருந்தது.

'பல் விளக்கப் போனாயோ

பல் விளக்கப் போகயிலே--என் பாலாவே

பழவப்படி சறுக்கிச்சோ

பழவப்படி சறுக்கையிலே

பாவி எமன் வந்தானோ ?...

மொகம் கழுவப் போனாயோ

மொகம் கழுவப் போகயிலே--என் பாலாவே

முத்துப்படி சறுக்கிச்சோ

முத்துப்படி சறுக்கையிலே

மூர்க்க எமன் வந்தானோ ? '

என்ற பாலனின் தாயின் குரல் என் நெஞ்சை அறைந்து உலுக்கியது...

எனக்கு ஒன்றும் புரியவில்லை...இதுவும் கனவாக இருக்கக்கூடாதா என்று மனம் தவித்தது.

மண்டையைச் சன்னலில் மோதினேன்...வலித்தது--ஆம்; இது கனவல்ல '

'ஐயோ ' பாலா '... '

எங்கள் காலனியின் நடுவே உள்ள மணிக்கூண்டு ஒன்பது முறை அடித்து ஓய்ந்தது.

தெருவில் ஜனங்கள் நடமாடிக்கொண்டிருந்தனர். மயானச் சங்கின் ஓலமும், சேகண்டியின் கால நாடியும் சங்கமித்துக் குழம்பி அடங்கின.

பாலன் வீட்டில் மனிதர்கள் நிறைந்திருந்தனர்.

ஆம்; சாவு விரித்த வலையிலே நடந்தவாறே, வாழ்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் '

முத்தாயி வந்தாள் '...பாலன் வீட்டு வாசலில் வந்து நின்றாள்.

-- 'பாலா ' என்று கூப்பிடவில்லை.

--அசையாமல் வெறித்த பார்வையுடன் நின்றிருந்தாள் '

முத்தாயியைக் கண்டவுடன் 'ஐயோ...ஆயா '...பாலா போயிட்டானே '...நம்ம பாலா போயிட்டாண்டி '... '...அலறியவாறு பூமியில் விழுந்து புரண்டு கதறினாள் பாலனின் தாய் '

முத்தாயி நின்றுகொண்டே இருந்தாள் '

சித்த வெளியில் எத்தனை மேகங்கள் கவிந்தனவோ ?... கண்களில் கண்ணீர் மழை பெருகிக்கொண்டே இருந்தது.

அவள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மரமாய் நின்றாள்;

..நின்று கொண்டே இருந்தாள் '

மழை பெய்து கொண்டிருந்தது...கொட்டுகின்ற மழையில் முத்தாயி நின்றுகொண்டிருந்தாள்...

நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. நான் குமுறும் இதயத்துடன் உள்ளே போய்ப் படுக்கையில் வீழ்ந்தேன். பாலாவுக்காக, அவன் மரணத்திற்காக வருந்தினேன். எனக்கு அன்று முழுவதும் ஒன்றும் ஓடவில்லை.

ஒரு சமயம் அழுகை பலமாக ஒலித்ததை உள்ளிருந்தவாறே கேட்டேன்...

ஆம்; அவனைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்...நான் அதைக் காண விரும்பவில்லை...

வெகுநேரம் கழித்துச் சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன்.

முத்தாயி நின்றுகொண்டிருந்தாள்.

அவளை யாருமே கவனிக்கவில்லை; நான்தான் கவனித்தேன். அது அவளுக்கு எப்படித் தெரிந்ததோ ' 'சடக் 'கென்று அவள் தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தாள்.

அவள் கண்களை நான் அன்றுதான் பார்த்தேன்.

குழந்தையின் கண்கள், கண்ணீர் நிரம்பித் தளும்பிற்று.

'பாலா... ' என்று என் உதடுகள் முணு முணுத்ததை அவள் எப்படித் தெரிந்து கொண்டாளோ ?

'பாலா மீன் பிடிக்கப் போயிருக்கான் ' என்று என்னைப் பார்த்துக் கூறினாள்; நான் திடுக்கிட்டேன். அந்த வார்த்தையைக் கூறிவிட்டு அவள் அடுத்த வீட்டை நோக்கி நடந்தாள்.

'சங்கர்...சங்கர்...நாழியாயிடுச்சி; பொறப்படலியா ? ' என்ற அவளது குரலோசை கேட்கும்போது காலனி மணிக்கூண்டு நான்கு முறை ஒலித்தது...

ஆம் ? மாலை மணி நான்கு '

எனக்கு ஒன்றுமே புரியவில்லை...அந்த மணிக் கூண்டின் மணியோசை மட்டும் நன்றாகப் புரிந்தது:

'அவள் யந்திரமல்ல; யந்திரமல்ல, யந்திரமல்ல, யந்திரமல்ல ' '

# கைகாட்டி

**தி.ஜானகிராமன்**

இடம்--வடசென்னை.

காலம்--விடியற்காலை.

ஒரு மிக நீளத் தெருவின் கோடியில் ஒரு கடை இன்னும் திறக்கவில்லை. திறந்த பிறகு தான் வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட்கடையா, மளிகைக்கடையா, ரிப்பன்--வளையல் குங்குமம்--சவுரி கடையா என்று தெரியும்.

கடைக்கதவுகளுக்கு முன்னால் நாலு சவுக்கைக் கழிகள் மேல் போட்டிருக்கிற பலகை. கீழே சாக்கடை. பலகை மேல் ஒரு ஆசாமி படுக்கலாம். படுத்திருக்கிறார். கண்ணைத் திறந்து படுத்திருக்கிறார். கால் மணிக்கு முன்பு ஒரு காக்காய்க் கூட்டம் கத்திக் கத்தி அவர் தூக்கத்தைக் கலைத்து விட்டது. எல்லாம் பறந்து போய் மிச்சம் இரண்டு காக்காய் எதிர் வீட்டு மாடிக்கூரையில் உட்கார்ந்து கரைந்து கொண்டிருக்கிறது.

'காலங்காத்தாலெ கூரை மேலே காக்கா கத்தினா விருந்து வரும். கத்துறதைக் கேட்டவங்களுக்குத் தானே ' மாடியிலெ குடக்கூலிக்கு இருக்கிறவங்க தூங்கிக்கினு இருக்காங்க. கீளெ ஊட்டுக்காரங்களுக்கும் தூக்கம். தெரு முளுக்க உறங்குது. சாணச் சத்தம் கூட கேக்கலெ. அப்பன்னா. காக்கா கத்தினதை நான் தானே கேட்டுக்கினே இருக்கேன். அப்ப நம்ம ஊட்டுக்கு விருந்தா ஹ்ஊம் ' நல்ல தமாசு ' நம்ம ஊடு பேசின்ப்ரிஜ்ஜாண்ட காவா ஓரமா அப்பன்னா எனக்கா விருந்து ' நல்ல தமாசுதான் போ. '

இதையெல்லாம் நினைத்துக் கொண்டே அவர் எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்து வேட்டியைச் சரிப்படுத்திக் கொண்டு கண்ணைக் கசக்கி தெரு நீளம் முழுவதையும் வடக்காலும் தெற்காலும் பார்க்கிறார். நடமாட்டம் இல்லை.

தெற்கே தெரு மத்தியில் யாரோ நடந்து வருவது தெரிகிறது. சுற்றி முற்றி பார்த்துக் கொண்டு வருகிறார். தெருவுக்கு நடுவின் ஒரு சந்தின் முன் நின்று பலகையைப் பார்த்து விட்டு மீண்டும் நடந்து வருகிறார். கடை முன் வந்து விட்டார். பேட்டைக்குப் புது ஆசாமி போல் இருக்கிறது.

'மேஸ்த்ரி சந்துக்கு எப்படிப் போறது ? '

'மேஸ்த்ரி சந்தா ? '

'ஆமா, '

'ரொம்ப தொலைவு வந்திட்டியே. அது இந்தக் கோடிலெல்ல இருக்குது. '

'இல்லெ இந்தக் கோடிக்கு அப்பாலெ தான் இருக்காம். '

'இந்தக் கோடிக்கு அப்பாலென்னா--கொஞ்சம் இரு....ஆமா. இங்கியும் இருக்குது, ஆனா மேஸ்திரி சந்து ரண்டு இருக்குதே. அர்ணாஸல மேஸ்திரி சந்துன்னு ஒண்ணு இருக்கு. பெரியண்ண மேஸ்திரி சந்துன்னு ஒண்ணு. அதுவும் ரோடு தாண்டி மூலக் கொத்தலம் போறவளியிலெ போய் அப்பாலெ சின்மா தியேட்டர் தாண்டில்ல போகணும். '

'டி.ஏ.மேஸ்திரி சந்துன்னு சொன்னாங்க. '

'டி.ஏ.மேஸ்த்ரி சந்துன்னா இரு இரு தோப்பு அருணால மேஸ்த்ரி சந்தா ? '

'டி.ஏ.மேஸ்த்ரி சந்து. தோப்பு அர்ணாசல மேஸ்த்திரி சந்து. டி.ஏ. மேஸ்திரின்னா தோப்பு அர்ணாசல மேஸ்த்திரி சந்துன்னுதான் இருக்கணும். '

'ஆமா. அதேதான். '

'அதானே பாத்தேன். பெரியண்ண மேஸ்த்திரியில்லேன்னா தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்தாதான் இருக்கோணும். '

'கிட்டத்தால் இருக்கா ? '

'ரொம்ப கிட்டவும் இல்லே. தொலைவும் இல்லே.நீங்க எங்கேர்ந்து வர்றீங்க ? '

'சைதாப்பேட்டையிலேருந்து. '

'பஸ்லே வறீங்களா ? '

'ட்ரெய்ன்லே வந்தேன். '

'எலெட்டி ட்ரெய்ன்லே ? '

'ஆமா ' '

'பீச் டேஸன்லே எறங்கி வறீங்களா ? '

'ஆமா ' '

'அதான் இமாம் தொலைவு நடந்து வறீங்க. பீச் டேசன் எங்க இருக்கு ? தோப்பு அர்ணாசலமேஸ்த்திரி தெரு எங்க இருக்கு ? அட கடவுளே பஸ்லே வந்திருந்தீங்கன்னா இம்மாந் தொலைவு நடக்க வாணாமே. சின்மாவைத்தாண்டி, லாண்ட்ரிக்கு முன்னால ஸ்டாப்பு இருக்கு. அங்க எறங்கினீன்னா அங்கேர்ந்து அஞ்சே நிமிசம். போயிருக்கலாமே '

'சைதாப்பேட்டையிலேர்ந்து நேரா பஸ் இல்லியே. '

'இல்லாட்டி என்னா ' பீச் ஸ்டேசன்லே எறங்கினீல்ல. அங்கேர்ந்து ஒரு நிமிசம் நடந்தா கப்பல் ஆபீசு. அங்கேர்ந்து திருவொத்தியூரு, தண்டையார்பேட்டை, ராயபுரம் அல்லாத்துக்கும் பஸ் ஓடுதே. '

'நான் பீச் டேசன்லே வந்தப்ப ஒரு பஸ்ஸும் வல்லியே. '

'இன்னா வல்லே. காலங்காத்தாலே எந்திரிச்சா டஜன் டஜனா பஸ் ஓடுது-- '

'என்னமோ--நான் நடந்து வந்திட்டேன். இப்ப இப்படி நேரபோலாம்ல. '

'நேரப் போயி பீச்சக்கைப் பக்கம் திரும்பனும், அப்பாலே ஏழு கெணறு வரும். அப்பாலே சோத்துக் கைப்பக்கம் திரும்பனும்....அப்பால குறுக்காலே போனும்னா மாதா கோயில்

தெருவிலே திரும்பி--நேர நடந்து அங்க ஒரு சைக்கிள் கடையிருக்கு.-- அதுக்கு எதிரா பேரி கிஷ்டய்யா தெருவிலே நடந்துக்கினே போனா, ஒரு ரொட்டி கடை, அதுக்கப்பால் தம்மாத்தூண்டு ஒரு காளியம்மன் கோயிலு இருக்கு. பச்சை பெயிண்ட் அடிச்சிருப்பாங்க அத்தோட கம்பிக் கதவுக்கு. எதுக்கு சொல்றேன்னா அதுக்கு கொஞ்சம் தோலவிலே ஒரு புள்ளையார் கோயில் இருக்கு அதுக்குப் பக்கத்திலேயும் ஒரு சந்து இருக்குது. நீ அந்த சந்திலே பொக கூடாதுன்னு சொல்றேன். காளி கோயிலுக்குப் பக்கத்து சந்திலெதான் போவனும், அதுலே போயி ராயப்பன் சாமியார் தெருவுலெ போனே, நேரா தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்துக்குள்ளார போயிடலாம். சாமியார் தெரு பாதிக்கு மேலே இருக்கறதுதான் தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்து. அதை சாமியார் தெருவுன்னே சொல்லுவாங்க-- '

'ரொம்பவும் சுத்தலா இருக்கும்போல் இருக்கே. '

'அதுக்கு என்ன செய்யிறதாம் குறுக்குப் பாதையா ஜல்தி போவோணும்னா இத்தான் --லெப்ட்டு ரைட்டெல்லாம். கவனமா வச்சிகினுபோவோணும். '

'நேர் ரோட்லே போனா ? '

'போலாம். இந்த மாதிரி ரண்டு தொலவாகும். இப்படியே ரோடுக்குப் போனா ஏழுகிணறாண்ட சைக்கிள் ரிக்ஷா நிற்கும். மூண் ரூபா கேப்பாங்க. '

'மூண் ரூபாயா ? '

'மூண் ரூபா கேப்பாங்க, நீ போய்க்கினே இரு. பின்னாலியே வண்டியைத் தள்ளிகினெ வருவான். ரண்டு ரூவாக்கு மேல தரமுடியாதப்பான்னு சொல்லு--ஏறு சாமிம்பான். '

'ரண்டு ரூவாயா ? '

'ரண்டு ரூவா தரக்கூடாதா ? சின்மாக்குப் போறதுக்கு முன்னாலெ ரண்டு ஏத்தம் வருது. மிதிச்சாக்காலுதான் ஓடயும். ரண்டு ஏத்தத்திலேயே அது அல்லாம் வேத்தே போயிரும். குறுக்குப் பாதையிலியும் போவாங்க. அது ரொம்ப பேஜாரு. சந்திலெ எருமை கட்டியிருப்பாங்க. எச்சிக்கலெ போட்டிருப்பாங்க. சாக்கடெ வெட்டி உட்ருப்பாங்க ஒடிச்சு ஒடிச்சு திருப்புவாங்க. லொங்கா லொங்கான்னு சாக்கடையிலே உயுந்து உயுந்து ஏறணும். முதுகு குந்துற பட்டையெல்லாம் இடிச்சு இடிச்சு நோவு கண்டு போகும். '

'சரி--எப்படியோ பாக்கறேன் வரேன்யா ரொம்ப தாங்க்ஸ். '

'அவ்ளோ தானா ? '

'-- '

'சார் ' '

'என்னாய்யா ? '

'அவ்ளோதானா ? '

'என்ன ' '

'அவ்ளோதானான்றென். '

'அப்படான்னா ' '

'சொம்மா பேசாத போறியே ' '

'என்னய்யா சொல்றே நீயி ' '

'என்ன சொல்றேனா ' இம்மாந்தூரம் சொல்லியிருக்கேன் அல்லாம் தெரிஞ்சிக்கினு சொம்மா போயிக்கினேக்கிறியே ' '

'சும்மா போறன்னா ? '

'நான் சொன்னாத்தான் தெரியுமா உனக்கு ' காலங்கார்த்தாலெ சொம்மா குந்தியிருந்த ஆளைக் கூப்டு எல்லாம் கேட்டுக்கினே. நானும் இம்மா நேரம் தொண்டை தண்ணி போகச் சொல்லிகினே இருந்தேன்... '

'தொண்டைத் தண்ணிபோகவா ' '

'ஆமா, நீ சொம்மா மேஸ்த்ரி சந்துன்னுதான் சொன்னே. தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்துனு நானா உன்னெக்கேட்டுத் தெரிஞ்சுக்கினேன். வெளக்கமா போற பாதை சொன்னேன். இல்லாட்டி நீ எங்கெல்லாம் போயி கஷ்டப்பட்டிருப்பெ ' உன்னெ ரிக்சாக்காரன் இதோ இதோன்னு தண்டையார்பேட்டை ராயபுரம்லாம் சுத்தி இட்டுகினு போயி அஞ்சு ரூவா பறிச்சிருப்பானே. நான் ஒழுங்கா. கரெக்டா சொன்னேன். நீ அல்லாத்தியும் கேட்டுக்கினு பேசாம போறே ' எனக்கு நல்லா வேணும் '...

'காசு வேணுமா; '

'என்னா சார் அப்படி கேட்டிட்டே ' நான் பிச்சையா கேக்கறேன் ' '

'இது என்னவாம் ?.... '

'என்னா சார் நாலணா கொடுக்கிறே ' ஒரு சிங்கிலே நாப்பது பைசா. இப்பல்லாம். ரண்டு இட்லி அம்பது பைசா சார். டூர்ஷ்ட் பஸ்லெ அதோ பாருங்க இதோ பாருங்கன்னு கைகாட்டி கில்லாடிப் பையனுக்கெல்லாம் எனாமே ஆளுக்கு எட்டணா ஒரு ரூவான்னு கொடுக்கறாங்க-- இன்னா சார் ' '

'உன்னோட பேசிக்கிட்டிருக்கிற நேரம் நான் மேஸ்த்ரி தெருக்கே போயிருக்கலாம் போல்ருக்கே. '

'எந்த மேஸ்த்ரி தெருக்கு சார் போயிருப்பே ? '

# பழக்கம்

**அசோகமித்திரன்.**

'உன்னைத் தேடிண்டு பாலு வந்தாண்டா, ' என்று அம்மா சொன்னாள்.

'எந்த பாலு ? ' என்று கணேசன் கேட்டான்.

'என்னடா இப்படிக் கேக்கறே ? உன் ஆபிஸிலேயே வேலை பண்ணிண்டிருந்தானே, அவன்தான். வேற யாரு பாலு இருக்கா ? '

'அவனா ? இரண்டு மூணு தரம் வந்துட்டான் போலேயிருக்கே ? ஏதாவது விஷயம் உண்டா ? '

'தெரியலை. வந்து பத்து நிமிஷம் பேசிண்டிருந்தான். ரொம்ப நல்ல பையன். அவன் அம்மா, மாமியார் இரண்டு பேரும் ஊரிலேந்து வந்திருக்காளாம். நாளைக்கு மறுபடியும் உன்னைப் பார்க்க வரேன்னு சொன்னான். '

கணேசனுக்கும் பாலுவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இந்த ஆறு மாதத்தில் ஒரே ஒரு முறை அவன் பாலு புதிதாக வேலை செய்யும் ஆபீசில் அவனைப்போய் பார்த்ததோடு சரி. ஆனால் பாலுவோ ஐந்தாறு முறை கணேசன் வீட்டுக்கு வந்து விட்டான். சொல்லி வைத்தாற் போல் ஒரு முறைகூட கணேசன் வீட்டில் இல்லை.

ஒருகாலத்தில் அவர்கள் இருவரையும் தனித்தனியாக நினைத்துப் பார்க்க முடியாதபடி எப்போதும் சேர்ந்தே இருப்பார்கள். ஆபீசில் அடுத்தடுத்த மேசைகள். இருவருக்கும் அநேகமாக ஒரே வயது. இருவரும் எஸ்.எஸ்.எல்.சி. முடித்து ஷார்ட் ஹாண்ட் டைப்ரைட்டிங் லோயர் பரிட்சை தேறி வேலைக்கு வந்தவர்கள். இருவருக்கும் சங்கீதம் சினிமா-- முதலிய விஷயங்களில் ஒரே மாதிரியான ரசனை. இருவரும் சிறு வயதிலேயே தந்தையிழந்தவர்கள். ஒரு வித்தியாசம், பாலுவின் அம்மா பாலுவுக்கு இரு வருடங்கள் முன்னால் கல்யாணம் செய்து வைத்து விட்டாள். தங்கை கல்யாணம் முதலில் முடிய வேண்டும் என்று கணேசனால் மட்டும் ஒத்திப்போட முடிந்தது.

கணேசன் சாப்பிட்டுவிட்டுக் கையை அலம்பும் போது அம்மா சொன்னாள், 'நீதான் ஒரு நடைப்போய்ப் பார்த்து விட்டு வாயேண்டா. '

'அவனேதான் வரேன்னு சொல்லியிருக்கானே ? '

இப்படி ஆறு மாதத்திற்கு முன்பு சொல்லியிருக்க மாட்டான். பாலு வீட்டுக்கு வந்து போனானென்றால் நிச்சயம் கணேசன் உடனே பாலுவைப் பார்க்கப் போயிருப்பான். இப்போது ஓர் அசிரத்தை வந்துவிட்டது. பாலுவை பார்க்க வேண்டாமென்றில்லை. ஆனால் அதற்காக அவன் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

அன்று படுத்து அரைமணியாகியும் தூக்கம் வரவில்லை. ஆபீஸிலேயே சிறுசிறு சிக்கல்கள். இப்போது பெரிய தலைவலியாயிருப்பது ஆபீஸ் பையன் மோகன் தீர்க்கமான விரோதியாக நடந்து கொள்வது. இந்த மோகனுக்காகத்தான் எவ்வளவு முறை அரை ரூபாயும் ஒரு ரூபாயுமாக விட்டுக் கொடுத்தாயிற்று ? எப்போது டிபன் காப்பி வாங்கி வரச் சொன்னாலும் உடனே கணக்கு ஒப்புவித்துப் பாக்கிச் சில்லறை தரமாட்டான்: கேட்டுக் கேட்டு வாங்க வேண்டும். அது தரும் கசப்புணர்ச்சிக்காகவே சரியாகச் சில்லறையாகத் தருவது. ஆனால் அப்போதும் மோகன்தான் வெற்றியடைவான். 'தோசையெல்லாம் ஆயிடுத்து, ' என்று சொல்லிவிட்டு காபி மட்டும் மேசை மீது வைப்பான். 'தோசை இல்லைன்னா வேறே ஏதாவது வாங்கி வருவது தானே ? ' என்று கேட்டால், 'நீ சொல்லலியே, ' என்பான். மீதிச் சில்லறையைக் கேட்டாலொழிய தரமாட்டான்.

இயல்பாகவே வேண்டாதவனாக இருப்பவன் இப்போது தெரிந்த விரோதியாகி விட்டான். இருபது ரூபாய் கேட்டான். கணேசன், 'நீ சொல்லாம எடுத்துண்டது ஐம்பது, நூறு ரூபாய் கூட இருக்கும், ' என்றான். இது என்னபதில் ? கையில் பணம் இல்லை என்று கூறியிருக்கலாம். விளைவு, மோகன் எப்படி எப்படியல்லாமோ கணேசனை வதைக்கிறான்.

பாலு மோகனிடமே கூடக் கடன் வாங்கியிருக்கிறான். கடனும் கொடுத்திருப்பான். எல்லாம் பத்து பதினைந்து; மிகவும் அதிகமாகப் போனால் இருபது ரூபாய். பாலு கணேசனிடம் கடன் வாங்காத மாதமில்லை. வாங்கிய கடனில் பாதி அவர்கள் இருவரும் சேர்ந்து போகும் சினிமாவுக்குச் செலவழிந்துவிடும். பாலுவுடன் சினிமா பார்ப்பதே ஒரு தனி அனுபவம். குப்பை என்றும் பிரமாதம் என்றும் பரவாயில்லை என்றும் எவ்வளவு பேர் சொல்லியிருக்கிறார்கள் ? ஆனால் பாலு ஒரு சினிமாப்படம் பற்றி அப்படிச் சொல்வது பல புரியாத விஷயங்களைத் தெளிவாக்குவது போல இருக்கும். அவனுக்குக் கல்யாணம் ஆனபிறகு கூட நண்பர்களுடன் சினிமா போக அவன் நேரம் ஒதுக்கிக் கொள்வான். இப்போது வேலைக்குப் போன புதிய இடத்தில் அவனுக்கு யார் சினிமா தோழர்கள் ?

பத்து ரூபாய் வாங்கிக் கொள்வதைக் கடன் என்று சொல்லலாமா ? கைமாற்று எனலாம். தீர்க்க திருஷ்டியுடன் தான் இப்படிச் சொல்கிறார்கள்.

இந்தப் பத்து அல்லது இருபது ரூபாய்கள் கைமாறினால் மாறியதுதான். கணேசனிடம் பாலு வாங்கியது கைமாற்று தான். தவறாமல் மாதத்தில் மூன்றாவது வாரத்தில், 'ஏம்பா, இருபது ரூபா வேணுமே. இருக்கா சம்பளம் வாங்கினவுடனே கொடுத்துடறேன், ' என்பான்.

கணேசனிடம் இருபது ரூபாய் இருக்கக் காரணம் அவன் சீட்டாட மாட்டான். அவனிடம் இருக்கும் என்று பாலுவுக்கு நன்றாகத் தெரியும். கணேசன் உடனே இருபது ரூபாய் எடுத்துக் கொடுத்துவிடுவான். அன்று மாலைக்குள் அதிலிருந்து நான்கைந்து ரூபாயைக் கணேசனுக்காகவே பாலு செலவழித்திருப்பான். சம்பளம் வாங்கியவுடன் அவனுக்குப் பத்து, இவனுக்கு இருபது, இன்னொருவனுக்கு இருபத்தைந்து என்று பிரித்துக் கொடுத்துவிடுவான். சனி, ஞாயிறு தவறாமல் சீட்டாடம் இருக்கும். வியாழன் அல்லது வெள்ளி அன்று ஒரு சினிமா இருக்கும்.

கணேசன் எழுந்து விளக்கைப் போட்டுப் படுக்கையை மீண்டும் ஒரு முறை உதறிப் போட்டுக் கொண்டான். தூக்கம் வராமல் சிரமப்படுவதற்குக் காரணம் எறும்பு, வண்டு ஏதாவது இருக்கக்கூடும். தங்கை தம்பி ஆகிய இருவரும் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அம்மாதான் அவன் விளக்கைப் போட்ட சமயத்தில் போர்வையை இழுத்துப் போர்த்திக்

கொண்டாள். அம்மாவுக்கு இந்த கைம்மாற்று விஷயங்கள் அதிகம் தெரியாது. அவளுடைய உலகிலும் ஒரு கரண்டி சர்க்கரை, ஒரு தம்ளர் எண்ணெய் என்ற கைமாற்றுகள் உண்டு. ஆனால் யாராவது மாதம் தவறாமல் பணம் கைமாற்று கேட்டால் அவளுக்கு அந்த நபர் மீது ஏதேதோ சந்தேகங்கள் வந்துவிடும். பாலுவின் கைமாற்றம் பழக்கம் பற்றி அவளுக்குத் தெரியாது. தெரிந்து விட்டால் அவனால் கணேசனின் வீடு தேடி வர முடியாது. அவளுடைய சந்தேகங்கள் முதலில் பாமரத்தனமாகத்தான் இருக்கும். ஆனால் நாலைந்து கேள்விகள் கேட்டுச் சீக்கு இருக்கிற இடத்தைக் கண்டுவிடுவாள். நல்ல வேளை, பாலு அதிக நேரம் இன்று அம்மாவோடு பேசிக் கொண்டிருக்கவில்லை.

டைப்பிஸ்ட் குமாஸ்தாக்களுக்கு மிகச் சில பெரிய கம்பெனிகளில்தான் தாராளமாகச் சம்பளம் தருகிறார்கள். பாலு, இப்போது வேலை போயிருக்கும் கம்பெனி பெரியது இல்லை என்றாலும் கொஞ்சம் தாராளம் என்று பெயர். மாதம் எழுபத்தைந்து ரூபாய் கூடும் என்றுதான் பாலு கணேசனை விட்டுப் பிரிந்து போனான். போய்ச் சேர்ந்த ஒரு வாரத்துக்குள் அங்கு இன்னொரு டைபிஸ்ட் தேவைப்படுகிறது என்றும் கணேசனை அந்த இடத்திற்கு வந்து விடலாம் என்றும் சொன்னான். கணேசன்தான் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. பாலு விட்டுப் போனவுடன் பாலு பயன்படுத்திக் கொண்டிருந்த புதிய டைப்ரைட்டர் இவனுக்குக் கிடைத்தது. அதுதான் காரணம் என்றில்லை. ஏனோ புதிய வேலைக்குப் போகப் போதிய உற்சாகம் ஏற்படவில்லை, மாதம் எழுபத்தைந்து ரூபாய் அதிகப்படியாகக் கிடைக்கும் என்று தெரிந்தும் கூட. ஆனால் அப்போது அந்த முயற்சி எடுத்துக் கொள்ளாதது தவறோ என்று மனம் ஏங்குகிறது. இந்த மோகன் போன்ற மனிதர்களோடு காலம் தள்ள வேண்டாமல்லவா ?

காலையில் குளித்துவிட்டு வெளியே கிளம்ப ஜிப்பாவை மாட்டிக் கொண்டிருக்கையில் தெருவில் குரல் கேட்டது. பாலுவே வந்து விட்டான் '

'உன்னைத்தான் பாக்கக் கிளம்பிண்டிருந்தேம்பா, நீயே வந்துட்டே, ' என்று கணேசன் கூறினான். '

'வரவன் இவ்வளவு நாள் வரக்கூடாது ? ஒரேயடியா மறந்துட்டியேப்பா. '

'அப்படியெல்லாம் இல்லை, பாலு. ஆபீஸ் விட்டா வீடு, வீடு விட்டா ஆபீஸ். அவ்வளவுதான். இப்பல்லாம் எங்கேயும் போறதில்லை. '

'அதுதான் நான் ராத்திரி ஏழு மணி எட்டு மணிக்கு வந்தாக்கூட நீ வீட்டிலே இருக்கிறதில்லையாக்கும். '

'அது சரி, என்ன விசேஷம் ? பாத்து எவ்வளவு நாளாறது.... '

'நீ சொல்லறே இதை, உம்...மறுபடியும் ஒரு வேகன்சி இருக்கு. கையோட அப்ளிகேஷன் எழுதிக் கொடு. நான் நேரே டைரக்டர்கிட்டே கொடுக்கிறேன். இங்கே உடனே ரிலீஸ் பண்ண முடியாது, அப்படி இப்படான்னாங்கன்னா லீவு போட்டுட்டு வந்துடு. '

'இதை நீ அம்மா கிட்டே சொல்லிட்டுப் போயிருக்கக் கூடாதா ? நான் ராத்திரி உக்காந்து எழுதியிருப்பேனே ? '

'இப்ப முடியாதா ? '

'முடியாதுனில்லே. எழுதினா சரியா வரதில்லை. நான் எழுதி நாளைக் கார்த்தாலே உன் வீட்டிலே கொண்டு வந்து கொடுக்கிறேனே. '

'நாளைக்கா ? '

'ஏன் ரொம்ப லேட்டா ? '

'பரவாயில்லை. நான் சொல்லி வைக்கிறேன். கட்டாயம் கொண்டு வந்துடு. இப்ப சான்ஸ் விட்டா அப்புறம் அஞ்சாறு வருஷத்துக்குக் கிடையாது. '

'சரி, கொண்டு வந்துடறேன். '

'நீ எப்படியும் அங்கே வந்துடணும், கணேசன். நீயில்லாத ஒரு ஆபிஸிலே வேலை பண்ணறது எவ்வளவு கஷ்டமாயிருக்கு, தெரியுமா ? ' பாலுவின் குரல் கரகரத்தது.

'எனக்கும் அப்படித்தான், பாலு. '

சற்று நேரம் இருவருக்கும் பேசத் தோன்றவில்லை. கணேசன்தான் முதலில் துவங்கினான்.

'வாயேன், காபி சாப்பிட்டுப் போகலாம், ' என்றான்.

'வேண்டாம், இன்னொருத்தனைப் பார்க்கணும். '

'நிறையத்தான் வேலை வைச்சிண்டிருக்கே. உன் ஆபீஸ் எத்தனை மணிக்கு ? ஒம்போதரைத்தானே ? '

'ஆமாம், ஆனாத் தேதி இருபதாச்சே ? '

'ஏன், என்னாச்சு ? '

'இதுக்காகவாவது நீ என் கம்பெனிக்கே வந்துடணும். '

'எதுக்கு ? '

'எனக்கு இப்போ இருபது ரூபா வேணும். முதல் தேதி பொறந்து சம்பளம் வந்தவுடனே கொடுத்துடறேன். '

# திறப்பு

**வண்ணதாசன்**

கதவைத் திறந்ததும் இரண்டு நிகழ்ந்தது.

புல்லாங்குழல் வாசிப்பு சட்டென்று நின்றது. காட்டமான பீடிப் புகை மண்டி முகத்தில் அடித்தது.

'மச்சுப்படி யேறி இவ்வளவு தூரம் வரவா போகிறாள் என்று இங்கேயே வந்து ஒளிஞ்சுக்கிடுதயாக்கும். நானும் வந்து பத்துநாளா எதிர்த்த வீட்டில நடமாடிக்கிட்டிருக்கேன். தலையே தென்படலை '--லோகா மதினி உள்ளேயே வந்து விட்டாள்.

தேசிகன் பதறினது போல, இலேசாகப் படிந்திருந்த புல்லாங்குழல் எச்சியை உடுத்தின சாரத்தில் தேய்த்துக் கொண்டு கட்டிலை விட்டுப் படக்கென எழுந்தான். கட்டிலில் படுத்தவாறு பீடியை நசுக்கி நசுக்கி கைக்கெட்டின தூரம் எல்லாம் கட்டிலின் அடியில் கரும்புள்ளி, பக்கவாட்டில் கட்டில் கால் முழுவதும் பீடி, சிகரெட் தழும்புகள், கொடி, மடக்கு நாற்காலி, ஜன்னல் கதவு என்று சட்டையைத் தேடினது பார்வை.

'அண்ணா அந்த வட பக்கத்துக் கதவுல தொங்குது ' லோகா முகத்தால் காட்டிச் சொன்னதும் எழுந்து அவன் போட்டுக் கொண்டு வரும்போது--

'பிள்ளைகள் எல்லாம் என்னமா இருக்கு. ஆஸாத் பயில்வான் மாதிரி ' என்று மறுபடி சொன்னாள். குரலில் மிகுந்த துயரம் இருந்தது. அவனுடைய மெலிவும் தனிமையும் ஒதுங்கலும் கேள்விப் பட்டுத் தாங்க முடியாமல் தான் வந்திருக்கிறான்.

'எப்ப மதினி வந்தீங்க ? '

'எப்ப வந்தேனா. நாளைக்குக் காலம்பற போப்போறேன். வந்து சனிக்கிழமையோட ரெண்டு வாரமாகப்போகுது. புள்ளைகளுக்கு நாலாம் தேதி பள்ளிக்கூடம் திறக்குல்லா ' '

'புள்ளைகள்ளாம் நல்லாருக்கா...மதினி ' ' இதைக் கேட்பதற்காக முகத்தைத் தேடி நிமிர்ந்த தேசிகனைச் சரியாக வாங்கி அந்த வினாடியிலேயே நிறுத்திக் கேட்டாள்.

'நீ எப்படி இருக்க முதல்லே ? '

'அதுதான் இருக்கம்லா ', தேசிகனுக்குச் சட்டென்று கண்கள் நிறைந்து விட்டது. எழுந்திருந்து அவன் ஜன்னல் பக்கம் போகும்போது, நடை சொடக்குப் போட்டது. வாரப் பத்திரிகையொன்று காலில் பட்டு குப்புறச் சரிந்தது.

எதிர்த்த வீட்டுக்கு கலியாணம் ஆகி வந்து எட்டு வருஷம் ஆயிற்று என்றாலும், லோகா இந்த மச்சு ஜன்னல் பக்கம் பகலில் வந்ததில்லை. ஒரு தடவை கல்யாணம் ஆன புதிதில் இந்த வளவுப் பெண் பிள்ளைகள் எல்லோருமாக ராத்திரி இந்த ஜன்னலுக்குப் பக்கமாக உட்கார்ந்து தேவராஜன் கௌரி கச்சேரி கேட்டிருக்கிறார்கள். இன்னோர் நாள் இதே மாதிரி தசராவுக்குக் கும்பக் குடம் பார்த்தார்கள். அது இதுக்கு நேரே, கீழே, தெருவை ஒட்டிய நாலாம் கட்டு ஜன்னல் வழியாக.

வெயில் நேரத்தில், தெருவின் மேல் பக்கம் கடைசி வரை தெரிந்தது. தெரு பம்ப். முருங்கை மரத்து ஆயா வீடு. கந்தையாப் பிள்ளை வீடு. முக்குத் திரும்புகிற இடத்தில் மில்லுப்பிள்ளை வீட்டுக் குதிரை வண்டி ஷெட். எல்லாம் பளிச்சென்றிருந்தது. கச்சேரி வாசல் சோப்புக் காய் மரம் சீட்டுக்கட்டுக்கிளாவர் மாதிரி நின்றது. பச்சைக் கிளாவர் கோட்டிக்காரச் சொக்கனைக்

காணோம். இவனையும் இவன் தாடியையும் பிடரி முழுவதும் வழிகிற தலைமுடியையும் பார்த்தால் கோட்டிக்காரன் மாதிரி தான் இருக்கிறான்.

'என்ன தேசீ, சர்வீஸ் கமிஷன் எழுதப் போறயா ? ' மேஜை மேல் கவிழ்ந்திருந்த புத்தகத்தை எடுத்தபடி லோகா கேட்டாள்.

'ஆமா. அஞ்சு வருஷமா எல்லாப் பரீட்சையும் எழுதி எழுதி ஆர்டர் வந்து குவிஞ்சுட்டுது. இதையும் எழுதீருவோம்னு படிக்கேன். கலெக்டர் நாற்காலியை நான் பரீட்சை எழுதட்டும்னு காலி பண்ணி வச்சிருக்காங்களாம் ' '--

லோகாவைப் பார்க்காமல், இன்னும் ஜன்னல் கம்பியின் துரு ஏறிய திண்மையில் விரலைச் சுண்டிக் கொண்டிருந்தான். நாலு கம்பியிலும் விரல் வேகமாக வழிந்து ஒரு இசையின் துவக்கம் போலச் சப்தம் மறுபடி மறுபடி எழுந்தது. இந்த இயக்கத்திற்கு சம்பந்தமில்லாது ஓடுகிற ஒரு கசந்த நாடா போல அவனுடைய பேச்சிருந்தது. இந்த இசைதான் இவனைத் தாங்கி முட்டுக் கொடுத்து வருகிறதா சாயாமல் ?

லோகா வரும்போது வாசித்த புல்லாங்குழல் நன்றாகவே இருந்தது. இந்தப் பத்து நாட்கள் நிறைய மத்தியானங்களில் அவள் இதைக் கேட்டு விட்டாள்.

அல்லும் பகலும் இதே கதிண்ணு கிடக்கான். ஏதோ நம்மளால் ஏண்டதைப் படிக்க வச்சோம். பாட வச்சோம். அது அது ஒரு வழியைப் பார்த்தது. கரையேறிப் போச்சுண்ணு இருந்தால் அல்லவா நமக்கு நிம்மதி. மூத்ததை வச்சுக்கிட்டு இளையதைக் கட்டி கொடுத்தது மாதிரி இவன் இப்படி அஞ்சு வருஷமா வேலையில்லாமல் திகைச்சு நிக்கான். சின்னவனுக்குப் படிப்பு முடிஞ்சுதும் ரெடியாய் வேலை கிடைச்சுப் போயிட்டான். இதுக்கு நாம என்ன பண்ண முடியும். ஏதோ வேலையை நாமதான் மடியில் கட்டி ஒளிச்சு வச்சிருந்தது மாதிரியும் அவனுக்குக் கொடுக்காமல் இளையவனுக்கு உள்ளங்கையிலே பொத்தி எடுத்துக் கொடுத்துட்டதாயும் அவனுக்குத் தோணுது....என்ன பண்ண '--

தேசிகனுடைய அம்மாவுக்கு எப்போதுமே நீளமான பேச்சு தான். தொழுவத்துக்கு வைக்கோல் போடும்போது பார்த்தாலும் கல்யாண வீட்டுப் பந்தியில் பக்கத்தில் உட்கார்ந்தாலும் வாசலில் வந்து நிற்கிற குரங்காட்டிக்குச் சோறுபோடும் போதும் இதே நீளாமான பேச்சுத்தான். லோகாவைப் பிடித்துப் போனதற்குக் காரணம் கூட லோகா கொஞ்சம் எல்லோரிடமும் மடமடவென்று பேசுகிறதாலும் இருக்கலாம்.

'அல்லும் பகலும் வயலு வரப்புண்ணு காத்துக் கிடக்கிற அவுகளுக்கு நெல்லு விலை புல்லு விலைத் தவிர வேறு வெளிப் பழக்கம் ஜாஸ்தி கிடையாது. அப்படியும் அவுக எப்படியும் போண்ணு உதறியும் விட்டிரலை. உன்னி உன்னிப் பார்க்கத்தான் செய்தாக. ஆனா இவன் என்னமோ எல்லோரும் இவனைக் கழுவிக் கவிழ்த்திட்ட மாதிரியே நினைக்கான். அவனைச் சொல்லியும் குத்தமில்லை. இளைப்புக்காரன் மாதிரி நடக்கவும் முடியாமல் படுக்கவும் முடியாமல் அப்படியொரு அவஸ்தை தான் இது '

லோகாவை முன்னால் வைத்துக் கொண்டு இப்படி தேசிகனிடம் பேசுவது போலவும் தேசிகன் பதில் சொல்லுவது போலவும் பேசிக் கொண்டே போவது கூட ஒரு வடிகால்தான். வேறு ஒன்றும் முடியாவிட்டாலும் கேட்டுக் கொண்டாவது இருப்போம் என்று கதவில் லோகா சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கதவில் கார்த்திகைக்கு அடித்த மாக்கை அடையாளம் பழுப்பாகிக் குங்குமத்துடனிருந்தது. கைரேகை மாதிரி விரல்களை விரித்துப் பதித்திருந்த மாக்கையின் கீழ்ப் பக்கத்தில் இரண்டு மூன்று கோடாக வழிந்திருந்ததைச் சுரண்டிச் சுரண்டித் திருத்தமாக்கினாள்.

'உங்க வீட்டுத் தம்பி கிட்டேயும் சொல்லு. ஏதாவது அவன் காரியமா ஒரு ஏற்பாடு பண்ண முடியுதாண்ணு பார்ப்போம். நாலு பேரா நாலு திசையில் முயற்சி செஞ்சோம்னா பத்தில் ஒரு காரியம் விடியாதா ? வேலைன்னு ஒரு இடத்திலே உட்கார்ந்தால்தான் ஒரு நல்லது கெட்டதுன்னு இவனை நம்பிச் செய்ய முடியும். வயசும் ஆகி விட்டுதுல்லா ? '

லோகாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது. 'மொதல்லே வேலைக்கு இல்லியா வழி பண்ணனும். அதை விட்டுட்டுக் கல்யாணத்தைப் பற்றி ஆரம்பிச்சிட்டாங்க. '

'என்ன பண்ண. சின்னவன் வேலைக்குப் போயிட்டாண்ணு தெரிஞ்சதும் நாலஞ்சு பொண்ணு வீட்டில இருந்து சொல்லி வந்துட்டாங்க. நிறையச் செய்கிற கொள்கிற இடமாகவும் இருக்கு. என்னத்தையும் ஒரு பேருக்கு இரு நூறு முன்னூறு சம்பாதிச்சாக் கூட முன்னனை பின்னனையா ரெண்டு பேருக்கும் கல்யாணம் வச்சிரலாம். என்ன இருந்தாலும் சின்னவன் யோகம் தனிதான். அது இவனுக்கு வராது. '

லோகாவுக்கு கேட்க கேட்கச் சங்கடமாக இருந்தது. தேசிகன் காதிலும் இதெல்லாம் விழத்தான் செய்யும். இத்தனை வருஷம் சும்மா இருப்பது; தனக்கு முன்னே தம்பி வேலைக்குப் போனது. தம்பிக்குப் பெண் சொல்லி வருவது இவை எல்லாவற்றையும் விடப் பெற்றவளே யோகத்தைப் பற்றிப் பேசுவது அவனுக்கு எவ்வளவு துயரம் தருவது. லோகாவுக்கு தேசிகனைப் பார்க்க வேண்டும்போல இருந்தது. இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிற புல்லாங்குழல் சத்தத்தையே நூலேணி மாதிரிப் பற்றிக் கொண்டு மேலே போய்ப் பார்த்து விடலாம்.

'தேசி மேலே தானே இருக்கான் ? ' லோகா எழுந்திருந்தால். அடுப்பங்கரையிலிருந்து ஒரு ஏணிப்படி மச்சுக்கு உண்டு என்பதால் உள்பக்கம் போக லோகா ஏற்பட்டதைத் தடுப்பது போல.

'வெளிப்படி வழியாப் போ. இங்கே பூட்டியிருப்பான். பூட்டிக்கிட்டு இருட்டுற வரைக்கும் தொண்டை தண்ணி வற்றுகிற மாதிரி இதையே ஊதிக்கிட்டிருப்பான் ' தேசிகனின் அம்மாவும் எழுந்திருந்தாள்.

இதைக் கேட்டதும் லோகாவுக்கு எரிச்சலே வந்து விட்டது. பேசியது போதும் என்று தோன்றியது. படியேறுவதற்காக வெளியே வந்தாள்.

டானா மாதிரி மேல் நோக்கி மடங்குகிற கல் படிகள் படியில் காரை பெயர்ந்த இடங்களில் எல்லாம் நெல் மணி புகுந்து கிடந்தது. அறுப்பு முடிந்த போதெல்லாம் ஒரு தனிஒயரில் கரண்ட் இழுத்து பல்பு போட்டு மூட்டைகளை மேலே கொண்டு போவதை லோகா கல்யாணம் ஆகிவந்த சமயம் ஆச்சரியமாகப் பார்த்திருக்கிறாள். அந்த ராத்திரியிலும் மூட்டையை ஏந்தின முதுகுகளில் வியர்வை வழியும். முகம் என்கிற உறுப்பே இல்லாதது போலக் குனிந்து மூட்டைக்குக் கீழே முதுகும் கால்களும் மட்டுமே தெரிய மேலே போகும். லோகாவுக்கு மேல் தேசிகனை பற்றிய கவலையெல்லாம் கனமாக இருந்து மூட்டையாக அழுத்த, அவள் பெருமூச்சுடன் மேலே வந்து கதவைத் தள்ளியதும்தான் புல்லாங்குழல் நின்றது.

'தேசீ, புல்லாங்குழல் வாசிப்பு, ரொம்ப நல்லாருக்கு '

'கிண்டல் பண்ணுறீங்களா மதினி ? '

'கிண்டல் பண்ணுகிறதுக்கு யாராவது இப்படி மச்சுப் படியேறியா வருவாங்க ? '

தேசிகன் ஜன்னலை விட்டுத் திரும்பினான். மறுபடியும் மளுக்கென்று கண் நிறைந்தது. பார்வை ஒரு நிமிஷம் ஜொலித்தது. மேஜையில் டிரான்சிஸ்டர் பக்கம் இருந்த புல்லாங்குழலைக் கையில் எடுத்து உருவித் துடைத்தான். வாசிக்கப் போவது போன்ற ஒரு நிமிடத்தை அருகில் கொண்டு வந்துவிட்டு வாசிக்காமல் மேஜையில் வைத்தான். குழல் சற்று உருண்டு தீப்பெட்டி தடுக்கி நின்றது.

'முதல்லே அண்ணங் கிட்டச் சொல்லி ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள் மதினி '

'இப்படி உட்கார்ந்து பேசேன் தேசி. '

லோகா சுவரில் சாய்ந்து கீழே உட்கார, தேசிகன் அந்த அழகான உறுதியான பழங்காலத்து தேக்கு நாற்காலியில் உட்கார்ந்தான். நாற்காலியின் திசை ஒரு புறமும் இவன் உடம்பு ஒரு புறமுமாகத் திரும்பியிருக்க நிலைக் கண்ணாடியில் பிரதிபலித்த தேசிகனின் உருவம் நிரம்பச் சோகம் தருவதாக இருந்தது.

'ப்ரைவேட் கம்பெனியில் ஏதாவது ஏற்பாடு பண்ணினால் செய்வியா ? சம்பளம் அதிகம் எதிர் பார்க்கமுடியாது. '

'சம்பளத்தைப் பத்திக் கூட ஒண்ணுமில்லை. நம்மளை நடத்துகிற முறை தான் சகிச்சுக்க முடியலை. ஒரு மொசைக் கம்பெனியிலே சேர்ந்தேன்....கிளார்க்குன்னு தான் பேரு, 'ஏ...போய் நாலு டா வாங்கிக் கிட்டு வந்திருடே ' ண்ணு முதலாளி சொல்வாரு. அதையும் செய்யத்தான் செய்தேன். செய்யாமல் இல்லை. ஆனால் டா வாங்கிக் கொடுக்கறதே பொழைப்பா எத்தனை நாளைக்கு வேலை பார்க்க முடியும்... ? அஞ்சு வருஷம் சும்மா இருந்ததே இருந்தாச்சு. கடைசி அட்டெம்ப்டா இந்த சர்வீஸ் கமிஷன் பரீட்சையை வச்சிருக்கேன். தயார் பண்ணிக்கிட்டும் இருக்கேன். எம்.எல்.ஏ, எம்.பி.ண்ணு ஆளுக்கு ரெண்டா அதையும் கொத்திக்கிட்டுக் போயிட்டாங்க என்றால் நமக்கு கடைசியில ஒண்ணும் நாதியிருக்காது '-- கறுத்து நீலமான கீழுதடு பேச்சில் அதிகமாகப் பிதுங்கிப் பிரிந்து அசைந்தது. ஒரே சீராக இல்லாமல் கொஞ்சம் கன்னத்துப் பக்கமும் முகவாயிலும் மட்டும் சிலும்பல் சிலும்பலாகத் தாடி முளைத்து ஒரு வினோதமான நிழலை முகத்தில் தருவித்திருந்தது.

'அதுக்காக நாம படிக்காம இருக்க முடியுமா. தொடர்ந்து படிச்சிக்கிட்டு வா. நான் அத்தான் கிட்டேயும் சொல்லுதேன். எங்க பொள்ளாச்சி அண்ணாச்சிக்கிட்டேயும் சொல்லுதேன். நடக்கிறது நடக்கட்டும். '

'அதான், இந்த அஞ்சு வருஷமாத் தான் நடந்து கிட்டு இருக்கே. புதுசாவா இனியும் எதுவும் நடக்கப்போவுது சொல்லிக் கொண்டே 'ம்ஹ்உம் ' என்று தேசிகன் சிரித்தான். ஒரு பெரு மூச்சுப் போலவும் எதையோ விழுங்கி திணறி தொண்டையில் சிக்கி நிற்பது போலவும் எல்லாம் அந்தச் சின்ன முனகலான ஒலி கேட்டு லோகாவை இம்சித்தது.

இந்த இம்சைக்கு மத்தியில், இதற்குச் சம்பந்தமே அற்றது போன்ற ஒரு ஞாபகம் பீறிட்டு வர லோகா சற்று மலர்ந்து கேட்டாள்.

'என்ன தேசீ, அன்னிவர்சிக்கு வாழ்த்து அனுப்பிக்கிறதையெல்லாம் நிறுத்திட்டா ? தேதியைக் கரக்டா ஞாபகம் வச்சு, நீ ஒருத்தன் தான் மறக்காம அனுப்புவே ' '

சந்தோஷமான ஞாபகங்களைப் பின்னோக்கிப் பார்க்கத் தடையாக இருந்த அகழியொன்றைத் தாண்டி விட்டது போல் தேசிகன் இதைக் கேட்டதும் மௌனமாக இருந்தான். முகத்தின் இறுக்கம் தளர்ந்து கொண்டே வந்து ஒரு மிகக் குறைந்த சிரிப்பின் முடிச்சைத் தட்டி நின்றது.

'27ஆகஸ்ட் ' என்று மட்டும் கூறினான். மறுபடி கேட்டான்.

'உங்க சிஸ்டர் காலேஜை முடிச்சிட்டாங்க இல்லை ? '

'யாரு பாலாவா ? ரெண்டாவது வருஷம்தானே எழுதியிருக்கா ? ' கதவைத் திறந்து கொண்டு இந்த அறைக்குள் வந்தவுடன் தேசிகனின் முகத்திற்கும் இப்போதைய முகத்திற்கும் உள்ள மாறுதலைப் பார்த்தபடியே லோகா எழுந்திருந்தாள்.

'ரொம்ப நேரம் உட்கார்ந்துட்டேன் '--மறுபடியும் லோகா அந்த ஜன்னல் பக்கம் வந்து நின்று தெருவைப் பார்த்தாள். பளீர் என்கிற வெய்யிலில் தெருவே அசையாமல் நின்றது. முக்கு பம்ப்பின் மேல் ஒரு காக்கை இருந்து கத்த கீழே தேங்கின தண்ணீரிலும் பாசியிலுமாக அமிழ்ந்து கிழட்டு நாய் நாக்கு தொங்கப் படுத்திருந்தது.

'தைரியமா இரு தேசீ ' '

தேசிகன் சிரித்தான்.

'இதையும் விட்டிர வேண்டாம். ' லோகா மேஜை மேல் இருந்த கனமற்ற அந்த மூங்கில் குழலைக் கையில் எடுத்தாள். அதே கவனத்துடன் மறுபடி வைத்தாள்.

தேசிகன் ஒப்புதலாக அதற்கும் சிரித்தான்.

'வாசிக்கிறதே வாசிக்கே கதவையெல்லாம் திறந்து வச்சுக்கிட்டு வாசி ' லோகா சொல்லிக் கொண்டே கதவுப் பக்கம் போனாள். விடை கொடுக்கிறது போலத் தேசிகன் சற்று முன்னகர்ந்து நின்றான். பாதி திரும்பின நிலையில் தேசிகனையும் பார்த்து முகம் காட்டின படி.

'காற்று, வெளிச்சம் மனுஷங்க இதெல்லாம் எப்பவுமே முக்கியமானதில்லையா ? ' என்று ஒவ்வொரு படியாக இறங்க ஆரம்பித்தாள்.

தேசிகன் கதவைப் பார்த்தான். பாதி அடைத்தது போலவும் பாதி திறந்தது போலவும் ஒரே நேரத்தில் தோன்றும்படியாக அது உட்பக்கம் சாய்ந்திருந்தது.

## காவலுக்கு

தி ஜானகிராமன்

'ஐயா...ஐயா '

பதில் இல்லை உள்ளேயிருந்து

'சுவாமி ' சுவாமி '

பதில் இல்லை.

'வெற்றிலைக்காரம்மா ' வெத்தலைக்காரன் வந்திருக்கேன்....

யாரு உள்ள ' '

'யாரு ? '

'நான் தாம்மா வெத்திலெ '

வேதாந்தி இடை வழியைப் பார்க்கிறார். நடை வழியில் சுவரை ஒட்டி ஒரு திண்ணை. அந்த திண்ணையின் மேல் உட்கார்ந்திருந்த கிழமுகம் தெரிகிறது. பொல்லென்று வெளுத்த தலை. நெற்றியில் சந்திர வளையம் போல் திருமண்.

'யாரு ' அம்மாவா ' எப்ப வந்தீங்க ? '

'யாரு ? '

'என்ன யாருன்னு கேக்குறிய ' தெரியலியா ' வேதாந்திம்மா வேதாந்தி. எப்ப வந்தீங்க ? '

' --வேதாந்தியா ?யார்றாப்பா இப்படிக் கத்தறதுன்னு பார்த்தேன் ' என்று கிழவி இடைக்கழி திண்ணையிலிருந்து எழுந்து

'யப்பா, யம்மா ' என்று தள்ளாடித் தள்ளாடி முந்தானை பின் பக்கம் ஆடுசதைவரை தொங்க நடந்து வந்து வாசல் திண்ணை வரையில் உட்காருகிறாள்.

'எப்ப வந்தீங்க ? '

'நான் வந்து பத்து நாளாச்சே '

'முந்தாநாத்து நான் வந்து வெத்திலை கொடுத்திட்டுப் போனேனே அம்மாளை பாக்கிலியே '

'ரண்டாங்கட்டுலெ படுத்திருந்தேன். இப்ப மாட்டுப் பொண்ணு குளிக்கப் போனா, கடசிக் கொல்லைக்கு வாசப்பக்கம் பார்த்துக் கோன்னா. ரேழித் திண்ணையிலே வந்து படுத்துண்டேன்.

நேத்திக்கி கூட நினச்சுண்டேன் உன்னை. தினமும் குரல் கேக்குமே செத்துப் போயிட்டானோ இருக்கானோ தெரியலியேன்னு நினைச்சிண்டிருந்தான் '

'இப்ப தெரிஞ்சுதா இல்லியா இருக்கேனா செத்திட்டேனான்னு. '

'எதுக்காக செத்துப் போகனும். மகாராஜனா இன்னும் நூறு வருஷம் இரு. உன் தம்பி சடையன் பட்டச்சேரி அய்யங்கார் நாத்தங்காலெல்லாம் குத்தகைக்கு வச்சிண்டிருந்தானே. அவன் செத்துப் போயிட்டானோ இருக்கானோ ' '

'நீங்க போன தடவை எப்ப வந்தீங்க ? '

'போன தடவையா அது, அஞ்சு வருஷம் ஆச்சு. கான்பூர்லே தான் என் கால்லே ஆணி அடிச்சு வச்சுட்டானே பெரிய புள்ளே. உப்பிலி ரங்கராஜன் எல்லாரையும் பாத்து மாமாங்கம் ஆனாப் போல இருக்குடா இப்ப. நான் எப்படியாவது போய்த்தான் தீர்வேன். ஒத்தக்காலாலே நின்னேன். அப்புறம்தான் யாரோ துணை கிடைச்சுதுன்னு ரயில்லே ஏத்திவிட்டான். '

'நீங்க அப்பவும் என் தம்பி சடையன் செத்துட்டானா இருக்கானான்னு கேட்டாங்க. ஞாபகமிருக்கா ? '

'அப்படியா கேட்டேன் ? '

'அப்படித்தான் கேட்டாங்க. அப்ப நான் என்ன சொன்னேன். நெனவு இருக்குங்களா ? '

'சொல்லேன் '

'என் தம்பி இப்ப சடையன் இல்லெ. சபாஸ்தியனாப் போய்ட்டான். பட்டாச்சாரி நாத்தாங்கலெ கிரயத்துக்கு வாங்கி சொந்தமாப் பயிர்செலவு பண்றான்னு சொன்னேன். உங்களுக்கு மறந்து போச்சு. இப்பவும் அவன் செத்துப் போகலெ நல்லாத்தான் இருக்கான். என் தம்பின்னா எனக்கு அப்புறம் தானே செத்துப்போகணும் '

'குசாலா அவாவா அந்தந்தக் காலத்துலெ செத்துப் போறதுதான் நல்லது. அப்படியெங்கே நடக்கிறது ? அவர் செத்துப் போனவுடன் 'நீ என்னோட வந்து இரும்மா 'ன்னு பெரிய புள்ளே கான்பூருக்கு அழைச்சிண்டு போனான். கான்பூரு என்ன கிட்டஞ்சியா கொட்டையூரு, இன்னம்பூரு, சருக்க கோபாலசமுத்ரம் மாதிரி அதுகிடக்கு நாலாயிரம் மைலோ ஐயாயிரம் மைலோ எப்பவாவது ரண்டு வருஷம் மூணு வருஷம் நாலு வருஷத்துக்கு ஒரு தடவை வரேன். ஒவ்வொரு தடவையும் கேக்கற சேதியெல்லாம் தூக்கி வாரிப்போடறது. என் மச்சினன் புள்ளே ஆராமுது பொண்டாட்டிமேலே கோச்சுண்டு கொளத்திலெ விழுந்து ப்ராணனை விட்டுட்டானாம். போனதரம் வந்து ஒரு நாழிக்கெல்லாம் இந்த சேதியைச் சொன்னா சொரேர்னுது எனக்கு. அத்தோடவா, ராதா பொண்டாட்டி என்னோட பரம சிநேகிதி. அவளைப் பார்த்துட்டு வரணுமேடின்னேன் பெரிய மாட்டுப் பொண்ணுகிட்ட. அவ கான்ஸர் வந்து செத்துப் போய்ட்டாம்மான்னாளே பாரு. நாலு நாளைக்கு சோறு எறங்கலெ. இந்த மாதிரிதான் ஒரோரு தடவையும் சின்னது பெரிசுன்னு இல்லாம யாரைப் பத்திக் கேட்டாலும் டாபி வந்துடுத்து, மோட்டார்லே அடிபட்டுடுத்து, மாடு முட்டிடுத்து. ஆத்தோட போயிடுத்துன்னு கேட்டா எப்படியிருக்கும் ? நாலஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை தானே இந்தப் பக்கம் வரேன்-- '

'அது சரி, அப்படின்னா, செத்துப்போயிட்டாங்களா இருக்காங்களான்னு ஏன் கேக்கறீங்க ? இருக்காங்களா செத்துப் போயிட்டாங்களான்னு கேக்கப்படாதா ? '

'எப்படிக் கேட்டா என்ன ? மாத்திக் கேட்டுட்டா மாத்திரம் செத்துப்போனவா பொழச்சி வந்துடப் போறாளா ' இல்லெ இருக்கறவாதான் செத்துப் போகாம இருக்கப்போறாளோ ? '

'அது இல்லெதான் ' என்று வேதாந்தி கூர்தாடியும் காவிப் பல்லுமாகச் சிரிக்கிறார்.

'ராதா செட்டி பொண்டாட்டி தான் செத்துப்போய்ட்டான்னா, இப்ப செட்டியார் செத்துப் போய்ட்டாரோ இருக்காரோ ? '

'பார்த்தீங்களா ' மறுபடியும் அப்படியே கேட்டுட்டாங்களே. '

'ஆமா, நான் கேட்டுத்தான் எசைகேடா ஆயிடுமாக்கும் ? '

'எசைகேடா ஆகவாணாம். செட்டியாரு நல்லாத்தான் இருக்காரு. ரண்டு சுத்து பெருத்திருக்காரு-- கருங்கல்லாட்டம் இருக்காரு. முன்னெல்லாம் பாய்ல படுக்கை. இப்ப பணத்து மேல படுக்கை. கருங்கல்லு உடம்பை கோரைப் பாயா தாங்கும் ? அதான் ஆண்டவன் பணமாவே படுக்கை விரிச்சுட்டான். '

'ஆமா, கருங்கல்லு. கண்ணை மூடற வேளை வந்துதுன்னா கருங்கல்லாவது பாறாங்கல்லாவது. '

'அதான் இருக்கவே இருக்கே....அது போவுதுங்க...இப்ப கான்பூர்லெ பெரிய ஐயா, பேரன் பேத்தி இவாள்ளாம் நல்லா இருக்காங்களா ' '

'நல்லாவும் இருக்காங்க, பொல்லாத்தனமாவும் இருக்காங்க--ஏதோ நடக்கறது--போயேன் '

'ஏன் இப்படி சொல்றீங்க ? '

'பின்னே ? பெரிய பேரன் ஒழுங்கா பெல்லாரி பாஷ்யம் அய்யங்கார் பேத்தியைக் கல்யாணம் பண்ணிண்டான். ரண்டாவது பேரன் குண்டூர்லேர்ந்த ஒரு ரெட்டிப் பொண்ணாம். கூடப் படிச்சாளாம். அவளை ஓசப்படாம ரிஜிஸ்தர் கல்யாணம் பண்ணினுட்டான். ரெட்டா மட்டான்னு எம்புள்ளே பேரன் மேலே பாஞ்சு பாஞ்சு குதிச்சான். இப்ப எல்லாம் சரியாப் போயிடுத்து. இப்ப அந்தப்பொண்ணு சமையல் உள்ளேயே வந்து காபி போட்டுக் குடுக்க ஆரம்பிச்சுடுத்து. மூணாவது பேரன் எல்லாத்தியும் தாண்டிப் போயிட்டான். ஸ்ரீநகர்லேந்து ஒரு துலுக்கப்பொண்ணாம். அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு குதிக்கறான். இப்ப அம்மாக்காரி குதிக்கிறா. தினம் போது விடிஞ்சா சண்டை. மூஞ்சியை மூஞ்சியைத் தூக்கிண்டு மூலைக்கொண்ணா நிக்கறது ? '--

'சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்

சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்.

வீதிப் பிரிவினிலே விளையாடிடுவோம்

வேண்டாத மனையினில் உறவு செய்வோம்

சோதித் துலாலியே தூங்கி விடுவோம்

சுகமான பெண்ணையே சுகித்திருப்போம்

ஆதிப் பிரமர்கள் ஐந்து பேரும்

அறியார்கள் இதையென்று ஆடுபாம்பெ '

என்று பாடிக்கொண்டே எழுந்து நின்றார் வேதாந்தி.

'போரும் போரும் ' என்றாள் கிழவி--உப்பிலியின் தாயார்.

'மீன் இறைச்சி தின்றதில்லை,

அன்றும் இன்றும் வேதியர்

மீன் இருக்கும் நீரலோ

மூழ்வதும் குடிப்பதும்.

மான் இறைச்சி தின்றதில்லை,

அன்றும் இன்றும் வேதியர்.

மான் உரித்த தோலலோ

மார்பில் நூல் அணிவதும் '

என்று ஆட ஆரம்பித்தார்.

'போரும் போருமே ' என்று கிழவி காதைப் பொத்திக் கொண்டாள்.

'என்ன அமர்க்களம் இங்கே ' என்று குரல்.

கஸ்தூரி குளித்து விட்டு, ஈரத்துண்டைக் கூந்தல் முடிச்சில் பந்தாக முடித்துக் கொண்டு, புடவையைச் சீராகக் கட்டிக் கொள்ளாமல் முக்கால் சுற்றாக சுற்றிக்கொண்டு வாசல் நிலையில் எட்டிப் பார்த்தாள்.

'என்னய்யா ஆட்டடத்துக்கு இப்ப ? ' என்றாள் வேதாந்தியைப் பார்த்து.

'ஒண்ணுமில்லெ. சந்தோசமா சேதி சொல்றாங்க. சின்னப் பேரன் எங்களவங்க பொண்ணை கலியாணம் சேஞ்சுக்கப் போறாங்களாம் கான்பூர்லெ. யாராயிருந்தா என்ன ? எங்கிருந்தா என்ன ? சீ நகரோ சித்தாம்பூரோ

மாட்டிறைச்சி தின்றதில்லை. அன்றும் இன்றும் வேதியர்.

மாட்டிறைச்சி அல்லவோ மரக்கறிக்கிடுவது ' என்று பாடி உட்கார்ந்தார்.

'வேதாந்தி கிட்டவும் சொல்லியாச்சா--பெரிய சமாச்சாரத்தை ? ' என்று மாமியாரைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள் கஸ்தூரி அம்மாள்.

'வேதாந்தி கிட்டே சொல்லாம தற்குறிக்கிட்டவா சொல்லுவாங்க ?..வெத்துலெ எத்தினி வக்யட்டும் '

'என்ன கேழ்வி ? ஒரு கவுளி ரண்டு நாவட்டம் தெரியாதா உமக்கு. நீர் வாசல்லே வந்தாலெ ஏதாவது அமர்க்களம். எந்து உள்ள போங்களேன். '

வெற்றிலையைத் திண்ணையிலிருந்து எடுத்துக் கொண்டு வேதாந்தி வாசலில் இறங்குகிற வரையில் நிலைப் படியில் நின்றாள் கஸ்தூரி அம்மாள்.

'ஏந்துண்டு உள்ளே போங்களேன் ' வெத்திலைக் காராட்டல்லாம் போயி ஆத்து சமாச்சாரத்தை யெல்லாம் கொட்டணுமா ஊர் சிரிக்கணுமா ? '

'இத்தனை நாளா சிரிக்காதது இப்ப என்ன சிரிச்சுப் போச்சாம் ? இப்பதான் தந்தி ரேடியோவெல்லாம் வந்து அலகா பாத்தில்லே மூச்சு விட்டா அம்மா சமுத்திரத்திலே வந்து கேக்கறதே. ரண்டாவது பேரன் ரெட்டி பொண்ணைக் கலியாணம் பண்ணிண்டு ரண்டரை வருஷமாச்சு. அது தெரிஞ்சுட்டுப் போகட்டும். மூணாவது பேரன் துலுக்கப் பொண்ணைப் பண்ணிக்கப் போறானாமேன்னு இந்தத் தெரு கிருஷ்ணமாச்சாரிக்கு எப்படித் தெரியும். வரதய்யங்காருக்கு எப்படித் தெரியும் ? நான் ஊருக்கு வந்ததும் வராததுமா ரண்டு பேரும் கேட்டாளே ? வந்த அன்னிக்கே கேட்டாளே ? எப்படி ' மறுநாளைக்கு ஆமடையா வந்து அப்படியா சமாசாரம்னு குசுகுசுன்னாளே ரண்டாங்கட்டுலே என்னோட பேசறேன்னு ' '

'நான் சொன்னேன்னு சொல்றேளா ? '

'நீ சொன்னேன்னா சொன்னேன். '

'நீங்க சொல்றதை அப்படித்தானே அர்த்தம் பண்ணிக்க வேண்டிருக்கு ? '

'ஆமா, பெரிய அர்த்தத்தைக் கண்டுட்டே..போடா போ. '

'சரி, நீங்க உள்ளே வந்து படுத்துக்குங்கோ. '

உப்பிலி வயலிலிருந்து வந்ததும் சமாசாரத்தைச் சொல்லி கஸ்தூரி அம்மாள் அவரை உசுப்பி விட்டாள். அவர் தாயாரைப் பார்த்துக் கத்தினார்.

'நீ எதுக்கு ரேழி திண்ணெல படுத்துக்கறே. ரண்டாம் கட்டுலெயே படுத்திண்டிருக்கறதுக்கு என்னவாம் ? '

'அவதானடா சொன்னா நான் குளிக்கப்போறேன், வாசல் பக்கம் பார்த்துக்கோன்னு. ரேழியிலெ வந்து படுத்துண்டேன். '

இனிமே ரண்டாங் கட்டுலெ படுத்துக்கோ.

'நான் மாட்டேன், அங்கே புழுங்கித் தள்ளுது. நான் ஒரு மாசமோ ரண்டுமாசமோ இங்க இருக்கற வரைக்கும் ரேழியிலேதான் படுத்துப்பேன் ' என்று அடம் பிடிக்கிறாள் கிழவி.

அன்று மாலை உப்பிலியும் கஸ்தூரி அம்மாளும் கடைத்தெருவுக்குக் கிளம்பினார்கள்.

'காம்ரா உள்ளே நன்னாப் பூட்டிண்டுவா ' என்று சொல்லிக்கொண்டே வாசலுக்குப் போனர் உப்பிலி.

ரேழியைக் கடக்கும்போது, 'எல்லாம் பூட்டி யாச்சு ரேழியிலெ காவலுக்கு நாய் படுத்துண்டிருக்கே ' என்று கிழவி காதில் மட்டும் விழும்படியாகச் சொல்லிக் கொண்டே வாசல் நிலையைக் கடந்தாளாம் கஸ்தூரி அம்மாள்.

'சின்ன நாய் வெளியே போய் பெரிய நாய்தான் காவல் காக்கணும் ' என்று சற்று உரக்கவேகுரல் கொடுத்தாள் கிழவி.

பாருங்கோ உங்கம்மா போறதே ' '

'என்ன ? '

'உங்கம்மாவையே வந்து கேளுங்கோ ? '

'என்னத்தைக் கேக்கறது ? '

'உள்ளே வந்து கேளுங்கோ ? '

உப்பிலி புருவத்தைச் சுருக்கி ரேழிக்கு வருகிறார்.

'என்னம்மா சொன்னே ? '

'அவளையே கேளேன். அவ முதல்லெ என்ன சொன்னாள்னு. '

'நீ என்னசொன்னே ? '-- மனைவியிடம் உப்பிலி.

'அதான் ரேழியிலே காவல் இருக்கே. எதுக்குப்பயப் படறேள்னு உங்க கிட்டதான் சொல்லிண்டு வந்தேன் '

'அப்படியா சொன்னே ' நாய் படுத்திண்டிருக்கு காவலுக்குன்னு சொல்லலே ? '

'ராட்சசிக்குப் ப்ரோக்ஷசின்னு சொல்லனும் போல இருக்கு எனக்கு. நீ எனக்கு அம்மா. அவ எனக்குப் பொண்டாட்டி. சரிசரி போ...பத்து புலி சேர்ந்து விளையாடும் ரண்டு பொம்பனாட்டி....சரி சரி...போ. மொறைக்க வேண்டாம். '

ஒரு பயந்த அதட்டல். கஸ்தூரி முன் போக உப்பிலி பின் தொடர்கிறார்.

'நீங்க சண்டை போடாம சௌஜன்யமா இருங்கோ. ஆண் நாயும் பெண் நாயும் ' என்று முணுமுணுக்கிறாள். ரேழித் திண்ணையில் ஒருக்களிக்கிறாள் கிழவி.

## அடங்குதல்

**வண்ணதாசன்**

'எங்கேயோ கிடக்கிற ஊர்லேருந்து வந்து இங்கே டெண்ட் அடிச்சிருக்கோம். இதுதான் நிரந்தரம்ன்னாகூட சரி. நாம இங்கேயே தானே இருக்கப் போறோம்னா எல்லாத்தையும் இங்கேயே முடிச்சிரலாம். '

'அது சரி '

'ஒரு கல்லறைத் திருநாள் அது இதுண்ணு வந்தால் வெள்ளை அடிச்சு ரெண்டு மெழுகுதிரி கொளுத்தி வச்சி ஜபம் பண்ணனும்னு நினைச்சால் கூட வரதுக்கு ஏலாது. அடுத்த வருஷம் எங்கெங்கே தூக்கி அடிப்பானோ. நம்ம அதிர்ஷ்டம் தெரிஞ்சதுதான். இந்த ஊர் வேணும்னா எதிர்த்த ஊர்தான் கிடைக்கும் '

'அதெல்லாம் இருக்கு '

'அப்பா பக்கத்திலே என்னையும் கொண்டு போய் வச்சிருய்யா வச்சிருய்யாண்ணுதான் வந்ததிலிருந்தே சொல்லிக்கிட்டிருக்கா. சும்மா இருக்கிற மனுஷி திடார்னு இப்படித் திலுப்பிச் சொல்ல மாட்டா இல்ல, என்னமோ மனசில தோணப் போயித்தானே எல்லோரையும் பண்டியலுக்கு வரச்சொல்லி எழுதிப் போட்டிருக்கா '

'சிலபேருக்கு அப்படித் தோணும் ஸார். எங்க ஆச்சி கூட இந்த மாதிரித்தான் ஒரு தட.... '

'பின்னே....அற்புதம் வந்தாச்சு. வடக்கேயிருந்து க்ரிஸ்மசுக்கு பேபி, பேபி மாப்பிள்ளை எல்லாம் வந்துட்டாங்க. உடம்புக்குப் பெலமில்லாதவ, பேசாமல் நீ பாட்டுக்கு ஒரு இடத்துல இருண்ணு எல்லோரும் சொல்லிப் பார்த்தோம். கேட்க மாட்டேண்ணுட்டா. மட்டன் எடுக்கட்டா, கோழி எடுக்கட்டாண்ணு நியூ இயர் வரை ஒரே எடுகிடத்துண்ணு கிடந்தது ஊரில. அப்படியெல்லாம் தைரியமா இருந்தவ, எங்ககூடப் புறப்பட்டு வந்த இடத்திலே இப்படித் திடார்னு கிடையில விழுந்துட்டா நம்ம நேரத்துக்கு '

'நீங்க என்ன ஸார் நேரம் கீரம்ணுட்டு '

'பின்னே பத்துநாள் செல்லுமா 'ங் கிறதே யோசனையா இருக்கு. பத்து நாளோ, இருவது நாளோ, அவ ஆசைப்படி ஊருக்குக் கொண்டு போயிர வேண்டியது தான். இல்லாட்டா நாளையும் பின்னேயும் மனசில அரிச்சிக்கிட்டே இருக்கும். '

'அது சரிதான். '

* * *

'டாக்டர், நான் அவருக்கு கீழே வேலை பார்க்கிறேன் எப்படி இருக்கிறாங்க அந்த அம்மா ? அந்தரங்கமா, உங்க அபிப்பிராயம் என்னன்னு தெரிஞ்சுக்கலாம்னுதான் உங்ககிட்டே வந்தேன். '

'நீங்க பாருங்க ஏற்கனவே ஒரு தடவை ஆபரேஷன் பண்ணிய நோயாளி உடம்பு. அதும், நான் சொல்லணும், இந்த ஒன்றரை வருஷம் ஓடியதை நல்ல விஷயம்னு. வலது பக்கத்தில் மறுபடியும் கட்டி வளர்ந்துட்டுது ஒரு சின்ன பந்து போல, சிறியது ஒரு கால் பந்தைவிட, பெரியது ஒரு ஆரஞ்சுப் பழத்தைவிட, இதே நிலையில் நோயாளி ஒரு பத்து நாள் தள்ளலாம். அதிக பட்சம் இரண்டு வாரங்கள். அதற்கு மேல் இல்லை. ஆனால் எப்போது என்றைக்குண்ணு சொல்ல முடியாது, யாராலும் '

'அதுக்கில்லை டாக்டர். ஸாரோட அம்மா, சொந்த ஊர்லதான் அடக்கம் பண்ணப் படணும்னு பிரியப்படுதாங்க. இப்பவே கொண்டு போயிரலாமா. இல்லை. கொஞ்சநாள் வச்சிருக்கலாமா ? '

'நீங்க பாருங்க, நல்லது இப்ப கொண்டு போறதே, இந்த வியாதிக்காரங்க கடைசி வரை பேசிக்கிட்டுதான் இருப்பாங்க. பிரக்ஞை இருக்கலாம் கடைசி வரை கூட, நல்லது இப்போது கொண்டு போறதே '

'நன்றி. டாக்டர் '

'டோக்கன் நம்பர் அறுபத்தி மூன்று. அறுபத்தி மூன்று '

* * *

'செலவு என்னசார் செலவு. நம்ம தரித்திரம் என்னைக்கும் விடியப் போறதில்லை. அதுக்காக அம்மா விருப்பப்பட்டுச் சொல்றதைத் தள்ளி விட முடியுமா ? யார் யாருக்கோ செலவு செய்கிறோம். மச்சினன்மார் எல்லோரும் கால்சட்டை ஜோபிக்குள்ளே கையை பூத்துக் கிட்டு நட்டமா நிண்ணானுங்க. இழுத்துக்கிட்டு கிடந்தது அவனுகளுக்குத்தான் அம்மா, எனக்கு மாமியார்தான். எப்படியும் போகட்டும்னா விட்டுட்டோம் ? செயினை அடகு வச்சாவது செலவழிச்சுத்தான் பார்த்தோம். போய்ச் சேர்ந்து ஒரு வருஷம் ஆச்சு. இந்த நன்னி விசுவாசம் கெட்ட பயலுக செயினுக்குப் பணம் கட்டி திரும்புவானுகண்ணா செய்தோம் இல்லை. அண்ணைக்கு மாமியார்க்காரிக்குச் செய்ததை இன்றைக்கு பெத்த அம்மைக்குச் செய்ய மாட்டானா ? '

'அதுக்கில்லை ஸார். கையில வசதியில்லாத நேரத்தில டாக்ஸிக்கே ஆயிரம் இரண்டாயிரம்னு எதுக்குக் கொடுக்கணும்னுதான் யோசனை. அதுக்குப் பதிலா இப்பவே கொண்டுட்டுப்

போயிட்டா என்ன ? டாக்டர் சொன்ன கணக்குக்கும் கிட்டமுட்ட இன்னும் ஒருவார டயம் இருக்கு '

'அதப்படிப்பா முடியும். இப்ப காரைக் கூட்டிக்கிட்டு வந்து, நீ சொல்லுற மாதிரியே, வா, வண்டியிலே ஏறுண்ணு பார வண்டியிலே பனங்கட்டை ஏத்துற மாதிரி நம்ம இஷ்டத்துக்கு ஏத்தியிற முடியுமா ? அது நல்லா இருக்குமா ? அவ என்ன நினைப்பா ? சரி நமக்கு மணியடிச்சுட்டான் போல இருக்கு. அதான் இந்த பய ஊர்ல கொண்டித் தள்ளிரலாம்னு பார்த்தான் 'னு நினைச்சிரப் படாதுல்லா. நம்மால ஏண்ட மட்டுக்கும் கடேசிவரை பாப்பம். நல்லது கெட்டதுண்ணு ஒரு முடிவு ஆனப்புறம் கொண்டு போயிக்கிடலாம். ஆயிரம் ஐநூறுண்ணு கணக்குப் பார்க்கிற விஷயமா இது எனக்குப் படலை. '

* * *

'வீட்டுப் பொம்பிளை கிட்டே என்றைக்கு யோசனை கேட்டாரு, இன்றைக்கு கேட்க. அப்படிக் கேட்டாத்தான் எம்புட்டோ இதுக்குள்ளே குடும்பம் முன்னிலைக்கு வந்திருக்குமே. முன்னே பின்னே யோசிக்காம இப்படிச் சொல்லிக் கிட்டிருக்கிற மனுஷனை என்ன பண்ண, கட்டி கட்டியா கையிலே கழுத்திலே கிடந்தாலாவது வித்துச் செலவழிக்கலாம். ஏற்கனவே கசத்திலே தள்ளுனது மாதிரி மூச்சு முட்டிக்கிட்டு நிக்கேன். உங்களை மாதிரி நாலு ஆபீஸ் ஆளாச் சேர்ந்து ஒரு டாக்ஸியை பிடிச்சு வாசல்ல கொண்டாந்து நிறுத்துங்க. நல்லா இருக்கும்போதே ஊர்ல கொண்டிச் சேர்த்திருவோம். '

'இல்லீங்கம்மா, சாரு அப்படிச் சொல்லும்போது அதுவும் சரியாத்தானே படுது. பெரியம்மா விருப்பம் அப்படியிருக்கும்போது என்ன செய்கிறதுண்ணு எங்களுக்குத் தெரியலை. '

'அம்பாரியிலே போகணும்னு தான் தோணுது. அங்குசத்துக்குக்கூட வழியில்லைண்ணா என்ன செய்யுறது ? எனக்கும் என்ன வல்லா வல்லடியா அவுங்களை ஊர்ல கொண்டித் தள்ளிரனும்ணா ஆசை இல்லையா '

'இங்கேயே வச்சுக்கலாம்னாலும் சங்கடமாப் படுது சாருக்கு '

'அப்ப சங்கடப்பட்டுக்கிட்டு இருக்க வேண்டியது தான். ஒண்ணு முன்னே போகணும். இல்லே பின்னே போகனும். நிண்ண இடத்திலேயே காலைத் தேய்ச்சுக் கிட்டு இருந்தா எப்படி ? பொம்பிளை சொல்றதை சொல்லியாச்சு. இனிமே உங்கபாடு. உங்க ஸார் பாடு ' '

'சாமோட அப்பா வந்து என்னை மூணுதடவை ஒரு பெரிய வீட்டுக்கு வா வாண்ணு கூப்பிட்டாரு. நான் என் பிள்ளைங்களை விட்டுட்டு வரமாட்டேண்ணு சொல்லிட்டேன் '

--இது எல்லாம் கடேசீல பேசுகிற பேச்சுத் தான்.

'அதே சாமியார்தான் எம் பக்கத்தில இருந்து ஜெபம் பண்ணிட்டுப் போறாரு. கோயில்ல எங்க கல்யாணத்துக்கு நின்னாரே அதே சாமியார்தான் '

--இனி மேக்கொண்டு அதிக நேரம் செல்லாது. உள்ளூர் போதகரைக் கூப்பிட்டு ஜெபம் பண்ண வரச்சொல்லி தாக்கல் கொடுத்திரலாம்.

'சேசுவே, உமக்கு எங்கே சித்தமோ அங்கே என்னைக் கொண்டு செல்லும்னு வேண்டிக்குங்க '

'தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ '

'நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன் '

'மோசே வாத்தியார்கிட்டே தான் பொறுப்பை ஒப்படைச்சிருக்கு. இந்த ஊர் ஆளுங்கிறதாலே. ஒரு ஏற்பாடு செய்ய, கொள்ளத் தோதுவா இருக்கும்லா '

'அதெல்லாம் சரிதான். அவரைக் கங்காணிக்கிறதுக்கு அவரு பொறத்தாலே யேல்லா இன்னோர் ஆள் போகனும் பெட்டி செய்யப் போறேன் சாமிண்ணுட்டு அன்னை சா மில் மரக்கடைக்கு எதுக்க நிக்க இருக்கிற சாராயக் கடையில் இல்லா பட்டரையைப் போட்டிருவாரு. '

'வண்டிக்குச் சொல்லியாச்சா. கோயில் வண்டியா, முனிசிபாலிட்டி வண்டியான்னு பார்த்துக்கிடுங்க. ரெண்டுக்கும் துட்டுதான். முனிசிபாலிட்டிக்காரனையாவது நாம நாலு அதட்டு அதட்டலாம். கோயில்ல வச்சதுதான் சட்டம். '

'எப்படியும் ராத்திரி வரைக்கும் ஆகும். நாலு பெட்ரோமாஸ் லைட்டுக்குச் சொல்லி வைக்கணும். '

'எதுக்கு ராத்திரியும் விடியக்காலமும் ஆகப்போகுது ? வார ஆட்கள் எல்லோரும் வந்தாச்சு, சாருக்கு அக்கா, தங்கச்சி அவங்க ஹஸ்பெண்ட் எல்லோரும், அதிகமாயிருக்குண்ணு தந்தி கொடுத்து, சனிக்கிழமையே வந்தாச்சு, நம்ம ஆபீஸ்காரங்களும் அநேகமா இருக்கோம் பிறகு என்ன ? '

'முதல்ல ஊருக்குக் கொண்டு கிட்டுப் போற மாதிரி லைட்டா ஒரு பேச்சு இருந்ததுல்லா நான் கூட எதுக்கும் இருக்கட்டும்னு ஒரு டாசல் வேனுக்குச் சொல்லி வச்சேன். டிரைவர் தெரிஞ்ச பையன். ஓனருக்குத் தெரியவேண்டாம்னு சொல்லி ஒரு பத்து அம்பது கூடுதலா அவன் கையில வச்சிட்டாப் போதும் '

'பாடியைக் கொண்டு போகனும்னாலே ஒட்டிக்கு ரெட்டிதான். இந்தா இந்த எட்டு மைலுக்கிள்ள இங்கன இருக்கிற ஊருக்கு நூத்தம்பது ரூபா கேட்கான். அதிலேயும் இந்தத் தொண்ணுத் தொண்ணு பத்தொம்பது வண்டி இருக்கானே, தாயோழி இதுதான் சமயம்னு கொம்புல ஏறுவான் ' '

'உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்காகவே கர்த்தருக்குள் அமைதலாக நித்திரையடைந்திருக்கிற இந்த நல்ல அம்மாளின் மகனையும் மகள் மாரையும் அவர்தம் குடும்பத்தாரையும் தேவரீர் பேர் பேராக ஆசீர்வதித்து உம்முடைய வல்லமையாலும் மகிமையாலும் பேர் பேராக அவர்களுக்கு சகல சந்தோஷமும் சமாதானமும் உண்டாகும்படி கிருபை செய்யும் கர்த்தாவே '

* * *

'அந்தக் காலத்துல அதெல்லாம் சரி. பிறந்ததிலேர்ந்து மண்டையைப் போடுகிற வரை ஒரே ஊர்ல எல்லாம் நடந்தது. இப்பவும் அதே மாதிரிக் கொண்டு செல்லனும்னா முடியுமா. ஒரு

பேச்சுக்குப் பார்த்தா, ஒண்ணாங்கிளாஸ் துவக்கம் காலேஜ் வரைக்கிலும் ஒரே இடத்தில நாம படிச்சோம், ஒம் பையன் எல்கேஜி இந்த ஊர்ல, யூகேஜி அடுத்த ஊர்ல படிப்பான். பொழைப்பு அப்படியாயிட்டுது. பொட்டியைத் தூக்குண்ணா தூக்கியிற வேண்டியதுதான். '

'....... '

'என்ன ஒண்ணுஞ் சொல்ல மாட்டேங்கிற. அப்பா பக்கத்துல கொண்டு போய் வையி வையிண்ணுதான் அம்மையுஞ் சொன்னா. சரி சரிண்ணுதான் சொன்னேன். என்ன ஆனாலும் தூக்கிப் போட்டுக் கிட்டு ஊருக்குப் போயிரணும்னுதான் தோணுச்சு...எங்கன கொண்டு போக ? கூட ரெண்டு பத்தி கட்டும் மொழுகு திரியும் வாங்கிக் கொளுத்தலாம்னா அதுக்கே யோசனையாப் போச்சு நேத்திக்கி '

'...... '

'ராப் பகலாக ஆபீஸில் கிடந்து சாகிறதுதான் மிச்சம். அவசரத்துக்கு செலவழிக்க கையில் முக்கால் துட்டு இல்லை. பேரு மாத்திரம் இருக்கு. நாக்கு வழிக்கக்கூட பிரயோசனமில்லாத பேரு '

'........ '

'கடைசியிலே யார்கிட்டேப் பொரட்டினோம்னு நினைக்கே ? உரக் கடைக்காரர்கிட்டே தான். முன்ன பின்ன தெரியாது. பஜார்ல போகும் போது கடையில ஏறிட்டுப் பார்த்த பழக்கம்தான் வாங்கியாச்சு செலவழிச்சாச்சு. அசலூர் வந்து கடன் வாங்கினா என்ன, அம்மையை அடக்கம் பண்ணினா என்ன, ரெண்டும் ஒண்ணு தானே '

'.......... '

'என்ன ஒண்ணுஞ் சொல்ல மாட்டேங்க ? '

# பத்து செட்டி

**தி.ஜானகிராமன்**

பத்து செட்டி வாசலோடு போகிறார். ரொம்ப கஷ்டம். பழுத்துப் போன வேட்டி. தோளில் அழுக்குத் துண்டு. வெறுங்கால். தலையில் கட்டுக்குடுமி. முன் தலையில் அந்தக் காலத்துச் செட்டியார் மோஸ்தரில் 'ப ' போல சவரம் செய்த தலை. 'ப 'வைச் சுற்றி கருகருவென்று கொஞ்சம் அலைபாய்கிற தலைமயிர். இப்போதெல்லாம் நாமம்கூட இல்லை. காலை, பகல், மாலை-- எந்த வேளையிலும் நாமம் இல்லை. குளிக்கக்கூட அவருக்கு மனசு வரவில்லை-- இல்லை, குளிப்பதையே அடியோடு மறந்துவிட்டாரா ? ஏற்கனவே அவர் மாநிறத்துக்கும் குறைந்த தவிட்டு அல்லது சாலைமண் நிறம். இப்போது குளிக்க மறந்ததாலோ என்னவோ, தோலுக்கு அசல் மண் நிறமே வந்துவிட்டது. வாசலோடு குறுக்கும் நெடுக்குமாக பொழுது

விடிந்து சாய்கிற வரையில் நூறுதடவை நடக்கிறார். எதற்கு இப்படி குட்டி போட்ட பூனையாக அலைகிறார்.

திண்ணையில் படிக்கிற நான் நிமிர்ந்து பார்ப்பேன். மெதுவாகச்சிரிப்பார்.

'இப்ப எந்த க்ளாசு ? '

'ஆறாவது. '

'நல்லாப் படி ' என்று உபதேசம் செய்து விட்டு நடப்பார்.

அடுத்த வாரமும் அதே கேள்வி.

'இப்ப எந்த க்ளாசு ' '

'ஆறாவது ' '

'நல்லாப் படிக்கணும். '

வாராவாரம் இதே கேள்வி. இதே பதில். இதே உபதேசம்.

'பாவம் ' என் அம்மா நிலைப்படியில் நின்றுகொண்டு.

அம்மாவைத் திரும்பிப் பார்த்தேன்.

'ஏம்மா ? '

'இப்படியும் வரணுமாடா இவனுக்கு ' இவன் அப்பா பாலுசெட்டி எப்படியிருந்தார் ' அவர் செத்துப் போனப்பறம் ரொம்ப கடனும் ஒடனுமா வந்து எல்லாம் போயிட்டுதடா. இவனுக்கே மூணு குழந்தை ஆயிடுத்து. இவன் அக்கா மூணு பேரும் குறைப்பட்டுப் போயட்டாடா. எவ்வளவு ஜெரப்பா கலியாணம் பண்ணினார் தெரியுமோ அவளுக்கு பாலு செட்டியார் ' பாண்டு என்ன, கச்சேரி என்ன, நாலு குதிரை சாரட்டிலே ஊருகோலம். என்ன சாபமோ-- மூணு மாப்பிள்ளையும் ஒத்தன் பின்னாலே ஒத்தனா எப்படித்தான் செத்துப் போனானோ. ஒத்தனுக்கு அம்மை போட்டித்து. ஒத்தனுக்கு டி.பி. இன்னொருத்தன் குளத்துலெ குளிக்கிறபோது படியிலே பாசி வழுக்கி முழுகிப் போயிட்டுது. இப்ப மூணு பொண்ணும் வீட்டோட இருக்கு. பத்துவுக்குக் கலியாணம் வேறெபண்ணி மூணு குழந்தை. எப்படித்தான் சாப்பிடறாளோ எல்லாரும் ' '

கடை இந்த வருஷம்தான் இல்லை. மளிகைக்கடை. வீட்டுக்கு வருகிற விருந்தினர்கள் எனக்குக் காலணா அரையணா என்று விடைபெறும்போது கொடுப்பார்கள். அந்தக் காலத்து வழக்கம். உடனே ஒரு ஓட்டம் பத்து செட்டி கடைக்கு.

'வாலைய்யரா-- வா.த்ராட்சப் பழமா ' '

கடையாட்களில் ஒருவன் உலர்ந்த த்ராட்சைப் பழத்தை எடுத்து வருவான்.

'ஏமிராதி ' முஸலிகொடுகா ' ஆ பண்டு இந்துராரா மஞ்கி பண்டுகா ஐவாருக்கு ' என்று பத்துசெட்டி ஒரு சத்தம் போடுவார்.

அவன் உள்ளே போய் வேறு த்ராட்சைப் பழத்தைச் சின்னப் பொட்டணமாகக் கட்டித் தருவான். வழியில் பிரித்துப் பார்த்தால் கறுப்பாக பிசுக்கும் ஈர்க்குமாக ஒட்டி கட்டி தட்டின பழங்கள். பொல பொலவென்று அம்பர் நிறமாக இருந்த அந்தப் பழத்தை விட இது மஞ்சி பழமா ? 'மஞ்சி 'க்கு எனக்கு அர்த்தம் தெரியும். தெருக்குழாயில் அலம்பி எல்லாப் பழங்களையும் தின்றுவிட்டு வீட்டு வாசற்படி ஏறுகிற வழக்கம். பத்து 'ப ' சவரத்துக்குக் கீழ் பளிச்சென்று வெள்ளை நாமமும், திருச்சூர்ணமும், பட்டுச் சட்டையும் சலவை வேட்டியுமாக உத்தரவு போடுவார். என்னை ஏன் 'வாலய்யர் ' என்று அழைக்கிறார் என்று புரியாது. ஒரே ஒரு தடவை பெரிய சாக்கடை ஓரமாக நின்று எட்டிப் பார்த்த போது உள்ளே விழுந்து விட்டேன். அப்போது ஏழு வயது. முழங்கால் மட்டும் சாக்கடை நீர் ஓட்டம். பத்து செட்டியார் வீதியோடு போய்க் கொண்டிருந்தவர் நான் விழுவதையும் தலைகூடத் தெரியாத பள்ளத்தில் நின்று கிலி கொண்டு அழுவதையும் பார்த்து, என்னைத் தூக்கி வீட்டுக் கொண்டு விட்டு 'விஷமக் கொடுக்கு, இனிமெ சாக்கடைப் பக்கம் போனெ ' என்று சிரித்து அதட்டி விட்டுப் போனார்.

அதிலிருந்து நான் வாலய்யராகி விட்டேன்.

இப்போது அந்தக் கடை இல்லை. பத்து போண்டி ஆகி விட்டாராம். அழுக்கு வேட்டி, வெறுங்கால்.

நான் பள்ளிக்கூடம் முடிக்கிற வரையில் 'இப்ப எந்த க்ளாசு ? ' என்று மாதத்திற்கு ஒரு தடவை கேட்பார். என்னவோ, மாசத்திற்கு ஒரு வகுப்பாக நம் பள்ளிக் கூடங்கள் மாணவர்களை உயர்த்துவது போல. ஒரே ஒரு வித்தியாசம் வாரத்துக்கு ஒரு தடவை போய் மாசத்துக்கு ஒரு முறை இரண்டு மாசத்துக்கு ஒரு முறையாகத் தேய்ந்து விட்டது. நான் கடைசி வருஷம் படிக்கிற போது, ஆளே வாசலில் தென்படவில்லை. அதே தெரு, ஒரு இருபது வீடு தள்ளி அவர் வீடு. இப்போதெல்லாம் வீட்டு வாசல் திண்ணையில் ஒரு குமாஸ்தா மேஜை முன் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார்.

இண்டர் மீடியட், பி.ஏ. எல்லாம் படிக்கும் போது ஊருக்கு விடுமுறையில் வரும்போது கூட ஆளை அதிகமாகப் பார்க்க முடிவதில்லை.

பி.ஏ. கடைசி வருஷம் என நினைக்கிறேன். வாசலில் வழக்கம்போல எழுதிக் கொண்டிருக்கிறார் பத்து.

அவர் அக்கா ஒரு நாள் வந்தாள். என் அம்மாவிடம் வந்து முறையிட்டாள்.

'ஐகாருகிட்ட சொல்லுங்கம்மா கொஞ்சம் விபூதி மந்திரிச்சுக் கொடுக்கச் சொல்லுங்களேன். ரொம்ப மோசமாய்ப் போச்சு இப்போ. இப்ப சரியா சாப்பிடறது கூட இல்லம்மா. '

என்னவாம் ?

ஏழெட்டு வருடங்களாக, பத்து திண்ணையில் உட்கார்ந்து கணக்கெழுதிக் கொண்டிருக்கிறாராம். தினப்படி வரவு செலவு. பயறு கொள்முதல் ஆறாயிரம் ரூபாய் புளி முன்னூறு தூக்கு, எழுநூறு

ரூபாய் முப்பது வண்டி அரிசி ஒம்பதாயிரத்து ஐந்நூறு ரூபாய். சூடம் நூறு ரூபாய், மிளகாய் வற்றல் முன்னுற்றைம்பது ரூபாய். ராமன் கோயில் கும்பாபிஷேகத்துக்கு கொடுத்தது. மூவாயிரம் ரூபாய். சோசப் ஹைஸ்கூல் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் ஆயிரத்து ஐந்நூறு. கும்பகோணம் தொழுநோய் ஆஸ்பத்திரிக்குக் கொடுத்தது பன்னீராயிரம்....

இப்படியாக தினமும் கணக்கு எழுதுகிறாராம்.

எல்லாம் ஆயிரக் கணக்கில் தான்.இப்போதெல்லாம் வரவு செலவு லட்சக்கணக்கில் ஏறிவிட்டது. சுதந்திர தின விழாவுக்கு நன்கொடை 2 லட்சம். கிருஷ்ணன் கோயில் பிரகாரம் புதுப்பிக்க மூன்று லட்சம். செலவுகள் இப்படி. வரவுகளோ பத்து லட்சக் கணக்கில் எல்லாம் மொத்த வியாபாரம். மிளகு, மிளகாய், மஞ்சள், நெல், சைக்கிள் பட்டுப்புடவை, பம்ப் செட்டு ரேடியோக்கள் என்று பல ஸ்தாபனங்களுக்கு பத்து செட்டி முதலாளியாம் கணக்குப் புத்தகத்தில்.

'நாள் முச்சூட்டும் இதே வேலைதான். சாப்பிடக் கூப்பிட்டாக்கூட, இருக்கா இன்னும் பதினைஞ்சு நிமிஷம் தான் இதமுடிச்சிட்டு வர்றேன். இதாங்க பதில். ரொம்பக் கலங்கிப் போச்சுங்க. மெட்ராஸ்ல ஆஸ்பத்திரியிலே கொண்டு சேர்க்கலாம்.......மெட்ராஸ் போக பணம் ? ' அக்காவின் கண்களில் நீர் முட்டி வருகின்றது. தலைப்பால் துடைத்து, 'வெங்கடேசா-- சீனுவாசா ' என்று புலம்புகிறாள். 'குணசீலமாவது கொண்டு போலாங்களா அது திருஷ்னாப்பள்ளிக்கிட்டடங்கறாங்க, ரொம்ப தூரமில்லெ ? '

அந்த அக்காள் ஒரு நோட்டைக் கூட எடுத்துக் காண்பித்தாள். புரட்டி புரட்டி பார்த்தோம். இருநூறு பக்கம் நோட்டு. அத்தனை பக்கத்திலும் கணக்கு மளிகை மண்டி. சைக்கிள் ஏஜென்சி, சிமெண்ட் ஏஜென்சி இப்படி இரண்டு டஜன் வியாபாரங்கள் ' இப்படியா ஒரு பித்துக்கு ஆசை பொங்கும் ' சிரித்துக் கொண்டே ஒவ்வொரு ஸ்தாபனக் கணக்காக எண்ணிப் பார்த்ததில், இருபத்தைந்து கோடிக்கு மேல் வரவு செலவுகள்.

அப்பா சிரித்தார். விபூதி மந்திரித்துக் கொடுத்தார். முடிந்தால் குணசீலம் போகச் சொன்னார். ஐம்பது ரூபாய் கடனும் கொடுத்தார்.

இது நடந்து முப்பது வருஷமாகி விட்டது.

ஒருநாள் ஐநூறு ரூபாய்க்கு ஒரு செக்கும் கடிதமும்.

'பத்து செட்டி என்ற பத்மநாப செட்டியார் ' என்று கையெழுத்திட்ட கடிதம்.

பத்மநாப செட்டியார் ஹைஸ் கூலாம். அதில் ஆண்டு விழாவாம். 'நீங்கள் அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டும். பயணச் செலவுக்கு நீங்கள் தொல்லைபடக் கூடாது என்று ஒரு சிறிய தொகைக்கு செக் இணைக்கப்பட்டிருக்கிறது. உங்களிடம் அவசியம் பேசவேண்டிய சங்கதிகளும் உள்ளன. '

என்ன இது '

அப்பாவும் அம்மாவும் இந்த உலகத்தை விட்டுப்போய் இருபது வருஷங்களாகி விட்டன. ஊரில் யாரும் உறவினர் இல்லை. என் விலாசம் எப்படி இவருக்குத் தெரிந்ததாம் ?

ரயில் ஏறிப்போனேன்.

பத்துவின் வீட்டுக்குப் போனேன். அதே வீடு தான். அடையாளம் கண்டுபிடிக்க ஒரு நிமிஷம் ஆயிற்று. பழைய வீடு இல்லை. வலது, இடது வீடுகளையும் வாங்கி, பெரிய இரண்டு மாடி பங்களாவாகக்கட்டி விட்டாராம். பத்துவின் கணக்குப் பிள்ளை, மாடிக்கு அழைத்துப் போனார்.

பழைய பத்து தான். அதே 'ப ' சவரம். தலையில் கொஞ்சம் நரை. நாமம். ஸ்ரீசூர்ணம். சில்க் ஜிப்பா, ஒரு 'சேட்டு ' மெத்தையில் இரட்டை நாடியாக உட்கார்ந்திருந்தார் பத்து. வயசு எழுபதுஇருக்கும் மனதுக்குள் கணக்குப் போட்டதில். ஆனால் தோற்றம் ஐம்பது ஐம்பத்தைந்து. என்ன வேடிக்கை '

'வாங்கோ--வாங்கோ ' ' என்று பெரிய குரலில் வரவேற்றார். பல் தேய்க்கச் சொன்னார். காப்பி வந்தது. வேலை குடும்பம் பற்றி எல்லாம் விசாரித்தார். முப்பது நிமிஷம் போயிற்று இப்படி. 'நீ போகலாம் ' என்று கணக்குப் பிள்ளைக்கு உத்தரவிட்டார். அவர் படியிறங்கினார்.

பேசினார்.

'லெட்டரும் செக்கும் பாத்து பைத்யம்னு நெனச்சிருப்பேள் ' என்று சிரித்தார்.

என்ன இது ? சந்தேகமாகத்தான் இருந்தது. சில பேர் சில விஷயங்களில் மட்டும் ஒரு தினுசாக இருப்பதுண்டு. எங்கள் உறவினர்களில் ஒருவர் இப்படி இருந்தார். பெரிய வைத்தியர் நல்ல பெயர். நல்ல கைராசி--இத்யாதி. ஆனால் திடார் திடார் என்று அவருக்கு மைசூர் மகாராஜா தனக்குப் பெண் கொடுப்பதாக வாக்களித்திருப்பதாய் ஒரு நினைவு வரும். கலியாணம் ஒத்திப் போடப் பட்டிருப்பதாகவும் சில வித்வான்களின் சௌகரியத்தை உத்தேசித்தும், சில பந்தல்காரர்கள் 'ப்ரீ ' இருக்கிற தேதிகளை உத்தேசித்தும், இப்படி பேசிக் கொண்டே போவார். இப்படி அவரிடம் கல்யாணப் பேச்சைக் கிளப்பி ஓசி வைத்தியம் செய்து கொண்டவர்கள் நூற்றுக்கணக்கு.

பத்து சொன்னார்.

'உங்களை ஏன் குறிப்பா வரச் சொல்லி லெட்டர் போட்டேன் தெரியுமோ ? எனக்குப் பைத்தியப் பட்டம் கட்டி எங்க அக்கா குண சீலத்துக்கு என்னை அழைச்சிட்டுப் போறேன்னு புறப்பட்டா, உங்கப்பா விபூதி மந்திரிச்சு அம்பது ரூபா செலவுக்கும் குடுத்தார். ரயில்லெ திருஷ்னாப் பள்ளிக்குப் போனோம். பஸ் ஸ்டாண்டுலெ ஒரு நோட்டாசு பெரிசா போட்டிருந்தது. 'வாருங்கள் சாம்ராஜ்யத்தை அடையுங்கள். நோயில்லாத சாம்ராஜ்யத்தை அடையுங்கள். வறுமையில்லாத சாம்ராஜ்யத்தை அடையுங்கள். பணம் வீடு வசதிகள் எல்லாம் வற்றாமல் நிரம்பும் சாம்ராஜ்யத்தை அடையுங்கள். பூஜ்ய கில்பர்டு வழி காட்டுவார் 'னு போட்டிருந்தது. அதென்னடா வழின்னு குணசீலத்துக்கு நாளைக்குப் போலாம்னு அக்காட்ட புடிவாதம் புடிச்சு அந்தத் திடலுக்குப் போனேன். ஒரு வெள்ளைக்காரன் இங்கிலீஷ்ல கையை மேலே காமிச்சு, ஏதோ கூட்டத்துக்கு பேசிக் கொண்டிருந்தான். கூட்டம் முடிஞ்சப்புறம் இஷ்டப்பட்டவங்க நேரா வந்து அவரைச் சந்திக்கலாம்னு தர்ஜமா பண்றவன் சொன்னான். கூட்டம் முடிஞ்சப்புறம் அவர்கிட்ட போனோம். ஒரு கூடாரம் அடிச்சு தங்கியிருந்தான். அந்த வெள்ளைக்காரன். ஒருத்தர் ஒருத்தரா உள்ளே விட்டுக் கிட்டிருந்தாங்க. எங்க சான்ஸ் வந்தது. போனோம்.

'உம் பேரென்ன ? '--கேட்டார் அந்த வெள்ளைக்காரர்.

'பத்து செட்டி '

'அப்படின்னா ' '

'பத்துன்னா டென் 'னுனு தர்ஜமா பன்றவன் இங்கிலீஷ்ல சொன்னான்.

'ஓ ' ' என்று ஆச்சரியமா பார்த்தான். 'பத்து பத்தா. டென்டென் ' உம் பேரிலியே ரகசியம் இருக்கே. அதிலியே கர்த்தா ரகசியம் வச்சிருக்காரே ' ன்னு ரொம்ப ஆச்சரியப்பட்டாராம் வெள்ளைக்காரர்.

என்னனு முழிச்சேன்.

'உங்கிட்டே பத்து அணா, பத்திலே ஒண்ணு சாமிக்கு அல்லது ஏழை, அல்லது நோயாளிங்களுக்கு கொடுக்கணும். பத்து ரூவான்னா, ஒரு ரூவா, பத்து சட்டைன்னா ஒரு சட்டை. பத்து வீடுன்னா ஒரு வீடு. பத்து மாங்கான்னா ஒரு மாங்கா. பத்து ஆப்பிள்னா ஒரு ஆப்பிள். பத்திலே ஒண்ணு கொடு. ஆயிரம் ஆயிரமாய் திரும்பி வரும். எடு சீக்கிரம். கர்த்தர் கையை ஏந்திக்கிட்டுருக்காரு. சீக்காளிங்களுக்குக் கொடுங்க. எடு சீக்கிரம்னாரு. கையை நீட்டினாரு எடுன்னு அக்காவை நிமிண்டினேன். யோசிச்சிக்கிட்டே நின்னா. நானே அவ தலைப்பு முடிச்சை அவிழ்த்துப் பார்த்தேன். நாப்பத்திரெண்டு ரூவா இருந்திச்சி கணக்குப் போட்டேன். நாலு ரூவாயையும் மூணரையணாவையும் எடுத்துக் கொடுத்தேன். நான் கணக்கா கொடுக்கறதைப் பார்த்து அந்த வெள்ளைக்காரன் சிரிச்சிக்கிட்டான் மெதுவா. வாங்கிக்கிட்டான். ஏந்து நின்னு ஆகாசத்தைப் பார்த்தான். கை ரெண்டையும் உயர்த்திக் கிட்டான். என்னமோ சொன்னான். என் தலையிலே கைவச்சுத் தடவினான். போன்னான். உனக்கு நாற்பத்து மூனரை லட்சம் வரும்கிறாரு. போங்கிறான் தர்ஜமா பண்றவன். 'இன்னமே எது வந்தாலும் பத்துலெ ஒண்ணு ஏழைப்பட்டவங்களுக்கு, இல்லாதவங்களுக்கு கொடுத்திடணும், கொடுக்கறீங்களா 'ன்னான்.

'ம். ரெடியா 'ன்னேன்.

'சரி போங்க 'ன்னான்.

குணசீலம் போனோம். சாமி கும்பிட்டோம். திரும்பி வந்தோம். வந்த வழியிலெ திருஷ்ணாப் பள்ளியிலெ மறுபடியும் எறங்கினோம். சித்தரா கோவாலு செட்டின்னு எங்கப்பாருக்கு தூரத்து பந்துவாம். அங்க ஒரு நாள் தங்கி ஊர் சுத்திப் பார்த்துட்டுப் போவலாம்டான்னா, எனக்குத் தெரியும் ரொம்பப் பணக்காரனாச்சே, லட்சியம் பண்ணமாட்டான்னு சொன்னேன். லட்சியம் பண்ணாட்டி இருக்கவே இருக்கு ரயில்வே ஸ்டேஷன்னுசொன்னா அக்கா. போனோம் சாப்பாடு போட்டாங்க ' நிலைமையெல்லாம் கேட்டாரு. அவரும் 'என்னை அவிசக் கோமுட்டின்னு நினைச்சீங்களா ? எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லக் கூடாது 'ன்னு வருத்தப்பட்டாரு. ஒரு ஐயாயிரத்தைக் கொடுத்துக் கூட ஒரு ஆளை அனுப்பிச்சாரு. கடையே மறுபடியும் இன்னொரு இடத்தில வச்சோம். அந்த ஆளு ஊருக்குப் போன உடனே பத்திலெ ஒண்ணு ஞாபகம் வந்தது. ஒரு ஐந்நூறை எடுத்துப் பள்ளிக் கூடத்துக்குக் கொடுத்தேன். அவ்வளவுதான் கடையிலே திமுதிமுன்னு கூட்டம் வாடிக்கையை சமாளிக்க முடியல. அன்னன்னிக்கு வர்றலாபத்துல பத்தில ஒண்ணு. மறுநாள் காலம்பற எங்கியாவது

போயிறும். இப்ப சிமெண்டு, உரம், பாலியஸ்டர் எல்லாத்துக்கும் எஜென்டு. அவன் சொன்னான் பொறு. இன்னயதேதிக்கு சொத்து வியாபார மெல்லாம் அவன் சொன்னாப்பலவே நாப்பத்து மூனரை லட்சம் மதிப்பு. நான் பைத்தியம்மாதிரி கணக்கு எழுதிக் கிட்டு இருந்தேன். தின்னையிலெ உட்கார்ந்துப்பா அக்கா. நான் நெசம்மாவே அப்பல்லாம் பெரிய பணக்காரன் முதலாளின்னு நெனப்போடவே நோட்டு நோட்டா எழுதி ஒரு தடவை பார்த்துட்டு சாமி கும்பிடுவேன். அப்புறம் தான் சாப்பிடுவேன். அதுதான் என்னை அந்த வெள்ளைக்காரன்கிட்ட தள்ளிக்கிட்டுப் போச்சு. நல்லாச் சொன்னான் அவன். பேர்லியே ரகசியம் இருக்குன்னு. அதுலேர்ந்து பத்து செட்டின்னே கையெழுத்துப் போடறது, உனக்கு அடையாளம் புரியணும்னு தான் பத்துசெட்டிங்கிற பத்மநாப செட்டின்னு கையெழுத்து போட்டேன். உங்கப்பா ஐம்பது ரூவா கொடுத்ததை திருப்பிக் கொடுத்தேன். வேண்டான்னுட்டாரு அதுதான் இப்ப பத்து மடங்கா உனக்கு அனுப்பிச்சேன். உங்கப்பா பணம் கொடுக்காட்டி நான் எங்க திருஷ்ணாப்பள்ளிக்குப் போயிருக்கப் போறேன், இப்பவும் நான் நாலு லட்சத்து முப்பத்தைஞ்சாயிரம் இந்த நிமிஷம் தர்மமா தூக்கிக்கொடுக்கிறேன்னு வச்சுக்க நாலு கோடி முப்பத்தைஞ்சு லச்சமாச் சொத்து பெருகும். யார் மானேஜ் பண்றது ' அதெல்ல கவனிக்கணும் ? '

'ட்ரீங் '

மணிப்புத்தான் அமுக்கினார் பத்து.

ஆள் வந்தான்.

'ரண்டு காபி '

'இப்பவும் என்னப் பாத்தா பைத்தியமாத் தோண்றதோ ' ' பத்து கேட்கிறார்.

'பெரிய பைத்தியம் ' என்று சிரித்தேன்.

'நீ சொல்லுவேன்னு தெரியும். இப்ப பசங்கள்ளாம் என்ன கிளாஸ் படிக்கிறா ? '

# ஆறுதல்

**வண்ணதாசன்**

ஒரு தெருவும் அதன் மனிதர்களும் அப்படியே காலங்காலமாக அச்சடித்தது மாதிரி தவறாமல் இருக்கவேண்டும் என்று நினைப்பது முட்டாள் தனம் தான். ஆனால் மனம் இதுபோன்ற சமயங்களில் முட்டாள் தனமாக இருப்பதற்கே சம்மதமாக இருக்கிறது.

தெரு என்று இருந்தால் வாடகைக்கு இருப்பவர்கள் மாறுவார்கள் புது ஆட்கள் வருவார்கள். சில வீடுகள் கிரையம் ஆகிக்கூட வேறு ஆட்கள் வாங்கி இடித்துக் கட்டியிருப்பார்கள். ஏறு நடையாக மிகப்பெரிய வேப்ப மரத்துடன், இரண்டு பக்கமும் பறக்கிறதுப் போலப் பொம்மைகள் வைத்த 'கிருஷ்ணன் வச்ச வீடு ' இப்போது முற்றிலும் இடிக்கப்பட்டு மிக

நவீனமான முகப்புடன் வந்து எங்கள் தெருவின் மிக அழகான ஞாபகங்களில் ஒன்றை அழித்துவிட்டது.

வீட்டுக்கு வீடு ஆற்றுத்தண்ணீர்க் குழாய் பதிப்பதற்காக, 'ப.ரா--ப.ரா ' என்று மரியாதையாக அழைக்கப்பட்ட ப.ராமசாமி ஐயர் எங்கள் வார்ட் கவுன்சிலராக வந்ததும் போடப்பட்ட நேர்த்தியான ரோடுகள் எட்டடிக்கு ஒரு தடவை பெயர்க்கப்பட்டுவிட்டன. ஐந்து வருஷத்துக்கு முன் உத்யோக உயர்வில் நான் இந்த ஊரை விட்டுப் போகும்போதுகூட இல்லாத ஆட்டோ ரிக்ஷா, இந்தத் தெருவுக்குள் வந்து வீட்டின் முன் நின்றபோது, டிரைவர் மிகச் சிரமத்துடன் கோபம் அடக்கி நாகரீகமாக நடக்கவேண்டிய அளவுக்கு மிக மோசமாகியிருந்தது தெரு.

அதெல்லாம் சரி. ஆனால் மனிதர்களுக்கு என்ன வந்தது ? எங்கள் குடும்பம் போல இன்னும் நாலைந்து குடும்பமாவது தெரு நெடுகிலும் ஒரு அறுபது எழுபது வருஷமாக ஓடின வேரைப் பெயர்க்கமுடியாமல் இங்கே தானே இருக்கிறார்கள். அவர்களாவது 'என்னப்பா எப்போ வந்தே ? ' என்று கேட்கலாம் அல்லவா ? கேட்கிறது இருக்கட்டும். பழகின பையனை ரொம்ப காலத்துக்குப் பிறகு பார்க்கிற சந்தோஷத்தையாவது முகத்தில் காட்ட வேண்டாமா ?

வீரபத்ரவிலாஸ் பாத்திரக்கடை நொடித்துப் போனதுக்கும், என்னுடன் ஸ்கூலில் கூடப்படித்த அந்த வீட்டு A.கணேசன் என்னைப் பார்க்காமல் போவதற்கும் என்ன சம்பந்தம். அவன் எஸ் எஸ் எல் சி படித்து முடிந்ததும் கல்யாணம் ஆகிவிட்டது. திருவனந்தபுரத்திலிருந்து பெரிய பெரிய கார்களில் பெண் வீட்டுக்காரர்கள் வந்திருந்தார்கள். சாயங்காலம் நலுங்குக்கு-- கனகராயன் முடுக்குத்தெரு முத்துலட்சுமிதான் அப்போது பிரபலம்-- 'தாயே யசோதா உன்னை ' பாடினபோது நான் கூடப் பக்கத்திலிருந்து அவனையே பார்த்துச் சிரித்துக்கொண்டேயிருந்தேன். அவன் இன்று லாட்டரிச்சீட்டுகளைக் க்ளிப்பில் மாட்டிக்கொண்டு, பஸ் ஸ்டாண்டில் ஒரு தற்காலிக மர மேஜைக்குப் பின் நிற்பது துன்பமானதுதான். ஆனால் இந்தத் துன்பத்தையும் சுய இரக்கத்தையும் மீறியதல்லவா அன்பும் சிநேகிதமும்.

பானா தானா ராவுத்தர் கடையிலும், அவர் போய்ச் சேர்ந்தபிறகு அவர் பையன்கள் ஆரம்பித்து வியாபாரம் தெரியாமல் நிறுத்திவிட்ட ராயல் ஸ்டோரிலும் முதலாளிக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்து கவனித்துக் கொண்ட, பெண் விஷயங்களில் மிகவும் பெயர் பெற்ற வெங்குப் பிள்ளைக்கும் எனக்கும் என்ன விரோதம் ? அவர் கூட நின்று பேசாமல், நடந்த வாக்கிலேயே, 'என்ன, வடக்கேதானே வேலை ' என்று கேட்டுவிட்டுப் போகிறார். அதுகூட ஒரு போக்கு. வயதானதால் இருக்கலாம்.

எப்போது பார்த்தாலும் 'சௌக்கியமா பேரப் பிள்ளை ? ' என்று கையைப் பிடித்து, மேலுதட்டிலும் புருவத்தினும் பூனை மயிர் இடுங்க, என்னவென்று சொல்ல முடியாத அன்புடன் தடவிக் கொடுக்கிற தபேலா பட்டு ராஜனின் அம்மாவுக்குக் கண்மங்கிப் போனபிறகு, அவளை இன்னும் உப்புப்புளி வாங்கிக் கொண்டு வரக் கடைக்கு அனுப்புகிற பட்டுராஜன் எத்தனை மியூஸிக் பார்ட்டிக்குப் போய் வாசித்தும் பிரயோஜனம் என்ன ? பிறத்தியார் மேல் செலுத்துகிற அன்பு, சங்கீதம் எல்லாம் கிட்டத்தட்ட ஒரே ஜாதிதான் என்று பிடிபடாவிட்டால் அப்புறம் என்ன தபலா ?

ஒருத்தருக்கொருத்தர் முகம் கொடுக்காமல் உலகம் இப்படி அன்பற்றுப் போய்க்கொண்டிருந்தால் என்னவாகும் ? துட்டு இருப்பவர், இல்லாதவர் எல்லோர்க்கும் வந்துசேர்கிற இந்த இம்சைக்கு வாழ்க்கை என்ன நிவர்த்தி செய்யப் போகிறது.

தெருமட்டும்தானா ? இந்த வீடு என்னவாழ்கிறது ? இந்தக் குடும்பம்கூட முன்னே மாதிரியா இருக்கிறது. தெருவிலிருந்து வீட்டுக்குப்போகிற முடுக்கு முன்பு இப்படியா இருட்டிக்கிடக்கும் ? வாசல் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு, தெருவில் நடையேறுகிறவர் ஜாடை டக்கென்று முன்னால் தெரியும்படி இரண்டு விளக்குகள் எரிந்துகொண்டிருந்த இடத்தில் இன்றைக்கு ஒன்றும் கிடையாது.

ஒரு பிள்ளையார் சதுர்த்தி, கோயில் கொடை என்றால் தனியாக ஒரு ஒயர் இழுத்து, ஒரு நூறுவாட்ஸ் பல்பை வாசலில் தொங்கப்போட, சப்பரம் என்றாலும் சரி, கும்பக்குடம் சிலம்பாட்டம் என்றாலும் சரி, கரெக்டா வாசலில் ஒரு பத்துநிமிஷமாவது நின்றுவிட்டுத்தான் புறப்படும்.இப்போது ஒரு மீட்டருக்கு நாலு தனித்தனி மீட்டர் வந்திருக்கிறதே தவிர வெளிச்சம் எங்கேயோ ஓடிப்போய்விட்டது. பொது லைட்டுக்கு யார் பணம் கட்டுவது என்று சண்டையெல்லாம் வந்து, பேசாமல் விளக்கையே அணைத்துவிட்டார்கள். 'நடந்து வரும்போது நட்டு வாக்காளி பிடுங்கினாலும் தெரியாது. கழுத்தில காதில கிடக்கிறதை எவனும் அத்துக்கிட்டுப் போனாலும் தெரியாது. விளக்கு வைக்கிற நேரத்தில் இப்படி வீடும் வாசலும் இருள் அடிச்சுக் கிடந்தா, லெச்சுமி தட்டுத் தடுமாறிட்டு, அடுத்த வீட்டுக்குப் போயிருவா ' என்றெல்லாம் வருத்தப்பட்ட ஆச்சியின் சொல் அவள் இருக்கும்போதே அம்பலத்துக்கு வரவில்லை.

கால் தடுக்காமல் இருக்க, அடையாளத்துக்கு இடது சுவரில் ஒருகையால் தடவிக்கொண்டே வந்தேன். இந்தச் சுவர் எவ்வளவு அற்புதமாக இருக்கும். காரை பூசாமல் ஒரு முப்பது அடி உயரத்திற்குக் கோட்டை மாதிரி உயர்ந்திருக்கிற இந்தச் சுவரின் சிறு சிறு துளைகளில், சிலந்திக்கூடுகள் சாம்பல் நிறத்தில் படலமாக உட்குழிந்து பூத்திருக்க, அதிலிருக்கிற பூச்சிகளைச் சிட்டுக்குருவிகள் பறந்தவாக்கிலே பிடிக்கும். இதே நூலாம்படைகளில் சிக்கிய வாரியல் புல்லின் பூவினது சிலிர்த்த கொண்டை கீழே விழாத ஒருதொங்கலில், புரண்டு புரண்டு வெயிலில் அபாராமாய் மினுங்கிய என் சின்னவயது ஞாபகங்களைப் போல, எங்களுடைய மகளோ மகனோ இதுவரை ஏதாவது சேமித்திருப்பார்களா என்று தெரியவில்லை. எப்போதும் ஜீப்பை ஓட்டி, மோட்டார் சைக்கிள்களில் மலைகளைத் தாண்டி, கோபாவேசமாகத் துப்பாக்கி சுட்டுத் திரிகிற கற்பனையில் சதா ஆழ்கிற என் பையனிடமிருந்து, நாளை அன்பும் பரிவும் கசிந்து பெருகும் என்று துளியும் நம்ப முடியவில்லை.

பொதுத்திண்ணைக்கு அருகில் வரும்போது நாலு வீடுகளில் எங்கள் வீட்டில் மட்டும் வெளிச்சம் இருந்ததை அறியச் சற்று நிம்மதியாக இருந்தது. இதைவிடப் பெரிய விஷயம் எங்கள் வீட்டுத் தார்சாவில் இருந்து, விசாலமாகக் கிடக்கிறவாசலில் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு 'கோபாலசாமி கோயில் தெருவில வீடு வாங்கி நாங்க வரதுக்கு முந்திப் பத்துவருஷம் இந்தத் தெருவுக்கு நேரே பின்னால இருக்கிற தெருவிலதான் இருந்தோம். படிச்சதெல்லாம் குட்டை வாத்தியார் பள்ளிக்கூடத்தலே தான் ' என்று யாரோ ஒருத்தர் இன்னொருத்தரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

வாசல் முழுவதும் இருட்டாக இருக்க, எங்கள் வீட்டின் வெளிச்சம் பின் பக்கத்திலிருந்து வரைந்து காட்டும்படியாக அவர்களிருக்க, அவர்கள் இன்னார் என்று தெரிந்து கொள்ளமுடியவில்லை. நடுவயது தாண்டியும் உரத்தும் அன்னியோன்னியமாகவும் இருந்த அந்தக் குரலையும் எனக்கு இனங்கண்டுகொள்ள முடியவில்லை. நாக்குத் தடித்த மாதிரியும் பக்கவாதத்தில் வாய் கோணிப் பேசுகிற மாதிரியும் ஏதோ ஓர் வித்தியாசத்துடன் இருந்த குரலில் சந்தோஷமூட்டும் படியும் ஏதோ கலந்திருந்தது.

'இந்தா ' மகனே வந்துட்டானே ' ' நான் நெருங்கியதும் சட்டென்று அந்த இரண்டு பேரில் ஒருத்தர் எழுந்திருந்து சற்று எம்பித் தூணைப் பிடித்துக் கொண்டு நின்று என் பெயரைச் சொல்லி,

'இதான் அல்போன்ஸ்உ, மச்சினியோட ரெண்டாவது பையன், மச்சினியோட அப்பா பேருதான் '

'யாரு மீசைக்கார ஆயான் பேரா ? '

தாத்தாவை ஞாபகம் வைத்துப் பேசுகிற அந்த மனிதரைக் கும்பிட்டுக் கொண்டு, ஆனால் இரண்டு பேரையுமே அடையாளம் தெரியாமல்,

'வாங்க. என்ன இப்படியே உட்கார்ந்துட்டாங்க. உள்ளே போய் உட்காரலாம் ' என்று அழைக்கையில் '

'இங்கேயே வசதியாத்தான் இருக்கு, காத்தாட. இப்படியே இருக்கலாம் ' என்று அந்த ரெண்டாவது மனிதர் சொல்ல தூணைப் பிடித்துக் கொண்டு நின்ற மனிதர் தன் முகம் தெரியும்படியாகச் சிரித்துக் கொண்டே என்னிடம்,

'என்ன, இனம் தெரியலையா இன்னாருண்ணு ' என்று கேட்டார். முறுக்கி விடப்படுவதால் ஒருபக்கம் திருகி நின்ற மீசை குழிவிழுந்திருந்த கன்னத்தை வருட, குங்குமப்பொட்டும் சிரிப்புமாய்க் கலங்கிச் சிவந்த கண்களுடன் பக்கத்தில் வந்து என் கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டார்.

'சன்ன வருஷமா ஆயிருக்கு. நீயோ புள்ளையும் குட்டியுமா ஆயிட்டே. எப்பமோ நீ சின்னப் பிள்ளையா இருக்கும் போது, கோயில்ல முழுக்காப்புக்கு வந்திருக்கும் போது பார்த்ததுதானே '

மறுபடியும் மீசை திருகிக் கன்னத்தில் ஒதுங்கிக் கொண்டது. நரைத்து மேலேற்றிச் சீவப்பட்ட முடியால் அகலமாகத் தெரிந்த நெற்றியில் குங்குமம் ஜொலித்தது. எனக்கு பளிச்சென்று ஒரு விநாடியில் நான் பேசிக் கொண்டிருப்பது வைத்தியலிங்கச் சித்தப்பாவுடன் என்று ஞாபகம் வந்துவிட்டது.

வைத்தியலிங்கச் சித்தப்பா கல்யாணம் புதுமாதிரியாக நடந்ததால் நன்றாக ஞாபகம் இருக்கிறது. வழக்கம் போலக் கொட்டு அடித்து தாலி எல்லாம் கட்டாமல் கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு நிறையப்பேர் பேச, சித்தப்பாவும் மைக் முன்னால் ரொம்ப நேரம் பேசிய அந்தக் கல்யாண வீட்டு லேசில் மறந்து போகாது. ஆனால் அந்தக் கல்யாணப் புகைப்படத்தில் வைத்திச் சித்தப்பா ஒரு அழகன் போல இருப்பார். 'செக்கச் செவேல்னு இருக்கிற ' அழகைப்பார்த்து மயங்கிப் பொண்ணைக் குடுத்திட்டேனே. குடிச்சு எல்லாத்தையும் கட்ட மண்ணாக்கிட்டு சண்டாளன் இப்படிப் பொண்ணையும் புள்ளையையும் தெருவில் நிறுத்திட்டானே பாவி ' என்று சின்னத்தாத்தா தலையில் அடித்துக் கொண்டு அம்மாவிடம் அழுததெல்லாம் சமீபத்தில் தான்.

வைத்தியலிங்கச் சித்தப்பாவின் அந்த அழகான ஜாடை எல்லாமே குடிக்கிற ஒரே காரணத்தால் மாறிப் போகும் என்று நம்ப முடியவில்லை. முகம்தான் மாறினது போல இருக்கிறதே தவிர சிரிப்பு அதேதான்.

'உள்ளே வாங்க சித்தப்பா வாங்க ஸார் உள்ளே ' என்று மறுபடியும் அழைத்தேன். அம்மா இதைச் சொல்லும்போது கதவுப்பக்கம் வந்து நின்று ஒருமாதிரியாகச் சிரித்துவிட்டுப் போனாள்.

'இருக்கட்டும் மகனும் விபரம் தெரிஞ்ச ஆள்தானே, உன்கிட்டே சொல்லுகிறதுக்கு என்ன ? பக்கத்திலே நிண்ணு பேசும்போதே வாசம் தெரிஞ்சிருக்கும். ரெண்டு பேரும் லேசா டிரிங்க்ஸ் அடிச்சிருக்கோம். ஜாஸ்தியில்லை. கொஞ்சம்தான். எவ்வளவு சாப்பிட்டாலும் நிதானமாகத்தான் இருப்பேன். இருந்தாலும் உள்ளே மச்சினி முன்னாலே போகவேண்டாம் '

நான் மிகவும் ஆதரவாகச் சித்தப்பாவைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

'ஏ 'இங்கே வாடே. நீ என்ன ஒளிஞ்சுக்கிட்டு நிற்கே. அப்பனும் மகனும் ஒண்ணா நிண்ணு பேசுதோம் வித்தியாசம் ஒண்ணுமில்லை. உனக்கென்ன. இங்கே வா சொன்னால் கேளு என் மகனும் உன்னைத் தெரிஞ்சுக்கிடணும் இல்லையா ? '

வைத்திச் சித்தப்பா அவரைக் கையைப்பிடித்து இழுக்க இழுக்க அவர் மிகுந்த கூச்சத்துடன் அங்கேயே நின்றார். வைத்தியலிங்கச் சித்தப்பா, 'என்ன அல்போன்ஸ்உ, கிறுக்குப்பண்ணுதே ' என்று என்னை அவரிடம் கூட்டிப் போனார்.

மிகவும் விசாலமான நெற்றியும் முன் வழுக்கையும் வெற்றிலைக் காவியேறின பற்களுமாகக் கிட்டத்தட்ட ரிடையர் ஆகப்போகிற ஹைஸ்கூல் வாத்தியார் மாதிரி இருந்த அவரை நோக்கி--

'பாத்தியா, இதுதான் என் பிரண்ட் அல்போன்ஸ். நானும் அவனும் முப்பது வருஷமா சிநேகிதம். பாளையங்கோட்டையில ரெண்டு பேரையும் தனித்தனியாய் பார்க்க முடியாது. அவன் சென்ட்ரல் எக்சைஸ்லே சேர்ந்தான் நான் ஹைவேஸ்லே சேர்ந்தேன். டிபார்ட்மெண்ட்லேருந்து திடார்னு அவன் மேலே ஏதோ ஆக்ஷன் எடுத்து சஸ்பெண்ட் பண்ணியிருக்காங்க. ரிட் போட்டிருக்கான் ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டு இருந்தான். சரி வாண்ணு நான் தான் சொன்னேன். கொஞ்சம் போலதான் சாப்பிட்டோம் '

'நீ சும்மாஇருப்பா ' என்று அவர் வெட்கப்பட்டுக் கூசிக்கொண்டே தடுக்க வைத்தியலிங்கச் சித்தப்பா, என் இடது புஜம் வழியாகக் கையைப் போட்டு, வலது தோள்ப் பட்டையை இறுக்கிக் குலுக்கித் தன்பக்கம் நெருக்கிக்கொண்டு--

'அல்போன்ஸ்உ இது என் மச்சினி மகன். மொத்தம் மூணு பேரு. இவன் நடுவுள்ளவன். மச்சினிக்கு மூணு பையன்களும் மூணு முத்து. படிப்புக்குப் படிப்பு. குணத்துக்குக் குணம் '

சித்தப்பா ஒருவித நெகிழ்ச்சியில் பேசிக்கொண்டே போனார். அல்போன்ஸ் என்கிற சித்தப்பாவின் சிநேகிதர் வெறுமனே சித்தப்பாவின் சொல்லுக்குத் தலையை அசைத்துக் கொண்டுதான் வந்தார். ஆனால் 'நீ சொல்வது எல்லாம் சரிதான். அதுதான் தெரிகிறதே. அப்படியே ஒப்புக் கொள்கிறேன் ' என்றெல்லாம் விதம் விதமாக நான் உணரும்படி தன் பார்வையை ஒருவிதப் பிரியம் நிறைந்த மினுமினுப்புடன் என் மீதும் சித்தப்பா மீதும் பதித்துக் கொண்டிருந்தார்.

'கேட்டியா அல்போன்ஸ்உ, மச்சினி மச்சினிண்ணு சொல்லுதேனே இவங்க அம்மை, அவளைச் சின்ன வயசிலேயே தெரியும். மச்சினி அப்போ ரொம்பச் சின்னப் பிள்ளை. மிஞ்சிப்போனால் ஆறு ஏழு வயசு இருக்கும். பாப்பாத்தி வீட்டுப் பிள்ளை மாதிரி இருப்பா. நாங்க அப்போ அரசடிப் பாலத்தெருவில் ஒரு வீட்டிலே இருந்தோம். தோட்டம் பூராவும் பூசணியும் பீர்க்குமாய் படர்ந்து கிடக்கும். மார்கழி மாதம் தினசரிக் காலைல ஒரு முக்காட்டைப் போட்டுக்கிட்டு பூ வாங்குகிறதுக்கு இவங்க அம்மை வருவா. முக்காடு நிறம் கூட ஞாபகம் இருக்கு. திக்கு ஊதாக்கலர். செவப்பா ஒருபிள்ளை தினசரி பூ வாங்க தினசரி நம்ம வீட்டுக்கு வருதே, யாரும்மா 'ண்ணு எங்கம்மைகிட்டே கேட்பேன். எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. ஒரு நா(ள்) நான் பல்லைத் தேச்சுக்கிட்டுப் புறவாசல்ல நிற்கேன். மச்சினி வழக்கம் போலப் பூ வாங்கதுக்கு வாரா, எங்க அம்மை, 'ஏட்டி ' வைத்தி உன்னை யாரு யாருண்ணு கேட்டுக்கிட்டு இருக்கான். உன்னைக் கட்டிக்கிடப் போறவண்ணு சொல்லிட்டுப் போ ' என்று சொல்லவும் வெட்கப்பட்டுக்கிட்டே ஒரே ஓட்டமா ஓடியே போயிட்டா. அது அப்படியே இன்னைக்கு நடந்தது மாதிரிக் கண்ணுக்குள்ளேயே நிக்கி '.

வைத்தியலிங்கச் சித்தப்பா இன்னும் அந்த மார்கழி மாதத்துக் காலையிலேயே நிற்பது போல இருந்தது. அவருடைய நண்பரைப்போல என்னையும் கூட ஒரு அன்பான சிநேகிதனாக ஏற்று, இந்த இருட்டுக்கு மத்தியில் எல்லாவற்றையும் பகிர்ந்துக் கொள்ளச் சித்தமானது போலத் தோன்றிற்று.

தெரு, அதன் மனிதர்கள் மாறிக்கொண்டே போகிற நெருக்கடியிலும், வைத்தியலிங்கச் சித்தப்பா போல ஒரு மனிதர் எதிர்ப்பட்டுக் கொண்டிருக்கும்படி வாழ்க்கை இன்னும் இருப்பது அந்த நேரத்தில் பெரிய ஆறுதலாக இருந்தது எனக்கு.

## நாதரட்சகர்

**தி.ஜானகிராமன்**

உப்பிலி வீட்டு வாசலில் கார் வந்து நிற்கிறது. கதவு திறக்கிறது. தட்டுச் சுற்று வேட்டி. சட்டை போடாத வெற்று உடம்பு. தோளில் சின்னச் சின்னக் கட்டம் போட்ட சிவப்பு காசித் துண்டு. தலையில் குடுமி. முன்பக்கம் சவரம் செய்யாது, பெண்பிள்ளை போல் நெற்றியிலிருந்தே வாரிச் சீவப்பட்ட தலை முடி. அதில் அங்கும் இங்கும் நரை. நெற்றியில் குங்குமம். குங்குமத்துக்குக் கீழ் துளி சந்தனப் பொருக்கு. வேர்வையில் கறுத்த பூணுல்.

கையில் ஒரு பையோடு இறங்குகிறார். திண்ணைப் பக்கம் வருகிறார்.

'என்ன புரியலியா ? கோவிந்தன். '

'கோவிந்தனா ' வா--வா, வா யாருடாப்பான்னு பார்த்தேன் '

'கார்ல வந்து இறங்கறானே. யார்றாது--சட்டை கூட இல்லாமன்னு பார்த்திருப்பேள் ' இது சொந்தக்கார் இல்லே. '

'வா வா உட்காரு--உனக்கு எதுக்கு சொந்தக்காரு ? ஊர்லெ இருக்கற கார்லாம் உன்னுதுதான் '

'என்னுதுன்னு சொல்லாதீங்கோ--சங்கீத தேவதை யோடது--நாதப்பிரம்மத் தோடதுன்னு சொல்லுங்கோ '

'அப்படியே வச்சுக்கோ. நீ இல்லாட்டா கர்நாடக சங்கீதம் யாரு ஓசிலெ கேக்கப்போறா இந்தச் சீமையிலெ. அப்படியெல்லாம் இருக்கச்சே காரா ' உனக்கு ஏரோப்ளேன், ஹெலிகாப்டர் இதெல்லாமனா குடுக்கணும் ' கார் கிடக்கு '

'உப்பிலி அய்யங்கார் ஆயிரம் பரிகாசம் பண்ணட்டும், நான் அதுக்காக கோச்சுனுடப் போறதில்லே. உங்களுக்கு ஞாபகம் இருக்கோ என்னவோ. இந்த ஊர்லெ தான் என் நாதோபாசனையை ஆரம்பிச்சுது. முதல் கையெழுத்து நீங்கதான் போட்டு பதினோரு ரூபா கொடுத்தேள். இப்ப இதோட முப்பது வருஷமாறது. உங்க கைராசி இப்படி வந்து விச்வரூபம் எடுத்திருக்கு ' என்று ஒரு உறையை நீட்டுகிறார் கோவிந்தன்.

'விச்வரூபம் எடுத்திருக்கா என்னது ? ' என்று உப்பிலி மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு கவரைப் பிரித்து அந்த அச்சடித்த அட்டையை வெளியே உருவிப் படிக்கிறார். பளபளவென்று அச்சடித்த அட்டை தங்க எழுத்தில் அச்சடித்த அட்டை.

'பலே பலே பலே பலே ' என்று கோவிந்தனை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் அழைப்பைப் படிக்கிறார் உப்பிலி.

'நாதரட்சகரா... ? பேஷ் பேஷ்... திருச்சியிலா நடக்கறது ? '

'ஆமாண்னா '

உப்பிலி படிக்கிறார் மீண்டும், கோவிந்தனின் சங்கீத சேவையைப் பாராட்டி 'நாதரட்சகர் ' என்று அவருக்குப் பட்டம் கொடுக்கிறார்களாம்.

'யாரு ஏற்பாடு இதெல்லாம் ? ' உப்பிலி.

'எல்லாரும்தான் '

'எல்லாரும்னா ? 'நாதரட்சகர்னு, டைட்டில் கொடுக்கறதாப் போட்டிருக்கே. நாதத்தையே ரட்சிக்கிறவர்னா அர்த்தம். சங்கீத வித்வான்கள் ஏற்பாடு பண்ணியிருக்காளா ? சங்கீதம் கேக்கறவா ஏற்பாடு பண்ணியிருக்காளா '

'ரண்டு பேரும்தான்னு வச்சுக் குங்களேன் '

'சங்கீத வித்வான்லாம் ஒத்துண்டானா ? 'நாதரட்சகரா பாடறவா நாங்க இருக்கோம்--அப்படி யிருக்கச்சே இவர் எப்படி ஐயா நாதரட்சகரா ஆவான் 'னு கேப்பான்களே ? '

உப்பிலி சொன்னதைக் கேட்டு கோவிந்தன் மூக்கின் மேல் விரல் வைக்காத குறை--அப்படி ஆச்சரியப்பட்டான்.

'இந்தப் பஞ்சாயத்து டவுன்லெ உட்கார்ந்துண்டு உலகத்தையே ஜயிக்கிறேளே. உங்களுக்கு எப்படி அப்படி சொல்லத் தெரிஞ்சுது ? பாப்பாக்குடி அய்யர்வாள் நீங்க சொல்றாப்பலயே கேட்டாராம். 'ஏய்யா ' ஆறுவயதிலேர்ந்து அசுரசாதகம் பண்ணி, குருகுலவாசம் பண்ணி, பண்ணி, பணிவிடைபண்ணி, வெசுவு கேட்டு, உதைவாங்கி, குட்டுப்பட்டு ஆயிரக்கணக்காக கச்சேரி பண்ணி ஆஸ்தான சமஸ்தான ஜமீன்கள்ளாம் வித்வானா இருக்கற நாங்கள்ளாம் நாதரட்சகாளா, ஆஞ்சனேய உற்சவம் பண்றேன், அருணகிரி உற்சவம் பண்றேன்னு ஊர் ஊரா வசூல் பண்ணி, சங்கீதக் காரனையெல்லாம் வரவழைச்சு பாடச் சொல்லி தேங்கா மூடியும் ஒத்தமாட்டு வண்டியும் ரண்டாம் க்ளாஸ் ரயில் சார்ஜ்உம் கொடுக்கறவன் நாதரட்சகனா ? என்னய்யா பெரளியா இருக்கு 'ன்னு ஆரமிச்சாராம். இவரும் சும்மா விடலெ கேட்டுண்டு சும்மா இருக்கல. '

'யாரு ? '

'அதாண்ணா, இந்த விழா ஏற்பாடு பண்ணியிருக்காரே பாலராமு எல்.ஐ.ஸி.லெ டாப் மேன்லெ ஒருத்தர், 'சர்த்தான்யா, பணம் வசூல் பண்ணி டிக்கட் அடிச்சு வித்து ஹால் கட்டி, மண்டபம் வச்சு, கச்சேரி வைக்காட்டா எந்த நாதம்யா தானே ரட்சிச்சுக்கப்போறது ? 'ராஜராஜன் பெரிய கோவில் கட்டினான்னா, அவனா உளிவச்சு அடிப்பன் ? உண்டியல்னா வச்சிண்டிருப்பன், உண்டியல் இல்லேன்னா, கோயிலாவது, சில்பமாவது, ஸ்தபதியாவதுன்னு சொல்லி பிடிவாதமாநிக்க ஆரம்பிச்சுட்டார்...அவர் சும்மா போன் பண்ண வேண்டியதுதான், உடனே விளம்பரம் பக்கம் பக்கமா வந்து விழறது '

'எதுக்கு ? '

'சிறப்பு மலருக்கு, ஸ்உவனிர் ஒண்ணு போடறார் '. ஓய் நீர்கொஞ்சமா உழைக்கலெய்யா சங்கீதத்துக்கு, சுவனீர்லெ, இன்னும் வசூல்லெ வர பணம் எல்லாத்தையும் உம்மபேர்லெ பாங்கிலே பிக்சட்டெபாசிட்லெ போட்டுடப்போறேன். நீர் சாப்பாட்டுக்குன்னு யார் கிட்டவும் நிக்காம இருக்கணுமோல்லியோன்னார் பாலராமு. 'அடாடா அப்படியெல்லாம் என்னை எம்பாரஸ் பண்ணாதிங்கோ. அத்தனை பணத்தையும், ஏழைக் குழந்தைகளுக்கு சங்கீதம் சொல்லிக் கொடுக்கறதுக்குன்னு ஒதுக்கணும்னு சொல்லிட்டேன். '

'தர்மம் வீட்லெதான்யா ஆரமிக்கும். அப்படி இங்கிலீஸ்லெ சொல்ற வழக்கம் ' உப்பிலி.

'எனக்கு என்ன புள்ளையா குட்டியா ? கல்யாணமா கார்த்தியா ' ஒண்டிக்கட்டை. எங்கம்மாக் காரியைக் கரையேற்றிப்புட்டேன்னா தெருதான் வீடு, ஊரெல்லாம் குடும்பம். '

'உனக்கென்னய்யா குறை ? சங்கீதக் காரனல்லாம் உள்ளங்கையிலெ வச்சுண்டு தாங்குவான் போ. '

'நான் வரேண்ணா. எனக்கு ஆப்தமா அந்தரங்கமா இருக்கற அஞ்சாறுபேர் உண்டு. அவாளை நேரப் போய் அழைக்காட்டா நன்னிகெட்ட ஜன்மமாப் போயிடுவேன். 'நன்னிதாண்டா முக்கியம். அதுதான் சோறு போடும். போய் நேர அழச்சுட்டுவா 'ன்னு பால ராமு கார் கொடுத்தார். அவர்கார் தான் இது. நான் வரேண்ணா. '

உப்பிலியின் காபி, வெந்நீர் உபசாரத்தை ஏற்றுக் கொள்ளக்கூட அவனுக்குப் போது இல்லை. கார் கிளம்பி விட்டது.

'பார்த்தீரா உலகம் போற போக்கை ? பாப்பாக்குடி அய்யர் ஏன் சொல்லமாட்டார் ? இவன் நாதத்தை ரட்சிக்கிறானாம். அதுக்கு எல்.ஐ.ஸிக்காரன் ஒருத்தன் பெரிய புள்ளியாம். அவன் பதிலடி கொடுத்தானாம். இந்த கோவிந்தனோட அப்பா பஞ்சாங்கக்காரன். இதுக்குப் படிப்பு வெல்லெ. பஞ்சாங்கம் பண்ணி வைக்க சொல்லிக்கொடுத்தான் தகப்பன். எங்கியோ ஒரு நாளைக்கு இவன் மதுரைப் பக்கம் போயிருந்தானாம் முப்பது வருஷம் முன்னாலெ. அப்ப சின்ன வயசு. பதினெட்டு பத்தொன்பது வயசு இருக்கும். ரயில்லே போறபோது யாரோ ஆபீசர் கூட பிரயாணம் பண்ணிண்டிருந்தானாம். விசாரிச்சதில தூரத்து உறவுன்னு தெரிஞ்சுண்டானாம். பூவாளூர் சந்தையில பொட்டியும் பொட்டியும் இடிச்சுண்டுதாம். அந்த மாதிரி ஏதோ உறவு. நாமல்லாம் தியாகப்பிரம்மத்தோட சம்சாரம் இருந்தாளே--அந்த வம்சத்தை சேர்ந்தவா. அப்படியிருக்கச்சே கண்டவனுக்கெல்லாம் போய் பஞ்சாங்கம் பண்ணி வச்சு அரிசியும் வாழைக்காயும் வாங்கிண்டு நீசப் பொழுப்பு பொழைக்கலாமான்னு ஆதங்கப்பட்டாராம் அவர். புள்ளையாண்டான் திரும்பி வந்தான். அப்பா எத்தனைசொல்லியும் கேக்கலெ. அனுமார் கோயிலுக்கு உத்ஸவம் பண்றேன்னு ஆரம்பிச்சான். எங்கிட்டதான் வந்தான். முசிரி, செம்மங்குடி, ஜிஎன்பி எல்லாரையும் கொண்டு வரேனா இல்லியா பாருங்கோன்னு. உங்க கையாலெமுதல்லே கொடுங்கோ. சோழகர் நாட்டார் எல்லாரும் உங்க கைராசியைப் பத்தித்தான் சொல்றா சொல்றா அப்படிச் சொல்றான்னான். முசிறி பேரு, சித்தூர் பேரு எல்லாம் சொல்லி என்னை இளக்கிட்டான். சரிடான்னு பதினோரு ரூபா போட்டேன். முதக் கையெழுத்து நம்முது. அதைத்தான் பெரிசாச் சொல்லிக்கிறான். அன்னிக்கி ஆரம்பிச்சவன் ஓயலே. ராதா கல்யாணம்னு வசூல் பண்ணுவன். மூட்டை மூட்டையாய் அரிசி வரும். கச்சேரி, சாப்பாடுன்னு அமர்க்களம் பண்ணுவன். மிச்சம் இருக்கிற தெல்லாம் வீட்டுக்குப் போயிடும். உடனே அருணகிரி உற்சவம்பான். அதுக்குத் தனியா வசூல் பண்ணுவான். இப்படிக் கும்மாணத்திலே ஒரு வீடும், திருச்சிறாப்பள்ளியிலே ஒருவீடும் வாங்கிட்டான். முன்னெல்லாம் கோவிந்து கோவிந்துன்னு பெரிய வித்வான்லாம் கூப்பிடுவா. இப்ப என்னமோ குருஜியாம். குருஜீ குருஜீன்னு கூப்பிடறான். பெரிய பெரிய வித்வான்லாம் கூட. என்னன்னே புரியலெ. ஒரு நாளைக்கு ஒரு இடத்திலே இருக்கமாட்டான். எங்கெங்கெல்லாம் திருவிழா உத்சவமோ அதுக்கெல்லாம் அழைப்பும், பங்களூர், மைசூர், திருவனந்தபுரம், விஜயவாடா, ஹைதராபாத்துன்னு கல்கத்தா, பம்பாய் போன்ற இடத்திலெல்லாம் வித்வான்களோட படுக்கை சாப்பாடு. '

இந்த சமயத்தில் தான் உப்பிலியின் அண்ணன் மகன் சீமாண்டி வந்தான்--வாயில் வெற்றிலை சீவல் அரையல்.

'யாரு சித்தப்பா கோவிந்து மாதிரி இருந்ததே ?கார்லியா வந்திருந்தான் ? '

'ஆமாண்டா கோவிந்துதான். அவன் சங்கீத சேவை முப்பது வருஷமாப் பண்றானாம். அதுக்காக நாதரட்சகன்னு டைட்டில் கொடுக்கப் போறாளாம் திருச்சியிலெ. '

'என்னது ? '

'நாதரட்சகன். '

'தேவலியே ' '

'நீங்களும் வரணும்னு என்னைக் கூப்பிட வந்தான். நான் தான் முதமுதல்லெ பதினொரு ரூபா போட்டேனாம் முப்பது வருஷம் முன்னாலெ. அவன் அனுமார் கோயில் உத்சவம் ஆரம்பிச்ச போது..அதை நினைச்சிண்டு காரை எடுத்துண்டு ஓடி வந்திருக்கான். '

'ச்சு...ச்சு...ச்சு... '

'என்ன உச்சுக்கொட்றே ? '

'உன் சிண்டிலயும் பூச்சுத்த வரான் பாரு ஒத்தன்....

'என்ன பூ சுத்திட்டான் என் சிண்டுலே '

'இதே கார்ல தான் நேத்திக்கி கடைத் தெருவிலெ கோபால்சாமி கடைலெ சொல்லிண்டிருந்தான். அவர்தான் முதமுதல்லெ பத்து ரூபா போட்டாராம். போனவாரமும் வந்திருந்தான். சாலியத்தெருவுக்கு. சீது செட்டியார்கிட்டதான். நீங்கதான் முதமுதல்லே கையெழுத்துப் போட்டேள்னு நானூறு ரூபா ஒரு பக்கத்துக்குன்னு அட்வர்டைஸ்மெண்ட் வாங்கிண்டு போனான். உங்கிட்ட ஏதாவது வாங்கிண்டு போனானா டொனேஷன்னு ? '

'எங்கிட்ட ஏண்டா வரான் ? நான் என்ன மொத்த மளிகைக் கடையா வச்சிருக்கேன் ? இல்லெ நூறு தறி வெச்சிருக்கேனா ? நெஜம்மாவே எங்கிட்ட தான் முதமுதல்லெ பதினொரு ரூபா வாங்கிண்டு ஆஞ்சனேய உற்சவம் ஆரம்பிச்சான் அந்தக் காலத்திலெ. '

'நீ வெறுமனே கேட்டா குடுப்பியா ? நாளைக்கு தாசில்தார் இல்லாட்டா சப் கலெக்டர்டேர்ந்து லெட்டர் வரும்பாரு. ஒருகமிட்டி போட்டிருக்கா இந்த விழாவுக்கு. '

'சப் கலெக்டர் டேர்ந்து சிபாரிசுக் கடுதாசி வரும். எங்க கிட்ட இரு நூறு முந்நூறுன்னு ரூபா பிடுங்கிண்டு போப்போறா--அவ்வளவுதானே ? உனக்கு சந்தோஷமா இருக்கும். சித்தப்பா கஷ்டப்படணும். நீ சந்தோஷப்படணும் இல்லியா ? எங்கண்ணாவுக்குன்னு வந்து புள்ளையா பொறந்தியேப்பா. '

இப்போது உப்பிலி முகம்சிவக்கவில்லை. தம் தமையனின் புத்ர சம்பத்தை நினைத்து வருந்தி அவர் உடம்பு உள்ளே எழுந்து போயிற்று.

# வேறு வேறு அணில்கள்

**வண்ணதாசன்**

சிலம்பாயி இப்படி பூப்போல வந்து நிற்கிறாள்.

போகன்விலாச் செடியின் அடித்தூர் காட்டுக் கொடிகளைப் போலத் திருகி வளர்ந்து, அதன் நிழலிலேயே பதுங்கியிருக்க ஒரு நெளிந்த தாறுமாறான வட்டத்தில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த மூன்று வண்ணத்துப் பூச்சிகளை மட்டும் நெடு நேரமாகப் பார்த்துக்

கொண்டிருந்தவனுக்கு பேச்சுத் துணைக்கு ஒருத்து அதுவும் 'இந்த வீட்டுக்குள் எவள் வந்து பெருக்குமாரை எடுத்துக் கூட்டுகிறாண்ணு பார்க்கேன் ' என்கிறமாதிரி ஒரு வருஷத்துக்கு முன்னால் சொல்லி விட்டுப் போன சிலம்பாயி வந்திருப்பது, இன்றைக்கு முழுவதும் புஸ்தகத்தைப் படித்துக் கொண்டு நாற்காலியோடு தைத்துப் போட்டது மாதிரி கிடக்க வேண்டியவனுக்குப் பெரிய மாறுதல் தான்.

அந்த ஆச்சரியம் தெரியும்படியான குரலிலேயே 'உள்ளே வா சிலம்பாயி ' என்று சப்தம் கொடுத்தேன்.

'ஆமய்யா ' என்று சொல்லும் போது கேட் திறக்கிற சத்தமும் அவளுடைய குரலின் மேல் விழுந்தது. வெற்றிலை போட்டிருக்கிறாள். சாராயம் குடித்திருக்கிறாளா என பேச்சுக் கொடுக்கும் போதுதான் தெரியும் வெற்றிலை, லேசான சாராய வாசனை (சிலம்பாயிடம் கேட்டால் 'சுவர் முட்டி ' என்று அல்லது 'பழரசம் ' என்று பேர் சொல்வாள்) இந்தச் சிரிப்பு மூன்றும் இல்லாமல் அவள் இல்லை. இது தவிர அவளுடைய கைப்பிள்ளையும் துப்புரவுக் காரியத்துக்கான பிரப்பங் கூடையும் இருக்கும்.

கூடையையும் செருப்பையும் ஒரே இடத்தில் வைத்தால் என்ன ஆகிவிடும் சிலம்பாயி ஒரு போதும் அப்படிச் செய்வதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு இடம் தேர்ந்திருக்கிறாள். செருப்பைத் தென்னை மரத்துக்குப் பின்பக்கம் மறைவாய் போகன்விலாச் செடிக்கு அடியில் கழற்றிப் போட்டுவிட்டு அங்கேயிருந்து இந்தப் பக்கம் வந்து கொய்யாச்செடிக்கு அடியில் கூடையை வைப்பாள். இதை அங்கேயோ அதை இங்கேயோ அவள் என்றைக்கும் வைத்ததில்லை. அதே போல வாசல் பெருக்கிற வாரியலை கக்கூஸ் கழுவ உபயோகிக்கிறதில்லை. எல்லாவற்றிலும் இப்படித் திட்டமாக இருக்கிறவள்தான் அன்றைக்கு அப்படி ஒரு சண்டையும் போட்டாள்.

'அம்மாவங்க இல்லையா ' சிலம்பாயி செருப்பைக் கழற்றி வைத்த பின்பு முதல் கேள்வியாகக் கேட்கும் பொழுது அவளுக்கும் சிரிப்பு வந்து விட்டது. நானும் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

'ஏன் மல்லுக்கு நிக்க ஆள் வேணுமா உனக்கு '

'போங்க சாமி. வீடு ஆளரவமே இல்லாம ஊமையாக்கிடக்கேண்ணு கேட்டேன். பள்ளிக்கூட லீவுக்கு ஊருக்குப் போயிருக்கிறாங்களாக்கும். '

'அப்ப தெரிஞ்சுக்கிட்டு தானே கேட்கற. '

'எதைச் சாமி தெரியாமச் செஞ்சு போட்டம். எல்லாமே தெரிஞ்சு செய்யுறதுதான் '

இந்தப் பதிலில் சிலம்பாயி சட்டென்று இது வரையிலிருந்த கிண்டலை எல்லாம் தாண்டி வேறிடத்துக்குப் போயிருந்தாள். கேள்விக்குப் பிந்திய சிறிய இடைவெளியில் மறுக்க முடியாத யூகங்களுக்கு அனுமதித்து சற்று குனிந்திருந்தாள்.

அன்னிக்கு அம்மாவங்க கை மாத்தா ரூபா கேட்டதுக்கா என்னை சண்டை பிடிச்சாங்க. எதுக்குன்னு எனக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும். எதையும் கோர்க்காமல் துண்டு துண்டாக ரிப்பன் பறக்க விடுவது போல சிலம்பாயி சொல்லிக் கொண்டே போனாள்.

அவள் இன்னும் கீழே குனிந்த படி இருந்தாள். தரையில் காக்கை நிழல் பறந்து போய்த் தெருவில் விழுந்தது. தென்னை மரத்தில் சர சரவென்று தலை கீழாக அணில் இறங்கி தரைக்கு ஒரு சாண் உயரத்தில் நின்று தீவிரமாகப் பார்த்தது. வெயிலுக்கு எல்லாம் கட்டுப்பட்டிருக்க பின்னால் நிற்கிற இலவமரத்தின், தெரியாத ஒரு கிளை 'அக்காவ் ' என்று விம்மிக்கொண்டு எய்த கருப்புக்குரல் எங்கிலும் செருகியது.

உண்மை எந்தக் கைத்தாங்கலுமின்றி நடந்து போவது போல அவள் சொல்லிவிட்டாள்.

சிலம்பாயி அடுத்த மாதம் சம்பளத்தை இந்த மாதம் கேட்பதோ 'இதுதான் கடைசித்தரம் ' என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொரு தடவையும் கொடுப்பதும் எல்லாம் வழக்கமாக நடப்பது, என்னையும் பக்கத்தில் வைத்துக் கொண்டே சிலம்பாயி கேட்பாள். 'ஏங்க அய்யா, அம்மாவங்க கொடுக்கிற நாலு ரூவாயை வாங்கிட்டுக் கப்பல் ஏறி சீமைக்கா போயிரப் போரேன் ' அவள் கேட்பதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் நான் சொல்வேன்.

' இவ்வளவு பேசிவிட்டு நீ ரூபாயைக் கண்டா வேண்டாம்னு சொல்லிட்டுப் போகப்போறியோ ?

'சுளுவா நான் சொல்லிட்டுப் போயிருவேன். ஆனால் தூத்துப் பெருக்க ஆளில்லாமல் நீங்கதான் தவியாத் தவிச்சு நிக்கணும். '

'ஒண்ணும் நிக்காது. உனக்குக் கொடுக்கிறதை இன்னொருத்தருக்குக் கொடுத்தா சொடக்குப் போட்டுக்கிட்டு ஆள் வரும் பார்த்துக்கோ. '

'வந்த பிறகுல்லா சிலம்பாயி அருமை தெரியும் கூட்டிப் பெருக்கின தரையில் ஒரு குத்துச் சோறு வச்சுச் சாப்பிடுகிற மாதிரி கண்ணாடியால்லா இப்ப நான் வச்சிருக்கேன். பச்சைப் பிள்ளை உள்ளங்கை சிவக்காம தாழ்ந்து போகலாம். ஒர் கல்லுமுள்ளு இல்லாம அப்படியில்லா வச்சிருக்கேன் ' நாற்பதா நாற்பத்தைந்தா ' என நிதானிக்க முடியாமல் முகம் மாறி மாறி இளகிக் கொள்ள வார்த்தை பளிச்பளிச்சென்று சந்தோஷமாக வரும்.

வார்த்தை வருகிறபடிக்கே வேலையும் இருக்கும். அன்றைக்கு முழுவதும் எத்தனை இலை உதிர்ந்ததோ அதுதான் கிடக்கும் முந்தின நாள் கிழித்த தினசரிக் காலண்டர்தான் ஜன்னல் வழி எறிந்த மாத்திரைத் தகடு இன்றைக்கிருக்காது. வெளவால் கடித்த கொய்யா கிடந்ததென்றால் அது முந்தின இரவில் விழுந்ததாக மட்டும் இருக்கும்.

'துட்டுக்கு செய்யுற வேலையா இது. அம்மாவங்க தர்ர நாலு ரூபாயை வச்சுக் கைப்பிள்ளைக்கு தினம் ரொட்டி வாங்கிப் போட முடியுமா இல்லை சீனியம்மாவுக்கு உள்ளாங்கழுத்துச் சங்கிலி பண்ணி போட முடியுமா ? பேசாம நிழல்ல வீட்டுக்குள்ளே உட்கார்ந்து தக்காளிக் கூடை பின்னிக்கிட்டு கிடக்கிறவ எல்லாம் உச்சாணியிலே ஏறிப்போய் உட்கார்ந்திட்டாங்களா வீட்டில இருக்க இருக்க அடிதான் உதைதான். கச்சரா தான் ஒரு திருப்பு கழுத்தைக் கட்டிக்கிட்டு சினிமாப்பாத்துட்டு வந்தால் மட்டும் ஆயிடுச்சா. மறுபடியும் வீட்டுக்குத் தானே வரணும். வீட்டில என்ன இருக்கு அப்படி இழுத்துப் பிடிச்சு உட்கார வைக்கிற மாதிரி. இப்படி வெளியில வந்தாலாவது கூட நாலு ஜனம் ரெண்டு செடி கொடி, கண்ணுல மொகத்தில் படும். '

சிலம்பாயி செடி கொடியை எல்லாம் பற்றிப் பேசுகிறது ஆச்சரியமான ஒன்று. மூன்று நேரம் சாப்பிடுகிறவர்களுடன் மட்டுமே சம்பந்தப் பட்டதுதான் இந்தப் பூ செடி கொடி விஷயமெல்லாம் என்று சட்டம் ஒன்றுமில்லை எனத் தோன்றும்படி நடந்து கொண்டிருக்கிறாள்.

தந்தி ஆபீஸ் கட்டிடத்திலுள்ள மயில் மாணிக்கம் கொடி வீசி உரக்கடைக்காரர் வீட்டு முகப்பில் நட்சத்திரச் சிவப்பில் பூத்திருப்பதற்கும் டி.எஸ். பி. வீட்டுக் கல்வாழை வரிசையாக எதிர் வீட்டில் முளைத்திருப்பதற்கும் அவள்தான் காரணம்.

மற்றவை எல்லாமாவது பூக்கிறவை. எங்கள் வீட்டுக்கு அவள் கொண்டு வந்து கொடுத்தது ஒரு செடி. பார்ப்பதற்குச் செங்கீரைத் தண்டு மாதிரி இருக்கிற அதை அவள் தான் 'பேப்பர்மில்காரங்க ' வீட்டிலே இருந்து கொண்டு வந்தாள்.

'ஒடிச்சு வச்சாலே வளந்திரும்னு சொன்னாங்க பேப்பர் மில்லு வீட்டு அம்மா. இங்கன நட்டுவச்சுப் பார்ப்பமா ? என்று சொல்லும்போது எங்களுக்கு எந்த நம்பிக்கையுமில்லை. ஆனால் அவள் நம்பியபடியும் சொன்ன படியும் கருஞ்சிவப்பு இலைகளுடன் மிகவும் வித்தியாசமாக அந்தத் தாவரம் வளர்ந்ததைப் பார்த்து விட்டுச் சிலம்பாயி சொன்னாள்.

'இப்படி குளிச்சையாத் திமிரிக்கிட்டு நிக்கிறதைப் பார்த்தா இது மலங்காட்டுல அருவிக் கரையில் வளர்ற ஜாதியாத் தெரியுது. இங்க உள்ள செடியெல்லாம் கையைக் கட்டுக்கிட்டுல்லா நிக்கும் ஒரு மாதிரியா '

இந்த அபிப்பிராயத்தின் வலுவான ஈர்ப்பில் படித்துக் கொண்டிருந்த ஆங்கில தினசரியை ஒதுக்கிக் கொண்டு அவளைப் பார்த்ததும் அவள் 'சரிதானே என்கிற மாதிரி என்னைப் பார்த்ததும் எல்லாம் சந்தோஷமாயிருந்தது. ஷேவ் பண்ணிக் கொண்டிருக்கும்போது, பையனுடைய காலணிக்குப் பாலிஷ் போடுகையில் என்று அநேக காலைகளின் சந்தோஷமான ஒரு பகுதியாக சிலம்பாயியும் இருந்தாள்.

சந்தோஷம் குறைய ஆரம்பித்ததெல்லாம் தன்னுடன் தன் கைக் குழந்தையைக் கூட்டிக் கொண்டு வருவது போலவே மூத்தமகள் சீனியம்மாவையும் கூட்டிக்கொண்டு வரத் தொடங்கியபோதுதான்.

சிலம்பாயி வேண்டவே வேண்டாம் என்று சொல்ல இவள் சொல்வதற்கு எதிராகச் செய்வதே பழக்கமாகக் கொண்டிருந்த லாடாண்டி அவனுடைய தங்கச்சி மகனுக்கு சீனியம்மாவைக் கட்டி வைக்க முதலில் அப்பா சொல்படி சந்தோஷமாகவே முறைப்பையனைக் கட்டிக் கொண்ட சீனியம்மாள் ஒரு ஏழெட்டு மாதம் மட்டுமே அவனுடன் இருந்து விட்டு பிடிக்கவில்லை என்ற ஒரே சொல்லோடு திரும்பி வந்துவிட்டாள்.

சீனியம்மாவுக்கு மிஞ்சிப் போனால் பதினாறு பதினேழுதான் இருக்கும் என்றாலும் அது இந்தக் காலத்துப் பதினாறு பதினேழு என்று சொல்லும்படி பார்வையும் நடவடிக்கையும் இருக்கும்.

'அக்கா இடுப்பில தங்கச்சி இருப்பதைப் பார்த்தால் சிலம்பாயிதான் பேரன் பேத்தி எடுத்திட்டாளோண்ணு நினைச்சேன் ' என்றுதான் அநேகம் பேர் சொன்னார்கள். அப்படித் தோன்றும் படியாக சிலம்பாயியுடன் சீனியம்மாளும் வந்து கொண்டே இருந்தாள். 'அவளை எதுக்குப் புறத்தாலேயே கூட்டிக்கிட்டு அலையுத. வீட்டில இருக்கச்சொன்னா என்ன ? ' யாரோ கேட்டிருப்பார்கள் போல.

'வீட்டில என்ன. உலைப்பானை பொங்கி வடிகஞ்சி வழிஞ்சி ஓடிக்கிட்டா இருக்கு. குடிச்சுக்கிட்டு அக்கடாண்ணு படுத்துக் கிடக்கதுக்கு. போங்க சாமி. இங்க வந்தாலாவது பருக்கையும் தண்ணியுமனாலும் ஆளுக்கு ரெண்டு மடக்குப் பகிந்து குடிச்சிக்கிடலாம் '

சிலம்பாயி அப்படிச் சொல்லி வாயை அடைத்து விட்டாள் என்றாலும் அதற்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகச் சீனியம்மா பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் வேறெப்படியெல்லாமோ ஆகிவிட்டது.

சீனியம்மாவுக்கும் ஒரு சானிட்டரி இன்ஸ்பெக்டருக்கும் ஆதியிலிருந்தே பழக்கம் என்று முதலில் பேச்சு வந்தபோது கூட ஒன்றுமில்லை. சினிமாக் கொட்டகையை விட்டு வரும்போது சீனியம்மாவை முன்னிட்டு அந்த சானிட்டரி இன்ஸ்பெக்டருக்கும் இன்னொரு இளந்தாரிப் பையனுக்கும் அடிதடி வந்து போலீஸ் ஸ்டேஷன் வரை போனதாகத் தெரிந்ததும் 'இனிமேல் சிலம்பாயியை வேலைக்கு வச்சிகிறதுக்கு லாயக்கில்லை ' என்று மிகவும் பாதுகாப்பான ஒரு யோசனை இந்த வரிசையிலுள்ள பெண்களிடம் உண்டாகிவிட்டது. இப்படி தீர்மானித்துக் கொண்டு விட்ட மறுநாளோ ரெண்டாம் நாளோ தான் சிலம்பாயி இங்கே சண்டை போட்டதும் சண்டை முற்றி அவளை நின்று கொள்ளச் சொன்னதும் எல்லாம் நடந்தது.

'ஒழுங்காக் கழுவி விடுகிறதாக இருந்தால் கழுவி விடு. இல்லாட்டி நிண்னுக்க ' என்று தான் பின்னால் பேச்சே ஆரம்பித்தது. சிலம்பாயி பதில் சொன்ன மாதிரி தெரியவில்லை.

'தண்ணி ஊத்துங்கம்மா ' என்ற குரல் வந்தது. பிரஷ் தேய்க்கிற சரசரப்பு சலார் சலார் என்று தண்ணீர் வீச்சு. அடங்கினது மாதிரி பினாயில் வாசனை.

'தொட்டித் தண்ணி பூராவும் உனக்குத்தான் சரியாகப் போகும் போல '-- மறுபடியும் உசுப்பிவிடுகிற குரல் தொட்டிப் பக்கத்திலிருந்து.

சிலம்பாயிக்கு நிஜமாகவே அதிகப் பணம் தேவைப்பட்டிருக்கவேண்டும்.

'இருவது ரூபா இருந்தா வேணுங்கம்மா. சம்பளத்தில் கழிச்சுக்கிடுங்க. '

'கேட்கிற நேரம் எல்லாம் உருவி உருவிக் கொடுக்க இங்கே என்ன அச்சடிக்கவா செய்யுது ? '

'மாசாமாசம் முழுச் சம்பளத்தைக் கூடப் பிடிச்சிக் கிட்டாச் சரிதான். ரொம்ப அவசரம். '

'இருபது ரூபாயைத் தூக்கி உங்கிட்டேக் கொடுத்துட்டு அப்புறம் உன்னை யாரு தேடி அலையறது ? '

'பத்து ரூபாயாவது கண்டிப்பாத் தரணும், இல்லேண்ணு சொல்லிரப் படாதும்மா. '

'பத்து பைசா கூட இல்லை '

இந்த இடத்தில் சிலம்பாயி காயம்பட்டுவிட்டாள்.

'பிச்சைக்கு வந்தா நிக்கிது உங்ககிட்டே. பாடுபடுகிறவ ஒரு ஆத்திர அவசரத்துக்குக் கேட்டா உண்டு இல்லைண்ணா அமர்ந்த வார்த்தையாச் சொல்லாம இது என்னம்மா பெரியபேச்சு. '

'எப்படி பேசணும்னு நீ ஒண்ணும் சொல்லிக் கொடுக்க வேண்டாம். போய்ச் சேரு. '

'பின்னே இங்கேயாவா காத்துக்கிடக்கப் போகுறோம் '

'இந்தாங்க, இவகிட்டே நாலு ரூபாயைக் கொடுத்து அனுப்புங்க. இவ இல்லாட்டா இவ அக்கா. '

இந்த இடத்தில் நான் ரூபாயுடன் சேர்ந்து கொள்ள சிலம்பாயி அதற்கப்புறம் எதுவுமே சொல்லாமல் ரூபாயை வாங்கிக் கொண்டு போய் விட்டாள். எங்களைப் போலவே அவளுடைய மகளை உத்தேசித்து இந்த வரிசை வீட்டில் நான்கு பேருமே நிறுத்திவிட அதற்கப்புறம் வெகு சீக்கிரமாகவே மூக்கம்மாள் வந்து அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டாள்.

மூக்கம்மாள் வருகிறதும் தெரியாது. போகிறதும் தெரியாது. என்றைக்காவது பப்பாளி இலையில் மிஞ்சின சோற்றைக் குத்துக்காலிட்டு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். மாரியம்மன் கோவிலுக்கு மூக்கம்மா அக்கினிச்சட்டி எடுத்துப்போனதாகச் சொன்னார்கள். இவ்வளவு அமைதியானவளும் அக்கினிச்சட்டி உக்கிரமும் எப்படிப் பொருந்திக் கொண்டது என்று தெரியவில்லை. இந்த அமைதிக்குச் சரியாகத்தான் வேலையும் இருந்தது. ஒன்றும் சுகமில்லை.

பேசத் தெரியாத அப்பாவி வேலைக்காரி கிடைப்பதை விட வேலையில் சுத்தம் இந்தக் காலத்தில் முக்கியம் என்று நாங்களும் பழகிக்கொள்ள அநேகமாகச் சிலம்பாயியை மறந்தே போன ஒரு தினத்தில் தான் இப்படி அவள் வந்து நிற்கிறாள். அதுவும் எப்பேர்பட்ட சொல்லுடன்.

'எதைச் சாமி தெரியாமச் செஞ்சு போட்டம். எல்லாமே தெரிஞ்சு செய்யுதுதுதான். '

அவள் குனிந்திருப்பதையே பார்த்திருக்கப் பார்த்திருக்க இதுவரை அவளைப் பார்க்க முடியாத நாட்களின் கனத்தையெல்லாம் அவள் முகம் தாங்கியிருப்பது போல இருந்தது. வெற்றிலைச் சாறு கசிகிற அந்தக் கடைவாயில் சொல்லாமல் நிறைய விஷயங்கள் தேங்கியிருப்பது போல ஒரு சின்னஞ்சிறு எச்சில் குமிழ் உதடு அமுங்கிப் பொருந்திய கோட்டில் துடித்துக் கொண்டிருந்தது.

'வேறென்ன சிலம்பாயி ' என்றேன்.

'எல்லாரும் நல்லா இருக்கீங்கள்ளா அய்யா ' என்று கேட்டுச் சிரித்தாள்.

ஒன்றும் சொல்லாதபடி அவளின் முதிர்ந்த பார்வையை என்னிடமே தங்கும்படி அசையாமல் வாங்கிக் கொண்டிருந்தேன்.

'வேறு ஒண்ணுமில்லைய்யா...இந்த மூக்கம்மா மாப்பிள்ளைக்கு நேத்து ராத்திரி மாரடைப்பு மாதிரி வந்து பொழைக்க மாட்டாமுண்ணு பெரியாஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருக்காங்க. நல்லதோ கெட்டதோ அந்த அப்பிராணி வேலைக்கு வருகிறதுக்கு முன்ன பின்னே ஆகும். வீட்டோட வீடா இந்தப் பக்கத்திலேயும் எல்லாத்தையும் கழுவிப் பெருக்கிட்டுப் போயிருவோம்ணு பட்டுது. ஏதோ அவளுக்கு நம்மால ஏண்ட உதவி ' மிக அதிகமாக

உதிர்ந்து கிடந்த அசோக மரத்து சருகுகளில் நடந்து, அவளுடைய அடுத்த காரியமாகக் கூடையை வைப்பதற்கும் குனிந்த சமயம் சிமெண்ட் நடை தளத்தில் குறுக்காக ஓடி வந்து ஒரு அணில் தென்னையில் ஏறியது.

சற்றுமுன்பு சரசரவென்று இறங்கி ஓடியதும் இப்போது மேலே ஏறிப்போவதும் ஒரே அணில்தானா வெவ்வேறா என்று தெரியவில்லை.

ஒன்று என்று தீர்மானிக்கத்தான் விருப்பமாக இருந்தது.

***

## கசப்பாக ஒரு வாசனை

**வண்ணதாசன்**

பண்டரியைப் பார்க்க வேண்டும் என்று அப்போதுதான் தோன்றியது. பத்து நாள் இருபதுநாள் இங்கே இருக்கும்போதுகூடப் பார்க்காமல் போயிருக்கிறேன். ஆனால் பாலா இன்றைக்குச் சொன்னதும் போவோம் என்று முடிவாகிவிட்டது.

என்னைப் பார்த்ததில் இருந்து பாலாவின் வாய் ஓயவே இல்லை. சித்தி, சித்தி என்று எதையாவது சொல்லிக்கொண்டிருந்தான். பழைய புத்தகக் கடையில் ஒன்றரை ரூபாய்க்கு வாங்கிய கபில் படத்தை மேஜைக்கு நேரே ஒட்டியிருந்தான். 'மேலே வா சித்தி ' ' என்று கையைப் பிடித்துக்கொண்டு போய்ப் பிளாஸ்டிக் வாளியில் வளர்க்கிற மீன் குஞ்சுகளைக் காட்டினான். படிகளில் ஏறும்போதே அடித்தவேப்பம் பூ வாசனையில் மனம் இன்னும் கிறங்கிக் கிடந்தது. ஆரஞ்சு வாளியில் நீந்துகிற மீனை முற்றிலும் ரசிக்க முடியவில்லை.

'நீ மீன் வளர்த்திருக்கிறாயா சித்தி ? '

'ம்ம். ஹார்லிக்ஸ் பாட்டிலில். '

'கிளி ? '

'இல்லை '

'நாய்க்குட்டி ? '

'டைகர் என்னுடன்தான் படுத்திருக்கும் பாலா. '

'முயல்கூட உண்டல்லவா ? '

'நான் பாலாஜியின் தலையைக் கோதிவிட்டேன். அக்காமாதிரி இருக்கிறதாக நினைத்தவன், சமீபத்தில் அத்தான் மாதிரியே மாறிக்கொண்டு வருகிறான். கற்றையான முடிகூட

அத்தானுடையது போலத்தான். குரல் உடைந்து கொண்டிருக்கிறது. தொளதொளவென்று செங்கல் கலர் டா ஷர்ட்டில் குனிந்து கொண்டு மீனுக்கு உணவுத்தூள் தூவுகிறான்.

அலமாரித் தட்டுக்களில் சாயிபாபா சிரிக்கிறார். அக்கா படித்த இரு நகரக் கதை, எமிலி டிக்கின்ஸின், ஆங்கில இலக்கிய வரலாறு, ஷேக்ஸ்பியர் தொகுப்பு வரிசையாக.

வீணையைப் பார்த்துக்கொண்டே கேட்டேன்.

'அம்மா இப்போது வாசிக்கிறது உண்டா ? ' பாலாவுக்குப் பதிலாக, வீணை மீது படிந்திருக்கிற புழுதியே பதில் சொல்கிறது.

அக்காவின் பெருவிரல்களில் காய்கறி நறுக்கி நறுக்கி அரிவாள்மனை செதில் செதிலாக வெட்டியிருக்கும். சோப்புக் காரம் பட்டுப் பட்டு உள்ளங்கை எல்லாம் வெளிறியிருக்கும். கண்களை மூடினால் இரண்டாவது சானல் ஓடிக்கொண்டிருக்கும்.

நானும் மீன்களுக்கு ஒரு சிட்டிகை உணவை விசிறியபோதுதான் பாலா சொன்னான், 'பண்டரி அங்கிள், சூப்பரா இரண்டு குதிரைப் படம் போட்டிருக்கிறார் சித்தி, ' என்று.

நான் அக்கா வாசிக்காத வீணை பற்றிய யோசனையில் இருக்க, சுழன்று சுழன்று வரும் மீன்களின் பிளந்த வாய்களுக்கிடையே, இதைச் சொல்லவேண்டும் என்று அவனுக்கு எப்படித் தோன்றிற்று என்று தெரியவில்லை.

என்னை எப்போதுமே குதிரைகள் பாய்கிற படங்கள் ஈர்த்ததில்லை. அவற்றை வரைந்தது யாராக இருந்தாலும். பண்டரி வீட்டில் முன்பு எப்போதோ ஒரு சித்திரம் பார்த்திருக்கிறேன். கிட்டத்தட்ட முழுச் சட்டமும் நீலத்துக்குள் கரைந்திருக்கும். இரவு, நிலவு இல்லாமல் நிலவு வெளிச்சம், பெரிய அரசமரம், பிள்ளையார், நாகர் சிலைகள் எல்லாவற்றிலும் நீலம். ஓர் அலை போல் அந்தச் சித்திரத்திலிருந்து ஒரு நுட்பமான இசை எழுந்து, எங்கும் வழிந்து கொண்டிருந்தது போலத் தோன்றும். ஒரு சித்திரம் போல அல்லாமல், சங்கீதம் போல இருக்கும்.

பண்டரிக்குப் பூனைக் கண்கள்.

'அது நீலச் சித்திரமல்ல. நிரம்பி வழியும் இசை, ' என்று நான் சொன்னபோது, பண்டரியின் அழகான கண்கள் இடுங்கிச் சிரித்தன. ரெயில்வே காலனியில் இருக்கிற ரோட்ரிக்ஸின் ஆங்கிலோ இந்தியச் சிரிப்புபோல ஒன்று பண்டரியின் முகத்தில் படர்ந்தது.

'வேங்கடலக்ஷ்மி, வேங்கடலக்ஷ்மி.... ' என்று உள்ளே பார்த்துக் கூப்பிட்டதும், பண்டரியின் மனைவி ஈரக் கையைத் துடைத்துக்கொண்டே வந்தாள். குழந்தை உண்டாகியிருக்கவேண்டும். ஏழெட்டு மாதமாவது இருக்கும்.

'நிரம்பி வழியும் இசையாம் ' ' என்று மிகுந்த சந்தோஷத்துடன் சொல்லி மனைவியின் கைகளைப் பிடித்துக்கொண்டார். 'உட்கார், உட்கார், ' என்று பக்கத்து இருக்கையைப் பண்டரி தட்டினார்.

வேங்கடலக்ஷ்மி இல்லாவிட்டால் என்னுடை கைகளை ஒருவேளை பிடித்திருக்கக் கூடும். அதற்குப் பதில்தான் இது. ஆனால் பண்டரியின் இளகினமுகம், பக்கத்தில் அவர் மனைவி, மனைவியின் மஞ்சள் நூல் சேலை, அவர்களுக்குப் பின்னால் இருந்த ஒரு சுடுமண் அய்யனார் குதிரைத் தலை, எல்லாம் நன்றாக இருந்தன.

பண்டரி கவிதைகளும் எழுதுவார். அவருடைய கவிதைகள் பற்றியும் அல்லாமல், என்னுடைய கவிதைகள் பற்றியும் அல்லாமல், பொதுவாகக் கவிதைகள் பற்றி அப்போது பேசின ஞாபகம் இருக்கிறது.

அதற்கப்புறம் எவ்வளவோ நடந்துவிட்டிருக்கிறது. என்னுடைய கவிதைத் தொகுப்புகள் இரண்டு வெளியானதும், எனக்கும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்பதும் தவிர பெரிய வித்தியாசங்கள் ஒன்றுமில்லை. பண்டரிக்கும் இப்படி நிறைய நடந்திருக்கலாம்.

ஒரு தடவை அவருடைய பெண் குழந்தைக்கு ஒரு பொம்மை வாங்கிக்கொண்டு போனேன். பண்டரியின் கவிதையும் என்னுடைய கவிதையும் அடுத்தடுத்து வந்திருந்த சமயத்தில் அதை பண்டரி பாராட்டி எழுதின கடிதத்துக்குப் பதில் போடாமல் இருந்திருக்கிறேன். தற்செயலாக ஒரு ரயில் பிரயாணத்தில் ரேகா ரோட்விட்யாயைச் சந்தித்தபொழுது, அவளைப் பற்றியும் அவள் ஓவியங்களைப் பற்றியும் பண்டரியிடம் பேசிவிட்டு வந்திருக்கிறேன். பண்டரி வீட்டில் இல்லாத ஒரு நாளில், அவர் வீட்டுப் பப்பாளி மரத்தில் பழுத்திருந்த ஒரு பழத்தைப் பறித்துச் சாப்பிட்டிருக்கிறேன். 'மாம்பழம் வெட்டுவதுபோல அழகாக நறுக்குகிறீர்கள், ' என்று பண்டரியின் மனைவி சொன்னதுடன் சரி. அவ்வளவு ருசியான பப்பாளியை ஒரு துண்டுகூடச் சாப்பிடவில்லை.

'பப்பாளி ஜ்ஊடு, ' என்று வேங்கடலக்ஷ்மி சொன்னதிலிருந்து, 'ஜ்ஊடா ஏதாவது கொடுங்க வேங்கடலக்ஷ்மி, ' என்று கேட்க ஆரம்பித்திருக்கிறேன். வேங்கடலக்ஷ்மி அதற்குச் சிரிக்கிறதுண்டு. எதற்கு என்று தெரியவில்லை. ஆனாலும் சிரிப்பது நல்லதுதானே ' இன்றைக்குப் பண்டரியைப் பார்க்கவேண்டும் என்று தோன்றியதற்குக்கூட அந்தச் சிரிப்புத்தான் காரணமோ என்னவோ ?

'பாலா வருகிறாயா ? ' என்றேன்.

'எங்கே சித்தி ? '

'பண்டரி அங்கிள் வீட்டுக்கு. '

பாலா வரவில்லை.

'இந்த இருட்டிலேயா ? ' என்றான்.

வெளியே பார்த்தால் ரொம்பவும் இருட்டித்தான் இருந்தது. சப்போட்டா மரத்தில் வௌவால் இடம் மாறிக்கொண்டிருந்தது. வேப்பமரம் தன் பூ வாசனை முழுவதையும் இருட்டில் உதிர்த்திருந்தது. ஒரு நீர் நிலை போல அசையாது கிடந்த இருட்டு, என் புடவை விசிறலில் நலுங்கியது. மச்சுப் படிகளில் இறங்கிய என் கால்களுக்குள் இருட்டு மெத்திட்டு அமுங்கியது. படிக்கட்டுக்கு அருகில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரின் பக்கத்தில் கறுப்புப் பூனைக்குட்டி பதி போட்டிருந்தது. மரக்கதவைத் திறக்கையில் தபால் பெட்டி குளிர்ந்தது. ஒரு பெரிய

தவளையின் துள்ளல். மாநகராட்சித் தண்ணீர்த்தொட்டியில் பிளாஸ்டிக் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வெளிறிய மஞ்சள், சிவப்பு, ஊதா நிறங்களில் குடங்கள் அந்தரத்தில் நகர்வதுபோல இருந்தன. இருட்டு, சதைப்பற்று முழுவதையும் விழுங்கி விட்டுக் கொட்டையைத் துப்புவதுபோல, மிகச் சில அசைவுகளை மட்டும்தெளிவற்றுக் காட்டிக் கொண்டிருந்தது.

பண்டரியின் வீட்டு வெளிக்கதவைத் திறக்கும்போது ஆச்சரியமாகச் சத்தம் வரவில்லை. முன்தினத்துப் பூவுடன் கிளைகள் ஆடிக்கொண்டிருந்தன. ஜன்னல் கதவுகள் முதற்கொண்டு எல்லாம் அடைத்துக் கிடந்தன. வாசல் கதவும் திறந்தபடி இல்லை.

பண்டாரி இல்லை போல. யாருமே இல்லைபோல.

'ஸார்...பண்டரி ஸார் ' ' என்று கத்தினேன். கத்தலின் அதிர்வில் இலைச் சருகுகள் போல இருட்டு சுழன்று சுழன்று இறங்கியது. 'போய்விடலாமா ? ' என்று கடைசியாகக் கூப்பிட்டபோது, ஜன்னல் கதவு திறந்தது. எட்டிப் பார்த்த முகத்தைப் பார்த்துக் கேட்டேன், 'ரேணு, அப்பா இருக்கிறாரா ? '

நல்லவேளை ரேணு சற்றுச் சிரித்தாள். கதவு திறந்ததும் உள்ளே ஓடிவிடுவதற்கு நான் சகல தயாருடன் இருந்தேன். பண்டரியின் பூனைக்கண் ஞாபகம். அவருடைய இடுங்கல் சிரிப்பு, வேங்கடலக்ஷ்மியின் 'ஜ்ஊடு ', ரேணுவின் பூச்சுப் பூசின குண்டுகுண்டான விரல்கள்...

கதவின் மேல்கொக்கி, கீழ் கொக்கி அகற்றி, இரண்டுகதவுகளையும் திறந்து, பச்சைப்பூக்கள் பதித்த திரைச்சீலை ஒதுங்கவும், நான் உள்ளே கால் வைக்கவும் சரியாக இருக்கவேண்டும் என்று நான் செருப்புக்களைக் கழற்றியபடி நடை ஏறியபோது, வெளியே வந்த பண்டரி

'இங்கேயே இருப்போமே ' ' என்றார். நடைக்கு இருபக்கமும் விளிம்பு மாதிரிக் கட்டின பகுதியைக் காட்டினார். ஆளுக்கு ஒரு பக்கம் உட்காரலாம். அதை அமுல்படுத்துவது போல் அவரே முதலில் எதிர்ப்பக்கம் உட்கார்ந்துகொண்டார். எனக்குப் புரியவில்லை.

'ரேணுவுக்குப் பரீட்சை நடக்கிறதா ஸார் ? '

'முடிந்துவிட்டது. ' பண்டரி வட்டக் கழுத்துப் பனியன் அணிந்திருந்தார்.

'லக்ஷ்மிக்கு ஏதாவது... ? ' நான் புருவத்தை நெரித்தேன்.

'லக்ஷ்மிக்கு இல்லை. என்னுடைய அம்மாவுக்கு. ' பண்டரி ஒருமாதிரியாகச் சிரித்தார்.

'அம்மா பிரக்ஞையில்லாமல் கிடக்கிறார்கள். பத்துநாட்கள் ஆயிற்று, நினைவு தப்பி. ' இதைச் சொல்லும்போது துக்கமடைவதை விட்டு இதுஎன்ன ?

'எண்பது வயதுக்கு மேல் ஆச்சு. ' நான் கேட்காமலும், என்னை உள்ளே விடாமலும் பண்டரி மேலுக்குமேல் தகவல்களைச் சொன்னார்.

'எல்லாக் காரியமும் படுக்கையிலேதான். ' இதைச் சொல்லும்போதுகூட, யாரை விட்டோ நடையை அடைக்கச் சொன்னது போல, எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது போல, ஒரு உருவமற்ற தடை என்முன் இருந்தது.

எண்பது வயது ஜீவன். பேச்சில்லை, அசைவில்லை. மூழ்கிக் கொண்டிருக்கிறது. விடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உள் அறைகளின் ஏதோ ஓர் கட்டிலில் பழந்துணி போலக் கிடக்கிறது. நான் இப்போது அந்தக் கையை எடுத்து, என் கைக்குள் வைத்துக் கொள்ளவேண்டும். வெதுவெதுப்பு அற்ற அந்த உள்ளங்கைகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு எனக்கு நிறைய உண்டு. பிளந்த நடுவகிட்டில் இருந்து இரண்டு பக்கமும் நரைத்துப் பெருகும் அந்த மனுஷியின் சிகையை நான் சற்றே நீவிவிடவேண்டும். தளர்ந்த மிருதுவான காது நுனி மடல்கள், தொய்ந்த அடிவயிறு, வெளிறிய பாதங்கள், போர்வையின் நூல் பிரிந்து வெட்டப்படாத கால் பெருவிரல் நகத்தின் வெடிப்பில் சிக்கிக் கொண்டிருக்கிற சிவப்பு இழை, இவற்றை ஒன்று விடாமல் வருடி தடவித் தடவி விடவேண்டும்.

நிரம்பி வழியும் இசை என்று நான் சொன்னபோது, பண்டரி வேங்கடலக்ஷ்மியின் கைகளைப் பற்றிக் கொண்டதுபோலப் பற்றிக் கொள்ளவேண்டும்.

வேங்கடலக்ஷ்மி எங்கே ? உள்ளே தானே இருப்பாள் ? நான் கூப்பிட்டபோது ரேணுதானே ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். நான் வந்திருப்பதை அம்மாவிடம் சொல்லியிருப்பாள் அல்லவா ? அப்புறம் ஏன் வெளியே வரவில்லை. ஏதாவது சாஸ்திரம் இருக்கிறதா ? இருட்டில் வருகிற பெண்பிள்ளைகளை வயதான நோயாளிகளைப் பார்க்க அனுமதிக்க கூடாது என்று எதுவும் எழுதப்பட்டிருக்கிறதா ? முணுமுணுக்கிற நட்சத்திரங்களின் மேல் பார்வையை நிலைகுத்த விட்டுவிட்டுப் பண்டரி, வேங்கடலக்ஷ்மி, ரேணு என்று எல்லாப் பெயரையும் அழித்துவிட்டு, தன் அசைவற்ற பிரக்ஞையின் சிறகுகளுடன் படுத்திருக்கிற அந்த முதிர்ந்த பறவையை நானும் ஏந்திக் கொள்ளக் கூடாதா ? ஏன் உள்ளே விடாமல், இப்படிப் படியில் உட்கார் என்று சொல்லிக் கொண்டு....

பண்டரி இந்தச் சமயம் என் கவிதைகளைப் பற்றிக் கேட்டார்.

'கடைசியாக என்ன எழுதியிருக்கீங்க புதுசா ? ' என்று சிரித்தார். 'வித்தை தெரிஞ்சவங்க எல்லாம் சும்மா இருக்கறீங்க ? ' என்று என்னைப் பார்த்தார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

உட்காராமலே நின்று கொண்டிருந்த அந்த நடைப் பக்கத்தில் இருந்து வெளியேறினேன். வெளிக்கதவைத் திரும்பவும் மூடி, இருட்டுக்குள் நடக்க ஆரம்பித்தபோது, ஒரு திரள் போல வேப்பம்பூ வாசனை வந்து அப்பியது.

இழுத்துச் சுவாசித்தபோது தொண்டை கசந்தது.

வாசனைகூடக் கசக்குமா என்ன ?

## காற்றின் அனுமதி

**வண்ணதாசன்**

'அப்பா, நானும் வாக்கிங் வரட்டுமா ' - என்று தினகரி கேட்கவும் 'ஓ. எஸ் ' என்று கூட்டிக்கொண்டு புறப்பட்டாயிற்று. நடக்கிறதுக்கு என்ன காசா, பணமா. அதே சட்டை, அதே வேட்டி, அதே செருப்பு என்று புறப்பட வேண்டியதுதான். மனது மாத்திரம் கொஞ்சம் புதிது. தாத்தா கோலப்பொடி போட்டு, துணியில் வடிகட்டின விபூதிபோட்டுத் துடைத்து வைத்த அரிக்கேன்லைட் சிமினி மாதிரி, நேற்றையப் புகை, நேற்றையக் கருப்பு, நேற்றைய எண்ணெய்க் கசடு, ஒன்றிரண்டு நுனிவிரல் ரேகையை எல்லாம் துடைத்துப் புதிதாக வைத்துக் கொள்கிற காரியம்தான் நடை.

இப்படி விடியற்காலம் எழுந்திருந்து நடந்து கொண்டிருப்பவனுக்கு, வேறு என்ன சாதுரியம் இருக்கப்போகிறது. மலை, காற்று, சூரியன் என்று எல்லாம் வேறு உலகத்து விஷயங்களாகிவிட்ட அலுவலக நடப்புகளில் மூன்று வருடங்களுக்கு ஒரு ஊர் என்பது நிச்சயம். மற்றவர்களுக்கும் ஆர்டர் வருகிறது. அவர்கள் கேட்ட ஊர், முயற்சி பண்ணின இடம் கிடைக்காவிட்டால், டக்கென்று லீவு போடுகிறார்கள். லீவு முடிந்த பிறகு மந்திரம் போட்ட மாதிரிக் கேட்ட ஊர் அல்லது அதற்குப் பக்கத்தில் கிடைத்துவிடுகிறது. மரங்கொத்திகளுக்கு மரங்கள் இருக்கிறபடியும், மீன் கொத்திகளுக்கு மீன்கள் இருக்கும்படியான நியதியை இயற்கை இன்னும் அனுசரித்துத்தான் வருகிறது.

'என்னப்பா, இப்பவே இவங்க பீடி சுற்றிக்கிட்டு இருக்காங்க ' - வாசலை விட்டு வெளியே தெருவில் கால் வைக்கும்போதே, தூக்கத்தில் உப்பி மேலும் அழகான கண்களுடன் தினா இதைக் கேட்டாள். ஓய்வு சிலசமயம் அழகு தருகிறது. இயக்கம் இன்னும் சிலசமயங்களில் அழகு தருகிறது. எதிர்த்த நடையில் மடியில் சுளகும் பீடி இலையுமாக ஏறிட்டுப் பார்க்காமல் இருந்த அந்தப் பெண்ணின் பக்கத்தில், வாயில் ரப்பர் சூப்பானுடன் குழந்தை உட்கார்ந்திருந்தது.

எனக்கு வாசலில் இருந்து தெருத்திரும்புகிற இடம் முக்கியமானது. நகராட்சியின் எந்தக் கல் உருளைகளும் அறியாமல் தார் டின்னுக்கு ஜல்லிக் கல்லுக்கும் தப்பி, இந்தத் தெரு பிரதான ரோடுடன் சேர்கிற இடம், அப்படியே என்று பிறந்ததோ அதுபோலவே மாறாது இருந்தது. முண்டு முண்டாக எட்டிப் பார்க்கிற பாறைகள், சரல் கற்கள் மணல் மெத்தை, நீர் அரித்துக்கொண்டு ஓடின பள்ளம், மறுபடியும் கொஞ்சம் தேங்காய் அளவு பாறைகள். ஒரு நதிபொங்கிப் புரண்டு பாய்வது போலவும் எந்தப் பாறையில் நுரைத்து எந்த இடத்தில் சுழித்து, எந்தக் கூழாங்கல்லை உருட்டி, எந்தக் கரையோரப் புல்லுக்குக் கூச்சம் காட்டும், என் பாதம் நனையுமா, கணுக்கால் நனையுமா என்ற கற்பனையுடன் நகர்கிற இடம் இது. இந்த ஒன்றுக்கும் உதவாத கற்பனையை, பிருபிருவென்று நம்மைத் தாண்டிப் போகிற ஒரு சைக்கிள் தடமோ, குறுக்கே ஓடுகிற பன்றியின் வால் சுளிப்போ உதறித்தள்ளி நச்சென்று யதார்த்தத்தில் அறைந்து விட்டுப் போகும். தினகரியின் வார்த்தையில் அந்த அறையில்லை. ஆனாலும் கற்பனைக்கு இடமற்றுப் போயிருந்தது.

இடதுபக்கமாகப் போ என்று தான் சாலைவிதிகள் சொல்லுகின்றன என்றாலும், நான் சரியாக எதிர்ப்பக்கம் போய் வலது சிறகிலேயே நடக்கிறது வழக்கமாகி விட்டிருந்தது. இடது பக்கத்திலிருந்த ஒர்க் ஷாப்புகளை, தண்ணீர்க் குழாயை, டாக்கடையை, சைக்கிள் கடைகளும் பார்பர் ஷாப்பும் இணைந்ததுபோல - ஒரு பக்கம் சைக்கிள் வரிசையும் ஒரு பக்கம் மரத்தடி

நிழலில் நாற்காலியும் போஸ்டர் ஒட்டின சுவரில் கண்ணாடித் தொங்கலுமாக இருக்கிறதை, சின்ன ரெயில்வே கேட்டை, பெட்ரோல் பங்க்கை எல்லாம் இடது பக்கத்தில் இருக்க விட்டுவிட்டு, நான் வேப்பமர வரிசையின் பக்கமாகவே இத்தனை நாளும் போய்க் கொண்டிருக்கிறேன்.

'தினகரி ' அந்தப் பக்கமாகவேதான் நடந்து போவீங்களா ? அப்பா ? '

'ஆமா, தினா '

'இந்தப் பக்கமாக நடக்கவே மாட்டாங்களோ '

'மாட்டேன்னு இல்லை. அப்படியே பழகிப் போச்சு '

'இன்னைக்குப் போகும்போது, இந்தப் பக்கமாப் போயிட்டு, வரும்போது அப்படியே வரலாமாப்பா '

'சரி '

'என்னப்பா, உடனே சரிண்ணு சொல்லிட்டாங்க '

'நீ சொன்னா உடனே சரிதான், தினா '

'அதெப்படி, ப்பா '

இப்படியெல்லாம் கேட்டால் என்ன சொல்ல. பன்னிரெண்டு வயதில் பதின்மூன்று வயதில் எப்படி இந்தத் தலைமுறைக்கு இந்தக் கேள்வி எல்லாம் வந்துவிடுகிறது. அன்றைக்குப் பாசஞ்சர் ரயில் இரண்டு பக்கமும் தண்டவாளத்தை ஒட்டிக்கிடக்கிற தாமரைக் குளத்தை வகிர்ந்து கொண்டு போகிறது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த பையன் குதிக்கிறான்.

'அப்பா, அப்பா....தாமரைப் பூ, ப்பா '

'ரொம்ப்ப இருக்குப்பா '

'தண்ணீலதான் முளைக்குமோப்பா, நம்ம வீட்டிலே நட்டு வச்சா வளருமா ? '

'குளத்திலே எவ்வளவு தண்ணீப்பா இருக்கும் '

'என்னை முக்கி விடுமா '

'உங்களை முக்கிவிடுமா '

'தாமரைப்பூ மாத்திரம் எப்படிப்பா தண்ணியிலே முக்கமாட்டேன், கு '

உன்னை மூழ்கடிக்கிற, என்னை மூழ்கடிக்கிற தண்ணீரின் ஆழத்தில் தாமரைப்பூ மட்டும் ஏன் மூழ்கமாட்டேன் என்கிறது என்ற கேள்வியை போன தலைமுறை கேட்டிருக்குமா,

வெள்ளத்தனையது மலர் நீட்டம் என்ற குறளை மனப்பாடம் செய்திருக்கும். ஆனால் கேள்வி கேட்டிருக்காது. இந்தத் தலைமுறைக்கு மனப்பாடம் தெரியாது. கேள்விகள். கேள்விகளில் தொற்றிக் கொள்கிற இயல்பான விஞ்ஞானம். மனம் இல்லாவிட்டால் மூளை, ஏதாவது ஒன்றை மாத்திரம் வைத்துக் கொண்டுதான் காலம்தள்ள வேண்டும் போல.

போய்க்கொண்டிருக்கும்போது நான் அந்த ஒற்றைப் பன்னீர்ப்பூ மரத்தை மட்டும் பார்த்துக் கொண்டேன். அது பூக்கிற காலமில்லை. என்றாலும் ரகசியமாகத் தனக்கென்று ஒரு பூக்கூடப் பூத்திராதா அந்த மரம். பூக்கிறதைவிட உதிர்கிறபோது அழகாயிருக்கிற வகைக்கு எப்படித் தனக்கென்று வைத்துக்கொள்ளத் தோன்றும். தினகரி சற்று விலகிப்போய் அந்தப் பன்னீர் மரத்துக்கு எதிராக உள்ளடங்கி இருந்த வாசல் கேட்டில் நின்ற மனிதனிடம் போய் ஏதோ பேசிவிட்டு வந்தாள்.

'மூன்று ஆண்டென்னா இருக்கே.... மூணு டி.வி. இருக்காண்ணு கேட்டேன். ஆமாங்கிறாரு '

'அந்த வாட்ச்மேனை முன்னாலேயே தெரியுமா. பேசிட்டு வர்ரே '

'முன்னாடியே தெரிந்தால் தான் பேசணுமாப்பா '

தினகரி கேட்டதில் ஒரு பாதி உண்மையிருக்கிறது. முன்னாடித் தெரிந்தவர்கள் எதிர்ப்பட்டால் எல்லாம் பேசிக்கொண்டேவா போகிறேன் நான். தினகரிக்குப் போன வருடம் வகுப்பு எடுத்த மிஸ், போகிறபாதையில் அநேகமாகத் தன் வீட்டு நடையில்தான் நின்றுகொண்டிருப்பார்கள். ஹவுஸ் கோட்டும் கொண்டையுமாகப் பால் கவர் வாங்கிக்கொண்டு, பிரஷ் பண்ணிக்கொண்டு, அல்லது தொட்டியில் இருக்கும் நீண்ட பச்சையிலைகளையுடைய செடிக்கு ப்ளாஸ்டிக் கோப்பையில் நீர் வார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒருவருக்கொருவர் நன்றாகத் தெரியும். ஆனால் நான் சிரித்ததில்லை, பேசியதில்லை. இந்தப் பாதையின் கடைசியில் வரிசையாக இடதும் வலதும் அறிய முடியாத நீண்ட தொடராகச் சமைந்திருந்து நீலமும் மேகமும் ஆக நம்மைத் தொலைந்துபோக அழைக்கிற மலைகளே ஞாபகமாகப் போய்க் கொண்டிருக்கிற நடையின் போக்கில் யாரும் குறுக்கே வரும்படியாக நான் வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் தினகரி 'குட்மார்னிங் மேடம் ' என்று அவளே கூப்பிட்டு வணக்கம் சொன்னாள். 'அப்பாவும் நானும்வாக் போறோம் மேடம் ' என்று என் கையைப் பிடித்துக்காட்டி இணக்கமாக விடைபெற்றாள். தலையைச் சாய்த்து சிரித்து டாட்டா காட்டினாள். கூச்சமாக இருந்தது எனக்கு. ஒருவருக்கொருவரின் பிரத்யேக உலகங்களில் அத்துமீறி இந்த அதிகாலையில் நுழைந்து விட்டதுபோல இருந்தது. தினகரி உற்சாகமாக இருந்தாள். முழுச் சிறகடிப்பும் வாய்க்கப்பெற்றுப் பறந்து கொண்டிருந்தாள். நான் நடக்கிறவனாக மட்டும் நடந்து கொண்டிருந்தேன்.

அந்த லெவல் கிராஸிங், அதையடுத்த பெட்ரோல் பங்க் தாண்டினால், மலையை நோக்கி ஒற்றையடித் தடம் போட்டது போல் பாதை கிடக்கும். இதன் இன்னொரு கிளையாகப் பிரிந்துபோகிற பாதையில் இருக்கிற சந்தடி இராது இங்கு. வானும் மலையும் நீல அடையாளங்களுடன் எல்லையில் இருக்க அலைந்து அலைந்து மிதக்கிற ஒற்றைக் கட்டுமரம்போல நான் நகர்ந்துகொண்டே இருக்கலாம். காற்று ஏகமாக வீசும். பனைமர உச்சியின் ஓலைகளைச் சலசலக்க வைத்து வெள்ளைப் புள்ளியிட்ட சிறு பறவைகள் பறக்கும். இரண்டு பக்கமும் வெட்டியெடுத்த பாறைகளின் பிளக்கப்பட்ட பளீரில் மோதி மோதித் திரண்ட காற்று உறுமிக்கொண்டே மேல் வரும். சின்னஞ்சிறு ரயில்வே ஸ்டேஷனின் ஆளற்ற சிமெண்ட் பஞ்சுகள், வேப்பமரக்கன்றுகள் எத்தனைகாலம் ஆனாலும் ரயில்வே ஸ்டேஷன்

வேப்ப மரங்கள் வளர்கிற பிள்ளைகள் மாதிரியே சிறிதாகவேதான் இருக்குமோ, வளைந்து பின்னலிடுகிற இரண்டு ஜோடித் தண்டவாளங்கள், அதைத் தாண்டினால் மாந்தோப்பின் அடர்ந்த இருளில் பழுக்கிற குயிலின் கொத்துக் கொத்தான குரல், மறுபடியும் ஹோவென்று ஆதிக்கம் செலுத்துகிற பாறைகள், இயற்கையின் அனாதி காலத்தின் மேல் நாகரிகமற்று இந்த தினத்தின் முத்திரை குத்துவதுபோல மஞ்சள் நிறத்தில் ஒரு பாறையில் உரக்க எழுதப்பட்டிருக்கிற உள்ளாடை உலக விளம்பரம்.

நான் நிஜமாக மனம் ஒன்றி நடக்கிற பகுதி அதுதான். சப்தங்களைக் கேட்டுக்கொண்டே வருகையில் சட்டென்று எல்லாம் சப்தமற்றுப் போகும். ஒற்றை வண்டைப்போல சிறகடிப்பின் விம்மலுடன் தன்னுடைய பறத்தலைத் தான் கேட்டுக் கிறுகிறுக்கிற மனதின் ரீங்காரம் சமீபிக்கும். அப்படிப்பட்ட சமீபத்தில் தரை தெரியாது, கரை தெரியாது, கடல் தெரியாது, மலை தெரியாது. வெளி அற்றுப் போயிருக்கும் வெளி.

தினகரிக்கும் அது கிட்டியதோ என்னவோ. இந்தப் பிற்பகுதி முழுவதும் அவளும் பேசாமலே வந்திருப்பதை உணரமுடிந்தது. இவ்வளவு தூர நடையில் வியர்வை அரும்பத் தொடங்கியிருந்த அவளைப் பக்கத்தில் அணைத்துக்கொண்டு, மாமரத்துக் கீழ் போனேன். சின்னமரம், மரத்தின் இடுப்பில் முள் சுற்றியிருந்தது. எக்கச் சக்கமான காய்ப்பு, விளைச்சலின் முழுமையில் சாம்பல் பூத்துக் கனியத் தொடங்கின நிலையில் நிறையக் காய்கள்.

'மரத்திலேயே பழுத்திருமா அப்பா '

'ஒண்ணே ஒண்ணு பறிச்சுக் கொடுங்களேன் '

'ஒண்ணே ஒண்ணு 'ப்பா '

'ஏம்ப்பா பயப்படுதீங்க '

'ஒண்ணும் சொல்லமாட்டாங்க அப்பா '

'நீ பறிச்சுக் கொடுக்காட்ட என்னைத் தூக்கிவிடு. நான் பறிச்சுகிடுதேன் '

'ஓ...எஸ்..காவல்காரர்கிட்டே நான் பதில் சொல்லிக்கிடுதேன் '

'அதெல்லாம் இல்லை. ஒரு காய் பறித்தால் ஒண்ணும் கட்டிவச்சு உதைக்க மாட்டாங்க '

'ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பதில் வந்ததேதவிர, நான் சொன்னது எதையும் தினகரி கேட்கிற மாதிரித் தெரியவில்லை. ஆனால் முரண்டுபிடிக்கிற குரலுமில்லை. 'இதில் என்ன இவ்வளவு யோசிக்க ' என்கிறதுபோலத் தினகரியின் முகத்தில் சிரிப்பிருந்தது. தூக்கக்களை விலகிப் போயிருந்தது. இந்த விடிகாலை மாதிரி அடங்கின வெளிச்சமிருக்க இருந்தது. பள்ளிக்கூடம் திறக்கப் போகிற நாட்களில், நயினார்குளம் கொஞ்சம் கொஞ்சமாக நிறைகிற காலத்தில் எல்லாம் சொல்லி வைத்தாற்போல ஒரு குளிர்ந்த காற்றடித்து மனதை அப்படியே அள்ளிக்கொண்டு அலையுமே அதுபோன்ற ஒரு குளிர்ந்த காற்று அடித்தது. தினகரியின் சிகை, என் சிகை, வேட்டி எல்லாம் கலைந்து கலைந்து பறந்தன. அந்தக் குளிர்ச்சியைப் போலக் காற்றைப் போல, தினகரிக்காக ஒரு மாங்காய் பறிப்பதும் அந்த நேரத்தின் ஒரு

பகுதியாக அடங்கும் என்று தோன்றியது, பயம் இல்லை. முள்பந்து உறுத்தவில்லை. காவல்காரன் வரமாட்டான். வந்தாலும் சொல்லிக்கொள்ளலாம் என்று தோன்றிற்று.

தினகரி தலைக்குமேலே உயர்ந்த என் கைகளில் இருந்தாள். சூரியனைக் கைகளில் ஏந்துகிற ஒரு சித்திரம் உண்டே, அது மனதில் வந்தது. மாமரம் சலசலத்தது. 'இதைப் பறிக்கட்டுமா ப்பா ' என்று எதையோ தினகரி கேட்டது. எதையோ பறித்தது. 'உனக்கொண்ணு பறிக்கட்டுமாப்பா ' என்று கேட்டு பதிலை எதிர்பாராமலே எனக்கும் ஒன்று பறித்துப் போட்டது.

'போகலாமாப்பா ' என்று என்னிடம் கேட்கும்போது மாங்காயில் தினகரியின் முதல்கடி விழுந்திருந்தது, நான் காயின் திரட்சியில் விரல்களை உருட்டிக் கொண்டே என்னுடன் வந்த தினகரியை, அந்த வீட்டு வாட்ச்மேனிடம் பேசியதை, மேடத்திற்கு வணக்கம் சொன்னதை மாங்காயைப் பறித்துச் சந்தோஷமாகக் கடித்துக் கொண்டிருப்பதை, அந்தக் கடியின் பயமற்ற பல் பதிவை நினைத்துக் கொண்டிருந்தேன்.

மரம் சல் என்று அனைத்து இலைகளுக்குள்ளும் காற்றை அனுமதித்து லேசாக அசைத்தது. இரண்டு காய்களின் எண்ணிக்கை குறைந்ததே தெரியாமல், அணிலுக்குக் கடிக்கக் கொடுத்த சுகத்துடன் அந்தக் கிளை சற்றுக் கிறங்கித் தணிந்தது.

# கிருஷ்ணன் வைத்த வீடு

**வண்ணதாசன்**

கிருஷ்ணன் வைத்த வீடு, தனுஷ்கோடி அழகருக்கு எப்படி ஞாபகம் இருக்கிறது என்று தெரியவில்லை. இத்தனைக்கும் அவன் ஒரே ஒரு முறைதான் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறான். அதுவும் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு.

அவன் ஹாஸ்டலில் இருந்தான். நான் வீட்டிலிருந்து மூன்றாம் நம்பர் பஸ் பிடித்துக் காலேஜ்உக்குப் போய்க் கொண்டிருந்தேன்.

பாப்புலர் டாக்கீஸில் 'தாமரை நெஞ்சம் ' படம் பார்த்துவிட்டு வெளி வருகிற கூட்டத்தில், என் தோளை வந்து அவன்தான் பிடித்தான். சிகரெட் குடித்து, மிட்டாய் சாப்பிட்டிருந்த வாசனையுடன் சிரிப்பு இருந்தது.

'நீ எங்கேடாஇருக்கே ? ' என்றான்.

'எங்கள் வீடு இந்தப் பக்கம்தானே ' என்று சொல்லி அவனை வீட்டுக்கு வந்துவிட்டுப் போகுமாறு அழைத்தேன்.

தனுஷ்கோடி அழகர், தியேட்டர் முன்பு தரையில் பரப்பி வைத்துப் பாட்டுப் புத்தகம் விற்கிற மனிதரைப் பார்த்தான். வளைந்து திரும்புகிற வாய்க்காலில் தண்ணீரே தெரியாமல் பூத்துக்கிடந்த நீலநிறப்பூக்களைப் பார்த்தான். விறகுக் கடையில் விழுந்து கொண்டிருந்த

சம்மட்டி அடியிலிருந்தும் ஈரவிறகு வாசனையில் இருந்தும் என்னுடைய அழைப்புக் குறித்த முடிவை எடுத்தது போல் 'சரி, போவோம் ' என்றான். பத்தடி முன்னால் போய்க்கொண்டிருந்த விடுதி நண்பர்களிடம், தான் அப்புறம் வருவதாகக் கையைக் காட்டினான்.

பெருமாள் கோயில் தெருப்பக்கம் நின்ற தேரை நிதானமாகப் பார்த்து, அது எந்தத் திருவிழாவுக்கு ஓடும் என்று விசாரித்தான். 'எல்லா ஊர் சலூன்களுக்கும் ஒரே மாதிரிக் கதவுகள்தான் இருக்கின்றன ' என்று சொல்லிக்கொண்டே சந்திப்பிள்ளையார் முக்குவரை நடந்தான். வாடகைக்கு நிற்கிற ஒற்றை மாட்டு வண்டிகளைப் பார்த்து ஆச்சரியம் அவனுக்கு.

பக்கத்தில் நிற்கிற காந்தி சிலையைப் பற்றி, முக்கியமாக காந்தியின் கால்களைப் பற்றி சிலாகித்தான். என்னைப் போலவே அவனுக்கும் காந்திசிலைக்குப் பக்கத்தில் பழக்கடை போட்டிருப்பவர் எப்போதும் ஊதாச்சட்டைதான் போடுவாரா என்கிற சந்தேகம் வந்தது. அவன் அந்தச் சந்தேகத்தைக் கேட்டதும் தனுஷ்கோடி அழகருக்கும் எனக்கும் ரொம்ப நெருக்கம் உண்டாகிவிட்டது போலத் தோன்றியது.

இந்த நேரத்தில் அப்பா வீட்டில் இருப்பாரா என்று சந்தேகம் உண்டாயிற்று. அம்மா மட்டும் இருந்தால் கூட நல்லது. தின்பதற்கு ஏதேனும் கொடுத்துக் காபியையும் தனுஷ்கோடி அழகருக்குத் தரமுடியும் எனில் நன்றாக இருக்கும். ஒன்றுமே கொடுக்காவிட்டால் கூட எல்லாவற்றையும் கொடுத்துவிட்டது போல அம்மாவால் உபசரித்துவிடமுடியும்.

அம்மா முதலில் ஒரு டம்ளர் தண்ணீர்தான் கொண்டுவந்து கொடுப்பாள். கொடுப்பதற்கு முன் டம்ளரின் வெளிப்புறத்தில் வழிகிற சொட்டுக்களை லேசாக விரல்களால் துடைத்துவிடுவாள். அந்தத் துடைப்பிலேயே எல்லா மாயமும் நிகழ்ந்துவிடும். அம்மாவிடமிருந்து தண்ணீரை வாங்கிக் குடித்த யாரும் அம்மாவை மறந்திருக்க முடியுமா.. தெரியவில்லை.

ஆனால், தனுஷ்கோடி அழகர் அம்மாவை மறந்துவிட்டது போலத்தான் இருந்தது. இத்தனை வருடங்களுக்கு அப்புறம் என்னைப் பார்க்கிறவன் அம்மாவைப் பற்றி எதுவும் கேட்கவில்லை.

'அந்த கிருஷ்ணன் வெச்ச வீடு இப்ப இருக்கா ? ' என்று கேட்டான்.

'கிருஷ்ணன் வைத்த வீடா ? அதை நீ எப்போ பார்த்தே ? ' என்று கேட்ட என்னுடைய குரலின் ஆச்சரியம் எனக்கே விநோதமாக இருந்தது. யாருக்கும் தெரியாது என்றும் தெரியக்கூடாது என்றும் நான் என்னுடைய ரகசிய அறையில் ஒளித்து வைத்திருந்த ஒரு விஷயத்தை எடுத்த எடுப்பில் அவன் தொட்டுவிட்டது எப்படி என்று தெரியவில்லை.

எங்கள் தெருவில் கிருஷ்ணன் வைத்த வீட்டுக்குத் தனியான அடையாளமும் மரியாதையும் கூட இருந்தது.

ஒரு சுடலை மாடசாமி பீடத்தை ஆரம்பமாக வைத்து, நூல் பிடித்த மாதிரி சிறியதும் பெரியதுமாக ஐம்பது நூறு வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட காரை வீடுகளுக்கும் மட்டப்பா போட்ட வீடுகளுக்கும் மத்தியில் 'கிருஷ்ணன் வைத்த வீடு ' துண்டாகத்தான் தெரியும்.

மற்ற எல்லா வீடுகளும் தரையோடு தரையாக, தெருவும் சாக்கடையுமாக இருக்கிற முன்வாசல் நடையுடன் துவங்குகிறபோது கிருஷ்ணன் வைத்த வீடு நான்கு ஐந்து படிகளுடன்,

ஆற்றங்கரையில் வெள்ளம் வந்தால் பாதிக்கக் கூடாது என்பது போல கட்டப்பட்டிருக்கும். பத்தடிக்குக் கீழ் தெரு பள்ளத்தில் இருப்பதுபோல வீட்டின் கட்டுமானம் துவங்கும்.

நெடுநெடு என்று வரிசைக்கு இரண்டு பாக்குமரம், இரண்டு தென்னைமரம், முன் வாசலில், நட்டநடுவில், புல்லாங்குழல் வாசிக்கிற கிருஷ்ணர் பொம்மை. பொம்மையின் முதுகுக்கு அண்டை கொடுத்தது மாதிரியான குழாயின் உச்சியில் நீலமான ஒரு ரசகுண்டு. ராத்திரியில் உள்ளுக்குள் பல்பு எரியும். தெருவில் போகிறவர் வருகிறவர்கள் தற்செயலாக ஏறிட்டுப் பார்த்தால், கிருஷ்ணன் நேரடியாக நிலா வெளிச்சத்தில் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு அந்த வீட்டின் முன்னால் நிற்கிறது மாதிரி இருக்கும்.

அதற்கப்புறம் வீடு ஆரம்பிக்கும். தார்சா, பட்டாசல், இரண்டாம் கட்டு, அரங்குவீடு, அடுக்களை என்ற அமைப்பு இல்லாமல் வேறு தினுசில் இருக்கும். செங்கோட்டை என்கிறதும், திருவனந்தபுரத்தில் கரமனை என்கிறதும், இல்லையில்லை இங்கே முனைஞ்சிப்பட்டி மூலைக்கரைப்பட்டி என்கிறதுமாக அந்த வீட்டு ஆட்களின் ஊரைப் பற்றி வெவ்வேறு பேச்சும் அனுமானமும் இருந்தது.

நாகர்கோவிலில், நாகர்கோவிலைத்தாண்டி இரண்டு மூன்று இடங்களில் பெரிய பெரிய ஓட்டல்கள் வைத்திருக்கிறாதாகவும் பெண்ணினுடைய படிப்பையும் பையனுடைய படிப்பையும் உத்தேசித்து இங்கே இருப்பதாகவும் தான் சொன்னார்கள்.

இங்கே கார் நிறுத்துவதற்கு இடமில்லை என்பதால், அடுத்த முடுக்கில் ஒரு காடினாவை வாடகைக்குப் பிடித்திருப்பதும், வீட்டு வாசலில் வந்து ஏற்றிக்கொண்டுபோய், மறுபடி வீட்டு வாசலில் கொண்டுவந்து இறக்கிவிடுவதும், தவிர, அந்த வீட்டுக்காரர்கள் நடந்துபோய் எங்கள் தெருவில் யாரும் பார்த்ததில்லை என்பதும் வாஸ்தவம்தான்.

பையனுக்கு படிப்பு வரவில்லை. எட்டாவது வகுப்பிலேயே இரண்டு தடவை உட்கார்ந்துவிட்டான் என்றும், ஆனால், அவனுடைய அக்கா மகா கெட்டிக்காரி என்றும் சொன்னார்கள்.

வழக்கமாக காலேஜ் தினத்தில் பரதநாட்டியம் ஆடுகிற டாக்டர் கிருஷ்ணமூர்த்தியின் மகளைப் போன இடம் தெரியாமல் ஆக்கிவிட்டது கிருஷ்ணன் வைத்த வீட்டுப் பெண்ணினுடைய நடனம் என்று குனிந்த தலை நிமிராமல் ஐந்தாம் நம்பர் பஸ் ஏறி கல்லூரிக்குப் போய்விட்டு வருகிற காந்திமதி அக்கா சொல்கிறாள்.

கிருஷ்ணன் வைத்த வீட்டுப் பெண்களைப் பார்த்தது என்பது ரொம்பத் தற்செயலாகவும் அவ்வளவு சந்தோஷப்பட்டுக் கொள்ள முடியாத ஒரு நேரத்திலும் எனக்கு வாய்த்தது.

பிச்சம்மாள் ஆச்சி செத்துப் போயிருந்தாள். ஆயுள் பூராவும் வீடு வீடாகத் தோசைக்கு அரைத்துக் கொண்டும் முறுக்கு சுற்றிக் கொடுத்துக் கொண்டும் இது எல்லாம் போதாமல் எப்போதும் இரண்டு மூன்று பூனைக்குட்டிகள் வளர்த்துக் கொண்டும் ஒருத்தி இருக்க முடியும் என்றால், அது பிச்சம்மா அக்கா என்கிற பிச்சம்மா ஆட்சிதான். தெருவில் இருக்கிற எல்லோருமாகச் சேர்ந்துதான் அவளைத் 'தூக்கிப் போடவேண்டிய ' நிலைமை. பாடைக்குக் கிடுகு பின்னுவதற்குத் தென்னை ஓலலித் தேவைப்படும் இல்லை... அதற்காகத்தான் நான் கிருஷ்ணன் வைத்த வீட்டுப் படியேறிப் போனேன்.

எனக்கும் தென்னங்கிடுகுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் இதன் பொருட்டுஎன்னை இங்கே அனுப்பின குரல் எது என்று இப்போது ஞாபகமில்லை. வழக்கம் போல இது போன்ற நல்லது -- கெட்டதுகளில் முன்னால் நின்று உத்தரவு இடுகிற மீசைப் பெரியப்பா குரலோ, ராமையாப்பிள்ளை குரலோ அல்ல அது. அசரீரி மாதிரி அது எங்கிருந்தோ கேட்க, எங்கிருந்தோ நானும் வந்திருக்க வேண்டும் என்று படுகிறது.

நான் சத்தம் கொடுத்து ரொம்ப நேரம் கழித்து, 'சசி... வாசலில் யாருன்னு பாரு ' என்று குரல் கேட்டது. கதவுகள் திறந்து மூடுகிற நுட்பமான நேரம். கனகாம்பர கலரில் ஒரு தாவணியும் கையில் புத்தகமுமாக அந்தப் பெண் வந்தது. நான் விவரம் சொல்லி, தென்னங்கீற்று வெட்டிக் கொள்ள அனுமதி கேட்டேன்.

'யாரு சசி ? ' மறுபடியும் உள்ளிருந்து குரல் வந்தது.

'வர்றேம்மா ' என்று உள்ளே நகர்ந்த பிறகும் அந்த இடத்தில் கனகாம்பர கலர் இருந்தது. சசி என்ற பெயரின் உச்சரிப்புக் காற்றில் அலைந்தது.

சசியும் சசியுடைய அம்மாவும் வந்தார்கள்.

சசியின் கையில் அரிவாள் இருந்தது. இந்தப் பக்கத்து அரிவாள் மாதிரி இல்லை. அது கூட வேறு மாதிரி இருந்தது.

'வெட்டிக்கொள் ' ' என்று இரண்டு பேருமே சொல்லவில்லை. சசி அரிவாளைத் தரையில் குனிந்து வைக்கும்போது ஜடை முன்னால் விழுந்து, கிட்டத்தட்ட தரையைத் தொட்டது. மஞ்சள் ரிப்பன் பட்டுப் பூச்சி மாதிரி பறந்தது.

நான் பக்கத்து வீட்டு காம்பௌண்ட் சுவரில் ஏறி, வேப்பமரக் கிளையில் உட்கார்ந்து கைக்கு எட்டின தென்னங்கீற்றை இழுத்துப் பிடித்து வெட்டினேன். குறுக்கே போன மின்சார ஒயரில் சற்றுத் தொங்கி ஆடி, தென்னங்கீற்று 'சலார் ' என்று கீழே விழுந்தது.

சசியும் சசியின் அம்மாவும் வாசலிலேயே நின்றார்கள்.

தூரத்திலிருந்து அவர்களை பார்க்கமுடிந்தது போல, பக்கத்தில் போனதும் பார்க்க முடியவில்லை. அரிவாளைக் கீழே வைத்தேன். 'தாங்க்ஸ் ' என்று சொன்னது யார் காதிலும் விழுந்திருக்க முடியாது.

வெளியே கேட்காமல் சொன்ன அந்தச் சொல், பனிக்கட்டி போல உருகி ஓடி சசியின் கால் பெருவிரலைத் தொடுமுன் ஆவியாகிக் கொண்டிருந்தது.

வெளியே நடையிறங்கும்போதுதான், கிருஷ்ணன் வைத்த வீட்டின் கிருஷ்ணன் பொம்மையை இவ்வளவு நேரமும் சரியாகக் கூட பார்க்கவே இல்லை என்று புரிந்தது. இத்தனைக்கும் அது வாசல் நடுவில்தான் இருந்தது. அதைச் சுற்றித்தான் நான் போனது, கேட்டது, வந்தது.. எல்லாம்.

மறுபடியும் தனுஷ்கோடி அழகர் கேட்டான்.

'நான் பார்த்தது இருக்கட்டும். கிருஷ்ணன் வெச்ச வீடு இப்போ இருக்கா ? அதைச் சொல்லு. '

எனக்கு ஒரு கேள்வி - பதில் போல அவ்வளவு திட்டவட்டமாக அதைச் சொல்ல முடியும் என்று தெரியவில்லை. வாசல் முழுவதும் புல் பூண்டுகள் மண்டி, ஒரு மழைக்காலத்துக்கு பிந்திய வெயில் நாளில், தட்டான் பூச்சிகள் பறக்கிற கோலத்தில், வாசிக்கின்ற புல்லாங்குழல் முற்றிலும் உடைபட்டு, மூக்கு நுனி மூளியாகி, வலது முழங்கைப் பக்கம் துருபிடித்த கம்பி தெரிய கிருஷ்ணன் அந்த வீட்டில் கால்மாற்றி நிற்பதைப் பற்றி தனுஷ்கோடி அழகரிடம் சொல்ல வேண்டுமா என்ற தயக்கம் வந்தது. உண்மையின் கரிக்கோடுகளால், முப்பது வருஷத்துக்கு முந்திய ஞாபகத்தின் சுவர்களில், தனுஷ்கோடி அழகர் வரைந்து வைத்திருக்கிற, கிருஷ்ணன் வைத்த வீடு பற்றிய சித்திரங்களை நான் கோரப்படுத்த வேண்டுமா ?

நான் இரண்டாவது முறை அந்த வீட்டைப் பார்த்த கோரத்தை விடவா பெரிய கோரம் இருக்கப் போகிறது. நான் மட்டுமா பார்த்தேன் ? தெருவே அல்லவா கூடிப் பார்த்தது. இந்த வீட்டில், பக்கத்து வீட்டில், வேப்பமரக்கிளையில், நகைக்கடைச் செட்டியார் வீட்டுச் சுவரில் என்று எங்கேயெல்லாம் ஆட்கள் இருந்தார்கள். மோர் விற்பதற்கு வருகிற சுப்பையா கோனாருடைய வீட்டுக்காரிகூட பிரப்பங்கூடையும் கறுத்த மோர்ப்பானையும் தலையில் இருக்க, பச்சைக் குத்தின கையால் சேலையை வாயில் வைத்துப் புதைத்துக் கொண்டு நின்றாள். ஓர் இடத்தில் ஐந்து நிமிடம் நிற்கிறவளே இல்லை அவள் '

போலீஸ்காரர்கள் 'தள்ளிப்போ, தள்ளிப்போ ' என்று மச்சுப்படியில் இருந்து சத்தம் போட்டுக் கொண்டே இறங்குகிறார்கள். முனிசிபல் ஆஸ்பத்திரியில் இருந்து கூட்டிக் கொண்டு வரப்பட்டவர்கள் தலைப்பாகையை அவிழ்த்து மூக்கை மறைத்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஜமுக்காளத்தின் நான்கு மூலைகளையும் நான்கு பேர்களாகப் பிடித்தபடி ஒவ்வொரு உடம்பாகக் கீழே கொண்டுவந்து வாசலில் வைக்கிறார்கள்.

முதலில் அந்த வீட்டுப் பையன் உடம்பு. அடுத்து அநேகம் பேர் பார்த்தே இராத அந்த வீட்டுக்காரர் உடம்பு.

தூக்கிக்கொண்டு வந்த தோட்டிகளில் ஒருத்தர், 'இப்படிப் பண்ணிட்டாங்களே முதலாளி ' என்று கீழே உட்கார்ந்து அழுதார். தோள்பட்டையில் கையைக் கொடுத்துத் தூக்கி ஒரு போலீஸ்காரர் அவரை விரட்டினார்.

மறுபடியும் மேலே ஏறினார்கள்.

அந்த அம்மாவைக் கொண்டுவரும்போது நிறையச் சிரமம் இருந்தது. பிடித்துக்கொண்டு வந்த போர்வை, கனம் தாங்காமல் சரிந்துவிடுவது போலவும், படிகளில் தாங்கித் தாங்கி இறங்கித் திசைமாற்றிக் கொண்டு வருவதில் தள்ளாட்டமும் இருந்தது. அதிகம் நாற்றம் அடித்தது என்று கூடச் சொல்லவேண்டும்.

ஏற்கனவே நிறையப் பேர் அழ ஆரம்பித்திருந்தார்கள்.

கடைசியாக சசியை இறக்கும்போது எல்லோரும் வாய்விட்டுச் சத்தம் போட்டு அழுதார்கள். இன்னது என்று சொல்லமுடியாத வகையில் புலம்பல் இருந்தது.

'அட, பாதகத்தி ' ' என்ற குரல் சுழன்று சுழன்று வருகிற ஒரு கூர்மையான கத்தி போல கிருஷ்ணன் வைத்த வீட்டின் மேல் விழுந்து இதுவரை மூடிக்கொண்டிருந்த எல்லாத்திரைகளையும் கிழித்து எறிந்துவிட்டு அப்புறம் போனது.

பழைய சேலைகளாலும், அழுக்கு வேட்டிகளாலும் மூடப்பட்டு வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்த நான்கு உடல்களிலும், கிருஷ்ணன் சிலைக்கு மிக நெருக்கமாக சசியின் உடல் இருந்தது. கொலுசும் பாதமும் தெரிந்த இடது காலை, காக்கிச் சட்டையுடன் இருந்த முனிசிபல் ஆஸ்பத்திரி சிப்பந்தி மூடிவிட்டார்.

எங்கிருந்து வந்தது என்று தெரியாமல், வேப்பமரத்தின் அடர்த்திக்குள் ஒளிந்திருந்த பளீர் என்ற வெயில் வாசல் முழுவதையும் கொஞ்சம் நேரம் பொசுக்கிற்று. பாக்கு மரத்திலிருந்து பொத்தென்று விழுந்த அணில், பரபரவென்று குறுக்காக ஓடியது. சசியின் உடம்பின் மேல் குதித்து ஓடியதா, தாண்டிப் போனதா என்று அனுமானிக்க முடியவில்லை.

முதுகில் விழுந்திருந்த பழுப்புக் கோடுகளில் சசியைச் சிறகுகளாகச் செருகிக் கொண்டு எந்தப் பக்கம் பறந்தது அது என்று தெரியாமல் போனபோது, வெயில் முற்றிலும் மங்கி, வேப்பமரம் பந்து பந்தாக நிழல்களை எறிந்தது.

வேம்பின் மஞ்சள் இலைகள் பறந்து உதிர்ந்து, கிருஷ்ணன் பொம்மையில் அப்பி, மறுபடி பறக்கும்போது, கிருஷ்ணனின் தலை உச்சியில் இருந்த மயில்பீலிகளையும் பிய்த்துக் கொண்டு போயிற்று.

மேலும் சில பழுத்த இலைகள் ஓலைப் பாய்களைப் போலச் சுருண்டு விரிந்து, அந்த நான்கு பேரையும் அள்ளித் தெருவில் நிற்கிற சக்கடா வண்டியில் ஏற்றப்போவது போல ஆவேசத்துடன் தரையில் நகர்ந்தன.

நான் எங்கே நின்றேன் என்று சொல்ல முடியவில்லை. எல்லா இடங்களிலும், எல்லோருடனும் நின்றிருக்க வேண்டும்.

'ஒண்ணு போலப் போயிரலாம். ஒண்ணு போல வரமுடியுமா உனக்கு ? ' -- ஐஸ் விற்கிற முருகனுடைய அப்பா என்னிடம் கேட்டார். இதைக் கேட்கும்போதும் மூச்சுமுட்டுகிற அளவு அவர் குடித்திருந்தார்.

என்னிடம் மட்டும் இதையெல்லாம் ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. 'வரமுடியாது ' என்ற பதிலையே 'வர முடியுமா ? ' என்ற கேள்வியாகக் கேட்டால் என்ன சொல்ல முடியும்.

நிறைய பேர் பதில் சொல்வதைத்தான் கேள்வியாகக் கேட்பார்கள் போலிருக்கிறது.

'கிருஷ்ணன் வெச்ச வீடு இப்போ இருக்கா ? ' என்று தனுஷ்கோடி அழகர் என்னிடம் கேட்டதுகூட அப்படித்தான் இருக்க வேண்டும்.

# ஒட்டுதல்

**வண்ணதாசன்**

குளியலறையை விட்டு வெளியே மஹேஸ்வரி வரும்போது செஞ்சு லட்சுமியும் அவள் கணவரும் ஹாலில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

அம்மா குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். செஞ்சுதான் பக்கத்தில் நின்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள். 'எங்கே போகப் போகிறாள். ஏற்கனவே பார்த்த ஆபீஸ். ஏற்கனவே பார்த்த வேலை ' என்று என்னென்னவோ சொல்வது கேட்டது.

துவைத்த உடைகளையும் வாளியையும் வைத்த கையோடு எப்போதும்போல அடுக்களையின் ஒரு பகுதியாக இருக்கிற பூஜை அலமாரியின் பக்கம் வந்து நின்றாள்.

எல்லாச் சாமி படங்களையும்விட ராம்பிரசாத்தின் படம் பெரியதாக இருந்தது. இன்றைக்கு மாலை ஒன்றும் போட்டிருக்கவில்லை. ஆனால் கண்ணாடிக்கு மேல் வைத்திருந்த குங்குமப் பொட்டு அளவுக்கு அதிகமாக நெற்றியை மறைத்துக் கொண்டிருந்தது.

ஒகனேக்கல் போயிருக்கும்போது எடுத்த படம். எதிர் வெயிலுக்கு முகம் சற்றுச் சுருங்கியிருந்தது. முழுப்படத்தில் இடதுபக்கம் மஹேஸ்வரியும் செஞ்சுலட்சுமியும் நிற்பார்கள். வலதுபக்கம் செஞ்சுலட்சுமியின் கணவர் இருப்பார். எப்போதும் புகைப்படம் க்ளிக் செய்யப் போகிற சரியான வினாடியில் எதையாவது சொல்லி எல்லோரையும் சிரிக்க வைத்துவிடுகிறவர் செஞ்சுவின் கணவர்தான். சிரிக்கிற முகங்களே அழகு. புகைப்படங்களில் சிரிக்கிற முகங்கள் அதைவிட அழகுதானே.

ராம்பிரசாத் முகத்தைச் சுருக்கிக் கொண்டிருப்பதற்கு வெயில் மட்டும் காரணமில்லை. அவன் கால்களையொட்டி, 'அப்பாவோட நிப்பேன் ' என்று சொல்லிக் கொண்டு சங்கீதா, கடைசி நேரத்தில் கையிலிருந்து நழுவின பலூனைப் பிடிக்க ஓடிப்போய் விட்டதும்தான்.

சங்கீதாவை நினைக்கும்போது மஹேஸ்வரிக்குத் திகைப்பாக இருந்தது. வெறும் ஐந்து வயது. இன்னும் எத்தனை வருடம் அம்மா துணைக்கிருப்பாள். இன்னும் எத்தனை வருடம் இப்படி வேலைக்குப் போய்க் கொண்டிருப்பேன். இன்னும் எத்தனை வருடத்தில் சங்கீதா படித்து ஆளாவாள் ?

மஹேஸ்வரிக்கு விளக்கு ஏற்ற வேண்டும் என்று தோன்றவில்லை. வெறுமனே கைகளைக் கூப்பினாளே தவிர, கும்பிடுகிற மனநிலை இல்லை. என்னசொல்லிக் கும்பிடுவது ? என்ன வேண்டிக் கொள்வது ? கும்பிட்டதெல்லாம் போதாதா என்று சண்டை போடவும் தோன்றவில்லை. துடைத்து வைத்ததுபோல் நின்றாள். உதடு கடித்து அழுதாள். இந்த ஒன்றரை மாதம் அழுதாலும் கூட, இன்னும் அதை நிறுத்த முடியவில்லை.

அம்மாவும் அழுதுகொண்டேதான் உள்ளே வந்தாள்.

'செஞ்சுவும், அவள் வீட்டுக்காரரும் வந்திருக்காங்க ' என்றாள்.

'நீ போய்ப் பேசிக்கிட்டு இரு. நான் காப்பி போட்டு எடுத்துகிட்டு வாரேன் ' என்று மஹேஸ்வரியிடம் சொல்லும்போது கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

எல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்பே தீர்மானித்து வைக்கப்பட்டதுதான். அலுவலகத்தில் முதல் வாரம் தாண்டி விட்டதால் வேலை சற்றுக் குறைவாக இருக்கும். சனிக்கிழமை என்றால் போய்விட்டு, அரைநாள் வேலையோடு வீட்டுக்குத் திரும்பிவிடலாம். எலெக்ட்ரிக் ட்ரெயினில் போவது இன்னும் கொஞ்ச காலத்துக்குக் கஷ்டம். ராம்பிரசாத் தன்னுடைய பைக்கில் ஏற்றிக் கொண்டு வந்து ஸ்டேஷனில் விட்டது ஞாபகம் வரும்.

இன்றைக்கு செஞ்சுவும் மஹேஸ்வரியும் ஆட்டோவில் போவார்கள். தேவைப்பட்டால் இன்னும் சில தினங்களுக்கு அப்படித்தான் போக வேண்டும்.

ஆட்டோ இரண்டு பக்கமும் மழைத்தண்ணீரைச் சுருட்டி எறிந்து கொண்டு விரையும்போது ராம்பிரசாத் ஞாபகம் வரும் ராம்பிரசாத்துக்கு மழை பிடிக்கும். ஒரு முறை சினிமாவுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது மழை வந்துவிட்டது. அவர்கள் சினிமாவுக்குப் போகவில்லை. வீட்டுக்கும் திரும்பவில்லை.

மவுண்ட்ரோடில் ஆரம்பித்து கடற்கரைச் சாலை வரை, நேர்கோடு போட்டது போல் மழையிலேயே பைக்கில் போய்த் திரும்பினார்கள். மஹேஸ்வரிக்குக் கடலில் மழை இறங்குவது பிடித்திருந்தது.

இரும்பு அலமாரி கதவைத் திறக்கும்போதே கத்தியது.

என்ன புடவை உடுத்துவது என்று முடிவுக்கு வர முடியவில்லை.

மேல்தட்டில் ராம்பிரசாத் உடைகள். அடுத்த இரண்டு தட்டுக்கள் மஹேஸ்வரிக்கு. கீழ்த்தட்டு சங்கீதாக் குட்டிக்கு. மஹேஸ்வரி மேல்தட்டைப் பார்த்தாள். கடைசியாக அவன் அணிந்திருந்தது நீல முழுக்கைச் சட்டை. நசுங்கின மோட்டார் சைக்கிளுக்கும் பஸ்ஸிற்கும் மத்தியில் ராம்பிரசாத் கிடந்தது தூங்குவது போலத்தான் இருந்ததாம். பார்த்தவர்கள் சொன்னார்கள்.

இனிமேல் மஹேஸ்வரி தூங்க முடியாது. பாதித் தூக்கத்தில் எழுந்திருக்கும்போது தலையணையைப் பிடித்துக் கொண்டு ராம்பிரசாத் தூங்குவதைப் பார்க்க முடியாது. சங்கீதா மட்டும்தான் படுத்திருப்பாள்.

'புறப்படவில்லையா ? ' - செஞ்சு லட்சுமியின் குரல் கேட்டது.

மஹேஸ்வரியின் இரண்டு கைகளையும் பின்பக்கமிருந்து பிடித்து இழுத்து, 'சற்று நகர்ந்துகொள் ' என்பது போல் அலமாரிப் பக்கம் வந்தாள். நூலகங்களில் புத்தக முதுகைப் பார்த்து விரல்களால் தள்ளிக்கொண்டே வருவோமே அதுபோலப் புடவை அடுக்கைத் தள்ளிக் கொண்டிருந்தாள். ஒரு புடவையை உருவி எடுத்து மஹேஸ்வரியின் தோளில் போட்டுவிட்டு, 'வெளியே இருக்கிறேன், வா ' என்று செஞ்சுலட்சுமி நகர்ந்து போனாள்.

செஞ்சுவால் உடனுக்குடன் தீர்மானித்துவிட முடிகிறது.

'இத்தனை நாள் விடுமுறையில் இரு. தேவைப்படுகிறதா, மேலும் இத்தனை நாள் போது. இன்னதேதியில் அலுவலகம் வருகிறாய். அம்மா உன்னுடன் இருக்கட்டும் என அண்ணனுக்கு எழுது. சங்கீதா பள்ளிக்கூடத்தை அடுத்த வருடம் மாற்று. சிறிதாக ஒரு வாஷிங் மெஷின்

வாங்கு. பொறு. இரண்டு பேரும் வாகனம் ஓட்டப் பழகிக் கொள்வோம். வண்டி வாங்க முடிகிறதா பார்க்கலாம் ' - எல்லாம் செஞ்சுலட்சுமியின் யோசனை. அவளுடைய தீர்மானம்.

புடவைத் தலைப்பை சரிசெய்து கொண்டபோது கண்ணாடி பார்க்கலாமா என்று தோன்றியது. 'கண்ணாடி பார் ' என்று மஹேஸ்வரி தீர்மானித்தாள். 'கண்ணாடி என்பது பார்த்துக் கொள்ளத்தானே ' என்று சிலும்பல்களைப் படியவைக்கிற மாதிரித் தலையின் இரண்டு புறமும் சீப்பால் வருடி விட்டாள்.

ராம்பிரசாத் எப்போதும் உபயோகிக்கிற சீப்பு கண்ணாடி முன் இன்னும் இருந்தது.

'தேன் கலர்ச் சீப்பு இருக்கா ? ' என்று கல்யாணம் ஆன சமயம் ராம்பிரசாத் கடையில் கேட்டது ஞாபகம் வந்தது. யோசித்துப் பார்க்கும்போது ருசிமட்டும் அல்ல, தேனின் நிறமும் அழகாக இருப்பது மாதிரித்தான் பட்டது. பாட்டிலில் இருந்து மடிந்து மடிந்து இறங்குகிற தேனை ராம்பிரசாத்தும் சங்கீதாவும் குழிந்த உள்ளங்கையில் ஏந்துகிறார்கள். மஹேஸ்வரி மட்டும் தேக்கரண்டியில் எடுத்து அண்ணாந்து வாயில் விட்டுக் கொள்கிறாள். கம்பி மாதிரி இனிப்பு இறங்குகிறது.

ஏதோ இப்போதுதான், இந்தக் கண்ணாடிக்கு எதிரே நின்று கொண்டு தேனை அப்படிக் கரண்டியால் வாயில் ஊற்றுகிற மாதிரி அண்ணாந்து பார்த்தாள்.

எல்லாம் சரி. தலைவாரி ஆகிவிட்டது. வழக்கமாகப் போடுகிற காதுத் தோட்டிற்குப் பதிலாக, சிறியதாக வேறு ஒன்று போட்டாயிற்று. துணை சங்கிலியாக எப்போதும் கழுத்தில் இருக்கிற பொடிச் சங்கிலியைப் போட்டுக்கொள். கழற்ற வேண்டாம் என்று பதினாறாம் நாளே அம்மா சொல்லிவிட்டாள்.

பொட்டுத்தான் வைக்கவில்லை. வைத்துக் கொள்ளலாமா வேண்டாமா ? மஹேஸ்வரிக்கு மறுபடி அழுகை வந்தது. இன்னும் எத்தனை தடவை அலுவலகத்தில் இன்று அழுகை இருக்கிறதோ ?

கைப்பையை எடுத்துக் கொள்ளவில்லை. அலுவலக மேஜை சாவியை ஏற்கனவே கொடுத்து அனுப்பியாயிற்று. சீசன் டிக்கெட் தேவையில்லை. ஒவ்வொன்றாக வரிசையாக யோசித்துக் கொண்டே இன்னொரு தடவை கண்ணாடி பார்த்தாள். இன்னொரு தடவை பொட்டில்லாத நெற்றி மட்டும் தெரிந்தது. முகமே இல்லாமல் நெற்றி மட்டுமா கண்ணாடியில் தெரியும் ? எதைப் பார்க்க நினைக்கிறோமோ அதை மட்டுமா கண்ணாடி காட்டும் ? அல்லது பார்க்கவேண்டாம் என்று நினைக்கிறதையா ?

'சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினால் சரியாக இருக்கும் ' அம்மாகுரல் கொடுத்தாள்.

'வேண்டாம் 'மா ' என்று மஹேஸ்வரி சொல்லும்போது செஞ்சுலட்சுமியின் கணவர் எழுந்திருந்து வந்து, 'உங்ககூட சாப்பிடணும்னே செஞ்சு சாப்பிடாமல் வந்திருக்கிறாள். அவளைப் பட்டினி போட்டுடாதீங்க ' என்று மஹேஸ்வரியிடம் சொல்லிவிட்டு 'அம்மா, செஞ்சுவுக்கும் சேர்த்துத்தானே டிபன் ' என்று அம்மாவைப் பார்த்து சிரித்தார். இந்தச் சிரிப்பு மஹேஸ்வரிக்கு வேண்டியதிருந்தது. மஹேஸ்வரியின் அம்மாவுக்கும் வேண்டியதிருந்தது.

கிழிக்கும்போது சன்னமாக மிருதுவாகச் சரசரவென்று தட்டுப்படுகிற தினசரிக் காலெண்டர் தாள் மாதிரி, இந்த சிரிப்பு இந்தக் குரல் பழசை எல்லாம் கிழித்து அப்புறப்படுத்துகிற மாதிரி இருந்தது.

இரண்டு தட்டுகளை எடுத்துக் கொண்டு செஞ்சுலட்சுமி வந்து மஹேஸ்வரியின் கைகளைப் பிடித்துச் சாப்பாட்டு மேஜை முன் அமர்த்தினாள். அவளும் அமர்ந்தாள்.

சாப்பிட்ட கைகளைக் கழுவி விட்டு வரும்போது அம்மா சொன்னாள்-

'சாமியைக் கும்பிட்டுவிட்டு, நெற்றிக்கு வச்சுக்கோ '

அம்மா பூடகமாகச் சொல்வது போல இருந்தது. திருநீறு வைத்துக் கொள்ளச் சொல்கிறாளா ? பொட்டு வைத்துக் கொள்ளச் சொல்கிறாளா ? நீ எதை நினைக்கிறாயோ அதை வைத்துக் கொள் என்று மஹேஸ்வரியின் முடிவுக்கு விட்டு விடுகிறாளோ தெரியவில்லை.

மஹேஸ்வரி சாமி கும்பிட்டாள். ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. அப்படியே நின்றாள். செஞ்சுலட்சுமி வந்து கையைப் பிடித்து மஹேஸ்வரியை அப்புறப்படுத்தினாள். அடுக்களையில் இருந்து ஹால் வெகுதூரத்தில் இருப்பது போல இருந்தது. வாசல் அதைவிடத் தொலைவு என மஹேஸ்வரிக்குத் தோன்றிற்று.

அம்மாவிடம் எதுவும் பேச முடியவில்லை.

'இன்றைக்கு ஆபீஸிற்கு வரவில்லை ' என்று செஞ்சுவிடம் சொல்லிவிடலாமா என்று மஹேஸ்வரி தயங்கியபோது, 'ஆட்டோ கொண்டு வந்துவிட்டேன் ' என்று செஞ்சுலட்சுமியின் கணவர் உள்ளே வந்தார். அவருடைய கைப்பை, ஹெல்மெட், பைக் சாவி எல்லாவற்றையும் குனிந்து எடுத்துக் கொண்டார்.

'நீங்க ரெண்டு பேரும் அம்மாகிட்டே சொல்லிக்கிட்டுப் புறப்படுங்க. நான் வீட்டுக்குப் போய்ப் பிள்ளைகளைப் பார்த்துக்கிறேன். சங்கீதா அவங்ககூட விளையாடிக்கிட்டு இருப்பா. கவலைப்படாதிங்க ' - அவர் சிரித்தார். மறுபடியும் அந்தச் சிரிப்பு இந்த அறையை நிரப்புவது போலிருந்தது.

ஒருவரை ஒருவர் நகர்த்திக் கொண்டது போல எல்லோரும் வாசலுக்கு வந்தார்கள். இன்றைக்குத்தான் புதிதாக வருவது மாதிரிப்பட்டது.

மஹேஸ்வரியின் அம்மா மஹேஸ்வரியின் கையைப் பிடித்தார்கள். தலையைப் பின்பக்கமாக வருடிவிட்டார்கள். செஞ்சுலட்சுமியின் தோளின் மேலும் லேசாக கை வைத்தார்கள். பேசவில்லை. ஆனால் மஹேஸ்வரியைச் செஞ்சுலட்சுமியிடம் ஒப்படைத்தது மாதிரி இருந்தது.

'ஏறிக்கிடுங்க ' செஞ்சுலட்சுமியின் கணவர் சொன்னார்.

மஹேஸ்வரி முதலில் ஏறினாள். கைப்பையின் பொத்தானைத் திறந்து கொண்டே செஞ்சுலட்சுமி ஏறி உட்கார்ந்தாள்.

'என்ன தேடுதே ? ' மஹேஸ்வரி கேட்டாள். ஒன்றும் சொல்லாமல் செஞ்சுலட்சுமி, இரண்டு விரல்களால் பையைத் துளாவினாள். வரிசையாக ஒட்டுப்பொட்டுக்கள் அடங்கிய பட்டை ஒன்றை வெளியில் எடுத்தாள். ஏற்கனவே ஒன்றிரண்டு பிய்த்து எடுக்கப்பட்டிருந்தன. மீதிப் பொட்டுக்கள் வரிசையாக இருந்தன. அரக்கு நிறப் பொட்டுக்கள்.

ஒட்டுப் பொட்டுக்களின் வரிசையில் மேல்பக்கம் இருந்த ஒரு பொட்டை நுனி நகத்தால் உரித்து எடுத்தாள். மஹேஸ்வரியின் நாடியை இறுகப்பிடித்துக் கொண்டு நெற்றியில் வைத்தாள். குபீர் என்று அழுத மஹேஸ்வரியைத் தோளில் சேர்த்து அழுத்திக் கொண்டாள்.

'போகலாம்ப்பா ' என்று சொன்னாள்.

ஆட்டோ புறப்பட்டதுபோது மஹேஸ்வரி செஞ்சுலட்சுமியின் தோளில் நன்றாகச் சாய்ந்துக் கொண்டிருந்தாள். செஞ்சுலட்சுமி கை அசைத்தாள். பதிலுக்குக் கை அசைக்கிறபோது, மஹேஸ்வரியின் அம்மாவைவிடச் செஞ்சுலட்சுமியின் கணவர்தான் அதிகம் அழுது கொண்டிருந்தார்.

# பேரன்

**அ. எக்பர்ட் சச்சிதானந்தம்**

பஸ் நம்பர் 27, எத்தனை விட்டாலும் கூட்டம் குறையாதுபோல. நல்லவேளை உட்கார இடம் கெடைச்சது. நெரிசல்லருந்து தப்பிச்சேன். இன்னும் ஒரு ஸ்டாப்.. விஜயா அப்பாவும் வீட்ல இருக்கணும். ஆயிற்று இந்த டிசம்பர் எட்டோடு நான்கு வருஷம் முடியுது விஜயா இறந்துபோய். நினைத்துப் பார்க்கையில் இப்போதும் சங்கடமாத்தான் இருக்கு. மனைவியால் கூட புரிஞ்சிக்க முடியல. 'ஜெகதீசன் சொன்னாருன்றதுக்காக நா சொல்லல. விஜயா வீட்ல நீங்க சொன்னத வெச்சித்தா ஜெகதீசனுக்கு பொண்ண குடுத்தாங்க. ஆனா அவ சூசைட் பண்ணிக்குவாள்னு யார் எதிர்பார்த்தது ? நாம அதுக்கு என்ன செய்ய முடியும் ? என்னவோ அதுக்கு நீங்கதா பொறுப்புன்ற மாதிரி இல்ல விஜயா வீட்டுக்குப் போகமாட்டேன்றீங்க. மதுரைக்கு எத்தனை தடவ வாரோம். ஆரப்பாளையம் என்ன நூறு மைல் தொலைவிலேயா இருக்கு ? போங்க, போயி அவ அம்மா, அப்பாவ பார்த்துட்டு வாங்க. '

'க்ராஸ் ரோடு எறங்குங்க... வெரசா வாங்க சார். '

கூட்டத்துல எங்கிட்டு வெரசா வாரது. அப்பாடா, விடுதலை கெடச்ச மாதிரி இருக்கு. நாலம்பதுக்குக் கூட எரிக்கிற வெயில். பரமேஸ்வரியில் இங்கிலீஷ் படம் ஓட்றதே இல்லையா ?

செங்கல்பட்டு புது பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறியிருக்கக் கூடாது போன வாரம். நத்தத்திலேயே ஏறியிருக்கணும். இல்லை, செங்கல்பட்டுல பார்க்க முடியலைனா சத்திரம் வந்திருப்பான். விஜயா சாவுக்குப் பிறகு ஜான் ப்ரேயர் மீட்டிங்ல மட்டுந்தான் அவனைப் பார்த்தது. இந்த மூனு வருஷத்துல இப்படி ஆயிட்டானே, சென்னி, மயிர் அடர்த்தியாய் நரைத்திருக்கு, முகத்தில் நாற்பது, அம்பது வயது முதிர்ச்சி. முப்பத்தி நாலுகூட ஆகல. கண்களில் அதே

சோகம் ததும்பி நிற்கிற பார்வை. நிறைய சுருக்கங்கள் கண்களுக்கு ரெண்டு பக்கமும் விழுந்திருக்கு புதுசாக.

'மதுரைக்குப் போறீங்களா ? '

'லீவ்ல சத்திரத்ல என்ன வேல ? போக வேண்டியதுதா சம்பளம் வாங்கிட்டு. '

'இன் தட் கேஸ் மிஸ்டர் ஏஇஎஸ், கேன் யு டு மி ய ஃபேவர் ? '

அதே போலத்தான் எதிராளியின் காலில் விழுந்து விடுகிற மாதிரியான கெஞ்சல் சிரிப்பு. எந்த வார்த்தைக்கும் ஸ்ட்ரெஸ் கொடுக்காத உயிரற்ற நேர்க்கோட்டு இங்கிலீஷ். கண்களில் சோகமும், கெஞ்சலும், யாரைத்தான் வீழ்த்திவிடாமல் இருக்கும் ?

'என்ன செய்யணும் ? '

'எங்க இன்லாஸ் வீட்டுக்குப் போய் வரணும் ஏயிஎஸ். ' காய்த்துப் போன உள்ளங்கை. இவ்வளவு குளிர்ச்சியா.. பனியில் கிடந்த இரும்புத் துண்டுதான்.

'ஐ நோ யு வில் பி எம்பராஸ்ட்... '

'அதெல்லா இல்ல. '

'எனக்கோசரம் போக வாணாம். சதீஷ்உக்காகத்தான் கேக்கறேன். போன மாசம் மாரேஜ் ஆல்பத்த எப்படியோ பார்த்திட்டான். உடனே அம்மா வேணும்னு அழ ஆரம்பிச்சிட்டாங்க. ஸ்கூல் பசங்க டாஸ் பண்ணியிருப்பாங்களானு தெரில. யுகேஜி படிக்றான். பிள்ளைக மதர்ஸ்கூட வரத பார்த்திருப்பான்... நா என்ன செய்யமுடியும் ? விஜயா அம்மா ஃபோட்டாவ பார்த்துட்டு அவுங்கெல்லாம் எங்க, என்னை ஏன் பார்க்க வரலைனு கேக்றாங்க. நா எப்படி விளக்க முடியும் ? இருதலைக் கொள்ளி எறும்புனு சொல்வாங்களே அதுதா என் நிலை. நாதாங்க அவுங்களுக்கு ஆகாம போய்ட்டேன். இந்த குழந்த பையன் என்ன பாவஞ் செஞ்சிட்டான் ? இப்படி ஒரே முட்டா முகத்தத் திருப்பிக்னு இருக்காங்களே... '

அவர்கள் மனநிலையைப் புரிஞ்சிக்காம பேசுறானா ? இவனுக்கு அவர்கள் நிலை வாய்த்திருந்தால் என்ன செய்திருப்பான் ? சாவு வீட்ல வச்சி விஜயா அப்பா சொன்னது இன்னும் கடுக்குது. 'உங்களுக்கு ஒரு தங்கச்சி இருந்து, அவள இந்த மாதிரி அயோக்கியனுக்குக் கட்டி வெய்யினா வெச்சிருவீகளா சொல்லுங்க ' நான் எப்படி இதுக்குக் காரணமாவேன்... ? இந்தத் தெரு இல்ல, இன்னும் தள்ளிப் போகணும்..

பத்து வருஷத்துக்கு முன்னால் சேட்டுக் கடையில நகை வைத்து பணத்துடன் வந்தவனை கோவிந்தன்தான் அறிமுகப்படுத்தினான். அன்றிலிருந்து எண்பத்தாறு வரை அவனிடம் என்னை ஈர்த்து வச்சிருந்தது எது ? காலேஜ் படிக்கிறப்பவே அப்பாவை இழந்து, குடும்பப் பொறுப்பு முழுதும் தன் முதுகில் ஏற்றிக் கொண்ட சோகமாத்தானிருக்கும். மூத்த தம்பி பாலிடெக்னிக் அடுத்த வருஷம் தான் முடிப்பான். கலை, அரசு ஹையர் செகன்டரியே தாண்டலே. தங்கச்சிக்கு வயசாய்ட்டே போகுது, வயசான அம்மா, இப்ப சதீஷ். 'ஜெகதீசனும், தரித்ரமும் கூடப் பொறந்தவங்கப்பா ' கோவிந்தன் பண்ற கேலிக்கு எப்படி இவனால் சிரிக்க முடியுது ?

இந்த சந்துதான். மூன்றாவது வீடு, வாசலில் எருமைக்கன்னு கட்டிக் கெடக்குது. வளர்க்கிறார்களா ? தகரக் கதவில் பச்சை பெய்ண்ட் முற்றிலும் அழிந்து விட்டிருக்கிறது.

'சார். '

பாத்திரம் கழுவும் சப்தம் உள்ளே இருந்து வருது. கூப்பிட்டது காதில் விழாது. எட்டித்தான் பார்க்கணும். நடையில் குத்த வைத்து உட்கார்ந்திருக்கிறாள் விஜயா அம்மா. 'சார் இல்லியா ? '

'ஆரது ? ' நிமிர்ந்தவள் முகத்தில் அதிர்ச்சி. மறுபடியும் ஏன் குனிகிறாள்.. திறக்க மாட்டாளா ? பாத்திரங்களை ஓரமாகத் தள்ளி வைக்கிறாள். ஈரத்திட்டுகள் சேலையில். எழுகிறாள். முந்தானையை நன்றாக இழுத்துப் போர்த்திக்கொண்டு வருகிறாள். இறுகிப்போன முகம். எந்த உணர்ச்சியையும் படிக்க முடியல. இவ்வளவு சப்தம் ஏன் கதவில் ?

'வாங்க. ' சுவரில் ஒட்டி நிற்கிறாள் எதிர்ப்புறம் பார்த்தபடி. செருப்பை இங்கேதான் கழற்ற வேண்டும். 'திருட்டு பயம் ஜாஸ்தி 'னு செருப்பை இவளே கையிலெடுத்து உள்ளே தள்ளிப்போட்டது நினைவுக்கு வந்தது...

முன்னால் தாண்டிக்கொண்டு எங்கே போறாள் ? புகையின் அடர்த்தியில் மூழ்கிய அடுப்பங்கரை. சுவரில் முறம் ஒன்று மேக மூட்டத்தில் அநாதை முகம்போல் கதவு விளிம்பில் கைபட்டு கைபட்டு தடயங்கள் குழம்பிப் போய் கறுப்பாக பளபளனு... விஜயா கைரேகைப் பிசிறுகள் இன்னும் ஒட்டியிருக்குமா.

உட்காரும் பகுதி கீழ்புறம் சாய்ந்த அதே இரும்பு மடக்கு நாற்காலி. வாசலுக்கு நேராக இழுத்துப் போடுறா.

'உக்காருங்க. '

விஜயா போட்டோ வாசலுக்கு நேரெதிர் சுவரில். அருகே குப்புறப்படுத்துச் சிரிக்கும் சதீஷ் போட்டோ. காற்று போக்குவரத்து இல்லாத அழுக்குத் துணி வீச்சத்தோடு விளக்கில் அழுது வடியும் அறை. சுவர் முழுக்க மூட்டைப்பூச்சி நசுக்கிய ரத்தக் கோடுகள். விஜயா அம்மா அடுப்பங்கரை வாசல்ல உடம்பு விளிம்பு மட்டும் தெரிய மறைந்து நிக்றா. என்ன பேசுறது...

'சார் இல்லயா ? '

'யாவாரத்துக்குப் போயிருக்காக. '

'ட்ரைவர் வேல என்னாச்சி ? '

'ரிட்டேராகி மூனு வருஷமாகுது. '

'என்ன யாவாரஞ் செய்றாரு ? '

'பழய பேப்பருக வீடுகள்ல எடுத்து கடைல போடணும். '

மண்டையைப் பிளக்கும் வெய்யிலில் தெருத் தெருவாகப் போய்.. அறுவது வயசுல.

'தங்கச்சி வெளிய போயிருக்கா ? '

'அவ பிரண்டு ஒருத்தி ஜாக்கெட்டு தெக்க குடுத்திருந்தா. தெச்சிட்டு, குத்தாற வெராட்டிபத்து போனா, இன்னுங் காணல. '

குப்பை போல பரப்பிக் கிடக்கும் துணிகள் தையல் மிஷின மறைத்திருக்கு. சிங்கர் பெயர் தெரியுது. 'ஜெகதீசன் இப்ப சுங்குவார் சத்துரத்துல இல்ல. ட்ரான்ஸ்பர் ஆகி செங்கல்பட்டு போய்ட்டாரு... ' பதிலையே காணோம். 'உங்க பேரன் சதீசு பள்ளிக்கூடத்துக்கு போறான். ' சேலை அசைவது தெரியுது.

'உங்கள நெனச்சி ஏங்குறான்னு ஜெகதீசன் சொன்னாரு. யுகேஜி படிக்றான்.. நீங்கதா அங்கிட்டு வர மாட்டேன்றீங்க.. என்னம்மா ? '

விசும்பல் சப்தம் அழுகிறாள்.. முந்தானையால் வாயை அடைத்துக் குலுங்குகிறாள். எப்படி சமாதானப்படுத்துறது.... ? விஜயா உடம்புமீது புரண்டு புரண்டு அழுத அழுகைதான் ஞாபகத்துக்கு வருது. எத்தனை வருஷமானாலும் அந்த நினைப்பைக் கொஞ்சம் கிளறினாலும், அழுகையா பீறிட்டு வரும்போல. இன்னும் நிக்கமாட்டேங்குது.

கதவைப் படார்னு திறந்துகிட்டு வரும் பையன் யாருனு தெரியல. 'பாட்டி, எங்கம்மா சீனி வாங்கியாறச் சொல்லிச்சி ' சப்தத்தைக் காணோமே....

'பாட்டி ? '

'ம். சீனியாப்பா.. செத்த இரு. ' குரல் கமறிப்போய் இருக்கு. பையன் மலங்க மலங்க முழிக்கிறான். சூழ்நிலை புரிஞ்சிருக்கும். ஏழு வயசாதானிருக்கும்.

'முக்கு கடைக்கு போயி காபி ஒன்னு வாங்கியாறியாப்பா. '

'செரி. '

'இந்தா. ' தூக்குப் போனியோட மறுபடி ஓட்டந்தான். படார்னு கதவு திறந்து மூடும் சப்தம்.

'நாங்க வரலேனு சொல்றீகளே சார். எங்க நெலமைல ஆராச்சும் வருவாகளா சொல்லுங்க. '

'நெசந்தான். ஆனா ஜெகதீசனுக்காக வேண்டாம். பேரனப் பாக்குறதுக்கு வரலாமில்லம்மா. '

'அதுசரி, புள்ளையே போயிறிச்சி. பேரம் பேத்தின்றீகளே. '

'மகள இப்படி இழந்தவங்க எவ்வளவு கஷ்டப்படுவாங்கனு தெரியாம இல்லம்மா. அதையே நெனச்சுகிட்டு இருந்தா ஒடம்புதான கெட்டுப்போகும். சதீஷ் உங்க மக வயித்து புள்ளனுஇ. '

'அவுக அப்பா அவள படிக்க வெக்கறதுக்கு அந்த காலத்துல என்ன பாடுபட்டிருப்பாக தெரியுமா ? அங்க இங்கனு அலைஞ்சி பணத்தை பொரட்டி காலேசுல சேத்தாரு. ஆறாயிரம்

ரூபா, ஒரு ரூபா ரெண்டு ரூபா இல்ல, ஆறாயிரம் ரூபாவ எவனோ ஒருத்தனுக்கு அழுதுதா எடத்தப் புடிக்க முடிஞ்சது. நம்ம குடும்பம் இருக்குற இருப்புல பாலிடெக்னிக், கீலிடெக்னிக்கெல்லாம் எதுக்குனா கேக்குறாரா ? வேல பார்த்து நாலு காசு சம்பாரிச்சாதா இந்த காலத்துல வாக்கப்பட்ட எடத்துல கடங்கிடன் இல்லாம சந்தோஷமா இருக்க முடியும்ன்டாரு. அட அதுதா அப்படி, மாப்பிள்ளை பார்த்தோமே, இங்கிட்டு எங்கனாச்சும் திருப்புவனம், செவகெங்கனு பார்த்திருக்கப்படாது. அப்பவே சொன்னாளுக இங்க உள்ளவளுக, ஏதோ ஆத்திரம் அவசரம்னு போயாறனும்னா, எப்படி. சுங்குவாருசத்துரம் எங்கிட்டோ இல்ல கெடக்குன்னாளுக... அதெல்லாம் எங்க காதுலயா ஏறப்போகுது ? இவுக அப்பா அவரு இங்கிலிபீசில மயங்கி வாய பொளந்துட்டாக. நா என்னடான்னா இவ்ளோ நாளைக்கி பிற்பாடு ஜாதகம் பொருந்திருக்கே, முகத்த பார்த்தா நல்லவரா வேற தெரியுராரேனு ஏமாந்து போய்ட்டேன். '

மறுபடி கதவு திறக்குது வேகமாக. 'இந்தாங்கபாட்டி. '

'அதுக்குள்ளாற வந்துட்ட ? நல்லா போடச் சொன்னியா ? '

'ம். விசயாத்தா ஊருலேருந்து விருந்தாளி வந்திருக்காகனு சொன்னேன். '

'உனக்கு எப்படியா தெரியும் ? '

'அம்மா சொல்லிச்சி. '

'அப்படியா, வாரப்ப பார்த்திருப்பா. இவுக அம்மா சௌந்தரா விசயா பிரண்டு. பள்ளிகூடத்துலேருந்தே ஒன்னா படிச்சவங்க. காப்பி சாப்புடுறியாடா ? '

'வேணாம். ' வேகமா ஓடுறான். 'டேய் பாபு ' அவன் எங்கே நிக்கிறது ?

'ரெண்டுபேருக்கும் ஒரே வருஷத்துலதா கல்யாணமாச்சி. இப்ப அவளுக்கு ரெண்டு பிள்ளக. சௌந்தரா அம்மா கூட ஒரு எடம் பார்த்து சொல்லிச்சி... தலையெழுத்த ஆரு மாத்த முடியும் ? ' அடுப்பங்கரைக்குள் போகிறாள்.

ஒன்றரை வயசில், விஜயா உடலுக்கருகே கையில் ஒரு மாலையை இப்படியும் அப்படியுமாக ஆட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த சதீஷ் முகம் ஞாபகத்துக்கு வருது. விட்டுச் செல்ல அவளுக்கு எப்படி மனசு வந்திருக்கும்னு தெரியவில்லை.

'குடிச்சிருங்க. ஆறிரப்போகுது.. இம்புட்டு தூரத்துல ஒரு பொண்ண நம்பள நம்பி அனுப்பி வச்சிருக்காகளே, நாமதான அவளுக்கு எல்லாம்னு ஆதரவா இருக்கணுமா இல்லையா சொல்லுங்க. '

'அது சரி '

'இவுக அப்பா என்ன கலெக்டரு வேலையா பாக்றாக. ஆயிரமாயிரமா வாங்குறதுக்கு. வாரதே சாப்பாட்டுக்கும், வட்டி கட்டறதுக்குந்தா சரியாப்போகுது. எல்லாந் தெரிஞ்சும் எதுக்கெடுத்தாலும் உடனே வாங்க அவசரம்னு தந்தி குடுத்தாரே விசயா மாப்பிள்ள, என்ன நெனச்சி செஞ்சிருப்பாரு ? '

'எப்போ குடுத்தத சொல்றீங்க ? ' கடைசியா கொடுத்த தந்தியைச் சொல்றாளா.

'உங்ககிட்ட சொல்லலையா ? அவ புருஷனோட ஒண்ணா வாழ்ந்ததே ஒன்றர வருஷந்தா இருக்கும். அதுக்குள்ள ஏழெட்டு தந்திக. நாங்க என்னவோ ஏதோனுகிட்டு ஓடினா, அங்க மாமியாரும், நாத்தனாருமா சேர்ந்துகிட்டு மருமகள பத்தி என்னென்னவோ சொல்லுவாளுக. இவள என்னடினு கேட்டா, நீங்க எதுக்கு வந்தீகம்பா, எப்படி, தந்தினு வந்தாபோகாம இருக்கமுடியுமா ? '

'ஜெகதீசன் இதபத்தி எதுவுமே என்கிட்ட சொல்லல. '

'அவரு எப்படி சார் சொல்வாரு, தாம் பக்கத்துல குத்தத்த வச்சிகிட்டு ? தம்பிக மூணு பேரு, தங்கச்சி, அம்மா, அவரு இம்புட்டு பேருக உள்ள குடும்பத்துல வேலவெட்டி எம்புட்டு கெடக்கும். துணிமணி தொவைக்கணும், மாவாட்டணும், பாத்திரம் வெளக்கணும், வீட்ட கூட்டணும், இதுல கைக்கொழந்த வேற... ஒத்த ஆளா எம்புட்டு வேலைக செய்ய முடியும் ? கூடமாட எவரும் ஒத்தாசை பண்றது கெடையாது. இதுல ஆயிரத்தெட்டு சொட்டைக வேற சொல்லுவாளுக. இதுகூட பரவால்ல. படிச்ச பொம்பளப் பிள்ளையப் போட்டு அடிக்கிறது என்ன நியாயம் சொல்லுங்க. '

'இந்த விஷயம் எங்களுக்கு.. எல்லாம் முடிஞ்சப்புறந்தாம்மா தெரிஞ்சுது. '

'புருஷங்கார அடிச்சாகூட பரவால்ல சார். இவளுக ஆரு கை வெக்றதுக்கு... ? அத்தனையும் அந்த புள்ள பொறுத்துகிட்டு இருந்திச்சி சார்... '

'நாங்க, போறப்ப எம் மிஸஸ் கிட்டகூட எதுவுமே சொல்லல. சாதாரணமாகத்தான் பேசிட்டிருக்கும். '

'அப்புராணி பிள்ள சார். ரொம்ப அப்புராணி. வாயத் தெறந்து இதுவேணும் அது வேணும்னுகூட கேக்க மாட்டா. புருஷன இறுக்கி புடிச்சி மடியில முடிபோட்டு வச்சிக்க தெரியாதவ. ஒரு தடவ என்ன தெரியுமா சொன்னா, குடும்பம்னு இருந்தா சண்ட சச்சரவுக இருக்கத்தான் செய்யும். ஆராவது ஒருத்தரு விட்டு கொடுக்கனும். அப்பதா சந்தோஷமா இருக்க முடியும். அப்டானு சொல்றா. ரத்தம் வரவரைக்கும் அடிப்பாளுக. நாம விட்டுக்கொடுக்கணுமா ? சாப்டாம கொள்ளாம கைக்கொழந்தையோட மூலைல மொடங்கி கெடக்குறததா விட்டுகொடுக்குறதுனு நெனச்சிகிட்டா சார். '

மூக்கைச் சிந்திக் கொள்கிறாள். 'ஒரு தடவ சார் தந்தி வருது விசயாவுக்கு சீரியசுனு. மாசக் கடைசில சௌந்தரத்துகிட்ட எறநூறு ரூபா வாங்கிகிட்டு பயந்துகிட்டே பொறப்பட்டுப்போனோம். திண்ணைல கொழந்தைய மடியில வெச்சுகிட்டு தலைய கூட சீவாம கொள்ளாம பெரம் பிடிச்சவ போல உக்காந்திருக்கா. என்னம்மா விசயானு கேக்கறேன் செத்த நேரத்துக்குப் பிள்ள கண்லருந்து பொலபொலனு கண்ணீர் கொட்டுது. பேச்சையே காணோம். இடுப்புல எல்லாம் வரிவரியா கன்னிபோயிருக்கு சார். ஊதாங்குழல வச்சி அடிச்சாளுகளா, வெறகு கட்டைய வெச்சி அடிச்சாளுகளானு தெரியல. உள்ள இருந்து வாராரு மருமகப்புள்ள கத்திகிட்டு, என்ன நெனச்சிகிட்டு இருக்கா உங்க மக. எங்க குடும்பம் பெரிசுதா. எங்கய்யா தவறிட்டதால எல்லாரையும் நாதா சொமக்கணும். உங்க மக என்னடான்னா தனியா போயிறலான்றா. குடும்பத்த பிரிக்கிறதுக்குதா அவளக் கட்டிகிட்டேனா - எங்கூட பொறந்தவங்க எனக்கு ரொம்ப முக்கியம். அவ தேவை இல்லைனு நெனச்சாள்னா இப்பவே

கூட்டுகிட்டு போயிருங்கனு அவர் பாட்டுக்கு கத்தறாரு. வாயையே தெறக்காதவ தெறந்துட்டா, அதத் தாங்கிக்க முடியல. சாமியாட ஆரம்பிச்சிட்டாரு. பொண்ண பெத்தவ சும்மாயிருந்துருவேனா, நானும் கேட்டேன், அப்ப உங்க சடங்கான தங்கச்சிய கட்டிக் கொடுத்திட்டு, தம்பிகளக் கரையேத்திட்டு எங்க பொண்ணக் கட்டியிருக்கணும்னேன். அதுக்கு என்ன தெரியுமா சொன்னாரு. உங்கமகள அதுக்குதா கட்டியிருக்கேன். அவ வேல கெடச்சி சம்பாதிக்கிற பணத்தை வச்சிதா தங்கச்சிய கரையேத்தனும்னாரு. எப்படி இருக்கு பாருங்க கத. தங்கச்சி கழுத்துல தாலி ஏறுறதுக்கு நாங்க கடன கிடன வாங்கி பொண்ண வளத்து, படிக்க வச்சி முந்நூறு மைல்ல இருக்குற இவருக்கு கட்டி வெச்சியிருக்கோம். '

'விசயா சாகுறதுக்கு ரெண்டு மாசம் முன்னாடி ரெண்டாவது தங்காம கலைஞ்சி போயி ஆஸ்பத்திரில இருந்தாளே, அத தாங்குற ஒடம்புதானா சொல்லுங்க. குடும்பத்த தூக்கி வெச்சிருக்கேனு சொல்றவரு இதே யோசிக்க வேணாமா ? அப்பக்கூட தங்கச்சிக்காரி, எங்கண்ணனுக்கு இவ்ளோ செலவு அவ்ளோ செலவுனு நீட்டி மொழக்கி சொன்னா, மனசு தாங்காமெ கையில இருந்த வளையல உருவி வித்து ஆஸ்பத்திரி செலவு கட்டுனோம். கொரங்கு கைல பூமால கணக்கா ஆய்ட்டாளே, நம்மபுள்ள, சரி இனி வாழலனாகூட பரவால்ல ஒரேயடியா அறுத்துகிட்டு போயிறலாம்னுதா சார் அப்ப கூட்டிகிட்டு வந்தோம். அதுதா அவ கடைசிய மதுர வந்தது...ஒடம்பு தேறிச்சோ இல்லையோ சொல்ல ஆரம்பிச்சிட்டா தீத்துகிட்டு, கீத்துக்கிட்டுனுலாம் பேசாத... அவுக நல்லவங்கதா, குடும்ப நிலைமைல அப்படி ஆய்ட்டாக. தங்கச்சிக்கி கல்யாணம் ஆயிட்டா எல்லாஞ் சரியா போயிடும் அப்படிங்றா. எனக்கு ஒடம்பு பத்தி எரிற மாதிரி இருக்கு. அவிங்களை போயி நல்லவங்கனு சொல்றப்போ. சௌந்தரத்துகிட்ட மட்டும், நாம இங்க வந்துட்டா எல்லோருக்கும் கஷ்டந்தான்னு சொன்னாளாம். என்ன கஷ்டம், படிச்சபொண்ணு எங்கே போனாலும் ஒரு வேலைவெட்டிய பார்த்துகிட்டு தைரியமா இருக்கலாம்னு தெரியல.. ரூமிலே படுத்துகிட்டு குழந்த அழுறது, ஒன்னுக்கு போறதுகூட தெரியாம மோட்டுவளைய இப்படி பெரம புடிச்சவ மாதிரி பார்த்துகிட்டு இருக்காளேனு அப்ப யோசிக்கலே. சௌந்தரம் கூட எதுக்கும் ஒரு டாக்டர்கிட்டே காமிச்சா நல்லதுனா. ஒன்றுமிருக்காதுன்னு காதுலே வாங்கிக்காம மறுபடி அனுப்பி வெச்சோம். தெருமுக்கல போயி வழியனுப்பி வெச்சேன். அதுதா கடைசியா அவள பாத்தது. அவ குழந்தைக்கு வாங்கி வச்ச நடவண்டி பாருங்க மறந்துட்டு போயிட்டா. '

பரணில் சாய்ந்து கிடக்கு நடைவண்டி. எங்கே போறா ? தண்ணீர் மொள்ளும் சப்தம் கேட்குது... தந்தி கெடச்சி வந்தவங்க வெத்தல பாக்கு போட்டுகிட்டு சாவதானமாக நடந்து வந்ததும், விஷயத்த எப்படி சொல்றதுனு தெரியாமல் முழிச்சபடி கூடவே வேறு விஷயங்களப் பேசிக்கிட்டு போனதும், கடைசியா அவர்களே பார்த்து அதிர்ந்து போனதும் ஞாபகத்துக்கு வருது. போட்டோவுக்குள் தன் கஷ்டங்களையெல்லாம் சின்னதாக சுருக்கிக் கொண்டிருப்பது போலத்தான் அவ முகம் தோணுது.

முகத்தைத் துடைத்துக் கொண்டு வராள். 'இந்தாங்க ' டம்ளரை வாங்கிக்கிறாள். முகம் வீங்கிப் போயிருக்கு. 'மனச தேத்திக்கங்கம்மா.. உங்க துக்கத்துக்கு நா ஆறுதல் சொல்லி மறக்க முடிற விஷயமில்லதான். இருந்தாலும் அதையே நெனச்சுகிட்டிருக்குறதால ஒடம்புக்கு நல்லதில்ல.. அப்புறம், பொறப்படுறேன், டயமாகுது.

'சார், தங்கச்சிய எல்லாம் விசாரிச்சேன்னு சொல்லுங்க. '

'மதுரைக்கு அடிக்கடி வாரீக. நம்ம வீட்டு பக்கம் இன்னிக்குதா பாத தெரிஞ்சிருக்கு போல.. மறந்துட்டாக... '

'அதெல்லா இல்லம்மா. சந்தர்ப்பம் கெடைக்கல... '

'அம்மாவுகளா கூட்டிகிட்டு வாங்க. '

'நாகர்கோயிலு போயிருக்கா. அடுத்த முறை கூட்டிகிட்டு வரேன்.. அப்ப போயிட்டு வரேம்மா. '

தலையாட்டுகிறாள் வழிவிட்டு அடுப்பங்கரைக்குள் ஒதுங்கி நிக்றாள். பார்வை தரையை நோக்கி இருக்கு. கதவைச் சப்தமில்லாமல் திறந்து மூடனும். அடுத்த முறை வருவேனா ? தெரியல.

வெயில் இப்ப குறைஞ்சிருக்கு. வெக்கை அப்படியேதான் இருக்கு. நடுரோட்ல பம்பரம் சுத்திகிட்டிருக்காங்க பையங்க. பரமேஸ்வரியில ஜெகதீசனோடு என்ன படம் பார்த்தேன்.. நினைவில்லை. 'அண்ணே... ' பாபு, இவ்வளவு வேகமாக ஓடி வரான். 'சூதானமாப்பா, தடுக்கிவிழப்போற... ' மூச்சு இரைக்குது... 'பாட்டி.. இத.. சதீஷ்உக்கு குடுக்க சொல்லிச்சி. '

கவரைக் கொடுத்துவிட்டு மறுபடி அதே வேகத்தில் ஓடிவிட்டான். கசங்கிய ப்ரவுன் உறை. அர்ச்சனா. உள்ளே வெள்ளைத் துணி மடிப்பின் முதுகு தெரியுது. டெரி காட்டன் சட்டைத் துணி. கரத்தைச் சுற்றி மிருதுவாக உணர முடியுது.

***

# உயிர்

**கந்தர்வன்**

ஒரு உச்சி வெயிலில் கடலோடித் திரும்பிய மீனவர் ஒருவர் தான் போட் ஜெட்டியில் அந்த சேதியைச் சொன்னார். தீவில் ஒரு திமிங்கலம் ஒதுங்கிக் கிடப்பதாக. சேதி கிராமத்தின் வழியாகச் செல்லும் பஸ்களிலும் லாரிகளிலும் நகரத்திற்கு அன்று மாலைக்குள் வந்து சேர்ந்துவிட்டது. நகரத்திலிருந்தும் வேறு எங்கிருந்தும் போட் ஜெட்டிக்கு பஸ்களில் வரவேண்டும். பிறகு முக்கால் மணி நேர படகு சவாரிக்குப் பின் தீவிற்குப் போகலாம் என்றார்கள்.

முதலில் சில ஆண்கள்தான் பஸ் பயணம். கடல் சவாரி வெறித்துக் கிடக்கும் தீவு என்று பயத்தை மறைத்தபடி நண்பர் குழமாய்ப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். வந்து அவர்கள் அளந்த அளப்பு மனைவி குழந்தைகளோடு இன்னொரு பயணம் என்றானது.

பத்திரிகைகளில் பெரிய செய்தியாகக் காலையிலும் மாலையிலும் வெளியிட்டார்கள். வானொலி தொலைக்காட்சியிலும் திமிங்கலத்தைக் காட்டி பிள்ளைகள் ஒரே குரலில் 'புறப்படு போகணும் ' என்றார்கள். தகவல் என்னவென்றால் பஸ்களிலும் போட் ஜெட்டியிலும் நெரிசல் தாளவில்லையென்றும் மாருதி சியல்லோ, 'டி ' போர்டு கார்கள் பகல் முழுதும் போட் ஜெட்டி வாசலில் கிடக்கின்றன என்பதாகும்.

திமிங்கலம் ஒதுங்கிய மூன்றாம் நாள்தான் அவன் குடும்பத்தோடு தீவுக்குப் பயணமானான் புறப்படுமுன் இரண்டு நாளாய்ப் பிள்ளைகள் விடிந்து எழுந்ததும் திமிங்கலம் குறித்து கூடிக் கூடி உட்கார்ந்து கற்பனையும் பேத்தல்களுமாய் வாயொழுகப் பேசித் திரிந்ததை அவள் அடிக்கடி பார்த்துவிட்டு வாய் பொத்தித் திரும்பிக்கொண்டு சிரித்து வைத்தாள். சிரிக்காமல் என்ன செய்வது விடிகாலையில் உட்கார்ந்து இரண்டும் இப்படிப் பேசிக்கொண்டிருந்தால்.

'அது மேலெ ஏறி ஏறிப்போனா மேகத்தையே தொட்டிரலாம் தெரியுமா ? '

'எனக்குத்தெரியுமே, அதோட ஒரு கால் நம்ம ஊர் அளவு பெரிசு. '

'எனக்குத் தெரியுமே நாமெல்லாம் பாத்தா இவ்ளூண்டு தூரம் தான் பாக்கமுடியும். அது கண்ணாலெ பாத்துச்சுன உலகமே தெரியும் தெரியுமா ? '

'நாம இங்கெ உக்காந்திருக்கிறதெல்லாமா ? '

'ஆமா அப்பா பேப்பர் படிக்கிறதெல்லாம் கூட. '

'எனக்குத்தெரியுமே ' ஆனா அதுக்கு ஒருகண்ணுதான். '

'போடி ரெண்டு கண்ணு '

'எனக்குத் தெரியும் தெரியும்றியே நீ எங்கே போய்ப் பாத்தெ ' '

'என்னை மட்டும் சித்தி வீட்டுக்கு அனுப்பியிருந்தாங்கள்ள அப்பொ நீ வல்லியே. அன்னிக்கு ஒருநாள் அங்கெ வந்திச்சி. நான் பாத்தேன். '

'புளுகாதெடா '

'நீதான் புளுகி. '

'டி வெண்டி தௌசண்ட் லீக் அண்டர் தி சீ ' என்று ஒன்பதாம் வகுப்பில் ஒரு நாண்டிடெய்ல் புத்தகத்த இங்கிலீஷ் பாடமாக வைத்திருந்தார்கள். கடலுக்கடியில் அதுவரை இல்லாத பெரிய சைஸில ஒரு ராட்சத திமிங்கலம் திரிவதாகவும் அதனால் கடலின் ஒரு பிராந்தியம் முழுதும் மீனவர்களின் வலை அறுந்ததையும் படகுகள் கவிழ்ந்ததையும் நாவல் சொல்லி வரும். கடல் நம்பிகள் பீதி கொண்டு திரிந்தார்கள். திமிங்கலம் அவ்வளவு பிரம்மாண்டமாகச் சொல்லப்படும்.

அந்தத் திமிங்கிலத்தை வேட்டையாடக் குறி பிசகாமல் உலகிலேயே சிறப்பாக ஈட்டி எறியும் பலசாலிகள் இருவரோடு ஆழ்கடலில் திமிங்கல வேட்டை நடக்கும். திமிங்கலத்தையும் காண்பார்கள். ஈட்டி எறிந்ததும் 'டய் ' என்று உலோகத்தின் மீது விழும் சத்தம் கேட்கும். அது முதன் முதலாக ரகசியமாய் செய்துவிடப்பட்ட நீர் மூழ்கிக் கப்பல் என்ற மர்ம முடிச்சு நாவலில் அவிழும் இடம் அந்த வயதில் பரவசமாயிருந்தது. பிள்ளைகளிடம் அந்தக் கதையைச் சொன்னதும் நடுக்கடல், திமிங்கலம், கடற்பயணம், பூதங்கள் உருவத்தில் ஈட்டி எறிபவர்கள் என்று இன்னும் அதிகக் கற்பனைகளோடு ஒன்றிடம் ஒன்று நிறைய பேத்திக்

கொண்டிருந்தது. அவளும் இந்தக் கதை கேட்ட பின்னர் திமிங்கலம் பற்றிப் போகும்போது வரும்போது ஏதாவது கேட்டாள்.

'கடலும் கிழவனும் ' கதையை மறுநாள் ராத்திரி ஒன்பது மணி வாக்கில் சொன்னான். கிழவன் விடாப்பிடியாய் ராட்சத மீனோடு போராடியதை வெகு நேரம் சொல்லி முடித்ததும் பிள்ளைகள் கேட்டன 'இப்பவே போவமா திமிங்கலம் பாக்க ? ' என்று அவளுக்கே அப்படி ஒரு ஆர்வம் வந்து முகத்தில் நின்றது.

போட் ஜெட்டியில் கூட்டம் மிகுதியாக நின்றது. சுற்றுலா ஸ்தலங்களுக்குப் போகிறவர்கள் கொண்டு செல்லும் பொருள்கள் தின்பண்டங்களோடு நின்றார்கள். காமிராக்கள் நிறையத் தெரிந்தன. பிரயாணிகள் படகு என்று ஒன்றிரண்டுதான் நின்றன. மற்றவை எல்லாமே மீன்பிடிப் படகுகள்தான். அநேகமான படகுகள் கடந்த இரண்டு நாட்களாய் மீன் பிடிக்கப் போகவில்லை. இருட்டும் வரை தீவுக்குப் பிரயாணிகளைக் கொண்டுவிட, கூட்டி வர நல்ல வருமானம். போட் ஜெட்டியில் அவனைக் கவர்ந்த விஷயம் ஒன்று. அந்தக் கருங்கல் மேடையிலிருந்தும் படகுகள் ஏற எவ்வளவு வில்லங்கமான ஆளுக்கும், வாயாடிக்கும், பலசாலிக்கும், சவடால் காரனுக்கும் இன்னொரு கை உதவியாகத் தேவைப்பட்டது. பிள்ளைகள் போட் ஜெட்டியின் மேடையில் நின்று நீல நெடுங்கடல் பார்த்துக் குதித்தன. அவளே கடல் பார்த்து அடக்கமுடியாமல் பார்த்தபடி பேசினாள் அவனிடம்.

விசைப்படகின் முன்பக்கத்தில் அவன் குடும்பம் உட்கார்ந்து கொண்டது. கடலைக் கிழித்துக்கொண்டு படகு போவதைப் பார்க்க அதுதான் சரியான இடம் என்று சொல்லியபடி உட்கார்ந்தன பிள்ளைகள். அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் படகுகள் வந்ததால் பிள்ளைகள் ஆரவாரித்துக் கையசைத்தார்கள்.

படகில் உட்கார்ந்து பார்க்கக் கடல் ஒரே நிறத்தில் எல்லா இடங்களிலும் இல்லை. தூரம் விட்டு தூரத்தில் அழுத்தமான நீலத்தில் வாலம் வாலமாய்க் கிடந்தது கடல். மேலே வானத்தின் நிறமும் கீழே கடலின் நிறமும் ஒரே மாதிரியாக இருந்ததிலும் இரண்டு பிரம்மாண்டங்களை ஒரே நேரத்தில் பார்த்ததிலும் மனதுகள் எவ்விப்பறந்தன. பிள்ளைகள் ஒன்றிடம் ஒன்று என்றோ பார்த்த யானைப் பற்றிப் பேசியது. இன்னொன்று பதிலுக்கு சறுக்கலில் பார் விளையாடியதைப் பார்த்தபோதுபயம் பயமாய் வந்ததைப் பற்றிப் பேசியது. அதிசயம் பார்த்து அனுபூதிக்கும் நேரங்களில் பிள்ளைகள் இப்படிப் பேசுவதைக் கேட்டு அவனுக்கு இப்போதுபழகிவிட்டது.

படகு போகும் ஓரங்களில் ஆங்காங்கே மிதவைகள் கிடந்தன. தீவுக்குப் பாதை போட்டுவிட்டார்கள். ஒரு முழுக்கை நீள மீன்கள் தூரத்தில் அவ்வப்போது வெட்டவெளிக்கு வந்து விட்டுக் கடலுக்குள் பாயும்போதெல்லாம் பிள்ளைகள் கைதட்டின. மண் மேட்டில் தாவரங்கள் மங்கலாய்த் தெரிந்தது. 'அதோ தீவு ' என்றன பிள்ளைகள். அடுத்தவர்கள் காதில் விழாமல் அவள் அவனிடம் சொன்னாள். 'இந்தப் புள்ளைக புண்ணியத்திலெ ஒரு ஆசையிலெ பாதி நிறைவேறுது இன்னிக்கு. '

'என்னது ? '

'வாழ்க்கையிலெ ஒரு தடவையாவது வெளிநாட்டுக்குப் போய் வரணுமினு அசட்டு நெனைப்பு அடிக்கடி வரும். நாலு பக்கமும் கடலா ஒரு மேட்டிலெ எறங்குறப்பொ நெனைச்சிக்க வேண்டியதுதான்.இது ஒரு நாடுனு. கடல் தாண்டி வர்ரோம்ல. '

அவளைப் பார்க்கப் பாவமாகவும் சிரிப்பாகவும் இருந்தது. கடற்கரை குளக்கரைபோல் மணற்பாங்காய் அழகாயிருந்தது. படகுத் துறைக்கருகில் கீழ்த்திசையில் ஒரு குடிசையும் அதில் கறுத்து மெலிந்த இரண்டு ஆட்களும் இருந்தனர். அவர்கள் படகுகளிலிருந்து இறங்கிப் போகும் ஆட்களை மிரட்சியோடு பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்களுக்கருகில் இரண்டு மெலிந்த செவல நாய்கள் நின்று கொண்டிருந்தன.

குடிசைக்கு நேராக கடலுக்குள் கம்புகள் ஊன்றி செயற்கை முத்துக்களை விளைவிக்கிறார்கள். நகரிலிருக்கும் ஒரு பெரிய நிறுவனம் அதை நடத்துகிறது. இரவுபகலாய் அதைப் பாதுகாக்க அந்தக் குடிசையும் மெலிந்த அந்தமனிதர்களும் நாய்களும் என்றார்கள்.

பிள்ளைகள் அவர்களை ஆச்சர்யத்தோடு பார்த்துவிட்டு ஒன்று கேட்டது 'அப்பா ராத்திரி எல்லாம் இவுங்க மட்டும் இந்தத் தீவிலெயே இருந்துக்குவாங்களா ? '

'ஆமா '

'பயமா இருக்காதா ? '

'கூட நாய் இருக்கில்ல '

'நாயும் மெலிஞ்சு போயிருக்கு. '

'தெனம் தெனம் வர்ரவங்கள்ளாம் போனப்புறம் திமிங்கலமும் இவங்களும் மட்டும்தான் தீவிலெ இருப்பாங்க. ஏப்பா ? '

'ஆமா ஆமா கீழெ பாத்து நட. '

தீவின் மறுபக்கம் தான் திமிங்கலம் ஒதுங்கிக் கிடப்பதாகச் சொன்னார்கள். படகுகளில் இறங்கி குடும்பங்கள் முன்னும் பின்னும் போய்க்கொண்டிருந்தன. இளைஞர்கள் குழாம் அட்டகாசம் பண்ணிக்கொண்டு வெகு பின்னால் வந்து கொண்டிருந்தது. தீவில் தாவரங்கள் எல்லாமே ஒரு தினுசாயிருந்தன. ஊரில் நீண்டு காய்க்கும் புடலை ஒரு சாணுக்குள் முடங்கிக் கிடந்தன. எந்தச் செடியின் இலையைப் பறித்து மென்றாலும் உப்புக் கரித்தது.

மக்கள் நடந்துபோன இந்த மூன்று நாட்களுக்குள் ஒற்றையடிப் பாதை உருவாகியிருந்தது. மித வெயிலும் அடர்ந்த புதர்களும் உடம்பையும் மனதையு லேசாக்கின. நடந்துபோகையில் அவன் பிள்ளைகள் கூட வரும் பல ஊர்ப் பிள்ளைகளோடு பேச்சுக்கொடுத்து நெருங்கிக்கொண்டன. ஓடிப்பிடித்து திரும்பப் பெற்றோரிடம் வந்து விழுந்து உற்சாகமாய் வந்தார்கள் பிள்ளைகள்.

வெகு தூரத்திலேயே தெரிந்தது. திமிங்கலம் கரைமேல் வண்னங்களில் ஜனங்கள் தெரிந்தார்கள். பிள்ளைகள் முன்னைவிட பாய்ச்சலில் போகவும் தொடர்ந்து அதே வேகத்தில் நடக்க சிரமமாயிருந்தது பெற்றோர்களுக்கு.

பனை மர நீளத்திலும் ஆலமர அகலத்திலும் திமிங்கலம் கிடந்தது. யானையின் வெளிர் கறுப்பில் வேலுடம்பும் கீழே வெள்ளையாயும் கிடந்தது. வாய் தரையில் கிடந்தது. உடம்பு முழுதும் சமுத்திரத்திற்குள் வயிற்றுப் பகுதியிலிருந்து ரத்தம் கசிந்தது; கசிந்தது என்ன ஒழுகிக் கலந்து கொண்டிருந்தது சமுத்திரத்தில்.

கப்பலில் மோதி அடிபட்டிருக்க வேண்டும்; பாறையில் மோதிக் காயம் வாங்கி ஒதுங்கியிருக்கவேண்டும் என்று பலவாறாகப் பேசிக் கொண்டார்கள். அந்திம காலத்தில் மனிதர்கள் வாய் வழியாய் மூச்சுவிட்டு அவஸ்தைப்படுவதுபோல் திறந்து திறந்து மூடியது வாய். அவ்விதமான ஒவ்வொரு தடவையிலும் சிரசிலிருக்கும் பெரிய துவாரம் வழியாய் கடல் நீர் ஆகாயத்தில் பீய்ச்சியடித்தது. மூச்சு விட்டு மூச்சிழுக்கும் போதெல்லாம் கடல் ஏறி இறங்கியது.

ரத்த ஒழுக்கைப் பார்க்கவும் திக்கித் திக்கி மூச்சு விடுவதைப் பார்க்கவும் பரிதாபமாயிருந்தது. இதுவரை பார்த்தறியாத பெரிய ஜீவராசியின் மரணப் படுக்கை என்பதால் சுவாரஸ்யமாகவும் பார்த்தார்கள்.

திமிங்கல வாலுக்கு வெகு அருகிலேயே வேர்க்கடலை, ஐஸ்க்ரீம், தயிர்சாதம், குளிர்பானங்கள் விற்பனையாகிக் கொண்டிருந்தன கடலுக்குள் போய் திமிங்கலத்தின் தலையைப் பார்க்க விரும்பி இருக்கிறார்கள் பிள்ளைகள். தலை கிடந்த இடம் வெகு ஆழம். விஷயம் அறிந்ததும் இரண்டு மூன்று சிறிய படகுகள் இதற்கென வந்துவிட்டன. பிள்ளைகளை ஏற்றித் திமிங்கலத்தைச் சுற்றிக் காண்பித்து இறக்கிவிட்டுப் பணம் பெற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் போன சமயத்தில் மீன் துறை அதிகாரிகள் கடலுக்குள் வெகுதூரத்தில் ஒரு படகிலிருந்துகொண்டு திமிங்கல வாய்க்கு நேராக முரட்டு மீன்களைத் தூக்கி எறிந்தார்கள். அவை திமிங்கலத்தின் திறந்த வாயருகே விழுந்தும் அவைகளை அது ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மூச்சு வாங்குவதையும் விடுவதையும் தவிர வேறுஞாபகங்கள் அற்றுப் போய்க் கிடந்தது. சிரசின் வழி ஆகாயத்திற்குப் பீய்ச்சும் தண்ணீர் மட்டும் அந்தச் சூழ்நிலையிலும் அதன் கம்பீரத்தைக் காட்டிக்கொண்டிருந்தது.

கரைதாண்டி மணல் மேட்டில் சிறிய இலைகளடர்ந்த பேர் தெரியா செடிகள் தூசி அப்பிக் கிடந்தன. அங்கு போய் நிழல் தேடினார்கள். உடம்பில் கால்வாசிக்குக்கிடைத்த செடி நிழல்களில் ஏற்கனவே மக்கள் நின்றும் உட்கார்ந்தும் தூரத்தில் திமிங்கலத்தின் ஓரத்தில் ஓடி ஓடிப் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகளை அதட்டிக் கொண்டிருந்தனர்.

கடல் நீரில் கால் நனைத்தபடி அவன் பிள்ளைகள் படகுக்காகக் காத்திருந்தார்கள். படகு கிடைத்ததும் அவர்களைக் கை தட்டி அழைத்தனர். குறுகி வந்திருந்த வால் பகுதியிலிருந்து தொடங்கிப் பருத்து விரிந்து வயிறு தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. கடல் மக்கள் எவ்வளவு பேர் இந்தப் பெரிய உருவத்திற்குப் பயந்து வால் சுருட்டி வாய் பொத்தி ஓடி ஒளிந்திருப்பார்கள் என்று பிள்ளைகள் விலாவரியாக விவாதித்துக் கொண்டு வந்தார்கள். படகில் பல ஊர்ப் பிள்ளைகள் இருந்ததால் புதுப் புது விவரங்களைப் பரிமாரிக் கொண்டார்கள்.

அவர்களுக்கு முன் சென்ற படகுக்காரர் படகை நிறுத்தி பிள்ளைகளைத் திமிங்கலத்தின் மீதி ஏற்றி விட்டார். கையில் கோன் ஐஸ்கிரீமுடன் பிள்ளைகள் படு உற்சாகமாய் திமிங்கலத்தின் முதுகிலேறினர். முதுகின் மீது நின்று குதித்தனர். சறுக்கிக் கீழே போய் மேலே வந்தனர். ஐஸ்கிரீமை திமிங்கிலத்தின் கரிய தோலில் தடவினர்.

எவ்வளவு அதட்டியும் அவன் பிள்ளைகள் கேட்பதாயில்லை. அவைகளும் திமிங்கலத்தின் மீதே விளையாண்டார்கள். ஐஸ்கிரீமால் தங்கள் பெயர்களை திமிங்கில முதுகில் இனிஷியலோடு எழுதினார்கள். எருமை மேய்க்கும் சிறுவர்கள் எருமை மீதமர்ந்து

பக்கவாட்டில் எருமையின் வயிற்றைத் தட்டி விரைந்து நடக்கும்படி செய்வது போல் இவர்களும் திமிங்கல முதுகில் உட்கார்ந்து வயிற்றுக்கு எட்டிக் கையால் அடித்தார்கள்.

'என்ன வேகமாப் போகமாட்டேங்குதே '

'அதோ தெரியுது பார் இன்னொரு தீவு அங்கு போ ' என்று கத்தினார்கள் திமிங்கலத்திடம்.

கடலில் நீரோட்டம் ஆரம்பமாகியிருந்தது. மேற்கு நோக்கி ஆறுபோல் ஓடிய நீரில் சிவப்புக் கலந்திருந்தது. திமிங்கலத்தின் வயிற்றிலிருந்து ஒழுகிய ரத்தந்தான். படகின் அடிப்பகுதியெல்லாம் சிவப்பாகி இருந்தது. கடல் வாசமும் ரத்த வாசமும் கலந்த கவிச்சி வாடை கரை வரை வீசியது.

திமிங்கல சவாரியை விட்டுப் பிரிய அவர்களுக்கு மனமில்லை. பிள்ளைகளைப் பிடிவாதமாக இறக்க வேண்டியிருந்தது. அவர்கள் கரைக்கு வந்த பின்னும் மேலும் மேலும் ஜனங்கள் பிள்ளைகளோடு கடலில் இறங்கியபடி இருந்தார்கள். பிள்ளைகள் இப்போது ஐம்பது அறுபதுபேர் திமிங்கல முதுகில் உட்கார்ந்து குதித்துக் கொண்டிருந்தார்கள்.

தயிர்சாதம் பொட்டலங்களை வாங்கிக் கொண்டு கரை ஓர சிறு நிழல்கள் தாண்டித் தீவின் உட்புறத்தில் வளர்ந்து கிடந்த தாழம் புதரடியில் உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.பிள்ளைகள் தீவைச் சுற்றி வரவேண்டும் என்பதில் குறியாக நின்றார்கள். சாப்பிட்ட இலைகளைச் சுருட்டிக்கொண்டு எழுந்தபோது பார்த்தார்கள் பக்கத்துத் தாழம்புதர் நிழலில் பாட்டில் திறந்து வைத்து கமகமவென்று ஒரு கம்பெனி பத்துப் பேரோடு வட்டமாய் உட்கார்ந்து நடந்துகொண்டிருந்தது.

பிள்ளைகளோடு தீவின் கிழக்குப் பக்கமாய் கரையில் கால் நனைத்தபடி வெயிலுக்குள் நடந்தார்கள் திமிங்கலம் பார்க்க வந்த இளைஞர்கள். பலர் அநேக இடங்களில் கடலுக்குள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் கடலுக்குள் தூரத்தில் நின்ற பாறைகள் வரை அவற்றின் மேலேறி நின்று அலை அடித்த நீரை உடம்புகளின் மீது வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

கடல் நுரை ஒன்றை அவன் பிள்ளைகளிடம் எடுத்துக் கொடுத்தான். அவன் சிறுவனாயிருந்தபோது சிலேட்டை அழிக்க அந்தக் காய்ந்த நுரையைப் பயன்படுத்தியதைச் சொன்னபோது பிள்ளைகள் அந்த ஒட்டு நுரையில் நிறைய கால்ஷியம் இருப்பதாகவும் வீட்டில் வளர்க்கும் லவ்பேர்ட்ஸ்க்கு உண்ணக் கொடுக்கலாம் என்று சொல்லி பத்திரப்படுத்தினார்கள். கடல் அலைகளில் அடித்து வந்த பாசிகள் கடற்புல் என்று ஒதுங்கிக் கிடந்தத் தாவரங்களை சுகமாக மிதித்தபடி தீவையே வட்டமடித்துத் திமிங்கலம் கிடந்த இடத்திற்கு வந்தார்கள்.

இன்னும் ஐம்பது அடிதூரம் இருக்கையில் அவர்கள் கண்முன்னே அந்தப் பிரதேசமே நடுங்கும்படி அது நிகழ்ந்து கொண்டிருந்தது. ரத்தம் ஒழுகியவாறும் மூச்சு விடவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்த திமிங்கலம் சரேலென்று உதறிக்கொண்டு வெகு உயரத்திற்கு எழுந்தது. திமிங்கலத்தின் முதுகில் ஏறி விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் சிதறி விழுந்துகரை நோக்கி நீந்தியும் ஓடியும் வந்தார்கள். படகுகள் கவிழ்ந்துவிட்டன. படகுக்காரர்கள் கரை நோக்கி நீந்தினார்கள். படகுகளைப் போட்டுவிட்டு படகுகளில் திமிங்கல

முதுகில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளுக்காகக் காத்திருந்த பெற்றோர்கள் பதறியபடி கடலுக்குள் விழுந்து கரைக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

துணிந்த சில பேர் ஓடி கடலுக்குள் தடுமாறியவர்களைப் பிடித்து இழுத்து வந்தனர். திமிங்கலம் அசைந்தபடி கிடந்தது. எல்லோரும் பீதியடையத் துவங்கினார்கள். அங்குமிங்கும் ஓடினார்கள். திமிங்கலத் தலைவழி பீய்ச்சும் கடல் நீர் அதிக அளவிலிருந்தது. அடுத்த ஒரு தாவலுக்கு அது முயல்வதாகப் பட்டது. பெற்றோர்கள் பிள்ளைகளை வைது கொண்டும் இழுத்துக் கொண்டும் தீவின் மறுபக்கமுள்ள படகுத் துறை நோக்கி ஓடினார்கள். திமிங்கலம் திரும்பி தீவுக்குள் விழுந்தால் 'நாமெல்லாம் சட்னி ' என்று சொல்லிக்கொண்டே ஓடினார் ஒருவர். கால் வலிக்க நடந்த அந்தத் தீவு இப்போது சின்ன நிலத்துண்டாகத் தெரிந்தது இப்போது.

திமிங்கலம் திரும்பி தீவுக்குள் விழுந்தால் தீவு கடலுக்குள் போய்விடும் என்றார் ஒரு பெண். இன்னும் நிறைய ஜனங்களும் பெரு நிலமுமாக இருந்தால் இந்தப் பயம் வந்திருக்காது என்று தோன்றியது அவனுக்கு. கடைசியாய் திமிங்கலத்தின் முதுகில் விளையாடி வெகு நேரம் வரை கீழே இறங்கமாட்டேனென்று பிடிவாதம் பிடித்த இரண்டு பிள்ளைகளை அவற்றின் அப்பா உடம்பு குன்றிப் போகும்படி அடித்தார். அவர்கள் எல்லோரும் முழுக்க நனைந்திருந்தார்கள்.

படகுத் துறையில் கூட்டம் ஒரு கட்டுக்குள் இல்லை. ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும் மிதித்துக்கொண்டும் படகுகளில் ஏறினார்கள். பட்டுக்காரர்களின் எச்சரிக்கை மிரட்டல் எல்லாவற்றையும் மீறி படகுகளில் உட்கார்ந்துகொண்டு சீக்கிரம் புறப்படும்படி விரட்டினார்கள்.

படகுகள் திரும்பி வருவதற்காகக் காத்திருந்தபோது கடைசியாக வந்தவர்கள் சொன்னார்கள். 'திமிங்கலம் மறுபடி எவ்விப் பாஞ்சு மெல்ல மெல்லக் கடலுக்குள்ளெ போய்க்கிட்டிருக்கு. '

தூரத்தில் ஒருவர் ஓடி வந்துகொண்டிருப்பவர் சொன்னார். 'அதெல்லாம் பொய். அது மெல்ல மெல்ல செத்துக்கிட்டிருக்கு. '

அவள் முகம் வெளிறி நின்றாள். அடித்து பிடித்துப் படகில் ஏற எவ்வளவு முயன்றும் இரண்டாம் முறையாகவும் முடிய வில்லை. இதற்குள் படகுத்துறையில் பெரும் அலைகளைடிக்கத் துவங்கி திமிங்கலம் இந்தப் பக்கமாக வந்து கொண்டிருப்பதாகப் பிள்ளைகளோடு நின்றவர்கள் பயந்தபடி முணங்கத் துவங்கி இஷ்டதெய்வங்களைக் கூப்பிட்டுத் திசை நோக்கி வணங்கினார்கள்.

அவர்கள் ஏறியதுதான் கடைசிப்படகு. தீவு வெறிச்சோடிக் கிடந்தது. அந்த ஒரு குடிசையும் இரண்டு மெலிந்த ஆட்களும் வற்றிய இரண்டு நாய்களும் மட்டும் அந்தப் படகை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

***

# பிலிப்பு

**அ.எக்பர்ட் சச்சிதானந்தம்**

குடிசைக்குள் மயான அமைதி. கட்டிலில் வதங்கிய செடியாகப் படுத்திருக்கும் பிலிப்புவின் வெறிச்சோடிய பார்வை. படுக்கைக்கு முன் நான் மட்டும் தனியாக நாற்காலியில். பக்கவாதக் கணவனை விட்டுவிட்டு எங்குதான் போயிருப்பாள் வேதம் ? மணி ஐந்து.

வேதத்தை இரண்டாந்தாரமாக பிலிப்பு கல்யாணம் செய்துகொண்டபோதுதான் நான் கடைசியாக இந்தக் குடிசைக்கு வந்தது.

'பிலிப்பண்ணே.. ' ஐந்தாவது முறையாகக் கூப்பிடுகிறேன். பார்வையில் உணர்ச்சியற்ற லேசான அசைவு. அவ்வளவுதான்.

பளிச்சென்ற சுத்தமான தரை. பினாயிலின் மெலிதான நெடி. பக்கவாத நோயாளியின் வீடு என்று நம்புவதற்கு கடினமாக இருக்கிறது. பிலிப்புவின் வார்ட்பாய் அனுபவத்தை நன்றாகத்தான் கற்று வைத்திருக்கிறாள் வேதம்.

நேற்று சென்னை வந்த வில்சன்ராஜ் சொல்லவில்லையென்றால் எனக்குத் தெரியாமலேயே போயிருக்கும். பத்து வருடங்களுக்கு முன் மிஷன் ஆஸ்பத்திரியில் எறும்பின் சுறுசுறுப்புடன் வேலை பார்த்த மனிதன் இன்று இப்படி அசைவற்ற ஜடமாக...

ஜன்னலுக்கு மேலே நிறைய போட்டோக்கள். நானும் பிலிப்புவும் சேர்ந்து நிற்கும் போட்டோ ஒன்று. பிலிப்புவுக்கு என் மீது அலாதியான அன்பு.

மிஷன் பள்ளியில் முப்பது வருஷத்துக்கு மேல் வாத்தியாராக இருந்த என் அப்பாவின் பெயர் பிஷப்பிடம் எந்த உணர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், பிலிப்பு பற்றி தயக்கத்துடன் சொன்னதும், பிஷப் முகத்தில் பிரகாசத்துடன், 'பிலிப்பு சிபாரிசு பண்ணி இருக்கானா ? அப்போ வேலை கொடுத்துத்தான் ஆகணும். இல்லைனா அவன் கிராமத்துக்கு நான் வரமுடியாது. கறுப்புக்கொடி காட்டினாலும் காட்டுவான் ' என்றார் பலத்த சிரிப்புடன்.

நிறைய குழந்தைகளுடன் கிறிஸ்துமஸ் தாத்தாவாக பிலிப்பு இருக்கும் போட்டோ. ஒவ்வொரு வருடமும் சான்டா கிளாச் வேஷத்துக்காக பஞ்சு, வேஷ்டிகளை உள்ளே திணித்து ஒரு பிரமாண்ட உருவகமாக சிவப்பு கவுனும் வெள்ளைத் தாடி முடியுமாக வயிற்றை ஆட்டிக்கொண்டு பிலிப்பு பண்ணும் சேட்டைகள் யாரைத்தான் சிரிக்க வைக்காமல் இருந்தது '

கிறிஸ்துமஸ் தாத்தா என்றாலே நினைவுக்கு வருவது ராபின் டாக்டர்தான். சென்னையிலிருந்து கிறிஸ்துமஸ் பரிசுகள் மட்டும் வாங்குவதை விட்டுவிட்டு ராபின் தன் வேலூர் வீட்டுக்கும் சேர்த்து ஆஸ்பத்திரி பணத்தில் பெயிண்ட் டப்பாக்கள் வாங்கணுமா ? யார்தான் எதிர்பார்த்திருக்கமுடியும், அர்த்த ராத்திரியில் வேனைவிட்டு இறங்கியவர்களை பளிச் பளிச்சென்று சான்டா கிளாஸ் வேடத்தில் பிலிப்பு போட்டோ எடுத்துவிடுவான் என்று ? ஸ்காட்லாந்து மிஷனரி கொடுத்த காமிரா, பிலிப்புக்கு இப்படித்தான் நிறையப் பயன்பட்டிருக்கிறது. இரண்டு கைகளிலும் பெயிண்ட் டின்களுடன் மிரளமிரள போட்டோவில் முழித்துக் கொண்டிருந்த ராபினை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது.

மறுநாள் பிஷப்புக்கு பிலிப்பு எழுதிய நீண்ட மனு, அதனைத் தொடர்ந்த விசாரணைக் கமிஷன், சஸ்பென்ஷன் எல்லாம் ஆஸ்பத்திரியை ஒரு எமர்ஜென்சி பிடிக்குள் கொண்டுவந்து என்றுதான் சொல்ல வேண்டும். யோசிக்கையில் இந்தச் சம்பவம் வேறு துறை திருட்டுக்களையும் கட்டுப்படுத்தியது.

பிலிப்பு இரவில் தூங்குவது உண்டோ என்னவோ ? 'ரஞ்சிதமா லஞ்சிதமா ' என்ற தலைப்பில் ரஞ்சிதம் நர்ஸ் டிஸ்சார்ஜ் பேஷண்டிடம் காசு பறிப்பதைக் கண்டித்து, கழுத்து முழுக்க பணமாலையுடம் படம் வரைந்து நோட்டாஸ் ஒட்டியது இரவில்தான். 'ரேடியோகிராபர் ஜொள்ராஜ், வீட்டில் படுக்காமல் ஸ்பெஷல் ரூம் ஐந்தில் வாட் இஸ் டூயிங் ? ' என்று பிலிப்பு அறிவிக்க, குவார்ட்டர்ஸிலிருந்து ஓடி வந்த ஜேக்கப்ராஜ் மனைவி, தன் கணவனைக் கையும் களவுமாக வேறு ஒரு பெண்ணுடன் பிடித்ததும் ஒரு இரவில்தான்.

'ஹாரர் ஆஃப் ட்ராகுலா ' என்ற பெயர் தன் பரட்டைத் தலைக்கும் பெரிய எத்துப் பற்களுக்கும் மொச்சைக் கொட்டைக் கண்களுக்கும் இரவில் திரியும் தன் சுபாவத்துக்கும் பொருத்தமான பெயர்தான் என்று பிலிப்பு சுயவிமரிசனம் செய்து கொள்வதுண்டு.

எழுபத்தோரு வயதில் இப்போது முடி முற்றிலும் நரைத்துவிட்டிருக்கிறது. பற்கள் காணாமல் போய் குழிவிழுந்த கன்னங்கள். உடல் சதையெல்லாம் கரைந்து விட்டிருக்கிறது. இடது கை-கால், வலதுபுறத்தைவிட வெகுவாக மெலிந்த நிலையில் ' கண்கள் மூடியிருக்கின்றன, தூக்கமா ?

தன்னை எல்லோரும் மாமா, அண்ணன், தாத்தா என்று உறவு சொல்லித்தான் அழைக்க வேண்டும் என்பது பிலிப்புவின் ஆசை... அதுவும் குழந்தைகள் வார்டில் உள்ள பிள்ளைகள். டியூட்டி இல்லாதபோது பிலிப்பு அதிகமாக வலம் வருவது குழந்தைகள் வார்டில்தான். 'பிலிப்பு மாமா ' என்று ஏதாவது ஒரு குழந்தை பிலிப்பு முதுகில் தொங்கிக் கொண்டிருக்கும்.

ஆஸ்பத்திரிக்கு வந்தவர்களில் பலர் பிலிப்புவைத் தேடியதற்குக் காரணம் இருக்கிறது. அவுட் பேஷண்ட்டாக வருபவர்களுக்கு பழைய ஃபைலை உடனே தேடித் தருவது, டாக்டரிடம் அறிமுகப்படுத்துவது, மருந்து வாங்கித்தந்து பிரிஸ்கிரிப்ஷனுக்கு விளக்கம் தருவது இத்யாதி இத்யாதி. இன்பேஷண்ட்டுகளுக்குப் படுக்கை தருவது, டிபன் வாங்கித் தருவது, டாக்டர், நர்ஸ்களிடம் தனக்கு வேண்டப்பட்டவர் என்று சிபாரிசி செய்வது, ஏழையாக இருந்தால் டிஸ்சார்ஜ் ஆகும்போது ஃபீஸில், சலுகை வாங்கித் தருவது... இப்படி இருந்தால் ஏன் தேடி வரமாட்டார்கள் ?

மணி ஐந்து முப்பதிரண்டு. வேதத்தை இன்னும் காணவில்லை. பிலிப்பின் கண்கள் மூடியேதான் இருக்கின்றன. லில்லி அக்காவுடன் கூடிய கல்யாண போட்டோ பழுப்பேறிக் கிடக்கிறது. ஆஸ்துமா, சளி என்று நித்தம் நோக்காடுதான் அக்காவுக்கு.

என் கல்யாணத்துக்குப் பிறகு ஒரு மாதத்தில் லில்லியக்கா இறந்து போனது. குழந்தைகளே இல்லாமல் போனது அவர்களின் மிகப்பெரிய சோகம்.

இறந்த தகவல் வந்தபோது பிலிப்பு புதிதாக எழும்பிக் கொண்டிருந்த ஐ.சி.யூ. கட்டடத்தருகே, செங்கற்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தது நினைவிருக்கிறது. மாரடைப்பு வந்த சிலர் ஆஸ்பத்திரியில் போதிய வசதியின்றி இறந்து போனதால், ஆயிரம் பேரின் கையெழுத்துடன் ஆஸ்பிட்டல் போர்டுக்கு பிலிப்பு கொடுத்த மனுவால் இந்தக் கட்டடம் உருவாகியது. லில்லியக்கா இறந்த செய்தி கிடைத்ததும், கையிலிருந்த செங்கற்களை மேலே நின்ற மேஸ்திரியிடம் கொடுத்துவிட்டு, வெகு நிதானமாகத் தன் சைக்கிளை வெளியே உருட்டிச் சென்று ஏறிய பிலிப்பு, பக்கத்தில் வந்துகொண்டிருந்த என்னைக் கவனிக்கவே இல்லை. லில்லியக்காவின் உடலருகே உட்கார்ந்தபோதும் ஆழ்ந்த மௌனம்தான். நாங்கள் ஆறுதல்

கூறியபோது பிலிப்பு சொன்ன ஒரே வாக்கியம் 'கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் '.

லில்லியக்கா இறந்த அன்று மட்டும்தான் பிலிப்பு லீவ் போட்டது. ஜெபக் கூட்டம் கூட ஒரு மாலை நேரத்தில்தான் நடந்தது. ஒரு வருடத்துக்கு ஆஸ்பத்திரி காரியங்களில் தன்னை முற்றிலுமாக மூழ்கடித்துக் கொண்ட பிலிப்புவாகத்தான் பார்க்க முடிந்தது. ஐ.சி.யூ. கட்டடத்தைத் திறந்து வைத்த பிஷப் சொன்னது நன்றாக நினைவிருக்கிறது. 'இந்த ஆஸ்பத்திரியை ஒரு சிறுவனைப் போல தன் முதுகில் சுமக்கும் பிலிப்பை பாராட்டுகிறேன். ஆஸ்பத்திரியின் வெற்றி நடைக்கு பிலிப்பு ஒரு முக்கிய காரணம். '

இன்னும்நினைவில் இருக்கிறது- வேதம் கழுத்தில் ரத்தம் வழிய வழிய அழுகின்ற தன் இரண்டு மகள்களுடன் ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தது. பிலிப்புவின் தூண்டுதலால்தான் அவளுக்கு முதலுதவி செய்யப்பட்டது. போலீஸ், கேஸ் என்று எம்.எஸ் பயந்ததால், தன் வீட்டுக்கே அவளை அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தபோது ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

வேதத்துக்கு குண்டூர் பக்கம் என்றும், அவள் கணவன் அவளை இங்கு அழைத்து வந்து குடிவைத்திருந்தான் என்றும், இரண்டு குழந்தைகள் பெற்ற பின்தான் அவனுக்கு ஏற்கெனவே மனைவி, பிள்ளைகள் இருக்கும் விஷயம் தனக்குத் தெரியவந்தது என்றும் பிலிப்பிடம் சொல்லி அழுதிருக்கிறாள். இதில் முளைத்த சண்டை அவளைக் கொல்ல முயற்சிக்கும் அளவுக்குப் போயிருக்கிறது. பிலிப்புவும் நானும் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் அவனோடு தான் வாழமுடியாது என்று மறுத்துவிட்டாள் வேதம்.

அப்போதே கவனித்தேன். வேதத்தின் மகள்கள் பிலிப்போடுதான் எப்போதும் நெருக்கமாக இருந்தனர். டியூட்டி முடிந்ததும் உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு ஐயர் கடையில் பலகாரம் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விரையும் புதிய மனிதனாகப் பார்த்தேன்.

எம்.எஸ். கோயில் பிள்ளை, போதகர் மற்றும் என் முன்னிலையில் பிலிப்பு - வேதம் திருமணம் நடந்தது. வேதத்துக்கு அப்போது முப்பது, முப்பத்திரண்டு வயதுதான் இருக்கும்.

பிலிப்பு ரிட்டயர் ஆனபோது எடுத்த குரூப் போட்டோ இருக்கிறது. கால்மேல் கால் போட்டு கம்பீரமாக அமர்ந்திருக்கும் பிலிப். எங்கள் வாயெல்லாம் சிரிப்பு. 'ஆஸ்பத்திரிய என் கண்போல உங்க கைல ஒப்படைக்கிறேன்மா ? ஸி இட் குட் ' சிரிக்காதவர்கள் கூட பிலிப்புவின் ஜோக்குக்கு சிரித்துக் கொண்டு இருக்கிறார்கள் போட்டோவில்.

ரிட்டயர் ஆனபிறகும் வார்ட்பாய் உத்தியோகம் ஜோசப் கிளினிக்கில் தொடர்ந்தது. இரண்டு பெண்களையும் சென்னையில் ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் சேர்த்துவிட்டதை பெருமிதமாக என்னிடம் சொன்னபோது, பிலிப்பு அண்ணன் தன் சொந்தப் பிள்ளைகள் இருந்தால்கூட இவ்வளவு பெருமையாகப் பேசியிருக்க மாட்டார் என்று தோன்றியது.

லீவுக்கு வரும்போதெல்லாம் போட்டோ எடுக்கும் வழக்கம் இருக்கும்போல. நிறைய போட்டோக்கள். விதவிதமான போஸ்களில் இரண்டு மகள்களும், மாநிறமானாலும் நல்ல லட்சணம்தான் அம்மாவைப் போல '

இரண்டாவது பெண் கார் விபத்தில் இறந்துவிட்டாள். அதற்குப் பிறகுதான் பிலிப்புவுக்கு இந்த நிலை. முதல் பெண் நர்ஸிங் படிக்கிறாள் என்று வில்சன் சொன்னபோது சந்தோஷமாக இருந்தது. ஆனால், அவளும் பிலிப்புவைப் பார்க்க வருவதே இல்லை என்பது அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது.

நான் சென்னைக்கு மாற்றலாகிப் போனபின் இங்கு வருவது நின்று போனது துரதிருஷ்டம்தான். கிறிஸ்துமஸ் கிரீட்டிங்ஸ் போட்டுக் கொண்டோம். அதிலும் ஏதாவது ஒரு கிண்டல் வார்த்தை இருக்கும்.

மணி ஆறு பத்து. கிளம்ப வேண்டியதுதான். 'பிலிப்பண்ணே ' என்று அழைத்தேன். தலை மெதுவாக என் பக்கம் திரும்புகிறது. கண்களில் என்ன நீரா ? 'போய் வறேண்ணே ' என்றேன். பிலிப்புவின் வலதுகரம் கட்டிலுக்கு வெளியே வந்து விழுகிறது. உள்ளங்கை திறக்கிறது. நான் கை கொடுக்கிறேன். பிலிப்புவின் ஒரு விரல் என் உள்ளங்கையை மிருதுவாகத் தடவுகிறது.

பிலிப்புவின் தலை ஜன்னல் பக்கம் மீண்டும் திரும்புகிறது. வேதம் மெயின் ரோட்டில் ஒரு சைக்கிளின் கேரியரிலிருந்து கீழிறிங்குகிறாள் காலை ஊன்றியபடி. ஆஜானுபாகுவாக ஒருவன் அவளருகில்.

***

## ஒருத்தருக்கு ஒருத்தர்

**வண்ணதாசன்**

குஞ்சம்மா என்கூட அஞ்சாவது வகுப்பு வரைக்கும் படித்தாள். அப்போதே அவள் குண்டுதான். எங்கள் வகுப்பில் குஞ்சம்மாவும் பானு என்கிற பானுமதியும் குண்டு. பானுமதி நல்ல சிகப்பு. இவள் கருப்பு. அவ்வளவுதான். ஒல்லியாக இருந்ததால் மறந்துவிட முடியுமா என்ன. முத்துலட்சுமியும், சுந்தரியும் ஒல்லி. சுந்தரியின் அண்ணன் மேல் காலெல்லாம் பாலுண்ணியாக இருக்கும். மிஞ்சியது ஒயர்மேன் சின்னையாவுடைய பெண் தங்கம்மாதான். சின்னையா என்பது அவருடைய பெயரல்ல. எல்லோரும் சின்னையா சின்னையா என்று கூப்பிட்டதால் அப்படி.

ரொம்ப நாட்களுக்குப் பின் எங்கள் வீட்டில் மச்சு எல்லாம் எடுத்து, லைட் போட்டபோது, வயரிங் பண்ண வந்தது சின்னையாதான். சின்னையா 'வி ' கழுத்து மல்பனியன் போட்டிருப்பார். அம்மன் தழும்பு முகம். ஆக்கர் வைத்த பம்பரம் மாதிரி இருக்கும். குரல் எம்.ஆர்.ராதா மாதிரி. எனக்கு எம்.ஆர். ராதா குரல் சின்னையா குரல் மாதிரியிருந்தது. எது முதலில் கேட்டதோ, அதைத்தானே பிந்திக் கேட்டது ஞாபகப்படுத்தவேண்டும்.

பானுவுடைய தம்பி குளிக்கும்போது வாய்க்கால் தண்ணீரில் முங்கிச் செத்துப் போனான் என்று சொன்னார்கள். இத்தனைக்கும் குளித்தது பிராமணக்குடி வாய்க்கால்தானாம். அத்தோடு ஜெமினீஸ் காபிப் பொடிக்கடையை மூடிவிட்டு வெளியூர் போய்விட்டார்கள். திருத்தமாகத்

தைக்கப்பட்ட கதர்ச்சட்டையும், சந்தனக் கீற்றும், பூணூலுமாக, காப்பிப் பொடிப் பொட்டலம் தருகிற பானுவின் அப்பாவும், பச்சைப் பெயிண்ட் அடித்த அந்தத் தராசு காப்பிப் பொடிப் பொட்டலத்துடன் மெதுவாகத் தணிவதும் ஞாபகம் வருகிறது.

முத்துலட்சுமி அப்பாவின் நகைக்கடை முங்கிப் போய்விட்டது. என் அண்ணனுடன் படித்த முத்துலட்சுமியின் அண்ணனை ஒரே ஒரு தடவை ரயில்வே ஸ்டேஷன் கூட்டத்தில் பார்த்தேன். அங்கு விலாஸ் காலண்டர் தவிர, கண்டிப்பாக எங்கள் வீட்டில் தொங்குகிற இன்னொரு காலண்டர் முத்துலட்சுமி அப்பா நகைக்கடைக்கு உரியது. வெள்ளை அடிக்கும்போது மர பீரோ தலையில், சினிமாப் படம் போட வெட்டின ஓட்டையுடன் ரொம்ப நாட்கழித்துஅது அகப்பட்டது. சுந்தரியின் அண்ணனை எல்லோரும் பல்லிக் குஞ்சு என்று கூப்பிடுவார்கள். பல்லிக்குஞ்சு பெரிதாகி ஆரெம்கேவி ஜவுளிக்கடையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தது. 'என்ன, சௌக்யமா இருக்கியா ' என்று கேட்டது. பாலுண்ணி அப்படியேதான் இருந்தது. சுந்தரியைப் பற்றி வெட்கப்படாமல் கேட்டிருக்கலாம். இப்போது வெட்கப்பட்டு இருக்கக்கூடாதென்று நினைக்கிறது எல்லாவற்றிற்கும் அப்போது வெட்கப்பட்டிருப்போம் இல்லையா.

வயர்மேன் சின்னையா பெண் தங்கம்மாவை ஏதோ ஓர் பாங்கில் வைத்துப் பார்த்தேன். மாதர் சங்கம், தையல் மிஷின் லோன் என்று நாலைந்து பேரைச் சுற்றிலும் நிற்க வைத்துக்கொண்டு, பாங்க் ஆபிஸருடன் சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தது. பேச்சும் முழியும் சரியில்லையே என்று படுமே அப்படியிருந்தது. அப்படியிருப்பதே சௌகரியம் என்று தோன்றி மேலும் கொஞ்சநேரம் தங்கம்மாவைப் பார்த்தேன். தங்கம்மாவுக்குத் தெரியாத சாகசம் கிடையாது போல. உச்சி வகிட்டை இடதுகைப் பெருவிரலால் சொறிந்து கொண்டாள். மூக்குத்தி என்ன பேசும்போதேவா கழன்று விழப்போகிறது ? அப்படி விழுந்துவிடுமோ என்பதுபோல் மூக்குத்தி திருகாணியைச் சரி செய்து கொண்டாள். 'அட மூதேவி ' என்று பாஸ் புத்தகத்தை வாங்கிக் கொண்டு நான் படியிறங்குகையில், தடதடவென்று என்னைத் தாண்டி இறங்கிப் போனாள்.

குஞ்சம்மா எங்கும் போகவில்லை. எங்கும் போகாதது மட்டுமல்ல. எங்கள் வீட்டைப் போலவே அவளுடைய வீடும் ரொம்ப காலமாகவே ஒரே தெருவில் இருந்தது. ஒரே தெரு என்ன ஒரே தெரு. எங்கள் தெருவேதான். சொந்த வீட்டுக்காரர்கள் ஏன் வீடு மாற்றப் போகிறோம். குஞ்சம்மா அப்பா பெரிய பிரிண்டிங் ஆபீஸ் வைத்திருந்தார்கள். அதென்னவோ அந்தக் காலத்தில் பைண்டிங் ஆபீஸ், பிரிண்டிங் ஆபீஸ் என்றுதான் பெயர் போட்டிருப்பார்கள்.

அச்சுக் கூடம் என்று போட்டது முத்தையா பிள்ளை மட்டும்தான். முத்தையா பிள்ளை அச்சுக்கூடம் இருந்த இடத்தில் இப்போது கயத்தாற்று சாய்பு ஒருத்தர் கோரம்பாய் விற்கிற கடை வைத்திருக்கிறார். நேதாஜி படம் ஓவல் சைஸில் அச்சடிக்கப்பட்ட ஸ்கூல் நோட்களைத் தயார் பண்ணி விற்பனை செய்தது குஞ்சம்மாவின் அப்பாதான். ஒரு பக்கம் அச்சாபீஸ். ஒரு பக்கம் பைண்டிங் ஆபீஸ். இது வந்து முத்தையா பிள்ளை கடையைச் சாப்பிட்டு விட்டது என்று சொல்வார்கள்.

முழுப் பரிட்சை லீவு முடிந்து, பள்ளிக்கூடம் திறக்கிற சமயம் பழைய புஸ்தகம் வாங்கி, நாங்களே பசை காச்சி, பைண்டிங் பண்ணி, கட் பண்ணப் போவது முத்தையா பிள்ளை கடைக்குத்தான். ரொம்ப போட்சாக இருந்த முத்தையா பிள்ளையே எங்களைப் பார்த்ததும் எழுந்து வந்து கட்டிங் மெஷினில் கொடுத்துக் கட் பண்ணுவதைப் பார்க்கக் கஷ்டமாக இருக்கும். மேல் கீழ் அட்டையின் கெட்டிக்கு இடையில் வெள்ளை விசிறியாக வெட்டுப்பட்ட

புஸ்தகம் அடுக்கு விரிப்பது அழகாக இருக்கும். புஸ்தகத்தைக் கையில் கொடுக்கும்போது 'நல்லா படிக்கணும் ' என்பார். முத்தையா பிள்ளையும் குஞ்சம்மா அப்பாவும் பேசிக்கொள்வதைப் பார்க்க அபூர்வமாக இருக்கும். 'என்ன அண்ணாச்சி, அப்படியா அண்ணாச்சி, ஆகட்டும் அண்ணாச்சி ' என்று குஞ்சம்மா அப்பா மிகுந்த மரியாதையோடு ஒற்றைச் சொல்லாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அந்த வயதிலேயே என்னவோ பண்ணும். அஞ்சாம் வகுப்பு ஸார்வா, ஹெட் மாஸ்டர் சிவக்கொழுந்து வாத்தியாரிடம் பேசுவது போல இருப்பதுதான் காரணம்.

முத்தையா பிள்ளை கடைக்குள் மாடக்குழியில் ஒரு பிள்ளையார் உண்டு என்பது குஞ்சம்மாவும், குஞ்சம்மாவுடைய அப்பாவும் வந்து கும்பிட்டபோதுதான் தெரியும். என்ன கும்பிட்டு என்ன பண்ண. குஞ்சம்மாவுக்கு கல்யாணமாகி, எண்ணி இருபத்திமூணே நாளில் குஞ்சம்மா மாப்பிள்ளை செத்துவிட்டார். குஞ்சம்மாவுக்கு நான் செகண்ட் இயர் படிக்கும்போதே கல்யாணம் முடிந்துவிட்டது.

கல்யாணமான பிறகு, ஆனித் திருவிழாவுக்கு குஞ்சம்மா வந்திருப்பதாக, அம்மாதான் பேசிக்கொண்டு இருந்தாள். பேராச்சியக்கா மகள் - 'குண்டு குண்டுண்ணு இருப்பா. கல்யாணத்துக்குப் பொறகு நல்லா வாழ்ந்து வடிஞ்சு ஒண்ணுபோல லெச்சணமா இருக்கா ? ' குஞ்சம்மாவை நானும் இரண்டு மூன்று நாட்களுக்கு அப்புறம் பார்க்க நேர்ந்தது.

எனக்கொன்றும் குஞ்சம்மா மெலிவாக இருப்பது மாதிரித் தெரியவில்லை. கன்னம் முன்னை விட உப்பியிருந்தது. நிறைய பரு. மூக்குத்தி. பட்டரிடம் வாங்கின திருநீறை உள்ளங்கையில் பொத்திக்கொண்டே, அவளுடைய அம்மா, அடுத்தடுத்த தங்கச்சிகள் என்று ஒன்று போலப் போய்க் கொண்டிருந்தார்கள். குஞ்சம்மா ஆண் பிள்ளைபோல இருந்தாள். அடுத்த தங்கச்சி கூட அப்படித்தான். மூன்றாவது பெண்தான் பேராச்சியக்கா ஜாடை. ஆனாலும் குஞ்சம்மாவை எனக்குப் பிடித்துத்தான் இருந்தது. என்ன இருந்தாலும், கூடப் படித்த ஞாபகம் என்பது பட்டுத்துணி மாதிரி எல்லாவற்றையும் போர்த்தி, 'இந்தா பாத்தியா ' என்று உள்ளங்கையில் ஏந்திவிடாதா.

அப்படி உள்ளங்கையில் ஏந்தி வைத்திருந்தால்தான், குஞ்சம்மா மாப்பிள்ளை இறந்து போனதைக் கேட்டபோது கஷ்டமாக இருந்தது. 'என்னை விடக் கெட்டிக்காரன் உலகத்திலே உண்டாண்ணு, சீமையில் இல்லாத மாப்பிள்ளையாக் கொண்டாரப் போகிற மாதிரிக் குதிச்சான் ' துட்டு இருந்தால் உன் மட்டுக்கு 'ண்ணு தலையிலே ஓங்கி ஒரு இறுக்கு இறுக்கீட்டாரு ஆண்டவன் ' -இப்படியெல்லாம் ஒரு ஆம்பிளையால்தான் இன்னொரு ஆம்பிளை பற்றிக் கூற முடியும். நான் முடி வெட்டிக்கொள்ள, சலூனில் குனிந்திருக்கும்போது, வாசலில் குஞ்சம்மா மாப்பிள்ளை இறந்து போனதை வைத்து, குஞ்சம்மா அப்பாவைப் பற்றி இவ்வளவு ஆங்காரமாகச் சொல்லிக் கொண்டிருந்தது சைக்கிள் கடை சுப்பையாப் பிள்ளை.

பெயர்தான் அப்படியே தவிர, சைக்கிள்கடை வைத்திருந்த காலமெல்லாம் மலையேறி ரொம்ப நாளாகிவிட்டது. அவருடைய இரண்டு பெண் பிள்ளைகள், கட்டிக் கொடுத்த இடம் சரியில்லாமல், வீட்டிற்கு வந்து தோசைக்கு அரைத்துக் கொண்டிருக்கிறது. சுப்பையா பிள்ளை சம்சாரம் முறுக்குச் சட்டியை அடுப்பில் வைக்கவில்லை என்றால், இவர் இப்படி மேல்துண்டு கூடப் போட்டுக் கொள்ளாமல்தான் அலைய வேண்டும். அவருடைய பையன் முனிசிபாலிட்டியில் பில் கலெக்டராக இருக்கிறான். எல்லாம் சேர்மன் பா.ராமசாமி புண்ணியம். அவனுக்குப் பெண் கேட்டு, குஞ்சம்மாவைக் கொடுக்கவில்லை போல. அதுக்காக இப்படியா முடி வெட்டுகிற கருப்பையா அவர் பாட்டில் வெட்டவேண்டியதுதானே. சுப்பையாப் பிள்ளை

ஏதோ எல்லாவற்றையும் அப்படியே பிட்டுப் பிட்டு வைக்கிற மாதிரித் தலையைத் தலையை எதற்கு ஆட்டவேண்டும். இரண்டு பேரையும் அப்படியே அரசடிப் பாலத்து வாய்க்காலுக்குள் தள்ள வேண்டும் என்கிற மாதிரி இருந்தது. இதில் சுப்பையாப் பிள்ளை வேறு கண்ட கண்ட இடத்தில் சொறிந்து கொண்டிருந்தார்.

குஞ்சம்மா அப்பா இதற்கெல்லாம் கவிழ்ந்து போய்விடவில்லை. வீட்டு ஏறுநடையை விட்டு சைக்கிளை இறக்கிவைத்து, எப்போதும் போல சகுனம் பார்த்துக் கொண்டு நின்றார். சகுனம் சரியில்லாவிட்டால், குஞ்சம்மா அம்மாவைக் கூப்பிட்டு கொஞ்சதூரம் போய்விட்டு எதிரே வரச்சொல்லி அப்புறம்தான் புறப்படுவார் என்று சொல்வார்கள். இப்படி ஒன்று இரண்டு ஜாஸ்தியாகச் சொல்வார்களே தவிர, யாரும் அப்படியெல்லாம் பார்த்ததில்லை. நான் குஞ்சம்மா அப்பா சகுனம் பார்க்கிறார் என்று தெரிந்ததும், என் சகுனத்தில் அவர் போவாரோ மாட்டாரோ பாவம் என்று தயங்கியபடியே வேகமாக வருகிறேன். அவர் முகத்தைப் பார்க்கவில்லை. 'எம்பெருமானே ' என்று ஒரு சத்தம் மட்டும் கேட்கிறது. உச்சந்தலைக்கு மேல் காக்காய் பறக்கும்போது காற்று விசிறுமே அதுபோல் சிறு விசிறல் கேட்டது. குஞ்சம்மா அப்பா சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார் திரும்பிப் பார்க்கும்போது.

திரும்பி என்றால் திரும்பியா பார்க்க முடியும். லேசாகப் பக்கவாட்டில் பார்த்தபோது, குஞ்சம்மா அப்பாவின் வேஷ்டியோ, மேல் துண்டோ விசிறினது மாதிரி இருந்தது. வாசனைத் திருநீறு மாதிரி ஒரு செகண்ட் மூக்கில் பட்டது. திருநீறு வாசனை மட்டும்தான் நிஜம். அப்படி விசிறினதும் வெள்ளையாகத் தெரிந்ததும் வேட்டியில்லை. புறா. மாவடிப்பிள்ளை வீட்டுப் புறா. அந்த வீட்டுத் தோட்டத்தில்தான் கூண்டு வைத்துப் புறா வளர்க்கிறார்கள்.

'போ. போவ் ' என்று மாவடிப்பிள்ளை கூண்டைத் திறந்து விட்டுத் தானியம் விசிறும்போது நாப்பது, ஐம்பது என்று புறாக்கள் சடசடவென்று அடிக்கும். பொன்வண்டுக் கலரும் சாம்பல் கலரும் தான் அதிகம். வெள்ளைப் புறா கொஞ்சம்தான். வெள்ளைப் புறா நடக்கிறதைப் பார்க்க வேண்டும். உயர்ந்த மதில் சுவர்கள், கட்டிட விளிம்புகள் எல்லாம் அவைகளுக்கு பிடிக்குமோ என்னவோ. தோகை விரிக்கிற மாதிரிச் சிறகை சிலுப்பிக் கொண்டு அது நடந்து கொண்டிருக்கும். நாம் அதைப் பார்த்து, அதைப் பார்க்க இன்னொருத்தரைக் கூப்பிடும்போது, அதைத் தெரிந்துக்கொண்டது மாதிரிச் சட்டென்று பறக்கும். அப்படிச் சடசடவென்று புறாக்கள் பறக்கச் சரிவாக அடிக்கிற வெயில், வெளிச்சமாக விழுந்து கொண்டிருக்க மாவடிப்பிள்ளை வீட்டுச் சந்துக்குள் இருந்து கேடி. வேலாயுதம் அண்ணன் வந்து கொண்டிருந்ததைப் பார்க்க நன்றாக இருந்தது.

கேடி என்றால் கேடி எல்லாம் ஒன்றுமில்லை. என்னமோ அப்படி ஒரு பெயர் வைத்திருக்கிறார்கள். என்னைவிட மூன்று வயது வேண்டுமானால் கூட இருக்கும். கேடி. வேலாயுதம் அண்ணன் படித்தது சுந்தரமூர்த்தி ஓதுவார் ஹைஸ் ஸ்கூலில். நாங்கள் படித்தது வயற்காட்டுப் பள்ளிக்கூடம். ரயில்வே ஸ்டேஷனுக்கு அவர்கள் பள்ளிக்கூடம் தாண்டித்தான் போக வேண்டும். ஒருதடவை அந்தப் பக்கம் போகும்போது ரோடு முழுவதும், அறுவடைக்குப் பிணையல் அடித்துக் கொண்டிருந்தார்கள். வைக்கோல் வாசம் மூக்கைத் துளைக்கிறது. 'கண்ணும் கண்ணும் பேசியது உன்னால் அன்றோ ' என்ற பாட்டு லவுட் ஸ்பீக்கரில். சுந்தரமூர்த்தி ஓதுவார் ஸ்கூலில் ஸ்போர்ட்ஸ் நடக்கிறது. கேடி. வேலாயுதம் அண்ணன் தான் சூப்பர் சீனியர் சாம்பியன். பச்சை வெல்வெட் டிராயரும் பனியனுமாக வேலாயுதம் அண்ணன் மேடையிலிருந்து கப் வாங்கிக் கொண்டு வரும்போது எல்லாம் விசில் அடித்தார்கள்.

வேலாயுதம் அண்ணன் பீடிக் குடிப்பதைப் பின்பு ஒரு நாள் பார்த்தபோது கூட எனக்கு மரியாதை குறையவில்லை. வேலாயுதம் அண்ணன் போலீஸாகவோ, ஜெயில் வார்டனாகவோ வேலை கிடைத்துப் போய்விட்டதாகச் சொன்னார்கள். இந்த ஊரில் தான் வேலையாம். ஆனால் பார்க்கமுடிந்ததே இல்லை.

வேலாயுதம் அண்ணனுடைய அப்பாவைத்தான் அடிக்கடி பார்ப்பேன். அவர் யாரையும் ஏறிட்டுப் பார்க்கவே மாட்டாரோ என்னவோ. குனிந்துக்கொண்டேதான் நடப்பார். வலதுகால் எப்போதுமே வீங்கியிருக்கும். பெரிய கட்டுப்போட்ட வலதுகாலை இழுத்து இழுத்துப் பக்கவாட்டில் நகர்த்திக் கொண்டே, இடது காலால் நேராக நடந்து வருவார். தலை நரைத்துப் பறந்துக் கொண்டிருக்கும். சிகரெட் குடித்துக் குடித்துத் தொங்கின உதட்டில் ஒரு இடம் மட்டும் சிவந்த வெள்ளையாக இருக்கும். ஒரு வேலை கேடி. வேலாயுதம் அண்ணன் அப்பாதான் கேடியாக இருந்திருப்பாரோ என்று தோன்றும். 'அஞ்சு வருஷம், பத்து வருஷம்னு ஒவ்வொருத்தனும் குத்தகைக்கு எடுத்தமாதிரி ஆடி முடிச்சுட்டுத்தானே இந்தத் தெருவுல, வேறு வழியில்லாமல், தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டு கிடக்கான் ' என்று மீசைக்கார ஆயான் பொதுப்படையாக, இந்தத் தெரு ஆண்பிள்ளைகளைப் பற்றி சொன்னது சரியாகத்தான் இருக்கும்போல.

சில விஷயங்களைப் பார்த்தால் எல்லாம் சரியாக நடந்துக்கொண்டிருப்பது மாதிரித்தான் இருக்கிறது. குஞ்சம்மா, இவ்வளவுக்கு அப்புறமும், பத்து படித்துவிட்டு டாச்சர் ட்ரெய்னிங் முடித்தது, அப்பா கிளாப்டன் பள்ளிக்கூடத்தில் பார்த்தது, அப்படி வேலை பார்த்த குஞ்சம்மாவை மறுபடியும் கேடி. வேலாயுதம் அண்ணன் கட்டிக்கொண்டது எல்லாம் அப்படிச் சரியாக நடந்த விஷயங்கள் அல்லாமல் வேறு என்ன.

'அச்சாபீஸ்காரன் துட்டுக்குல்லா போய் விழுந்திட்டான். நம்ம திருநா 'க்கரசு ' என்று கேடி. வேலாயுதம் அண்ணனின் அப்பாவைப் பார்த்துச் சொன்னார்கள். அவர் விழவும் இல்லை. எழுந்திருக்கவும் இல்லை. எப்போதும் போலத்தான் தலையைக் குனிந்து கொண்டே நடந்துக் கொண்டிருந்தார். வேலாயுதம் அண்ணன் குஞ்சம்மாவைக் கட்டிக்கொண்டதற்காக அவருடைய கால் வீக்கம் குணமாகிவிடுமா என்ன. அதுவுமில்லை. வேலாயுதம் அண்ணனின் அம்மா இன்னும் முக்குப் பம்ப்பில்தான் ஏழு நடை என்று வீட்டிற்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டு போகிறாள்.

இதைவிடச் சுவாரசியம் சீவலப்பேரி பெரியம்மை என்னிடம் கேட்டதுதான். 'யே.சுந்தரம். அச்சாபீஸ்காரர் மகளும் வேலாயுதமும் லவ் பண்ணியில்லா தாலி கட்டிகிட்டாங்களாம். நிசந்தானா ? '

நான் ஒன்றும் சொல்லவில்லை.

'ஒருத்தருக்கொருத்தர் புடிச்சுப் போச்சாம் 'லா ? ' - பெரியம்மை மேற்கொண்டும் என்னைக் கேட்டாள். என் வீட்டுக்காரிக்கு ஒரே சிரிப்பு. அந்த இடத்தில் ஒன்றும் சொல்லாமல், வீட்டுக்குள் வந்ததும், 'உங்க பெரியம்மை இங்க்லீஷ்ல எல்லாம் பேசுதாங்களே ' என்று சொன்னாள்.

அவ்வளவுதானா. அந்த பெரியம்மை சொன்ன ஒரு சொல்தானா உன் காதில் விழுந்தது. அதற்கு மேல் உனக்கு ஒன்றும் தோன்றவில்லையா. இந்தத் தெருவில் ஒருத்தி சின்ன வயதில், கல்யாணம் ஆன மூணே வாரத்தில் கஷ்டப்படுகிறாள். அப்புறம் மேற்கொண்டு படிக்கிறாள்.

வேலைக்கும் போகிறாள். மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாள். இதில் உனக்கு ஒன்றும் தோன்றவில்லையா. சந்தோஷமில்லையா. அப்படியே அவர்கள் விருப்பப்பட்டுக் கல்யாணம் பண்ணியிருந்தார்கள் என்றால் அது எவ்வளவு நல்லது.

'லவ் பண்ணியிருந்தா என்ன தப்பு ' - நான் சொன்னேன்.

'உங்களுக்கு எதுதான் தப்பு இல்லை ? ' - இதைச் சொல்லி, முதுகுக்குப் பின்னே எறிந்துவிட்டு மேலும் மேலும் அவள் போய்க் கொண்டே இருந்தாள். அடுப்படிப் புகை சுழன்று, அவளுக்கு முன்னால் புறவாசலுக்குப் போய்க் கொண்டு இருந்தது.

எனக்குப் பெரியம்மையைப் பார்க்கவேண்டும் போல இருந்தது.

'பெரியம்மை, உனக்காவது அப்படித் தோணுச்சே '.

# முழுக்கை சட்டை போட்டவரும் கதிரேசன் என்பவரும்

**வண்ணதாசன்**

'சங்கர நாராயணன் வீடு இதுதானே ' என்று கேட்டவர் முழுக்கைச் சட்டை போட்டுக் கொண்டிருந்தார். கையில் ஒரு தகரப்பெட்டி இருந்தது. இதுவரை பார்த்திராத ஒரு சின்ன அளவில், மட்டமான ஒரு பச்சை வண்ணம் அடிக்கப்பட்டதாக, நீலப் பூக்கள் நான்கு முனைகளிலும் வரையப்பட்டு அந்த பெட்டி இருந்தது.

அவர் யாரைப் போலவும் இருந்ததாக யோசித்துக் கொள்ளமுடியும். ரயில் பெட்டியின் நெரிசலில் தூங்கிக் கொண்டே எதிரே வருகிறவர். சாராயக் கடை வாசலில் மேலும் குடிப்பதற்கு காசின்றி நிற்பவர். கல்யாணப் பந்தியில் உட்கார்ந்து எழுப்பி வெளியே தள்ளப்பட்டவர். மூணு சீட்டு விளையாடுவதாகக் கைது செய்யப்பட்டு, கோர்ட் வராந்தாவில் போலீஸ்காரர்களுக்கு, வெளியே போய்க் கம்பித் தூக்கில் டா வாங்கி வருகிறவர், இப்படி யாராகவும் அவரை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

பக்கத்தில் நின்றவருக்கும் அவருக்கும் அப்படியொன்றும் அதிக வித்யாசமில்லை. மஞ்சள் டா ஷர்ட்டும் கருப்புக் காலரின் தொய்வும் கூடு கூடான திறந்த மார்பு எலும்புமாக இருந்தவர் கையில் ஒரு கிழிந்த தோல்பை இருந்தது. தோல் பை என்றால் அப்படியே பேகம்பூரில் பதனிட்டு வந்த தோலில் வழுவழு என்று செய்யப்பட்டதாகத்தான் இருக்க வேண்டுமா என்ன ? கைப்பிடி ஒரு நிறத்தில், பக்கிள் நான்கும் நான்கு விதமாக, செருப்புத் தைக்கிறவரிடம் கைத்தையலாக ஏழு கொண்டிருந்தாலும் தோல் பைதானே. அதை முழங்கையில் தொங்கப் போட்டுக் கொண்டு, ஒருவிதமாகத் தயாராகச் சிரித்துக்கொண்டே இருந்தார். இதில் கொஞ்சம் நல்லவிஷயம் என்னவென்றால், கம்பிக்கதவுக்கு அந்தப்புறம் சரிந்து கிடக்கிற நந்தியாவட்டைப் பூவைப் பறித்து, கையில் தொங்குகிற பையோடுஅவ்வப்போது அவர் முகர்ந்து கொண்டிருந்ததுதான்.

'காலேஜில் வேலை பார்க்குற சங்கர நாராயணன் ' - சற்று இழுத்துக்கொண்டே அவர் ஏறிட்டுப் பார்க்க, 'ஆமாம், நான்தான் ' என்று நான் கொக்கியை நீக்கிக் கதவைத் திறக்க வேண்டியதாயிற்று. ஒவ்வொரு நீக்கப்படுகிற தாழ்ப்பாளும், திறக்கப்படுகிற ஒவ்வொரு கதவும் என்னென்னவெல்லாமோ செய்துவிடுகிறது அல்லவா. சத்தம் கேட்டு உள்ளேயிருந்து ஓடி வந்து 'யாருப்பா வந்திருக்காங்க ' என்று சுந்தர் கேட்கிறான். என்ன சொல்ல முடியும்.

'உங்க ஸன்னா ? ' என்று என்னைக் கேட்டவர், 'வாட் இஸ் யுவர் நேம் ' என்று ஆங்கிலத்தில் பையனிடம் கேட்டார். அதே ஆங்கிலத்தில் 'ஐ நோ யுவர் ப்ரதர் நமசு ' என்றார். அது தமிழாக இல்லாமலும் ஆங்கிலமாக இல்லாமலும் இருந்தது. இரண்டுக்கும் மத்தியிலான ஒரு நெரிசலில் நான் நின்ற சின்ன வினாடியைப் பயன்படுத்திக்கொண்டு, 'கம் இன் கதிரேசன். யோசிக்காதீங்க. சங்கர நாராயணன் நமக்கு அந்நியர் இல்லை. ஒரே ஊர். தி வெரி சேம்... ராஜபாளையம் ' என்று அவரே கதவை இன்னும் அகலத் திறந்து வழி செய்தார்.

கதிரேசன் ரப்பர் செருப்புக்களுடன் உள்ளே வருகையில், கரண்டைக்கு வெகு உயரத்தில் முழுக்காற் சட்டை மடிப்பு இருந்தது. தோல் பையை விடாமல் தொங்க விட்டுக் கொண்டு இருப்பதாலோ என்னவோ, அந்தப் பக்கத்து கையின் தையல் கூடப் பனியனில் கிழிந்திருந்தது. குறைவே இல்லாமல் சம பங்காக இரண்டு பேர் பேசும்போது பீடி வாசனை அடித்தது.

'யாருப்பா இவுங்க '-இந்தக் காலத்தில் எந்தச் சின்னப் பிள்ளை பதில் வாங்காமல் கேள்வியை நிறுத்தியது. சுந்தர் நிறுத்த, திரும்பத் திரும்ப யார் யார் என்று கேட்டுக் கொண்டே இருக்கையில்,வாசல் திரைச்சீலையை உள்ளே இருக்கிறவர்கள் வந்து இழுத்து மூடிவிட்டுப் போனால் என்ன அர்த்தம் என்று தெரியாதா.

'வெளியே வைத்துப் பேசி அனுப்புங்கள் '

அவருக்கு இந்த சங்கேதங்கள் எல்லாம் அத்துப்படி போல.

'ஏன் சங்கர நாராயணன் ஸார். நாம இங்கேயே வெளியில் உட்கார்ந்து பேசுவோமே. உள்ளே போய் டிஸ்டர்ப் பண்ணவேண்டாம் '--மூன்று பேர்களுக்கு இரண்டு நாற்காலிகள் மட்டுமே இருந்தும், அவர் முதலில் உட்கார்ந்து கொண்டார். பச்சைப் பெட்டியை அவர் தன்னுடைய வலது பக்கம் வைத்துவிட்டு, பித்தான்களற்ற அந்த முழுக்கைச் சட்டையை வேகமாக அகற்றி, கையில் கட்டியிருந்த காசிக் கயிற்றைத் தளர்த்திவிட்டுக் கொண்டார்.

தனக்குத் தண்ணீர் வேண்டுமென்று சொல்லாமல், 'தண்ணீர் ' குடிக்கிறீங்களா மிஸ்டர் கதிரேசன் ' என்று கேட்டார். கதிரேசன் ஆகப்பட்டவர், நாற்காலிகள் போடப்பட்டிருக்கிற தாழ்வாரத்தின் ஓரமாகச் செருப்பையை கழற்றிப் போட்டுவிட்டு, அதன் பக்கத்திலேயே தன்னுடைய கைப்பையையும் வைத்தார். வசமில்லாமல் பை ஒரு முறை சரிய, மீண்டும் நிமிர்த்தி வைத்துக் கொண்டு இருக்கையில் நான் மூன்றாவது ஒரு நாற்காலியை எடுத்து வரவும், தண்ணீர் கொண்டு வரவும் உள்ளே போனேன்.

'இவங்க ரெண்டு பேரும் யாருப்பா ' -- என்று எத்தனாவது தடவையாகவோ சுந்தர் கேட்டுக் கொண்டு என் பின்னாலேயே உள்ளே வந்தான். அப்பாவின் காலை கட்டிக்கொண்டு வருவது சிறுபிள்ளைகளின் சுபாவம்தான். ஆனால் லேசாக எரிச்சல் வர ஆரம்பித்திருந்தது சுந்தர் என் காலைக் கட்டிக் கொண்டு கூட வரும்போது.

முதலில் ஒரு டம்ளரையும், அப்புறம் நேரடியாகச் செம்பையும் வாங்கித் தண்ணீர் குடித்தார். கடக் கடக் என்று மிகுந்த தாகத்துடன் அவர் குடிப்பதையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தர்,

'அது என்னப்பா, தாத்தா தொண்டையில் பால் மாதிரிக் குதிக்குது ' என்று கேட்டான். அவன் கேட்டதை விட, அதற்கு அவர் பதிலாகச் செய்ததுதான் ஆச்சரியம்.

படக்கென்று நாற்காலியில் இருந்து தரையில் தாவி, கால்களுக்கிடையில் கைகளை ஊன்றிக் கொண்டு குதித்தார். ஒவ்வொரு அடியாக மூன்று நான்கு முறைகள் சுவரின் கடைசி வரை தவ்வினவர், செருப்புக்கள் வைக்கப்பட்டிருக்கிற, மின்சார மீட்டர் இருக்கிற மடங்கலிலிருந்து உடம்பைத் திருப்பிக் கொண்டு, மறுபடியும் ஒரு தவளை போலத் தவ்விக் கொண்டும், தவளை போலச் சத்தமிட்டுக் கொண்டும், சுந்தர் பக்கமாகப் போய்

'தவளையை முழுங்கிட்டேன். மாஜிக். அதான் தொண்டையில குதிக்குது ' என்றார். அவருக்கு முன்னை விடவும் வியர்த்திருந்தது. செருகுவதற்கு வளையம் இல்லாத இடுப்பு பெல்ட் தொங்கிக் கொண்டிருந்தது. கட்டியிருந்த வேட்டி விலகி உள்ளாடை வழியாக, அவருடைய தளர்ந்த பீஜங்கள் தெரிந்தது.

மேலும் அவிழ்ந்துவிடாமல் வேஷ்டியைச் சரி பண்ணிக் கட்டிக் கொண்டே அவர் நாற்காலியில் உட்கார்ந்தபோது துப்புரவாகச் சிரிப்பே அற்ற ஒரு முகத்தை அவர் அடைந்திருந்தார். இதுவரை பார்த்தே இராத துயரமும் சிறுமையும் நிரம்பிய ஒரு மனித முகமாக அது இருந்ததை மேலும் அனுமதிக்காமல் சட்டென்று புரட்டித் தள்ளினவராக என்னைப் பார்த்தார்.

'மாஜிக்தான் என் தொழில் மிஸ்டர்.சங்கர நாராயணன் ' என்றார்.

'உங்கள் பாங்க் மேனேஜர் அண்ணன் நமசுக்குத் தெரியும். அவர்கள் கிளையில் என் நிகழ்ச்சி நடத்தியிருக்கிறேன் ' என்றார்.

என் அண்ணன் மேனேஜர் இல்லை. ஒரு நீண்ட நாள் ஊழியன் மட்டுமே. ஆனால் அதை இப்போது சொல்ல அவசியமென்று படவில்லை.

'அறுபதுகளில் என் வித்தை காண்பிக்கப்படாத எலிமெண்ட்ரி ஸ்கூல், ஹைஸ்கூல்களே சென்னை மாகாணத்தில் கிடையாது ' என்று சொல்லியபடி பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தார். கதிரேசன் என்பவர் சுவர் ஓரமாக வைத்த கைப்பையைத் திறந்து, ஒரு கிழிந்துபோன போட்டோ ஆல்பத்தை எடுத்துப்பணிவுடன் அவர் கையில் கொடுத்தபோது, ஒரு புகைப்படம் அதிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

நான் எடுத்துப் பார்த்தேன். கருப்பு வெள்ளையில் கவர்னர் ஸ்ரீபிரகாசா இருந்தார். முழுக்கைச் சட்டை மேல் ஒரு வெயிஸ்ட் கோட் மாதிரி இவர் அணிந்திருந்தார்.

என்னை நாற்காலியைப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக் கொள்ளச் சொல்லி, அந்த ஆல்பத்தை தன் மடியில் வைத்துக் கொண்டு வருடவாரியாக அவர் காண்பிக்கத் துவங்கினார்.

காமராஜருடன் இருப்பது மாதிரி ஒன்று. ராமசாமி ராஜா கூட ஒன்று. சேவியர் கல்லூரி சூசை அடிகள் தலையில் இவர் பூக்களாகக் கொட்டுவது மாதிரி ஒன்று. ஜி.டி. நாயுடு ஒன்று. வயதில்

மிகச் சிறியவராகத் தென்பட்ட குன்றக்குடி அடிகளாருடன் மேடையில் அமர்ந்தபடி பேசிக் கொண்டிருப்பது மாதிரி ஒன்று.

பத்மினியுடன் இருக்கிற ஒரு படத்தைக் காட்டும்போது, 'வஞ்சிக்கோட்டை வாலி 'பனில் போட்டி டான்ஸ் வருமில்லையா, அதைப் படம் பிடிக்கிற அன்றைக்கு ஜெமினியில பத்து நிமிஷம் மாஜிக் ஷோ காட்டினேன். வாசன் ஸார் முழு நூறு ரூபாய் நோட்டு ஒன்று கொடுத்தார் ' என்றார். எனக்கு பத்மினியை அந்த உடையில் ராஜாதேசிங்கு படப்பாட்டுப் புத்தகத்தில்தான் பார்த்த ஞாபகம் இருக்கிறது.

'இது யாரு தெரியுமா. ஃப்ரண்ட் ராமசாம். நிஜமாகவே எனக்கு ஃப்ரண்ட் 'என்றார். அகலமாக டை கட்டி, தொப்பி வைத்து ராமசாமி சிரித்துக் கொண்டிருந்த சிரிப்பு அப்பழுக்கற்று சிநேகபூர்வமாக இருந்தது.

'நீங்க ஒருஹெல்ப் பண்ணனும் மிஸ்டர். சங்கர நாராயணன். யூ ஆர் எ காலேஜ் லெக்சரர். உங்களுடைய கல்லூரியில் ஒரு புரோகிராமுக்கு ஏற்பாடு பண்ணனும். ஒரு மணி நேரம் என்றால் ஒரு மணிநேரம். ஹாஃப் அன் அவர் என்றால் ஹாஃப் அன் அவர். உங்களுடைய சௌகரியம். கலெக்ஷன் பண்ணினாலும் சரி. நீங்களா ஒரு அமௌண்டைக் கொடுத்தாலும் சரி. எனக்கு சந்தோஷம்தான் '

நான் மிகுந்த காரண காரியங்களுடன் என்னுடைய இயலாமையைச் சொல்ல வேண்டியிருந்தது. இந்தக் காலக் கல்லூரிச் சூழ்நிலை, மாணவர்களின் ருசிகள், எலும்பேயற்ற சினிமா நடனங்கள், மூன்று வயதுப்பையனுக்குக் கூட இன்று தேவைப்படுகிற வேகமான அதிர்வுகள் என்று எப்படி யெல்லாமோ நான் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

மழை வருவது போல் சற்று மேக மூட்டமாக இருட்டுக் கவிந்து கொண்டிருந்த காலை நேரத்தில், அவருக்கு உதவ முடியாதபடி இருக்கிற நிகழ்காலத்தை மிகக் குறைந்த சொற்களில் சொன்னால் அவர் வருத்தப்படக் கூடும் என்று தோன்றியது.

முப்பது வருஷங்களுக்கு முன்னால் அவர் மண்ணைப் பொரிகடலையாக்கி இருப்பார். பொரிகடலையை ஆரஞ்சு மிட்டாயாகக் குலுக்கிப் பிள்ளைகளுக்கு மத்தியில் வீசியிருப்பார். வாயிலிருந்து சரம் சரமாகக் கலர் பேப்பரை உருவியிருப்பார். ஒரு சிறு துண்டு ரோஸ் உல்லன் நூலை விழுங்கிவிட்டு தொப்புள் குழியிலிருந்து ஒரு நூல்கண்டு பருமனுக்கு எடுத்துப் போட்டுக் கொண்டே இருந்திருப்பார்.

மேல் டப்பாவில் போட்டு மூடின கோழி முட்டை கீழ் டப்பாவிற்கு வந்திருக்கும். ஹெட்மாஸ்டர் கையில் போட்டிருந்த மோதிரம் எட்டு சி. ஜெகன்னாதன் ஜாமெட்ரி பாக்ஸில் இருக்கும். நிஜமாகவே எல்லோரும் சிரித்திருப்பார்கள். காலணா, அரையணா, பத்து நயா பைசா, இருபத்தஞ்சு நயாபைசா என்று வைத்திருந்தால் கூட ஒவ்வொரு பள்ளிகூடத்திலும் நிறைய பணம் பிரிந்திருக்கும். அவர் மைனர் செயின் போட்டிருந்திருக்கலாம். பார்வையாளர்களுக்கு அதிகம் கண்ணில் படுகிற விரல்களில் பருமனான கல் வைத்த மோதிரம் இருந்திருக்கக் கூடும். அவர் முழுக்கைச் சட்டைக்குள் காசிக் கயிறுக்குப் பதிலாக ஃபேவர் லூபா அல்லது ஹென்றி ஸான்டெஸ் கடிகாரம் தங்கமினுக்குப் பட்டியுடன் ஓடிக் கொண்டு இருந்திருக்கும். கதிரேசன் கூடக் கிழியாத சொந்த உடைகள் அணிந்திருக்கலாம்.

'நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது சங்கர நாராயணன் '

அவர் குரல் காய்ச்சல்காரருடையது போல இருந்தது. நாக்கு உலர்ந்துவிட்டது போலவும், உதடுகள் வெடித்துத் தோலுரித்துவிட்டன போலவும் எப்படியெல்லாமோ அது ஒலித்தது.

'இந்தக் காலனியில் பத்து இருபது பிள்ளைகள் இருந்தால் கூடக் கூப்பிடுங்கள். ஒரு சிறு ஷோவுக்கு ஏற்பாடு செய்யுங்கள். உங்கள் பையன் சுந்தரின் நண்பர்கள் கூடப் போதும் '

சுந்தருக்கு அவனைப் பற்றிப் பேசுவது புரிந்தது தவிர, என்ன பேசுகிறார் என்று புரியவில்லை. என்னையும் அவரையும் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே நான் உட்கார்ந்திருந்த நாற்காலியில், என் மடியில் அவனும் வந்து உட்கார்ந்து கொண்டு, அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

'இரண்டுபேரும் இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகிறீர்களா ? ' அவருடைய முகத்தைப் பார்த்துக் கேட்பதைத் தவிர்ப்பதற்காக, நான் அந்த இன்னொருவரின் பக்கத்தில் போய்க் கேட்க நெருங்கினேன்.

'புறப்படுவோமா கதிரேசன் ' - எனக்குப் பக்கவாட்டில் இருந்து அந்தக் குரலுடன் எழுந்து, தகரப் பெட்டியும் முழுக்கைச் சட்டையுமாக இரும்புக் கதவை அவர் திறந்த போது, ஏற்கனவே தானும் அப்படித் தீர்மானித்து விட்டது போலக் கதிரேசன் என்பவரும், அந்தத் தோல் பையைக் குனிந்து எடுத்துக் கொண்டிருந்தார்.

# யுத்தம்

**லூகி பிராண்டெலோ (தமிழில் : நாகூர் ரூமி)**

ரோம் நகரிலிருந்து இரவு எக்ஸ்பிரஸில் வந்த பிரயாணிகள் சுல்மானாவுடன் மெயின்லைனில் இணையும் 'ந்தக் காலத்து பாணி சின்ன லோக்கல் ரயிலில் தங்கள் பிரயாணத்தைத் தொடர்வதற்கு சின்ன ஸ்டே 'னான பாப்ரியானோவில் விடியும் வரை தங்க வேண்டியிருந்தது.

விடியலில், 'டைசலும் புகையுமாக இருந்த, ஏற்கனவே ஐந்து பேர் தங்கள் இரவைக் கழித்திருந்த ஒரு இரண்டாம் வகுப்புப் பெட்டிக்குள் ஏற்றப்பட்டாள் ழ்ந்த தூக்கத்தில் இருந்த ஒரு தடித்த பெண்மணி. ஏறக்குறைய வடிவமற்ற கட்டு ஒன்றைப்போல. 'வளுக்குப் பின்னால் மூச்சிறைத்துக் கொண்டும், முனகிக் கொண்டும், சிறிய, மெல்லிய, பலவீனமான, மரண வெளுப்புக் கொண்ட முகத்துடன், சிறிய ஒளி பொருந்திய கண்களுடன் சங்கடப்பட்டுக் கொண்டும் கூச்சமுள்ளவன் போன்ற தோற்றத்துடன் 'வள் கணவன் பின் தொடர்ந்தான். கடைசியாக ஒரு மாதிரி இடம் பிடித்துக்கொண்டு, உதவியதற்காக சக பிரயாணிகளுக்கு நன்றி கூறினான் பணிவாக. தன் கோட்டுக் காலரை கீழே இழுத்துவிட முயற்சித்துக்கொண்டிருந்தாள் 'வன் மனைவி. 'வள் பக்கம் திரும்பி பணிவாக விசாரித்தான்.

' இப்பொழுது உனக்கு எப்படி இருக்கிறது ? '

'வனுக்கு பதில் சொல்வதற்கு பதிலாக தனது முகத்தை மறைக்கும் விதமாய் காலரை மேலிழுத்து விட்டுக்கொண்டாள். ' 'சிங்கமான உலகம் ' என்று சோகமான புன்னகையோடு லேசான குரலில் சொல்லிக் கொண்டான் 'வன். மேலும் தனது பாவப்பட்ட மனைவி ஏன்

இரக்கப்பட வேண்டியவள் என்று தன் சக பிரயாணிகளுக்கு விளக்க வேண்டியது தனது கடமை என்று நினைத்தான்.

'வளது ஒரே மகனை யுத்தம் 'வளிடமிருந்து எடுத்துக் கொண்டிருந்தது. 'வள் மகனுக்கு இருபது வயது. 'வனுக்காக தங்கள் முழு வாழ்வையும் 'வர்களிருவரும் 'ர்ப்பணித்திருந்தனர்.

'வனுக்காக சுல்மானாவில் இருந்த தங்கள் வீட்டைவிட்டு 'வனைத் தொடர்ந்து ரோம் நகருக்கு வந்திருந்தனர். 'ங்குதான் 'வன் மாணவனாகவும் குறைந்த பட்சம் று மாதத்திற்காவது போர்க்களத்திற்கு 'னுப்பப்பட மாட்டான் என்ற உத்தரவாதத்தோடு 'வனுக்கே விருப்ப மிருந்தால் மட்டும் போருக்குச் செல்லக்கூடியவனாகவும் இருந்தான். திடாரென்று இப்போது மூன்று நாட்களுக்குள் போருக்குச் செல்ல வேண்டும் என்றும் 'வர்கள் சென்று 'வனை வழியனுப்பும் படியாகவும் தந்தி வருகிறது.

தனது பெரிய கோட்டுக்குள் 'ந்த 'ம்மாள் உடலை திருகிக் கொண்டும் வேதனையில் முணுமுணுத்துக் கொண்டும், சமயங்களில் ஒரு மிருகத்தைப்போல் கோபமாக முனகிக்கொண்டும் இருந்தாள். தனது கணவனின் விளக்கங்கள் எல்லாம் இரக்கத்தின் நிழலை இவர்களிடமிருந்து எடுக்க முடியாது ஏனென்றால் 'வர்களும் தன்னைப் போன்ற ஒரு நினைவிலேதான் இருப்பார்கள் என்று நிச்சயமாக உணர்ந்தாள்.

'வள் கணவன் தந்த விளக்கங்களை எல்லாம் கவனமாக கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார் :

'உங்கள் மகன் இப்போதுதானே போர்க்களத்துக்குப் போகிறான். நீங்கள் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். என் மகன் முதல் நாள் போருக்கே 'னுப்பப்பட்டு விட்டான். இரண்டு தடவை காயத்தோடு திரும்பி வந்தான். மறுபடியும் போயிருக்கிறான். '

'எனக்கு மட்டும் என்ன ? இரண்டு மகன்களும் மூன்று சகோதர மக்களும் களத்தில் இருக்கின்றார்கள். ' என்றார் இன்னொரு பிரயாணி.

'இருக்கலாம். னால் என்னுடைய வி 'யத்தில் எனக்கு ஒரே ஒரு மகன்தான் ' என்றார் கணவர்.

' 'தனால் என்ன வித்தியாசம் ஏற்பட முடியும் ? ஒரே மகன் என்றால் செல்லம் கொடுத்துக் கெடுத்துவிடுவீர்கள். நிறைய குழந்தைகள் இருந்தால் ஒரே மாதிரி நேசிக்க முடியும். பெற்றோரின் 'ன்பு என்ன ரொட்டித் துண்டா, எல்லோருக்கும் சரிசமமாக பங்கிட்டுக் கொடுக்க ? ஒரு தகப்பன் என்பவன் வித்தியாசமில்லாமல் தன் எல்லா குழந்தைகளுக்கும் 'ன்பை முழுமை யாகத்தான் தருகிறான். ஒரு பிள்ளையானால் என்ன, பத்து பிள்ளையானால் என்ன ? இப்போது என் இரண்டு மகன்களுக்காக வேதனைப் படுகிறேன் என்றால் ஒவ்வொருத்தனுக்கும் பாதிபாதியாகப் படவில்லை.. '

'உண்மைதான்..உண்மைதான் ' பெருமூச்சு விட்டார் சங்கடப்பட்ட கணவர். ' னால் ஒரு வேளை - நிச்சயமாக உங்கள் வி 'யத்தில் நடக்காது என்றே வைத்துக்கொள்வோம் - ஒரு தந்தை தன் இரண்டு மகன்களை களத்தில் விட்டு, ஒருவன் இறந்து போனால், 'ந்த தந்தையைத் தேற்ற ஒரு மகனாவது மிஞ்சுவானல்லவா.. னால்.. '

' மாம்.. ' இடையில் புகுந்தார் ஒருவர். ' தேற்றுவதற்கு ஒரு மகனிருப்பான்தான். னால் 'ந்த ஒரு மகனுக்காக 'ந்த தந்தை உயிர் வாழ வேண்டுமல்லவா..ஒரே மகன் என்றால் மகன் போனதும் தந்தையும் இறந்து தனது துக்கத்துக்கு முடிவு கட்டலாம் 'ல்லவா ? இந்த இரு நிலைகளில் மிகவும் மோசமானது எது ? என் நிலை உங்களதை விட மோசமானது என்று உங்களுக்கு இன்னும் படவில்லையா ? '

' நான்சென்ஸ் '. இடையில் புகுந்தார் வெளுத்த பழுப்பு நிறமும் ரத்தச் சிவப்புக் கண்களும் சிவந்த முகமும் கொண்ட தடித்த இன்னொரு பிரயாணி.

'வருக்கு மூச்சு வாங்கியது. பலவீனப்பட்ட 'வரின் உடம்பு தாங்கிக்கொள்ள முடியாத கட்டுக்கடங்காத வலிமை கொண்ட 'கவன்மை 'வரின் உப்பிக்கொண்டிருந்த கண்கள் வழியாக உடைந்து படர்வதுபோல் தோன்றியது.

' நான்சென்ஸ் ' என்றார் மறுபடியும். இரண்டு இல்லாத பற்களை மறைப்பதுபோல் வாயைப் பொத்திக்கொண்டு. ' நான்சென்ஸ், நம்முடைய நலனுக்காகவா பிள்ளை பெறுகிறோம் ? '

சங்கடத்துடன் மற்ற பிரயாணிகள் 'வரைப் பார்த்தார்கள். போரின் முதல் நாளில் இருந்தே மகனை 'னுப்பியிருந்த தந்தை பெருமூச்செறிந்தார். ' நீங்கள் சொல்வது சரிதான். பிள்ளைகள் நமக்குச் சொந்தமானவர்கள் 'ல்ல. நாட்டுக்குச் சொந்தமானவர்கள்தான். '

தடித்த பிரயாணி 'ப்படியா என்பது போலப் பதில் கொடுத்தார்.

'பிள்ளை பெறும்போது நாம் நாட்டைப் பற்றி நினைக்கிறோமா ? நம் மகன்கள் பிறக்கிறார்கள் ஏனெனில்..சரி..ஏனெனில் 'வர்கள் பிறக்க வேண்டும்.. 'வர்கள் பிறக்கும்போது நமது உயிரையும் 'வர்களோடு எடுத்துக் கொண்டல்லவா பிறக்கிறார்கள்.. இதுதான் உண்மை. 'வர்களுக்கு இருவது வயது வரும்போது நாம் 'ந்த வயதில் எப்படி இருந்தோமோ 'ப்படித்தான் 'வர்களும் இருக்கிறார்கள். நமக்கும் தாய் தந்தை இருந்தார்கள். னால் 'து மட்டும் 'ல்லவே.. மற்ற வி 'யங்களும் இருக்கத்தானே செய்தன ? பெண்கள்.. சிகரெட்..மாயை..புதிய உறவுகள்.. 'ப்புறம் நாடு..மாம் 'தன் 'ழைப்புக்கும் நாம் பதில் சொல்லித்தானே இருப்போம் - நம் இருபதுகளில் - நம் தாய் தந்தை வேண்டாம் என்று சொல்லி இருந்தாலும் ? இப்போ இந்த வயதில் நாட்டுப்பற்று இன்னும் 'திகமாக உள்ளது. நம் பிள்ளைகள் மீது வைத்துள்ள 'ன்பைவிட 'திகமாக உள்ளது. இப்போ நம் மகன்களுக்காக நாம் போகலாம் என்றால் மகிழ்ச்சியாக 'தை ஏற்றுக்கொள்ள யாராவது இருக்கிறீர்களா ? '

சுற்றிலும் 'மைதியாய் இருந்தது. எல்லோரும் மோதிப்பதுபோல் தலையாட்டிக் கொண்டிருந்தார்கள்.

' ஏன், நம் இருபது வயது மகன்களின் உணர்வுகளை நாம் ஏன் மதிக்கக் கூடாது ? தங்களுடைய இந்த வயதில் பெற்றோர் பற்றைவிட நாட்டுப்பற்று பெரிது என்று 'வர்கள் நினைப்பது இயற்கைதானே ? ( நான் நாகரீகமான பையன்களைப் பற்றித்தான் பேசுகிறேன்.) வீட்டைவிட்டு நகர முடியாத கிழப்பையன்களாக நம்மை 'வர்கள் நினைப்பதும் இயற்கைதானே ? நாடு என்று ஒன்றிருந்தால், பசியால் சாகாதிருக்க எல்லோரும் ரொட்டித்துண்டு சாப்பிடுவது போல, நாடு என்பது ஒரு இயற்கையான 'வசியம் என்றிருக்குமானால், யராவது ஒருவர் 'தைக் காக்கப் போய்த்தான் கவேண்டும். நம் மகன்கள் போகிறார்கள் இருபதுகளில், 'வர்களுக்குத் தேவை கண்ணீரல்ல ஏனெனில் 'வர்கள் இறந்தால் உணர்ச்சிப் பெருக்கிலும் மகிழ்ச்சியாகவும்

இறக்கிறார்கள். நாகரீகமான இளை 'ர்களைப் பற்றித்தான் மறுபடியும் குறிப்பிடுகின்றேன் வாழ்வின் 'சிங்கமான பகுதிகளைப் பார்க்காமல், 'தன் களைப்பூட்டும் தன் மையை, சின்னத்தனத்தை, மாயையின் கசப்பை உணராமல் ஒருவன் இளமையாகவும் சந்தோ 'மாகவும் இறக்கின்றானென்றால், 'தைவிட நாம் 'வனுக்காக வேறென்ன கேட்க முடியும் ?

'எல்லாரும் 'ழுவதை நிறுத்த வேண்டும். சிரிக்க வேண்டும் என்னைப்போல. 'ல்லது குறைந்த பட்சம் என்னைப்போல இறைவனுக்கு நன்றியாவது செலுத்த வேண்டும். ஏனென்றால் என் மகன் இறப்பதற்கு முன் எப்படி தான் விரும்பியிருக்க முடியுமோ 'ப்படித் தன் வாழ்வை முடித்துக்கொண்டதாக, திருப்திகரமாக இறந்தபோது எனக்குச் செய்தி 'னுப்பினார்கள். 'தனால்தான் நான் துக்க உடைகூட 'ணியவில்லை தெரிகிறதா ? '

தன் லேசான மஞ்சள் கலந்த பழுப்புக்கோட்டை ட்டிக்காட்டினார். 'வர் சிவந்த இதழ் இருந்த இடத்திற்கு மேல் நடுங்கியது. கண்கள் 'சைவற்றும் வெளுத்தும் இருந்தன. தேம்பலைப் போன்றதொரு மெல்லிய சிரிப்பில் 'வர் தன் பேச்சை முடித்துக் கொண்டார்.

'நிச்சயமா, நிச்சயமா ' என்று மோதித்தனர் மற்றவர்கள். ஒரு மூலையில் தன் கோட்டுக்குக் கீழே ஒரு கட்டாகத் கிடந்த 'ந்த 'ம்மாள் 'மர்ந்து 'வர் சொன்னதயெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். தன் ழ்ந்த துயரத்தை மாற்றும் ஏதாவதொன்றை தன் நண்பர்களின், கணவனின் வார்த்தைகளில் காண, கடந்த மூன்று மாதங்களாக முயன்று வந்தாள். ஒரு தாய் தன் மகனை மரணத்துக்கோ 'ல்லது ஒரு 'பாயகரமான வாழ்வுக்கோ எப்படி 'னுப்பிவிட்டு 'மர்வது என்று கற்றுத்தருகின்ற ஏதாவதொன்றுக்காக. னால் இது வரை சொல்லப்பட்ட வார்த்தைகளில் ஒன்றுகூட 'ப்படிப்பட்டதாக 'வள் காணவில்லை. 'வள் நினைத்தவாறு யாரும் தன் உணர்வுகளைப் பங்கிடமுடியாது என்பதைக்காண 'வளின் துக்கம் 'திகமாகத்தான் கியது.

னால் இப்போது 'ந்த பிரயாணியின் வார்த்தைகள் 'வளை ச்சரியப்படுத்தின. ஏன், ஸ்தம்பிக்க வைத்தன. தன் மகன்களின் புறப்பாட்டுக்கு மட்டுமல்ல, 'வர்களின் மரணத்துக்குக்கூட 'ழாமல், எந்தக் குற்றமும் சொல்லாமல், வரும் வேதனையை 'ப்படியே ஏற்றுக்கொள்ளும் தந்தைகளின், தாய்களின் உயரத்துக்குத் தன்னால் எழ முடியவில்லையே என்பதையும், 'வர்களல்ல, தான்தான் தவறு செய்துவிட்டோம் என்பதையும் திடாரென்று உணர்ந்தாள்.

தலையை உயர்த்தினாள் தனது மூலையிலிருந்து. சற்று முன்னால் வந்து தன் மகன் எப்படி மகிழ்ச்சியாகவும் வருத்தங்களின்றியும் 'வனது 'ரசனுக்கும் நாட்டுக்கும் ஒரு ஹீரோவாக இருந்து வீழ்ந்தான் என்ற விபரங்களைத் தன் நண்பர்களுக்கு 'வர் விளக்கிக் கொண்டிருந்ததை உன்னிப்பாகக் கேட்டாள். இதுவரை கனவுகண்டிராத உலகினுள் தடுக்கி விழுந்துவிட்டதைப் போலிருந்தது 'வளுக்கு. இதுவரை 'வள் 'றியாத உலகம். தன்மகனின் மரணம் பற்றி எதையும் தாங்கும் இதயத்தோடு பேசிய துணிச்சலான 'ந்த தந்தையை எல்லோரும் பாராட்டியதைக் கேட்க 'வளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பின் திடாரென்று இதுவரை சொல்லப்பட்டது எதையும் கேட்காதது போல, கனவிலிருந்து விழிப்பது போல 'ந்த கிழவன் பக்கம் திரும்பிக் கேட்டாள்:

' 'ப்படான்னா, உங்க மகன் உண்மையிலேயே இறந்துவிட்டானா ? '

எல்லோரும் 'வளையே பார்த்தனர். தனது பெரிய, உப்பிக்கொண்டிருந்த, பயங்கர வெளுப்பாயிருந்த, பழுப்புள்ள கண்களை 'வள் முகத்தில் ழமாகப் பொருத்தி 'ந்தக் கிழவரும்

'வளைப் பார்க்கத் திரும்பினார். கொஞ்ச நேரம் 'வர் பதில் சொல்ல முயன்று கொண்டிருந்தார். திரும்ப 'வளையே பார்த்தார். ஏதோ 'ப்போதுதான் 'ந்த 'பத்தமான, சம்பந்தமற்ற கேள்வியில்தான் தன் மகன் உண்மையிலே இறந்துவிட்டதையும் 'வன் இனி எப்போதும் திரும்பி வரமாட்டான் என்பதையும் திடாரென்று உணர்ந்து கொண்டமாதிரி 'வர் முகம் சுருங்கியது. பயங்கரமாகச் சிதைந்தது வடிவம். பின்பு 'வசரமாக தன் பாக்கெட்டிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்தார். எல்லோரும் ச்சரியமாகப் பார்க்க, கட்டுக்கடங்காமல், நெஞ்சுடைக்கும் வகையில் தேம்பித் தேம்பி 'ழ ரம்பித்தார்.

-------